# தமிழ் இலக்கிய வரலாறு

## பதினாறாம் நூற்றாண்டு

### மூன்றாம் பாகம்



மு. அருணாசலம்

தமிழ் இலக்கிய வரலாறு

பதினாறாம் நூற்றாண்டு,

பாகம் - 3

மு. அருணாசலம்

# தமிழ் இலக்கிய வரலாறு

## பதினாறாம் நூற்றாண்டு

### பாகம் - 3

மு. அருணாசலம்

**The PARKAR**

தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம்

*293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்*

*இராயப்பேட்டை நெடுஞ்சாலை*

*இராயப்பேட்டை*

*சென்னை - 14.*

# தமிழ் இலக்கிய வரலாறு

பதினாறாம் நூற்றாண்டு, பாகம் – 3

மு. அருணாசலம்

© ஆசிரியர்

முதற் பதிப்பு : சித்திரை 1976.
திருத்தப்பட்ட பதிப்பு : மார்கழி 2005.
பக்கம் : xxxii + 352 = 384.

பதிப்பு :
**தி பார்க்கர்**
293, அகமது வணிக வளாகம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

**விலை : 284. 00**

குறிப்புதவி நூல்

வடிவமைப்பு :
**வே. கருணாநிதி**

அச்சிட்டோர்:
**தி பார்க்கர்**
293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம்,
இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை - 600 014.

# முகவுரை

திரு மு. அ. என்றே அழைக்கப்பட்ட இவ்வாசிரியர் ஒரு பன்முக எழுத்தாளர். அவருடைய வாழ்க்கையைப் பல கட்டங்களாகப் பிரிக்கலாம். அவருடைய எழுத்தும் அவ்வாறே. எனினும் 1930இல் சென்னையில் குடியேறியதில் இருந்து, தமிழ்ப் பெரியோர்களுடன் அவருக்கு இருந்த நெருக்கமான தொடர்பினால், அவரது தமிழ் ஆர்வமும் ஆராய்ச்சியும் வாழ்நாள் முழுவதும் அமைந்தன. ஐயங்களுக்கு விடைகாணவும், முடிவுகளை விவாதிக்கவும், பல நூலகங்களையும் அனேக தமிழ் அறிஞர்களையும் நாடிச் சென்றார்.

'தமிழ் இலக்கிய வரலாறு' என்பது ஒரு தனி மனிதனின் உழைப்பும், ஆழ்ந்த அறிவின் பயனும் ஆகும். இது 1969-முதல் பகுதி, பகுதியாக, 'காந்தி வித்தியாலயம்' சார்பில் வெளியிடப்பட்டது. அன்றைய தொழில் நுட்ப முறையில் பல அச்சகங்களை நாடி, பலவிதமான தாள்களில் வெளிவந்தன. இருப்பினும், பதினொரு தொகுதிகளுக்கும் வடிவம் ஒன்றே. சுமார் இருபதாண்டுகளாக இவற்றின் பிரதிகள் கிடைக்கப் பெறாமையால் தமிழ்ப் படிப்பவர்களுக்கு ஏமாற்றமளித்தது. இன்று மிக மிக முன்னேற்றம் அடைந்த அச்சுத்தொழில் முறையில் இவற்றை வடிவமைத்து மறுபதிப்புக்காக வெளியிட 'தி பார்க்கர்' பதிப்பகத்தார் முன்வந்துள்ளனர். அவர்களுக்கு நன்றி.

திருச்சிற்றம்பலம்.
15. 11. 2004.

**அ. சிதம்பரநாதன்**

# நன்றியுரை

*தமிழ் இலக்கிய வரலாறு - நூற்றாண்டு முறை தொகுதிகள் அனைத்தையும் அறிஞர் மு. அருணாசலம் ஐயா அவர்கள் குறித்து வைத்திருந்த திருத்தங்களுடனும் புதிய கருத்துகளுடனும் புதிதாக வடிவமைத்து மறுபதிப்புச் செய்து வெளியிட எமது நிறுவனத்திற்கு அனுமதி அளித்த ஆசிரியரின் புதல்வர் திருமிகு அ. சிதம்பரநாதன் அவர்கள் மற்றும் அவரது சகோதரிகள் அனைவருக்கும் எமது மனப் பூர்வமான நன்றிகள்!*

*இம்முயற்சியில் என் துணை நின்று வழிநடத்தியவர் மனைவி இ.சா. பர்வீன் சுல்தானா அவர்கள்.*

*இத்தொகுதிகளின் உருவாக்கப்பணியில் என் அலுவலகப் பணியாளர்களுடன் சேர்ந்துகொண்டு என் சிந்தனைக்கு வலுச் சேர்த்து உழைத்தவர், மதுரை அமெரிக்கன் கல்லூரி, தமிழ்த்துறை விரிவுரையாளர் நண்பர் உல. பாலசுப்பிரமணியன் அவர்கள்.*

*உத்வேகம் கொடுத்து எம்மை உழைக்க வைத்தவர் தமிழக சட்டமன்ற சபாநாயகர் காளிமுத்து ஐயா அவர்கள். தோள்கொடுத்து உதவியவர்கள் : மதுரை வணிகவரி உதவி ஆணையர் திரு. தேவேந்திர பூபதி, நண்பர் சி. ஆறுமுகம், அமுத நிலையம் உயர்திரு வீரபாகு, மைத்துனர் காலிப் அல்தாப், மைத்துனர் முகமது தானியெல், திரு. முருகன் (முருகன் பேப்பர்ஸ்), எனது தம்பிகள் வே. உதயசூரியன், வே. சிற்றரசு, அண்ணன் கோணங்கி, நண்பர் பிரபாகர் ஜெயராஜ், எம். ஜெயசந்திரன், ஜெ. சந்திரா, நண்பர்கள் நாசர், சாகுல், ஆனந்த்.*

*எமது நிறுவனப் பணியாளர்கள் : ஜெ. கலைவாணி, அ. ஜெயந்தி, எஸ்.என். விஜயகுமார், ஜெ. சரவணன், ஜெயகுமார், தனசேகர், பால சுப்பிரமணியன், பஹிமா, மெஹபூப் சுபுஹானி, சைதாபானு, கயல் விழி, தேன்மொழி, பாத்திமா, சுகுணா, அனுராதா, சுமதி, தேவி, ஜாய்ஸ், நஸ்ரின், நஜீலா, சரஸ்வதி, தமிழ்ச்செல்வி, ஈஸ்வரி, திலகவதி, சித்ரா, கவிதா, வசந்தி, ராஜேஸ்வரி, ஷமா, கல்பனா, சையதுஅலி பாத்திமா, ஜோதி, நிஷா, கலா, பவானி, ராணிசித்ரா, மல்லிகா, அம்மு, ரதிதேவி - இதனால் சகலமானவருக்கும் எமது நன்றிகள்.*

## பதிப்புரை

தமிழ் இலக்கிய வரலாறு - நூற்றாண்டு முறை அடிப்படையிலான தொகுதிகளின் வெளியீட்டுத் திட்டத்தில், 16ஆம் நூற்றாண்டு வரலாற்றை மூன்று பாகங்களாக ஆசிரியர் எழுதி வெளியிட்டுள்ளார். இது 16ஆம் நூற்றாண்டின் மூன்றாம் பாகம்.

அவர் வெளியிட்டுள்ள நூற்றாண்டு முறையிலான தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் இந்த 16ஆம் நூற்றாண்டு வரலாறு மட்டுமே மூன்று பாகங்களாக அவரால் எழுதப்பட்டுள்ளது. இவை மூன்றும் சேர்ந்து 1124 பக்கங்கள் கொண்டதாக இத் திருத்தப்பதிப்பு வெளிவருகிறது. ஆசிரியர் வெளியிட்ட முதல் பதிப்பு மூன்று பாகங்களும் 1428 பக்கங்களில் கிரௌன் அளவில் வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் 9ஆம் நூற்றாண்டு வரலாற்றை அவர் மூன்று பாகங்களாக வெளியிடத் திட்டமிட்டிருந்தார். ஒரு பாகம் மட்டுமே அவரால் வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாம் மூன்றாம் பாகங்கள் அவர் மறைவு வரை வெளியிடப்படவில்லை. இரண்டாம் பாகத்தின் 'நம்மாழ்வார்' என்ற பகுதி மட்டும் தனி நூலாக அவரால் வெளியிடப்பட்டிருந்தது. இதனை இவ்வரலாற்றுத் தொகுதிகளுடன் 9ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாகமாக நாம் வெளியிட்டுள்ளோம்.

அவரால் எழுதி வெளியிடப்பட்ட இலக்கிய வரலாற்றுத் தொகுதிகள் அனைத்தும் பக்கத்துக்குப் பக்கம் வெள்ளைத் தாள் இடையிட்டுக் கட்டமைப்புச் செய்யப்பட்ட ஒரு தொகுப்பு அவரது நூலகத்தில் காணப்பட்டது. இத்தொகுதிகளில் பல புதிய செய்திகளும் ஆங்காங்கே திருத்தங்களும் ஆசிரியரால் குறித்து வைக்கப்பட்டிருந்தன. அவற்றை ஒவ்வொரு தொகுதியிலும் சேர்த்தும் திருத்தியும் முறைப்படுத்தியுள்ளோம்.

இவ்வரலாற்றுத் தொகுதிகள் மொத்தம் 14 நூல்களாக வெளிவருகின்றன. ஆசிரியர் வெளியிட்டவை 11. நாம் புதிதாகச் சேர்த்தவை 3. இவற்றுள் 14வது தொகுதியானது மேற்படி நூல்களில்

உள்ள வரலாற்று அட்டவணைகள் முன்னுரைகளுடன் சேர்த்துத் தொகுக்கப்பட்டுள்ளன.

திருச்சிற்றம்பலத்திலுள்ள ஆசிரியரது வீட்டில் இப்பணி தொடர்பாக நாம் சிலகாலம் தங்கியிருந்தோம். அங்குள்ள அவரது நூலகத்தில், தொடர்ந்து இந்த வரலாற்று நூல்களை எழுதும் பணியில் சில ஆண்டுகளுக்கான குறிப்புகளை அவர் எழுதி வைத்துள்ளார். அவர் எழுதத் தொடங்கி குறையாக நின்று போனவை 8ஆம், 9ஆம், 17ஆம் நூற்றாண்டுகள் என்பது அவர் வைத்திருந்த குறிப்புக்களில் இருந்து உணர முடிந்தது.

ஆசிரியர் இந்நூலின் முதல் பதிப்பில் விடுபட்ட சில செய்திகளைப் பிற்சேர்க்கையாக அச்சிட்டுள்ளார். இத்திருத்தப்பட்ட பதிப்பில் நாம் அவற்றை உரிய இடங்களில் சேர்த்து முறைப் படுத்தியுள்ளோம். இந்நூலின் முகவுரையில், "1977இல் 8ஆம் நூற்றாண்டு வரலாறு அச்சிடப்படும்." எனக் குறித்துள்ளார். 8ஆம் நூற்றாண்டு வரலாறு அவரால் வெளியிடப்படவில்லை.

இம்முயற்சியைத் தொடங்கிய காலத்தில் இருந்து என்னை ஊக்கப்படுத்தியவர் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி ஐயா அவர்கள்; தன் தந்தையாரின் இவ்விலக்கியப் பணியை மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் வெளிக்கொணர எமக்கு அனுமதியளித்து, தனது வீட்டில் தங்கவைத்து எம்மை ஊக்கப்படுத்தியவர் அவர் மகனார்; உணவளித்து எம்மை உபசரித்தவர் அவர் மருமகளார்; இவர்கள் மிகுந்த போற்றுதலுக்கு உரியவர்கள்.

ஒரு தனி மனிதன் தனது வாழ்நாளில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுவதற்காகவே செலவிட்டிருக்கிறார். இத்தொகுதிகளை அவர் வெளியிட்ட அன்றைய காலகட்டத்தில் இருந்த அச்சமைப்பு வசதிகள் அவரது பாரிய சிந்தனைக்கு ஈடு கொடுக்காமையினால் அவரது விருப்பப்படி இத்தொகுதிகளை அவரால் வடிவமைக்க முடியவில்லை; இக் குறைபாட்டை நீக்கும் முகமாகவும் அவரது பணியைப் போற்றும் விதமாகவும் அன்னாரின் மகனார் ஒத்துழைப்பின் அடிப்படையில் எமது நிறுவனம் இவற்றை வெளியிட்டு மகிழ்கிறது.

சென்னை
25. 12. 2005.

**வே. கருணாநிதி**

# முதல் பதிப்பின் முகவுரை

மாலுண்டு நெஞ்சே, மயங்குவதென்? பால்வண்ணன்
காலுண்டு, அடியார் கனிந்திசைத்த – நூலுண்டு,
வாழ்த்திடநம் வாயுண்டு, அலர்சொரியக் கையுண்டு,
தாழ்த்திடவும் உண்டே தலை.

– திருக்கருவை வெண்பா அந்தாதி

**இவ்வரலாற்று நூல்**

*பதினாறாம் நூற்றாண்டின் இலக்கிய வரலாற்றை மட்டும் மூன்று பாகங்களாக வெளியிடும் திட்டத்தில் இது மூன்றாம் பாகமாகும். முதல்பாகம் இந்நூற்றாண்டில் எழுந்த புராண இலக்கியங்களை மட்டும் எடுத்துக் கூறுவது; இரண்டாம் பாகமும் மூன்றாம் பாகமும் இந்நூற்றாண்டுக்குரிய ஏனைய இலக்கியப் பகுதிகளைத் திரட்டிக் கூறுவனவாகும். ஐந்து மாதங்களுக்கு முன் வெளியான இரண்டாம் பாகத்தின் தொடர்ச்சியாக இப்பகுதி இப்போது வெளியாகிறது. முதல் பாகம் இன்னும் இரு மாதங்களில் வெளியாகிவிடும். இவற்றையடுத்து 9ஆம் நூற்றாண்டின் பின்னிரு பாகங்களும் வெளியாகும்; இவை யாவும் 1976இல் முடிய வேண்டும் என்பது எமது முயற்சி. 1977 இல் 8ஆம் நூற்றாண்டு வரலாறு அச்சிடப்படும்.*

*இம்மூன்றாம் பகுதி தனிப் பாகமாக, தனிப் பக்க எண்கள், முகவுரை, முன்னுரை, அகராதிகளோடு அச்சிடப்படினும், இது இரண்டாம் பாகத்தைத் தொடர்ந்து இந்நூற்றாண்டுப் பொருளை நிறைவு செய்வதாய்க் கருதவேண்டும்.*

*ஒரு முக்கியமான கருத்தைக் குறிப்பிடுதல் பொருந்தும். 9 முதல் 15 நூற்றாண்டு வரை ஆராய்ந்த ஆசிரியரைப் பொறுத்த வரையில், ஒவ்வோர் ஆசிரியர் வரலாற்றையும் நூல்களையும் ஒரே இடத்தில் ஆராய்ந்திருக்கிறோம். இந்த நூற்றாண்டில் அப்படி அமையவில்லை. ஓர் ஆசிரியர் செய்த எல்லா நூல்களும்*

ஓர் அத்தியாயத்துள் ஆராயப் பெறவில்லை, ஒரே பாகத்திலும் ஆராயப் பெறவில்லை. உதாரணம்: அதிவீரராம பாண்டியர் - பாகம் 1, 2; வரதுங்கராம பாண்டியர் - பாகம் 1, 3; திருக்குருகைப் பெருமாள் கவிராயர் - பாகம் 1, 2, 3; எல்லப்ப நாவலர் - பாகம் 1, 3; மறைஞானசம்பந்தர் - பாகம் 1, 2; சிவாக்கிரயோகிகள் 2, 3; நிரம்ப அழகிய தேசிகர் 1, 3; திருமலை நாதர் 1, 3; இவர் போன்றோர் பின்னும் பலர். இதற்குக் காரணம், இந்த நூற்றாண்டு வரலாறு மிகவும் விரிந்துபோய் மூன்று பாகம் ஆனமையும், இவ்வாசிரியர் பலதுறையில் நூல் செய்திருந்தமையால் நூல்களின் பொருளையொட்டி வெவ்வேறாக ஆராய நேர்ந்தமையும் ஆகும்.

### வரலாற்றுப் பார்வை

இரண்டாம் பாக முகவுரையில் இது விரிவாய்ச் சொல்லப் பெற்றுள்ளது. அப்பகுதியில் காணப்படும் சைவ சாத்திரங்களின் பெருக்கத்தையும், இம்மூன்றாம் பாக முதல் அத்தியாயத்துட் காணும் சாத்திர உரைகளின் விரிவையும் உணர்வதற்கு வரலாற்றுணர்வு இன்றியமையாததாகும். கிருஷ்ணதேவராயர் ஆதரவு பெற்ற தமிழ்ப்புலவர் என்றே ஓர் உட்பிரிவு அமைத்திருத்தலையும் தென்காசிப் பாண்டியர் அவைப்புலவர் என்ற மற்றோர் தலைப்பையும் காண்க.

கிருஷ்ணதேவராயர், சைவருக்கும் வைணவருக்கும் சைனருக்கும் (மண்டல புருடர்) ஆதரவு அளித்திருக்கிறார். தெற்கே பாண்டிநாட்டில் வரதுங்கராம பாண்டியரும் அதி வீரராம பாண்டியரும் பல புலவருக்கு ஆதரவளித்துப் பெருநூல் பல பாடச் செய்திருக்கிறார்கள்.

### இலக்கியத் திறனாய்வு

இந்தப் பாகத்திலும் திறனாய்வு வழக்கம்போல் சிறப்பிடம் பெறுகிறது. முதல் சிறப்புப்பகுதி சைவசாத்திர உரைப்பகுதி. இது தமிழாயினும், பொருள் சாத்திரமாதலால், விரித்துத் தனியே ஆராயவேண்டிய தகுதி பெற்றுள்ளது. பிள்ளை லோகம்சீயரின் மணிப்பிரவாளம் இங்கு விரிவான இடம் பெற்றுள்ளது. சித்தர் பாடல்களும் மூவர் அம்மானையும் முக்கியமான பிற பகுதிகள்; இவற்றை இதுகாறும் இலக்கிய வரலாற்றில் யாரும் கருதியதில்லையாயினும், உண்மையான வரலாற்று அறிவுக்கு இவற்றின் நிலை வரையறுக்கப்பட வேண்டியதொன்று. சித்தர்கள்

14-16 நூற்றாண்டுகளிலேயே பெரும்பான்மையும் தோன்றி நூல் செய்தார்கள் என்பது எமது கருத்து. பிற்காலத்தில் வைத்தியம் இரசவாதம் சோதிடம் போன்ற துறைகள் அளவின்றிப் பெருகி யுள்ளன. அவை உண்மைச் சித்தர் பாடல் அளவுக்கு இலக்கியச் சுவை பெறவில்லை.

சில சமயம், ஒரு செய்தியை இரண்டிடங்களில் சொல்லி யிருக்கக் காணலாம். அவ்வவ்விடத்தின் பொருள் நிறைவு கரு தியே இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. விடுபட்ட செய்திகள் சில பிற்சேர்க்கையிலும் வருகின்றன. விளக்கமாகவும் விரிவாக வும் எழுதும் புது முயற்சி இதுவாதலால், அவ்வப்போது தோன் றும் ஆராய்ச்சிக் கூறுகள் விடுபடலாகாது என்ற உணர்வுடன், ஒருகால் சம்பந்தமில்லை என்று தோன்றிய போதிலும்கூட, பொருத்திச் சொல்லப்பட்டு வருகின்றன; பொருள் நிறைவின் பொருட்டே இவ்வாறு சொல்லப்படுகின்றன. அடுத்த பதிப்பு வருங்கால் இவை ஒரு கோவைப்படும். அன்றி, இவற்றை எழுதி வைத்தால் தான் வேறு ஆராய்ச்சி செய்வோர் பலரும் அறிந்து பயன்பெற இயலும் என்பதும் கருத வேண்டிய உண்மையாகும்.

**விளக்கங்கள்**

நூல்தோறும் விளக்கம் மிகுதியாகிக் கொண்டு வருகிறது. இரண்டாம் பாகத்தின் முகவுரையில் இதை விரிவாய்க் குறிப் பிட்டிருக்கிறோம். இங்கும் சில சொல்லலாம். சைவ சாத்திர உரை கள் மிகவும் அதிகம்; சித்தியார் அறுவருரை என்று சொல்பவற் றுள் நான்கு இக்காலத்தே எழுந்துள்ளன. சங்கரருடைய சௌந் தரிய லகரியை ஒரு பண்டிதர் தமிழ்ச் செய்யுளாய் இக்காலத்தில் மொழிபெயர்க்க, ஒரு நாவலர் இத்தமிழுக்கு விரிவுரை எழுதி யிருப்பது பெருஞ்சிறப்பு. தமிழ்ப்புலவர் ஒருவர் மீது ஒருவர் பொறாமை மிக்கவர்கள் என்று வழங்கும் பொதுவான கருத் துக்கு மாறாக, இங்கு, சைவ எல்லப்ப நாவலர் உடன்காலத்தில் வாழ்ந்த கவிராச பண்டிதரைப் போற்றியிருப்பது இலக்கிய வரலாற்றில் அரிய செய்தி.

இனி, இந்தநூல் தரும் சில சிறப்பு விளக்கங்கள் பின்வரு வனவாகும்.

நூல் பற்றிய விளக்கம்: ஆனந்தமாலை, கலைஞான தீபம், கவச நூல்கள், சட்டை முனி திருமந்திர உரை, சிவப்பிரகாசம்

அருணந்தி தேவர் உரை, சைன தோத்திர நூல்கள், பிள்ளை லோகஞ்சீயர் நூல்கள், வராகி மாலை, சேயூர் முருகன் உலா.

வரலாறு பற்றிய விளக்கம்: பிள்ளை லோகஞ்சீயர், சௌந் தரிய லகரி, சட்டை முனி கயிலாய சித்தர், போகநாதர்.

காலம் பற்றிய விளக்கம்: திருவண்ணாமலை ஞானப்பிர காசர், சித்தர்கள், உந்திகளிறு ஞானாமிர்த உரைகள், பழனிக் கோவை, வலிவல மும்மணிக்கோவை, மூவர் அம்மானை.

கருத்து விளக்கம்: மூவர் அம்மானை, அம்பிகாபதி, நாக குமார காவியம்.

ஏட்டுச் சுவடிகள்: உபதேசத் திருநாமம், ஆனந்தமாலை, சூரிய தோத்திரம், உத்தண்டன் கோவை.

காகிதச் சுவடிகள்: கொக்கோகம், சேயூர் முருகன் உலா, சிவப்பிரகாசம் அருணந்தி தேவர் உரை.

புதிய தலைப்புக்கள்: இந்நூற்றாண்டு வரலாற்றில் மூன்று பாகங்களிலும் புதிய அத்தியாயத் தலைப்புக்கள் அமைக்கப் பெற்றுள்ளன - புராண இலக்கியம், நீதி நூல், சைவ சாத்திர உரை, தோத்திர இலக்கியம், அம்மானை இலக்கியம். இவை அமைய வேண்டிய நிலையை ஆங்காங்கு விளக்கியிருக்கிறோம்.

## அட்டவணைகள்

நூல் தோறும் வரலாற்று விளக்க அட்டவணை விரிவாக அமைந்துள்ளது போல இங்கும் சில அட்டவணைகள் அமைத் திருக்கிறோம். இலக்கிய வரலாற்றில் தத்துவப்பிரகாசர் அம்பி காபதி என்ற பெயருடையோர் பலர் என்ற செய்தி இரு அட்ட வணைகள் மூலம் உணர்த்தப் பெறுகிறது. ஆசிரியர் கால ஒப் புமை அட்டவணை, இரண்டாம் பாகத்தில் அமைத்துள்ளதை இங்கு பின்னும் திருத்தமாக அமைத்திருக்கிறோம். ஆசிரியர் பெயர் கால அகராதி பார்த்தமாத்திரத்தில் ஓர் ஆசிரியரின் காலத்தைத் திருத்தமாகவும் உடன்காலப் புலவர்களோடு பொருத் தியும் உணரத் துணைபுரியும். இதை மூன்று பாகங்களுக்கும் பொதுவாக இங்கு அமைத்திருக்கிறோம். சிறு நூல்கள் இக் காலத்தே அதிகமானபடியால், இங்கு ஆராய்ந்த நூல்களின் அட்டவணையும் விரிவாய் அமைந்துள்ளது.

## பிற்சேர்க்கை

வழக்கம் போல் இத்தலைப்பிலும் சில குறிப்புக்கள் இங்கு உள்ளன. இவை நூலில் உரிய இடத்தில் அமையத் தவறிவிட்டபடியால், வாசகர் இவற்றை உரிய பகுதியோடு சேர்த்து வாசித்துக் கொள்க.*

## நன்றியுரை

இன்று நூலை அச்சிடுவதிலுள்ள துயரத்தை ஓரளவு இரண்டாம் பாக முகவுரையில் சொல்லியிருக்கிறோம். நூல் அச்சுத் தொழிலில் யாம் தொடர்பு கொண்டது 1933இல். இப்போது 43 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. முன்னேற்றம், வளர்ச்சி என்று ஓயாது பேசுகிறோம். எம் போன்றார் சிந்தித்துப் பார்த்தால் தலைகுனிய வேண்டியிருக்கிறது. அந்தக் காலத்தில் நல்ல புத்தகம் அச்சிடும் சிறு அச்சகத்தார் கூட, பிழையை எடுத்துக் காட்டினால் நாணுவார்கள். இன்று பிழை என்பது மணற் சோற்றில் கல் ஆராய்வது போல் ஆகிவிட்டது. கூலிவிகிதம் பெருகியிருந்தும், திருத்தமாய்ப் புத்தகம் வெளிவர வழியில்லை. சென்னையில் உயர்தர அச்சகங்கள் இரண்டொன்று இருப்பது உண்மை. ஆனால் அவை கேட்கும் கூலி கொடுக்கத் தனிப்பட்டவரால் ஒரு நாளும் முடியாது. சாமானிய அச்சகத்தில் அச்சிடுகிறோம். அச்சுத்தாள்களைத் திருத்திக் கொடுக்கிறோம். ஒரு முறையல்ல பலமுறை. பலன்? செய்த திருத்தங்கள் அத்தனையும் அச்சகத்தார் செய்தால் தானே? அச்சுத்தொழில் நிலைமை, இன்று தமிழ் நாட்டிலும் இந்தியா முழுமையிலும் பிற எல்லா வாழ்வுத் துறைகளிலும் வளர்ந்திருப்பது போல, பொறுப்புணர்ச்சிக்குப் புறம்பாயுள்ளது. இதனால் எப்படியோ புத்தகம் வெளிவந்தால் சரி என்ற நிலையில் ஆசிரியர் திருப்தியடைய வேண்டி வருகிறது. வாசக அன்பர்கள் திருப்தியடைய வேண்டி வருகிறது. வாசக அன்பர்கள் பிழை திருத்தங்கள் போட்டிருப்பதற்குப் பெரிதும் மன்னிக்க வேண்டும்.*

இவ்வரலாற்று நூலில் சேயூர் முருகனுலா முதலான சில நூல்களின் அச்சாகாத கையெழுத்துப் பிரதிகளைப் பார்க்கத் தந்து உதவிய திருவான்மியூர் டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலையக் காவலரும் அவர்கள் பேரரும் ஆகிய திரு. க. சுப்பிரமணியம்

* இவை முதல் பதிப்பிற்கான செய்திகள்

அவர்கள் பால் மிக்க நன்றியுடையோம். சிவப்பிரகாசம் அருணந்தி தேவர் உரையைத் தந்துதவிய திரு. அடிகளாசிரியருக்கும் எமது நன்றி.

தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் இந்நூல் நிறைவு பெறுவது எமக்கு மகிழ்ச்சி தருகிறது. எம்மை இத்துறையில் எந்த நேரமும் ஈடுபடுத்தி நடத்தி வருகின்ற தோன்றாத் துணையும், ஆரொரு வர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகரும் ஆகிய இறைவன் தாளையே சிந்திக்கின்றோம்.

**இருக்கும் திருக்கோயில் ஏழையேன் நெஞ்சோ,**
**மருக்கொள் கயிலை வரையோ, – திருக்களவோ,**
**சோதிமணி மன்றோ, சுடர்விசும்போ, நீள்கயிலை**
**ஓதும் மறையோ உனக்கு?**

*சென்னை*
*13. 04. 1976.* *மு. அருணாசலம்*

# பொருளடக்கம்

**1. சைவ சாத்திர உரைகள்** 1

இலக்கிய இலக்கண உரைகள் - வைணவ உரைகள் - சைவ சாத்திர உரைகள் - சைவ எழுச்சிக்குக் காரணங்கள் - உந்தி களிறு பொழிப்புரை - திரு உந்தியார் உரை - திருக்களிற்றுப் படியார் உரை - காலம் - பதிப்பு - ஞானாமிர்த உரையாசிரியர் - பதிப்பு - சௌந்தரிய லகரி உரை - பதிப்பு - மறைஞான தேசிகர் - ஆசிரியர் - நூல்கள் - சித்தியார் சுபக்க உரை - சிவ தருமோத்தர உரை - பதிபசுபாசத் தொகை உரை - பிற நூல்கள் - குறிப்பு - சிவாக்கிரயோகிகள் - சிவஞான சித்தி உரை - சித்தி யார் உரை - மேற்கோள் நூல்கள் - பாயிரப் பகுதி - அளவைப் பகுதி - பன்னிரு சூத்திரப் பகுதி - பதிப்பு - பிற சாத்திர உரை கள் - சர்வ ஞானோத்தரம் -தேவிகாலோத்தரம் - சித்தியார் பரபக்க உரை - நந்தி சிவாக்கிரயோகிகள் - சிவப்பிரகாச உரை - காலம் - திரு அண்ணாமலை ஞானப்பிரகாசர் - வரலாறு - நூல்கள் - நூல் இயல்பு - காலம் - பதிப்பு - நிரம்ப அழகிய தேசிகர் - சித்தியார் சுப்க்க உரை - பதிப்பு - திரு அருட் பயன் உரை - பதிப்பு - திரு ஒற்றியூர் ஞானப்பிரகாசர் - ஆசிரியர் - நூல்கள் - சித்தியார் பரபக்க உரை - சங்கற்ப நிரா கரண உரை - காலம் - பதிப்பு - திரு ஒற்றியூர் தத்துவப் பிரகாசர் - சித்தியார் பரபக்க உரை - சட்டை முனி கயிலாய சித்தர்.

**2. வைணவ இலக்கியம்** 74

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் பிரபந்தங்கள் - திருப்பதிக் கோவை - நூலாராய்ச்சி - பழமொழிகள் - நம்பெருமாள் மும்மணிக்கோவை - மாறன் கிளவி மணிமாலை - திருப்பதிக் கலம்பகம் - பிள்ளைலோகம் சீயர் - நூல்கள் - இராமானு சார்ய திவ்விய சரிதை - வருணனை - ஆண்டாள் திருவுருவ வருணனை பாதாதிகேசம் - காவிரிச் சோலைகளின் வருணனை -

சொற்கள் - பதிப்பு - யதீந்திரப் பிரவணப் பிரபாவம் - சொல்லாட்சிகள் - பதிப்பு - இராமானுச நூற்றந்தாதி வியாக்கியானம் - அர்த்த பஞ்சக வியாக்கியானம் - சப்தகாதை வியாக்கியானம் - உபதேச ரத்தினமாலை வியாக்கியானம் - திருவாய்மொழி நூற்றந்தாதி வியாக்கியானம் - ஆர்த்திப் பிரபந்த வியாக்கியானம் - பதிப்பு - தனியன் வியாக்கியானம் - உபதேசத் திருநாமம் - திருமந்திரார்த்த அரும்பத விளக்கம் - ஸ்ரீ வைஷ்ணவ சமயாசார நிஷ்கர்ஷம் - காலம் - பதிப்பு - பரகால நல்லான் - பதிப்பு - மணிப்பிரவாளம்.

3. சைன இலக்கியம் 119

நாககுமார காவியம் - நூல் - கதைச் சுருக்கம் - ஆசிரியர் - சில செய்திகள் - காலம் - பதிப்பு - தோத்திரங்கள் - திருநறுங் கொண்டை மலைப் பதிகம் - வர்த்தமான சுவாமி தோத்திரப் பதிகம் - தச தர்மம் - திருமயிலாப்பூர்ப் பத்தும் பதிகம்.

4. தோத்திர இலக்கியம் 134

வீரை கவிராச பண்டிதர் - ஆசிரியர் - நூல்கள் - சௌந்தரிய லகரி - ஆனந்த மாலை - வராகி மாலை - காலம் - கலைஞான தீபம் - ஆசிரியர் - நூற்பெயர் -நூற்பொருள் - சௌந்தரியந் தாதி - ஆசிரியர் - பிறசெய்திகள் - திருக்கருவை அந்தாதிகள் - திருக்கருவை பதிற்றுப்பத்தந்தாதி - திருக்கருவைக் கலித்துறை அந்தாதி - திருக்கருவை வெண்பா அந்தாதி - குகை நமசிவாயர் - அருணகிரி அந்தாதி - திரு அருணைத் தனி வெண்பா - குரு நமசிவாயர் - வரலாறு - நூல்கள் - அண்ணாமலை வெண்பா - சிதம்பர வெண்பா - பரமராசிய மாலை - நமசிவாய மாலை -சிவக்ஷேத்திரக் கோவை வெண்பா - காலம் - கவசத் தோத்திரங்கள் - விநாயக கவசம் - சிவகவசம், சத்தி கவசம் - இலக்குமி தோத்திரம், சிவாட்டகம் - மிருத்தி யுஞ்சய தோத்திரம் - நாராயணகவசம் - கந்தர் சஷ்டி கவசம் - சண்முக கவசம் - சூரிய தோத்திரம்.

5. சித்தர் பாடல் 186

பதினெண் சித்தர் - ஏனைய சித்தர் - அகத்தியர் - அகத்தியர் ஞானம் - பதார்த்தகுண சிந்தாமணி - அகத்தியர் தீட்சா விதி 200 - இராமதேவர் - உரோம ரிஷி - கருவூர்ச் சித்தர் - வரலாறு - காலம் - நூல்கள் - கருவூரார் பூசாவிதி - காக

புசுண்டர் - கொங்கணர் - சட்டைமுனி - சுந்தரானந்தா - சூரியானந்தர் - சுப்பிரமணியர் ஞானம் - திருமூல சித்தர் - திருவள்ளுவர் - நந்திதேவர் - போகநாதர் - வால்மீகர்.

6. பிரபந்த இலக்கியம் 217

அந்தாதி - உலா - கலம்பகம் - கோவை - தூது - மும்மணிக் கோவை - திருவேங்கட உலா - உலாப் பிரபந்தம் - முன்வந்த உலாக்கள் - திருமால் உலாக்கள் - புராணத் திருமலைநாதர் - மதுரைச் சொக்கநாதர் உலா - நூற்பொருள் - பதிப்பு - சைவ எல்லப்ப நாவலர் பிரபந்தம் - திரு அருணை அந்தாதி - திரு அருணைக் கலம்பகம் - பதிப்பு - திரு ஆரூர்க் கோவை - பதிப்பு - திருப்பாலைப் பந்தல் உலா - வலிவலமும்மணிக் கோவை - நூல் - காலம் -தெய்வச்சிலையார் விறலி விடுதூது - நூற்பொருள் - ஆசிரியர் - காலம் - பதிப்பு - சேறை கவிராச பிள்ளை - வரலாறு - காலம் - நூல்கள் - திருக்காளத்தி நாதர் உலா - திருவாட் போக்கி நாதர் உலா - சேயூர் முருகன் உலா - செய்திகள் - நூற் சிறப்பு - திருக்காளத்தி நாதர் இட்டகாமிய மாலை - திரு அண்ணா மலையார் வண்ணம் - வீரை அம்பிகாபதி - வரலாறு - நெல்லை வருக்கக் கோவை - பதிப்பு - பராமரை மாலை - பதிப்பு - தையூர் உத்தண்டன் கோவை - பழனிக்கோவை - நூல் - நூற்செய்திகள் - ஆசிரியரும் காலமும் - பதிப்பு.

7. பிற வகை இலக்கியம் 265

சாசனங்களால் தெரியவரும் புலவர் - உத்தண்ட வேலாயுத கவி - மருதவன கவிராசன் இராமநாதன் - பாண்டி கவிராசர் - கிருஷ்ணதேவராயர் ஆதரவு பெற்றோர் - குமார சரசுவதி - தத்துவப் பிரகாசர் - தத்துவப் பிரகாசர் நால்வர் - திருவாரூர்த் தத்துவப் பிரகாசர் - கச்சி ஞானப்பிரகாசர் - கச்சிக் கலம் பகம் - மஞ்சரிப்பா - காலம் - பிற புலவர்கள் -பாண்டியர் அவையிலிருந்தப் புலவர் - வீர வெண்பாமாலை - காசிக்கலியன் கவிராயர் - சைவ நூல் உரைகளால் அறிய வரும் நூல்கள் - பார்த்திபம் - தர்க்கபரிபாடை - ஜனனகருவி மாலை - யோக சாரம் - புவனகோசம் - நிராமயதேவர் நூல் - வேறு புலவர் கள் - பரமேசுவரப் புலவன் - தனிநூல் - வரதுங்கராமர் செய்த கொக்கோகம் - வடமொழி மூலம் - ஆசிரியர் - நூல் - மன்மதன் துதி - பதிப்பு - தனிப்பாடல்கள் - ஏகம்பவாணன் - பாடல்கள்.

8. அம்மானை இலக்கியம் 302

மூவர் அம்மானை - முன் உள்ள அம்மானை குறிப்புக்கள் - அம்மானை இலக்கணம் - தொகுப்பு நூல் - தனி நூல் - காலம் - ஆசிரியர் - நூல்.

9. உரைநடை 314

10. ஆதார நூல்கள் 316

11. மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு 326

12. சொல்லாட்சியும் பொருளும் 332

13. பொருள் அகராதி 334

14. சிறப்புப் பெயர் அகராதி 338

## அட்டவணைகள்

இந்நூலகத்தும் இறுதியிலும் பல்வேறு அட்டவணைகள் பயன் கருதி அமைத்துக் காட்டப்பட்டுள்ளன. அவற்றின் பட்டியலைக் கீழே காண்க.

1. மறைஞான தேசிகர் முன்னோர் 33

2. ஆசிரியர் கால ஒப்புமை அட்டவணை 318

3. ஆசிரியர் பெயர் கால அட்டவணை 320

4. அம்பிகாபதி 324

5. தத்துவப் பிரகாசர் 325

○○○

# இவ்வரலாற்றில் ஆராய்ந்த நூல்கள்


அகத்தியர் ஞானம் 195
தீட்சாவிதி 197
அண்ணாமலையார் வண்ணம் 255
அண்ணாமலை வெண்பா 172
அர்த்த பஞ்சக வியாக்கியானம் 104
அருணகிரி அந்தாதி 164
ஆர்த்திப் பிரபந்த வியாக்கியானம் 110
ஆனந்த மாலை[2] 143
இராம தேவர் பூசாவிதி 198
இராமானுச நூற்றந்தாதி வியாக்கியானம் 102
இராமனுசார்ய திவ்ய சரிதை 85
இலக்குமி தோத்திரம் 182
உபதேசத் திருநாமம்[2] 111
உபதேச ரத்தின மாலை வியாக்கியானம் 107
உரோமரிஷி ஞானம் 198
கச்சிக் கலம்பகம்[1] 281
கந்தர் சஷ்டி கவசம் 183
கருவூரார் பூசாவிதி 203
கலைஞான தீபம் 146
காகபுசுண்டர் நூல் 204
கொக்கோகம் 290
கொங்கணர் நூல் 207
சங்கற்ப நிராகரண உரை 68
சட்டை முனி நூல் 209
சண்முக கவசம் 184
சத்தி கவசம் 181
சப்த காதை வியாக்கி[1] 105
சர்வ ஞானோத்தர உரை[1] 46
சித்தியார் சுபக்கம் 23
அண்ணாமலை ஞானப்பிரகாசர் உரை 51
- சிவாக்கிர யோகி உரை 34
- நிரம்ப அழகிய தேசிகர் உரை 57
- மறைஞான தேசிகர் உரை 21
- சித்தியார் பரபக்கம் 46
- சிவாக்கிரயோகி உரை[1] 47
திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் உரை 63
- தத்துவப் பிரகாசர் 69
சிதம்பர வெண்பா 174
சிவகவசம் 181
சிவதருமோத்தர உரை 28
சிவ நெறிப்பிரகாச உரை 47
சிவப்பிரகாசம் - அருள் நந்திதேவர் உரை 50
சிவக்ஷேத்திரக் கோவை வெண்பா 176
சிவாட்டகம் 182
சுந்தரானந்தர் பாடல் 211
சுப்பிரமணியர் ஞானம் 212
சுருதி சூக்திமாலை 46
சூரிய தோத்திரம் 184
சூரியானந்தர் நூல் 211
சேயூர் முருகன் உலா[2] 249
சௌந்தரிய லகரி 138
- உரை 12
ஞானாமிர்த உரை 9
தசதர்மம் 132

தர்க்கபரிபாடை[1] 285
தனியன் வியாக்கியானம் 111
திரு அதிகைக் கலம்பகம்[1] 266
- அருணை அந்தாதி 226
- கலம்பகம் 227
- தனி வெண்பா 165
- ஆரூர்க் கோவை 228
- உந்தியார் உரை 7
- கருவை கலித்துறை அந்தாதி 158
பதிற்றுப் பத்தந்தாதி 155
- வெண்பா அந்தாதி 160
- களிற்றுப்படியார் உரை 8
- காளத்திநாதர் இட்ட காமிய மாலை 253
- காளத்தி உலா 243
- நறுங்கொண்டை மலைப்பதிகம் 132
- திக்கலம்பகம்[2] 82
பதிக்கோவை 77
- பாலைப்பந்தல் உலா[2] 229
- மந்திரம் சட்டை முனி கம்பளிச்சித்தர் உரை 72
திருமந்திரார்த்த அரும்பதம் 112
- மயிலாப்பூர் பத்தும்பதிகம் 133
- மூலர் ஞானம் 212
திருவருட்பயன் நிரம்ப அழகிய தேசிகர் உரை 62
திருவள்ளுவர் ஞானம் 214
- வாட் போக்கி நாதர் உலா 247
திருவாய்மொழி நூற்றந்தாதி வியாக்கியானம் 109
- வேங்கட உலா 218
தெய்வச்சிலையார் விறலி விடுதூது 233
தேவிகாலோத்தர உரை[1] 46
தையூர் உத்தண்டன் கோவை[2] 260
நந்திதேவர் பூசாவிதி 214
நம்பெருமாள் மும்மணிக் கோவை[1] 79
நமசிவாய மாலை 176
நாககுமார காவியம் 121
நாராயண கவசம் 183
நிராமய தேவர் நூல்[1] 288
நெல்லை வருக்கக் கோவை 258
பதார்த்த குண சிந்தாமணி[2] 196
பதிபசு பாசத் தொகை உரை 31
பதிபசு பாசப் பனுவல் உரை[1] 32
பரம ராசியமாலை 175
பராபரை மாலை 260
பழனிக் கோவை[3] 262
பார்த்திபம்[1] 285
புவனகோசம் 287
மஞ்சரிப்பா[1] 281
மதுரைச் சொக்கநாதர் உலா 221
மாறன் கிளவி மணிமாலை[1] 81
மிருத்தியுஞ்சய தோத்திரம் 183
மூவர் அம்மானை 303
யதீந்திரப் பிரவணப் பிரபாவம் 97
யோக சாரம்[2] 287
ரகஸ்யத்ரயம் 115
வர்த்தமான சுவாமி தோத்திரம் 132
வராகிமாலை 144
வலிவல மும்மணிக்கோவை 230
வால்மீகர் ஞானம் 216
வாலைக்கும்மி 207
விநாயக கவசம் 181
வீரமாலை[1] 267
வீரமாறன் குடை, நாள், வாண்மங்கலம் 283
வீரவெண்பா மாலை[1] 282
ஜனனகருவிமாலை[1] 286
ஸ்ரீ வைஷ்ணவ சமயாசார நிஷ்கர்ஷம் 113


1. இல்லாத நூல்
2. அச்சாகாத நூல்
3. புத்தக வடிவில் வராத நூல்

# முன்னுரை

## நாட்டு நிலை

*16ஆம் நூற்றாண்டு வரலாற்றுக்குரிய பொதுநிலைகள் பலவும் இதன் இரண்டாம் பாக முன்னுரையில் விளங்கச் சொல்லப்பட்டன. இந்நூற்றாண்டு, இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. பண்டைய இலக்கியச் சூழ்நிலைகள் மாறிப் புதுச் சூழ்நிலைகள் இப்போது அமையத் தொடங்குகின்றன. புலவர், அவர்களுக்கு அரசின் ஆதரவு என்ற நிலைகளெல்லாம் மாறி வருகின்றன. தமிழகமாக இருந்த நாடு, முகம்மதியர் வசமும் மேலை நாட்டார் வசமும் மாறி மாறி இருந்து வருவதை இந்நூற்றாண்டிலிருந்து காணமுடியும். இது தமிழ் வளர்ச்சிக்கு ஏற்றதன்று. ஆனால் அடுத்த நூற்றாண்டிலிருந்து அமையும் அச்சுத் தொழில் நிச்சயமாக வளர்ச்சிக்கு உதவிய ஒரு புது அம்சம். இவ்வாறு இந்நூற்றாண்டு, இலக்கிய வளர்ச்சியில் ஒரு மைய நிலையை அல்லது மாறுதலை வகுக்கும் நிலையைக் காட்டுகிறது.*

*16ஆம் நூற்றாண்டின் சிறப்பு நிலையை மற்றொரு வரலாற்றுத் தொடர்பாலும் நன்குணரலாம். தமிழ்நாட்டை மூன்று பகுதியாகக் கருதுவோமானால் - வடபகுதி, இடைப் பகுதி, தென் பகுதி என - மூன்றிலும் வெவ்வேறு நிலையில் சிறந்த இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. வடக்கே கிருஷ்ண தேவராயர் தமிழ் நாட்டுக்கும் அப்பால் இருந்து தமிழுக்குப் பேராதரவு அளித்தார் என்று அறிகிறோம். தத்துவப் பிரகாசர் ஞானப்பிரகாசர் போன்றோர் பெரும்புலவர்; ஆனால் அவர்கள் செய்த நூல்கள் கிடைக்கவில்லை. அரிதாசர் என்ற ஒருவர் செய்த பெருநூலே கிடைக்கிறது.**

*ராயரே தம் தாய்மொழியான தெலுங்கில் புலமையுடையவராய், ஆமுத்தமால்யதா என்ற நூல் பாடினாரென்ற வரலாறும் இங்கு நினைக்கத்தக்கது.*

---

* இந்நூற்றாண்டு வரலாறு முதல் பாகம் ஐந்தாம் அத்தியாயம்.

அடுத்து, தென் பகுதியைப் பார்த்தோமானால், அங்கு தென் காசி - கருவையிலிருந்து அரசு புரிந்த பாண்டியர் தாங்களே பெரும் புலவர்களாய் இருந்தார்கள். பல்லாயிரக் கணக்கான பாடல் கொண்ட பெரும் புராணங்களை மூவர் பாடியிருக்கி றார்கள். காப்பியம் நீதி நூல் துதி நூல்கள் முதலிய பலவும் சிறப் பாய்ப் பாடியிருக்கிறார்கள். இவை மட்டுமல்லாமல், தாங்களே புலவரைப் புரக்கும் பெருவள்ளல்களாயிருந்து சிறந்த புலவர் களுக்கு ஆதரவு தந்தும் இருக்கிறார்கள். இவர்கள் வரலாறு களை இவ்வரலாற்றுள் மூன்று பாகங்களிலும் ஆங்காங்கு காட்டியிருக்கிறோம். ஒருகால் நிரம்ப அழகிய தேசிகர் என்ற துழாவூர் மடத்துத் தலைவரும் இப்பாண்டியருடைய போற்று தலுக்கு உரியவராயிருந்திருக்கலாம்.

இவ்வாறு வடக்கிலும் தெற்கிலும் அரசருடைய ஆதரவு ஓங்கியிருக்க, இடையிலுள்ள சோழநாட்டுப் பகுதியில் சைவ சமயத் தலைவருடைய செல்வாக்கு ஓங்கியிருக்கக் காண்கிறோம். திருவாவடுதுறை சூரியனார் கோயில், தருமபுரம், துழாவூர் முத லான மடங்கள் இப்போது தோன்றத் தொடங்குகின்றன. பல மடங்களின் மூல ஆசாரியரும் அடியவரும், சாத்திர நூல்கள், புராணங்கள் போன்ற இலக்கியங்கள் சிறப்பாகப் பாடியிருக் கிறார்கள். வட மொழியில் சமய இலக்கியம் செய்தாரும் உள்ள னர். இம்மடங்களின் தோற்றமும் இவ்வகை இலக்கியப் பெருக் கமும் இடைப் பகுதியாகிய சோழநாட்டில்தான் அதிகம். இப் பெருக்கத்தை இவ்வரலாறு மூன்று பாகங்களையும் ஒரு சேர நோக்கித் தெளிவாக அறியலாம்.

இக்காலத்தே சைவ சாத்திர உரைகள் அதிகமாக எழுந்தன என்று முதல் அத்தியாயத்தால் நன்கறியலாம். அதுபோலவே தோத்திர இலக்கியம், பிரபந்த இலக்கியம், சித்தர் பாடல் என் பனவும் இப்போது பெருகுகின்றன. வைணவம் சைனம் என்ற இலக்கியங்கள் பிறவற்றை நோக்கக் குறைவுதான். வைணவப் புராணங்கள் இக்காலத்தே சிறப்பாக எழுந்தமை ஓர் அரிய செய்தியாகும். மற்றத் தனி இலக்கண இலக்கிய உரைகள் இக் காலத்தே சிறப்பாகவோ பெருக்கமாகவோ எழவில்லை என்பதை முந்திய பாகத்தால் அறியலாம்.

**சைவ மடங்கள்**

மடங்களைக் கூறியவிடத்து ஒரு கருத்தைத் தெளிவுபடுத்தி னால் நல்லது. பதினெண் மடத்து முதலிகளும் என்று 15ஆம்

நூற்றாண்டுத் தொடக்கத்தில் காளமேகம் பாடுகிறார். அபிதான சிந்தாமணி எழுதிய சிங்காரவேலு முதலியார் இதை விளக்கு முகமாக, 18 மடங்களுக்கும் ஓர் அட்டவணை தந்திருக்கிறார். அதனுள் 18ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் வாழ்ந்த தாயு மானவர் பெயரால் ஓர் ஆதீனம், செவ்வந்திப் புராணத்தில் சொல் லப்பட்ட சாரமாமுனிவர் பெயரால் திரிசிரபுரத்தில் ஓர் ஆதீனம் என்றெல்லாம் பல குறிப்பிட்டிருக்கிறார். அக்கருத்து பொருத்த மில்லை. தமிழில் சுத்த சைவ மடங்கள் 18 இருந்தன என்று பண்டை வரலாறு எங்கும் இல்லை. பதினெட்டுப் பத்ததி என்று வடமொழி வழக்கு உண்டு. பத்ததி செய்தார் சிவாசாரியர் ஆசாரியர், வடமொழியாளராயினும் தென்மொழியாளராயி னும், வாழ்ந்த இடம் ஒரு மடம். ஞானசம்பந்தர் தங்கிய இருக் கையை மடம் என்றே சேக்கிழார் சொல்லுகிறார். அடியவர் வீடெல்லாம் மடமே. பதினெண் மடம் என்பது பத்ததி செய்த சிவாசாரியர் வழி என்றே பொருளாகும். பத்ததி என்றால் ஆக மத்திலிருந்து திரட்டிய கிரியைகளுக்கான ஒரு கைக்குறிப்பு என்று பொருள்.

தமிழ்ச் சைவ மடங்கள் வேறு. இங்கு துறவிகளும் (காவி யுடையினரும் வெள்ளுடையினரும்) சிலசமயம் இல்லறத்தா ரும் தலைவராயிருந்திருக்கிறார்கள். இவை 18 என்று தேடவேண் டிய அவசியம் இல்லை.

### போலிக் குருமார்

இந்நூற்றாண்டு வரலாறு இரண்டாம் பாக முன்னுரையில் போலிக்குருமார் என்று தலைப்பிட்டுச் சில சொற்கள் சொல்லி யிருக்கிறோம். போலி என்று குருஞான சம்பந்தர் கண்டிப்பதற் குரிய பல காரணங்களோடு பின்னுமொன்று சொல்லத்தக்கது. இக்காலத்தில் சோதிடம் வைத்தியம் இரசவாதம் காயகற்பம் வாலை வழிபாடு முதலான பலதுறைகளில் மனத்தைச் செலுத் திய நூலாசிரியர் பலர் வாழ்ந்தார் என்று இந்நூல் ஐந்தாம் அத் தியாயத்தால் நன்கு விளங்கும். இவர்கள் சித்தர் என்றும் பெயர் வைத்துக் கொண்டார்கள். இவர்களை மக்கள் பலர் பின்பற்றி னார்கள் என்பது தெளிவு. இவர்கள் மக்களை நன்னெறியில் செலுத்தவில்லை என்பது குருஞான சம்பந்தருடைய கருத்துப் போலும். இதுவும், போலிக்குருமார் என்று அவர் பழித்துச் சொல்லியதற்குக் காரணமாயிருக்கக்கூடும்.

அன்றி, சாக்த நிலையில் நின்று வீரை - கவிராச பண்டிதர் தமிழ்ச் சௌந்தரிய லகரி, வராகிமாலை, கலைஞான தீபம் முத

லான நூல்கள் பாடினார்.* இவற்றின் நிலை வேறு. அட்ட கருமங்கள் என உச்சாடனம் மோகனம் வசியம் முதலியன இங்கு சிறப்பிடம் தரப்பட்டுள்ளன. இந்தநிலை நிச்சயம் குருஞான சம்பந்தருக்கு உடன்பாடாயிருந்திருக்காது.

## அகராதி என்ற சொல்

அகராதி என்ற சொல்லை ரேவண சித்தரே முதன் முதலாகப் பயன்படுத்தினார் என்று குறிப்பிட்டோம். ஆனால் அச்சொல் திருமந்திரத்திலும் காணப்படுகிறது (2292): 'சொல் அகராதி விரியப்பரையில் மிகும் நாதம்' என்பது பாடல். பரையில் சொற்பிரபஞ்சத்துக்குக் காரணமான நாதம் தோன்றும் என்று இதற்குப் பொருள் கூறுவர். யோக நிலையில் பொருள் இவ்வாறு இருப்பினும், அகராதி என்ற சொல்லாட்சி நெடுங்காலம் முன்னமே இருந்ததென்று இதனால் திட்டமாக அறிகிறோம். காலம் சுமார் 5ஆம் நூற்றாண்டு. அகராதி என்பது சொற் பிரபஞ்சம்: சொற்களாகிய தொகுப்பு; இது, 'நிகண்டு கூட்டமெனினும் ஒக்கும்' என்று நமசிவாயர் உரை எழுதுவதை ஒத்தது.

## திரவிட சிசு

மற்றுமொரு செய்தியும் குறிப்பிடத்தக்கது. சௌந்தரியலகரி மூலத்தில் 75ஆம் பாடல்:

**தவஸ்தன்யம் மன்யே தரணிதரகன்யே ஹ்ருதயத:**
**பய: பாராவார: பரிவஹி ஸாரஸ் வதமிவ**
**தயாவத்யா தத்தம் த்ரவிட சிசுராஸ்வாத்ய தவயத்**
**கவீனாம் ப்ரௌடானாம் மஜனி கமனீய: கவயிதா.**

மலையரசன் மகளே, உனது திருமுலைப்பால், இதயத்திலிருந்து உதித்த அமிருதப் பிரவாகம் போலும், சரசுவதியே உருக்கொண்டு வந்தாற்போலும் பெருகுகிறது என்று கருதுகிறேன்; ஏனெனில் நீ அருள் சுரந்து அளித்த திருமுலைப்பாலை அருந்தித் திரவிட சிசு (தமிழ்க்குழந்தை) பெருமை மிகக் கவிஞருக்குள் மனங்கவரும் கவிஞன் ஆகிவிட்டான் அன்றோ' என்பது இதன் பொருள். இங்கு திரவிட சிசு என்பது தமிழ்க் குழந்தையாகிய திருஞான சம்பந்தர் என்பதே நேரான பொருள். வேறு அக்காலத் திராவிட

* இந்நூலுள் பார்க்க. இவ்வாசிரியரே பாடிய ஆனந்த மாலையும், வரகுணராமர் பாடிய அம்பிகை மாலையும் இவருடைய புதல்வர் அம்பிகாபதி பாடிய பராபரை மாலையும் வேறு நிலையில் தோத்திர நூலாக உள்ளன.

*நாட்டில் சிசு கவிஞன் ஆன வரலாறு இல்லை. ஞானசம்பந்தர் திருமுலைப் பாலருந்திய செய்தியை அவரே தமது பாசுரத்தில்*

போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்.

*என்று பாடுகிறார். இது பெரியபுராணத்தால் நாடெங்கும் நன் கறியப்பட்ட வரலாறு. சம்பந்தர் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியில் (640) வாழ்ந்தவர். சங்கரர் கி.பி. 820 வரை வாழ்ந் தவர். ஆகவே சம்பந்தரை இவர் அறிந்து குறிப்பிடுவதும் பொருந் தக்கூடியதே. திரவிடம் என்றால் அக்காலத்தில் தமிழ் என்றே பொருள்; திரவிட சிசு என்றால் மூன்றே வயதான தமிழ்க் குழந்தை யான சம்பந்தர் என்பதுதான் எளிதான கருத்து.*

*ஆனால் தமிழுக்குச் சிறப்புத் தரலாகாது என்று கருதிய அத்வைதிகள் இதைச் சும்மா விடவில்லை. சங்கரரே திரவிடர், அவர் சிறு குழந்தையாக இருக்கையில் ஒரு சமயம் தாயும் தந்தையும் வீட்டில் இல்லாதபோது அழுதுகொண்டிருந்ததால் பார்வதி தேவியே தோன்றிப் பாலூட்டித் தேற்றினார் என்றும், சங்கரர், 'கவிஞருக்குள் பெருங் கவிஞனாக ஆனான்' என்று தம் மையே படர்க்கையில் சொல்லிக்கொண்டார் என்றும் சொல் வார்கள். இது பிற்காலத்தெழுந்த பொருந்தாக் கூற்று. கவிராச பண்டிதர், இங்கு தம் மொழிபெயர்ப்புப் பாடலில் 'கவுணியன் சிறுமதலை' (கவுணியன் கோத்திரத்தில் உதித்த திருஞான சம் பந்தர்) என்றே பாடுகிறார். உரையாசிரியரும் இப்படியே எழுது வதும் காணத்தக்கது. தமிழில் பாடினோருக்குத் திரவிடசிசு சங்கரர் என்ற கருத்தே எழவில்லை. இது பிற்காலத்தில் புனையப் பட்ட போலிக்கதை என்பது தெளிவு.*

### சில கருத்துப் பிழைகள்

*காலப்போக்கில் ஆராய்ச்சிகள் பெருகப் பெருக முந்தை யோர் கொண்ட கருத்துக்களில் சில பிழை என்று பின்னே செய் யும் ஆராய்ச்சிகளால் கண்டறிய நேரும். இது முன்னோர் ஆராய்ச் சிக்கு இழுக்கு ஆகாது. சோமசுந்தர தேசிகர் 1936இல் 16ஆம் நூற்றாண்டு தமிழ்ப்புலவர் வரலாறு எழுதிய காலத்தில் எவ் வளவு சிரமப்பட்டார் என்பதை உடனிருந்த நாம் அறிவோம். அவர் இறந்த பின்னரே 17ஆம் நூற்றாண்டு வெளிவந்தது. அதை அவர் முழுமையும் தாமே முடிக்கவில்லை. அவர் நூல்கள் அன் றைக்குச் சிறந்த முன்னோடிகள் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர் கருத்துக்களில் பிழைகள் உள்ளன. அவற்றை எடுத்துக்*

காட்டி, தத்துவப் பிரகாசர் காலம் என்ற ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை மதுரை செந்தமிழ்ப் பத்திரிகையில் 1940இல் எழுதி வெளியிட்டிருந்தோம். தத்துவப் பிரகாசர் ஒருவர் அல்லர், நால்வர், அவருள் மூவர் பாடல் பாடினார் என்ற எமது கருத்தை அங்கு தெளிவாக்கியிருந்தோம். அதுபோலவே பின்னும் சில திருத்தங்கள் சொல்லத்தக்கன. உதாரணமாக, மாசிலாமணிச் சம்பந்தர் உத்தரகோச மங்கைப் புராணம் பாடினார் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் புராணத்தின் சிறப்புப் பாயிரப் பாடல் மாசிலாமணி ஞானசம்பந்த தேசிகரின் சீடர் ஒருவரே புராணம் பாடினார் என்று கூறுகிறது. ஆதலால் தேசிகர் குறிப்பு பிழையாகும். மேலும் இந்த மாசிலாமணி, அதில் கூறியபடி கமலை ஞானப்பிரகாசரின் சீடர் அல்லர். இவர் தருமபுரத்தில் நான்காம் பட்டத்திலிருந்த மாசிலாமணி ஞானசம்பந்த தேசிகர் என்பவர். இவர் காலம் 17ஆம் நூற்றாண்டு. அந்தப் புராணத்தை அடுத்த நூற்றாண்டில் ஆராய்கிறோம்.

இதுபோலவே, மருதூர் ஆபதுத்தாரணர் என்பவர் தமது பூகோள விலாசம் என்ற நூலில்,

> **தமிழ் மணம் கமழும் கமலையம் பதிவாழ்**
> **ஞானசம் பந்தனை வணங்கில்**
> **ஈன சம்பந்த மில்லை வீடெளிதே.**

என்ற பாடலைத் தலைப்பில் பெய்திருப்பதால், இவர் ஞானசம்பந்தருடைய சீடரென்றும் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்றும் தேசிகர் எழுதியிருக்கிறார். இக்கருத்தும் பொருந்தாது. ஏனெனில், இப்பாடல் பல ஏடுகளில் காணப்படுகிறது; இது ஆபத்துத்தாரணர் பாடல் அன்று. ஏடு பிரதி செய்வோர் பலர் தாங்கள் பிரதி செய்யும்போது தங்களுக்குப் பிடித்த ஒரு வணக்கப் பாடலை முதலில் எழுதிக் கொண்டு பிறகு நூல் தொடங்குவது வழக்கம். அவ்வாறு வந்ததே இப்பாடல். இந்த ஏடு எழுதினோர் ஒருகால் தருமபுரத்தில் பழக்கமுடையவராய் இருந்திருக்கலாம். அதுபற்றியே இப்பாடலை எழுதியிருக்கிறார். இது கொண்டு இப்பாடலைச் செய்தவர் நூலாசிரியர் என்று கருதுவது பிழையாகும். பூகோள விலாசத்தை அடுத்த நூற்றாண்டில் ஆராய்ந்திருக்கிறோம்.

பிள்ளைப் பாண்டியன் என்ற பெயரும் ஒரு பிழையான கருத்தைத் தோற்றுவித்திருக்கிறது. பிற்காலப் புலவரொருவர் தம் காலத்துப் போலிப்புலவரை எண்ணி ‘குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இல்லை’ என்று ஒரு பாடல் பாடினார்.

பிள்ளைப் பாண்டியன் என்றால் பாண்டியர் மூவரில் இளையவ ராயிருந்த அதிவீரராமர் என்று கருதியிருக்கிறார்கள். இதில் உண்மையில்லை. தத்துவப்பிரகாசர் இப்பாடலைப் பாடினார் என்று கருதுவதும் பொருந்தாது.

எல்லப்பன் என்ற பெயருடையார் பலர் என்ற கருத்துப்பட தேசிகர் எழுதி, உண்ணாமலை எல்லன் என்ற பெயரில் மட்டும் சில நூல்களைக் குறிப்பிட்டிருக்கிறார். எல்லப்ப நாவலர், எல்லன், எல்லப்பன் என்ற பெயர்கள் யாவும் எல்லப்ப நாவலர் என்ற பெயருடையார் ஒருவருக்கே பொருந்தும். அவரே காலிங்கன், நாவலர், உண்ணாமலை எல்லன், தாழை எல்ல பூபதி என்று அனைத்தையும் இந்நூற்றாண்டு வரலாறு முதல் பாகம் மூன்றாம் அத்தியாயத்தில் ஒற்றுமைப்படுத்திக் காட்டியிருக்கிறோம்.

சமயதிவாகர வாமன முனிவர் இருவர் இருந்தனர் என்பது மு. இராகவையங்கார் கருத்து: ஒருவர் மேருமந்தர புராணம் 14ஆம் நூற்றாண்டில் பாடினார், மற்றவர் நீலகேசியுரை 16ஆம் நூற்றாண்டில் எழுதினார் என்பது. எமது கருத்து இருவரும் ஒருவரே என்பது. இதை 14ஆம் நூற்றாண்டு வரலாற்றில் விளக்கியிருக்கிறோம்.

## புது இலக்கிய நெறிகள்

ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஆற்றல் மிக்க நூலாசிரியர் பல புது நெறிகளை இலக்கியத்தில் படைக்கிறார்கள்; அவை பிற்கால ஆசிரியருக்கு வழிகாட்டிகளாய் அமைகின்றன. இந்த நிலையை இந்த நூற்றாண்டிலும் காண்கிறோம். உலாக்கள் முன்னமே சில எழுந்திருந்தன. சேரமான் பெருமாள் பாடிய ஆதியுலா (கி.பி. 700); ஒட்டக்கூத்தர் உலாக்கள் (12ஆம் நூற்றாண்டு); இரட்டையர் காளமேகம் உலாக்கள் (14-15) போன்றன குறிப்பிடத் தக்கவை. எனினும், இந்நூற்றாண்டில்தான், உலா ஒரு பழைய நெறியாயிருந்தபோதிலும், திட்டமான வடிவம் பெற்றுப் பின் வந்தோருக்கு முன்மாதிரியாயமைந்து பாதை வகுத்துத் தருகிறது. திருமலைநாதருடைய உலாவும் சேறை - கவிராச பிள்ளையின் உலாக்களும் இவ்வாறு வழிவகுப்பவை. பொருளமைப்பு, சொற்சித்திரம், ஓசை நயம், தல வரலாற்றுத் தொகுப்பு, பருவ விளையாட்டுக்கள், மடக்கு முதலிய தன்மைகளில் இவ்வுலாக்கள் சிறந்து விளங்கி, தாமும் இவ்வாறு விளங்க வேண்டும் என்ற உணர்வைப் பின்வந்தோருக்கு ஊட்டியிருக்கின்றன. இந்த நெறியில் விளைந்த தமிழ் வளம் மிக்க அழகும் சிறப்பும் ஆழமும் வலிமையும் உடையது.

வண்ணம் ஒரு புதிய நெறி. சேறைக் கவிராச பிள்ளை இதைத் தோற்றுவிக்கிறார். இவர் பாடியது திரு அண்ணாமலையார் வண்ணம்.* அதைப் பின்பற்றிப் பல வண்ணங்கள் எழுந்தன. சில, வண்ணத்திரட்டு என ஒரு தொகுப்பாகவும் பின்னே திரட்டப்பட்டுள்ளன. மூவரையன் வண்ணம் என்பது அவற்றுள் ஒன்று. இது வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியது. பிறவும் இவ்வாறு உதவ வல்லவை.

இனி பாசுர காலத்தின்பின், தோத்திர இலக்கியம் அவ்வப்போது அருமையாகத் தோன்றியிருக்கிறது. இக்காலத்தில்தான் அது பெருகி, பிற்காலத்தில் இன்னும் அதிகமாய் எழுச்சி பெற வழிகாட்டியிருக்கிறது. கவச நூல்கள் என்று இங்கு ஆராயப் பெற்றவை தோத்திரத்தினுள் ஒரு தனிப் பிரிவாகும். முக்கியமான மற்றொரு பிரிவு, சக்தியை வழிபடும் துதி நூல்கள். சௌந்தரியலகரி மொழிபெயர்ப்புத் தொடங்கி இவை பெரு வெள்ளமாய்ப் பெருகியிருக்கின்றன. 12ஆம் நூற்றாண்டில் சரசுவதியந்தாதி என்ற ஒரு தனி நூல் தோன்றியிருந்தது உண்மை. ஆனால் இக்காலத்தில் இவை அதிகமாக எழுந்துள்ளன. கவிராச பண்டிதர் சக்தி தோத்திரமே பாடியவர்; வரகுண ராம பாண்டியர் பாடிய அம்பிகை மாலை (முதல் பாகம் இருநூறு ஆண்டுகள் கழித்துப் பட்டர் அபிராமி அந்தாதி பாட வழி காட்டிற்று.

## தூத காவியம்

வடமொழியில் தூத காவியம், சந்தேசம் என்று சொல்லப்படும் இலக்கிய வகையைத் தமிழில் தூது என்று சொல்லுகிறோம். அங்கு, காவியம் இருவகை; மகாகாவியம் லகுகாவியம் என. இவற்றுள் தூதகாவியம் லகுகாவியம் ஆகும். ரிக் வேதத்தில் ஒரு நாயைத் தூதுவிட்ட செய்தி காணப்படுகிறது. வடமொழியில் காளிதாசன் பாடிய மேக சந்தேசம் உலகப் பிரசித்தி பெற்றது. அங்கு தன் மனைவியைப் பிரிந்திருக்கின்ற யட்சனொருவன் மேகத்தை விளித்துத் தன் மனைவியிடம் சென்று தூது கூறுமாறு நூல் அமைந்திருக்கின்றது. அதற்குப் பின் வடமொழியிலெழுந்த சந்தேச நூல்கள் பல.

தமிழ்மொழியில் தூதுப் பிரபந்தத்தை ஆராய்வோம். தூது செல்லுதல் என்ற கருத்தைக் குறித்துச் சில செய்திகள் அறியத்

---

* பிழையாக இது தியாகராச பிள்ளை பாடியதென்று சில பதிப்புக்களில் அச்சிடப்பட்டிருக்கவும் காணலாம். இது கவிராச பிள்ளையின் பெயரும் வரலாறும் தெரியாமையால் வந்த பிழை.

தக்கன. இது சம்பந்தமாகச் சில நிலைகளைப் பின்வருமாறு வகுத்துக் கூறலாம்.

1. பகை தணித்தற் பொருட்டு அரசர் தூது விடுத்தல். இதை இராமாயணத்தில் அனுமன் தூது, அங்கதன் தூது முதலியவற்றாலும், பாரதத்தில் தௌமியன் தூது, கிருஷ்ணன் தூது முதலியவற்றாலும், அறியலாம். அவ்வையார் தொண்டைமானிடம் தூது சென்ற செய்தியைச் சில புறநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன. தொல்காப்பியத்தில் தலைவன் தலைவியைப் பிரிவதற்குரிய காரணங்களில் தூதும் ஒன்றாகச் சொல்லப்பட்டிருப்பதைக் காணலாம்.

2. காதலன் காதலியிடத்துத் தூதனுப்புதல்: இதற்கு எடுத்துக்காட்டு காளிதாசன் பாடிய மேக சந்தேசமாகும். இங்கு, தூது சொல்லி அனுப்பப்பட்ட பொருள் மேகம். இதைப்போலத் தமிழில் கோப்பெருஞ்சோழனிடத்துப் பிசிராந்தையார் 'அன்னச் சேவல்' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலால் அன்னத் தூது ஒன்று விடுக்கிறார். காதலன் காதலியிடத்து விடும் தூதாக, 'நாராய் நாராய் செங்கால் நாராய்' என்ற சத்திமுற்றப் புலவர் தனிப்பாடலையும் பிற்காலத்தில் காண்கிறோம். இலக்கியத்தில், காதல் கொண்ட நளன் தமயந்தியிடத்து அன்னத்தைத் தூது விட்ட செய்தியைப் பார்க்கிறோம்.

3. அடியவர்கள் தங்களை நாயகி நிலையில் இருத்தி இறைவனாகிய நாயகனிடத்துத் தங்கள் காதலைக் கூறுமாறும் இறைவனையழைத்து வருமாறும் பாடுகின்ற பாடல்களைத் தேவார திருவாசகங்களிலும், நாலாயிரப் பிரபந்தங்களிலும் விரிவாகக் காணலாம். எடுத்துக்காட்டாக, 'சிறையாரும் மடக்கிளியே' என்ற சம்பந்தர் பாடல், 'சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்' என்ற அப்பர் பாடல், மாணிக்கவாசகர் பாடிய குயில் பத்து, திருமங்கையாழ்வார் பாடிய 'செங்கால் மடநாராய்' என்ற பாசுரம், நம்மாழ்வார் பாடிய 'அருஞ்சிறைய மடநாராய்' என்ற பாசுரம் முதலான எண்ணற்ற பாடல்களைக் குறிப்பிடலாம். இவை பக்தியால் விளைந்தவை.

4. இந்த நிலையில் வைத்து எண்ணத்தக்கதே தூது என்ற தமிழ்த் தூதுப் பிரபந்த வகை. நாயகனாகிய பரம் பொருளிடத்துப் புலவனாகிய நாயகி, அவனுடைய அருளைப் பெற்று வருமாறு பலவகைப் பொருள்களையும் தூது சொல்ல அனுப்புவதாகும். இப்பொருள் பற்றிப் பின்னாலே விரிவாகக் கூறுவோம்.

5. தெய்வத்தினிடத்தில் அருளை வேண்டித் தூதனுப்பும் நிலைமாறி, விசயநகர ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னரும், அரசியல் தலைவனிடத்தில் காதலைச் சொல்லி வருமாறு தூத னுப்புவதாகும். இது முந்தியதெனினும் சற்றே தாழ்ந்த நிலை யென்று சொல்லலாம்.

6. இதனினும் கீழானது, வசவும் பழிப்பும் அமைத்துப் புலவர் தமது பகைவனிடத்துக் கீழான பொருள்களான கழுதை, செருப்பு முதலியவற்றைத் தூது சொல்லி வருமாறு பாடல் அமைப்பது. இந்த அமைப்பில் சமீப காலத்தில் சில பிரபந்தங் கள் எழுந்துள்ளன.

இவையன்றி, கலம்பகம், அந்தாதி, இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை முதலான பிரபந்த வகைகளிலும் காதலி தூது விடுவதாக, தூது என்ற ஓர் உறுப்பு அமைக்கவும் பெறும். குணமாலை கிளியைச் சீவகனிடத்துத் தூதுவிட்ட செய்தியைச் சிந்தாமணியில் காணலாம்.

இனி, தூது என்ற தனிப் பிரபந்த வகையைப் பார்க்கலாம். இது ஒரு விரிவான சிறப்பமைந்த பிரபந்த வகையாக வளர்ச்சி பெற்ற போதிலும், பண்டைய இலக்கணங்களான பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம் பரப் பாட்டியல் போன்றன எதுவுமே தூதுக்கு இலக்கணம் கூற வில்லை என்பது வியப்பாயுள்ளது. 16ஆம் நூற்றாண்டில் தோன் றிய பிரபந்த மரபியலும் 17ஆம் நூற்றாண்டில் எழுந்த இலக் கண விளக்கப் பாட்டியலுமே தூதின் இலக்கணம் கூறுகின்றன:

இருதிணை யுடனமை யயலை உரைத்துத்
தூதுசொல விடுவது தூது; இவை கலிவெண்
பாவினால் விரித்துப் பகர்வது மரபே.

பயிறருங் கலிவெண் பாவி னாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
சந்தியில் விடுத்தல் முந்துறு தூதென
பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே.

என்பன காண்க.

தூதுப் பிரபந்தம் நீண்ட கலிவெண்பாட்டினால் பாடப் பெறும். இது புறத்திணைத் துறைகளுள் கடவுள் மாட்டு மானி டப் பெண்டிர் நயந்த பக்கம் என்பதற்குரியது.

தூதாக அனுப்பத்தக்க பொருள்கள் பாணன் முதலிய உயர் திணையும், கிள்ளை முதலிய அஃறிணையுமாகும். இவற்றைத் தொகுத்து இரத்தினச் சுருக்கப் பாடல் பின்வருமாறு கூறுகிறது:

இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி – நயந்த குயில்
பேதைநெஞ்சம் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்கும் தொடை.

இங்கு சொல்லப்பட்ட பொருள்கள்: அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்ற பத்து. இவ்வாறு இலக்கணம் கூறியதற்கு ஆதாரம் புலப்பட வில்லை. அன்னம், மயில், பூவை, பாங்கி, குயில் என்பவற்றைத் தூதாக விட்ட பண்டைப் பிரபந்தங்கள் இல்லை. உமாபதி சிவம் தமது ஞானாசிரியராகிய மறைஞான சம்பந்தர் மீது பாடிய நெஞ்சு விடுதூது ஒன்றே இவ்விலக்கண காலத்துக்கு முற்பட்ட தூதாகும்; இதுவே முதல் தூது. இதனோடு சேர்த்துச் சொல்லத் தக்கது, தத்துவராயர் தம் ஞானாசிரியராகிய, சொரூபானந்தர் மீது பாடிய நெஞ்சுவிடுதூது. பிறவகைகளில் தோன்றிய முதல் நூல்கள் பின்வருவன: கிளி-பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய அழகர் கிள்ளை விடுதூது (17ஆம் நூற்றாண்டு); தென்றல் - அவரே பாடிய பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது (17) வண்டு - கச்சியப்ப முனிவர் பாடிய கச்சி ஆனந்த ருத்திரசேர் வண்டுவிடு தூது (1800). நம் காலத்தில் ஒருவர் மயில் விடுதூது பாடினார்.

தானாப்பாசாரியர் தச விடுதூது என்று ஒரு பிரபந்தம் தூது விடுதற்குரிய (தச) பத்துப் பொருள்களையும் தூதாக அமைத்துப் பாடப்பட்டுள்ளதென்று ஐயரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இலக்கணம் கூறும் இப்பொருள்களையன்றி வேறு பல பொருள்களைத் தூதுவிட்ட பிரபந்தங்கள் உள்ளன. மான்விடு தூது, நெல்விடு தூது, பணவிடு தூது, பொன்விடு தூது, தமிழ் விடு தூது, துகில்விடு தூது, வனசவிடு தூது, விறலிவிடு தூது, புகையிலை விடு தூது, சவ்வாது விடு தூது முதலியன குறிப்பிடத் தக்கவை. இவையன்றி 20ஆம் நூற்றாண்டில் பின்னும் பலவகை நூல்களைப் புலவர் செய்திருக்கிறார்கள்.

தமிழ்த் தூதுப் பிரபந்தங்கள் யாவுமே, தலைவியின் காத லைத் தலைவனிடத்து எடுத்துக்கூறி, அவன் அருள் புரிந்ததற்கு அடையாளமாக, தன்னுடைய அடையாள மாலையைப் பெற்று

வரும்படி, தூது செல்லும் பொருளுக்குத் தலைவி சொல்லிய னுப்புவதாக அமைந்திருக்கும்.

இவற்றுள் சிறப்பான ஒன்று விறலிவிடு தூது. இலக்கணம் பாங்கியைக் கூறிற்றே தவிர விறலியைக் கூறவில்லை. இந்த நூற் றாண்டில் ஒரு புலவர் தெய்வச்சிலைப் பெருமாள் என்ற வள் ளல் மீது ஒரு விறலிவிடு தூது பாடியிருக்கிறார். இது இலக்கண இலக்கியங்களில் புதுமை; 16ஆம் நூற்றாண்டின் புது நெறிகளுள் ஒன்று. பின்னால் இதைத் தழுவி வந்த விறலிவிடு தூதுக்கள் பல.

இதன் பொருளமைப்பும், பாங்கிவிடு தூதுபோல் அகத் துறையில் அமையாமல் வேறு விதமாய்க் காமச்சுவை பொருந்த ஒரு கதை தழுவி அமைந்துள்ளது. பிற்காலத்தில் இவ்வகை இலக் கியம் பெருகியதற்குக் காரணம் அரசியற் சூழ்நிலை. பாளையப் பட்டார் ஆங்காங்கு ஆதிக்கம் பெற்றுச் சிற்றின்பத்தில் மூழ்கி யிருந்தமையே இதற்குத் தூண்டுகோல். வண்ணத்துக்கும் விறலி விடுதூதுக்கும், இன்னும் பிற்காலத்தில் நொண்டிநாடகம், காதல் என்ற பெயரால் தோன்றிய பலவகைப் பிரபந்தங்களுக் கும் காமச்சுவையே முக்கியமானது. எனினும், இத்தூது இந்நூற் றாண்டில் தோன்றிய ஒரு புதுநெறி என்பது உண்மை.

இவ்வாறு ஒரு தொகுப்பாக இந்நூற்றாண்டுப் பிரபந்தங் களை ஆராயும்போது, இது பலதுறைகளில் புதிய நெறிகளைப் படைத்த சிறப்பைக் காணலாம்.

**அம்மானை**

அம்மானை பற்றிய விளக்கம் இங்கு விரிவாய்த் தரப்பெற் றுள்ளது. பிற்காலத்தில் அம்மானைப் பாடல்கள் பல்கி விட்ட மையால் அவற்றுக்கு ஒரு விளக்கம் அவசியமாயிற்று. அம்மானை பெண்கள் ஆடும் விளையாட்டு. அம்மானை என்றாலே தாய் என்ற பொருளும் உண்டு. பெண்கள் விளையாடும்போது, இக் காலத்தில் அம்மா என்று ஒருவரையொருவர் விளிப்பதுபோல, பண்டைக் காலத்தில் அம்மனை, அம்மானாய் என்று விளித்து விளையாடியிருக்கிறார்கள். இவ்விளி பாட்டுக்களிலும் இடம் பெற்றிருக்கிறது. அதுபற்றியே பாட்டுக்களுக்கும் அம்மானைப் பாட்டு என்று பெயர் அமைந்ததென்று சொல்லலாம். முன் ஆய்ந்து சொல்லிய பல கருத்துக்களோடு இக்கருத்தும் அமைத் துக் கொள்ளத்தக்கது.

○○○

## அத்தியாயம் 1

# சைவ சாத்திர உரைகள்

### முன்னுரை

**இலக்கிய இலக்கண உரைகள்**

ஒன்பது முதல் பதினைந்தாம் நூற்றாண்டு முடிய எழுதப் பெற்ற இலக்கிய வரலாற்று நூல்களில், இலக்கிய உரை, இலக்கண உரை என்ற தலைப்புக்கள் அமைக்கப்பட்டனவேயன்றி, சாத்திர உரைகள் என்ற தலைப்பு அமைக்கப்படவில்லை. 8ஆம் நூற் றாண்டில் இறையனார் களவியல் தொடங்கி இலக்கண உரைகள் எழுந்துள்ளன; எனினும் 11ஆம் நூற்றாண்டில் யாப்பருங்கல விருத்தி, தொல்காப்பியம் - இளம்பூரணம் என்பன தொடக்க மாகத்தான் இலக்கண உரைமரபு தொடர்புடையதாக வளர்ந் திருக்கிறது. 16ஆம் நூற்றாண்டு வரலாற்றின் இரண்டாம் பாகத் திலும் இலக்கண உரை என்று தனி அத்தியாயத் தலைப்பிட்டுச் சில இலக்கண உரைகளைக் குறிப்பிட்டிருக்கிறோம். அதுபோல, 10ஆம் நூற்றாண்டில் மணக்குடவர் செய்த திருக்குறள் உரை தொடக்கமாக, இலக்கிய உரைகள் விரிவாக எழுந்து வளர்ந் திருக்கின்றன. 16ஆம் நூற்றாண்டிலும் இவை தனியாக ஆராயப் பெற்றுள்ளன.

**வைணவ உரைகள்**

இவ்விரு வகையும் அல்லாமல், வைணவப் பெரியார் தங்கள் சாத்திரங்களை விளக்குவதற்கென்று ஒரு தனியான உரை மரபைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறார்கள். இம்மரபு 12ஆம் நூற்றாண்டில் இராமானுசரின் சீடரான திருக்குருகைப் பிரான் பிள்ளான் தொடங்கி 15ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் வாழ்ந்த பிள்ளை லோகஞ்சீயர் உரை வரையில் தொடர் பாக வளர்ந்திருக்கிறது. இம்மரபின் விசேடம், இவ்வுரைக் காரர்கள் தமிழில் எழுதாமல், பாதித் தமிழும் பாதி சமஸ்கிருதமு

மாக எழுதியிருப்பது. இவ்விரு மொழிச் சொற்களையும் மணியும் பவழமுமாகக் கருதி, இவ்வுரை நடைக்குப் பிற்காலத்தில் மணிப்பிரவாளம் என்று பெயர் சூட்டப்பெற்றது. இந்த மணிப்பிரவாள நடை வைணவர்களிடை மட்டுந்தான் வழங்கிற்று. (பிரவாளம் - வடமொழி, பவளம் என்று பொருள்.) இதற்கு வேறு தனியாட்சி அமையவில்லை. சிறிதளவு சைன ஆசிரியரும் இந்நடையில் எழுதிப் பார்த்தார்கள்; சிறப்படைய வில்லை. எனினும், இம்மணிப்பிரவாள நடையால் தமிழின் போக்கு மாறுபட்டதென்றோ, தமிழில் வடமொழிக் கலப்பு அதிகம் ஏற்பட்டதென்றோ சொல்ல இடமில்லை. மணிப்பிரவாளத்தைப் பற்றிய விளக்கங்கள் எமது இலக்கிய வரலாறுகள் அனைத்திலும் (12 முதல் 15 நூற்றாண்டு வரை) விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. இம்மணிப்பிரவாள உரைகள் (வியாக்கியானங்கள்) அவ்வந் நூற்றாண்டு வரலாற்றிலேயே வைணவ இலக்கியம் என்ற தலைப்பில் சேர்த்து ஆராயப்பெற்றுள்ளன. வியாக்கியானக்காரர் யாரும் தம் நூலை மணிப்பிரவாளம் என்று சொன்னதில்லை, தமிழ் என்றே சொல்கிறார்கள்.

### சைவ சாத்திர உரைகள்

இவ்வாறு மூன்று வகையாகக் குறிப்பிட்ட உரை வரலாறுகளில் இந்த 16ஆம் நூற்றாண்டின் சைவ சாத்திர உரை அடங்குவதாயில்லை. இவையும் வைணவம் போல, சாத்திர உரைகள்; ஆனால் மணிப்பிரவாளம் அல்ல, நல்ல தமிழ் உரைகள். அன்றியும் இவை இந்த் நூற்றாண்டில் தான் மிகவும் அதிகமாய் எழுகின்றன. இவற்றை மட்டுமே விரிவாக ஆய்ந்து ஒரு தனிப் புத்தகமாய் எழுத முடியும். எனினும், ஓர் அமைப்புக்குள் அடங்கும் பொருட்டு இங்கு இவற்றுக்கென்று புதிதாக ஒரு தனி அத்தியாயம் மட்டும் அமைத்திருக்கிறோம்.

மெய்கண்டார் தொடக்கமாக மூல சைவ சாத்திரங்கள் சம்பிரதாயமாகத் தோன்றுகின்றன. மெய்கண்டார் காலம் 13ஆம் நூற்றாண்டு என்று, கோபிநாதராயர் கருத்தையொட்டி இதுவரை, எல்லோரும் கருதி வந்திருக்கிறார்கள். அவர் காலம் 12ஆம் நூற்றாண்டாகவும் இருக்கலாம் என்ற கருத்தையும் வேறிடத்தில் சொல்லியிருக்கிறோம்.* அக்கருத்தின் வழிப் பார்த்தால், திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், ஞானாமிர்தம்,

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 13ஆம் நூற்றாண்டு.

மெய்கண்டாரின் சிவஞான போதம் ஆகிய நான்கு நூல்களும் ஏறக்குறைய சம காலத்தில் உதித்த ஆதிச் சைவ சாத்திர மூல நூல்கள் என்று கொள்ள முடியும். இச்சாத்திரங்கள் அனைத்துக்குமே பிற்காலத்தில் சிறப்பான உரைகள் எழுந்துள்ளன. மெய்கண்டார் தொடங்கிச் சாத்திரங்களும் பலவாகப் பெருகி வந்துள்ளன; மெய்கண்டார் ஒருவரே தமக்குப் பின் ஞான பரம்பரையை வளரச் செய்திருக்கிறார். இவர் மூலம் வளர்ந்த ஞான பரம்பரையில் முதல் சாத்திர உரை 14ஆம் நூற்றாண்டில் எழுந்தது. மெய்கண்டாரின் மாணாக்கரான அருணந்தி சிவம் செய்த பெருநூல் சிவஞான சித்தியார்; மற்றச் சிறு நூல் இருபா இருபது. இச்சிறு நூலுக்கு இதே பரம்பரையில் வந்த சீகாழித் தத்துவநாதர் என்பவர் செய்த சிறப்பான உரையே, சைவ சாத்திர வுரைகள் அனைத்திலும் காலத்தால் முதலாவது; 14ஆம் நூற்றாண்டு. அடுத்த உரை திருக்களிற்றுப் படியாருக்குக் கண்ணுடைய வள்ளல் எழுதிய அனுபூதி உரை; காலம் 15ஆம் நூற்றாண்டின் தொடக்கம்.* இனி, அருணந்தி சிவத்தின் வழி வந்த உமாபதி சிவாசாரியர் செய்த சிவப்பிரகாசம் என்ற மிகவும் சிறப்பமைந்த சித்தாந்த சாத்திரத்துக்கு மதுரை ஞானப்பிரகாசர் மதுரைச் சிவப்பிரகாசர் என்ற இருவர் 15ஆம் நூற்றாண்டில் தனியே இரு உரைகள் எழுதினார்கள்.❖ இந்நான்கு உரைகளுமே 16ஆம் நூற்றாண்டுக்கு முன் எழுந்த சைவ சாத்திர உரைகள்.

இனி, 16ஆம் நூற்றாண்டில்தான் அதிகமான உரையாசிரியர் தோன்றுகிறார்கள். சிறப்பான ஆசிரியர் பதினொருவரை இங்கு பார்க்கிறோம். இவர்களுள் எழுவர் மெய்கண்ட சாத்திரங்கள் சிலவற்றுக்கு உரை செய்தார்கள். பின்னும், நால்வர் புராணம் செய்தவர்கள். இந்நால்வரும், புராணங்களன்றி வேறு இலக்கியங்களும் செய்தவர்கள். இவற்றையெல்லாம் பின்னே விளங்கக் காணலாம்.

### சைவ எழுச்சிக்குக் காரணங்கள்

இவ்வாறு இக்காலத்தே உரைகள் இவ்வளவு அதிகமாய்த் தோன்றுவதற்கான காரணம் என்ன என்பது சிந்திக்கத்தக்கது. முதற் சைவ சாத்திரங்கள் தோன்றிய காலம், சோழர் ஆட்சி உச்ச நிலையில் இருந்த காலம். திருவருளால் சிவஞானம் கைவரப்பெற்ற மெய்கண்டார் சாத்திரம் செய்கிறார், மரபு தோற்று

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 15ஆம் நூற்றாண்டு நூல் காண்க.

❖ எமது தமிழ் இலக்கிய வரலாறு 15ஆம் நூற்றாண்டு நூல் காண்க.

விக்கிறார்; சைவத் திருமுறைகள் தோன்றி நாடெங்கும் பரவியதும் அவற்றின் விளக்கமாகச் சோழ மன்னர் எண்ணற்ற பெரும் கற்றளிகள் எடுத்ததும் புதியதொரு சைவ விழிப்புக்கு இடமாயிருந்தன. அருள் வசத்தால், திருமுறைகள் காட்டும் சைவ தத்துவநெறியைத் தனியாக உணர்த்த, மெய்கண்டார் சாத்திரம் செய்தார். அது கிளைத்துப் பெருகிற்று.

அது மட்டுமல்ல. உடன் காலத்தில் இராமானுசரும் அவர் முன்னோரும் பின்னோரும் மூன்று வகையில் நூல் செய்து தம் சமயத்தைப் பேணினார்கள். ஒன்று: வடமொழியில் புதுச் சமய நூல்கள். இரண்டு: நாலாயிரப் பிரபந்த வியாக்கியானங்கள், மணிப்பிரவாளத்தில். மூன்று: மணிப்பிரவாளத்தில் புதிய சமய நூல்கள். செய்தோர் அனைவரும் (நாதமுனிகள் தொடங்கி மணவாள மாமுனிகள் வரை) பிராமணரே. (விளாஞ்சோலைப் பிள்ளை போன்ற விதிவிலக்கு அபூர்வம்.) இவ்வாறு விளைந்த வைணவ நூலாக்கத்தை உணர்ந்த நிலையும், சைவர் நூல் செய்யும் எழுச்சிக்கு ஒரு காரணமாகலாம். சைவத்தில் நூல் செய்தோர் அனைவரும் சைவ வேளாளரே, பிராமணர் இல்லை (சிவாக்கிரயோகி ஒருவர் மட்டும் விதி விலக்கு). இச்சைவ நூற் பெருக்கம் 12-14 நூற்றாண்டுகளில். மெய்கண்டார் வழி வந்த சீடர்கள் பல பிரிவுகளாகத் தனி இருக்கை (மடம்) அமைத்துக் கொண்டு வெவ்வேறு இடங்களில் வாழத் தலைப்பட்டனர். இவ்விருக்கையும் தனி மடமும் 16ஆம் நூற்றாண்டில்தான் நிலைபெற்றது. இவ்வாறு நிலைபெறுத்திக் கொண்டோருக்கு, தேவார திருவாசகம் போன்ற திருமுறைகளும், திருத்தொண்டர் புராணமும், மெய்கண்ட சாத்திரங்களும், தத்துவநாதர் போன்றார் செய்த உரைகளும், போதிய தூண்டல்களாயின. இத்தூண்டல் களால் இவர்கள் சாத்திர உரை எழுதலாயினர்.

ஒன்று நாம் நினைவில் கொள்ளவேண்டும். இங்கு நாம் கருதும் பலரும் பெரும் புலமை படைத்தவர்கள். அவரவர் வரலாற்றால் இச்செய்தி நன்கு புலப்படும். ஆனால் இவர்கள் தங்கள் புலமையைத் தனியான இலக்கியமோ காவியமோ செய்யப் பயன்படுத்தவில்லை: சமய வளர்ச்சிக்கே பயன்படுத்தி னார்கள். உதாரணமாகச் சொல்வதானால் அதிவீரராம பாண்டியரைக் குறிப்பிடலாம். வெற்றி வேற்கை என்ற சிறுநீதி நூலையும் நைடதம் என்ற சிறப்பான காப்பியத்தையும் படைத்த இவர் அந்த நெறியில் இருந்து மனத்தைத் திருப்பி, சிவசரிதங்களைச் சொல்வதென்றே முனைந்து கூர்மபுராணம், காசிகண்டம்

என்ற இருபெரும் சைவ புராணங்களைப் பாடியிருப்பது இங்கு ஊன்றிச் சிந்தித்தற்குரியது. இவ்வாசிரியர்கள் இக வாழ்க்கை நிலையாதது என்பதைக் கண்டார்கள். கண்டு அக மார்க்கத் திலும், பரமார்த்த மார்க்கத்திலும் மனத்தைச் செலுத்தினார்கள். காரணம் மனப்பக்குவம் மட்டுமல்லாமல், நாட்டின் நிலை அல்லது அரசியல் சூழ்நிலை. 14ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் மதுரையை முகம்மதியர் கைப்பற்றியதால், தமிழ் அரசு அழிந்து நாடு முழுமையும் சமயத்துறையில் பெருங்கொடு மையை அனுபவித்தது. அந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் விசய நகர மன்னர் ஆதிக்கத்தால் ஓரளவு வைதிக சமயம் மீண்டும் தலையெடுக்க இடம் கிடைத்த போதிலும் கூட, நாடு முழுமையும் முகம்மதியரால் ஏற்பட்ட அழிவு எல்லோர் மனத்திலும் உறுத்திக் கொண்டேயிருந்தது. 15ஆம் நூற்றாண்டு, கோயில்கள் சமய வாழ்க்கை முதலியவற்றின் அழிவுக்குச் சான்றாக இருந்தது. அக்காலத்தில் தோன்றிய அறிஞர் எவரும் நாட்டின் அழிவை எண்ணி மனம் வெதும்பாமல் இருந்திருந்திருக்கமாட்டார்கள். ஆகவே ஒருவர் மனமும் பிற துறையில் செல்லவில்லை; சமயத் துறை ஒன்றிலேயே சென்றது. ஆதலால் அடுத்தாகிய இந்த 16ஆம் நூற்றாண்டில் புராண இலக்கியங்களும் சமய சாத்திரங்களும் சாத்திர உரைகளும் தோத்திர நூல்களும் பெருமளவில் தோன்ற ஆரம்பிக்கின்றன. புராண இலக்கியம் எவ்வளவு விரிவான தென்பதை இந்நூற்றாண்டு வரலாற்றின் முதல்பாகமாக புராண இலக்கியத்தை ஒரு தனி நூலாக அமைத்திருப்பதால் உணரலாம். சமய இலக்கியம் என்பது இரண்டாம் பாகத்தில் 150க்கு மேற் பட்ட பக்கமுடைய 6ஆம் அத்தியாயமாக அமைக்கப் பெற் றிருக்கிறது. தோத்திர இலக்கியமென்பது இம் மூன்றாம் பாகத்தில் ஒரு தனி அத்தியாயமாக அமைக்கப் பெற்றுள்ளது. உரைகளை மட்டும் இவ்வத்தியாயத்தில் ஆராய்கிறோம். இவை தோன்று வதற்கான சூழ்நிலையையே மேலே குறிப்பிட்டோம், ஆசிரியர் கள் புதுநூல் செய்யும் எண்ணத்தைக் குறைத்து முன்னெழுந்த பெரு நூல்களுக்கு விளக்கம் சொல்வதையே முக்கிய நோக்க மாகக் கொண்டார்கள்.

இங்கு முக்கியமாக சிவஞான சித்தியாருக்கு நான்கு உரைகள் இந்த நூற்றாண்டில் எழுந்தன என்பதும், சைவ சமயத்திலுள்ள ஒரே மணிப்பிரவாள நடை நூல் இந்த நூற்றாண்டில் சித்தி யாருக்குச் சிவாக்கிரயோகி எழுதிய உரை என்பதும் நினைவில் கொள்ளத்தக்கக் கருத்துக்களாகும்.

## உந்தி - களிறு பொழிப்புரை

சித்தாந்த சாத்திரங்களில் திருவுந்தியாரும் திருக்களிற்றுப் படியாரும் 12ஆம் நூற்றாண்டில் தோன்றின என்பது வரலாறு. பிற சாத்திரங்கள் பன்னிரண்டும் 12-14ஆம் நூற்றாண்டுகளில் தோன்றின. உரைகளும் 14ஆம் நூற்றாண்டு முதல் எழுந்தன. 16ஆம் நூற்றாண்டில்தான் அதிகமான உரைகள் எழுகின்றன. அவற்றில் திருவுந்தியாருக்கும் திருக்களிற்றுப்படியாருக்கும் எழுந்த பொழிப்புரை சிறப்பானது.

இவ்வுரை செய்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆனால் இவர் தமிழ்ப் புலமை மிக்கவர், சாத்திரப் பொருள்களில் மிக்க தெளிவுள்ளவர். இரண்டு நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். உரை பொழிப்புரையாயினும் பதவுரை போல ஒவ்வொரு சொல்லுக்கும் விடாமல் பொருள் எழுதிச் செல்கிறது; இந்த இயல்பைப் பார்க்கும்போது, இது புறநானூற்றுரையை நினைவூட்டுகிறது. இரண்டு உரைகளின் தொடக்கத்திலும், திருவுந்தி திருக்களிற்றுப் படி இரண்டு நூல்களின் வரலாற்றை உரைக்கிறார். உரை கிடைத்தற்கருமை பற்றியும், இதிலுள்ள சம்பிரதாய மாறுதல்களை உணரும் பொருட்டும், இப்பகுதி முழுமையும் கீழே தருகிறோம்:

“பரிபூரணமாயிருக்கிற சிவன் ஆன்மாக்களுக்குச் சிவானுபவம் விளையும் நிமித்தமாக மானுடச் சட்டை சாத்தி உய்ய வந்த தேவநாயனார் என்னும் திருநாமத்தையுஞ் சாத்திக் கொண்டு, வட வேங்கடம் தென்குமரி எல்லைக்குள்ளே சஞ்சாரம் பண்ணுங் காலத்து ஒருநாள் திருவியலூரிலே எழுந்தருளினார். அவ்வூரிலேயிருக்கிற ஆளுடைய தேவநாயனார் கண்டு தெரிசித்த போது, அவருடைய மலபரி பாகத்தையறிந்து தீட்சை பண்ணி ஞான உபதேசமும் பண்ணி, திருவுந்தியார் என்று பேரிட்டு நாற்பத்துநாலு செய்யுளாக நூலும் பண்ணி, அந்த நூல் முடிவிலே தம்முடைய பெயர் தோன்ற ஒரு செய்யுளும் பண்ணி, அந்த நூலினுடைய தாற்பரியத்தையும் உள்ளபடி அறிவித்துச் சிறிது நாள் சென்று தன்னியல்பை யடைந்தார். பின்பு ஆளுடைய தேவ நாயனார் முன் சொன்ன எல்லைக்குள்ளே சஞ்சாரம் பண்ணுங்காலத்து, ஒரு நாள் திருக்கடவூரிலே எழுந்தருளினார். அவ்வூரிலே ஆட்டு வாணியக் குலத்திலே உற்பவித்தவரொருவர் கண்டு தெரிசித்தபோது, அவருடைய மல பரிபாகத்தை யறிந்து தீட்சை பண்ணித் தம்முடைய ஆசாரியருடைய பெயரையுஞ்

சாத்தித் திருவுந்தியாரென்ற சாத்திரத்தையும் அறிவித்துச் சிறிது நாள் சென்று தன்னியல்பை யடைந்தார். பின்பு அந்த உய்ய வந்த தேவ நாயனார் முன் சொன்ன எல்லைக்குள்ளே சஞ்சாரம் பண்ணுங் காலத்திலே ஒரு நாள் சிதம்பரத்திலே எழுந்தருளினார். அவ்வூரிலே ஒருவர் ஞானம் பெறவேண்டித் தலவாசம் பண்ணி யிருந்து இவரைக் கண்டு தெரிசித்தபோது, (இவர் அவரது) மல பரிபாகத்தையறிந்து தீட்சை பண்ணித் திருவுந்தியாருக்கு வழி நூலாகத் திருக்களிற்றுப்படியார் என்று நூறு செய்யுளாக ஒரு நூலும் பண்ணியறிவித்துச் சிறிது நாள் சென்று தன்னியல்பை யடைந்தார். திருக்களிற்றுப்படியாரென்பதற்குக் காரணம், இவர் நூல் பண்ணின காலத்து இவர் கீழ்ச்சாதி யென்றும், இவருடைய நூல் கைக்கொள்ளலாகாதென்றும் சிறிது பேர் சொல்ல, சிறிது பக்குவராயுள்ளவர் அந்த நூலைப் பஞ்சாக்கரப்படியிலே கொண்டு போய் வைத்தார்கள். அந்தப் படியிலே செய்திருக்கிற கல் யானை (அந்நூலைத்) துதிக்கையாலேயெடுத்து எல்லாவற் றுக்கும் மேற்படியிலே கொண்டு போய் வைத்தது. ஆகையால் (இந்நூல்) அப்பெயர் பெற்றது. இந்தச் சந்தான பரம்பரையை இப்படிக் கண்டு கொள்க." திருவுந்தியார் செய்த ஆசிரியர் கயிலாயத்திலிருந்து வந்தவர் என்று பிறர் சொல்லும் கருத்தை இவ்வுரைகாரர் சொல்லவில்லை என்பது கருதத்தக்கது.

**திரு உந்தியார் உரை**

சொற்கள் பாட்டில் அமைந்த முறையிலேயே மிகவும் தெளிவாய் எளிமையாக உரை எழுதிச் செல்கிறார். இவர் உரை யானது படித்த உடனே மூலத்தின் கருத்து இன்னதுதான் என்று திட்டமாக உணர உதவுகிறது: வேறு பல உரைகளைப் பலமுறை படித்தாலுங்கூட மூலக் கருத்து விளங்குவது அரிதாயிருப்பது கண்கூடு. பல இடங்களில் இலக்கணக் குறிப்பும் எழுதுகிறார். இவருடைய உரைத் தன்மைக்கு எடுத்துக்காட்டாகச் சில பகுதிகள்: யோகப் பயிற்சியினாலே பிராண வாயுவை உள்ள டக்கித் தன்னுடைய போதத்தைத் திருவருளிடத்திலே செலுத் துவதே வெற்றி; அல்லாத முயற்சிகளெல்லாம் இழிவு' (22). இரவாகிய ஆணவமும் பகலாகிய மாயையும் இல்லாத இன்ப வெளியாகிய திருவருளுடனே சீக்கிரத்திலே கூடி நின்று உந்தீபற (20). உந்தீ பற என்பதற்கு மூவகையுரை சொல்லுகிறார்: "உம் முடைய குற்றத்தினின்றும் நீங்குவீராக; பற வென்றது ஒருமை பன்மை மயக்கம். இப்படியன்றிப் பறக்கவென்னும் வியங்

கோளைப் பறவென்று விகாரமாக்கிக் கர்த்திருவாலே உம்முடைய தீமைகளெல்லாம் அறுக்கக் கடவதெனினும் அமையும். இதற்கும் அப்படியன்றிப் பறக்கவென்னும் எச்சத்தைப் பறவென விகார மாக்கி உம்முடைய தீமைகளெல்லாம் பறந்து போம்படிக் கருதி நிற்பீர் என்பது வருவிக்க. இம்மூவகையன்றிப் பொரு ளுண்டாயினும் காண்க" - முதற் பாடல் உரை. அபூர்வமாய்ச் சில விளக்கங்களும் சில இலக்கணக் குறிப்புக்களும் தருகிறார்.

### திருக் களிற்றுப்படியார் உரை

உந்தி உரைக்குரிய இயல்பெல்லாம் இதில் பின்னும் அதிக மாகப் பொருந்தி உள்ளன. இலக்கணக் குறிப்புக்கள் அதிகம். உரையானது நேரான தெளிவுடைய உரை. பாடல் தோறும் தவறாமல் கருத்து இன்னதென்று சிறு வாக்கியத்தால் உணர்த்து கிறார். இதனுள் ஆசாரியருடைய தீட்சையில்லாமல் ஞானம் வராதென்பது கண்டுகொள்க (3). கருவிகளினாலே சிவனைக் காணப்படாதென்பது கண்டு கொள்க (14). ஆன்மபோதம் கெட்டவர்கள் எந்தப் பாதத்திலே நின்றாலும் ஞானந்தரு மென்பது கண்டுகொள்க (15). ஞானிக்கு வினையில்லை (42). பெத்தத்திலும் முத்தியிலும் ஆன்மாவுக்குச் செயலில்லை (43). ஞானபூசை கண்டுகொள்க (44). சைவ சமயமே சிறப்பென்பது கண்டுகொள்க (65). எண்ணிறந்த லீலையுடையனென்பது (80). சிவன் கிருத்தியம் பண்ணான் என்பது கருத்து (78) இவ்வளவு சுருக்கமாயும் தெளிவாயும் கருத்துரை சொல்லியதை வேறெங்கும் காணமுடியாது.

சட்ட - திசைச்சொல். உழவுக்குப் பெயர் தனிசு, திசைச் சொல். எழுவாய் வருவிக்க, செயப்படு பொருள் வருவிக்க, மற்று அசை - என்பன போன்ற குறிப்புக்களும் பல. வேறு பாடமும் குறிப்பிடுகிறார் (20). ஓரிடத்தில் அது பொருளன்மை உணர்க (61) என்பார். சேந்தனார் வரலாற்றை, ஐதிகத்தால் கேட்டறிக என்பார். காரணம், சேந்தனார் செய்தி பெரியபுராணம் போன்ற எந்த நூலிலும் சொல்லப் பெறவில்லை. கருத்தின் தெளிவு: யோகத்தைப் பெற்றிருந்தாலும் சரியை கிரியையாகிய திருத் தொண்டு செய்யவேணுமென்பது கண்டு கொள்க (50).

திருக்களிற்றுப்படி என்ற தொடருக்கு இன்று சொல்லும் பொருள், தில்லை நடராசப் பெருமானுக்குரிய சிற்சபைக்கு ஏறும் படிகள் இருபுறமும் களிற்றின் தலைபோல மத்தகமும் துதிக்கையுமாக அமைக்கப் பெற்றிருத்தலால்' அப்படிகள்

என்பதாகும். மற்றொரு கருத்தும் சொல்வதுண்டு. களிற்றின் முதுகில் யாரேனும் ஏறி அமர விரும்பினால், அக்களிறே மண்டி யிட்டு, தன் மடித்தளைப் படியாக்கி ஏற உதவுகிறது. அது போலத் திருவருளைச் சென்று கூட விரும்புவோருக்கு, அத்திருவருளே படிநெறியாக இருந்து அழைத்துச் சென்று அத்திருவருளில் கூடச் செய்கிறது. திருக்களிற்றுப் படியார் என்ற இந்த நூல், களிற்றின் முதுகில் ஏற உதவும் களிற்றின் காலாகிய படிபோல அமைந்து ஆன்மாவை முத்தி நெறியில் நடத்திச் செல்கிறது என்று பொருளாகும் என்பர் ஆன்றோர்.

### காலம்

வழக்கிலிருப்பது நமசிவாயத் தம்பிரான் உரைநூல் அதன் காலம் கி. பி. 1677. இவ்வுரையானது சாத்திரப் பொருளைச் சொன்னபோதிலும், எளிமையாக இலக்கிய நயம்படச் சொல் கிறது. ஆனால் அவ்வுரையோ, மிகவும் சிறப்புடையதாயினும், அதிகப் பொருளைச் சுமந்து கஷ்டப்படுவதாயுள்ளது. ஆதலால் இது அதற்கும் முந்தியதெனக் கருதுகிறோம். எனவே காலம் 16ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி என்று சொல்லலாம். இன் னும் முற்பட்டதாகச் சொல்வதற்கு இடந்தரவில்லை.

### பதிப்பு

அனவரத விநாயகம் பிள்ளை கொடுத்த ஒரு கையெழுத்துப் பிரதியின் துணை கொண்டு, இவ்வுரைகள் இரண்டும் பழைய உரைகளுக்குப் பதிலாக சைவ சித்தாந்த சமாஜத்தின் சித்தாந்த சாத்திரம் இரண்டாம் பதிப்பில் 1940இல் எம்மால் அச்சிடப் பட்டது. நெடுநாள் கழித்து எமக்கு இவ்வுரையின் வேறோர் ஏட்டுச் சுவடியே கிடைத்துள்ளது. அச்சிட்ட பாடத்துக்கும் ஏட்டுப் பிரதிக்கும் அதிக வேறுபாடு உண்டு.

## ஞானாமிர்த உரையாசிரியர்

வாகீச முனிவர் செய்த ஞானாமிர்தம் என்ற சாத்திர நூல் 12ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது.* இது ஒரு சாத்திர நூலா யினும், மெய்கண்ட பரம்பரையில் தொடர்புடையதன்று. இந் நூலாசிரியருக்கு உடன் காலத்தில் மெய்கண்டார் வாழ்ந்திருக்கக் கூடும். ஆதலால், அவருக்கு இவர் சீடராதல் இயலாதது. வாகீச முனிவருடைய ஞானபரம்பரையும், அவர் சித்தாந்தம் கூறும்

* எமது தமிழ் இலக்கிய வரலாறு,12ஆம் நூற்றாண்டு.

முறையும், எடுத்தாளும் சாத்திர நெறிகளும் முற்றும் வேறானவை. இத்தன்மைகளால் போலும், பின்வந்தோர், உந்தி களிறு ஆகியவற்றைச் சித்தாந்த சாத்திரங்கள் என்று கொண்ட காலத்து, ஞானாமிர்தத்தைக் கொள்ளவில்லை.

ஞானமிர்த உரையாசிரியர் பெயரும் ஏனைய வரலாறுகளும் தெரியவில்லை. இவர் சிறந்த தருக்க நூற்புலவர் - 11, 57, 58, 59, 61 பாக்களின் உரை காண்க. பொதுவாக இவர் தம் உரையை, முழுமையும் நூலை அடியொற்றி எழுதிச் செல்கிறார். மூலத்தில் சொற்கள் கிடந்தவாறே வைத்து, ஓர் எழுத்து விடாமல் உரை எழுதிச் செல்கிறார்; உரையே போதிய விளக்கமுடையது. இவர் தனியே விளக்கமோ விதப்போ எழுதவில்லை. பாடல் தோறும் இறுதியில் சிறு இலக்கணக் குறிப்பு தவறாமல் எழுதுகிறார். பெரும் பகுதி அசை நிலையின் விளக்கமும் ஏகாரங்களின் விளக்கமும் ஆகவுள்ளன. உரையில் சாத்திரக் கருத்துக்களை விளக்குகிறாரேயன்றி, இலக்கியச் சிறப்பெதுவுமில்லை. ஞானாமிர்தம் என்னும் தமிழாகமம் என்பார்.

சாமானியக் கல்வியறிவுடையவரும் மூலத்தின் கருத்தை நன்கு புரிந்துகொள்ளும் வண்ணம் இவர் உரை எழுதியிருக்கிறார். ஞானாமிர்தம் இருப்புக் கடலை என்று சொல்லப்படுவது. அதைத் தக்கபடி இவர் பக்குவம் செய்திருப்பது உண்மையிலேயே பெருஞ்சிறப்பு. எளிமையாக்கிய காரணத்தினால் இவர் மேற்கோள் எதுவும் காட்ட எண்ணவில்லை போலும். அபூர்வமாக ஓர் இடத்தில் பிங்கலந்தைச் சூத்திரமொன்றை (77) எடுத்துத் தருகிறார்:

> **அடுத்தநட் பாளரும் அந்த ணாளரும்**
> **படைத்தொழி லாளரும் மருத்துவக் கலைஞரும்**
> **நிமித்த காரரும் நீணில வேந்தர்க்கு**
> **உரைத்த ஐம்பே ருறுதிச் சுற்றம்.**

இப்படியே பஞ்ச சயனம் என்று கூறுமிடத்து 'மயிர்ச் சேணம் பஞ்சுமெத்தை வரை படாம் தூவி, பயிர்ப்பின் மயிற்பீலி வீப்பாய்' என்று பிங்கலந்தையை எடுத்துரைக்கிறார் (16).

இதுவன்றியும் ஐம்பெரும் பாதகம் (24) என்பதை விளக்கும் போது, கொலை கள் களவு குருநிந்தை பொய்மொழிதல் அவை செய்பவருடன் பயிறல் என்று இவர் கூறுவது, திவாகரத்தையும்

பிங்கலந்தையையும் தழுவியதாகும்; மணிமேகலை போன்ற பிற பண்டை நூல்களில், குருநிந்தைக்குப் பதிலாகக் காமமே காணப்படும். இதனால் இவ்வுரைகாரர் நிரம்பிய நிகண்டுப் பயிற்சியுடையவர் என்று அறியலாம்.

வினைவகை கூறும் 24ஆம் பாடலுரையில்,

**நல்லோர்க்குவந்த பல்சுவைப் போனகம்**
**மாகதி ரணிமணி வண்கா லேகம்**
**செம்பொன் மென்துகில்.**

முதலாக உள்ளவற்றைத் தானம் செய்தல் என்று எழுதுகிறார். இம்மேற்கோள் இடம் விளங்கவில்லை. ஓர் உரை வேறுபாடு 'வெள்ளெருக்கரவும் விரவும்சடை' என்ற அப்பர் புள்ளிருக்கு வேளூர்த் திருக் குறுந்தொகைப் பாடல் முழுமையும் எடுத்துத் தருகிறது. நான்மறையை முழுதுணர்ந்து ஐம்புலன்கள் செற்று மோனிகளாயினார் என்ற சம்பந்தர் தேவாரத்தையும் (1414) தரு கிறார் (64).

உரையாசிரியர் வினைமுடிபு காட்டுவதில்லை. எனினும் ஒரு பாடலில் மட்டும் (33) காட்டுவது குறிப்பிடத்தக்கது. வட மொழியை அதிகமாக இவர் பயன்படுத்துகிறார். சில எடுத்துக் காட்டுக்கள்; உரை நடை கொடை போக்கு இன்பம் - வசன கமன தான விசர்க்க ஆனந்தம் (16). மாசு இரி பதியது தன்மை படர்ப - குற்றமற்ற சிவனுடைய சுயம்பிரகாச ஞானானந்த பரிபூரணத்தைப் பெறும் (19).

ஞானாமிர்தம் நான்கு பாதங்கள் இருந்தன என்றும், அவற்றுள் இப்போது கிடைத்து அச்சிடப் பெற்றிருப்பது ஞான பாதம் ஒன்று மட்டுமே என்றும் ஒரு கருத்துண்டு. சிவஞான சுவாமிகள் சிவஞான போத மாபாடியத்தில், கிரியா பாதச் செய் யுள் ஒன்று முழுமையும் மேற்கோளாய்த் தருகிறார். இவ்வுரை காரரும், "இதனை, எண்டருமண்ட மென்னும் கிரியா பாதத் திருவகவலுட் காண்க" என்று எழுதுகிறார் (43). இப்பாடல் முழுமையுமோ அல்லது கிரியா பாதமோ கிடைக்கவில்லை.

சில சொல்லாட்சிகள்: எருக்க - மோதிக்கொள்ள நிபிடம் - செறிவு. அத்திரி என்ற சொல் முன் கழுதையாயும் கோவேறு கழுதையாயும் இருந்து இவர் நூலில் குதிரையாகிறது. மனச்சழக்கு

பிறர் செல்வம் வித்தை முதலியவற்றைக்கண்டு பொறாமை. ஆரிய ஊமன் - ஆரிய நாட்டு ஊமன். மேதாதி உன்மனாந்தம் என்று பிராசாத யோகத்தின் சோடச கலைகளைக் குறிப்பிடுகிறார்.

மூலத்தின் கருத்துக்களை இவை உலோகாயத நிராகரணம் மீமாம்ச நிராகரணம் மாயாவாதி நிராகரணம் என்று எடுத்துக் காட்டுகிறார். கோடலாதி என்ற விடத்து, கோடல் அம்பர் கிழான் என்று கூறுகிறார். ஓர் உரைக்குறிப்பு, அம்பர் கிழான் குடிப்பெயர் என்று கூறுகிறது. இங்கு குறிப்பிடப்பட்டவர் கோடலம்பாகையிலிருந்த பரமானந்த முனிவர், ஞானாமிர்த நூலாசிரியரான வாகீச முனிவரின் குரு; இவர் அம்பர் கிழான். எனவே, இவர் அம்பரிலிருந்து வந்த வேளாள மரபினர் என்பது தெரிகிறது. சங்க காலத்திலிருந்தே அம்பர் என்ற ஊர் நல்ல வேளாண் குடியைப் பெற்றிருந்தது என்று அறிகிறோம்.

**பதிப்பு**

மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு;
பின் ஔவை துரைசாமிப் பிள்ளை பதிப்பு 1954.

## சௌந்தரிய லகரி உரை

சௌந்தரிய லகரி என்பது, வீரை - கவிராச பண்டிதர் செய்ததென்பதும், பாயிரம் 6 பாடல், ஆனந்த லகரி என்ற பகுதி 40 பாடல், சௌந்தரிய லகரி என்ற பகுதி 64 பாடல் ஆக 110 பாடல் உடையது என்பதும் பின்னே அத்தியாயம் 5 - தோத்திர இலக்கியம் என்ற பகுதியில் விரிவாகச் சொல்லப்படும். தமிழில் இலக்கண இலக்கியங்களுக்கும், சமய சாத்திரங்களுக்கும் பண்டைய உரைகள் எழுந்துள்ளன. ஆனால், ஒரு தோத்திர நூலுக்கு, அதுவும் மொழிபெயர்ப்பு நூலுக்கு, பின்னும், எல்லப்ப நாவலர் என்ற பெரும்புலவர் உரை எழுதியிருப்பது, நூலின் பெருஞ் சிறப்பைக் காட்டும். எல்லப்ப நாவலர் வரலாற்றையும் இவர் செய்த பிற நூல்களையும் வேறிடங்களில் ஆராய்ந்திருக் கிறோம்.* இங்கு இவ்வுரையை மட்டும் கருதுவோம். இவ்வுரை யின் சிறப்புப்பாயிரம் பின்வருவது:

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு, முதல் பாகம் புராண இலக்கியம், அத்தியாயம் 3.

பிறைபுனைந் தருளும் சிவன்தன துவகைப்
பெருக்கென வடமொழி முனிவன்
அறைசவுந் தரிய லகரியைத் தமிழால்
அருள் கவி ராசபண் டிதன்தன்
நிறை மனங் கருதித் தாழைமா நகரின்
நிலைபெற வாழ்கவி எல்லான்
இறையள வெனினும் தவறிலா துரைதேர்ந்து
எழுதினன் எழில்விளக் கெனவே.

*தாழை நகர் எல்லான் என்ற கவிஞனே எல்லப்ப நாவலர் என்பதை வேறிடத்தில் விளக்கியிருக்கிறோம்.*

*தமது உரைக்கு அவதாரிகையாக இவர் எழுதியுள்ள பகுதி கருதத்தக்கது:*

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்ப்பு
எனத்தகு நூல்யாப்பு ஈரிரண் டென்ப

*என்பது கொண்டு. தேவியுடைய சரித்திரத்தையும் அவயவத்தையும் எடுத்து வடமொழியினால் முற்காலத்தில் சொல்லப்பட்ட பனுவலை மொழிபெயர்த்துத் தமிழ் மொழியில் இறக்கிச் சொல்லப்படும் பனுவல் இது ஆதலாலும், தமிழ் வழங்கும் எல்லையளவும் நடத்தலாலும், கற்போர் நாவிற்கு இனிய மொழி படச் செய்தமையாலும், இக பரம் இரண்டினும் நல்வழிப் படுத்தும் என்பதனாலும் உரை எழுத வேண்டி, பிற்காலத்தில் சொல்லப்பட்ட பனுவல் இது என்பது கருதி, இதற்கு முற்காலத்திலும், பிற்காலத்திலும் கூறிய இலக்கண இலக்கியங்களுள் சில எடுத்துக்காட்டி, யான் அறிந்த அளவினாலே எழுதினேன்: ஆதலால், இவ்வாறு எழுதிய உரை கொண்டும், தேவியுடைய சரித்திரங்களைச் சொல்லும் பிறநூல் கொண்டும், அந்தணர் முதலிய அறிவுடையோர் சொல்லும் உபதேசம் கொண்டும் இதன் விரிவெல்லாம் தெரிந்து கொள்க'*

*பாடல் தோறும் பாடலின் பொருளில் தோய்ந்து சுவைபட எழுதுகிறார். இப்பாடலில் இன்னது சொல்லப்பட்டது என்று தவறாமல் கூறிச் செல்கிறார். பல பொருள்கள் இவர் விளக்கத்தாலன்றி விளங்கமாட்டா: 'அம்பிகை நீலி என்பது பாவமே' - நீலி என்பது நீல நிறத்தை உடையவளுக்கும், மனத்தின் கண் வைரத்தை உடையவளுக்கும் பெயராதலால், வைரம் உத்தமிக்குப் பொருந்தாது என்பது பற்றி, 'நீலி என்பது பாவமே' என்றார் (26). பாயிரம் நான்காம் பாடலுரையில்,*

'பிறைதவழு மெழில்தோன்றப் பிறங்குகதிர் வெண்கோட்டாற்
செறிகதிர் செல் தடங்குடுமிச் செம்பொன்மால் வரைவாய்ப்ப
மறைபுகழுங் சவுந்தரிய லகரியினை வகுத்தெழுதும்
விறல்கெழுமு வேழமுகன் விரைமலர்த்தா ளிணைதொழுவாம்.

என்று விநாயகனே இப்பனுவலை மேருகிரியில் எழுதினான் என்பாரும் உளர். இவர் வட நூலார் புட்பதந்த விருடி எழுதி னானென்பது உடன்பட்டு இவ்வாறு கூறினார்' என்று எழுது கிறார். 'பிறைதவழும்' என்ற பாடல் இலிங்க புராண விநாயகர் வணக்கப் பாடல்; செய்தவர் வரகுணராம பாண்டியர். இதனால் உடன் காலத்திருந்த பாண்டியரை நாவலர் அறிந்திருந்தார் என்றும் நாம் கருதுதல் பொருந்தும்.

திரிவேணி சங்கமம் என்று சோணை கங்கை யமுனை என்ற மூன்று ஆறும் கலத்தலைக் குறிப்பிடுகிறார். சோணை சிவப்பு, கங்கை வெண்மையாய்த் தெளிந்தது, யமுனை கறுத்தது என; இது மூலத்திலேயே சொல்லப்பட்டுள்ளது. திரிவேணி சங்கமம் பிரயாகை, அங்கு கலப்பது சரசுவதி என்பது ஐதிகம். சோணை வந்து கலப்பது பல நூறு மைல் கிழக்கே. 74ஆம் பாடலுரையில், சம்பந்தர் அம்மையின் ஞானப்பாலுண்டு தேவாரம் பாடியதை விளக்கமாய்க் குறிப்பிடுகிறார்:

தருண மங்கலை உனது சிந்தை
    தழைந்த பாலமு தூறினால்
அருண கொங்கையி லதுபெ ருங்கவி
    அலைநெ டுங்கட லாகுமோ
வருண நன்குறு கவுணி யன்சிறு
    மதலை யம்புயல் பருகியே
பொருண யம் பெறு கவிதை யென்றொரு
    புனித மாரி பொழிந்ததே.

சங்கரர் சம்பந்தரைக் குறிப்பிட்டார் என்று சொல்ல மனமில் லாத அத்வைதிகள் சிலர் அவர் த்ரவிட சிசு என்ற தொடரால் தம்மையே சுட்டிக் கொண்டார் என்றும் கூறுவார்கள்; அக் கருத்து நாவலருக்கு உடன்பாடல்ல. தேவாரம் திருவாசகம் என்பவற்றை 'என்றார் மேலோரும்' என்றும், பிறவற்றை 'என் றார் பிறரும்' என்றும் காட்டுவது இவர் இயல்பு.

*இவர் மேற்கோளாகத் தரும் நூல்கள் தொல்காப்பியம், தண்டியலங்காரம், அதன் உரை மேற்கோள் பாடல்கள், நன்னூல்; புறநானூறு, திருக்குறள்; சுந்தரர் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார்; கல்லாடம். சிந்தாமணி, கூத்தர் நூல் என்பன. பின்னும் சில மேற்கோள்கள் இடம் விளங்கவில்லை. என்றார் பிறரும் என்று பல அடிகளைக் காட்டுகிறார்; சில இங்கு தருகிறோம். ஈசனை யொப்பவர் தேவர் கணத்திடை யாரேயோ - 43 உரை; -*

**மறை வழி ஒழுகா மன்னவன் வாழும்**
**பழி நாட் டார்ந்த பாவம் போலச்**
**சேர மறைத்த கூரிருள் நடுநா.** **59**

*திகழ்மணிக் கோபுரம் திங்கள் வாண்முகம் - 66; அந்த நான்முகனை உந்தி பூத்தோன் - 4.*

**வாரி புடை சூழ்ந்த வையகத்திற் கில்லையால்**
**சூரியனே போலுஞ் சுடர்.** **91**

*சில இடங்களில் வேறு பாடங்களையும் குறிப்பிடுகிறார். தொகை விரிகள் பல இவரால் விளக்கப்பட்டுள்ளன. கீழுலகம் மேலுலகம், வியூகம் 9, அம்பு 5, தென்றலின் குணம், சதங்கையில் அமைந்துள்ள பொருள்கள், தேவியைச் சூழ்ந்துள்ள மடவார் எண்மர், முத்திரை 9, பிரத்தாரம் 3, யோகினிகள் பன்னிருவர், நித்த தேவதைகள் பதினறுவர், ஆகருஷணிகள் 4, கலைஞானம் 64, வித்தை 18.*

*பாடல் தோறும் அமைந்துள்ள அணியைத் தவறாது குறிப்பிடுகிறார்; வடமொழிப் பெயரும் தமிழ்ப் பெயரும் சொல்கிறார். இவ்வாறு இவர் குறிப்பிட்டுள்ள அணிகள் 35. நவரசங்களைக் குறிப்பிடும் போது (50) 'காமம் இழிப்பு உருத்திரம் வியப்பு அச்சம் வீரம் நகை கருணை என்னும் எண் வகைச் சுவையும் புலப்படக் கூறிய அதனால், சுவை என்னும் அலங்காரம் காண்க. சாந்தமென்னும் சுவை, விகாரமின்மையில், கூத்தர் நூலின்படி எட்டே வேண்டினார்' என்பார்.*

*வடமொழி நூல்களில் உருத்திர யாமளம், வசிட்ட சங்கிதை, சனந்த சங்கிதை, காந்த சங்கிதை, வாமகேசுர தந்திரம், சத்தி கூட தந்திரம், சமரிட தந்திரம், சனற் குமார சங்கிதை, காமராச கூட தந்திரம், மன்மதகலாப் பிரயோகம், காருடப்பிரயோகம் என்றும் (15-20) குறிப்பிடுகிறார்.*

இவர் கூறும் சில உலக வழக்குகளும் பழமொழிகளும்: கணவனைக் கண்டால் விரைந்தெழுந்து வருதல் உத்தமிக்கு இயல்பு; கணவனையிழந்தோர் காதணி வாங்கப்படுவர்; உத்தர பூமியிலே மணம் செய்யும் பொழுது மூன்று பொற்கயிற்றினாற் செய்த நாண் கழுத்திற் பூட்டுவார்கள்; ஒருவன் தன்னுடைய மகனை வேறு பெயரிட்டழைப்பினும் தன் தந்தை பேர் இடுதற்கு உரியன்; உலகத்தில் பாம்பு அளையிற் புகுந்த பொழுது உடல் வளைத்து உடம்பின் மேல் படத்தை வைக்கும்; அது பாம்பின் தொழில்.

சாக்த சமய நூல்கள் தமிழில் மிகவும் அபூர்வம். வராகி மாலை ஒரு நூல், ஆனால் அது வன்செயல்களையெல்லாம் கூறுவது. அபிராமி யந்தாதி பத்தித்துறையில் நின்றே பாடுவது, பிற்காலம். வேறு சக்தி துதியாகவுள்ள நூல்களில் சௌந்தரிய லகரி சிறப்பான ஒன்று, பழமையானது. அது சாத்திர - தோத்திர நூல். வடமொழி மூலத்தைச் சங்கரர் செய்தார் என்பதே பெரு வழக்கு. பூரண ‘அகம் பிரும்மாஸ்மி’க் கொள்கை கொண் டொழுகுகின்ற சிலர் மட்டும், இது சங்கரர் செய்ததல்ல வென்று சொல்வதுண்டு; இக்கருத்து பெரிதும் வலியுடையதன்று. எப்படி யிருப்பினும், தமிழ் நூலை நம் உரைகாரர், ஒரு சாக்த சமய நூல் எனவே கொண்டு, சாக்த சமயக் கருத்துக்கள் புலப்படு மாறும், சைவ சித்தாந்தத்துக்கு முரணில்லாத முறையிலும், உரை எழுதியிருப்பது படித்து இன்புறத்தக்கது. சாக்தம் பற்றிய பல கருத்துக்களுக்கு இது சிறந்த விளக்கம் தருகிறது.

யோகத்தைக் குறிப்பிடுமிடமெல்லாம் இவர் மிகவும் விளக்கமாகவே எழுதுவார். பொருளின் அருமை பற்றி, 9ஆம் பாடலில் யோகத்துக்கு இவர் கூறும் விளக்கம் முழுமையும் அப்படியே இங்கு எடுத்து எழுதுகிறோம்:

“தாமரைக் கிழங்கு போன்றிருக்கும் மூலாதாரத்தைப் பற்றிப் புழையோடு பொருந்திய இடை பிங்கலை சுழுமுனை என மூன்று நாடி எழுந்து நிற்கும். அவற்றுள், இடையும் பிங்கலையும் நாசியிரு பக்கமாக வந்து நிற்கும்; சுழுமுனை, ஆறாதாரமாகிய ஆறு கமலத்தையும் கோத்துக் கொண்டு அவற்றின் மேல் ஆயிர விதழ்க் கமலத்தை நுனியிலே கொண்டு நிற்கும். அச் சுழுமுனை நாடியினூடே அனேகங் கிரந்திகளுடனே பாம்பின் வடிவாய் இருக்கின்ற குண்டலி சத்தி உடலை வளைத்து, மூலாதாரத்தின் மேலே படத்தை வைத்துக் கொண்டு யோக

நித்திரை செய்யும். அதனால் இம்மூன்று நாடியையும் மல மூத்திரங்கள் அன்னம் முதலானவை வாயுவைப் பூரிக்க வொட்டாமல் நெருக்காதபடிக்கு அவற்றை நீங்கச் செய்து வாயுவைப் பூரித்தால் ஒடுங்கிய நாடி தாமரை நாளம் போல நிமிரும். இப்படிச் செய்து வரும் யோகப் பயிற்சியால் அபானத் துவார வழி காற்றுச் செல்லாமல் இடக்காற் குதியைக் குதத்தில் ஊன்றி வலக்காற் குதியை இலிங்கத் தானத்தில் ஊன்றி ஆதனமாக இருந்து, இடை பிங்கலை என்னும் நாசித் துவாரம் இரண்டினுள் ஒன்றை அடைத்து, ஒரு துவாரத்தால் வாயுவைப் பூரகஞ் செய்யுமளவில், அதனிடை நிரம்பி மூலாதாரத்தை முட்டிச் சுழுமுனை நாடி வழியே செல்லும். அதுவும் நிரம்பப் பூரித்து அவ் வாயுவைக் கும்பிக்கு மளவில், சுவாதிட்டானத்தில் இருக்கின்ற அக்கினி மூண்டு சுடர் விடும். அப்பொழுது, மூலா தாரத்திலே தலை வைத்துக்கொண்டு இருக்கின்ற குண்டலிசத்தி அவ்வெப்பத்தினாலே மேல்நோக்கிச் சுழுமுனை நாடியின் வழியே ஆறாதாரத்தையுங் கடந்து ஆயிரமிதழையுடைய தாமரையில் இருக்கின்ற சதாசிவனுடனே சையோகமாம்; அதனால் இவ்வாறு கூறினார். இதற்குச் சகாயம் வாயுவும் அக்கினியும் ஆம்.

“பூதம் ஐந்தும், தன்மாத்திரை ஐந்தும் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந்திரியம் ஐந்தும், மனமும் ஆகத் தத்துவம் இருபத்தொன்று. இவற்றோடு மாயை, சுத்த வித்தை, மகேசுரன், சதாசிவன் இவர்களைக் கூட்ட இருபத்தைந்தாம். இதனுள் இருபத்தொரு தத்துவமும் மாயையுடனே பொருந்துகையினாலே, இவை பிரகிருதி எனப்படும். மகேசுரன் எப்பாற்படுமெனில், அவனும் மாயையுடனே கூடுகையினாலே அவனையுங் கூட்டி இருபத்து மூன்று தத்துவமும் பிரகிருதி எனவாம். மாயையாதுடனே கூடிற்று அவ்வளவும் பிரகிருதி என்று சொல்லப்படும். இருபத்து நான்காம் தத்துவமாகிய சுத்த வித்தை இருபத்தைந்தாம் தத்துவமாகிய சதாசிவனுடன் கூடிய கூட்டம் இருபத்தாறாந்தத்துவமாம்; அதுவே பரமான்மா. ‘சிவமெனும் பொருளும் ஆதி சத்தியொடு சேரின் எத்தொழிலும் வல்லதாம், இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிதரிதெனா மறை இசைக்கும்’ என்றதும் இது.

தனித்திருந்தால் காரியம் இல்லை, கூடியவதனாற் காரியம் உண்டு ஆனபடியினாலே, சுத்த வித்தையும் சதாசிவனும் கூடிய கூட்டந்தானே ஒரு தத்துவம் எனப்பட்டது. ஆதலால், அக்

குண்டலினி சக்தியாகிய சுத்த வித்தை சதாசிவனுடனே புணரும் புணர்ச்சியை அறிவதே வீடாயிற்று.

குளபதம் என்பது ஆறாதாரம். மூலாதாரம் - குதத்துக்கும் இலிங்கத்துக்கும் நடு. மணி பூரகம் - உந்தியினிடம். மற்ற நாலா தாரத்தின் இடமும் இக்கவியினாலே அறியப்படும். மூலா தாரத்தைச் சொன்ன பின்பு சுவாதிட்டானத்தைச் சொல்லாது, மணிபூரகத்தைச் சொல்லிப் பின்பு சுவாதிட்டானத்தைச் சொன்னது: தோன்றுங் காரிய முறைமை பற்றி.

“சிவ கோணம் நான்கும் கீழ் நோக்கியும், சத்தி கோணம் ஐந்தும் மேல் நோக்கியும் தம்முள் புணரவே, முக்கோணமும் அதனைச் சூழ்ந்த எண் கோணமும், எண் கோணத்தைச் சூழ்ந்த பதின் கோணமும், பதின் கோணத்தைச் சூழ்ந்த மற்றொரு பதின் கோணமும், அவற்றைச் சூழ்ந்த பதினாற் கோணமும் ஆக நாற் பத்து முக்கோணம் ஆகின்றபடியினாலே, கௌள மதத்துக்குச் சிவகோணம் நான்கும் சத்தி கோணம் ஐந்தும் என்பதனையே வேண்டி, அவற்றால் வரும் கோணங்களைப் பதினெட்டு வன்ம மும் இருபத்து நாலு சந்தியும் ஆகவே கொள்ளப்படுதலால் ‘முற்பகர்வது’ என்றும், ‘நவகோண முட்படுவது’ என்றும் கூறினார். சமய மதத்துக்கே நாற்பத்து முக்கோணம் என வேண் டுவது. வன்மமாவது மூன்றிரேகை சந்தித்தது; சந்தியாவது இரண்டிரேகை சந்தித்தது.

“நான்கு புறத்தும் வாயில்விட்ட மூன்று சதுரம் இட்டு, அதன் நடுவே மூன்று வட்டம் இட்டு, அதன் நடுவே சூழப் பதினாறிதழ் இட்டு, அதன் நடுவே சூழ எட்டிதழ் இட்டு, அதன் நடுவே ஒரு வட்டம் இட்டு, அதன் நடுவே ஒன்பதிரேகை ஒன்றுக்கொன்று அளவுபெற எழுதித் துடைக்கும் இரேகை அளவு அறிந்து துடைக்க. துடைத்தபின் ஒன்பதிரேகையும் ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி இராகு கேது என ஒன்பது கோளின் பெயரும் முறையே பெறும். அவற்றுள் ஞாயிற்றைச் சனியுடனும், திங்களைக் கேதுவுடனும், செவ்வாயை வட்டத்துடனும், புதனை இராகுவுடனும், கேது வைப் புதனுடனும், இராகுவை ஞாயிற்றுடனும், சனியை வட்டத்துடனும், வெள்ளியைத் திங்களுடனும், வியாழத்தைச் செவ்வாயுடனும் கூட்ட, நாற்பத்து மூன்று கோணமாய் இருக்கும். இம்முறை எழுதுவது சங்காரக் கிரமம் எனவாம்.

"ஓர் முக்கோணமும், அதற்குமேல் எண் கோணமும்" அதற்குமேல் பதின் கோணமும், அதற்குமேல் மற்றொரு பதின் கோணமும் அதற்குமேல் பதினாற் கோணமும் அதற்கு மேல் வட்டமும் எட்டிதழும், அதற்குமேல் பதினாறிதழும், அதற்கு மேல் மூன்று சதுரமும் ஆக முறையே எழுதுவது சிருட்டிக் கிரமம் எனவாம்.

விந்துவை முக்கோணத்தில் எழுதுவது கௌள மதம் என்றும், முக்கோணத்தின் கீழாக ஓர் சதுரம் இருக்கும், அதன் நடுவே விந்துவை எழுதுவது சமயமதம் என்றும் கூறுவர்.

"விந்து சிவன் வடிவும், முக்கோணம் சத்தி வடிவும் ஆம். இவ்வாறு எழுதிய விந்துவும் முக்கோணமும் சந்திர கண்டம் என்றும், எண்கோணமும் இரண்டு பத்துக் கோணமும் பதினான்கு கோணமும் அக்கினி கண்டம் என்றும், அதற்குமேல் இருக்கின்ற நால்வகையும் சூரிய கண்டம் என்றும் பெயர் பெறுதலின், இது திரிபுர சக்கரம் என்று சொல்லப்படும். ஆதலால், மகா தேவிக்குத் திரிபுர சுந்தரி எனப் பெயராயிற்று."

14ஆம் பாடலுரையில் பின்னும் சொல்லுவார்: "இதனிற் போந்த பொருள்: மூலாதாரத்தில் ஐம்பத்தாறும், மணிபூரகத்தில் ஐம்பத்திரண்டும், சுவாதிட்டானத்தில் அறுபத்திரண்டும், அனாகதத்தில் ஐம்பத்து நான்கும், விசுத்தில் எழுபத்திரண்டும், ஆக்கினையில் அறுபத்து நான்குமாகிய முந்நூற்றறுபது கிரணங் களின் மேலே உமையுடைய பாதம் இருக்கும் என்பதாம். மூலாதாரமும் சுவாதிட்டானமும் அக்கினி கண்டம் என்றும், உருத்திரகிரந்தி என்றும் ஆம். மணிபூரகமும், அனாகதமும் சூரிய கண்டம் என்றும், விட்டுணு கிரந்தி என்றும் ஆம். விசுத்தியும், ஆக்கினையும் சந்திரகண்டம் என்றும், பிரம கிரந்தி என்றும் ஆம். சுவாதிட்டானத்தில் அக்கினியிருப்பதனால் உருத்திர கிரந்தி என்றும், அனாகதத்தில் சூரியன் இருப்பத னால் விட்டுணுகிரந்தி என்றும், ஆக்கினையில் சந்திரன் இருப் பதனால் பிரமகிரந்தி என்றும் சொல்லப்பட்டன.

"கிரந்தியாவன: சுழுமுனைநாடியின் மூன்று கட்டிருக்கும். அவை, குண்டலிசத்தி இக்கட்டைக் கடக்குந்தோறும் ஓரோ ரவத்தையாக மூன்றவத்தையுண்டாம். இவ்வகையுடைய ஆறா தாரத்தினுள், சுவாதிட்டானத்திலே இருக்கிற அக்கினியின் சுவாலைகள் நூற்றெட்டினுள் கீழ் முகமாக மூலாதாரத்திலே ஐம்பத்தாறும், மேன்முகமாக மணிபூரகத்திலே ஐம்பத்திரண்டும்

சென்றிருக்கும். அனாகதத்திலே இருக்கிற சூரிய கிரணங்கள் நூற்றுப்பதினாறனுள் கீழ் முகமாக மணி பூரகத்தைக் கடந்து சுவாதிட்டானத்திலே அறுபத்திரண்டு சென்றிருக்க இதயஸ்தான மாகிய அவ்வனாகதத்திலே ஒழிந்த ஐம்பத்து நான்கும் இருக்கும். அக்கினியிலே இருக்கிற சந்திர கலைகள் நூற்று முப்பத்தாற னுள் கீழ்முகமாக விசுத்தியிலே எழுபத்திரண்டு சென்றிருக்க, அவ்வாக்கினையிலே ஒழிந்த அறுபத்து நான்கும் இருக்கும். இம்முச்சுடரின் கிரணங்களை ஆறாதாரமும் அடைந்திருப்ப தனால் அதனதன் கிரணமெனவாயின. ஒரு பொருளின் குணம் ஒரு பொருளினுடையதாமோ வெனில், சூரியனுடைய காந்தி மேகத்தினிடத்தில் பத்திபாய அதனை மேகத்தினிறமென்றும் இந்திர வில்லினிற மென்றும் சொல்லப்படுவதால், ஆமென்க. இக்கிரணங்களெல்லாவற்றையும் கடந்து மேற்பட்டிருக்கிறபடி யினாலே, 'கதிர்களின் மேலிருக்குமெனதம்மை பாதம்' என்றார்."

பிற்காலத்தில் தோத்திரமும் சாத்திர உரையும் செய்து மிக்க பிரசித்தியடைந்தவர் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள். நாவலர் உரை சிதம்பர சுவாமி உரையொத்தது என்று ஆன்றோர் கருதுவர்.

## பதிப்பு

சௌந்தரியலகரி எல்லப்ப நாவலர் உரையோடு பலரால் பலமுறை பதிப்பிக்கப் பெற்றுள்ளது. 'வீரகவிராச பண்டிதர் அருளிச் செய்தது. சைவ எல்லப்ப நாவலர் அருளிச் செய்த உரையுடன்... நல்லூர் ஆறுமுக நாவலரால் பரிசோதிக்கப் பட்டதைச் சென்னை இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்களால் நமது ஸ்ரீ பத்மநாப விலாச அச்சுக் கூடத்தில் பதிக்கப்பட்டது 1897' என்று ஒரு பதிப்புக் காணப்படுகிறது. மிகவும் சிறப்பான பதிப்பு, அனவரத விநாயகம்பிள்ளை பதிப்பு, மதராஸ் ரிப்பன் பிரஸ், 1907. சிறப்பான முகவுரை, ஓரளவு மேற்கோள் விளக்கம் பதிப்பின் பிற செம்மைகள் எல்லாம் கொண்டது; "உரையோடு கூடிய இந்நூல் முதலில் பதிப்பித்தது ஐம்பது அறுபது யாண்டு கட்கு முன்னாதல் வேண்டும். 1862ஆம் வருடம் பதிப்பித்த ஒரு பிரதி என்னிடத்துள்ளதில் பிழைகள் நிரம்ப இருக்கின்றன. சுத் தப்பதிப்பு எங்கும் வழங்குவதாகக் கண்டதுமில்லை, கேட்டது மில்லை யாகலானும், இந் நூலுமுரையும் பலர்க்கும் உவப்பைத் தருமென்னும் நம்பிக்கையுடையேனாகலானும், இப்பதிப்புத் தோன்றுதற்குக் காரணமாயிருந்தேன்" என்பது இப்பதிப் பாளர் குறிப்பு.

# மறைஞான தேசிகர்

## ஆசிரியர்

இவர் சிதம்பரம் கண்கட்டி மறைஞான சம்பந்த பண்டா ரத்தினுடைய மாணாக்கர். அவருக்குப் பின் இவர் அச்சம்பந்தர் இருந்த கண்கட்டி மடத்தின் தலைவராய் இருந்தவர். சித்தியார் அறுவருரை அச்சிட்ட கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் இவரைக் குறித்துச் சில கருத்துக்கள் சொல்லுகிறார். 'திருமறைஞான தேசிகர் சீகாழிப் பகுதியில் திருஞான சம்பந்த மூர்த்திகளின் திருவடியார்களில் வள்ளல்கள் அறுபத்து நால் வருள் ஒருவராகிய ஆளவந்த வள்ளல் சந்தானத்தைச் சார்ந் தவர். பிராமண குலத்தவர். வைதிக சைவ பரிபாலகர். பதி பசு பாசப் பனுவல் முதலிய நூல்களுக்கு உரையியற்றியவர். பரமத திமிர பானு முதலிய நூல்களையியற்றியவர். இவர் இந்நூற்குக் காண்டிகையுரை கண்ணழிவுரை என இரண்டுரை இயற்றினார். அதனுள் இஃது காண்டிகையுரை. இவ்வுரையே இந்நூற்கு முந் தியவுரை யெனப் பிந்திய உரையாசிரியர் கொண்டிருப்பதை அவ்வவர் சமவாத மறுப்பு முகவுரைகளான் தெள்ளிதிற் றெளி யப்படும்.'

முதலியார் சைவ சமய நூல் வெளியீட்டில் வேறுயாரும் செய்திராத பெருந்தொண்டு செய்தவர் என்ற பெருமை பற்றி அவர் கருத்துக்களை இங்கு கூறினோம். அவர் இப்பகுதி எழுதிய காலத்தில் சமய நூலறிவு மிகவும் குறைவு; சமயநூலறி வைக் கொடுத்தவர் அவரே என்றால் மிகையல்ல. முதல் முதல் சில கருத்துக்களைக் கேள்வியாலும் ஆராய்ச்சியாலும் தெரிந்து சொல்லும்போது, பல பிழையாயிருத்தலும் இயற்கையே. அந்த முறையில் இவர் குறிப்பிட்ட செய்திகளை நாம் பார்க்கும்போது சில சொல்லலாம். ஆளவந்த வள்ளல் சந்தானம் என்பது பற்றி எந்த விளக்கமும் இல்லை. மறைஞான தேசிகர் பிராமணரு மல்லர், இந்தச் சந்தானமும் அல்லர். இவர் சீகாழிப் பதியினர் என்று வழக்கமாய்ச் சொல்வதுண்டு. இவர் சீகாழியில் பிறந்து, சிதம்பரத்தில் கண்கட்டி மறைஞான சம்பந்தர் சீடராய் வாழ்ந் தார் என்பது நாம் இப்போது சொல்லக்கூடியது. மறைஞான சம்பந்தர் வரலாறு, எமது 16ஆம் நூற்றாண்டு வரலாறு

இரண்டாம் பாகத்தில் விளங்கச் சொல்லப்பட்டுள்ளது இவர் களனைவரும் மெய்கண்ட பரம்பரையில் வந்தவர்களே. பின்னுள்ள பரம்பரை அட்டவணை பார்க்க. மற்றச் செய்திகளைப் பின்னே குறிப்பிடுவோம். காழி மறைஞான தேசிகர் என்றும் இவர் சொல்லப்படுவார்.

சித்தி 11ஆம் சூத்திரம் முதல் பாடலுரையில் இவர் "தன்னிடத்துண்டான அனுபவம் சுவானுபவம்: இஃது வடமொழி. சிவானுபவம் என்று உரைக்கில் இஃது இசையா. மூலசூத்திரமாகிய சிவஞான போதத்தில் சுவானுபூதிமான் என்று ஓதியிருக்கையினாலும் மற்றுள்ள ஆகம புராணங்களில் கூறுகையினாலும் என்றறிக. இதனை எமது குரவர் பரமோபதேசம் என ஒரு நூலாக்கி விரித்துக் கூறினார்: ஆண்டுக் காண்க" என்று எழுதுதலால், இவரது குரவர் பரமோபதேசம் செய்த மறைஞான சம்பந்தர் என்பது தெளிவு.

இவர் செய்தது சிவஞான சித்தியார் உரை, இரண்டு உரை செய்தார் செய்தாரென்றும், இவரால் அச்சிடப்பட்டது காண்டிகை உரை என்றும் முதலியார் கூறுகிறார். மற்ற உரையாகிய கண்ணழிவுரை பற்றி எதுவும் தெரியவில்லை.

**நூல்கள்**

மறைஞான தேசிகர் செய்த உரைகள் மூன்று: சிவஞான சித்தியார் சுபக்கவுரை, தம்மாசிரியர் செய்த சிவதருமோத்தர உரை, பதிபசுபாசத் தொகை உரை. சிவபுண்ணியத் தெளிவும் இவர் செய்தாரென்று தெரிகிறது. அது தனியே சைவ சாத்திரம் என்ற அத்தியாயத்துள் ஆராயப் பெற்றிருக்கிறது.*

இவர் தமது சித்தியர் சுபக்க உரையில், 'எமது பதிபசுபாசப் பனுவல் காண்டிகை உரையில் கூறினாம், ஆண்டுக் காண்க' என்று எழுதுகிறார். இன்று நூல் இருக்கிறதே தவிர இவரது உரை இருப்பதாகத் தெரியவில்லை. தம்மாசிரியருடைய ஏனைய பெருநூல்களுக்கும் இவர் உரை செய்திருக்கக் கூடும்: தெரியவில்லை, இவருடைய சித்தியார் உரையைத் திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் பலமுறை மிகவும் போற்றிக் கூறுகிறார்.

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு, இரண்டாம் பாகம் காண்க.

## சித்தியார் சுபக்க உரை

*உரை தொடங்கு முன் பின்வரும் விநாயகர் காப்புச் செய்யுள் அமைத்திருக்கிறார்:*

ஆனைமுகன் பதம்நினைவாம் ஆர்வம் கூர,
அரனடி அம் பிகைபாதம் பணிவாம் அன்பால்,
வானவரை வருத்தியவல் லசுரர் தம்மை
வதைத்தகுகன் மலரடிம் மனத்தில் வைப்பாம்,
கானமதில் நடமாடி, கோயில் வாய்தல்
காவலரு ணந்திபதம் கருத்தில் வைப்பாம்,
ஞானமுனி சனற்குமரா தியர்தம் பாதம்
நயந்தெணுவாம் எணியவரம் நமக்கே யாமே.

*இதுபோலவே உரை முடிந்த இடத்தும், மூன்று பாடல்கள் அமைத்திருக்கிறார்:*

செந்நெறி சேர்சிவ ஞான சித்தியில்
பன்னிரு பனுவலும் பன்னிப் பதப் பொருள்
உன்னிய திரிவற உணர்ந்த பெருமையோர்
அன்னிய மற்ற அமலன் அடிக்கீழ்
அழியா இன்பத் தறுபவர் அவரே
இழியார் உலகினங் கியற்றார் தொழிலும்
தீண்டிக் குளிகை செம்புதன் களிம்பு
மாண்டறக் கனக மாமது தனக்கே
மற்றொரு செம்பிற் களிம்பினை மாற்றும்
பெற்றியும் களிம்பினைப் பெறுதலு மின்றே
அன்ன நிலையாம் அமலனை அடைந்தார்
அன்னிய மற்றே அடைபவர் தாமே.

திருத்துறையூர்ச் சைவன் திருந்து மறையும்
விரித்துரைக்கும் வேதியன்மெய் கண்டான் – கருத்தின்
அருணந்தி தேவன் அருண்மொழி யாய்ந்தே
இருணந்தம் பாற்கண்டி லேம்.

*மூன்றாவது செய்யுள் பின்வந்தோர் இவரைத் துதித்துச் செய்த பாடலாக உள்ளது:*

நிலையடைய அனுதினமும் நினை, எனது மனமே,
தொலைவிலருள் தரும், அகலும் மலமுமுறு துயரும்,
மலைவுடைய உனதுமட மதியுடைய அருளும்,
உலைவின்மறை ஞானமுனி உரைசெய்திரு மொழியே.

இதனோடு, சோடசோபசாரத்தைக் கூறும் ஒரு தனிப்பாடலும் காணப்படுகிறது:

மாசில் உபசாரம் மஞ்சனம்பூ கந்தம்
நேசமிகு தூபமொளி நீரமுது – தூசடைக்காய்
ஆடி குடைகவரி ஆலவட் டம்விசிறி
ஆடலொடு வாச்சியமீ ரெட்டு.

"இதனுடைய பரபக்கமானது சங்கராசாரியர்* செய்த சர்வ தரிசன சங்கிரத்தும், சர்வமதோபந்நியாசத்தும் இராமநாதா சாரியர் பண்ணின பரமத நிராகரணத்தும் சர்வான்ம சம்பு பண்ணின சித்தாந்த தீபிகையினும், அகோர சிவாசாரியர் பண்ணின சித்தாந்தர்த்த சமுச்சயத்தும் பார்த்து அவைகளின் கருத்தைப் பற்றிச் செய்தது என அறிக" என்று இவர் தொடக் கத்தில் எழுதுவது கருதத்தக்கது. இது முழுமையும் கொள்ளக் கூடிய தன்று. மேலே குறிப்பிட்ட ஆசிரியர்களுள் ஆதிசங்கரர் அருணந்திக்கு முற்பட்டவரேயன்றி இந்தச் சங்கரரும் ஏனை யோரிற் சிலரும் அருணந்திக்குக் காலத்தால் பிற்பட்டவராவர். மறைஞான தேசிகர் இங்கு தமக்கு முன்வந்த நூல்களைச் சொன் னார் என்ற அளவுக்கே இதைக் கொள்ளலாம்.

"சுபக்கமானது முன்னூலாகிய சிவஞான போதத்தின் கருத்தினையும் வழிநூலாகிய சூத்திரம் சூரணி வெண்பா இவை களையும் சிவாகமங்களையும் முற்றும் நோக்கி அவ்வழியே பன்னிரண்டு சூத்திரமாகச் செய்தது என அறிக" என்று இவர் எழுதுவதால், தமிழ்ச் சிவஞான போதமே முதனூல், ரௌர வாகமச் சூத்திரங்கள் முதனூலாகா என்ற கருத்து இவருக்கிருக் கலாம் போலும். எண்ணற்ற வடமொழி நூல்களை இவர் கூறு கின்றார்: இதைப் பின்னே காட்டுவோம். ஆனால் ரௌரவாகமப் பெயரைக் கூடச் சொல்லவில்லை. ஆகவே இவர் சூழலில், சிவஞானபோதம் வடமொழி ரௌரவாகமத்தின் பெயர்ப்பு என்ற கருத்துப் புகவில்லை என்று கருதத் தோன்றுகிறது.

சுபக்கவுரையில், பரபக்கம் பல இடங்களில் சொல்ல வேண்டி வருகிறது. அது பற்றித்தான் போலும், இவர் விநாயகர் துதியுரையில் 26 அடி கொண்ட ஓர் ஆசிரியப்பாவினுள் சித்தி பரபக்கக் கருத்துக்களைச் சுருக்கித் தருகிறார்:

---

* இவர் சிருங்கேரி மடத்தில் பன்னிரண்டாம் பட்டம் சங்கரா சாரியராயிருந்த வித்தியாரணியர். காலம் 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

சித்திதன் பரமதம் செப்புங் காலை
மையுறும் உலகா யதன்முதன் மதமும்
மெய்யுறு சைவ மேன்மையு மாகும்
சிவமதந் தன்னைத் துலங்க வுரைக்கில்
கற்புறு மளவை காண்ட லாதியாய்ச்
சொற்பயில் மூன்றும் தொல்சிவன் படைத்தளித்து
ஒழித் தருள் செயலும்......
அவன தாணையின் ஆன்மாக் கன்மம்
புவனந் தோறும் புசித்திட வுடம்பின்
மன்னிய வான்மா மலத்துட னழுந்தப்
புன்மை தீரப் புகலருஞ் சிவனைக்
காணவும் காணாப் பொருளது மின்றி
வீறிய பரமுடன் பாசமும் வேறாய்
ஈதென ஆன்மா இயல்புட னுணர்ந்தே
எழில்தரு குருவால் இவ்வகை தெரிந்து
முழுதுணர் வாகி முத்தியை அறிந்தும்
சீருடன் குருவால் சீவன் முத்தனாய்
அரனடி நீழலி னஞ்செழுத் துணர்ந்தும்
அகலரும் மும்மலத் தழுக்கினை யகற்றியும்
புகலரும் சிவானு பூதியை யடைந்தும்
ஒழிவறு மின்பம் உதவிய பரன்பால்
பழுதறும் அடிமைப் பத்தி செய்தும்
சிவனடி யாரையும் சிவாலயந் தன்னையும்
நவையற வழிபடும் நன்மை யுரைத்தும்
பன்னிரு சூத்திரப் பயனது தன்னையும்
முன்னிய வாகமப் படியுரைத் ததுவே.

*பாஷா பேதங்கள் பலவென்று இவர் குறிப்பிடுபவை - வடமொழி, பிராகிருதம், சௌரசேனி மாகதம், பைசாசி, சூசிகாபைசாசி, அவப்பிரம்சம், தேசி என்பன.*

*இவர் வடமொழியில் மிகச் சிறந்த புலமையுடையவர். ஒவ்வொரு சித்திப் பாடல் உரையின் முடிவிலும், இதற்குப் பிரமாணம் இன்ன ஆகமம் அல்லது இன்ன சாத்திரம் என்று தவறாமல் எடுத்துக் குறிப்பிடுகிறார். இவ்வாறு இவர் குறிப்பிடும் வடமொழி ஆகமங்கள் 42; புராணங்கள் 15; பிற சைவ சாத்திரம் 23; தோத்திரம் 2; தர்க்கம் 1. தமிழ் நூல்களில் இவர் குறிப்பிடும் நூல்கள் - மறைஞான சம்பந்தரின் குருவான களந்தை ஞானப் பிரகாசர் செய்த அளவை விளக்கம், மறைஞான சம்பந்தர்*

செய்த பரமோபதேசம், சைவ சமய நெறி, சங்கற்ப நிராகரணம் என்பன. இலக்கணங்கள் தொல்காப்பியம், நன்னூல், இறையனார் களவியலுரை, தண்டியலங்காரம், யாப்பருங்கல விருத்தி மேற்கோள். திருமுறைகளில் தேவாரம், திருவாசகம், திருமந்திரம், திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, பொன்வண்ணத்தந்தாதி. சாத்திரங்களில் சிவஞானபோதம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், உண்மை விளக்கம், போற்றிப் பஃறொடை, திருக்களிற்றுப் படியார். இலக்கியம் திருக்குறள். பிறநூல்கள் அஞ்ஞவதைப் பரணி, கந்தரனுபூதி, ஞானாமிர்தம், பத்திரகிரி, சிவவாக்கியம் தத்துவ விளக்கம் என்பன. இவர் பெயர் சொல்லிப் பாடலையும் எடுத்துக் காட்டும் நூல்களில் இரண்டு இங்கு சிறப்பாய்க் குறிப்பிடத்தக்கன. ஒன்று பஞ்சாக்கர தரிசனம் என்பது; இரண்டு பாடல்களைத் தருகிறார்:

> யகாரம் இலிங்கமாம், நாளம் வகாரம்,
> சிகாரகமேற் பீடம் தெரிக்கின், – மகாரந்தான்
> கண்டமே யாகும், கவினார் அடிப்பீடம்
> பண்திகழும் நஃகானாம், பார்.

> நகரமே சத்தியோ சாதமுகம், நாடின்
> மகரந்தான் வாமம், மதிக்கில், – பகருங்கால்
> சிகார வகாரம் புருடம் அகோரம்,
> யகாரம் ஈசானமுக மென்.

என்றார் எமது குரவர்' என்று இவர் சொல்வதால் இதுவும் மறைஞான சம்பந்தர் செய்தாரென்று புலப்படுகின்றது. ஆனால் நூல் இன்று இருப்பதாய்த் தெரியவில்லை. மற்றொன்று பார்த்திபம் என்ற நூல். அனந்தஞானம், அனந்ததரிசனம் முதலான எட்டுக் குணங்களையும் தரும் ஒரு பாடலைக் காட்டி, 'என்றார் பார்த்திப முடையார்' என்று எழுதுகிறார்:

> தோற்று மனந்த ஞானத்தோ டனந்த தரிசனமும்
> தோற்று மனந்த வீரத்தோ டனந்த சுகத்துடனே
> ஆற்றிய நாமமின்மை கோத்திர மின்மை ஆயுவின்மை
> ஏற்றிய தோரழியா இயல் பென்பர் ஏந்திழையே.

எமது குரவர் என்று சொல்லாமையால் இது மறைஞான சம்பந்தர் நூலல்ல, வேறு ஆசிரியர் என்று தெரிகிறது. நூல் கிடைக்கவில்லை. அளவைப்பகுதியில் இவர் காட்டும் கட்டளைக் கலித்துறை மேற்கோள் பாடல்கள் மறைஞான சம்பந்தரின்

குருவாகிய களந்தை - ஞானப்பிரகாசர் செய்த அளவை விளக்கத்துக்குரியன போலும்; நூல் இன்று இல்லை. யாப்பருங்கல விருத்தியில் காணும் ஒரு பாடலை இவர் எடுத்துத் தருவது அபூர்வமான ஒரு பிரயோகம்.

> **செந்தமிழ்ச் செய்யுள் தெரிந்துணர்ந்த செய்யுட்கள்**
> **வந்த வடமொழியு மாற்றாதே – சந்தம்**
> **வழுவாமற் கொண்டியற்று மாண்பினார்க் குண்டோ**
> **தழுவாமை நிற்குந் தமிழ்.**

திருமந்திரம் என்று இவர் காட்டுகின்ற பாடல்களில் ஒன்று அந்நூலில் காணப்படவில்லை.

நூலில் சிறப்பாக விரித்துரைத்த சில பகுதிகளைக் கீழே குறிப்பிடுவோம். அளவைப் பகுதியின் அவதாரிகை; இந்திரியக் காட்சியின் சம்பந்தம் அறுவகை என்று அவ்வாறையும் விளக்கி யிருத்தல்; போலி வகை தோல்வித்தானம் என்பவற்றின் விளக்கம்; மூன்று கன்மங்களின் விளக்கம் (பாட்டு 101); 162ஆம் பாட்டு உரையில் 22 சமயவாதிகள் சொல்லும் முத்தி நிலையை மறுத்திருத்தல்; மோகம் முதலிய எழுவகையின் விளக்கம் (169); சீர்த் தேர் என்பதற்கு (213) சிகரம் முதலிய தேர் பத்துவிதம் உண்டு ஆகையால் சீர்த்தேர் என்று சிறப்பித்தார் எனல்; பாட்டு 253 உரையில் விஞ்ஞானகலர் முதலாயினருக்கு அருள் செய்யும் முறைமை; தீட்சை வகைகள்; மந்திரங்கள் பதங்கள் புவனங்கள் முதலியவற்றை வடமொழிப் பெயர்களோடு விளக்கியிருத்தல் (258); ஆருகத விளக்கம் (263) ஆறாதார விளக்கம் (272) என்பன காண்க. இவர் உரையைத் திருமறைஞான தேசிகர் உரை என்றும் இது தீவிர தரபுத்திமான்களுக்கு ஏற்றது என்றும் திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் எழுதுகிறார்.

இவர் உரையில் குறிப்பிடத்தக்க சில பகுதிகள்: களந்தை ஞானப்பிரகாசர் செய்த அளவை விளக்க மேற்கோட் பாடல்கள் - அளவை முதற்பாடல் அவதாரிகை, அதன் உரை இங்கு 5 பாடல்கள்: பதிபசு பாசப்பனுவல் பாடல் மேற்கோள் - அளவை 6ஆம் பாடலுரையில்; 'மேற்கோள் ஏது உபநயம் நிகமனம் - என முறை நிகழப்பெறுமே' என்றார் தர்க்க பரிபாடையில் காளிங்கராயர் என்ற கூற்று: அளவை 11உரை; கர்மம், இச்சை, அதிட்டம் என்பன விளக்கம் சூத்திரம் 2 பாடல் 12 உரை; பதிபசு பாசப் பனுவலுக்கு இட்ட காண்டிகையிற் கூறினாம், ஆண்டுக்

*காண்க - சூ. 2.58 உரை; பரமதக் கருத்துக்கள் விளக்கம் - சூ. 2.73 உரை; தீக்கை சூ. 8.3 உரை; ஆறாதார விளக்கம்: சூ. 8.21 உரை. அட்டமாசித்தியை விளக்க இவர் ஒரு பாடலை 'என்றார் எமது குரவர்' என மேற்கோள் தருவது காணத்தக்கது (சூ. 9.6):*

அணுவினும்நுண் ணுருவுகொளல் அணிமாவாம்; அவற்றின்
அதிவேகத் தியங்கியும்தோய் வற்றவுடல் லகிமா;
திணியபெரு வரையெனமெய் சிறப்புறுகை மகிமா;
சிந்தித்த பலமெவையும் செறிந்துறுகை பிராத்தி;
பிணைவிழிய ராயிரவ ரொடும் புணர்ச்சி பெறுகை
பிரகாமி; ஈசிதைமா வலியுமடி பேணி
மணமலர்போ லெவராலும் வாஞ்சிக்கப் படுகை;
வசிவசிதை வலியாரால் தடுப்பரிய வாழ்வே.

*(சிவதருமோத்தரம், சிவஞானயோகவியல் 90.)*

## *சிவதருமோத்தரவுரை*

*மறைஞான தேசிகர் செய்த மற்றோர் உரைநூல் தம்குரு செய்த சிவதருமோத்தரத்தின் உரையாகும். சித்தியார் ஒரு ஞான சாத்திரம்: சிவதருமோத்தரம், சரியா பாதத்துக்குரிய சாத்திரம். இவ்வுரையை இவர் தேவையான அளவு விரிவாகவே செய்திருக் கிறார்; பொருள் தெளிவாயுள்ள இடங்களில் இதன் பொருள் வெளி என்று கூறிச்செல்கிறார். ஆங்காங்கு தொகைகளை விரிக்கிறார். அபூர்வமாய்ச் சில மேற்கோள் பாடல்களையும் தருகிறார். இரவில் கண் விழிக்க வேண்டியபோது வித்யாதானம் செய்பவன், கூத்துப் பார்க்கலாம் என்று சொல்லுமிடத்து (2:34). நாடகம் என்று பொதுப்படக் கூறியதற்கு ஒரு வெண்பா மேற் கோள் காட்டுகிறார்:*

சங்கரன் ஆடிய தாண்டவமும் ஆங்குமையாள்
இங்கிதத்தால் ஆடும் இலாச்சியமும் – பொங்குதிரை
ஆழிப் புவியில் அகமும் புறவரியும்
சூடும்நடம் நாலென்று சொல்.

*எண்வகை மணத்தைக் கூறுமிடத்து, இவர் நூற்பாக்களை மேற் கோள் காட்டுகிறார்: காந்தருவ முதலிய மூன்றும் மத்திமமென வும், பைசாசம்அதம மெனவுங் கூறுவாருமுளர்.*

பிரமம் பிரசா பத்திய மாரிடம்,
தைவங் காந்தருவம் அசுரம் இராக்கதம்
பைசாசமென வேதத் தெண்வகை மணமே;

பிரமங் கன்னியைப் பெருங்கல னணிந்தே
பிரம சாரியா யிருப்பா னொருவனுக்கு
உரிய வன்னிமுன் னுதவுதன் மருவும்;

மருவு பிராசா பத்திய மகட்கோடற்கு
உரிய கோத்திரத் தார்மக ளுதவென
இருமுது குரவரும் இயைந்தே யீதல்;

ஈயும் ஆரிடம் ஆவும் ஆனேறும்
வாங்கித்தீ முன்னர் மகள்வழுங் குதலே;

வழுங்கு தெய்வம் வேள்வியா சாரியற்கு
முழங்கு தீமுனம் மகட்கொடை முறையே;

முறைமை யாழின் நிறை கந்திருவம்
ஒப்புப் பற்றுந் தப்பில வாகித்
தாமே கூடுந் தகுதிய தாகும்;

ஆகும் ஆசுரஞ் செருவில் ஏற்றியும்
திரிபன் றியினைத் தெரிவுற எய்தும்
இன்னன பிறவும் பன்னிய செய்தும்
கன்னியை மன்னுதல் துன்னும் என்ப;

துன்னும் இராக்கதம் சுரிகுழற் பேதையைத்
தன்னிற் பெறாதும் தமரிற் பெறாதும்
வலிதிற் கோடல் மரபு காட்டும்;

காட்டு பைசாசங் களித்தார் துயின்றார்
மாட்டுப் புணரும் புணர்ச்சியின் மாண்பே.

இந்நூற்பாக்கள் அந்தாதித் தொடையாயிருப்பது நோக்கத் தக்கது. இப்பாடல்களை இவரே செய்திருத்தலுங் கூடும். துக்கத் திரயங்கள் ஆதி தைவிகம் ஆதி பவுதிகம் ஆதியாத்மிகம் என்று சொல்லி மூன்று வெண்பாக்களைத் தருகிறார்.

கருவிற் றுயர்செனிக்குங் காலைத் துயர்மெய்
திரைநரைமூப் பிற்றிளைத்துச் செத்து – நரகத்தின்
ஆழுந்துயர் புவியை யாளின்ப மாதியெலாம்
ஊழுதவு தைவிகமென் றோர்.

பனியால் இடியாற் படர்வா டையினால்
துனிதென் றலினாஞ் சுகமும் — தனையனைய
நீரினா மின்பின் னலுநெருப்பி னாந்துயரின்
போரிற் பவுதிகமா கும்.

தன்னாற் பிறராற் றனக்குவருந் தீங்குநலம்
இன்னா விலங்கரவந் தேளெறும்பு — சென்முதனீர்
அட்டையல வன்முதலை மீனரவ மாதியினாம்
கட்டமுமிங் காத்மிகமே காண்.

*ஆசிரியர் ஒரு பாடலில் வீட்டு நெறியைச் செந்தமிழால் சொல்ல லாகாது என்று குறிப்பாகக் கூறுவதை இவர் சமத்காரமாக, வேறு வகையாலும் விளக்கம் தருகிறார்:*

செந்தமிழின் இன்பமிறு வாயலது செப்பார்
அந்தமிலி யாதியுமி லானுரையை யாய்ந்தார்
செந்தமிழி லும் கவுட மாகவுரை செய்தார்
இந்தயுக காலகலி யீடற நல்வீடும்

*என்ற பாடலுக்கு இவர் எழுதும் உரையைக் காண்க:*

*“திருவள்ளுவ தேவர் செந்தமிழில் அறத்துப்பால் முதலிய முப்பாலும் ஓதி வீட்டு நெறியை விரித்துச் சொன்னாரில்லை. சிவவாக்கியத்தை உணர்ந்தவராதலாற் பக்குவான் மாக்களே மோட்சமடையும் பொருட்டும் கவுடமாக மெய்யுணர்த லென்னும் அதிகாரத்தாற் கூறினார். ஆளுடைய தேவநாயனார் திருவுந்தியார் என்றும் சாத்திரத்தைக் கூறியதனால் தமிழாற் கூறினும் குற்றமில்லை.”*

*இவ்வுரையில் பதிப்பித்தோர் பல செய்திகளைச் சேர்த்துப் பெருக்கியிருக்கிறார்கள். இருப்பினும் மறைஞான தேசிகர் குறிப்பிடும் செய்திகள் மிகவும் அதிகம் சுவையுடையன. பின்னும் சில. இங்கு குறிப்பிடுகிறோம். கவ்வியம் என்பது, ஐந்துடன் கோரோசனையும் சேர்த்து ஆறு ஆகும். மூவேழ் சுற்றம் என்பது மாதுர் வர்க்கம் 7, பிதுர் வர்க்கம் 7, தன் வர்க்கம் 7 ஆக மூவேழு. உபசாரம் பலவகை - பஞ்சோபசாரம் தசோபசாரம் சோட சோபசாரம் என. அரையனான சனகன், சுகர் முதலிய பிரம ரிஷிகளுக்கு, நாலாம் வருணத்து விதுரர் தூர்வாச ரிஷிக்கும் ஞானம் போதித்தலால், ஞான உபதேசத்தில் சாதிப் பேச்சு இல்லை. திருமுறை எழுதப்போகும் அலேகம் என்னும் வெள்*

ளேட்டுத் திருமுறையும் பூசிக்கத்தக்கது; நந்தி நாகரம் தேவநா கரம் முதலான எழுத்துக்களை எழுதித் தீர்ந்தவனே திருமுறை எழுதக் கடவன். தாரகன் - பிறவிக் கடல் கடப்பிப்பவன், பார கன் - தாங்குபவன், காரகன் - உண்டாக்குபவன். நாரகன் - நரகத் தில் கிடக்குமவன். பற்ற என்ற சொல்லை விட, மிக என்ற பொரு ளில் ஆளுகிறார் தணியல் - மதுபானம். குநகி - சொத்தை நகம் உடையவன். உபவசி - உபவாசம் இருப்பவன்.

'ஈட்டினான் தனந்தன்னை இறைக்குறக் காட்டினானும்' என்றவிடத்து, 'நல்ல முயற்சியால் சம்பாதித்தவர் அடக்கப் பொருளை அரசனுக்குக் காட்டினவனும் பாவியாவன்' என்று (6. 58) எழுதியிருப்பதைப் பார்க்கும்போது, 1976ஆம் ஆண்டில் உள்ளதுபோல அன்றும் இருந்திருக்கிறது என்று அறிகிறோம்.

## பதிபசுபாசத் தொகை உரை

மறைஞான சம்பந்தர் செய்த பதிபசு பாசத் தொகை என்ற 25 குறட்பாக்கள் கொண்ட சிறு நூலுக்கு இவர் செய்த உரை மிகவும் விளக்கமானது, சிறப்பானது. மூல ஆசிரியர் இச்சிறு நூலுள் பாயிரம் 5 பாடல், பதியியல் 8, பசுவியல் 4, பாசம் 2, அனுக்கிரகவியல் 3, அதிகாரி - பலன் 3 என அமைத்திருக்கும் திறன் அழகுடையது. இச்சிறு அமைப்பை இவர் விளக்கி யிருக்கும் திறன் பின்னும் அழகுடையது. இச்சிறு நூலும் உரையும் சைவர் உலகில் பின்னும் அதிகமான ஆட்சி பெறுதற்குரியன. பெருநூல்களிற் காணும் பொருளுக்கு ஒரு சிறு கைக் குறிப்புப் போல் இவ்வுரை உள்ளது. நந்திமாகாளர், பிருங்கி, இடபர், கந்தர் சண்டர், விநாயகர், பார்வதி என சிவ கணத்தலைவர் எழுவர்; குற்றங்கள் எட்டு - விகற்பம் கற்பம் குரோதம் மோகம் கொலை அஞர் மதம் நகை என இருபா இருபதை ஒட்டி உரைக் கிறார். தீட்சை - சட்சு முதல் அவுத்திரிவரை ஏழு. ஆகாமியம், சஞ்சிதம் பிராரத்துவம் - இவைகள் நெல் விளைவித்து, களஞ்சி யத்தில் சேர்த்து, பின் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துப் புசித்தற்கு ஒப்பன. சித்தியாரைத் தழுவி மலத்தைப் போக்கும் இறைவன் வைத்தியநாதன் என்று சொல்லுகிறார்; மருத்துவர் சூரியாடுதல் ஔடதப் பிரயோகம் செய்தல் முதலியவைகளால் சில வியாதி களையும் மருந்துடன் சர்க்கரை சேர்த்துக் கொடுத்துச் சகல வியாதிகளையும் தீர்ப்பர்.

இவ்வுரைத் தன்மைக்கு எடுத்துக்காட்டாக, ஒரு பாடலையும் அதன் உரையையும் மட்டும் கீழே தருகிறோம்:

**உடலொலியின் மூல ஒலியுறைதல் போல**
**கடவுள் உயிர் தோறும் உறுங் காண். 7**

'எவ்வெழுத்தும் உச்சரிக்கப்படுங்கால், அகரவொலியே முதற் கண்ணின்று அவ்வெழுத்துக்களை இயக்கி ஒலிப்பிக்குந் தன்மை பற்றி "மூலவொலி" என்று கூறினார். மெய்யொலிகள் உயிர்த் துணையாய்ப் பிறக்குமேயன்றித் தாமே தனித்துப் பிறக்கும் வன்மையுடையனவல்ல ஆதலால் உடலொலி என்றார். ஒற்றொலியைக் கண்ணொளிக்கும், உயிரொலியைக் கதிரவன் ஒளிக்கும் சமப்படுத்திக் கூறுவர். எழுத்துக்கள் தோறும் அகரஞ் சென்றிருத்தல் போல் ஆன்மாக்கள் தோறுஞ் சிவன் வியாபித்திருப்பன். அகரமின்றி எழுத்துக்கள் இயங்காத் தன்மை போல் இறைவனையின்றி ஆன்மாக்களும் இயங்கா. அகரம் எழுத்துக்களுக்கெல்லாம் முதலாயினாற் போல் இறைவனும் ஆன்மாக்களுக்கெல்லாம் முதல்வனாவன். அகரந் தனித்தும், மெய்யோடு கூடியும் இயங்குதல்போல், இறைவன் ஆன்மாக்களுக்குடனாயும் வேறாயும் நிற்பன். மற்றவை ஈண்டு விரிப்பிற் பெருகும்.

### பிற நூல்கள்

மறைஞான சம்பந்தர் பதிபசுபாசப் பனுவல் என்ற குறள் நூல் செய்தார் என்றும் இவர் அதன் உரை செய்தார் என்றும் சொல்வதுண்டு; இவரே சித்தி உரையுள் கூறுகிறார். பனுவல் அச்சாகியுள்ளது. உரை கிடைக்கவில்லை. பரமததிமிர பானு என்ற நூல் இவர் செய்தார் என்று சண்முக சுந்தர முதலியார் சொல்லியிருப்பது பிழை. அதைச் செய்தார் இவருடைய குருவே (மறைஞான சம்பந்தர்).

### குறிப்பு

மறைஞான தேசிகர், வேதவன முனிவர், தமிழகார முனிவர் என்போர் மறைஞான சம்பந்தரிடம் பயின்றோர் என்று ஒரு வரலாறுண்டு. இவர்களுள் தமிழாகர முனிவர் அடுத்த நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்து தருமபுரத்து ஆறாம் பட்டம் திருஞான சம்பந்த தேசிகரின் சீடராகி, பிராயச் சித்த சமுச்சயம் முதலான நூல்கள் செய்தார். 90 வயதுக்கு மேலும் இருந்தார் என்பர். இவர் வரலாறு 17ஆம் நூற்றாண்டு வரலாற்றில் சொல்லப்படும்.

## மறைஞான தேசிகர் முன்னோர்

**உமாபதி சிவம் (1300-25)**
*சிவப்பிரகாசம் முதலியன*

↓

**அருள் நமசிவாயர் (1300-30)**
*ஞானபூசைத் திருவிருத்தம் முதலியன*

↓

**காழி - கங்கை மெய்கண்டார் (1310-40)**
*நூல் இல்லை*

↓

**காழி - சிற்றம்பல நாடிகள் (1325-50)**
*துகளறு போதம் முதலான பல நூல்கள்*

↓

**பழுதைகட்டி - சம்பந்த முனிவர் (1350-75)**
*சிவானந்தமாலை முதலியன*

↓

**காவை அம்பலநாதத் தம்பிரான் (1375-1425)**
*பிராசாத அகவல் முதலியன*

↓

**சத்தியஞான பண்டாரம் (1425-50)**
*நூல் இல்லை*

↓

**களந்தை ஞானப் பிரகாசர் (1450-1500)**
*தச காரியம் முதலியன*

↓

**கண்கட்டி - மறைஞான சம்பந்தர் (1500-25)**
*சிவ தருமோத்தரம் முதலியன*

↓

**காழி மறைஞான தேசிகர் (1525-50)**
*சித்தியார் உரை சிவபுண்ணியத் தெளிவு*

*எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு பார்க்க.*

## சிவாக்கிரயோகிகள் - சிவஞானசித்தி உரை

திருக்கயிலாய பரம்பரை ஸ்கந்த சந்தானம் சூரியனார் கோயிலாதீனத்துக் குரு முதல்வரான வீழிச் சிவாக்கிரயோகிகள் வரலாறு முன்னர் விரிவாய் ஆராயப் பெற்றது.* இப்போது இவர் செய்த சாத்திர உரையாகிய சிவஞான சித்தியார் உரையொன்று மட்டும் இங்கு ஆராய்கிறோம்.

## சித்தியார் உரை

யோகிகள் உரை தமிழ் உரை வரலாற்றில் சிறப்பான இடம் பெறுகிறது. இவர் வடமொழியில் பல சைவ நூலும் உரைகளும் செய்தவர் - கிரியா தீபிகை என்னும் சிவாக்கிரபத்ததி, சைவ சந்நியாச பத்ததி, சைவ பரிபாஷை என்ற மூல நூல்கள், வட மொழிச் சிவஞான போதத்துக்கு லகுடீகை என்ற சுருக்கவுரை, பன்னீராயிரம் கிரந்தம் கொண்ட சிவாக்கிர பாஷ்யம் என்ற பேருரை ஆகியன செய்தார். தமிழில் தம் பரம்பரைக்குரிய சைவ சித்தாந்தப் பொருளைச் சிவநெறிப் பிரகாசம் என்ற 215 செய்யுள் கொண்ட மூல நூலாகச் செய்தார். இவர் தம்முடைய பரம்பரைக்குரிய நூலல்லாததாய், மெய்கண்ட பரம்பரைக் குரியதாய் உள்ள சிவஞான சித்திக்கு உரை எழுதியது, சித்தியின் பெருமையும் இவருக்குச் சைவ சித்தாந்தத்தில் உள்ள பற்று தலையும் நன்குணர்த்தும்.

அன்றியும், சைவத்தில் இவ்வுரை ஒன்றே மணிப்பிரவாள வுரை; வேறு மணிப்பிரவாள நடை இங்கு இல்லை. வைணவத் திலும் சைனத்திலுமே மணிப்பிரவாள நடை அதிகம். ஆயினும் இவருடைய மணிப்பிரவாள நடை மற்றையோரைப் போல அதிகமான வடமொழித் தொடர்களையும் சொல் முடிவு களையும் கொண்டதாயில்லை. வடமொழிச் சொற்களை அதிகம் சொல்கிறார்; அவற்றைத் தமிழ்போலவே சொல்லிக் கொண்டு போகிறார். முக்கியமான தன்மை, தத்உக்தம், தத்ரைவ, அந்யத்ராபி (அது சொல்லப்பட்டது, அவ்விடத்திலேயே, வேறிடத்திலும்) என்று குறிப்பிட்டு, வடமொழி நூற்பாடல்

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு இரண்டாம் பாகம் காண்க.

களை வடவெழுத்திலேயே அளவில்லாமல் எடுத்துத் தருகிறார். ஒரு சுலோகமாகவும் இருக்கும், சில சமயம் 40 சுலோகம் வரையிலும் கூட உண்டு.

பல பாடல்களின் இறுதியில் சில இலக்கணக் குறிப்புக் களும் எழுதுகிறார். எழுவாய் பயனிலை, ஏகாரம், பொருள் கோள் என்பன குறிப்பிடப்படுகின்றன. மெய்கண்ட தேவசிவா சாரியர் என்பதே இவருடைய கூற்று. மெய்கண்டார் வேளாள மரபு, பிறப்பால் சிவாசாரிய மரபல்ல, எனினும், சிவபெருமானே ஆசாரியத் திருமேனி தாங்கி இவ்வடிவோடு வந்தான் என்பது ஆன்றோர் கருத்தாகையால், சிவாசாரியர் என்றார். சத்தர் உத்தியுத்தர் பிரவிருத்தர் என்று சிவபெருமான் தடத்த லட்சணம் மூன்று வகை என்ற கருத்து ஆகமங்களையொட்டி இவரே சொல்கிறார் (ஆதி நடு அந்தம் என்ற பாடல் உரை). சாமுசித்தர் வைநயிகர் என்ற கருத்துக்கள் ‘பண்டை நற்றவத்தால் தோன்றி’ என்ற பாயிரப்பாடலில் அடங்கியுள்ளன. இவர் ஆகமங்களை யொட்டி, சாமுசித்தர்வைநயிகர் பிராகிருதர் என்று மூன்று வகை யான உயிர்களைக் காட்டுகிறார் (போதமிகுத்தோர் என்ற பாடல் உரை). ஓரிடத்தில் தானடங்கத் தன் தசையாடும் என்ற பழமொழி யைக் கூறுகிறார். சூ. 2.39 உரையில், காரணமலமாய் நிற்கும்’ என்ற மூலத்தொடருக்குக் ‘கான்மிகமலமாய் நிற்கும்’ என்ற பாடமு முண்டு; எழுதினவன் பிழையாக வேண்டும் என்று எழுதுகிறார்.

யோகிகள் காலத்தில், புதிய சமய எழுச்சி மிகவும் விரிவாக நாடெங்கும் ஏற்பட்டது. அதைப் பயன்படுத்திப் பிராமணர் தமக்கே சமய ஆதிக்கம் எல்லாம் இருக்க வேண்டும் என்று நிறுவ முயன்றனர். சந்நியாசமும் ஆசாரியத் தன்மையும் பிராமணருக்கே உண்டு என்று நிறுவும் முயற்சியை இவருடைய வரலாற்றில் கூறியிருக்கிறோம். இவர் அந்த நிலையை விட்டு எல்லோருக்குமே சமயத்துறையில் அதிகாரம் உண்டு என்பதைத் தம் நூல்களில் பலவிடங்களிலும் விளக்கி எழுதுகிறார். இவருடைய கருத்தின் படி சிவதீட்சையே பிரதானம். ‘இத்தன்மையான சிவாகமத் திற்கு அதிகாரி புராண இதிகாசங்களுக்குப் போல ஸ்திரீ சூத்ர த்விஜ பந்துக்களோ சாதுர்வர்ணத்திலவர்களுக்குமோ எனின், ‘பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்ர சுத்த குலோத்பவா இதி வசநாத்’ என்பது த்ரைவர்ணிகளும் உபயகுல சுத்தருமாய்ப் பரம்பரை யாக ஸ்திரீகளும் புருஷரும் அபேயபாநாதி (மதுமாம் சாதி)

ரகிதமாயிருக்கிற சூத்திரரிலும் இவ்வர்ணத்திலவர்களிலும் சத்தி நிபாதம் உடையராய் சிவதீட்சையுடையவர்கள் அதிகாரிகள்.'

இவ்வாறு இவர் பல செய்திகளுக்கு எங்குமே ஓர் அமைதி காட்டுகிறார்; 'புறம்பேயும் அரன் கழல்கள்' என்ற பாடலில் மரத்தின்கீழ் உதிர்ந்து கிடக்கும் பூக்களை எடுத்துப் பூசிக்கலாம் என்பதற்கு ஓர் அமைதி காட்டுகிறார். எட்டாம் சூத்திரத்தில் 'புதிய விரைப் போது' என்று சொல்லி 'இவ்விடத்துப் பூ மரத்தின் கீழ் உதிர்ந்தது என்றது விரோதம் என்னில், அஃது அன்று; எட்டாஞ் சூத்திரத்தில் சொன்னது கிருகஸ்த விஷயம். இவ்விடத்து சொன்னது சந்நியாசி விஷயம். சந்நியாசிக்கு 'புஷ்பாணஞ்ச நிகுந்தநம்' என்றும், 'யவ்யதம் பதித புஷ்பம் ஸகுர்த்தவ்யம் யதிபூஜநம்' என்றும் ஆகம வசனத்தினால் விதி ஆகையால்' என்கிறார் (9.11).

சைவ சமயத்தில் குறிப்பிடுகின்ற கன்மம், மாயை, ஆணவம் என்ற மலங்கள் மூன்றும் முறையே நெல்லினுக்கு முளையும் தவிடும் உமியும் போல என்று சாத்திரங்களும் உரைகளும் சொல்லும். இவர் மும்மலம் நெல்லினுக்கு என்ற பாடலுரையில் தவிடு, உமி, முளையென்று மாற்றிச் சொல்லியிருப்பது கருதத் தக்கது (சூ. 2.86).

எட்டாஞ் சூத்திரத்தில் ஆகமத்தைக் குறிப்பிடுமிடத்தில் (பாடல் 13 உரை) வேதம், சிவாகமம் என்ற இரண்டாகச் சொல்லி யிருப்பதற்கு ஓர் அமைதி கூறுகிறார். "இவ்விடத்தும் இரண் டாகச் சொல்லுகையில் இரண்டினில் அதிகம் ஏதென்னில், வேத சிவாகமமாகிய அபரஞானமிரண்டும் பரஞானமாகிய சிவஞானத்திலே பரியா வசனமாகையால் வேதோபப் பிரமித மானது கொண்டு வைதிக சைவமென்றும் சிவகுண சங்கிராந்தி சமுற்பத்தி சமாவேச சிவசமத்துவம் என்று இம் மூர்த்திகளுக்கு மேலாயிருக்கிற சிவசாயுச்சியப் பிரதமாகையால் உத்தரசைவம் என்றும், இதைப் பூர்வபட்சம் பண்ணுவதற்கு ஒரு சமயம் இல்லை ஆகையால் சித்தாந்த சைவமென்றும் பெயரையுடைய வைதிக சைவமே சர்வோத்கிருஷ்டமான சமயம். வேத சிவாக மங்களே சாஸ்திரம்."

சிவாக்கிர யோகிகள், தம் உரை முகப்பில் விநாயக வணக்க மாகவும் அவையடக்கமாகவும் இரு பாடல்கள் செய்திருக்கிறார். அவற்றைக் கீழே காணலாம். இரண்டாம் பாடலில் தமது குருவின்

ஆணைப்படி இவ்வுரை செய்ததாகக் கூறுகிறார்; குரு ஆவார் சூரியனார் கோயிலாதீன ஸ்தாபகரான சிவக்கொழுந்து தேசிகர்,

திருமகளுங் கலைமகளுஞ் சேவித் தேத்தும்
சிவகாம சுந்தரியுஞ் சிவனு மீன்ற
குருமணியாங் குமரனுக்கு முத்தோன் பாதம்,
கொண்டெனது புந்தியினிற் கூறு கின்றேன்:
அருமறையும் சைவநெறி அனைத்தும் தேர்ந்தே
அருணந்தி தேவனார் அருளிச் செய்த
தருநிகரும் சிவஞான சித்தி யுண்மை
தரும்பொருளைக் குருவருளென் தலைமேற் கொண்டே.

அருமறையா திகளனைத்தும் ஐம்பத் தொன்றாம்
அக்கரத்து ளடங்கியவா றாமதென்னத்
தருவிதையுள் அடங்கியதோர் தன்மை யென்னச்
சாற்றுசிவா கமப்பொருள்கள் தம்மை யெல்லாம்
திருமுனிவர் சிவஞான சித்தி யென்றே
செப்பினர் இங் கிதற்குரைநீ செய்க என்றெங்
குருசரணர் அருள்புரிதல் மறுக்க அஞ்சிக்
கூறுமுரை குணமெனவே கொள்வர் நல்லோர்.

## மேற்கோள் நூல்கள்

இவர் மேற்கோளாய்க் காட்டுவன மிகுதியும் ஆகமங்களும் வடமொழி நூல்களும். உரையில் ஒவ்வொரு கருத்தைச் சொல்லிய பிறகும், இதற்குச் சம்மதி இன்னது என்று சொல்லி, தவறாது ஆகமங்களையும் அவற்றையொத்த சிறப்புடைய பிற வடமொழிச் சாத்திரங்களையும் நூல்களையும் பல பாடல்களால் எடுத்துக் காட்டுகிறார். ஆகமங்கள்: ரௌரவம், காமிகம், காலோத்தரம், கிரணம், சர்வ ஞானோத்தரம், சிவ தருமோத்தரம், சுவாயம்புவம், தேவிகா லோத்தரம், பராக்கியை, பௌஷ்கரம், மதங்கம், மிருகேந்திரம், வாதுளம், விசுவ சாரோத்தரம், வீராகமம், ஸ்வச்சந்தம், புராணம்: ஆதித்திய புராணம், கூர்மபுராணம், சிவகீதை, சூதசம்மிதை, ஈசுவர கீதை, பிரமாண்ட புராணம். பிற வடமொழி நூல்கள்: அமரசிம்ஹம், இரத்தினத் திரயம், காபிலம், காளிதாசர் நூல், சித்தாந்தபோதம், வடமொழிச் சிவஞான போதம், தத்துவப் பிரகாசிகை, நிச்சுவாச காரிகை, பாரதம், பூஜாஸ்தவம், மகிம்நஸ்தவம், வீரதந்திரம், ஜைன தந்திரம். மிகவும் அதிகமான மேற்கோள் பௌஷ்கரம்; அடுத்தது

மிருகேந்திரம். தமிழில் இலக்கணங்கள் - தொல்காப்பியம், தண்டியலங்காரம், நன்னூல். பிற நூல்கள் - தமிழ்ச் சிவஞான போதம், சிவப்பிரகாசம், திருமந்திரம், அப்பர் சுந்தரர் தேவாரம், திருவாசகம். அளவைப் பகுதியில் மறைஞான சம்பந்தருடைய பதிபசுபாசப் பனுவலிலிருந்து 7 குறட்பாக்களைத் தருகிறார். மறைஞான சம்பந்தர் இவருக்குச் சமகாலம்; அவர் சிறிதே மூத்தவராயிருத்தல் கூடும். உடன் காலத்திலேயே அவருடைய நூலுக்கு எத்துணை ஆட்சி ஏற்பட்டிருந்தது என்பதையே இது காட்டுகிறது.

### பாயிரப் பகுதி

சித்தியார் பரபக்கம் (301 பாடல்) சுபக்கம் (326 பாடல்) என இரு பெரும் பிரிவுகளாயுள்ளது. பர பக்கம் பிற சமயங்கள் பதினான்கின் கொள்கைகளைக் கூறி மறுப்பது. சுபக்கம் என்பது சைவ சித்தாந்த உண்மைகளைச் சிவஞானபோதத்தின் வழி 12 சூத்திரங்களாயும் அதிகரணங்களாயும் அமைத்துச் சொல்வது. ஒரு கோட்டன் என்ற விநாயக வணக்கப் பாடல் இரண்டின் தொடக்கத்திலும் பெய்யப்பட்டுள்ளது. பின்னர் சுபக்கத்தில், பரசிவ வணக்கம், நூல்வழி, நுதலிய பொருள், அவையடக்கம் என 5 பாடல்கள் உள்ளன. இவ்வைந்துக்கும் உரை எழுதத் தொடங்குமுன் இவர் பரபக்கத்திலிருந்து நடராசர் (ஆதிநடு அந்தமிலா) சிவசத்தி (ஈசனருள் இச்சை அறிவு), கந்தன் (அருமறையாகமம் அங்கம்) அவையடக்கம் (நீடு புகழ் உலகு தனின்) நூற்கு அதிகாரி நூற்பெயர் (போத மிகுத்தோர்) என்ற ஐந்து பாடல்களையும் விநாயக வணக்கத்தை அடுத்துப் பெய்து உரை எழுதி மேற்செல்லுகின்றார். பாயிரப் பகுதியை மங்கல வாழ்த்து என்று (சிவஞான போதத்தை ஒட்டி) எழுதுகிறார்.

இவர் உரைக்கு, இவர் மாணாக்கரும் ஆதீனத்தில் அடுத்த பட்டத்தில் இருந்தவருமான நந்தி சிவாக்கிரயோகிகள் விரிவான சிறப்புப் பாயிரமொன்று எழுதியிருக்கிறார். இது 156 அடிகளை யுடைய ஆசிரியப்பா. இதனுள் அவர் நூல் வரலாறு, உரை வரலாறு, நூற்பொருள் முதலியன விளக்கமாக உரைக்கிறார். இதன் சாரத்தைச் சில சொற்களால் கீழே குறிப்பிடுவோம். பரமன் கயிலையில் உரைத்த வடமொழிநூலை வெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர் சிவஞான போதம் என்று தமிழால் செய்தார். அருணந்தி சிவாசாரியர் அதை விரித்துச் சிவஞான சித்தியாகச் செய்தார். இதன் பொருளைத் தெரிய விரித்துரை செய்க என்று

ஆசாரியர் சொல்ல, சிவாக்கிரயோகி உரை வகுத்தார். பிரமாணம் மூன்று. பிரபஞ்சம் ஒரு முதல்வனையுடையது; அவன் அரனே. அவன் ஆன்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களுண் டாக்கி, பிரபஞ்சத்தில் வியாத்தியாய், நீங்கியும் வேறாயும் நிற்பவன். ஆன்மாக்கள் கருமப்பயனைத் துய்த்துவாழும். ஆன்மா காயம் இந்திரியம் பிராணவாயு அந்தக்கரணம் இவற் றினுக்கு வேறு. நித்தியவிபு, ஆணவத்தடையால் பரதந்திரம் உடையது. பந்தத்தால் சிற்றறிவுடையவன்; சத்தும் சித்துமாய் நின்ற அரன், அசத்தும் சடமுமாய்ப் பரவிய பிரபஞ்சத்துக்கு அன்னியன், இரண்டினையும் உன்னி அறிதற்கு உணர்வுடை யோன், இருவினையொப்பு மல பரிபாகம் நிகழ பாசம் ஒருவி, பதியுடன் வேறிலா ஆசறும் அனுபவம் அடைவது, பசு ஞானத் தாலும் பாச ஞானத்தாலும் அடையவரும் பதியைப் பதிஞானத் தால் கண்டு, காண்பவனும் காட்சியும் காட்சிப் பொருளும் அழிந்தழியாமல் தன்மயமாகத் தான் நிற்பது; பிரபஞ்சமெல் லாம் அசத்தியம், சுதந்திரம் தனக்கென இல்லை பணியெலாம் சிவன் பணி. அறிவு கொடுத்தருள் சிவனை மறத்தல் அரிது. இது அந்தரியாகம். சற்குரு சரணம் அடைந்து, திருக்கோயிலிடத்தும் அடியவர் குழாத்திடத்தும் வழிபட ஞானம் தழைத்திடும். இப்படி அனேக மெய்ப்பயன் விளங்க, கருத்து, பதப் பொருள், காட்டு எனப் பொருள் விரித்து, அன்பருக்கு ஞானம் என்னும் நல்லமுதீந்தனன் (சிவாக்கிரயோகி). சதாசிவதேசிகன்* சந்தான தீபம். இவர் வருணம் ஆச்சிரமம் பெயர் குணம் இல்லாமையைக் காட்ட அதிவருணாச்சிரமி என்று பெயர் பெற்றார். இவர் தவ முனிவர் நிறைந்த மணி மண்டபத்தில்,

புலியுரி யாசனம் பொற்புற விருந்து
நெஞ்சுறுபத்தி நெறிகொணம் பிக்கை
வஞ்சக மின்மை வழுத்திய குருவின்
வாய்மை மறாமை மனத்தா தரவு
காய்புல னடக்கல் கமையுட னுண்மை
மெய்ப்பரி சுத்தம் விழுத்தவ முயற்சி
அத்தகு நன்றி யறிதல் பலகால்
தத்துவ ஞான சாத்திரம் கேட்கையென்
றித்தகையிலக்கணம் இசைந்தமா ணாக்கருக்

---

* இவர் சிவாக்கிரயோகிக்கு மூன்றுதலைமுறை முற்பட்ட ஆசாரியர், வடமொழிச் சிவஞான போத விருத்தி என்ற உரை செய்தவர்.

காகச் சரிதை யாதி நாற்பாதமும்
போதித் தருளும் புலமையின் தலைமையும்
தவமறைந்த தல்லவை தான் செய்யாமையும்
அவத்தைசெய் மந்திர வாத விவேகக்
கிரியைக ளின்மையும் கிளர்புல னடக்கலும்
அறுபகை தடிந்த ஆற்றலும் அமைவும்
இறலருந் தாமதம் இராசத மின்மையும்
எல்லோ ரிடத்து மின்பொதுப் பார்வையும்
பல்சம யத்தினுண் மைப்பய னறிகையும்
மருவு மாணாக்கர் மனகுண தோடமும்
சகலசாத் திரத்தின் சந்தேகந் தவிர்க்கையும்
அகமகிழ் சிவானந் தானு பூதியுமென்
றிவ்வகை யனைத்தும் இயல்புற வுடைத்தாய்த்
தெய்வத வடிவு சிறந்தன னாகி.

*வீழியம்பதியில், காழிஞானக் கவுணியன்போல் சைவ நன்னெறி தழைவித்து, சிவாக்கிரயோகி என்றும் சிவக்கொழுந்து என்றும் பெயர் படைத்த தேசிகர்.*

*இவ்வளவு சிறப்பாகத் தம் ஆசாரியரை மாணக்கர் வருணித்திருப்பது இலக்கிய உலகில் அபூர்வம்.*

*இனி, இங்கு சிவாக்கிரயோகிகள் தம் உரையின் அவதாரிகையில், தக்ஷிணாமூர்த்தமாகச், சாத்திர வியாக்கியான முத்திரா சகிதமாய்ச் சேவை பிரசாதித்தருளிய ஸ்ரீகண்ட பரமேசுரனைப் பரமகிருபாளுவான நந்திகேசுரர் துதித்து 51 கேள்விகள் கேட்டதாகவும், பெருமான் மகிழ்ந்து, அவருக்கு ரௌவராகமத்தில் உள்ள சிவஞான போதச் சுலோகம் பன்னிரண்டையும் உபதேசிக்க, அவர் சனற்குமாரருக்கு உபதேசிக்கப் பின்னர் பரம்பரையாக மெய்கண்டார் வரையில் ஞான உபதேசம் வளர்ந்தது என்று எழுதுகிறார். இந்த 51 கேள்விகள், வடமொழி அட்சரங்கள் 51 ஆகையால், 51 ஆக எழுந்தன. இனி, மெய்கண்டார் கட்டளைப்படி அருணந்தி சிவாசாரியர் இச்சிவஞான போதப்பொருளை விரித்து உலோகானுக்கிர கார்த்தமாகச் சிவஞானம் சித்திக்கும் பொருட்டாகப் பண்ணினதாகையால், நூல் சிவஞான சித்தி என்று பெயர் பெற்றது என்பார். 'இதன் பொருளை அளப்பரிதாயினும் என்னுடைய குருசரணா நியோகிக்கையினாலே, குருவாக்கிய லங்கன பயத்தினாலே சமுத்திர கலச நியாயமாக நான் அறிந்தளவு உரையிடுகின்றேன்' என்கிறார். ஒரு கருத்து: சைவத்திற்குத்*

தாண்டவ பூஷணன் என்னும் மூர்த்தியாயும், பாசு பதத்திற்குத் திருநீறும் சடையும் தரித்த மூர்த்தியாயும், மாவிரதத்திற்கு என்பு மாலை தரித்த மூர்த்தியாயும், காளாமுகத்திற்கு படிகம் புத்திர தீபம் தரித்த மூர்த்தியாயும், வாமத்திற்கு அக்கினியும் உபவீதமும் தரித்த மூர்த்தியாயும், பைரவத்திற்குத் தமருகமும் சிலம்பும் தரித்த மூர்த்தியாயும், இவர்களெல்லாம் முக்கண்ணும் உடையரா யிருத்தலால், அவ்வவர் பொருளாய் வேறாம் குறியது உடைத்தாய் என்று சிறப்பித்தார் என்று அறிக (அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் என்ற பாடல்). யோகிகள் காலத்தில் இங்கு குறிப்பிட்ட காளாமுகம் முதலான சமயங்கள் வழக்கில் இல்லை. இருப்பினும், இவர் சம்பிரதாய சாஸ்திரங்களையொட்டியே இவ்வாறு உரை எழுதுகிறார் என்று கொள்ள வேண்டும்.

## அளவைப் பகுதி

இச்சைவ சாத்திரங்கள் தோன்றிய காலத்தில் தத்துவ விசாரணைக்குத் தர்க்க அறிவு இன்றியமையாதது என்ற கருத்து நிலவியிருந்தது. அதனால் அருணந்தி சிவம், அடுத்து 14 பாடல் களால் அளவை இலக்கணம் சொல்லுகிறார். இந்நிலையை, சித்தியாரில் மட்டுமன்றி, 14ஆம் நூற்றாண்டில் தத்துவப்பிரகாசர் செய்த தத்துவப் பிரகாசத்திலும், சிவாக்கிர யோகிகளே செய்த சிவநெறிப் பிரகாசத்திலும், இவருக்குச் சில ஆண்டுகளுக்கு முன் மறைஞான சம்பந்தர் பாடிய பதிபசுபாசப் பனுவல் (88 குறட்பாக்கள்) என்ற நூலிலும் காணலாம். இங்கு சிவாக்கிர யோகி அளவை யிலக்கணப்பகுதி உரை மிகவும் விரிவாக எழுதி யிருக்கிறார். தமிழில் அளவையறிவதற்குச் சிறப்பான நூல்கள், இவர் உரையும் மறைஞானதேசிகர் உரையுமாகும். தோல்வித் தானம் 22 என்பதில் இறுதித்தான விளக்கம் பிரதிகளில் விடு பட்டுள்ளது. 13ஆம் பாடல் உரையில் தாம் சித்தாந்த தீபிகை என்றொரு நூல் செய்ததாகச் சொல்கிறார்; நூல் இன்று இல்லை. நையாயிகன், பௌத்தன், பிரபாகரன், பாட்டன், உலகாயதன், மீமாஞ்சகன், பௌராணிகன் முதலியோரை மறுக்கிறார். 6ஆம் பாடலுரையில் மறைஞான சம்பந்தருடைய பதிபசு பாசப்பனுவல் 7 பாடல்களை இவர் பெய்திருப்பது குறிப்பிடத்தக்கது. அளவைப் பகுதியின் தொடக்கத்தில் பின்வரும் பாடலைத் தருகிறார்:

இராக மறியார் இசைப்பயன் தனாறியார்
தராதர மறியார் சற்கா ரியமறியார்
ஓரார் அளவை ஒரு பயனும் தாமறியார்
ஆராய்ந் தளவை அறிந்து கொள்ளீரே.

இது மறைஞான சம்பந்தர் பாடிய அளவை விளக்கம் என்ற நூற் பாடல் போலும் (நூல் இன்று இல்லை). அளவைப் பகுதி யின் இறுதியில் ஒரு சிறப்புப் பாயிரப்பாடல் உள்ளது. (நந்தி சிவாக்கிரயோகி செய்ததாகும்):

> அளவை காண்டல் அனுமானம் ஆகமம்
> உளவை மேலுரை செய்வதி தற்குளாம்
> விளைவு தோன்ற விளம்பினன், அன்பர்கள்
> தெளியு மாறு, சிவாக்கிர யோகியே.

**பன்னிரு சூத்திரப் பகுதி**

சிவாக்கிரயோகிகளுடைய உரை ஒரு சிறந்த சைவசித்தாந்த உண்மைக் கருவூலம், ஆகம சாரம். அளவற்ற பொருள்களை விளக்கிக் கொண்டு போகிறார், பரபக்க விளக்கங்கள் எண்ணற் றன. அங்கம் பிரத்தியங்கம் சாங்கம் உபாங்கம் (சூ. 1.47) என்பன, பிசாசலோக வாசிகள் முதலான பல லோகவாசிகள் அவர்களின் குணங்கள் (சூ.2.58), நால்வகைச் சத்திநிபாதம் (சூ.8.2), வைராக்கிய ஏது பத்து (சூ. 8.2), பொய்தரு சமயிகளும் அவர்கள் அடையும் பதமும் அதற்கு ஏதுவான ஞானபேதங்களும் (சூ. 2.73), லக்ஷணை ஆறுவிதம் (சூ. 51) என்ற விளக்கங்கள் சிறப்பான சில. மூன்றாம் சூத்திரவுரையில், நான்கு பாடல்களையும் ஒன்றாக வைத்தே உரை எழுதுகிறார்.

பின்னும் குறிப்பிடத்தக்க சில விளக்கங்கள்: "சக்தி என்றது ஸ்திரீரூபமோ அல்லது புருஷரூபமோ என்னில் -

> ஏகைவ சக்தி: பரமேச்வ ரஸ்ய
> பின்னா சதுர்த்தா விநியோக காலே
> போகே பாவனீ புருஷேஷு விஷ்ணு:
> கோபேஷு காளீ சமரோஷு துர்கா.

என்பது காண்க (சூ. 2.56 உரை). வைத்தியநாதன் - சுவர்க்க நரகமாகிற ஔஷதத்தைக் கொடுத்துக் கருமங்களாகிய வியாதி களை நீக்கும் வைத்தியநாதன் என்றது தேகத்தில் வியாதியைப் போக்குகிறவனுக்கு வைத்தியனென்ற பேராகையால், தேகத்துக் குக் காரணமாகிய கருமத்தைப் போக்குகையால் வைத்தியருக்கும் சுவாமி என்பது கொண்டு வைத்தியநாதன் (சூ. 2.34). 'பஞ்ச மந்திரம் வடிவமாகத் தந்திரம் சொன்னவாறு' (1.59) என்ற தொட ருக்கு விளக்கமாக, பஞ்சப்பிரம மந்திரம், ஷடங்க மந்திரம் என்பவற்றை விளக்குகிறார்: 'சிவனுக்கு மந்திரதனுவும் மாயா

தனுவும், இல்லாமல் சித்சொரூபமேயாய் இருக்கவும், சாதக ருடைய தியான பூஜைகள் நிமித்தமாகச் சொல்லப்பட்ட பஞ்ச மந்திர தனு உபசாரமல்லது சுவபாவம் அல்ல. பஞ்ச மந்திர மாவது அனுக்கிரக திரோதான சங்கார திதி சிருஷ்டியார்த்தமாக ஈசான தத்புருட அகோரவாமதேவ சத்யோசாதங்கள் மூர்த்தா வக்த்ர இருதயகுஹ்ய மூர்த்திகளாகச் சொல்லப்பட்டது.

'தான் சர்வோத்கிருஷ்டமுமாய் தத்பதத்தை ஆன்மாக் களுக்குக் கொடுக்கையினாலே ஈசான மூர்த்தா என்றது. பிந்து நாத விருத்தியான சப்த ஜாலங்களை ஜகத்திலே பூரிக்கையினாலே தத்புருட வக்த்ரம் என்றது கோரம் என்றது அஞ்ஞானம். தத் விரோதியாய் இருக்கிற ஞானம் அகோரம், அகோரம் இருதய பரியாயமாகையால் அகோரம் இருதயம் என்றது. சர்வான்மாக் களுக்கும் பிந்துவிருத்தியாகிய விஞ்ஞானாதிகளை உற்பவிக்கை யாலும், இது சூக்குமகிருத்தியம் ஆகையினாலும் வாமதேவ குஹ்ய மென்றது. விஞ்ஞானாந்த கோசமாகிய காரணதேகம் ஆன்மாக்களுக்கு முதலுண்டாயுள்ள அளவில் மனோமயாதி கோசத்திரயமான சூக்கும தூல சரிரங்களைத் தம்முடைய இச்சா மாத்திரத்தினாலே மந்திரேசுவர மந்திரங்களை அதிஷ்டித்து உடனே உண்டாக்குகையினாலே சத்தியோசாத மூர்த்தி என்றது.

'இந்த மந்திரங்கள் ஐந்தும் ஐந்து சக்திகள். ஹாரிணி ஜனனி ரோதயித்ரி என்னும் மூன்று சத்திகளும் பரிக்கிரக சத்திகள்; ஆகச் சத்திகள் எட்டு. இதில் ஹாரிணியானது. ஆன்மாக்களுடைய தனுகரணாதி சர்வத்தையும் மாயையிலே உபசங்காரம் பண்ணு வதும் செய்து பக்குவ மலரைப் பரவசத்திலே அடைவிப்பிக்கை யும் செய்யுமாகையால் சங்காரமும் அனுக்கிரகமும் ஹாரிணி யினுடைய கிருத்தியமாய் இருக்கும். ஜனனியானது: ஜகத்துற்பத்தி யைப் பண்ணுகிற சுவபாவமாயிருக்கும். ரோதயித்ரியானது: திதிகாலத்திலே ஆன்மாக்களுக்குப் போக நியமனத்தையும், பிரளயத்திலே சகலர் பிரளயாகலர் விஞ்ஞானகலர் இவர்களை மாயா அதோ பாகத்திலும் மாயா மத்தியதையிலும் மாயோபரி யிலும் வாசநியமந்ததையும் பண்ணுவிக்கும். ஆகையால் ஸ்திதி யும் திரோதானமும் ரோதயித்ரியினுடைய கிருத்தியமாயிருக் கும். இஃதன்றியும் இருதயாதி ஆறங்கமும் மூர்த்தாதிகளைப் போல உபசாரமே. அவையாவன:

'அஸ்தித்வம்: அஃது உண்மையான சுபாவசத்தி, அது இருதயம். சர்வோத்தர குணமாகிற நித்தியத் திருத்தியாகிற சத்தி

*சிரசு. மாயையில் சர்வரையும் வசீகரித்துக்கொண்டு தன்னொத்த தாயிருக்கும் வஸவ்ருத்தியாகாமல் இருக்கிற சத்தி சிகையுமாம். தன்னையும் தானே ரட்சித்துக்கொண்டு அன்னியரையும் ரட்சிக் கிற சத்தியே கவசம். சர்வ கவசத்திற்கும் மூலமாயிருக்கிற சத்தி நேத்திரம். பக்தருடைய அஞ்ஞானங்களை ஹரிக்கிற பிரதாப சத்தியே அஸ்திரம். இவ்வாறு உபசாரக் கற்பனை ஒழியச் சிவ னுக்கு வாஸ்தவமாகச் சரீரமில்லை.'*

*முதற் சூத்திர உரையிறுதியில், நந்தி சிவாக்கிர யோகிகள் செய்த சிறப்புப் பாயிரப் பாடல்கள் இரண்டு பெய்யப் பெற் றுள்ளன:*

பெருவாழ்வுமிக்க நிலமீ திருக்கை
    பெறுவார் தமக்க ருளதாம்
பரவாத நிக்கி ரகமே குறித்த
    பலசாத கர்க்கு தவியாம்
கருவேர் பறித்த பெரியோர்கள் முத்தி
    கையிலாம லகக்க னியதாம்
திருவீழி யுற்ற சிவயோகி செப்பு
    சிவஞான சித்தி யுரையே.

புண்ணியன் சிவாக்கிர யோகி புகழ்சிவ ஞானசித்தி
நண்ணுமுற் சூத்தி ரத்தின் நலந்தரு பொருளை யாய்ந்து
திண்ணிய வுலகிற் கேது திட்டாந்த பூர்வ மாக
அண்ணலா மரன்கர்த்தாவென் றறைந்திட வுரைசெய்தானே.

*நூலிறுதியில் இரு பாடல்கள் உள்ளன.*

ஒருமலமு மிருவினையுங் குணங்கள் மூன்றும்
    உட்கரண மோர்நான்கும் புலன்க ளைந்தும்
வருபகைக ளோராறும் பவங்க ளேழும்
    மாய்ந்திடப்பே ரின்பமெட்டும் வகை தாகத்ய
தருவதுவாய்ப் பரஞான மூர்த்தி, தானே
    தாரணிமேற் குருவுருவந் தரித்து வந்தோன்,
திருவருளாற் சிவஞான சித்தி யென்னும்
    தொன்னூலுக் குரை விரித்தோன் தெரிந்த வாறே.

இரவியெழுந் திருளதனை நீக்குவபோ லென்றும்
    இறைஞ்சுமடி யவர்மனத்தி னிருளதனை நீக்கக்
கருணைபொறை தவந்தருமங் கல்விசிவ ஞானம்
    காசினியி லொருவடிவாய்க் காட்டியபோற் றோன்றிப்

பரசமய கோடார்மே னின்று நெறி கொண்டு
பலகலையு முணர்ந்துசைவ பரிபால னாகித்
திரமருவு சிவஞான சித்திதரு பொருளைத்
தெளிந்திடவே விரித்துரைத்தான் சிவாக்கிரதேசிகனே.

இவ்வண்ணமே, ஒவ்வொரு சூத்திர இறுதியிலும் தனியான சிறப்புரை இருந்ததா என்பது தெரியவில்லை.

இங்கு ஒரு கருத்தை மட்டும் குறிப்பிட்டு இவ்வாய்வை முடிக்கலாம். சிவாக்கிரயோகிகள் கொண்ட சித்தாந்தக் கருத்துக்கும் மெய்கண்ட பரம்பரையில் வந்த சைவ சித்தாந்தக் கருத்துக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. ஒன்று, யோகிகள், பதியே படைப்புக்கு முதற்காரணமும் நிமித்த காரணமும் என்பர். இது சைவ சித்தாந்தத்துக்கு உடன்பாடல்ல. முதற்காரணம் மாயை; நிமித்த காரணம் சிவம், துணைக் காரணம் சத்தி என்பது மெய்கண்ட சாத்திரம். மற்றொன்று இருவினையொப்பு பற்றியது. இருவினைகளும் தனித்தனியே அனுபவித்துக் கழிய வேண்டுவன என்பது மெய்கண்ட சாத்திரம். ஆனால் யோகிகள், புண்ணிய கருமங்களும் பாப கருமங்களும் சம பலமாயிருந்தால், இந்த இரண்டு கருமங்களும் சந்தோபசுந்த நியாயமாக நசிக்கும் என்பர் (சிவநெறிப் பிரகாச உரை பாடல் 145). மெய்கண்ட சாத்திரக் கருத்துப்படி ஒன்று மற்றொன்றை நசிக்கச் செய்யாது; இரண்டும் அனுபவித்தே தீர்க்கவேண்டும்.

## பதிப்பு

இது வேறு ஐவர் உரையோடு (இவ்வத்தியாயத்தில் ஆராய்கின்ற மறைஞான தேசிகர், ஞானப்பிரகாசர், நிரம்ப அழகிய தேசிகர் என்னும் மூவரும்; 18ஆம் நூற்றாண்டுக்குரிய சிவஞான யோகிகள், 19ஆம் நூற்றாண்டுக்குரிய சுப்பிரமணியதேசிகர் என்னும் இருவரும் ஆகிய ஐவர்) கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் பதிப்பாக அறுவருரை என்ற பெயரில் 1888-9 ஆண்டுகளில் மூன்று பாகங்களாக வெளிவந்தது. அங்கு முதலில் மறைஞான தேசிகர் உரையும் அடுத்துச் சிவாக்கிரயோகிகள் உரையும் அச்சிடப்பெற்றுள்ளன.

இவ்வுரையின் சிறப்புக் காரணமாக, இது பகுதி பகுதியாக, சைவ சித்தாந்த சமாஜத்தின் மாதப் பத்திரிகையாகிய சித்தாந்தம் இதழில் பாடல் 121 முடிய (224 பக்கங்களுக்கு மேல்) எம்மால் வெளியிடப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது

ஏற்பட்ட காகித நெருக்கடியால் அவ்வெளியீடு அந்த அளவோடு நின்றுவிட்டது. இப்பதிப்பினுள் வடசொற்றொடர்களுக்கு உரையும் விளக்கக் குறிப்புரையில் அமைக்கப் பெற்றிருந்தது. பின் திருவாவடுதுறை யாதீனப் பதிப்பு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளையால் 1965இல் வெளியிடப்பட்டது. இப்பதிப்பு, முதலியார் பதிப்பை அப்படியே எடுத்தமைத்ததோடு, சமாஜப் பதிப்பில் கண்ட எமது குறிப்புரையையும் தழுவிக்கொண்டது.

### பிற சாத்திர உரைகள்

சிவாக்கிர யோகிகள், சித்தியார் உரையன்றி, அதற்கும் முன்னதாக, வடமொழிச் சர்வ ஞானோத்தரம், தேவிகாலோத்தரம், அரதத்தாசாரியர் செய்த சுருதி சூக்திமாலை மூன்றுக்கும் தமிழுரை செய்தார் என்று அவர் வரலாறு கூறும். இம்மூன்றுரைகளுமே இன்று கிடைக்கவில்லை.

### சர்வ ஞானோத்தரம்

தமிழில் செய்யுள் நூலாக 14ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்று பல தமிழ் உரைகளுடன் அச்சிடப் பெற்றிருக்கிறது. 80 பாடல்கள் உடையது. வடமொழிச் சர்வ ஞானோத்தரத்தைச் சிவஞான சுவாமிகள் மிகவும் போற்றித் தமது சிவஞான பாடியத்தில் ஆறாம் சூத்திரவுரையில் அதன் சுருக்கக் கருத்தை எழுதியிருக்கிறார்.

### தேவி காலோத்தரம்

தமிழில் 72 செய்யுள் கொண்ட நூலாகப் பல உரைகளுடன் பலமுறை அச்சிடப் பெற்றுள்ளது. (காலம் 14ஆம் நூற்றாண்டு). வடமொழிநூலுக்கு ரமண மகரிஷி உரையோடும் ஒரு பதிப்பு வெளிவந்துள்ளது. தமிழ் நூலை மதுரைச் சிவப்பிரகாசர் தமது சிவப்பிரகாசப் பேருரையில் மேற்கோளாய்த் தருகிறார்.

சுருதிசூக்திமாலை பல தமிழுரைகளோடு வெளிவந்துள்ளது.

### சித்தியார் பரபக்க உரை

யோகிகள் சித்தியார் பரபக்கத்துக்கும் உரை செய்தரென்று சுபக்கத்துக்கு அவர் எழுதிய உரையில் அவர் கூற்றுக்களால் அறிகிறோம். ‘ஒரு பொருள் ஒருவன் இன்றி என்ற (சூ. 1.7) பாடல் உரையில், ‘இதன் விஸ்தாரமும் மறுப்பும் பரபட்சத்தில் சொன்னோம். அவண் உணர்க’ என்று எழுதுகிறார். சூ. 1.9, 12 உரையும் பார்க்க. அவ்வுரை இன்றுவரை கிடைக்கவில்லை.

## நந்தி சிவாக்கிர யோகிகள்

இவர் சிவாக்கிர யோகிகள் செய்த சிவநெறிப் பிரகாசத்திற்கு உரை எழுதியவர்; அவருடைய சீடர்; தமது ஆசாரியரிடத்து உபதேசம் பெற்றுத் தமது ஆதீன சம்பிரதாய கிரந்தங்களையும் கொள்கைகளையும் செய்தவராகிய அவரிடமே நேரில் கேட்டறியும் பேறும் பெற்றவர். இவரையே அவர் தமக்குப் பின் ஆதீனத்தலைவராய் இருக்குமாறு நியமித்தார். நந்தியோகிகள் சிவநெறிப் பிரகாசத்திற்கு உரை எழுதாமல் விட்டிருந்தாரானால், சிவாக்கிரயோகிகளுடைய கருத்தை இக்காலத்தில் புரிந்து கொள்வது கடினம். ஏனெனில் இவருடையது வேறு பரம்பரை. திருக்கயிலாய பரம்பரை என்று வழங்குகின்ற மெய்கண்ட பரம்பரையையே சைவ உலகம் நன்கு அறிந்தது. ஸ்கந்த பரம்பரை என்று சொல்லுகின்ற சிவாக்கிரயோகியின் பரம்பரையைச் சைவ உலகம் நன்கு அறியாது. ஆதலால் இந்தப் பரம்பரையின் மூலநூல் ஒன்றுக்கு, நூல் செய்தாரின் சீடரே உரை எழுதியிருப்பது மிகவும் பயனுடையது.

உரைப் பாயிரமாக இவர் பின்வரும் இரு பாடல்களையும் தொடக்கத்தில் எழுதுகிறார்.

பவநெறியை மாற்றியன்பர்க் கருளான் முத்தி
பாலிக்கப் புவிமீதில் வந்தபர குருவே,
அவநெறியே செறிந்து நெடுங் கால முழன் றதனால்
அல்லலே, நன்மையொன்று மானதில்லை;
தவநெறியைச் சார்கிலே னேனும் உன்றன்
தனுசை* யெனுங் கருணையினாற் சாற்றவேண்டும்,
சிவநெறியை நன்றாகச் சிறியேன் தேர்ந்தே
சேர்வரிதம் சிவானுபவம் சேரு மாறே.

நன்று நன்றிங் குன்மொழிதான், நாசமிலா ஞானநெறி
ஒன்று மன்றோ என்றும் உறுதுணைதான், – மன்றுள்
உறைவான் சொல் லாகமத்தின் உண்மை தமிழால்
அறைவாம், உணர்ந்திடுஅன் பால்.

அளவைப் பகுதிக்கு விரிவாக உரை எழுதுகிறார். இது அக்கால இயல்பு. 179ஆம் பாடல் உரையில் கலை, மந்திரம், பதம், வன்னம்,

---

* தனுசை - மகள் (வடமொழி); ஓர் அரிய ஆட்சி.

புவனம், தத்துவம், ஆகிய ஆறு அத்துவாக்களுக்கும் தெளிவாக விளக்கம் சொல்லுகிறார். அவதாரிகையில் இவர் முக்கியாத்து விதம் என்ற சொல்லை உபயோகிக்கிறார். நூலின் பொருளை ஆராயும்போது முக்கியாத்துவிதம் என்பது சிவாகமங்களின் சாரமாய் இருக்கிற வைதிக சைவ சித்தாந்த அத்துவிதம் என்றே கருதவேண்டும். உரையில் ஆங்காங்கு ஆகமப் பிரமாணங்களைக் காட்டிச் செல்கிறார். 28ஆம் பாடல் உரையில் தோல்வித் தானங்கள் சில விடப்பட்டுள்ளன. இவை சித்தியார் சிவாக்கிரயோகி உரையிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டன. 106ஆம் பாடல் உரையில் தர்மம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம் என்பன விரித்துச் சொல்லப்பட்டுள்ளன. அப்படியே 145 முதலியன.

ஒவ்வொரு பாடலுக்கும் சுருக்கமாக அவதாரிகை கூறிச் செல்கிறார்.

தந்தை சிவக்கொழுந்தைத் தாள்பணிந்தே தான்தனுசை
எந்தை சிவநெறிஇங் கேதென்னச் – சிந்தையால்
தேர்ந்து சிவாகமத்தைச் சேர்த்தா யிரமதனை
ஓர்ந்திடச்சொன் னான்தமிழால் உற்று.

என்ற பாடலை உரையிறுதியில் அமைத்திருக்கிறார். இந்தப் பாடலும் நூல் உரையின் முகப்பில் காட்டிய இரண்டு பாடல்களும், உரையாசிரியர் சிவாக்கிர யோகியினுடைய மாணாக்கி சுவானந்த நாச்சியார் கூற்றாகவும், சிவாக்கிரயோகி கூற்றாகவும் உரையாசிரியரே செய்தனவாகக் கொள்ளவேண்டும். சுவானந்த நாச்சியார், சிவாக்கிரயோகிகளின் குருவாகிய சிவக்கொழுந்து தேசிகருடைய மகள், தேசிகர் இல்லறத்தார். யோகிகள் துறவி. இவ்வம்மையார் தம் தந்தை சமாதியடைந்த பின், இவரை ஞான நெறி உணர்த்தும்படி வேண்ட, அவருக்காக இவர் சிவநெறிப் பிரகாசம் செய்து கொடுத்தார் என்ற வரலாற்றை நந்தி சிவாக்கிர யோகிகள் கூற்றால்தான் நாம் அறிகிறோம்.

நந்தி சிவாக்கிரயோகி, இவ்வுரையையன்றி, சிவாக்கிர யோகிகளுடைய சிவஞான சித்தியுரைக்குச் சிறப்புப் பாயிரங்களாய்ப் பல பாடல்கள் எழுதியிருக்கிறார். அவற்றை முன்னே காட்டினோம் நீண்டதோர் ஆசிரியப்பாவால் சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை விரிவாக உணர்த்தியிருப்பது காணத்தக்கது.

சிவாக்கிர யோகி பரம்பரை ஸ்கந்த பரம்பரை என்பதையும், சீகண்ட பரமேசுவரன், ஸ்ரீகுமாரருக்கு உபதேசம் பண்ண, அவரிட

மிருந்து வாமதேவரிஷி, நீலகண்ட சிவாசாரியர், விசுவேசுவர சிவாசாரியர், சதாசிவ சிவாசாரியர், சிவ மார்க்கப் பிரகாச சிவா சாரியர், சிவக்கொழுந்து சிவாசாரியர் வழியாகச் சர்வஞான னோத்தர உபதேசமும் பிற ஞான உபதேசமும் சிவாக்கிர யோகிக்கு வந்தன என்று இந்தப் பரம்பரையின் வரலாற்றை இவரே கூறுகிறார் (உரையின் அவதாரிகை). இவர் கூற்று அன்றி, இவ்வரலாறு அறிய ஆதாரம் இல்லை.

### சிவப்பிரகாச உரை

இவர் உமாபதி செய்த சிவப்பிரகாசத்திற்கு ஒரு விரிவுரை செய்தாரென்று கருதத் தோன்றுகிறது. தமது குரு சிவஞான சித்திக்கு உரை செய்ய, இவர் அதற்கடுத்த பெரு நூலாகிய சிவப்பிரகாசத்திற்குரை செய்தாரெனக் கருதுதல் பொருத்தமே. திரு அடிகளாசிரியரிடமுள்ள ஒரு சிவப்பிரகாச உரையேட்டை ஆராய்ந்து இக்குறிப்புக்கள் இங்கு சொல்லப்படுகின்றன. இவ்வுரை இன்னும் அச்சாகவில்லை. இந்நூலின் உரையில் உரைப் பாயிரமாக உரையாசிரியர் எழுதியுள்ள பின்வரும் பாடல் கருதத்தக்கது:

நீர்மேவும் சடையானும் உமையும் என்ற
    நித்தஆ னந்தமதம் பொழிவோன் தாளும்
தார்மேவும் ஈறாறு புயத்தான் தாளும்
    தாழ்ந்தேத்தி வாணிபதம் தன்னை நாளும்
சீர்மேவும் படியிருத்தி என்னை ஆண்ட
    சிவக்கொழுந்தோன் இருபதமென் சிரமேற்கொண்டே
ஏர்மேவும் சிவப்பிரகா சத்துக் கென்னால்
    இயன்றபடி உரையதனை இயம்ப லுற்றேன்.

'என்னையாண்ட சிவக்கொழுந்தோன் இருபதம் என் சிரமேற் கொண்டு' என்றதனால் சிவாக்கிர யோகியைக் குறிப்பிட்டதாகக் கொள்ளலாம். அன்றியும், உரையிறுதியில் உள்ள இரு பாடல்கள் இங்கு கருதத்தக்கன.

ஏரார் சிவப்பிரகா சத்தினுக்கிங் கேற்கவே
சீரா ரருணந்தி தேவன்தான் – நீரார்
முடியா னடியுளத்தின் முன்னி யுரையிட்டான்
அடியா ருகந்திடுவ தாய்.

பந்தவினை யறுத்தருளும் பரம ஞானி
பரகுருவாஞ் சிவக்கொழுந்தின் பாதம்போற்றி
நந்தவனம் கற்றமுத கிரணம் போன்ற
நாகரிக னானவரு ணந்தி தேவன்
அந்தமிலா வடகலைநூற் பயனுந் தன்னுள்
அனுபவத்தால் வரும்பயனும் அடைவே சேர்த்துச்
செந்தமிழால் மன்முதலோர் வகுத்த நூலாம்
சிவப்பிரகா சத்தினுரை செப்பி னானே.

இங்கு, பாடல்கள் உரைச் சிறப்புப் பாயிரமாக உள்ளன. முதலிரண்டு பாடல்களும் அருள் - நந்திதேவன் உரை செய்தான் என்று சொல்கின்றன. இரண்டாம் பாடல் பந்தவினை அறுத்தருளும் பரமஞானி பரகுருவாம் சிவக்கொழுந்தின் பாதம் போற்றி' என்று சொல்கிறது. நந்தி சிவாக்கிர யோகியே தம் குருவை இவ்வாறு போற்றிச் சொல்கிறார் என்று கருதுதல் பொருத்தமுடையது. இவர் பட்டத்துக்கு வருமுன் பெயர் அருள்நந்தி என்று இருந்திருக்கலாம். பட்டத்துக்கு வந்தபின் சிவாக்கிர யோகி என்று ஆசாரியப் பெயர் அமையும். பூர்வாசிரமப் பெயரும் சேர்ந்து நந்தி சிவாக்கிரயோகி என்று பெயர் வழங்கிற்றுப் போலும்.

அன்றி, சிவப்பிரகாசத்தின் 'மூவகையாருயிர் வர்க்கம்' என்ற தீட்சை முறைமை கூறும் எட்டாம் பாடலுரையில் இவர் 'இவைகளுக்கெல்லாம் சம்மதி வசனங்களும் அதில் விரிவுகளும் எம்முடைய குருசரணர் பண்ணின பெரிய வியாக்கியானத்திலே கண்டு கொள்க' என்று எழுதுகிறார். குருசரணரென்ற தொடரை இவரும் சிவாக்கிர யோகிகளுமே உபயோகிக்கிறார்கள். அன்றி, எம்முடைய குருசரணர் பண்ணின பெரிய வியாக்கியானம் என்பது சிவாக்கிரயோகி செய்த வியாக்கியானம் ஒன்றுக்கே பொருந்தும். இவற்றால் இவ்வுரையாசிரியர் நந்தி சிவாக்கிர யோகிகளே என்பதில் ஐயமில்லை.

இவ்வுரை முதல் 50 பாடல் ஆகிய பொது அதிகாரத்திற்கு மிகவும் விரிவாக உள்ளது. பின் 50 பாடலாகிய உண்மை அதிகாரத்திற்கு மிகவும் சுருக்கமாக உள்ளது.

### காலம்

ஆசிரியர் சிவாக்கிர யோகியின் மாணாக்கர் எனவே, இவர் காலமும் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி ஆகும்.

# திருவண்ணாமலை - ஞானப்பிரகாசர்

## வரலாறு

இவர் சிவஞானசித்தியார் சுபக்கத்துக்கு உரை செய்தவர். அறுவர் உரையுள் ஒன்றாக இவர் உரையையும் அச்சிட்ட கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் இவர் வரலாற்றைப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்: "யாழ்ப்பாணத்தில் வீணாகானபுரம் சாலிவாடீசுர (திருநெல்வேலி) நகரத்தில் கார் காத்த வேளாளருள் முடிதொட்ட வேளாளராய்ப் பாண்டி மழவர் குலத்தில் முந்நூறு வருஷங்களுக்கு முன் தோன்றி ஞானப் பிரகாசர் என்னும் நாமதேயமுடையவராயிருந்தனர். இவர் திருப்புகலூரையடைந்து ஆதிசைவராகிய பெரிய அண்ணாசாமி குருக்களிடம் தீட்சை பெற்றுச் சிதம்பரவாசியாய்ச் சிலகால மிருந்து, அங்கிருந்து கௌட தேயமடைந்து அவ்விடத்துள்ள சமஸ்கிருத பாண்டித்தியமுற்ற ஓர் பிராமண சந்நியாசியார் தமது சீடர்கட்குத் தர்க்க மீமாஞ்ச வேதாந்த சாத்திரங்களைக் கற்பிப்பதைக் கண்ணுற்று, அவ்விடத்தே அவர்கள் வாசிக்குந் தோறும் சென்று அப்பொருள்களைச் சிந்தனை செய்து வந்தனர். ஓர் நாள் அவ்வாசிரியர் இவரை நோக்கி, 'நீவீர் யாவிர்? நீர் இச் சாத்திரப் பாடங்களின் சாரத்தையுற்றுக் காலந்தோறும் கவனிப்பதில் நன்கு புலப்படுகின்றனவா?' என்று வினவியதற்கு, இவர் கூறிய விடைகளைக் கேட்டு ஆச்சரியமுற்று, இவருக்கு அச் சாத்திரங்கள் முற்றும் கிரமமாய்க் கற்பித்து வந்தனர். ஞானப் பிரகாசர் ஒரு வருடத்திற்குள் வித்தியா பாரங்கதரானமை கண்டு ஆசிரியர் விடையளிக்க, மீண்டும் திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்து அக்காலத்துள்ள மடாதிபரிடத்துச் சந்நியாசம் பெற்றுச் சிவாகமங்களை யோதியுணர்ந்தனர். பின் அங்கிருந்து சிதம்பரமடைந்து பௌஷ்கராகம விருத்தி, சிவஞான போத விருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிராசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோகசாரம்,* சிவயோக ரத்நம், சிவ சமாதி மான்மிய சங்கிரகம் என்பவைகளை வடமொழியில் இயற்றினார். ஓர் நாள் இவரது அன்பரிலொருவர் இவர் இருக்கும் மடத்திற்கு அடுத்த நிலத்தில் நிதிக்குவை இருப்பதாய்த் தெரிவிக்க, அவர் அதனைக் கொண்டு ஓர் திருக்குளமும், அதனருகில்

---

* சிவகோசாரம் என்ற பிற்காலத் தமிழ் நூல் ஒன்று அச்சாகியுள்ளது.

திருமடங்களும் அமைப்பித்தனர். இக்குளம் ஞானப்பிரகாசர் குளமென வழங்கப் பெற்றிருக்கின்றது. அவர் சாயுச்சியமுற்றது பங்குனி மாதம் பூச நட்சத்திரம்."

சண்முக சுந்தர முதலியார் தமக்கு ஞானப்பிரகாசர் உரை யேடுகள் அளித்தோர் வித்துவான் சுந்தரம்பிள்ளை, அரச கல்லூரி உபாத்தியாயர் புரசை பொன்னம்பல முதலியார், சைவக்கிரியா தீக்ஷிதர் சென்னை ஐயாசாமி தேசிகர் என்று குறிப்பிட்டிருக்கிறார். இவர்களே இவருக்கு ஞானப்பிரகாசர் வரலாற்றை உணர்த்தியிருக்கிறார்கள். இந்த அளவு இவ்வர லாற்றைச் சரி பார்ப்பதற்கோ, அறிவதற்கோ வழியில்லை. தம் வாழ்நாள் இறுதிக் காலத்தில் ஞானப்பிரகாசர் சிதம்பரத்தில் தங்கி நகரில் அங்கு அக்கினி திக்கிலுள்ள மிகப் பெரியதாகிய ஞானப்பிரகாசர் குளம் என்று வழங்கும் குளத்தை வெட்டி அப் பக்கத்திலேயே இருந்து வந்தார் என்ற செய்தியை அங்கேயே இன்றும் கேட்கலாம்.

**நூல்கள்**

தாம் சிவஞான போத வியாக்கியானம், பிரமாண தீபிகை, சித்தாந்த சிகாமணி முதலான வடமொழி நூல்கள் செய்ததைத் தமது சித்தியார் உரையில் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த நூல் களில் எவையும் இன்று இருப்பதாகத் தெரியவில்லை. பிராசாத தீபிகையைச் சில இடங்களில் வெள்ளியம்பலத்தம்பிரான் (சு.1700) தமது ஞானாவரண விளக்க உரையுள் எடுத்துக்காட்டு கிறார். நூல் இருப்பதாகத் தெரியவில்லை. இவர் செய்த நூலாக இன்று கிடைப்பது சித்தியார் சுபக்கவுரை. இதன் இறுதியில் இவரைப் பற்றி ஒரு பாடல் காணப்படுகிறது:

**சொல்லில் நாவில் துரிசறும், சோத்திரத்து**
**ஒல்லுமேற் சிவஞானம் உதித்திடும்,**
**செல்லு மெய்அரு ணந்திசெய் சித்திக்கு**
**நல்ல ஞானப்ர காசன் நவிற்றுரை.**

**நூல் இயல்பு**

தாம் செய்யும் உரையின் தொடக்கத்தில் பின்வரும் வணக் கப் பாடலை அமைத்திருக்கிறார்.

**சிவமுற நமக்கு முந்தித் தந்திவத் திரனைச் சிந்தித்து**
**உவமையில்சிவ னொப்பில்லா உமைகுருகுலங்கள் மற்றெண்**

**ணிவர்களை வணங்கி யின்பச் சிவஞான சித்திக்கேற்ப**
**நவமுறும் உரையுரைப்பாம் முன்னுரை நலங்கொள் ளார்க்கே.**

தமக்கு முன் 'திருமறைஞான தேசிகர் ஸ்ரீ சிவக்கொழுந்தா சாரியர் என்னுமிவர்கள் செய்தவுரைகள் விரிந்தபடியினாலே, எழுவாய் பயனிலை பொருள் புணர்ச்சி பொள்ளெனத் தோன்றா வாயினும், தீவிர தீவிரதர புத்திமான்கள் தங்கள் தங்கள் சம்பிர தாயத்துக்கு மாறிச் சில விரோதித்தன் மாத்திலை நீக்கி, நீர் நீக்கிப் பால் கொள்ளும்அன்னம் போலப் பொருள் கொள்வார்களா தலாலும், மற்றையோர் உரைத்த உரைகள் தூரம் போய்ச் சுட்க தர்க்கமாயும் முடியுமாதலாலும், மந்த மதிகட்கு மயக்கம் போக் கும் பொருட்டுச் சுருக்கமாகப் பொருள் சொல்லலாம் என்பது இதன் பொருள் என்று எழுதுகிறார்.

சிவாக்கிரயோகி செய்ததுபோல இவரும் இங்குப் பரபக்கப் பாயிரத்திலுள்ள துதிப் பாடல்களான ஆதி நடு அந்தமிலா, ஈசனருளறிவிச்சை, அருமறையாகமம் என்ற மூன்று பாடல் களையும் எடுத்துவைத்து உரை எழுதுகிறார். அளவையுரையில், 'சுருங்கிய உரையில் உரைக்கில் விபரீதமாய் விரியும், ஆதலால் முன் சொல்லிய முன்னோருரையில் முதிர்ந்தோருரைக்க ஒரு நெறியால் அறிக' என்றெழுதுகிறார்.

இவர் உரை சிவ சமவாதவுரை என்று குறிப்பிட்டு, சிவஞான சுவாமிகள் இதன் சில பகுதிகளுக்கு ஒரு மறுப்புரையும் எழுதி யிருக்கிறார். சிவஞான சுவாமிகள் எவ்வளவு பெரியவராயிருப் பினும், அவர் கூற்றுப் பொருந்தும் என்று சொல்வதற்கில்லை. பெரும் பண்டிதர்கள் தங்கள் புலமையால் எதையும் சாதிப்பார் கள் என்பதற்கு அவரே சான்றாவார். கம்பராமாயணத்தின் நாந்திச் செய்யுளாகிய 'நாடிய பொருள் கைகூடும்' என்ற பாடல் முற்றும் பிழை என்று அவர் காட்டி, முற்றும் சரி என்று பிறகு நிறுவியது அவருடைய புலமையை மட்டுமே காட்டும்; உண்மை யாகாது. அதுபோன்றதே ஞானப்பிரகாசருரை மறுப்பும். ஞானப் பிரகாசரைக் கடும் சொற்களால் வைதும் இருக்கிறார். இவர் உரையைப் பதிப்பித்த சண்முகசுந்தர முதலியார், இவர் உரையில் சைவ சித்தாந்தத்துக்கு மாறாக எதுவும் இல்லை என்று எழுதி யிருக்கிறார். அன்றியும், இவருரையை நன்கு பயின்ற ஆன்றோர், பிறர் உரையில் கிடைக்காத சமய நுட்பங்களும் தெளிவும் இவருரையில் அதிகம் கிடைக்கின்றன என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். மேலும் இவர் தாமே, பிறர் தாம் கூறும்

சித்தாந்தக் கருத்துக்களைச் சிவசமவாதக் கருத்தாக மாற்றியும் சொல்வர் என்று தமது உடன்பாடின்மையைக் குறிப்பிடுகிறார்.

"சில ஆதுனிக சைவாசாரியர் யாம் சொல்லும் இந்த முத்தியைச் சாரூபமுத்தி சாற்றும் சிவ சமவாதி முத்தியாய்த் திருப்பி, நமது சிவ சித்தாந்த சித்த சிவ சாதிர்ச்சிய சிவ சாத்தி யைக்கிய சிவ சுத்தாத்துவைத முத்தித் துவேஷிகளாய், வேதாந்த விசேஷ சித்த விசிஷ்டாத்து வைதக்கொடி கொளுவிச் சில வியத்தி யத்துவைதப் போலி முத்தி விளம்பி விப்பிரலிம்பராய் விட்டார்கள்." (அறுவருரைப்பதிப்பு பக்கம் 2018-9) சிவ சம வாதத்தைப் போலி என்று சொல்லி சுத்த அத்வைதமே பேசு கிறார் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

இவர் ஆகமங்களிலும் வடமொழி நூல்களிலும் ஆஷ்டப் பிரகரண சம்பிரதாயங்களிலும் பத்ததி ஆராய்ச்சியிலும் மிகவும் வல்லவர். தமது உரையில் அகோரசிவம் சோமசம்பு ஆகிய இருவர் பத்ததிகளையும், சர்வாகமப் பிராமாண்யம், இரத்தினத் திரயம், மோட்சகாரிகை போன்ற பிரகரண நூல்களையும், 18 ஆகம நூல்களையும், இராமாயணம், பிரமாண்ட புராணம், ஞானசித்தி, சதுர்வேத தாத்பர்யம் போன்ற பிற வடமொழி நூல்களையும், பதஞ்சலி, ராமகண்ட குரு முதலியோரையும் மிகவும் அதிகமாக் எடுத்துக் காட்டுகிறார். ஆகமங்களைச் சிவ வசனம் என்பார்; எமது கர்த்தாவினது சைவசித்தாந்த மார்க்கம் என்பார். சிவ சைவாசாரியர், சைவ புராணிக மதானுசாரியர் என்பன சில தொடர்கள். இவர் வட நாடு சென்று கடல்போல் பரந்த வடமொழி நூலறிவும் தர்க்க நூலறிவும் பெற்றார் என்பதில் ஐயமில்லை. சிவஞான சுவாமிகள் இவரைக் குறை சொல்வதற்கு இந்த வடமொழிப் புலமையும் ஒரு காரணமாகலாம்.

அன்னிய சாதியும் தன் சாதியும் என்ற அளவைப் பாடல் உரையில் இவர் தன்னியல்பு, பொது இயல்பு என்ற இரண்டையும் விரித்துக் கூறுகிறார். பதார்த்தங்களைப் பதி, பசு, பாசம் என்ற மூன்றாகப் பிரித்து, பதி பதார்த்தத்தை அநாதிமுத்த சிவன், ஆதிமுத்த சிவன், அபரமுத்தி சிவன் என்ற மூன்றாகவும், பசு பதார்த்தத்தை விஞ்ஞானகலன், பிரளயாகலான், சகலன் என்ற மூன்றாகவும், பாச பதார்த்தத்தை ஆணவம், மாயை, கன்மம் என்ற மூன்றாகவும் பாகுபடுத்தி, இரண்டு இயல்புகளையும் பொருத்தி உரை எழுதுகிறார்.

ஒவ்வொரு பாடலுக்கும் அதன் கருத்தைத் தொடக்கத்தில் உரைக்கிறார். முறுகுதல், தர்ப்பித்தல், செபித்தல், குறு குறிப் பேவல், ஊகித்தல், செபித்தல், கேட்டுக் கிரகித்துச் சிந்தித்துத் தெளிந்து தியானித்தல், சமாதித்தல், சாட்சாத் கரித்தல் என்பன நித்திய கன்மம். விருத்தர் எழுபது வயதுக்கு மேற்பட்டவர். பல இடங்களில் இவர் உரை எளிதான உரையாடல் போல அமைந் துள்ளது. அறியாமை அறிவகற்றி என்ற பாடலுக்கு மிகவும் விரிவான கட்டுரை போன்ற ஓர் உரை எழுதியிருக்கிறார். முத்தி வகைகளைக் கூறுமிடத்து 35 வகை வாதிகளுக்கு இது இது மோட்சம் என்கிறார். சில இடங்களில் பாடல்களின் வரிசையை மாற்றி உரைக்கிறார். தீக்கை வகைகளைப் பின்னும் பெருக்கி உரைக்கிறார். ஓரிடத்தில் கருத்துக்கள் விரிவாகச் சொல்லிவிட்டு இனி அப்பால் நடப்போம் என்கிறார். பத்தாம் சூத்திர உரையில், 'முன் பின் சில இடங்களிலேயும் மிகுந்து கூறியது கூறலைக் குறித்தும் திரிபதர்த்தஞ் சூக்கும ஸ்வரூப பரீக்ஷை பண்ணாது லோகச் சொற்சுட்டு மட்டுக்கட்டு விட்டு முட்டத் தொட்டுப் பரீக்ஷை பண்ணுதலானும் உரை விரித்துரையாதது உணர்ந்து கொள்க' என்கிறார். பல இடங்களில் பொருள் வெளி என்று எழுதிக் கொண்டு போவார். சில இடங்களில் ஒரே பாடலில் சில தொடர்களுக்கு மட்டும் எழுதிவிட்டு மற்றது வெளிப்பொருள் என்று எழுதுவார்.

ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி, ஸ்ரீமத் மாணிக்கவாசகர், ஸ்ரீமத் அருணகிரிநாதர் என்னுமிவர்கள் தேவாரத்தும் திருவாசகத்தும் அலங்காரத்தும், 'வழித்தலைப்படுவானுன்னை முயல்கின் றேன் உன்னைப் போல் என்னைப் பாவிக்கமாட்டேன்' என்றும், 'ஆனந்த வார்கழலே ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளி ருக்கும்' என்றும், 'என்னை யுன்னில் ஒன்றாய் விதித்து' என்றும் இப்பாவனையைத் தானே படித்தார்கள் என்று ஆறாஞ் சூத்திர இறுதியில் இவர் எழுதியிருப்பது காணத்தக்கது.

இவரும் சிவக்கிரயோகி போலச் சில சில இடங்களில் ஆகமப் பிரமாணங்களை விரிவாக எடுத்துக் காட்டுகிறார். அன்றியும், வடமொழித் தொடர்களைத் தமிழ் எழுத்தாலேயே அடுக்கி எழுதுவது இவருடைய இயல்பு.

தமிழ் நூல்களில் இவர் மேற்கோள் காட்டுபவை தொல் காப்பியம், நன்னூல், திருமந்திரம், தேவாரம் திருவாசகம், ஞானா மிர்தம், கோயிற்புராணம், சிவப்பிரகாசம், திருவாதவூரர்

புராணம், சிவதருமோத்தரம், தத்துவக்கட்டளை என்பன. பிந்திய இரண்டு நூல்களையும் இவர் குறிப்பிட்டிருப்பது மிகவும் சிறப்பு. திருவாதவூரடிகள் புராணம் செய்த கடவுள் மாமுனிவர் இவருக்கு முந்தியவர் என்ற செய்தியும் (15ஆம் நூற்றாண்டு) 16ஆம் நூற்றாண்டிலேயே வாழ்ந்த மறைஞான சம்பந்தர் செய்த சிவதருமோத்தரத்தை இவர் எடுத்துக் காட்டுவதும், வரலாற்றறிவுக்குப் பயனுடைய செய்திகள்.

## காலம்

இவருடைய காலம் என்று திட்டமாய்ச் சொல்வதற்கு ஆதாரம் இல்லாவிட்டாலும் கூட, இவர் சிவதருமோத்தர ஆசிரியரான மறைஞான சம்பந்தருக்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு. மறைஞான சம்பந்தர் காலம் 16ஆம் நூற்றாண்டின் முற்பாதி. அவருடைய சீடரான மறைஞான தேசிகரையும், சிவாக்கிரயோகியையும் இவர் குறிப்பிடுகிறார். இவ்விருவரும் சம காலத்தவர்களாய் 1550-75இல் வாழ்ந்தவர்கள் என்று காட்டியிருக்கிறோம். இவ்விருவரையும் குறிப்பிடுகின்ற நம் ஞானப் பிரகாசர் நிரம்ப அழகிய தேசிகரைக் குறிப்பிடவில்லை. இவர் காலத்தில் அழகியார் உரை எழுதவில்லை; அல்லது எழுந்தாலும் உடன் காலம் என்றே கருதவேண்டும். ஆதலால், இவர் உரையின் காலம் அழகியார் காலமாகிய 1550-75ஐ ஒட்டிய காலமே என்று கொள்ளுதல் பொருந்தும். இவர் திருவண்ணாமலை மடத்தில் தம்பிரானாக ஆகிப் பிறகு தில்லையிலே வந்து தங்கிப் பொதுப் பணிகள் செய்து கொண்டிருந்து காலமானார் என்று தெரிகிறது. எந்தத் தலைமைக்கும் வரவில்லை. பதிப்பித்தவர், ஞானப் பிரகாசர் காலம் 300 ஆண்டுகளுக்கு முன் என்பதும் இந்த எல்லைக்குப் பொருத்தமே.

## பதிப்பு

1889-90 ஆண்டுகளில் கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார் அச்சிட்ட பதிப்பே முதல் பதிப்பு. அதன்பின் இரு முறை அழகாக அச்சிடப் பெற்றுள்ளது; ஒன்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இணுவில் நடராஜ ஐயரால் பரிசோதித்துப் பெருமாள் நாடாரால் திருப்பத்தூர் சின்னைய நாயக்கர் யந்திர சாலையில் அச்சிற் பதிக்கப்பட்டது. சர்வஜித் வருடம் மகர ரவி (1888). ஆனால் நூல் அச்சிலில்லை; நூலும் இன்று கிடைக்காது. நூலின் சிறப்பை நோக்கும்போது இதற்கொரு பதிப்பு வரவேண்டியது மிகவும் அவசியமாகும்.

## நிரம்ப அழகிய தேசிகர்

16ஆம் நூற்றாண்டில் எழுந்த பெரும் சைவ சமயக் கிளர்ச்சியின் விளைவாகத் தோன்றிய சிறப்புடைய சமய ஆசாரியரும் புலவர்களும் பலராவர். இவர்களைக் குறித்த செய்தியெல்லாம் இந்நூற்றாண்டு வரலாறு முதல் பாகம் புராண இலக்கியம் என்ற நூலின் முதல் நான்கு அத்தியாயங்களிலும், இரண்டாம் பாகத்து ஆறாம் அத்தியாயம் சைவ இலக்கியம் என்ற பகுதியிலும் விரிவாகச் சொல்லப்பட்டது. இக்காலத்தே சைவ சமயத்தைப் பரப்பவும் வளர்க்கவும் நாடெங்கும் பல சைவ மடங்கள் ஏற்பட்டன. அவ்வாறு ஏற்பட்ட மடங்களிலொன்று துழாவூர் மடம் என்று தெரிகிறது. கமலை - ஞானப்பிரகாசரிடம் உபதேசம் பெற்று, இம்மடத்தில் இக்காலத்தில் பிரசித்தி பெற்ற ஆசாரியராக விளங்கியவர் நிரம்ப அழகிய தேசிகர் என்பவர். இவர் வேதாரண்யம் நிரம்ப அழகிய தேசிகர் என்றும், துழாவூர் நிரம்ப அழகிய தேசிகர் என்றும் சொல்லப்படுகிறார். இவர் வரலாறு பற்றிய அனைத்துச் செய்திகளும் இந்நூற்றாண்டு வரலாறு முதல் பாகம் இரண்டாம் அத்தியாயத்தில் விளங்க உரைக்கப்பட்டன.

அழகியார் புராணங்களும் சாத்திர உரைகளும் செய்திருக்கிறார். புராணங்கள் சேது புராணம் திருப்பரங்கிரிப்புராணம் திருவையாற்றுப் புராணம் என்பன. சேது புராணம் மிக விரிவானது; பெருங்காப்பியத்தன்மை பொருந்தச் சிறப்பாகச் செய்யப்பட்டது. இதுவும் திருப்பரங்கிரிப் புராணமும் பலமுறை நன்கு அச்சிடப்பட்டுள்ளன. திருவையாற்றுப் புராணம் அச்சிடப் பெறவில்லை. இவையன்றி, வேணுவன புராணமும் இவர் செய்திருத்தல் கூடும் என்ற கருத்தோடு அங்கு ஆராயப்பட்டுள்ளது. அவையன்றி இவர், சைவ சித்தாந்த சாத்திரங்களான சிவஞான சித்தியாருக்கும் திருவருட் பயனுக்கும் சிறப்பான உரைகள் செய்துள்ளார். திருவருட்பயனுக்குப் பலர் உரை செய்திருப்பினும், இவர் செய்த உரையே இன்றுவரை பெரிதும் பயிலப் பெறுகிறது. இந்த இரண்டு உரைகளும் அடுத்து ஆராயப் பெறும்.

இவர் வேறு பல நூல்களும் செய்திருத்தல் கூடும்; தெரியவில்லை. இவருடைய மாணாக்கருள் இருவர் புராணம் செய்தவர்கள் - அளகைச் சம்பந்த முனிவர் திருவாரூர்ப் புராணமும், ஞானக்கூத்தர் திவையாற்றுச் செப்பேச புராணமும் செய்தவர்கள்.

## சித்தியார் சுபக்க உரை

சிறப்பான சைவ சித்தாந்த சாத்திரங்களான சிவஞான போதம், சிவஞான சித்தி, சிவப்பிரகாசம் என்ற மூன்றில் சிவப் பிரகாசத்துக்கு மட்டும் 15ஆம் நூற்றாண்டில் மதுரை ஞானப் பிரகாசர்* மதுரைச் சிவப்பிரகாசர் என்ற இருவருடைய சிறப் பான உரைகள் எழுந்திருந்தன. சிவஞான சித்திக்கு 16ஆம் நூற் றாண்டில் தான் சிறப்பான நான்கு உரைகள் எழுகின்றன. சிவஞான போதத்துக்கு உரை எழுதும் அருமை நோக்கி, தொடக்க காலத்தில் உரைகள் எழவில்லை. அடுத்ததான 17ஆம் நூற் றாண்டில் தான் பாண்டிப் பெருமாள் உரை எழுகின்றது.

இக்காலத்தில் தோன்றிய சித்தியார் உரைகள் நான்கும் ஏறக்குறைய சம காலத்தில் நாட்டின் வெவ்வேறு பாகத்தில் எழுந்தன. மறைஞான தேசிகர் தில்லையில் தம் நூலைச் செய்தார். சிவாக்கிரயோகி திருவீழி மிழலையில் தம் நூலைச் செய்தார். நிரம்ப அழகிய தேசிகர் தென்பாண்டி நாட்டில் துழாவூரில் தம் உரையை எழுதினார். திருவண்ணாமலையிலிருந்து தில் லைக்கு வந்த ஞானப்பிரகாசர் தில்லையில் தம் உரையைச் செய் தார். நிரம்ப அழகியார் உரை பிறவற்றிலும் காலத்தால் முற் பட்டதென்று சிலர் சொல்லியிருப்பது பொருந்தாது.

இவர் உரை இறுதியில் காணப்படும் பாடல்கள் இரண் டும், முதல் பாடலில் சித்தன் அம்பலவாணன், தம்முளம் சேர்ந் தமை கூறுகிறார்.

சத்தும் அசத்தும் சதசத்தும் சத்திய மாகிநிற்கும்
சித்தன் திருவம் பலவாணன் என்னுளஞ் சேர்ந்தனனால்
சுத்தம் பயின்ற பதிபசு பாசத்தைச் சொல்லுஞ் சத்தம்
அத்தம் அதற்குள் அனுபோகங் காண்டற் கரிதல்லவே.

அம்பலவாணன் என்பவர் இவருடைய குரு என்று ஒருவர் எழுதியது பிழை; நடராசப் பெருமானையே இங்கு குறிப்பிடு கிறார். நூலின் தொடக்கத்தில் இவர் கூறியுள்ள தில்லையம்பல வாணன் துதிப்பாடலும் இக்கருத்தை வலியுறுத்தும். நிரம்ப

* இவருரை இன்னும் அச்சாகவில்லை. மதுரைச் சிவப்பிரகாசர் உரை மட்டும் பலமுறை அச்சாகியுள்ளது.

வழகியர் கமலை ஞானப்பிரகாசர் மாணாக்கர் என்பது அவர் வரலாற்றிற் கூறப்பட்டது. மற்றப் பாடல் உரையின் சிறப்புப் பாயிரம்.

செய்ய சிவஞான சித்திக் கடற்பொருட்கு
உய்யுநெறி தோன்ற உளந்தோன்ற – மெய்யுயிரை
ஊட்டு நெறி தோன்ற உரை பகர்ந்தான் ஞானவழி
காட்டும் நிரம்பவழ கன்.

இவ்வெண்பாவன்றி, உரையின் தொடக்கத்தில் 139 அடி கொண்ட நீண்ட ஆசிரியப்பா வொன்றும் சிறப்புப் பாயிரமாகக் காணப்படுகிறது. அதில் சில அடிகளைக் கீழே காண்க.

"வெண்ணெய்க் கதிபன்... மெய்கண்டான், சூத்திரம் பன்னி ரண்டெனவும்... சூரணை முப்பத் தொன்பது... உதாரணம் ஒருப தும் எழுபதும் ஒரு மூன்றெனவும்... அங்கண்ணூறானூறா ஆறார் பத்தோடு" (216 சொற்கள்)... அருணந்திக்கு,

அன்பால் நுவலப் பின்புரை செய்யும்
செழுஞ்சிவ ஞான சித்தியி னற்பா
எழுந்த அறுநூற் றிருபத் தேழாம்
விரிவாம், அஃதும் இரு பாலாகும்;
ஒருபால் முந்நூ றுளவாம், அஃதும்
பரபா லாகப் பாடின வாகும்;
இன்பா லோதும் இனியோர் பாலும்
தன்பா லாகச் சாற்றின வாகும்;
சொல்லுமிவ் வழியில் சுபக்க விருத்தம்
எல்லையில் முந்நூற் றிருபத் தேழாம்;
இவ்வகை நூலுக் கேய்ந்த பொருளும்
மெய்வகை பிறங்கி மேவரும் பதமும்
எழிற் றொந் தனையும் இதனாற் சொல்லும்
மொழிப்பிர மாணமும் உள்ளிடைச் செல்லும்
சமயச் செல்வர்கள் அமையக் கூறாத்
தர்க்கமும் விடையும் நிற்க நிறுத்தி...
மறையின் பொருளின் முறை பிறழாமல்
இந்நூல் ஒளிர மன்னுரை செய்தோன்...
தன்னுணர்ந் துலகம் மின்னெனக் கண்டோர்
ஓத வெழுந்த வேதச் சும்மையும்

கடுவோ டமிர்தமும் கம்பும் தழங்கும்
படுகடல் ஏழில் படராற் புரளும்
அளவில் காட்சியும் அஃதா னோங்கும்
வளனும் தோய்ந்த மதுரைத் தலைவன்,
நிர்க்குணன் நின்மலன் சிற்குணன் சின்மயன்,
காரண காவலன் பூரண புண்ணியன்,
ஆரணன் ஆகமன் ஆரண நாயகன்,
அத்தன் அநாகுலன் நித்தன் நிராமயன்,
சேவுடைச் சேவகன் ஆவுடை நாயகன்,
அற்புதன் ஆதிபன், கற்பக நகர்சால்
உரம்பதி ஞானத் தொளியோன்,
நிரம்ப வழகன் என் நெஞ்சகத் தோனே.

*விநாயகர் காப்புச் செய்யுளாக இரண்டு பாடல் செய்திருக்கிறார்.*

உள்ளும் புறம்பும் மொருதன்மைத் தாயுணர்வார்
தெள்ளும் சிவஞான சித்திக்கு – மெள்ள
விரிக்கும் பதவுரைக்கு வேழத்தா னைச்சங்
சரிக்குங் கரிமுகனே காப்பு.

தேருஞ் சிவஞான சித்திப் பதவுரைக்குக்
காரு மதமுங் கடும்பாம்பும் – பேருலகிற்
பொய்யஞ்சு முள்ளார் புகழும் புரிநூலும்
கையஞ்சு முள்ளானே காப்பு.

*அடுத்த இரு பாடல்கள் தில்லையம்பலவாணர் துதியும் மெய் கண்ட தேவர் துதியும்:*

அறியும் பொருளுக் கறிவா வனவும் அருந்தவத்தோர்
நெறியும் நெறிக்கு நிலையா வனவும் நினைப்பரிதாம்
குறியுங் குறிக்கக் குணமா வனவும் குவளைவயற்
செறியுந் திருத்தில்லை யம்பல வாணன் திருவடியே.

மைகண்ட மேவும் பெருமா னடியை மருவியருள்
கைகண் டுணருஞ் சிவஞான சித்திக் கடற்சுபக்கம்
பொய்கண் டுறாதவர்போற்ற வியான்சொல் பொருட்குதவி
மெய்கண்ட தேவ னடித்தா மரையன்றி வேறில்லையே.

*இவர் மெய்கண்ட தேவரிடத்து மிக்க ஈடுபாடுடையவர் என்பது சொல்ல வேண்டியதில்லை. சேது புராணத்தில் இவர் பாடிய*

துதிப்பாடலும் இக்கருத்தை விளக்கும். இவற்றின்பின், முன் காட்டிய ஆரணமும் எக்கலையும் என்ற பாடல், தம் குருவாகிய கமலை ஞானப்பிரகாசரைத் துதிப்பது.

ஒவ்வொரு பாடலுக்கும் தவறாது அவதாரிகை எழுதிப் பாடலின் உரை சொல்லிய பின், இதனால் சொல்லியது இன்னது என்று காட்டுதல் இவரது உரையியல்பு. மேற்கோள் காட்டும் போது, சித்தியாரின் பரபக்கப் பாடல்களையும் சங்கற்ப நிரா கரணத்தையுமே மிகவும் அதிகமாக எடுத்துக் காட்டுகிறார். இவர் வடமொழியில் சிறந்த பயிற்சியுடையவராயினும், வடநூல் மேற்கோள் காட்டுவதில்லை. மெய்கண்ட சாத்திரங்களையும் திருமுறைகளையும் மட்டுமே காட்டுகிறார். அதிகமாகக் காட்டு பவை திருவாசகம், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், திருமந்திரம்; சில சமயம் கயிலைபாதி காளத்திபாதி யந்தாதி யையும் காட்டியிருக்கிறார்; பிற நூல் தத்துவ விளக்கம் ஒன்றே.

இவர் தம் உரையைப் பதவுரை என்றே கூறுகிறார். முதற் சூத்திர உரைத் தொடக்கத்தே, சித்தி பரபக்கத்தில் உள்ள நூல் வரலாறு கூறும் 'போகமிகுத்தோர் தொகுத்த' என்ற பாடலை வருவித்து உரை எழுதுகிறார். 'அறுவகைச் சமயம்' என்ற பாட லுரையில், மறைஞான தேசிகர் புறச்சமயங்களை மட்டும் குறிப்பிட, இவர் புறச்சமயம், அகச்சமயம் இரண்டையும் குறிப் பிடுகிறார். 44ஆம் பாடல் விளக்கம் மட்டும் உள்ளதேயன்றி உரை காணப்படவில்லை. மற்ற முத்திகளையெல்லாம் மறுத்து, சித்தாந்த முத்தியை வலியுறுத்தும் 'இம்மையே ஈரெட்டாண்டு' என்ற பாடல் (263) உரையில் இவர் மிகவும் விரிவாக உரை எழுதியுள்ளார். ஏனைய இடங்களில் இவருரை தேவையான அளவு மட்டுமே இருக்கும்; பிறமத மறுப்புக்களைக் கூறும் போது மட்டும் மேற்கோள் பாடல் அதிகம் தருவார். 273, 280, 282, 285 ஆகிய பாடல்கள் உரையில் ஆன்மரூபம் ஆன்மதரிசனம் ஆன்மசுத்தி என்பவற்றைப் பொருத்திக் காட்டுகிறார்.

## பதிப்பு

சித்தியார் அறுவருரைப் பதிப்பு. கொ. சண்முக சுந்தர முதலியார் 1888. திருவாவடுதுறை ஆதீனப் பதிப்பு மறைஞான தேசிகர் உரையுடன், 1957-1958.

## *திருவருட் பயன் உரை*

*உமாபதியார் செய்த எளிய சாத்திர நூலான திருவருட் பயனுக்கும் நிரம்ப அழகியார் உரை செய்தார். இந்நூலுக்குப் பின் வேலப்ப பண்டாரம் பதவுரையும் சிந்தனையுரையும், இரு பதாம் நூற்றாண்டுப் புத்துரைகளும் எழுந்துள்ளன. மூலத்தின் எளிமை நோக்கி இவரும் எளிதாயும் நூலின் நயமும் சமய வுணர்வும் தோன்றவும் உரை செய்துள்ளார். சித்தாந்த சாத்திரங் களில் நுழைவோர் முதலில் பயிலும் நூல் திருவருட்பயன்; அதையும் நிரம்ப அழகிய தேசிகர் உரையுடனேயே பயில்வது மரபு. நிரம்ப அழகியர் தம் உரைக்குக் காப்பாக ஒரு விநாயகர் வணக்க வெண்பாவும் மூலத்துக்கான ஒரு சிறப்புப் பாயிரமும் எழுதியுள்ளார். வெண்பா பின்வருவது:*

நேசத் தடியார் நினைந்துருகி நின்றிட்ட
வாசத் தளைகடக்க மாட்டாது – பாசத்
திருகோட்டு முக்கட் சிவபெருமான் ஈன்ற
ஒருகோட்டு நால்வாய் உவா.

*மூல நூலுக்குச் சிறப்புப் பாயிரமாக 46 அடி கொண்ட நீண்ட ஆசிரியப்பா காணப்படுகிறது. அழகியாரே செய்தது. அதனுட் சில அடிகளைக் கீழே காண்க:*

தொண்டர்கள் இதய முண்டக மலர்த்தும்
விஞ்சை வானிரவி மெய்கண்ட தேவன்...
புகல் சிவ ஞான போதநூல்... உள்ளுறையாத்
திகழ் சிவ ஞான சித்தியின் விரிவும்...
...திருவுளங் கொண்டு
சைவ நூற் சலதி நொய்தினிற் கடத்தும்
மரக்கல மதற்கு மாலுமி யொப்ப –
எழில் ஈரைந்தும் வழுவற புணர்த்தித்
தெள்ளு சீர் புலமை வள்ளுவன் தனக்கோர்
நற்றுணை யுடைத்தெனக் கற்றவர் களிப்ப
அருட்பயன் என்ன அதற்கொரு நாமம்
தெருட்படப் புனைந்து செந்தமிழ் யாப்பிற்
குறளடி வெள்ளை ஒரு நூறு இயம்பினன்...
தேசிகன் உமாபதி சிவன் என்பவனே.

*உரை எளிமையான நல்ல உரை. தொல்காப்பியம், நன்னூல், திருவாசகம், சிவஞான சித்தி ஆகியவற்றை மேற்கோளாகக்*

காட்டுவது. அழகியார் அத்தியாயந் தோறும் அவதாரிகை கூறி, ஒவ்வொரு குறளின் இறுதியிலும், இன்னது சொல்லப்பட்டது என்று தவறாது எழுதுகிறார்; இது சித்தியுரையிலும் காணும் இயல்பு. பல இடங்களில் மாணவகனே என்று விளித்து விளக்கு கிறார். 'அருள் நூலும் ஆரணமும்' என்றவிடத்துச் சைவாகமங் களும் வேதங்களும் என்று உரை எழுதுவார். திருவாதவூரரைக் குறிப்பிடும்போது, செய்யுளோசைபட,

> போதவூர் புகழகம் போர்த்த மெய்யன்
> வாதவூர் வந்த மறைமுதற் றலைவர்.

என்று குறிப்பிடுவார். ஐந்தொழில்களைத் தமிழ்ச் சொற்களால் படைப்பு நிலை ஈறு மறைப்பு அருள் என்பர். 'வட மொழியில் சம் என்பது சுகம், கரன் என்பது பண்ணுவான், இரண்டும் புணர்ந்து சங்கரன் என நின்றது' என்று எழுதுவார். பசு உயிர் சேதனன் புற்கலன் சீவன் அணு வியாபகன் ஆன்மா என்பன ஒரு பொருட்கிளவி என்பார்.

### பதிப்பு

தனியாகவும் மெய்கண்ட சாத்திரங்களோடு சேர்ந்தும் பல பதிப்புக்கள் வெளியாகியுள்ளன. சில ஏட்டுப் பிரதிகளில் வேறு விளக்கங்களும் விரிவாகச் சேர்ந்துள்ளன. நிரம்ப அழகியார் சிறப்புப் பாயிரம் கொ. சண்முகசுந்தர முதலியார் பதிப்பில் மட்டும் காணப்படும். 1965இல் வெள்ளைவாரணனார் விளக்கத் தோடு கூடிய நல்ல உரைப்பதிப்பு வெளியாயிற்று.

## திரு ஒற்றியூர் ஞானப்பிரகாசர்

ஞானப்பிரகாசர் என்ற பெயருடைய பலரைப் பற்றிய விவரத்தைக் கமலை ஞானப்பிரகாசர் வரலாற்றில் தெளிவு படுத்தியிருக்கிறோம்.* திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் என்பவர் இப்பெயர் பெற்றாருள் ஒருவர். கமலை ஞானப்பிரகாசருக்கு மாணாக்கர் பலர். அவர்கள் தமிழ் நாட்டின் வெவ்வேறு பகுதி யினர். இந்த நூற்றாண்டு வரலாற்றின் பல பகுதிகளில் அத்தகை யோர் பலரைப் பற்றிய செய்திகள் கூறப்பட்டிருக்கும். அத்தகை யோரில் இவரும் ஒருவர்.

---

* விளக்க அட்டவணையை இந்நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு இரண்டாம் பாகம் பக்கம் 278 - 279இல் காண்க.

### ஆசிரியர்

இவர் ஞானப்பிரகாசர் என்ற தீட்சாநாமம் உடையவர் போலும். இவர் பிறந்த ஊர் சேந்தை என்பது சோழ நாட்டின் கண் உள்ள சேந்தமங்கலமாகும். திருவாரூர் அடைந்து மிகச் சிறந்த ஆசாரியராய் விளங்கிய இல்லறத்தாரான கமலை ஞானப் பிரகாசரிடம் சீடராய் அமர்ந்தார். அங்கிருந்து ஞான சாத்திரங் களை நன்கு ஓதிப் பின்னர் பட்டினத்தார் முத்தியடைந்த பெருமை வாய்ந்த தலம் என்று கருதப்படுகின்ற திருவொற்றியூர் சென்று அங்கே வாழ்ந்திருந்தார். இருந்த காலத்தில், தம் குருவின் கட்டளைப்படி திருவொற்றியூருக்கு ஒரு புராணம் எழுதினார். பின்னர் அக்காலத்தில் சாத்திரக் கிளர்ச்சிகளும் சமயக் கிளர்ச்சி களும் மிகுந்து பரவியிருந்தமை கண்டார். கண்டபோது, தாமும் சாத்திரங்களில் நுட்பமான பகுதிகளுக்கு உரை எழுதுவது நலம் என்று இவருக்குத் தோன்றிற்றுப் போலும். சுயமதம் நிறுவுவதை விடப் பிறமதக் கொள்கைகளிலுள்ள பிழைகளை எடுத்துக் காட்டுவதிலேயே இவருடைய மனம் அதிகமாய் ஈடு பட்டிருக்கிறது. மெய்கண்ட சாத்திரங்கள் பலவற்றையும் இவர் நன்கு பயின்றிருந்த போதிலும்கூட, மற்ற மதங்களின் கொள்கை களைச் சொல்லி அவற்றைச் சைவபரமாக மறுக்கின்ற பகுதி களே இவருடைய மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அது பற்றியே இவர் சித்தியார் பரபக்கத்திலும் உமாபதியார் செய்த சங்கற்ப நிராகரணத்திலும் பெரிதும் ஈடுபட்டு, அவ்விரண்டிற்கும் உரை எழுதினார். பின்வரும் பாடல் பரபக்க உரைக்கு இவர் கூறிய அவையடக்கம். இவருடைய வரலாறுகள் சில இதனால் நன்கு விளங்குகின்றன.

பொன்னிறக் கடவுளும் புத்தேள் கோனும்
பன்னக முனியும் பரவிப் போற்றும்
ஒற்றி மாநகர் நற்றவர் தலைவனைப்
பாடி யாடும் படம்பக்க நாதனைத்
தொழுது போற்றிப் பழுதக லும்படி
வல்லிருள் நீக்கிய மாதவ னென்ன
நல்லருள் புரியும் நந்தி கேசன்
ஓதிய போதத் துண்மை தன்னைச்
செந்தமிழ்ப் படுத்தித் திருநா மத்தால்
தந்துரைத் தருளினன் தபோதனர் தமக்கு:
வெண்ணெய் மாநகர் மெய்கண்ட தேவன்;
அவனடி பரவித் தொழுதருள் பெற்றவன்,

சிவஞான சித்தி யென்றுபெய ரிட்டுப்
பரமதம் தன்மதம் என்றிரண் டாக்கித்
தரமுடன் உரைத்தனன் சண்பையர் தலைவன்;
கற்றவர் பரவும் சேந்தையர் காவலன்
நற்றவர் அடிபணி ஞானப்ர காசன்
நன்னூ லுணர்ந்த ஞானிகள் முன்னே
இந்நூல் தன்னிற் பரமதந் தனக்கு
உரைதனை யெழுத உன்னிய வதுதான்
குரைகட லேழும் நீந்தி யேற
விரைபவ னொக்க விளங்குவன் இன்றே.

இவர் இங்கு சண்பையர் தலைவன் என்று அருணந்தி சிவத்தைக் குறிப்பிடுவது அக்காலத்தில் சீகாழிப்பகுதியில் வாழ்ந்த சிலருக்கே தெரியவரும். தத்துவப் பிரகாசர், மதுரைச் சிவப் பிரகாசர், பாண்டிப் பெருமாள் போன்றார் அருணந்தியை இவ்வாறு குறிப்பிடுவார்கள். இவருக்கும் அத்தகைய தொடர்பு கமலை ஞானப்பிரகாசர் மூலமாக ஏற்பட்டிருந்ததென்றும், இருவரும் சோழ நாட்டினர் என்று குறிப்பிட்டது பொருந்தும் என்றும், இதனால் நன்கு விளங்கும். தம் உரை நூலில் 'திருப் புகலூர் சுவாமி'யைக் குறிப்பிடுகிறார்.

இவர் வட மொழியில் சிறந்த பயிற்சி உடையவர். தருக்க நூலில் வல்லவர். கண்கட்டிமடம் மறைஞான சம்பந்தரிடம் இவர் மாணாக்கராய் இருந்து அவர் காலமான பிறகு கமலை ஞானப் பிரகாசரிடம் மாணாக்கராய் அமர்ந்தார் என்று கருத இடம் உண்டு.

இவருடைய மாணக்கராகத் திருஒற்றியூரில் தத்துவப் பிரகாசர் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் செய்த பரபக்க உரையை அவர் நன்கு பயின்றார் என்பது அவர் வரலாற்றால் நன்கு விளங்கும்; அதைப் பின்னே காணலாம்.

**நூல்கள்**

இவர் செய்தனவான ஆதாரத்தோடு குறிப்பிடத்தக்க நூல்கள் முன்னே குறிப்பிட்ட திருவொற்றியூர்ப் புராணம் சித்தாந்த சாத்திரங்களான சித்தியார் பரபக்க உரை, சங்கற்ப நிராகரண உரை என்ற மூன்றுமாகும். இவற்றுள் திருவொற்றியூர்ப் புராணம் முன்னமே இந்நூற்றாண்டு வரலாறு முதல்பாகம் புராண இலக்கியம் அத்தியாயம் இரண்டு என்ற பகுதியில் ஆராயப் பட்டது. மற்ற இரண்டையும் இனிக் கருதுவோம்.

## சித்தியார் பரபக்க உரை

சித்தியார் பரபக்கத்திற்கு எழுந்த உரைகள் திரு ஒற்றியூர் ஞானப்பிரகாசர், திரு ஒற்றியூர் தத்துவப்பிரகாசர், வேலப்பப் பண்டாரம் என்ற மூவர் உரைகளாகும். இம்மூன்றில் தத்துவப் பிரகாசர் உரையே பெரிதும் ஆட்சியில் உள்ளது. மற்ற இரண்டும் தனியே அச்சிடப்பட்டதாகத் தெரியவில்லை. தத்துவப் பிரகாசர் உரையை அச்சிட்ட கொன்றைமாநகரம் சண்முகசுந்தரமுதலியார், வேறு உரை என்று சொல்லி ஞானப்பிரகாசர் உரையின் முக்கிய மான பகுதிகளையெடுத்துச் சேர்த்தும் பெயர் குறிப்பிட்டும் அச்சிட்டார். அதில் காணும் சில செய்திகளை இங்கு குறிப்பிடு வோம். சிவ சமவாத உரை என்று சிவஞான சுவாமிகள் குறிப்பிட்டு மறுக்கும் உரையானது வேறு; அது சித்தியார் சுபக்கத்துக்குத் திருவண்ணாமலை யாதீனம் ஞானப்பிரகாசர் செய்த உரையாகும்.

ஈசனார் அயனார் மாலோடு என்ற பரபக்கம் உலகாயதன் பாடலின் உரையில், பெண்ணோடு கூடி வாழ்ந்த வரலாறுகள் பல சொல்லுகின்றார். சுந்தரமூர்த்தி, சந்திரன், ஆதித்தன், காசிபர், பராசரர், அகத்தியர், சத்த இருடிகள், பிருகுமுனி, மாந்தாதா, யாளி, திருப்புகலூர்ப் போகநாத சுவாமி என்று கூறிவிட்டு, 'அன்றில் எனும் பட்சி தனது பேட்டுடனே கூடி முகத்தோடு முகம் வைத் திருக்கையில் சற்றே முகத்தை விட்டு நீங்கினபோது அந்த அன்றிலானது மிகவும் துக்கித்துக் கூப்பிடுகிறது. பின்பு அந்தப் பேட்டின் முகத்திலே தன் முகம் வைத்தவுடனே கூப்பிடுதலும் துக்கமும் நீங்கிச் சுகித்திருத்தலை அறிந்திருந்தும்' என்கிறார். 'கொன்றிடல் ஆகாது' என்ற பாடல் உரையில் 'கல்லிய மாமிசம் அகல்லிய மாமிசம் என இரண்டு; கல்லியத்திற்குத் தோஷமில்லை, அகல்லியத்திற்குப் பாவம் உண்டு; அகல்லியமும் திரிகோடி ஷட் கோடி நவகோடி என மூன்றாம்' என்று விரிக்கிறார். ஈழம் அடிப்படுத்த தாடை ஆழ்வார் என்றும் குறிப்பிடுகிறார். கொலை மறுத்தலையொட்டி இவர் 8 வெண்பாப் பாடல்கள் கூறுகிறார். நீலகேசியிலும் இதேபோலக் கொலையைக் கண்டிக்கின்ற வெண்பாக்கள் பல மேற்கோளாக வருகின்றன. இவை அனைத்தும் புலால் மறுத்தலை வற்புறுத்துகின்ற ஒரு பழைய வெண்பா நூலில் இருந்து எடுக்கப்பட்டனவோ என்ற ஐயம் எழுகின்றது. இந்த நூல் எதுவென்பதும் தெரியவில்லை, நூலும் இல்லை.

இவைபோல, கொலை மறுத்தலை வற்புறுத்துகின்ற ஒரு விருத்தப் பாடலையும் இவர் தருகின்றார்.

கொன்றவன், குறைத்தவன், கொணர்ந்து விற்றவன்
ஒன்றிய பொருள் கொடுத் துவந்து கொண்டவன்,
அன்றடு மடைமகன், நாவிற் பெய்தவன் –
என்றிவர் அறுவரும் நரகில் எய்துவார்.

இது புறத்திரட்டில் இராமாவதாரப் பாடல் என்று சொல்லப் பட்டுள்ளது. இது ஒரு கொலைமறுத்தல் நூல் என்பதில் ஐயம் இல்லை; புறத்திரட்டில் காணும் குறிப்பு பிழையாதல் வேண்டும்.

நூற்று எண்பதுக்கு மேற்பட்ட குறள் வெண்பாப் பாடல் களைத் தருகிறார். ஓரிடத்தில் பரமததிமிரபானு என்றும் குறிப்பிடுகிறார் (பரமதங்களாகிய இருட்டை நீக்கும் சூரியன்). இது குறட்பாக்களால் ஆன ஒரு நூல், கண்கட்டி மடம், மறை ஞான சம்பந்தர் செய்தது. நூல் அச்சிடப்பட்டதாகவோ ஏடு கிடைப்பதாகவோ தெரியவில்லை. இங்கு காட்டப்பட்டுள்ள பாடல்களின் பொருட்போக்கு மற்ற மதங்களின் கொள்கை களை எடுத்துச் சொல்வதாகவும் கண்டிப்பதாகவும் உள்ளது. ஆதலால் இக்குறட்பாக்கள் யாவும் பரமத திமிரபானு என்ற நூலைச் சேர்ந்தனவாகவே இருக்கும் என்பது உறுதி.

இந்தநூலைக் குறிப்பிடும்போது, திருவாக்கு என்றும் எமது ஆசிரியர் திருவாக்கு என்றும் கூறுகிறார். எனவே இந் நூல் செய்த மறைஞான சம்பந்தரிடமும் இவர் மாணாக்கராய் இருந்தார் என்பது தெரிகிறது. இவர் தொடக்கத்தில் மறைஞான சம்பந்தருடைய சீடராய் இருந்தார் என்ற கூற்றுக்கு இது ஆதரவு. பின்னர் கமலை ஞானப்பிரகாசருடைய சீடராக ஆகி இருத் தலும் கூடும்; மறைஞான சம்பந்தர் காலத்தால் முற்பட்டவர்.

வடமொழிப் பிடகத்திலிருந்து சுலோகத்தை மேற்கோள் தருகிறார். இவர் குறிப்பிடும் தமிழ் நூல்களில் பௌத்த நூல்கள் - குண்டலகேசி சித்தாந்தத் தொகை திருப்பதிகம் மானாவூர்ப் பதிகம் மணிமேகலை என்பன* சைவ நூல்கள் - தேவார திருவாச கங்கள், திருமந்திரம் களந்தை ஞானப்பிரகாசர் செய்த தசகாரியம், கந்த புராணம், தத்துவ விளக்கம், மறைஞான சம்பந்தர் செய்த சிவதருமோத்தரம், பரமததிமிரபானு, நக்கீரர் அந்தாதி, மற்ற நூல்கள் - ஆசாரக்கோவை, நீலகேசி, தொல்காப்பியம், குறள்.

---

* ஞானப்பிரகாசர் பரபக்க உரைக்குப் பதிப்பு இல்லை. ஏடுகளை வைத்து ஒப்பு நோக்கி இதற்கு ஒரு நல்ல பதிப்பு வெளியிடுதல் சைவத்துக்கு மட்டும் அன்றி பௌத்தத்துக்கும் சைனத்துக்குமே மிகவும் அவசியமான ஓர் உதவியாகும்.

## சங்கற்ப நிராகரண உரை

உமாபதியார் செய்த சங்கற்ப நிராகரணம் என்பது ஒன்பது சமய வாதிகளுடைய மதங்களை எடுத்துக் கூறி மறுக்கும் நூல். இது தர்க்கவாதிகளைத் தவிர மற்றவர்களுக்கு ஈடுபாடு தருவதன்று. ஞானப்பிரகாசர் இந்த நூலுக்கு உரை எழுதத் தேர்ந்தெடுத்தது இவருடைய வாதப் புலமையையே புலப்படுத்துகிறது.

இவர் உரையை முதலில் பதிப்பித்த பதிப்பாளர் இருவரும் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடவில்லை. ஏட்டில் ஆசிரியர் பெயர் சொல்லப்பட்டிருப்பதை அனவரத விநாயகம் பிள்ளை முதல் முதல் கண்டு சமாஜ சித்தாந்த சாத்திர முதல் பதிப்பில் குறிப்பிட்டார். அப்பாடல் பின்வருவது:

பொற்பம ராப்பல சொற்றுறை யோரைப் பொதிந்தனசங்
கற்ப நிராகர ணத்துரை நாட்டினன் காற்றியங்கி
லற்ப மிராவிடை மங்கைபங் கின்றி யணைந்த வெங்கோன்
சிற்பன் நிராமயன் ஞானப்ர காசன்நம் தேசிகனே.

இப்பாடலில் ஞானப்பிரகாச தேசிகன் என்று கூறியிருப்பது தெளிவு. இவர் இங்கும் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, அம்மையார், நக்கீரர் அந்தாதி என்பவற்றை மட்டும் உதாரணமாகத் தருகிறார். இவருடைய உரை மிகவும் தெளிவான எளிய உரை; உரைநடைக்கு எடுத்துக் காட்டாகவும் சொல்லத்தக்கது. மூலத்தைச் சிறு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு சிறு சிறு தொடர்களால் உரை எழுதிச் சொல்கிறார். வரி தோறும் விஷய கௌரவத்தை நன்கு புலப்படுத்தியே செல்கிறார். உரையானது நேரே பேசுவது போலவேயிருக்கிறது. எடுத்துக்காட்டாக ஒரு சிறு பகுதியைக் காட்டுகிறோம்:

'நிலை பெற்று வாரா நிற்கிற தொரு வீட்டை ஒருத்தன் ஒரொரு வைக்கோலாகவும் ஒரொரு கழியாகவும் ஒரொரு மரமாகவும் நாளிலே பிடுங்கிப் பிடுங்கிப் போட்ட பின்பு, அந்த வீடென்ற சொரூபம் இல்லையாய்ப் போன தன்மை போலவும், ஒரு புடவையை ஒருத்தன் ஓரோரிழையாக நாளிலே பிடுங்கிப் பிடுங்கிப் போட்ட பின்பு அந்தப் புடவையென்கிற சொரூபம் இல்லையாய்ப் போன தன்மை போலவும், பிரபஞ்சமாகிற பொய்யையும் பிருதிவி முதலாகக் கொண்டு இது நானல்ல இது நானல்லவென்று நேதி பண்ணி நாளிலே நீக்கிக்கொண்டு....';

ஞானவான்கள் மூன்று லோகத்திலும் இல்லையென்று ஒருத்த ரும் சொல்லுவாருமில்லை, நீர் சொல்லுகிற வழக்கெல்லாம் ஞானவான்களாக வேண்டும், ஞானந் திரிலோக்கிய துல்லப மென்கிற திருவாக்குப் பழுதாம். எனவே, இவர்கள் மடமும் மடப்புறமும் மடவடியாருந் தேவாரமுந் திருமுட்டுந் திருவா பரணமும் இவை தானே ஞானமாகக் கொண்டு நிற்பர்கள் என் பது கருத்து' என்ற பகுதிகளைக் காண்க.

இறுதி சங்கற்ப நிராகரண அகவல் 68ஆம் அடியில் நதிக் கரை ஆன் என்ற தொடருக்கு காவேரிக் கரைப் பசுப்போலே என்று இவர் சொல்லியிருப்பதால், இவர் சோழ நாட்டினர் என்று முன் கூறிய கருத்து பின்னும் வலியுறும்.

### காலம்

கமலை ஞானப்பிரகாசரின் காலம் 16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. எனவே, இவருடைய காலம் இதே நூற்றாண்டின் பிற்பகுதியாகும்.

### பதிப்பு

முன் பதிப்புக்கள் இரண்டு; கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார், காஞ்சி நாகலிங்க முனிவர். பின்வந்த சைவ சித்தாந்த சமாஜப் பதிப்புக்கள் 1934, 1940; அனவரத விநாயகம் பிள்ளை பார்வை, சிறப்புடையன.

## திரு ஒற்றியூர்த் தத்துவப்பிரகாசர்

தத்துவப்பிரகாசர் என்று பெயர் பூண்டு 14-16 நூற்றாண்டு களில் வாழ்ந்த சிவஞானிகள் நால்வரில் திரு வொற்றியூர்த் தத்துவப்பிரகாசர் என்பவர் காலத்தால் கடைசியானவர். இந்த நால்வரும் யார் என்பதை வேறிடங்களில்* தெளிவுபடுத்தியிருக் கிறோம். இந்நூலிறுதியில் உள்ள அட்டவணை பார்க்க. இத் தத்துவப் பிரகாசருடைய வாழ்க்கை வரலாறு எதுவும் தெரிய வில்லை. இவர் செய்த சித்தியார் பரபக்கவுரையின் சிறப்புப் பாயிரம் பின்வருவது;

---

* எமது தத்துவப் பிரகாசம் 1965, முன்னுரை பக்கம் 21-24, செந்தமிழ் தொகுதி 39 பகுதி 7, 1942, பக்கம் 361-366. தத்துவப் பிரகாசர் காலம் என்ற கட்டுரை.

நத்துவயல் ஒற்றியூர் ஞானப்ர காசனருட்
சித்தி படருரையைச் செப்பியபின் – வித்த கமாம்
தத்வப்ர காசன் பதவிருத்தி தான் செய்தான்
உத்தமர் சித் தத்தொருமை யாய்.

ஒற்றியூர் ஞானப்பிரகாசர் சித்தியார் உரையைச் செய்தபின், தத்துவப் பிரகாசர் அதற்குப் பதவிருத்தி செய்தார் என்று பாடல் கூறுகிறது. குறிப்பிடப்பட்டது சித்தியார் பரபக்கமாகும். இவர் அந்த ஞானப்பிரகாசரின் மாணாக்கர் என்பது சம்பிரதாயச் செய்தி. தத்துவப்பிரகாசர் செய்தது பதவிருத்தி என்று சொல்லப்பட்ட போதிலும், அவ்வுரை பெரும்பான்மையும் பொழிப்பாகவே உள்ளது; அல்லது பதமாக எடுத்து உரை கூறாமல், தொடர்களாக எடுத்து உரை கூறுகிறது. இவர் ஒற்றியூர் ஞானப்பிரகாசருடைய மாணாக்கர் எனவே, இவர் காலமும் 16ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகும்.

## சித்தியார் பரபக்க உரை

சித்தியார் பரபக்கத்துக்கு மூன்று உரைகள் இருந்த போதிலும் கூட, முழுமையும் அச்சிட்டு வழங்குவது இவருடைய உரையே. இது கொன்றை மாநகரம் சண்முக சுந்தர முதலியார், காஞ்சி நாகலிங்க முனிவர், சைவ சித்தாந்த சமாஜம் (இரண்டு பதிப்புக்கள்), திருவாவடுதுறை யாதீனம் ஆக ஐந்து முறை அச்சிடப்பட்டுள்ளது.

இவர் மூலத்தை அடியொற்றி உரை எழுதிச் செல்வது குறிப்பிடத்தக்கது. பௌத்த, சைன சமய தத்துவங்களைக் கூறுமிடத்து, அதிகமும் விரிவாகவே விளக்கங்கள் சொல்கிறார். பௌத்த சமயத்தில், சில பாடல்கள் இவர் மேற்கோள் காட்டாது, ஞானப்பிரகாசரிடமிருந்து எடுத்துச் சொல்கிறார் என்று தெரிகிறது. சுகதநூல், விம்பசார கதை என்பன இங்ஙனம் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு பாடல், சிவ பத்தர் வசனம் என்ற பெயரால், புத்த சமயத்தைக் குண்டலகேசி வரலாற்றைக் கூறிப் பழிப்பதாக உள்ளது.

முத்தராம் புத்தர் தோன்றித் தாய்பழுவை முறித்தே யிட்டார்
கொத்தாருங் குழலா ளாகுங் குண்டல கேசி தானும்
கத்துருவாங் கணவனக் காடனையுங் கொன்றிட்டார்
இத்துணையார் இருவரும் வந் திங்ஙனே தவமு ரைப்பார்.

பிருகஸ்பதி இயம்பியது உலகாயத சித்தாந்தம் என்று சொன்ன இடத்தில், இது, "அருச்சுனன் தவத்தினைப் புரிய வாசுதேவன் தேரிலிருந்து கீதை என்னும் சாத்திரத்தினான் மயக்கிக் கொல்லு வித்ததற்கு ஒக்கும் எனக் கொள்க" என்கிறார்.

உலகாயதர் மிச்சிரசார்வாகர் இரணியகர்ப்ப சார்வாகர் என்றிரு திறத்தர் என்கிறார். கன்மத்தைக் கைவிட்டவன் கன்ம சண்டாளன் என்கிறார். பாஞ்சராத்திரி மதமும் மதமறுதலையும் கூறுமிடத்துத் திருமாலை எவ்விடத்திலும் பரமபுருஷோத்தமன் என்று சிறப்பாகவே குறிப்பிடுகிறார்.

## சட்டை முனி கயிலாய சித்தர்

சட்டை முனி என்பவர் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சித்தர்களில் ஒருவர். இவர் கொங்கணருடைய மாணாக்கர்களில் ஒருவருமாவர். இவர் சட்டையிட்டேயிருந்தமையால் சட்டை முனி என்றும் சட்டமுனி என்றும் பெயர் பெற்றிருந்தார். சித்தர் கள் உலக இயல்பைக் கடந்த நிலையில் பாடியவர்கள் மட்டுமல்ல, அப்படியே வாழ்ந்தவர்களுமாவர். இவர் சட்டையிட்டபடியே வாழ்ந்தார்; கம்பளிச் சட்டையிட்டிருந்தார். கம்பளிச் சட்டை முனி என்றும் இவருக்குப் பெயர் உண்டு. இவர் வாழ்ந்த காலத்தில் இது உலக நிலைக்கு மாறு; உலகியல்பைக் கடந்த நிலையில் வாழ்ந்தோர் பல காலங்களில் பலர். பட்டினத்தார் துறவு பூண்டபின் உடைகோவணமுண்டு, ஓடே கலன், உண்பதும் ஊரிடு பிச்சை என்று வாழ்ந்தார் (14ஆம் நூற்றாண்டு). அதே நூற்றாண்டில் சிற்றம்பல நாடிகளும் அவர் மாணாக்கர் சிலரும் காலில் பழுதை கட்டிக்கொண்டே வாழ்ந்தார்கள். சென்ற நூற் றாண்டில் இராமலிங்க சுவாமிகள் தலையில் எப்போதும் முக் காடிட்டுக் கொண்டே வாழ்ந்தார் என்பர். இவ்வாறு விசித்திர நிலையை மேற்கொண்டோர் பலர். இச்சித்தர் செய்ததாகச் சில திருமந்திரப் பாடல்களின் உரை அச்சிடப்பட்டுள்ளது.*

இவருடைய உரையில் 113 திருமந்திரப் பாடல்கள் தொகுக் கப்பட்டுள்ளன. 10 பாடல்களுக்கு உரையில்லை. உரையுள்ள

* திருவாவடுதுறை ஆதீனம், 1954. இவர் கன்னடியத் திருமேனி என்று பதிப்பில் சொல்லப்பட்டுள்ளது. இதற்குரிய பொருத்தம் காணப்படவில்லை.

பாடல்களுள், திருமந்திரத் திருமுறையில் இல்லாத பாடல் 27; இவை திருமூலர் முப்பது என்ற பாடல்கள்; 'மூலனுரை செய்த முப்பதுபதேசம்', இடைச் செருகலான பாடல் (திருமந்திரம் 3046) இதைக் குறிப்பிடுகிறது என்பர். 'தஞ்சாவூர்த் தட்டான் என மூலர் செப்பு நெறி' என்று 14ஆம் நூற்றாண்டுக்குரிய சிவானந்தமாலை இதிலுள்ள பாடலைக் குறிப்பிடும். இதனால் பழமையாகவே இக்கருத்து இருந்து வந்திருக்கிறது. இதை ஒப்புக் கொண்டே சட்டை முனி உரை எழுதுகிறார்.

சட்டை முனி, பாடல்களை நூலில் உள்ள வரிசை முறையில் வைத்து உரை எழுதவில்லை. தமக்கு ஏற்ற முறையில் அமைத்து எழுதுகிறார். இன்ன தொடருக்கு இது விளக்கம் என்பதை இவர் 'என்ற சத்தத்துக்கு விவரம் கண்டு கொள்க' என்று எழுது கிறார். எல்லாக் குழூஉக் குறிகளையும் தொகைகளையும் விரித்து எழுதுகிறார். பெரும்பான்மை சுருக்கமாகவே எழுதினும், 81ஆம் பாடல் (திருமந்திரம் 2888) உரையை மிகவும் விரிவாக எழுதியுள்ளார்.

பத்துப் பரும்புலி, யானை பதினைந்து,
வித்தகர் ஐவர், விநாயகர், ஈரெண்மர்,
அத்தகு மூவர், அறுவர் மருத்துவர்,
அத்தலை ஐவர் அமர்ந்து நின் றாரே.

என்பது அப்பாடல். பரும்புலி பத்து - தசநாடி. யானை பதினைந்து - தசவாயுவும் முக்கியன் பிரபஞ்சனன் வயிரம்பு அந்தர்யாமி மகாப்பிராணன் என்னும் ஐந்தும் ஆகப் பதினைந்து வாயு. வித்தகர் ஐவர் - இந்திரியம். விநாயகர் ஈரெண்மர் - அந்த ரங்கத்து அட்டமதம் பகிரங்கத்து அட்டமதம் ஆக ஈரெட்டு. மூவர் - முக்குணம். அறுவர் மருத்துவர் - காமக் குரோத லோப மோக மத மாற்சரியம். அத்தலை ஐவர் - பஞ்ச பூதம் என்று எழுதுவதும், இவற்றுக்கு விளக்கம் கூறுவதும் வேறெங்கும் காணப்படாத செய்திகள்.

எங்கும் குருவை வலியுறுத்தி எழுதுகிறார். 'காரண குருவைக் காட்டும் படியே' என்பது இவர் எப்போதும் எழுதும் தொடர். இவர் உரையில் தன்மைக்கும் நடைக்கும் எடுத்துக்காட்டாக, இவர் கூறும் முதல் பாட்டையே இங்கு தருகிறோம்.

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்,
பதியினைப் போற்பசு பாசம் அனாதி;
பதியினைச் சென்றணு காபசு பாசம்;
பதியணு கிற்பசு பாசம் நில் லாவே.

என்பது பசுவும் பாசமும் பதியினைப் போலவே அநாதி; ஆகையினாலே; 'பதிபசு பாசம் எனப் பகர் மூன்றில் - பதியினைப் போல் பசு பாசம் அநாதி' என்னும் சத்தத்துக்கு விபரம். பசுவாகிய சீவாத்மா சமுசார சகதியில் விழுந்து வேற்றுமைப் புத்தியைக் கொண்டு பதியினைச் சேராமையினாலே 'பதியினைச் சென்றணுகா பசுபாசம்' என்னும் சத்தத்துக்கு விபரம். பசுவாகிய சீவாத்மா சத்திநிபாத விவேகத்தைக் கொண்டு காரண குரு கை காட்டும்படியே நீரும் நீர்க் குமிழியுங் கலந்து ஒன்றானாற் போல, பதியினைச் சேர்ந்து ஐக்கிய பதம் பெற்றபின் பசுவுடன் பாசம் நட்டமான படியினாலே 'பதி அணுகிற் பாசம் நில்லாவே' என்னும் சத்தத்துக்கு விபரம் என்க.

இவருடைய செய்யுள் நூல்களை, சித்தர் பாடல் என்ற அத்தியாயத்தில் காணலாம். இவர்பெயர் சட்டைமுனி என்று சித்தர் பாடல்களிலும், கம்பளச் சட்டைக் கயிலாய சித்தர் என்று திருமந்திரவுரையிலும் காணப்படுகிறது. இரு பெயர்களும் ஒருவரையே சுட்டுகின்றன என்பது எமது கருத்து.

இவர் தேர்ந்தெடுத்துள்ள பாடல்கள் யாவும் உழவுப் பொருள்களையே குறிப்பன. அவற்றுக்கு இவர் கூடார்த்தம் காட்டுகிறார்: அத்திப் பழம், அரைக்கீரை வித்து, வழுதலை, பாகல் புழுதி, பூசனி, வாழை இளங்கனி, தாழம்பழம், விளாங்கனி, பூ, மணம், கலப்பை, உழவு, எருது, கன்று நடுதல், ஆறு, அருங் குளம், சேறு, தாமரை, சூரை, ஏற்றம், கிணறு, இறைத்தல், மடைமாறல், பாத்தியில் பாய்தல், கொட்டி, ஆம்பல், எட்டி, வேம்பு, மாங்காய், மாம்பழம், கொல்லை, காடு, மொட்டு, செய், பலாப்பழம், பாற்பசு மேய்த்தல், பள்ளச் செய், ஆரை, கீரை, கரும்பு, தேன். இத்தன்மையால் இவர் சிறந்த வேளாள வாழ்க்கை வாழ்ந்தவர் என்று கருதுதல் கூடும்.

❖ ❖ ❖

*அத்தியாயம் 2*

# வைணவ இலக்கியம்

## *முன்னுரை*

*தமிழ் இலக்கிய வரலாற்றில் 6ஆம் நூற்றாண்டு தொடங்கி, காலந்தோறும் வைணவ சமயமானது, ஆழ்வார் பாசுரங்களாலும் ஆசாரியர் தம் வடமொழி நூல்களாலும், வியாக்கியானக்காரர்களுடைய மணிப்பிரவாள உரைகளாலும், தனித் திருமால் துதி அடியவர் ஆசாரியர் துதியாகிய பிரபந்தங்களாலும் வளம் பெற்று வந்துள்ளது. ஆழ்வார் பாசுரங்கள் 6ஆம் நூற்றாண்டு தொடங்கி (முதலாழ்வார்) நாதமுனிகள் 9ஆம் நூற்றாண்டு (வரை) வளர்ந்தன. வடமொழி நூல்கள் 9ஆம் நூற்றாண்டில் நாதமுனிகள் தொடங்கி வளர்ந்தன. மணிப்பிரவாள வியாக்கியானங்கள் 12ஆம் நூற்றாண்டு திருக்குருகைப் பிராண் பிள்ளான் தொடங்கி விரிந்தன. பிரபந்தங்கள், 12ஆம் நூற்றாண்டு தொடங்கி வளர்ந்தன.*

*இங்கு ஒரு நிலையைக் காண்கிறோம். 9ஆம் நூற்றாண்டில் நம்மாழ்வார் மதுரகவி பாசுரங்கள் பாடியபின், 12ஆம் நூற்றாண்டில் திருவரங்கத் தமுதனார் இராமானுச நூற்றந்தாதியும், அருளாளப் பெருமாள் எம்பெரும்மானார் பிரமேய சாரமும் விஞ்ஞானசாரமும், திருக்குருகைப் பிரான் பிள்ளான் திருவாய் மொழி ஆறாயிரப்படி மணிப்பிரவாள வியாக்கியானமும் எழுதுகிறவரையில், இடைப்பட்ட 10-11 ஆகிய இரு நூற்றாண்டுக் காலத்தில் வைணவ சமயத்தில் எந்தத் தமிழ் நூலோ மணிப் பிரவாள நடை நூலோ தோன்றவில்லை. நாதமுனிகளும் யமுனைத் துறைவராகிய ஆளவந்தாரும் பிறரும் வடமொழிச் சாத்திர நூல்கள் எழுதியது உண்மை. ஆனால் தமிழ் நூல் எதுவும் இச்சமயத்தில் தோன்றவில்லை. இரு நூற்றாண்டுக் காலம் வைணவ சமய நூல்கள் இல்லை என்பது வரலாற்றுண்மை.*

பிறகு 15ஆம் நூற்றாண்டைக் கடந்து 16ஆம் நூற்றாண்டுக்கு வருவோமானால், இங்கு சிறப்பான சில ஆசிரியர் தோன்றி யிருக்கக் காண்கிறோம்.

10-11 ஆகிய நூற்றாண்டுகள் நாட்டு வரலாற்றில் சிறப்பான இடம் வகிக்கின்றன. பாண்டியர் ஆட்சி ஒடுங்குகிறது. பல்லவ ராட்சி அறவே மறைந்துவிட்டது. புதிய சோழராட்சி மெல்லத் தலையெடுத்து வளர்ந்து பெருகி வரலாறு கண்டிராத விரிவுடைய பேரரசாக - ஏகாதிபத்தியமாக உருக்கொள்கிறது. இப்பேரரசை நிறுவிய சோழமன்னர் அனைவரும் சிறந்த சிவ பக்தர். புதிய பேரரசை நிலை நிறுத்துவது, பெரும் குழப்பங்களும் போர் களும் பூசலும் மலிந்திருக்கும் காலம். அக்காலத்தே அரசருடைய சமயமாகிய சைவ சமயம் கைகொடுத்தது இயல்பு. ஆகவே சைவ சமய எழுச்சி அக்காலத்தில் சைவ சமய நூல் வாயிலாக விளக்கம் பெற்றது. அரசருடைய ஆதரவு இன்மையாலும், நாட்டின் எழுச்சிக்கு வைணவம் இப்போராட்டக் காலத்தில் உதவாமையாலும் வைணவ நூல்கள் எழவில்லை. இச்செய்தி களை எமது தமிழ் இலக்கிய வரலாற்றில் அவ்வந் நூற்றாண்டு களில் சைவ வைணவ இலக்கியம் பற்றிய அத்தியாயங்களில் விரிவாக விளக்கியிருக்கிறோம்.

12ஆம் நூற்றாண்டு முதல்தான், ஆழ்வார்களுக்குப் பின், வைணவ இலக்கியம் மறுபடியும் உதிக்கிறது. இராமானுச நூற்றந்தாதி, சடகோபரந்தாதி, அருளாளப் பெருமாள் நூல்கள், திருவாய்மொழி வியாக்கியானங்கள் என 12ஆம் நூற்றாண்டில் தொடங்கி, அடுத்த 13ஆம் நூற்றாண்டில் வியாக்கியானங்களும் குருபரம்பராப்பாவம் என்ற வரலாற்று நூலும் மணிப்பிரவாள மாகவே வளர்கின்றன, 14இல் வேதாந்த தேசிகருடைய பிரபந் தங்கள் தோன்றுகின்றன; இவை அரிய தமிழ்ச் சாத்திரங்களும் துதி நூல்களுமாகும்; இக்காலத்தில் தோன்றிய வைணவ நூல் கள் விளாஞ்சோலைப் பிள்ளையின் சப்த காதையொன்று நீங்கலாக வடமொழிச் சாத்திரங்களும் வியாக்கியானங்களும்; ஈடு 36 ஆயிரப்படி இக்காலத்தில் எழுகிறது. 15ஆம் நூற்றாண்டில் தான் தென்கலை ஆசாரியரான மணவாள மாமுனிகள் தோன்றிப் பல செய்யுள் நூல்களும் வியாக்கியானங்களும் செய்கிறார். இதுவே ஆதி காலம் முதல் 16ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரையுள்ள வைணவத் தமிழ் இலக்கிய வரலாறு.

இனி 16ஆம் நூற்றாண்டுக்கு வருவோமானால், பல சிறப்பான செய்திகள் காணத்தகுந்தன. இக்காலம் புராண இலக்கிய காலம் என்பதற்கேற்ப, வைணவ சமயத்தில் பெரும் புராணங்கள் சில தோன்றியுள்ளன. அருளாளதாசர் பாடிய மிக விரிவான 9147 பாடல் கொண்ட புராண பாகவதமும் செவ்வைச் சூடுவார் பாடிய 4973 பாடல் கொண்ட இதிகாச பாகவதமும் இக் காலத்தில் தோன்றிய பெருநூல்கள். ஆசிரியர் பெயர் தெரியாத கூடற்புராணமும் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் பாடிய திருக்குருகை மான்மியமும் இக்காலத்தில் தோன்றிய தல புராணங்கள். இவையே வைணவத்தில் தோன்றிய முதல் புராணங்களுமாகும். இவையன்றி, அரிதாசர் பாடிய இரு சமய விளக்கம் என்ற தத்துவ சம்வாத நூலும் இக்காலத்துக்குரியது. இவையனைத்தையும் இந்நூற்றாண்டு வரலாறு முதல் பாகம் ஐந்தாம் அத்தியாயத்தில் விரிவாக ஆராய்ந்திருக்கிறோம்.

இவ்வாறு இந்த நூற்றாண்டில் பெருநூல்கள் தோன்றுவதற்கிருந்த சூழ்நிலையையும் குறிப்பிடுதல் பொருத்தமாகும். சிறிது முன்னாக விசய நகர மன்னர் தோன்றித் தமிழ்நாட்டிற் பெரும் பகுதியைத் தங்களுக்குட்படுத்தி, முகம்மதியர் படையெடுப்பால் வைதிக சமயத்துக்கு ஏற்பட்டிருந்த சீர்குலைவைப் போக்கி மீண்டும் வைதிக சமயம் தலையெடுக்குமாறு செய்தார்கள். விசயநகர மன்னரும், அவர்கள் ஆணையின்படி தமிழ் நாட்டில் மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் தங்கி நாட்டைப் பரிபாலித்த தலைவர்களான நாயக்கர்களும், திருமாலடியவர்கள். எனவே, இவர்களாட்சியில் திருமால் சமயத்திற்குப் பேராதரவு இருந்தமை இயல்பு. இதுவே மேற்குறித்த வைணவப் பெருநூல்கள் தோன்றுவதற்குரிய அரசியல் சூழ்நிலையாகும்.

இனி, இந்த அத்தியாயத்தில் பிற வைணவ நூல்களைப் பார்க்கிறோம். திருக்குருகைப் பெருமாள் கவிராயர் ஒரு பெருங் கவிச்சக்கரவர்த்தி போன்ற ஆற்றலுடையவர். அவர் செய்த புராணமாகிய குருகை மான்மியத்தை முன்னமே குறிப்பிட்டோம். இலக்கணத்துறையில் அவர் மாறன் அகப்பொருள், மாறன் பாப்பாவினம், மாறன் அலங்காரம் என்ற சிறந்த நூல்களைச் செய்திருக்கிறார். இவை இந்த நூற்றாண்டின் இலக்கிய வரலாறு இரண்டாம் பாகம் 4ஆம் அத்தியாயத்தில் விரிவாக ஆராயப்பட்டன. இவர் பல பிரபந்தங்களும் செய்திருக்கிறார்.

அவற்றுள் மாறன் திருப்பதிக்கோவை ஒன்றே இன்று கிடைப்பது. ஏனைய நூல்களில் சில பாடல்கள் கிடைக்கின்றனவேயன்றி நூல்கள் கிடைக்கவில்லை.

அடுத்துச் சொல்லத்தக்க சிறந்த ஆசிரியர் மணவாள மாமுனிவரின் மாணாக்கரான பிள்ளை லோகஞ்சீயர் என்பவர். இவர் செய்த நூல்கள் யாவும் மணிப்பிரவாள நடை, கவிராயர் பிரபந்தங்களும் பிள்ளை லோகஞ்சீயருடைய உரைநடை நூல்களுமே இந்த அத்தியாயத்தில் ஆராயப் பெறுகின்றன.

எமது 15ஆம் நூற்றாண்டின் வரலாற்றில் கூறத்தக்க ஒரு நூல் திருவேங்கடநாதர் உலா என்ற பிரபந்தம். அந்நூல் பாடிய காலம் கி.பி. 1498. அதைப் பாடிய ஆசிரியர் அந்நூற்றாண்டின் இறுதிச் சில ஆண்டுகளிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தார். இந்தக் காரணம் பற்றி அந்தப் பிரபந்தத்தை இந்த நூற்றாண்டில் பிரபந்தங்கள் என்ற அத்தியாயத்துள் ஆராய்கிறோம்.

## திருக்குருகைப் பெருமாள் கவிராயர் பிரபந்தங்கள்

இவருடைய வரலாறும் பிற நூல் ஆராய்ச்சியும் முன்னிரு பாகங்களில் சொல்லப்பட்டன. இவர் செய்த பிரபந்தங்களாக நாம் இப்போது அறிய வருவன நான்கு: மாறன் திருப்பதிக் கோவை, நம்பெருமாள் மும்மணிக்கோவை, மாறன் கிளவி மணிமாலை, திருப்பதிக் கலம்பகம் என்பன. திருப்பதிக் கோவை, இவர் செய்த அகப்பொருள் இலக்கண நூலுக்கு இலக்கியமாகச் செய்யப்பட்டது. மற்ற மூன்றும் இவர் செய்த மாறனலங்கார உரையால் நாம் அறிய வருவன.

## திருப்பதிக்கோவை

இது ஆழ்வார் திருநகரியில் வாழ்ந்த திருக்குருகைப் பெருமாள் கவிராயர் பாடிய பிரபந்தங்களுள் ஒன்று. இவர் தாம் பாடிய மாறனகப்பொருள் என்ற அகப்பொருள் இலக்கண நூலில் அகத்திணையியல் களவியல் வரைவியல் கற்பியல் ஒழிபியல் என்று ஐந்து இயல்களை அமைத்தார். அவற்றுள் களவியல் வரைவியல் கற்பியல் என்ற மூன்று இயல்களின் சூத்திரங்

களுக்கு இலக்கியமாக 527 கட்டளைக் கலித்துறைகளாற் பாடிய அகப்பொருட் கோவையே இந்நூல். திருமால் எழுந்தருளிய திவ்விய தேசங்களைப் பாடலுக்கொன்றாக அமைத்துப் பாடிய தன்மையால் இந்நூல் திருப்பதிக்கோவை என்று பெயர் பெற்றது. ஒரு தலத்தைச் சார்த்திப் பாடினால் அத்தலக்கோவை என்று பெயர் பெறுதல் வழக்கு. இது எல்லாத் திருப்பதிகளையும் சார்த்திப் பாடிய காரணத்தால், திருப்பதிக்கோவை என்று பெயர் பெறுகிறது. இதில் அமைந்த துறைகள் 455 ஆகும். நானூற்றுக் கோவை என்ற வழக்கே மிகுதி. இருப்பினும், அம்பிகாபதி கோவை, திருவாரூர்க் கோவை முதலியன நானூற்றின் மிக்க செய்யுட்களைக் கொண்டவை. இந்நூலுள் ஒரு துறை பற்றி வந்த செய்யுட்கள் பல. அன்றியும், இந்நூலாசிரியர் தாமே புதியனவாகப் படைத்த துறைக்காகச் செய்தமைத்த செய்யுட்களும் பல. இக்காரணங்களால் இந்நூற் செய்யுட்கள் நானூற்றின் மிக்கனவாயின. இந்நூல் துறைகள், மாறனகப் பொருளுக்குரிய அகத்திணையியல் ஒழிபியல் என்பவற்றில் எதிலும் அமையவில்லை. அமையாமலே நூல் பூர்த்தியாகவுள்ளது. மேலும் இவ் அகப்பொருளில் அகத்திணையியலும் ஒழிபியலும் கிடைக்கவில்லை. ஆகவே ஆசிரியர் திருப்பதிகள் விஷயமாக இக்கோவை பாடினாரென்றும், இதற்கு இலக்கணமாக களவியல் வரைவியல் கற்பியல் என்ற மூன்று இயல்களை மட்டும் பாடினார் என்றும், மற்ற அகத்திணை ஒழிபு என்ற இரண்டையும் பாடவில்லையோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. இருப்பினும், இந்நூல் ஐந்து இயல்கள் உடையதென்றும் நூற்பாக்கள் 363 என்றும் பழம் பாடல்கள் கூறுகின்றன. கிடைத்த நூற்பாக்கள், இம்மூன்று இயல்களுக்கு மட்டும் உரியன, மொத்தம் 106 மட்டுமே.

### நூலாராய்ச்சி

இதனுள் ஆசிரியர் மங்களாசாசனம் பெற்ற தலங்களும் பிறவும் 95 குறிப்பிடுகிறார். குறிப்பிடாதவை - அட்டபுயகரம் அயிந்திரபுரம் அல்லிக்கேணி ஆதனூர் ஆய்ப்பாடி கண்டங் கடிநகர் கண்ணங்குடி கரம்பனூர் கூடலூர் நந்திபுர விண்ணகரம் நிலாத்திங்கட்துண்டம் நைமிசாரணியம் பவளவண்ணம் வண் வண்டூர் வெள்ளியங்குடி. இவ்வாசிரியர் குருகை ஆழ்வாரிடத்தில் ஈடுபாடு மிக்கவர் ஆதலினால், குருகூரே இங்கு அதிகம் சொல்லப்படுகிறது - 95 பாடல்களில். அடுத்த நிலையில் உள்ளன

அரங்கமும் வேங்கடமும், நம்மாழ்வாருக்குரிய துடரிமலையும். பல பாடல்களைத் திரிபாகவும் யமகமாகவும் அமைத்திருக்கிறார்.

**பழமொழிகள்:** எருத்தின் புறக்கொடைப் புண்ணை எண்ணா இடந்திடந்து வருத்தும் கொடி (114); மீகாமனின்றிப் போகாது வங்கம் (118); உலகத்தொரு சொல்லில்லாதவர் யார், பல கற்றவரும் இனைவது எண்ணார் (182); பயிர்க்குக் களை போம், பசுவுக்கு வாயுறையாம் (265); கடன் கொண்ட' வரைக் கண்டார் நெஞ்சுபோன்று அழல் கானம் (374).

நூலுட் காணப்படும் சிறப்புச் செய்திகளுட் சில: அனுமனை உடன் உண்க நீ என்று அழல் அவி தந்தான் இராமன் (378); குருகூர் விமானம் சீவல்லப பாண்டியன் அமைத்தது (391); கல்லென்ற பேதைப் பெண்ணுருவாக்கியது (அகலிகை) (83); கணிகண்ணன் என்றோர் புலவன் சொலச் சொன்ன வண்ணம் செய்தார் (220); முப்பால் ஓதியைக் கோதற்ற ஞானி என்றேத் தும் உலகில் (116); அன்று பொய்யா மொழியுரை பாவித்து உண்மை கூடலுள்ளார் முன்புரைத்திலரோ (133); சுரமஞ்சரி குணமாலை 10; தென்கடிகையில் வாழ்எம்பிரான் அக்காரக் கனி (314); அருளாளர் அத்திகிரித் திருமால் (5); குருகைத் திரு மால் - ஆதிநாதர் 109, பொலிந்து நின்ற பிரான் (25, 289): ஆமைதன் குஞ்சை நினைந்தே வளர்க்கும் (351); எற்பாட்டுக் குரிய பொழுது, பொழுது படுநேரம் (310); ஐயானனன் - சிவன் (278); கட்டு - களவு செய்து (250); கள்வன் - சீவை குண்டத் திருமால் (62); சுந்தரத் தோளழகர் (39); நம்பி - நறையூர்த் திரு மால் (29; பத்தராவி - திருக்கண்ண மங்கைத் திருமால் (163); வேள் அடி தொட்டுச் சூளிடுதல் (349, 350).

### நம்பெருமாள் மும்மணிக் கோவை

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் செய்த பல பிரபந்தங் களில் இதுவும் ஒன்றெனத் தெரிகிறது. இதன் பாடல்கள் மாற னலங்காரவுரையில் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளன. அன்றி நூல் தனியாகக் கிடைக்கவில்லை. அலங்கார உரை யாசிரியர் இதை 10 இடங்களில் குறிப்பிடுவதோடு இவற்றிற்குத் தாம் விரிவுரை எழுதியிருப்பதாகவும் சொல்கிறார். 'ஒழிந்த அகலம் நம்பெருமாள் மும்மணிக்கோவை விரித்துரையில் காண்க' என்று பலவாறாக விரித்து எழுதியிருக்கிறார்.

மேலும், அலங்கார உரையில் அதிகமான பாடல்கள் (77) நூலாசிரியரே செய்த திருக்குருகை மான்மியத்திலிருந்து எடுத்துத் தரப்பெற்றுள்ளன. அவ்விடங்களில் எல்லாம் உரையாசிரியர் மூலத்தைக் குறிப்பிட்டதில்லை. அதுபோலவே, மும்மணிக் கோவையிலும் பின்னும் பல பாடல்களை இவர் எடுத்துத் தந்து பெயர் சூட்டாமல் இருக்கவும் கூடும்.

முன்குறிப்பிட்ட பத்துப் பாடல்களில், வெண்பா இரண்டு, கட்டளைக் கலித்துறை 2, ஆசிரியப்பா 6. ஆசிரியப்பா நாலடிச் சிறுமையும் 61 அடிப் பெருமையும் உள்ளது. இப்பாடல்களில் குறிக்கப்பட்ட தலங்கள் அரங்கம், காஞ்சி, மயிலை. அரங்கத்தைக் குறிப்பிடும்போது, பெரும்பான்மை காவிரியையும் விதந்து கூறுகிறார். இவற்றை ஆராயும்போது ஆசிரியர் ஒருகால் அரங்கத்திலேயே சென்று சில காலமேனும் தங்கியிருந்திருக் கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இனி மற்றொரு நிலையும் இங்கு எடுத்துக்காட்டத் தோன்றுகிறது. மாறனலங்காரத்தில் பண்டைய ஆசிரியர் பாடல்கள் அல்லாதன யாவும், கவிராயரால் படைக்கப் பெற்றனவே யாகும். அலங்கார இலக்கணமும் மேற்கோள் பாடல்களும் நம்மாழ்வார் புகழாகவே இருக்கவேண்டும் என்றே இவர் நூல் செய்திருக்கிறாரல்லவா? இந்தக் கண்ணோடு நூல் மேற்கோள் பாடல்களை நோக்கும்போது, ஒரு நிலையைக் காண்கிறோம். உவமப்போலி பலவும் கூறுமிடத்து வரிசையாக 9 ஆசிரியப் பாக்களை ஒன்பது மேற்கோள் பாடல்களாகத் தருகிறார்; இவை 274-282 என்ற எண்களைப் பெற்றுள்ளன. இவற்றுள் 274, 275, 276, 281 ஆகிய பாடல்களின் உரையில், 'ஒழிந்த அகலம் நம்பெருமாள் மும்மணிக்கோவை விரித்துரையுள் காண்க' என்று உரைகாரர் எழுதுகிறார். ஆகவே இவை அம் மும்மணிக் கோவைக்குரிய ஆசிரியப்பாக்கள் என்பது தெரிகிறது. தொடர்பான 9 பாக்களிடை இவை ஐந்து ஆனபடியால், ஒன்பதுமே மும்மணிக்கோவை பாடல்களாயிருக்கலாம். மேலும் மும்மணிக் கோவையுள் 30 பாடல்களிலும் ஆசிரியம், வெண்பா, கலித்துறை என்பன மாறி மாறி வருவன; ஆதலால் ஆசிரியம் 10 ஆகல் வேண்டும். 567ஆம் மேற்கோள் பாடலுரையில் 'ஈண்டுரைப்பிற் பெருகும்; நம்பெருமாள் மும்மணிக் கோவை விரித்துரையுள் விளங்கும்' என்று எழுதுகிறார். ஆகவே தொடர்பான இவ்வொன்பது பாடல்

களும் 567ஆம் பாடலும் சேர்ந்து மும்மணிக்கோவைக்குரிய பத்து ஆசிரியப் பாடல்களும் ஆகும் என்று தெரிகிறது.

இனி முன்கூறிய பத்திடங்களில் பெயர் சொல்லிய பாடல் களை நோக்கும்போது, தொடர்நிலைச் செய்யுளுக்கு எடுத்துக் காட்டாகத் தொடர்ந்து ஐந்து பாடல்கள் சொல்லி, இவை நம்பெருமாள் மும்மணிக்கோவை என்கிறார். இவை ஐந்துமே தொடர்ந்த அந்தாதியாய் வந்துள்ளன. இவ்வைந்து பாடல்களும் முறையாக எழுத்தினாலும் அசையினாலும் சீரினாலும் அடியி னாலும் அந்தாதித்து வருவன. இவ்வைந்தில் ஒன்று ஆசிரியம். இதைக் கருதும்போது முற்கூறிய தொடர்பான பத்தில், மும்மணிக்கோவை என்று பெயர் குறிப்பிடாத 277, 278, 279, 280, 282 ஆகிய ஐந்தில் ஒன்று இந்நூலுக்கு உரியதல்லாததா யிருத்தல் வேண்டும். இந்நூற் பாடல்களுக்கு எடுத்துக்காட்டாக இருபாடல்களைக் கீழே தருகிறோம்.

நாவலன்பின் போந்த நறுநீர்த் திருவரங்கம்
காவலன்பொற் றாளாங் கமலத்தே – பாவலர்தம்
பாமாலை சூட்டாதப் பாமாலை யைஎவனோ
தாமா னிடர்க்களிக்கும் சால்பு. 60

மலைமுழை வைகலும் வைகின ராகியும்
கனிகிழங் கடகு கண்டன மாந்தியும்
மூவ ராயும் முதற்கடவுட்
காவல நீயே காத்தல்வேண் டுவலே. 62

சம நிலைக்குரிய மூன்று பாடல்களில், 1, 3 கிளவிமணி மாலை என்று உரைகாரர் கூறுகிறார். இடையிலுள்ள பின்வரும் பாடல் நம்பெருமாள் மும்மணிக்கோவைக்குரியதாய் இருக்கலாம்:

பனிப்பிறைப் பற்றுளைக் கட்செவித் துத்திப் பணாடவிமேற்
குனித்தபொற் சிற்றடிச் சித்திரக் கார்குருகேசன் வெற்பிற்
றுனித்தழ்ற் கட்களிற் றைக்கொடுஞ்சீயந் துரந்திருள்வாய்த்
தனித்துறற் குய்த்துணர்த் துங்கதிர் வேலன் தாழ்குழலே.

## மாறன் கிளவி மணிமாலை

வையாபுரிப் பிள்ளையவர்கள் பதிப்பித்த களவியற் காரிகை யுரையில் காணப்படும் மேற்கோள் நூல்களில் மூன்று கிளவி என்ற பெயரைக் கொண்டவை: கிளவி விளக்கம், கிளவித் தெளிவு, கிளவிமாலை என்பன. மூன்றும் வெண்பா. கிளவி

*மாலையில் இங்கு 4 பாடல்கள் உள்ளன. பாடல்கள் யாவும் கிளவிக்கு (அகப்பொருள் கூற்றுக்கு) இலக்கியமாக அமைந்த பாடல்கள். அந்நூல்கள் மூன்றுமே இன்று கிடைக்கவில்லை. இருப்பினும், நம் கவிராயர் அக்கிளவி மாலையைக் கருத்தில் கொண்டு, கிளவித் தொகைக்கு இலக்கியமாகவும் மாறன் புகழாகவும் அதே பெயரை அமைத்து மாறன் கிளவி மணிமாலை என்ற நூலைக் கட்டளைக் கலித்துறை யாப்பில் செய்தாரென்று கருதுதல் பொருந்தும். இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. இதிலிருந்து இரு பாடல்களை உரையாசிரியரான காரி ரத்தினக் கவிராயர், மாறனலங்காரப் பொதுவியல் இறுதிச் சூத்திர வுரையில் சமநிலைக்கு எடுத்துக் காட்டாகத் தருகிறார்.*

விரியுங் களப முலையும்புன் மூரலும் வேயுமுந்திச்
சுழியும் முரோம வொழுங்குங்கண் டேம்வண்டு சூழ்ந்து செந்தேன்
வழியுந் திருமணி மாலைப் பிரான்வெற்பில் வல்லி செவ்வாய்
மொழியுந் துணைநெஞ்ச மேசெவிக் கேயென்று மூழ்குவதே.

இடிக்குங் கடகளிற் றான்சட கோப னியலிசையாய்
வடிக்குந் தமிழ் மறை பாடிய மாறன் மணிவரைமேல்
நடிக்குங் களிமயி லேவருந் தேல்நுமர் நல்வரைப்பூங்
கொடிக்குங்கொழுகொம்பரா மெமர்மாடக் கொடிக்கழையே.

*இவ்விரு பாடல்களையும் வைதருப்பச் சமநிலை, பாஞ்சாலச் சமநிலையென்றும், மும்மணிக்கோவைப் பகுதியிறுதியில் காட்டிய 'பனிப்பிறைப் பற்றுளை' என்ற பாடலை கௌடச் சமநிலை என்றும் காரி ரத்தினக் கவிராயர் கூறுவது காணத்தக்கது.*

### திருப்பதிக் கலம்பகம்

*இதன் பாடல் ஒன்று மாறனலங்கார உரையில் மேற்கோளாக வருகிறது. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நூல் பற்றிய வேறு பாடலோ வேறு செய்தியோ விளங்கவில்லை. அப்பாடல் பின்வருவது:*

குயில்போல் மொழியும் அயில்போல் விழியும்
  கொடிபோல் இடையும் பிடிபோல் நடையும்
பயில்வோர் அரவில் துயில்வோர் மயிலைப்
  பதியார் முகமா மதியார் முலைதான்
மயில்போல் இயலாள் பயலா நதியும்
  மதியும் பதியும் சடையார் விடையார்

எயில்போர் பொருநாள் வளைவார் சிலையே
எழில்வா ணுதலும் புதலுஞ் சிலையே.

இதனுள் நாலசைச் சீர் முழுதொன்றியதூஉங் காண்க. துறை இயலிடங்கூறல். இந்நூலும் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் பாடியதாயிருக்கலாம். இப்பாடலுள் சொல்லப்பட்ட தலம், திருமயிலை, திருப்பதி என்பது பிற்கால வழக்கு: இது நம் காலத்தில் திருமலை - திருவேங்கடத்தைக் குறிக்கிறது. ஆனால் ஆசிரியர் காலத்தில் திருப்பதி என்றால் பொதுவாய்த் தலம்; சிறப்பாய் ஆழ்வார் மங்களாசாசனம் பெற்ற தலம். திருமயிலை பேயாழ்வார் அவதாரத்தால் சிறப்புப் பெற்ற விஷ்ணுஸ்தலம்; மங்களாசாசனம் உடையதன்று. திருப்பதிக் கலம்பகம் என்பது திருப்பதிக்கோவை போலவும், பிள்ளைப் பெருமாளையங் காருடைய நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி போலவும், எல்லாத் தலங்களையும் போற்றுகின்ற ஒரு கலம்பக நூலாயும் இருக்கலாம். இவ்வாசிரியரே எல்லாத் திருப்பதிகளையும் ஒருசேர அமைத்துப் பாடிய திருப்பதிக் கோவையையும் முன்னர்ப் பார்த்தோம்.

## பிள்ளை லோகஞ் சீயர்

இராமானுசார்ய திவ்ய சரிதை முதலான சில வைணவ சரித்திர மணிப்பிரவாள நூல்கள் எழுதியமையால் இவர் வைணவ சமய இலக்கிய வரலாற்றில் ஒரு நிலைத்த இடம் பெறுகிறார்.

வரலாறு இவர் மணவாள மாமுனிகள் திருவடிகளுக்கு அந்தரங்கரான கோவிந்தப்பருடைய திருவம்சத்தில் உதித்தவர். இந்தக் கோவிந்தப்பர் துறவியாகி, பரவஸ்து பட்டர் பிரான் ஜீயர் என்று அஷ்டதிக்கஜங்களில் ஒருவராயிருந்தவர்; இவருடைய புதல்வர் ஓர் அழகிய மணவாளன்; இவருடைய பௌத்திரர் வரதாசாரி எனப்பட்டவர்; இவ்வரதாசாரி துறவு பூண்டு பிள்ளைலோகம் சீயர் எனப் பெயர் பூண்டார்; இப்பெயர் பிள்ளை லோகார்யம் சீயர் என்றும் வழங்குவதுண்டு. பிள்ளை லோகாசாரியர் என்ற பிரசித்திபெற்ற ஆசாரியர் இருப்பதனாலே, இவர் பெயர் பிள்ளைலோகம் சீயர் எனச் சுருக்கப்பட்டது என்று ஆன்றோர் கூறுவர். இவருடைய திருநட்சத்திரம் சித்திரைத் திருவோணம். இவர் கடல் கொண்ட கடல்மல்லைத் தலசயனத் துறைவார் சந்நிதியைப் புதிதாய்க் கட்டி, பெருமாளைப்

பிரதிட்டை பண்ணி, தீர்த்தம் மரியாதைகளெல்லாம் பெற்றவர்,* புரட்டாசித் திருவோணம் சிறப்புடையது, அது பொய்கை யாழ்வார், பிள்ளை லோகாசாரியர் திருநட்சத்திரம். இவர் பற்றிய வேறு வரலாறுகள் தெரியவில்லை.

## நூல்கள்

பிள்ளை லோகஞ்சீயர் முந்தையோர் நூல்களில் சம்பிரதாய வியாக்கியானம் ஏற்படாதவற்றுக்கு மட்டும் வியாக்கியானம் எழுதினார். இவர் செய்த நூல்கள் பின்வருவன;

இவையாவும் மணிப்பிரவாள நடை. சிலவற்றில் நடை முழுமையுமே வடமொழியாயிருக்கும்.

1. இராமானுசார்ய திவ்ய சரிதை.
2. மணவாள மாமுனிகள் சரித்திரமாகிய யதீந்திரப் பிரவணப் பிரபாவம்.

இவை இரண்டும் புதிதாக எழுதிய தனி வரலாற்று நூல்கள்.

3. திருவரங்கத்தமுதனார் செய்த இராமானுச நூற்றந்தாதி வியாக்கியானம்.
4. பிள்ளை லோகசாரியர் செய்த உரைநடை நூலான அர்த்த பஞ்சக வியாக்கியானம்.
5. அவருடைய மாணாக்கர் விளாஞ்சோலைப் பிள்ளை செய்த சப்த காதை வியாக்கியானம்.
6. மணவாள மாமுனி பாடிய நூல்களின் வியாக்கியானம்: அ. உபதேச ரத்தினமாலை; ஆ. ஆர்த்திப் பிரபந்தம்; இ. திருவாய்மொழி நூற்றந்தாதி உரை.
7. ஸ்ரீ வைஷ்ணவ சமயாசார நிஷ்கர்ஷம். இது தனி உரை நடை நூல்.
8. நாலாயிரப் பிரபந்தத் தனியன் வியாக்கியானம்.
9. உபதேசத் திருநாமம்.
10. திருமந்திரார்த்த அரும்பத விளக்கம்.

---

* இச்செய்திகள் இவர் மரபிலுதித்துச் சென்னையில் இன்று தமிழ்ப் பண்டிதராயிருக்கும் தல சயனத்துறைவார் என்ற பெயர் கொண்ட சுவாமி தெரிவித்தவை. இந்தச் சுவாமிக்குக் கடல் மல்லையில் இன்னும் இங்கு சொன்ன மரியாதைகள் உள்ளன.

இந்நூல்களைக் குறித்து மேலே சில சொற்களைக் கூறுவோம். வைணவ சமய வியாக்கியான கர்த்தாக்கள், பொதுவாகத் தங்கள் சமய நூல்களைவிட்டு விலகிச் செல்வதில்லை. எனினும், இவ்வுரைகாரர் சில இடங்களில் தரும் குறிப்புக்களை இங்கு எடுத்துக் காட்டலாம். நாலாயிரத் தனியன் வியாக்கியானத்தில், பெரிய திருமொழித் தனியனாகிய 'நெஞ்சுக் கிருள்கடி தீபம்' என்ற பாடலில் வரும். 'தமிழ் நன்னூற்றுறைகள் அஞ்சுக்கு இலக்கியம்' என்ற தொடரின் உரையில், 'தமிழுக்கு எழுத்து முதலான அஞ்சு லட்சணத்தையும் அறுதியிடுவதான நன்னூல் என்றொரு சாஸ்திரம் உண்டு' என்று இவர் எழுதுகிறார். தமிழ் நன்னூல் துறைகள் என்ற தனியன் தொடர், பொதுமையாக நன்னூல் என்று கொள்வதே அன்றி ஒரு நூலைக் குறிப்பிட்டதன்று. ஆனால் இவ்வுரைகாரர், அதை நன்னூல் என்ற இலக்கணத்தைக் குறிப்பிட்டதாகக் கொண்டு, இது பஞ்ச லட்சணம் கூறுவது என்றார். தமிழ் இலக்கண நூற் பயிற்சி விரிவாக இன்மையால் அவ்வாறு சொன்னார் போலும்; நன்னூலில் ஐந்து அதிகாரங்கள் என்றுமே இருந்ததில்லை; எழுத்து சொல் இரண்டு மட்டுமே இருந்தன.*

மற்றுமோரிடம்: உபதேச ரத்தினமாலை உரை, முதற்பாடல்: 'அது செய்யுமிடத்து வெண்பாவிலே வைத்தாய்த்து இவர் அருளிச் செய்தது, அதாவது தமிழுக்கு வெண்பா கலித்துறை என்னுமா போலே அனேகம் பாக்களுண்டிறே. அதில் கலித்துறையாலே ப்ரவிருத்தமாய்த்து சரமப்பந்தமான நூற்றந்தாதி. அதிலும் அப்யசிக்க எளிதாயிருக்கிற வெண்பா என்கிற சந்தசிலே வைத்தாய்த்து சதிருடைய தமிழ் விரகரான தாம் அருளிச் செய்தது, கற்கவிறே தாம் உபதேசிக்கிறது. 'வெண்பா இருகாலிற் கல்லானை' என்றிறே இதன் எளிமையிருப்பது. இங்கு அவ்வையாரின் இத்தொடக்கமுடைய தனிப்பாடலைக் குறிப்பிடுகிறார்.

## இராமானுசார்ய திவ்ய சரிதை

இந்த நூல் இராமானுசர் சரித்திரத்தை மிகவும் விரித்து (ராயல் அளவில் 200 பக்கம் கொண்ட) பெருநூலாகச் சொல்வது. இவ்வாசிரியருக்கு மூலம், இராமானுசர் காலத்திலேயே கருட

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 13ஆம் நூற்றாண்டு பார்க்க. இப்படிக் கொள்ளாமல், நன்னூலில் ஐந்து பகுதிகள் உள்ளன என்று கருதுவது பொருந்தாது.

வாகன பண்டிதர் எழுதிய திவ்விய சூரிசரிதம் முதலான வடமொழி நூல்களும், பெரிய திருமுடி அடைவும், பின்பழகிய சீயருடைய ஆறாயிரப்படி குருபரம்பரா ப்ரபாவமும். வழக்கம் போல், இதுவும் அதிக வடமொழித் தொடர்கள் கலந்த மணிப் பிரவாளமே. வாதங்கள் வருமிடங்களில் இவர் பக்கம் பக்கமாக வடமொழிச் சுலோகங்களையே சொல்லிக்கொண்டு போகிறார். அன்றியும் இராமானுசர் வரலாற்றையே விரித்துக் கூறும் தமிழ்ப் பாடல்களையும் இடையிடையே தருகிறார். பல பாடல்கள் இவ்வாறு உள்ளன. இவை இவரே செய்தனவா, அல்லது வேறு ஏதேனுமொரு நூலிலிருந்து மேற்கோளாக எடுத்துத் தருகிறாரா என்பது சொல்லமுடியவில்லை. இரண்டொன்றைக் கீழே தருகிறோம். பேரருளாளர் (அத்திகிரி வரதராசப் பெருமாள்) இராமானுசர், கோயிலுக்கு (திருவரங்கத்துக்கு)ப் போக விடை கொடுத்தனுப்புகிறார்:

சந்ததி யில்லா மனைமகள் போலே
　　தடமுலை யில்லா மடமகள் போலே
செந்தண லில்லா ஆகுதி போலே
　　தேசிக னில்லா வோதுகை போலே,
சந்திர னில்லாத் தாரகை போலே,
　　இந்திரனில்லா உலகம் போலே
எங்கள் இராமா னுசமுனி போனால்
　　இப்புவி தானினி எப்படி யாமோ?

இராமானுசர் பிரிய மனமின்றிப் பிரிந்து செல்கிறார்:

திக்கு நோக்கித் திரும்பித் திரும்பியே
　　தேவரா சர்தம் கோயிலை நோக்கியே
செக்கர் மேனி மிகப்பெருங் கைகளால்
　　சோர்ந்த கனிகள் பனிநீர் தெளித்திட
மிக்க கோயில் பெருவழி தன்னிலே
　　வேதம்வல்ல மறையோர்கள் தம்முடன்
புக்கு கத்துக்குப் போகிற பெண்கள்போல்
　　போயினார் பெரும் பூதூர் முனிவனார்.

இவையன்றி, இராமானுசரைப் புகழும் பாடல்கள் மிகப்பல உள்ளன. யாவும் பிரபந்த அமைப்பும் உடையவை. சில பின் வருவன. தாலாட்டுப் பாடல்:

அத்திரிசூர் ஞால மனந்தாவ தாரமெனச்
சித்திரையில் ஆதிரைநாள் வந்துதித்த தேசிகனோ.

கேசவனார் வாழக் கிளைவாழக் கீர்த்தி மிகும்
ஆசூரி வந்துதித்த ஆரியனைச் சொன்னாரார்.*

*திருமஞ்சனக் கவி:*

குத்திரப் பரசமய நிரசநந் தால்வந்த
கொடுவிடாய் தீருகைக்கோ
கூற்றப் பெருங்கலியை மாற்றிப் புகட்ட கொடுஞ்
சந்தாப மாறுகைக்கோ

மத்தளத் தோடு முரசுடக்கை மல்லாரி
பேரிகைகள் திமிதிமெனவே
வானவர்கள் மலர்தூவ ஆவலொடு கின்னரர்கள்
தனாதனா என்றேத்தவே

எத்திசையு மெண்ணில் எழுபத்து நால்வருடனே
எந்தை கந்தாடையாண்டான்
எப்பொழுது மினிதாக ஏற்றகைங் கர்யங்கள் செய்து
இணையடிதொழுதேத்தவே

பத்தியுடை யடியவர்கள் சுற்றி நீராகவே
பண்ணும் பரந்தாமனே
பரவாதி மத்தகஜ பஞ்சானைப் பெரிய
பாபாத்ரி வச்ராயுதா

முத்திதனை வித்தார மாகவரு ளண்ணலே
முடிமன்னர் பணிபாதனே
முரவைரி பரனென்ற எதிராசனே நீரிந்
நின்ற திருமஞ்சனம் செய்வதே.

*திருமஞ்சனக் கவி, வாகனக்கவி, கட்டியம் முதலாயின விருத்த மாயினும், நான்கடியின் மிகுந்து போதலுண்டு.*

*திருச்சின்னம்:*

யதிராசன் வந்தான் யதிராசன் வந்தான்
யதிராசன் வந்தான்
எதிராரு மில்லாதான் வந்தான்
மதிராசி இராமானுசன் வந்தான்.

---

* *எமது தமிழ் இலக்கிய வரலாறு 12ஆம் நூற்றாண்டு பார்க்க.*

ஆமா றறியும் பிரான் வந்தான்
சீமான் சரணாகதி தந்த பிரான் வந்தான்
அரணாகுங் கழலோன் வந்தான்
முரணாகும் வாதியரை வெல்லுமவன் வந்தான்
மாநிலத்தில் வேதியரில் மிக்கமகன் வந்தான்.

வாய்த்த பெரும்பூதூரில் மன் வந்தான்
ஏத்து மிளையாழ் வாரென்னு மெம்பிரான் வந்தான்
வளையாழி ஏந்திய மால் வந்தான்
நளினமுக வெம்பெருமான் எங்கள்
எதிராசன் வந்தான்
வம்பொருநாட் செய்யா வானவன் வந்தான்
உம்பரெல்லாம் நோக்கும் இராமானுச
முனிவனோ வந்தான்
வாக்கிலுயர் சூரியில் மன்னவன் வந்தான்
பார்க்கு ளுடையவவரா மென்னு மொரு
முதல்வன் வந்தான்.

*வாழித் திருநாமம்:*

நிழல் கொடுத்துப் புகழ்படைத்து நின்றபிரான் வாழியே
நின்றிருந்து பட்டோலை கொண்டபிரான் வாழியே
களிக்குமறைப் பொருள் விரித்துக் கீண்ட பிரான்வாழியே
கேள்விமிகு மாறன்செந் தமிழ்செய்தான் வாழியே.

அழித்தலுத் தவன்றிசைக ளாக்கினான் வாழியே
ஆளவந்தா ராக்கினையை அறவளர்த்தோன் வாழியே
கொழிக்குமணி மாடம்சூழ் பூதூரான் வாழியே
குரைகழற்குப் பாதுகமாய்க் கூடினான் வாழியே.

*பல்லாண்டு முதலான பாடல்களும் உள்ளன.*

*சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் இந்நூலாசிரியர் இராமானுசர் பாடியதாக அனேகம் பாடல்கள் பாடியிருக்கிறார். திருக்குருகூரை நண்ணியதும் 'இதுவோ திருநகரி' என்று இராமாநுசர் பாடியதாக வரலாறு. தமிழில் இவர் ஒரு சொல்லும் சொன்னதில்லை. எனவே பாடல்கள் ஆசிரியருடைய கற்பனை. இராமானுசர் ஆண்டாளைப் பின்வரும் பாடல் சொல்லி மங்களாசாசனம் பண்ணினார் என்று சொல்கிறார்.*

வாழி திருப்பாவை பாடு மடப்பாவை,
வாழி யரங்க மணவாளர், – வாழியவன்
மாடுநிற்கும் புள்ளரையன், வாழி பெரியாழ்வார்
பாடுநிற்கும் வேதாந்தப் பா.

*கிடாம்பிப் பெருமாளைப் புகழ்ந்த ஒரு பாடல்:*

வேதாந்தங் கொண்டு வடதிசைப் போதந்து மீண்டவந்நாள்
போதார் பொழிற்றும்பை யூர்வந்த கொண்டிதன் புன்மைகெட
யாதானு மாகிலு மென்பேற்றை யெய்தென் றெழுதியருள்
தாதாரு மையன் கிடாம்பிப் பெருமாள் தயாநிதியே.

*இராமானுசர் முதலிகளை அழைத்துக்கொண்டு ஸ்ரீ வில்லிபுத்தூர் செல்லுங்காலை, அவர்கள் சோர்ந்து போனார்கள் போலும். இவர் இடமணித்து என்று அகத்துறையில் தலைவன் தலைவிக்குக் காட்டுவதுபோல் காட்டுவதாக ஒரு பாடல்:*

முத்தூரும் வெண்ணகையாய்! கடந்தோம் முதுபாலைநிலம்,
எத்தூரம் போகும்முன் செல்லுகின்ற தூரம் எனிலிரண்டு
செய்த்தூரம் போருந் திருமல்லிநாட் டுறைந்தவில்லி
புத்தூரும் பச்சைத் துழாய்மணம் நாறிய பொய்கையுமே.

*ஆண்டாளைப் பாதாதிகேசமாகச் சேவிக்குமிடத்தில் ஒரு பாடல்:*

மெல்லிய பஞ்சடி யுந்துவ ராடையும் மேகலையும்
வல்லியை வென்ற மருங்குமுத் தார வனமுலையும்
சொல்லியல் வன்மையும் வில்லிபுத் தூரம்மை தோளழகும்
முல்லையை வென்ற நகையுமெல்லாமென்றன் முன்னிற்குமே.

*கோவிந்தப் பெருமாள் எம்பார் ஆகியபின், அவர் நிலையைக் கண்ட முதலிகள் அவரைப் போற்ற, அப்போற்றல் சரியென்று அவர் தம்மையே சிலாகித்துப் பாடியதாக ஒரு பாடல்:*

பற்ப மெனத்திகழ் பைங்கழ லுன்றன
    பல்லவ மேவிரலும்
    பாவன மாகிய பைந்துவ ராடை
    பதிந்த மருங்கழகும்
முப்புரி நூலொடு முன்கையி லேதிகழ்
    முக்கோல் தன்னழகும்
    முன்னவர் தந்திடு மொழிகள் நிறைந்த
    முறுவல் நிலா வழகும்

கற்பக மேவிய கருணைபொ ழிந்திடு
கமல முகத்தழகும்
காரி சுதன்கழல் சூடிய முடியுங்
கனநற் சிகைமுடியும்
எப்பொழு தும்மெதி ராசன் முகத்தழ
கென்னித யத்துளதால்
இல்லை யெனக்கெதி ரில்லை யெனக்கெதிர்
இல்லை யெனக்கெதிரே.

*இராமானுசர் மேல் நாட்டிலிருந்து கோயிலுக்குத் திரும்பிய போது கோயிலார் அவரைப் போற்றுகிறார்கள்:*

வையம் குருடன்றோ, மாமறையும் பொய்யன்றோ,
ஐய னுரைத்தமிழ் ஆரறிவர்:– வையத்துக்
கூன்று கோ லெந்தை எதிராசர் ஆதரித்த
மூன்றுகோல் காண்பதற்கு முன்.

*அன்றி, இராமானுசர் வரலாற்றில் பல செய்திகளும் புனைந்துரையாகக் கூறுகிறது. இவர் மங்களாசாசானம் பெற்ற தலங்கள் யாவும் சென்று வழிபட்டார் என்று ஒவ்வொன்றாய் விரித்துக் கூறுகிறது. இதில் மிகைபடுத்திய செய்திகளும் உண்டு. இவருடைய சித்தாந்தத்தைப் பிரமாணத்திலே தரிசிப்பித்ததைப் பிரத்தியட்சத்திலும் தரிசிப்பிக்க வேண்டும் என்று கேட்ட அரசன் வித்துவான்களின் பொருட்டாக ஒரு ராத்திரியிலே வேதாந்த சாரத்தைத் தம்முடைய திருக்கைகளிலே விரித்தெழுதி அதைச் சரசுவதியின் கரத்திலே வைத்துக் கதவைச் சாத்தி மறுநாள் திறந்து பார்க்க, அது சரசுவதியின் சிரசிலே சிரோ பூஷணமாயிருந்ததாம். கண்டு இராமானுசர்,*

நாம்பெற்ற நன்மையும் நாமங்கை நன்னெஞ்சத்து
ஓம்பியிருந் தெம்மை ஓதுவித்து – வேம்பின்
பொருணீர்மை யாயினும் பொன்னாடுபா டென்னும்
அருள் நீர்மை தந்த அருள்

*என்று பாடித் துதித்தாராம். பெரிய நம்பியிடம் இவர் இரண்டாம் முறையும் துவயார்த்தம் கேட்கிறார். உடையவர் திருவேங்கட யாத்திரை சென்றபோது, பருத்திக் கொல்லையம்மாள் என்ற பக்தர் திருமாளிகைக்கு எழுந்தருளினார். அவர் அந்நேரம் தெருவில் உபாதானம் எடுக்கச் சென்றிருந்தார். அவருடைய தேவிகள் மிகவும் கந்தலான புடவை மட்டுமே அணிந்திருந்த*

படியால், வெளியிலே வந்து, இவரை உபசரிக்க லச்சித்து ஒளித் திருந்தார். உடையவரும் தெரிந்து, ஒரு புடவையை எறிய, அவ்வம்மையார் அதை அணிந்து வெளிவந்து இவரை உபசரித்துச் சமையல் செய்து உண்பித்தார் என்பது ஒரு வரலாறு அக்காலத்துப் பாகவதர்களின் வறுமை நிலையை விளக்கிக் காட்டுகிறது.

உடையவரின் ஆசாரியருள் ஒருவரான பெரிய திருமலை நம்பிகள் இவர் வருவதை அறிந்து, வழியில் எதிர் சென்று தீர்த்தப் பிரசாதம் கொடுத்து வரவேற்றபோது, இவர் "தேவரீரே எழுந் தருளவேண்டுமோ, ஒரு சிறியார்களில்லையோ?" என்று கேட்டார். அவரோ, "நாலு வீதியிலும் ஆராய்ந்தவிடத்து என்னில் சிறியாரைக் கண்டிலேன்" என்றாராம். எத்துணைப் பணிவும் அதனாலேயே உயர்வும் சிறப்பும் பொருந்திய சொற்கள்!

ஒருநாள் கோவிந்தப் பெருமாள் நந்தவனத்தில் ஒரு பாம்பின் வாயில் கைவிட்டுப் பிறகு தம் பின்வருவதைக் கண்டு உடையவர், 'இதுவென்ன' என்று கேட்டபோது, அவர் "ஒரு பாம்பு நாக்கை நீட்டிக்கொண்டு நோவு படும்படிகண்டு, சமீபத்திலே போய்ப் பார்க்குமளவில். அதன் நாக்கிலே முள்ளிருக்கக் கண்டு அந்த முள்ளை வாங்கினேன்" என்று விண்ணப்பம் செய்ய, உடைய வரும் "இவருடைய தயை இருந்தபடி என்!" என்று மிகவும் உகந்தருளினாராம்.

'பின்னையு மொருநாள் கோவிந்தப் பெருமாள், திருமாலை நம்பிக்குத் திருப்படுக்கை படுத்துத் தாம் முதலடியிலே படுத்துக் கொண்டு பார்க்க; உடையவரும் இத்தை ஒருநாள் கண்டருளி திருமலை நம்பிக்கு விண்ணப்பஞ் செய்ய; திருமலை நம்பியும் கோவிந்தப் பெருமாளை அழைத்தருளி, "நீர் நமக்குப் படுத்த படுக்கையிலே படுத்துக் கொண்டிருந்தீர் என்று கேட்டோம், இப்படிச் செய்யலாமோ? இதுக்குப் பலமேது?" என்று கேட்டருள, கோவிந்தப் பெருமாளும், 'நரகம்' என்ன; நம்பியும், "இப்படி யறிந்திருந்து செய்வானென்" என்ன; கோவிந்தப் பெருமாளும், 'தேவரீர் திருமேனியிலே ஒன்று உறுத்துதல், கடித்தல் செய்யாமல் கண் வளர்ந்தருளப்புக்கால் அடியேனுக்கு நரகமே யமையும்" என்று விண்ணப்பம் செய்ய; நம்பியும் 'இதொரு ப்ரபத்தி இருந்த படியென்' என்று மிகவும் உகந்தருளினார். சபரியின் செயலும் கண்ணப்பர் செயலும் இங்கு நினைவு கூரத்தக்கன.

இராமானுசர், வீதியில் சீரார் வளையொலிப்ப வந்து திறவாய் என்று திருப்பாவையை அனுசந்தானம் பண்ணிக்

கொண்டே நின்ற அளவில் பெரிய நம்பி திருமாளிகையில் அவர் மகள் அத்துழாய் கதவுதிறக்கவும் கண்டு மூர்ச்சித்து விழுந்தார் என்ற செய்தி, இந்நூலில் திருக்கோட்டியூர் நம்பி திருமாளிகையில் அவர் மகள் தேவகிப் பிராட்டி கதவு திறக்க நேர்ந்தது என்று சொல்லப்பட்டுள்ளது.

கோவிந்தப் பெருமாளைத் திருத்திப் பணிகொண்டு சந்நியாச ஆசிரமம் கொடுத்து, உடையவர் தம்முடைய திருநாமத்தையும் கொடுத்தாராம். அப்போது அவர் "உமது திருவடி நிழலையே பற்றி இருந்த அடியேனுக்குத் திருநாம நிழலே போதும்" எனலும் இவர் தம் பெயரின் (எம்பெருமானார் என்பதன்) ஆதியந்தத்தை மட்டும் வைத்து 'எம்பார்' என்று பெயரிட்டாராம்.

சுவையான வழக்குக்களும் பல இந்நூலின்கண் உள்ளன. திருமலைமேல் இராத் தங்கல் கூடாது என்பது ஒன்று; இன்றும் கூட உள்ளது. 'திருச்சித்ரகூட கிரியிலே பெருமாள் பிராட்டி கையைப் பிடித்துக் கொண்டு உலாவி யருளினாப் போலே, அத்திகிரியிலே, திருக்கச்சி நம்பிக்குத் திருஷ்டி கோசரமாய் இவர் ஆனந்திக்கும்படி பெருந்தேவியாரான பெரியபிராட்டியின் திருக்கையைப் பிடித்துக்கொண்டு வைய மாளிகையிலே பேரரு ளாளர் தாம் வளைய வளைய உலாவி யருள்வது' - என்கிறார். இதுவும் இருபதாம் நூற்றாண்டுக் கண்ணோடு பார்த்துச் சுவைக்க கூடிய செய்தி. தேசாந்தரகதனான புத்ரன்வருகிறான் என்றால் மாதாபிதாக்கள் காண ஆசைப்படுமாப் போலே, திருவரங்க நாதன் இராமானுசரைக் காண ஆசைப்பட்டான் என்கிறார். இது, பைபிளில், ஊர் சுற்றித் திரிந்த மகனைத் தந்தை உபசரித்த கதையை நினைவூட்டுகிறது.

சைவ தூஷணமும் இந்த நூலில் குறைவில்லாமல் உண்டு. கிருமி கண்ட சோழன் என்ற வரலாறு ஒன்று; மற்றது கோவிந்தப் பெருமாள் வரலாறு. இவர் உடையவருடைய சிறிய தாயார் புதல்வர். காசியில் கங்கையில் இவர் நீராடியபோது கையில் ஒரு சிவலிங்கம் வர அதைப் பூசை செய்துகொண்டு இவர் காளத்தி யில் தங்கியிருந்தார். உள்ளங்கை கொணர்ந்த நாயனார் என்பது பெயர். இவரை வைணவத்துக்கு மாற்றினால், தம் சமயத்துக்குப் பலம் என்று உடையவர் கருதினார். அக்கருத்தை முற்றுவிக்கும் படி திருமலையிலிருந்த பெரியதிருமலை நம்பிக்குச் சொல்லி அனுப்பினார். "உள்ளங்கை குளிர்ந்த விடத்தே சுருள் நாற்றம் எழும்பிற்று. அவர் இப்போது துர்வாசனாதியாத்தாலே அன்னிய

பரராய்க் காளத்தியாகிய காட்டிலே நின்றார்" என்கிறார். அவர் 'ருத்ராபிஷேகக் குடமெடுத்து வரக்கண்டு, நம்பியும் அவனைப் பார்த்து, கொன்றைச் சடை முடியானைக் குளிர நீராட்டினால் இன்றுனக் குண்டாகும் பயனென்? என்றருளிச் செய்ய, அவரும் இப்பாசுரங் கேட்டு விஸ்மயமானமுகனாய் இவரையும் ஏறப் பாராநின்றுகொண்டு போனான்.' திருமலை நம்பியும் அவரிடம் பக்குவமாகப் பேச்சுக் கொடுத்தார். பின் தேவனெம் பெருமானுக் கல்லால் பூவும் பூசனையும் தகுமே என்ற பாசுரத்தை நம்பி சொல்லியபோது, அவனும் திடுக்கென்று குதித்துக் கையில் படலிகையையும் கழற்றி எறிந்து தரித்திருந்த ருத்ராக்ஷ வடங் களையும் அலங்கலழிய வீசிப்போகட்டு 'தகாது தகாது' என்று நம்பி திருவடிகளிலே அடைவுகெட விழுந்து புலம்பினார். பின்னால் தம்மைக் குறிப்பிட்டுக் கொள்ளும்போது இவர் 'காளத்தியில் கையும் குடமும் கழுத்தில் இலந்தைக் கொட்டை யும் ருத்ராக்ஷ வடமுமாய் எளிவரவு பட்டு நிற்கின்ற நிலைமை' என்கிறார்.

முன்னமே கோவிந்தபட்டர், அவர் இவர் என்ற மரியாதை பெற்றிருந்த அவர், ருத்ராபிஷேகக் குடம் என்று சொல்ல வந்த வுடனே அவன் இவன் போனான் என்றாகிவிடுகிறார்.

திருமலைமேல் நின்ற சிலை வடிவத்தை இராமானுசர் திருமாலாக நிரூபித்தார் என்ற கதையும் இங்குள்ளது.

**வருணனை**

பல இடங்களில் இவர் வருணனைப் பகுதிகளைப் பெரும் பான்மையும் வடமொழி விரவாமல் அடுக்கிச் சுவைபடச் செய்யுளோசையாய்ச் சொல்வது படித்து இன்புறத்தக்கது.

கலியனுடைய திருவுருவ வருணனை: அணைத்தவேலும் தொழுதகையும் அழுந்திய திருநாமமும் ஓமென்ற வாயும் உயர்ந்த மூக்கும் குளிர்ந்த முகமும் பரந்த விழியும் இருண்ட குழலும் சுருண்ட வளையமும் வடிந்த காதும் அலர்ந்த காது காப்பும் தாழ்ந்த செவியும் சரிந்த கழுத்தும் அகன்ற மார்பும் திரண்ட தோளும் நெளிந்த முதுகும் குவிந்த இடையும் அல்லிக் கயிறும் அழுந்திய சீராவும் தூக்கிய கடுங்கோவையும் தொங்கலும் தனி மாலையும் சாத்தின திருத்தண்டையும் சதிரான வீரக் கழலும் குந்தியிட்ட கணைக்காலும் குளிரவைத்த திருவடி மலரும் வாய்த்த மணங்கொல்லையும் வயலாலி மணவாளன் வாடினேன்

வாடி வாழ்வித்தருளிய நீலக்கலிகன்றி மருவலர்த்த முடல்துணிய வாள் வீசும் பரகாலன் மங்கை மன்னனான வடிவே.

**ஆண்டாள் திருவுருவ வருணனை பாதாதிகேசம்**

பாடகமே யென்னப்படுமதான பாடகஞ்சேர் மெல்லடி களையும், ஆடையுடுப்போம் என்று அவனுடுத்த பீதக வண்ண வாடையையும் அன்றிக்கே, மந்திரக்கோடியுடுத்தபடியையும் என்கைப்பற்றி அவன் கையைப் பற்றப்படுமதாய் சூடகத்தோடே கூடின வெள்ளை வளைக்கையையும், அதிலே கழுநீர் பிடித்த அழகையும் அத்தோபாதி தோள்வளையோடே கூடி அழகியதாய் மருங்கிலே நீட்டி நேரே பொகட்ட மற்றத் திருக்கையழகையும், கொம்மை முலையு மிடையும், "ஊனுடையாழிசங் குத்தமற்கென் றுன்னித் தெழுந்த வென் தடமுலைகள்" என்று கொண்டாடும தான திருமுலைத் தடங்களையும், அதின் மேலே பல்கலனும் யாமணிவோம் என்கிறபடியே அதில் அவன் தங்கும்படியான குங்குமக் குழம்பின் எழிலையும் அவன் பூட்டப் பூட்டின பல ஆபரணங்களையும், அதில் மேலாய்க் காறை பூணும் கண்டத் தினழகையும், அதுக்கு மேலே செவிப்பூவே என்று அவன் தோள்களுக்கு அடையாளமானவற்றோடே கூடின திருச்செவி மலர்களையும், அவன் விரும்பிப் போடுமதான முத்தன்ன வெண் முறுவல் செய்ய வாயையும் அதினழகுக்கு மேலே குமிழழகைக் கொள்ளை கொள்ளும் கொடி மூக்கையும் அத்தோடே சேர்ந்து செவியளவும் வளர்ந்து இனவேல் நெடுங்கண்கள் என்றும் என் பொரு கயல் கண்ணிணை என்றும் சொல்லப்படுகிற திருக் கண்களையும், அதுக்கு மேலான நன்னுதலையும் திங்கள் திரு முகத்தையும், குழல்கோதை என்னும்படியான மயிர் முடியையும் மணமாலை சூடின கோலத்தோடே நிற்கிற சூடிக் கொடுத்த சுடர்க் கொடியை பதிஸம்மாளிதமான வடிவழகைப் பாதாதி கேசாந்தமாக ஸேவித்தார்.

**காவிரிச் சோலைகளின் வருணனை**

பொன்னு மாமணியும் முத்தமும் சுமந்து பொருதிரை மாநதி புடை சூழ்ந்து அன்னமாடுலவு மலைபுனல் சூழ்ந்த படியையும் சந்தினொடு மணியும் கொழிக்கும் புனல் காவிரி என்றும், வண்டு பாடும் மதுவார் புனல் வந்திழி காவிரி என்றும், துளைக்கை யானை மருப்பும் அகிலும் கொணர்ந்துந்தி முன் திளைக்கும் செல்வப் புனல் காவிரி என்றும், பரந்த பொன்னிரந்து நுந்திவந் தலைக்கும் வார்புனல் என்றும், புண்ணந் துழாமே பொருநீர்

என்றும், இப்படி ப்ரவஹிக்கிற திருக்காவேரியின் ஜலஸம்ர்த்தி யையும், அதில் நண்டையுண்டு நாரை பேர வாளை பாய நீலமே அண்டை கொண்டு கெண்டை மேயும் படியையும், அதனருகில் அண்ட நாறும் பொழில்களையும் அணி பொழில்களையும், கொங்கு நீர் பரந்து பாயும் பூம் பொழில்களையும் அதில் போதில் வைத்த தேன் சொரியும்படியையும், அதினருகில் அங்கயல் பாய் வயலையும் அதில் சேவலொடு பெடையன்னம் செங்கமல மலரேறி ஊசலாடும்படியையும், திருமுகமாய்ச் செங்கமலம் திருநிறமாய்க் கருங்குவளை பொருமுகமாய் நின் றலரும் படியையும், திருவடிதன் திருவுருவும் திருமங்கை மலர்க் கண்ணும் காட்டி நின்று உருவுடைய மலர் நீலம் காற்றாட்ட வோசலிக்கும் படியையும் - உரம் பெற்ற மலர்க்கமல முலகளந்த சேவடி போலுயர்ந்து காட்ட வரம்புற்ற கதிர்ச் செந்நெல் தாள் சாய்த்துத் தலைவணங்கும் படியையும் - புதுநாண்மலர்க் கமலம் எம் பெருமான் பொன் வயிற்றில் பூவே போல்வான் பொது நாயகம் பாவித்திறுமாந்து பொற்சாய்க்கும் படியையும்; அதில் பூமருவு புள்ளினங்கள் புள்ளரையன் புகழ் குழறும் படியையும், யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும் படியையும், எல்லியம் போதிருஞ் சிறை வண்டெம் பெருமான் குணம் பாடும் படியையும், மற்றும் வண்டின முரலுஞ் சோலை இத்யாதியான ஆராமங்களையும் கரை வழியே கண்டு கேட்டு அநுபவியா நின்றார்.

### சொற்கள்

இந்நூல் அக்காலத்து வைணவ சமூகத்தில் வழங்கிய சொல்லாட்சிகளைக் காட்டும் கண்ணாடிபோல் உதவுகிறது. முந்தை வைணவச் சொல்லாட்சிகளை இவர் அப்படியே காட்டு கிறார். போர் என்பது ஒரு சொல்; மிகவும் என்ற பொருளுடையது. இராமாயணத்தின் பகுதிகளை இவர் ஸ்ரீமத் ஆரணிய காண்டம், ஸ்ரீமத் சுந்தர காண்டம் என்றே வழங்குவார். அரங்கத் தமுத னாரைப் பிள்ளையமுதனார் என்பார். வீராணத்தேரியை வீரா வணத் தேரி என்பார். மனைவி என்ற சொல்லை மிகவும் மரியாதை யாகவே குறிப்பிடுவது வைணவ மரபு. கூரத்தாழ்வானுடைய தேவிகள் என்று சொல்லும்போது பொருள் மனைவி என்பது; பன்மையல்ல; ஒருமையே. விளியாக எப்போதும் சொற்கள் முதலிகாள் என்றே வரும்; முதளிகாள், வாரிகோள், அறிவிகோளே போந்திகோளே கேட்டிகோளே பாரிகோள் (முதலிகளே வாருங்கள் அறியுங்கள் போந்தீர்களோ கேட்டீர்களோ பாருங்கள் என்பது பொருள்). மூன்றாம் வருணத்தில் பிறந்த திருக்கச்சி

நம்பிகள், தம்மைத் தளிகை செய்ய அழைத்திருந்த இராமானுசர் திருமாளிகை அடைந்து அவருடைய தேவிகளை விளித்து மதினியாரே தளிகை படையுங்கள் என்கிறார்; இராமானுசர் முதலாம் வருணம் இவரினும் ஆண்டில் மிகவும் இளையவர் மதினியார் என்பது உரிமை பாராட்டி அழைக்கும் சொல் என்று அறிகிறோம். ஸ்ரீபாஷ்யத்தை ஓரிடத்தில் சீபாட்சியம் என்று சொல்கிறார் (173).

உடையவர் வைபவத்தை முன்னிருந்தவர்களும் சொல் கிறார்களாம். அவர் பெருமையை அவர் சாதனைகளாலும் பிற்காலத்தார் வாக்காலும் உணர்தல் போதாது என்று ஆசிரியர் கருதியிருக்கிறார். எம்பெருமான்களில் நம்பெருமாள், திரு வேங்கடமுடையான், பேரருளாளர், திருநாராயணப் பெருமாள், அழகர், திருக்குறுங்குடி நம்பி இவர்கள் தமிழில்; பின் ரிஷிகள், வடமொழியில் சொல்கிறார்கள்; நம்மாழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார், பெரிய நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருமலை நம்பி, திருமாலையாண்டான், திருவரங்கப் பெருமாளரையர், பிறகு இராமானுசருக்குப் பின்வந்தவர்கள், பின் சரசுவதி; நூலைப் பின்வரும் சொற்களால் முடிக்கிறார்:

“சக்கரவர்த்தித் திருமகன் வைபவம் போலே ஸ்ரீராமானு ஜார்யர் வைபவமும் அவாங் மனஸ கோசரமிறே. சாகரத்தைக் கை நீச்சினால் நீஞ்சினாலும் உததியைச் சிறாங்கிச்சாலும், உடையவர் வைபவம் அடையச் சொல்லப்போகாதிறே. யதாமதி யதாணருதமாகச் சொன்னேனத்தனை, பெஹுˇணருதராய் புத்தி பாஹுˇய முண்டானவர்கள் விணதமாகக் கண்டு கொள்வது. இப்படி எல்லோருக்கும் ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை நியமித்துக் கொண்டு எம்பெருமனார் ஜகதாசார்யராய், யதிஸார்வ பௌமராய் நம்பெருமாள் கோயிலிலே நூற்றிருபத்தைந்து திருநட்சித்திரங்கள் எழுந்தருளியிருந்தார்.”

## பதிப்பு

‘விசிஷ்டாத்வைத சித்தாந்த ஸ்தபாகரான இளையாழ்வார் வைபவத்தை அவதார காலமே தொடங்கி எல்லோருமறிந்து உஜ்ஜீவிக்கும்படி பரம காருணியரான பிள்ளை லோகஞ்சீயர் அருளிச் செய்த ராமானுஜாரிய திவ்ய சரிதை சித்ரகூடம் கந்தாடை திருவேங்கடாசாரியர்; 1886, 302 பக்கம். 80 பக்கம் வரையில் வடமொழி மேற்கோள்கள் யாவும் கிரந்த எழுத்திலும் தமிழ் எழுத்திலும் அச்சிடப்பட்டுள்ளன. பின் 81-302 வரை, பெரும்

பகுதி வடமொழி மேற்கோள் தெலுங்கு லிபியில் மட்டும். தெலுங்கு தெரியாதவர் மேற்கோளைப் படிக்க இயலாது. தவிர 1-80 பக்கம் கிரந்த எழுத்தில் அச்சிட்டுள்ளதைத் தெலுங்கில் மட்டும் அறிந்தவர் படிக்கும் பொருட்டு. கிரந்த எழுத்துக்கு நேரான தெலுங்கு எழுத்து அட்டவணையும் தரப்பட்டுள்ளது. இவ்வளவும் கிரந்த எழுத்து அறியாமல் தெலுங்கு லிபி அறிந்தவர் படிக்கும் சௌகரியத்துக்காகவே.

## யதீந்திரப் பிரவணப் பிரபாவம்

இது மணவாள மாமுனிகளுடைய வரலாற்றைக் கூறும் மணிப்பிரவாள உரைநடை நூல். (யதீந்திரப் பிரவணர் யதிராச ராகிய இராமானுசரிடம் ஈடுபாடு கொண்ட மணவாள மாமுனி கள்) முனிகள் வரலாற்றைக் கூறத் தொடங்கி, இவர் முனிகளிடம் ஆசாரிய பரம்பரை வந்த வரலாற்றைச் சொல்லுகிறேன் என்று பிள்ளைலோகாசாரியர் நம் பிள்ளை அனுக்கிரகத்தினால் வடக்குத் திருவீதிப்பிள்ளை புதல்வராகப் பிறந்த செய்தி தொடங்கியுரைக்கிறார். முன்னர்த் தோன்றியிருந்த ஆறாயிரப்படி குருபரம்பராப் பிரபாவம் பரமபதநாதன் தொடங்கி, நம்பிள்ளை வரையிலுள்ள ஆழ்வார் ஆசாரியர் வரலாற்றைக் கூறுவதாக, நம்பிள்ளையின் மாணாக்கரான பின்பழகிய பெருமாள் சீயரால் 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் செய்யப்பட்டது. நம்பிள்ளையின் சீடர் வடக்குத் திருவீதிப் பிள்ளை, அவருடைய புதல்வரும் சீடருமாயிருந்தவர் பிள்ளைலோகாசாரியர் என்ற ஆசாரியர் இவருடைய மாணாக்கர் பலராயினும், அடுத்த ஆசாரியராக, வந்தவர் திருமலையாழ்வார் என்னும் திருவாய் மொழிப்பிள்ளை. இவருடைய மாணாக்கரே மணவாள மாமுனிகள் என்ற ஆசாரியர் (கி.பி. 1370-1444). இவரே தென்கலை என்று தனிப்பிரிவாக ஸ்தாபிதம் செய்த ஆசாரியர். இவரை ஆதிசேஷ அவதாரம் என்பது வைணவ மரபு. இவருக்குப் பின் ஆசாரிய பீடங்கள் பலவாய்ப் பிரிந்தன. மணவாள மாமுனிகளுக்குப் பின், அவர் சீடரும் அட்டதிக்கஜங்களில் ஒருவருமான பரவஸ்து பட்டர் பிரான் சீடருடைய பெயரராக வந்தவர் பிள்ளைலோகம் சீயர் என்று முன்பு காட்டினோம். நம்பிள்ளைக்குப் பின் மணவாள மாமுனிகள் வரையிலுள்ள ஆசாரியர் வரலாற்றுக்கு இந்த யதீந்திரப் பிரவணப் பிரபாவமே ஆதாரம். முதல் குருபரம்பரை செய்த பின்பழகிய பெருமாள் சீயர், தாம் அறிந்தனவும், கேட் டனவுமாகிய செய்திகளை மட்டும் முறையாகத் தொகுத்துச் சொல்லிக் கொண்டு போகிறார். ஆனால் பிள்ளைலோகமோ,

தம் நூலில் பின்னும் பல செய்திகளைச் சேர்த்தும் புனைந்தும் இலக்கிய நயத்தை அதிகம் புகுத்தியும் நூல் செய்து கொண்டு போகிறார். முக்கியமான சிலவற்றைப் பின்னே கூறுவோம்.

பிள்ளை லோகாசாரியர் தாய் கர்பத்திலே பன்னிரு மாதம் தங்கிப் பிறந்தார். அவர் திருவாய்மொழிக்குப் பல வியாக்கியா னங்கள் பிறந்தமைக்குக் காரணத்தை உணர்த்தினார். பலர் தங்கள் புத்திக்குத் தோன்றின பிரகாரம் வியாக்கியானம் இட்டமை யால், எம்பெருமானார், சகஸ்ரசாகோப நிஷத் சமாகத்வம் விளங்கும்படி ஒரு பிரவந்தமிடும்படி திருக்குருகைப் பிரான் பிள்ளானைக் கடாட்சித்தார். பின்னர் பெருமாள் அர்ச்சகமுகேந, நஞ்சீயரை, பட்டர் திருவுள்ளப் படிக்கு ஒன்பதினாயிரப்படி வியாக்கியானம் செய்யும் என்று நியமித்தருள, ஆறாயிரப் படிக்குக் கனகாபிஷேகமென்னும்படி அவர் செய்தார். இதைப் பட்டோலை கொள்ள ஒரு நல்ல லேகரியை நஞ்சீயர் தேடி யிருந்த சமயம், தேவராஜர் என்பவரை அழைத்துச் செய்க என்று ஸ்வப்னமாயிற்று. அவர் 'நஞ்சீயர் திருவடிகளே சரணம் பட்டர் திருவடிகளே சரணம்' என்று எழுத்து எழுதிக் காட்டினார். அவருக்கு இழந்த ஒன்பதாயிரப் படியை எழுத ஸ்ரீ ரங்கராஜரே முன்னின்று உதவினார். 'நம் இராமானுஜன் தரிசனத்தை வளர்த்துக்கொண்டு போரும்' என்று நஞ்சீயர், பட்டர் சரம காலத்திலே தமக்கு சாதித்திருந்த தர்சனப்ரவர்த்தகருக்குரிய மோதிரத்தை நம்பிள்ளை திருவிரலிலேயிட்டார்.

பெரியவாச்சான்பிள்ளை செய்தது போலவே ஐயரும் (வடக்கு திருவீதிப் பிள்ளையும்) செய்திருக்கக் கண்டு நம்பிள்ளை முதலில் கோபித்துப் பின் தெளிந்தார். (நடுவில் திருவீதிப்பிள்ளை எழுதிய வரலாறு இங்கில்லை). நம்பிள்ளை இவர் வியாக்கியான ஏட்டைப் பலவாகப் பெருக்கி, 'உம்வழியில் முப்பத்தாறாயிரப் பெருக்கராய் ஒருவர் வருவார்' என்று கூறினார்.

பிள்ளைலோகாசாரியர் செய்த ஸ்ரீவசன பூஷணம் பற்றிச் சிலர் பெருமாளிடம் போய்க் கோள் சொல்ல அவரும் அழகிய மணவாளப் பெருமாள் மூலம் இதன் சிறப்பைக் கேட்டுப் பாராட்டினார்.

துருக்கர் கலகத்தின்போது, ஆழ்வாரை (பெருமாளை) ஒரு பள்ளத்திலே இட்டு வைத்திருந்து பின் திருமலையாழ்வார் உதவி கொண்டு எடுக்க முற்பட்டபோது, ஆழ்வார் வரவும், தோழப்பர்

சங்கிலி அறுந்து காலமானார் என்ற செய்தியைச் சொல்லு கிறார். கூரகுலோத்தமதாசர் சென்று திருமலையாழ்வாரை ஆட்கொண்ட வரலாற்றை மிகவும் விரித்துச் சொல்லுகிறார்.

விளாஞ்சோலைப்பிள்ளை ஸ்ரீவசன பூஷணத்தின் தாத்பர் யத்தை ஏழு காதையாகச் சங்கிரகித்து அருளிச் செய்தார் என்பர். திருவாய்மொழிப்பிள்ளை ஒரு சமயம்,

**இன்றோ எதிராசர் இவ்வுலகில் தோன்றிய நாள்**
**இன்றோ கலியிருள் நீங்கிய நாள்**

என்று பாடி, அதற்குமேல் வராமல் நிற்க, அப்போது அங்கிருந்த அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் என்ற மணவாள மாமுனிகள்,

**இன்றோ தான்**
**வேதியர்கள் வாழ விரைமகிழோன் தான்வாழ–**
**வாதியர்கள் வாழ்வடங்கு நாள்.**

என்று பாடி முடித்தாராம்.

இவர் திருமலை தரிசிக்கச் சென்ற செய்தியைப் பிள்ளை லோகம் எழுதும்போது பல செய்திகள் இன்று போலவே இருந் ததை அறிகிறோம். மொண்ணைக் கோபுரம்; ஸ்ரீபாதரேணு. அன்றும் உண்டியிருக்கிறது, அதில் சேவார்த்திகள் காணிக்கை சமர்ப்பிக்கிறார்கள்.

மாமுனிகளுடைய தந்தை பெயர் திகழக் கிடந்தான் திரு நாவீறுடைய பிரான் தாதரண்ணரையன். திகழக்கிடந்தான் என்ற தொடர், மறைந்து போயிருந்த நாலாயிரமும் வெளிப் படுத்துவதற்குக் காரணமாயிருந்த குடந்தைப் பாசுரம் - ஆரா வமுதே அடியேன் உடலம் நின்பால் அன்பாயே என்பதில் வரும் 'திகழக் கிடந்தாய் கண்டேன்' என்ற தொடரிலிருந்து எடுத்ததாகும். அண்ணன் என்றாலும் ஐயன் என்றாலும் பொருள் ஒன்றே. இருப்பினும் இரண்டையும் சேர்த்துப் பெயரில் வழங்கும் வழக்கு அக்காலத்தில் இருந்திருக்கிறது. அக்காலத்தில் கிருஷ்ண தேவராயர் ஆதரவில் வாழ்ந்தவர் அரிதாசர் என்ற புலவர்; இரு சமய விளக்கம் என்ற பெருநூல் செய்தவர். அவருடைய தமையன் பெயர் வடமலை அண்ணகளரையன் என்பதும் காணத்தக்கது.

பெரியாழ்வார் திருமொழிப் பகுதிக்குப் பெரிய வாச்சான் பிள்ளை செய்திருந்த வியாக்கியானம் மணவாள மாமுனிகள்

காலத்திலேயே எப்படியோ மறைந்து போய்விட்டது; அது பற்றி இதற்கு மட்டும் மாமுனிகள் வியாக்கியானமிட்டார் என்று பிள்ளைலோகம் எழுதுகிறார். வெவ்வேறு காரணங்களாலும் சூழ்நிலைகளாலும் திருவாய்மொழி போன்ற பிரபந்தங்களுக்கு வியாக்கியானம் பல ஏற்பட்டிருந்த போதிலும், ஒருவர் வியாக் கியானம் செய்த நூலுக்கு மற்றவர் வியாக்கியானம் செய்வதில்லை என்ற மரபு வைணவரிடையே போற்றப்பட்டு வந்திருக்கிறது.

கணக்கில்லாமல் வடமொழித் தொடர்களையும் சொற் களையும் நல்ல தமிழோடே கலந்து விளையாடுகிற இந்த வைணவ சம்பிரதாயத்தில், தொடர்பாக, சமஸ்கிருதத்தில் மனத்தைச் செல்லவிடவேண்டாம் என்று எல்லோரும் உபதேசம் செய் வதையும் காண்கிறோம். ஆண்டான் திருவங்கிபுரத்து நம்பியைப் பார்த்து, உனக்கு இன்னும் முரட்டுச் சமஸ்கிருதம் விட்ட பாடில்லையே* என்கிறார்; பெரியவாச்சான்பிள்ளை திருமாலை வியாக்கியனத்தில், வடக்குத் திக்கு ஆரிய பூமியாகையாலே சமஸ்கிருதமுரணர், ஆழ்வார்கள் ஈரச்சொல்லும் நடையாடாத தேசம்❖ என்கிறார். நஞ்சீயருக்கு பட்டரும், நம் பிள்ளைக்கு நஞ்சீயரும் ‘சமஸ்கிருதத்தில் பலகால் கண் வையாதீர்’ என்றே தம் ஆயுள் இறுதிக் காலத்தில் கடைசி உபதேசமாகச் செய்கி றார்கள். அந்த மரபிலேயே இங்கும் திருவாய்மொழிப் பிள்ளை தம் இறுதி நாளில் திருநாட்டுக் கெழுந்தருளும் சமயம் மணவாள மாமுனிக்கு உபதேசம் செய்கிறார் என்று பிள்ளை லோகம் எழுதுகிறார்.✞ “காலம் கலிகாலமாகையாலே ஆழ்வார்கள் திவ்ய ஸூக்திகளான அருளிச் செயலிலே ருசி விச்வாசங்களையுடை யராய் இத்தை வளர்த்துப் போருவாராரென்று மிகவும் க்லேச மாயிரா நின்றது” என்ற, பின்பு நாயனாரும் திருவடிகளிலே ஸேவித்து, அடியேன் அப்படியே செய்கிறேனென்ன, கேவலம் வார்த்தை போராதென்ன, நாயனாரும் திருவடிகளைத் தொட்டு சப பூர்வமாக அப்படியே செய்கிறேனென்றருளிச் செய்ய, பின்பு திருவுள்ளம் தேறி நாயனாரை யழைத்தருளி, ‘ஸ்ம்ஸ்க்ருத சாஸ்த்ரங்களிலே பலகாலும் கண் வையாமல் ஸ்ரீபாஷ்யத்தை ஒருக்கால் கேட்டு நமக்கும் எம்பெருமானார்க்கும் ப்ரியமாக திருவாய்மொழி முதலான அருளிச் செயலிலே அநவரதம் பரி

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 13ஆம் நூற்றாண்டு.

❖ மேற்படி நூல்

✞ யதீந்த்ர ப்ரவணப்ரபாவம் பக்கம் 29.

சீலநம் பண்ணிக் கொண்டு பூர்வர்களைப் போலே பெருமாளுக்கு மங்களாசாஸந பரராய்க் கொண்டு கோயிலிலே நித்ய வாஸமாசு எழுந்தருளியிரும்' என்று நியமித்தருளினார்.

## சொல்லாட்சிகள்

வைணவ மணிப்பிரவாள நூல்கள் யாவும் தனித்த சொல் லாட்சியுடையவை. இவை 12ஆம் நூற்றாண்டு தொடங்கி, அதிக அளவில் மணிப்பிரவாள வியாக்கியானங்களில் காணப் படுகின்றன. பல வடசொல்லடியாகப் பிறந்தவை, சில சிறப் புடைய தமிழ்ச் சொற்கள். இவை யாவும் வடமொழிக் கலப்பு என்று ஒதுக்கி விடுவது விவேகமன்று. சிலவற்றை மட்டும், யதீந்திரப் பிரவணப் பிரபாவத்திலிருந்து கீழே விளக்குகிறோம். அமுது என்பது உணவுக்கு வழங்கும் பொதுச்சொல். எல்லா உணவுப் பொருளும் அமுதென்றே வழங்கக் காண்கிறோம். அமுதுபடி, பருப்பமுது, கறியமுது, பழ அமுது, பாலமுது, நெய்யமுது, தயிரமுது, உப்புச்சாற்றமுது என. சாதம் என்ற சொல்லும் அருமையாக வருகிறது - திருவுற்ற சாதம். சாதம் என்பது பிரசாதம் என்பதன் தலைக்குறையென்று கருதுகிறார்கள். இங்கு இச்சொல் பயில்கிறது. அரவணையென்பது ஒரு சொல்; சர்க்கரைப் பொங்கல் நிவேதனத்துக்கு வழங்குகின்ற அபூர்வ மான ஆட்சி. தோசைப்படி யென்ற சொல்லையும் காண்கிறோம். தோசை என்ற சொல் ஓர் அப்ப வகையின் பெயராக முதல் முதல் திவாகரத்தில் காணப்படுகிறது. சர்க்கரைப் பொங்கலுக்கு அக்கார அடிசில் என்ற பெயருண்டு. அக்கார அடிசில், அக்காரக் கனி என தொடர்கள் நாலாயிரத்திலும், அக்காரடலை சிந்தா மணியிலும் வருகின்றன. படிமா என்பது விரதமிருந்து உண்ணும் உணவின் பெயராக வருகிறது.

தமப்பனார் என்பது ஒரு சொல்; தம்-அப்பனார். இச்சொல் தந்தையென்று பொருள்படும். ஆனால் இது, முதல் நிகண்டு களில் காணப்படவில்லை. திருவாசகம் முதலாகத் தகப்பன் என்ற சொல் ஆட்சிக்கு வந்துவிட்டது. அன்றாடும் - அன்றாடம். சயிக்கவிடுதல் - சயனிக்க விடுதல். ஞாயிறுபாடு - காலை, நாயன் - தலைவன், நாயன்தே, நாயன்றே - தெய்வமொத்த தலைவன், வேளையம் - வெற்றிலை பாக்கு என்ற பொருளில்; இது ஓர் அபூர்வப் பிரயோகம்; பிற்காலத்தில் இதுவே விடையம் என்றாகி யிருக்கலாம்.

கிடுதல் என்பது ஒரு சொல்; காணுதல் என்ற பொருளுடையது போலும். இவர் கிடாய் - இவர் கண்டாய்; நாமே கிடீர் - நாமே கண்டீர். இவை போல்வன பல. இவை காண் என்பதனடியாகப் பிறந்த அசைச் சொற்கள். மிடறு செய்தல் - வருந்துதல். தினவு கெடுதல் - அறிவுத்தாகம் அடங்குதல். இந்த நூலில் ஐயங்கார் என்னும் சொல்லாட்சி மிகவும் அதிகமாய் உள்ளது. ஐயர் - அவர்கள் என்ற சொற்கள் (அவர்கள் - தெலுங்கில் காரு) ஐயன்கார் ஐயங்கார் என ஆன்றோர் கருதுவர்.

அசூயாளுக்கள் - பொறாமையுடையவர்கள், உபலாளித்தல் - கொண்டாடுதல். த்வரை - வேகம்; இதிலிருந்து வந்ததே துரை என்ற சொல்; துரைமாண்டவா பாடி என்ற திருவாசகத்துக்கு வேகம் கெட்ட தன்மையைப் பாடி என்பது பொருள் லேகரி - எழுதுபவன். வியாக்கியானங்களெங்கும் பெண்மைக்குப் பெரு மதிப்புக் கொடுக்கப்பட்டிருக்கக் காணலாம். எந்த ஆசிரியரும் மனைவி என்று சொன்னதில்லை; மனைவி என்றால் தேவிதான்; அதுவும் ஒருமையல்ல, எப்போதும் தேவிகள் என்று பன்மையிலேயே சொல்வார்கள். இது வைணவத்தின் சிறப்பு, ப்ரவணம் - ஈடுபாடு.

## பதிப்பு

பரமகாருணிகரான பிள்ளை லோகஞ் சீயர் அருளிச் செய்த யதீந்த்ர ப்ரவணப்ரபாவம் - சடகோப ராமானுஜா சாரியரால் பரிசோதிக்கப்பட்டு வைஷ்ணவ சம்பிரதாய புத்தக சாலை திருக்கச்சி நம்பிதாசரால் 1907இல் அச்சிடப்பட்டது. ராயல் அளவில் 124 பக்கம்.

## இராமானுச நூற்றந்தாதி வியாக்கியானம்

திருவரங்கத்தமுதனார் பிரபன்ன காயத்திரி என்னும் பெயருடைய 108 பாடல் கொண்ட இராமானுச நூற்றந்தாதிக்கு முதலில் மணவாள முனியின் சீடரான அப்பிள்ளை ஓர் உரை செய்தார். பிறகு பிள்ளை லோகம் சீயர் விரிவான வியாக்கியானம் எழுதினார். இது மிகவும் விரிந்தது, அதிகமும் எழுதிப் பழக்கமுடைய இவர் இதை விரிவாக எழுதியதில் வியப்பில்லை. மேற்கோள்கள் நிரம்பத் தருகிறார். இடையே சிவனைப் பற்றிய குறிப்பு வரும் இடமெல்லாம் தூஷணமாகவே எழுதுவது இவருடைய இயல்பு. பாசுபதர் வேதபாஹ்யர் என்று கூறுவார்; பாசுபதர் தமிழ்நாட்டில் என்றுமே திரளாக வாழ்ந்தவர்களல்லர்;

அவர்களுடைய ஆசாரங்கள் தாழ்வானவையாதலால் ஜீயர் சொல்வதில் தவறு இல்லை. 'ருத்ர வசனமான ஆகமத்தை அதிகரித்துப் போந்து அதிதாமசராயிருக்கிற பாசுபதரும், பௌத்தரை எடுத்தவுடனே பாசுபதரை எடுத்தது, அவர்களோ பாதி இவர்களும் வேத பாஹ்யரென்னுமிடம் தோற்றுகைக்காக... ஜகத்உபாதானகாரணம் ஆகமசித்தேசுவரன் நிமித்த காரணம்... கர்மானுஷ்டானத்தலலோ பசுபதிசாரூப்யம் பெறுகை, மோட்ச மாகிறது என்று சொல்லுமவர், ' சைவம் என்ற இடம் வந்தால், பிற சமயத்தார் (அத்வைதிகளும் விசிஷ்டாத்வைதிகளும்) பாசு பதர் காளாமுகர் என்று நினைக்கிறார்களே தவிர, சைவ சித்தாந்தி என்று நினைக்கவில்லை.

பல இடங்களில் நயம்படி உரை எழுதுவார். ஈரத்தமிழ் சம்சார தாபமெல்லாம் ஆறும்படியான ஈரப்பாட்டையுடையது. ஸ்ரீ பராங்குச நம்பி என்பார். கார்த்திகையானும் என்ற பாட லுரையில், பாணாசுரன் வரலாறு விரிவாகக் கூறுகிறார். அநிருத் தனைக் குறிப்பிடும்போது, அநிருத்தாழ்வான் என்கிறார். 99ஆம் பாடல் உரையில் தூற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் என்பதை விளக்கும்போது பல சமயத்தாரை விரிவாகக் குறிப்பிட்டுப் பேசு கிறார்: சாக்கியர் சைனர் சாருவாகர் நையாயினர் வைசேடிகர் பாசுபதர் சூனியவாதர் வைபாடிகள் சௌந்திராந்திகர் யோகா சாரர் மாத்யமிகர் என்ற நால்வகைப் பௌத்தர், சங்கரன் பாஸ்கரன் யாதவன் ருத்ரன் பாட்டப் பிரபாகரர் ஏகாயநர் என்கிறார்.

இவருடைய போக்குக்கு எடுத்துக்காட்டாக, 98ஆம் பாடல் அவதாரிகைப் பகுதியை இங்கு குறிப்பிடலாம்: இப்படி எம் பெருமானார் தம்மை சர்வோத்கிருஷ்டமான அதிகாரத்திலே மூட்டின உபசாரத்தை அனுசந்தித்து ஹரிஷ்டானவாறே இவ ருடைய திருவுள்ளமானது, நீர் இப்படி சொன்னீரேயாகிலும் சர்வநியந்தாவான சர்வேசுவரன் அநாதி காலந் தொடங்கி தத்தத் கர்மானுகுணமாகப் பலத்தைக் கொடுப்பதாகச் சங்கல்பித்துக் கொண்டிருக்கிறா னொருவனாகையாலே இவ்வளவும் ஸ்வர்க்க நரக சர்ப்பங்களிலே இடைவிடாதே அடைவே தட்டித் திரிய விட்டிருந்தது நம்முடைய கர்மத்தைக் கடாட்சித்தன்றோ, அக்கர்மங்களை உண்டாக்கக் கடவதான பிரகிருதி சம்பந்தம் நமக்கு இன்றும் கிடக்கையாலே, துர்வாசனை மேலிட்டு திரும் பும் நிக்ரகத்துக்கு உடலான துஷ்கார்யங்களிலே அன்வயிக்கவும் யோக்யுதையுண்டே, ப்ராப்திபர்யந்தமானாலிறே நீர் இப்படி

*நிர்ப்பரராய்ச் சொல்லக் கடவது என்று தளரா நிற்க; எம்பெருமானர் தம்மை சரணமென்றால் அப்படி ஸ்வர்க்க நரகாதிகள் ஒன்றிலும் விட்டுக் கொடுக்கும் ஸ்வபாவரல்லராகையாலே இனி ப்ராப்தி நிமித்தமாக நீ கிலேசிக்க வேண்டாமென்கிறார்.*

**அர்த்த பஞ்சக வியாக்கியானம்**

பிள்ளை லோகசாரியர் அட்டாதச ரகசியம் என்று 18 நூல்கள் செய்தார். அவையனைத்துக்கும் மணவாள மாமுனி வியாக்கியானம் செய்தார். அவற்றுள் அர்த்த பஞ்சகம் என்பது மூன்றாவது நூல். அறிய வேண்டிய பொருள்கள் ஐந்து. இவையே அர்த்த பஞ்சகம் எனப்படும். இவையாவன: ஸ்வ ஸ்வரூபம் (உலகின் இயல்புதன் நிலை) பர ஸ்வரூபம் (இறைவன் நிலை), விரோதி ஸ்வரூபம் (உயிர் இறைவனை அடையாது தடை செய்து நிற்கும் வினையின் இயல்பு). புருஷார்த்த ஸ்வரூபம் (புருஷனால் வேண்டப்படும் பேற்றின் நிலை), உபாய ஸ்வரூபம் (பேற்றிற்குத் தடையைப் போக்கி இறைவனை அடைதற்குரிய உபாயத்தின் நிலை) என்ற ஐந்து. இப்பெயரில் வேதாந்த தேசிகர் ஒரு பிரபந்தமே பாடியிருக்கிறார். லோகாசாரியர் நூலுக்குப் பிள்ளை லோகஞ் சீயர் ஒரு வியாக்கியானம் எழுதியிருக்கிறார். இதன் விரிவான அவதாரிகையில், பகவான் வேதங்களையும் சாஸ்திரங்களையும் நாலாயிரப் பிரபந்தங்களையும் உபதேசித்ததோடமையாது, பிள்ளை லோகாசாரியர் முகமாக அர்த்த பஞ்சக ரகஸ்ய சாஸ்திரத்தை வெளிப்படுத்தியருளினான் என்று கூறுகிறார். அர்த்த பஞ்சகமானது 49 வாக்கியங்களாக அமைந்துள்ளது. இவர், வாக்கியத்திலுள்ள ஒவ்வொரு தொடராக எடுத்து விரிவாக உரை எழுதிக்கொண்டு செல்கிறார். உரை மணிப்பிரவாள நடை. இதன் பகுதியொன்று பின்னால் உரைநடை என்ற தலைப்பில் எடுத்துக் காட்டப்படும். அட்டாங்கயோகம் பற்றி இவர் கூறும் கருத்துக்களை மட்டும் இங்கு தருகிறோம்:

'யமம் ஆவது பாஷ்ய இந்திரிய நிக்கிரகம்; நியமம் ஆவது அந்தரிந்திரிய நிக்கிரகம்: பாஹ்ய பரிசுத்தி என்றும் ஆந்தர பரிசுத்தி என்றும் சொல்லுவார்கள். ஆசனம் ஆகிறது கூர்மாசனம் குக்குடாசனம் பத்மாசனம் முதலியவை. பிராணாயாமம் ஆவது ஒரு யாமத்தளவு பஞ்ச வாயுக்களை நவரந்த்ரங்களால் சரீரத்தில் நின்றும் புறப்படாதபடி பிடித்துக் கொண்டிருக்கை. பிரத்தியாகாரம் ஆவது பஞ்ச வாயுக்களை சாத்மிக வெளியில் புறப்பட விடுகை. அதவா, பிரத்தியாகாரம் என்பதற்கு காய கோஷணத்

துக்குத் தக்க ஆசாரத்தையும் சொல்லவுமாம். பிரகரணத்துக்குச் சேருவது முதலில் சொன்னதாகும். தியானம் ஆவது அவிச்சின்ன ஸ்மரணம். தாரணம் ஆவது மலதாரணம். அன்றிக்கே சக்தி விசேஷத்தைச் சொல்லவுமாம். அதாவது ஹ்ருதயத்தில் பகவத் விக்கிரக சிந்தை நிறுத்தலுமாகும். சமாதி ஆகிறது, ஈசுவரன் திருவடிகளிலே மனசை இடைவிடாதே பொருந்தியிருக்க வைத்தல். இப்படியான ஆதாரங்களையுடையவையான அஷ்ட வித அங்கங்களோடு கூடியிருக்கிற யோகத்தின் கிரமம்.'

## சப்ததகாதை வியாக்கியானம்

பிள்ளை லோகாசாரியரின் மாணாக்கர் விளாஞ்சோலைப் பிள்ளை. இவர் 'தீண்டாத' வகுப்பினர். இவருடைய இயற் பெயர்தானும் தெரிந்திலது.* தமக்குப் பின் ஆசாரியராய் வரத் தக்கவரான திருமலையாழ்வாருக்குத் திருவாய்மொழியைக் கற்பிக்கும்படி பிள்ளை லோகாசாரியர் இவருக்கு நியமித் திருந்தார். திருமலையாழ்வார் இவரிடம் கற்றபின் திருவாய் மொழிப் பிள்ளை என்றே பெயர் பெற்றார். விளாஞ்சோலைப் பிள்ளையின் வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. சில செய்திகள் சீயர் உரையால் மட்டுமே தெரிய வருகின்றன: இவர் 'உடையவருக்குப் பிள்ளையுறங்கா வில்லிதாஸரைப் போலவும், நம் பிள்ளைக்கு ஏறு திருவுடையான் தாஸரைப் போலவும், நடுவில் திரு வீதிப் பிள்ளை பட்டர்க்குப் பிள்ளை வானமாமலை தாஸரைப் போலவும், பிள்ளை லோகாசார்யருக்கு ஆத்மஸமராயும், ப்ராணஸமராயும், த்ருஷ்டிஸமராயும், பாஹுஸமராயும், ஆபரண ஸமராயும், பாதஸமராயும், பாதரோகாஸமராயும், பாதச்சா யாஸமராயும், பாதுகாஸமராயும், பாதோபதாநஸமராயுமெழுந் தருளியிருக்குமவராய் இருந்தவர் இவர். அன்றியும் தீதற்ற ஞானத் திருவாய்மொழிப் பிள்ளை என்னும்படி ஸமஸ்தசாஸ் திரபா ரங்கதராயும் ஸர்வஜ்ஞராயும் பெருமதிப்பராயும் போருகிற திரு வாய்மொழிப் பிள்ளையுங்கூடத் தம்மருகே சென்று சரமார்த்த விசேஷங்களைக் கேட்டுப் போரும்படி மிகவும் ஸர்வஜ்ஞராய் இருந்தார். பிள்ளை லோகாசாரியருடைய திருவோலக்க வாழ்வைத் தியானித்துக் கொண்டு தம் திருமேனியில் சிலந்தி நூல் இழைக்கும்படியாகவும் நாலாறு நாள் சமாதியிலே எழுந் தருளியிருந்தார்.'

---

* இவர் வரலாற்றைத் தெரிந்த வரையில் 14ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் காண்க.

*உரையில் இராமானுசர் நூற்றிருபதாண்டு குறைவு நிறைவு களின்றிக்கேயிருந்தார் என்பதையும் சொல்லுகிறார். பிள்ளை லோகாசாரியருடைய திருவுருவ வருணனை: தேமருவும் செங் கமலத் திருத்தாள்களும் திகழும் வான்பட்டாடை பதிந்த திரு மருங்கும் முப்புரி நூலின் தாமமணி வடமமர்ந்த திருமார்பும், முன்னவர் தந்தருள் மொழிகள் நிறைந்த திருமுறுவலும், கருணை பொழிந்திடுமிணைக் கண்களும் கனநல்ல சிகை முடியும் திங்கள் போலும் திருநுதலும் திருக்கண்ணும் செவ்வாயும், பொங்கொளி சேர்பொன்மொழியும் புரிநூலும் பொற்றோளும், மங்கலமான மலர் மார்பும் மணிவடமும், மருங்குதனில் பரியட்டமும் கமலப் பதயுகமும், அழகிய பத்மாஸநமும், ஈராறு திருநாமமணிந்த வெழிலும், இனிதிருப்போ டெழில் ஞான முத்திரையும் தாமு மாக வெழுந்தருளியிருக்கிற பிள்ளை லோகாசார்யருடைய திவ்ய மங்கள விக்ரஹத்தைப் பாதாதி கேசாந்தமாகவும் கேசாதி பாதாந்தமாகவும் உருவ வெளிப்பாட்டாலே விசத விசததர விசததமமாகத் த்யாநித்து-*

*சப்த காதைக்கு இவர் வியாக்கியானமும் தனிப் பதவுரையும் எழுதியிருக்கிறார். அவதாரிகையின் தொடக்கத்தில் இவர் சப்த காதைக்குக் கூறும் தனியன்:*

**வாழி நலந்திகழும் நாரண தாதனருள்**
**வாழி அவனமுத வாய்மொழிகள் – வாழியே**
**ஏறு திருவுடையான் எந்தை உல காரியன் சொல்**
**தேறு திருவுடையான் சீர்.**

*சப்த காதை என்பது விளாஞ்சோலைப்பிள்ளை அருளிச் செய்த ஏழு வெண்பா. இது தென்கலையாருக்கு நித்தியானு சந்தானமாக உள்ளது. இந்த உரையின் இறுதிப் பகுதி இவர் வாக்குக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தகும். "ஆக இப்பிரபந் தத்தால் - அர்த்த பஞ்சகோபதேஷ்டாவே ஆசார்யனாகிறான் என்னுமிடத்தையும், அவனிடத்தில் ப்ரேமமற்றிருப்பார் ஸ்வாத் மகாதக ரென்னுமிடத்தையும், அவர்கள் ஜ்ஞானவிசேஷண யுக்த ரோயாகிலும், நித்ய ஸம்ஸாரிகளாய்ப் போருவர் என்னுமிடத் தையும், அதுக்கு க்ருதக்நரான இவர்கள் அதிக்ரூர ரென்னு மிடத்தையும், ஸ்வோத்கர்ஷத்தைத் தேடுகை ஆசார்யனுக்கு அழுக்கென்னு மிடத்தையும், இவ்வழுக்குக்கடியான தோஷத்தைப் பெரிய பெருமாள் தாமே தமக்குப் போக்கியருள வேணுமென்னு மிடத்தையும். ஆசார்யன்பக்கல் ப்ரேமயுக் தனானவன் அர்ச்சிராதி*

மார்க்கத்தாலே பரமபதத்திலே சென்று முக்தைசுவரியத்தைப் பெற்றுக் கைங்கர்யஸாம் ராஜ்யத்திலே மூர்த்தாபிஷிக்தனாய்க் கொண்டு யாவதாத்ம பாவியாக விருப்பனென்னு மிடத்தையும் அருளிச் செய்து நின்றராய்த்து."

சில கருத்துக்கள்: அரங்கத்தின் சிறப்பு - இனிதாகத் திருக் கண்கள் வளர்கின்ற திருவரங்கம் என்று சொல்கின்ற நீர்வாய்ப்பும் நிழல்வாய்ப்பும் நிலவாய்ப்புமாகிற இவை. விரோதி: அமரவஸ் துக்களில் பரத்வபுத்தியும், அரக்ஷ்யரிடத்தில் ரக்ஷகத்வபுத்தியும். அசேஷிகளிடத்தில் சேஷித்வபுத்தியும், அனுபாஸ்யரிடத்தில் உபாஸ்ய புத்தியும், அனாத்மாவில் ஆத்மபுத்தியும். அஸ்வதந் திரனான தன்னிடத்தில் ஸ்வதந்திரபுத்தியும், அனுபாயங்களில் உபாயத்வபுத்தியும், அபந்துக்களில் பந்துத்வ புத்தியும், அபோக் யங்களில் போக்யதாபுத்தியும் பகவத்கைங்கரியத்தில் ஸ்வபோக் த்ருத்வபுத்தியும், இவையெல்லாவற்றுக்கும் வேர்ப்பற்றான அகங்கார மமகாரங்களும்.

## உபதேச ரத்தின மாலை வியாக்கியானம்

இம்மாலை மணவாள மாமுனி செய்தது. பண்டைத் தனியன் களோடு 73 வெண்பாக்களுடையது. இறுதியில் உள்ள தனியன் பிள்ளை லோகஞ்சீயர் செய்தது.

**மன்னுயிர்காள் இங்கே மணவாள மாமுனிவன்**
**பொன்னடியாம் செங்கமலப் போதுகளை – உன்னிச்**
**சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக்**
**கரத்தாலே தீண்டல் கடன்.**

சுவையான பல செய்திகளும் இங்கு காணப்படும். 'நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு எஞ்சாமை யாவைக்கு மில்லையே' (47) என்ற தொடருக்கு வியாக்கியானம் சொல்லுவது காணத்தக்கது: 'பெரிய வாச்சான் பிள்ளையைப் போல திவ்வியப் பிரபந்த முழுமைக்கும் இவர் வியாக்கியானம் எழுதவில்லை; நாலிரண்டுக்கே செய்தார். நாலிரண்டு என்பது ஒரு முழுச்சொல் (மரபுத்தொடர்); சில என்பது பொருள். இவர் செய்தவை திருப் பாவையும் கண்ணிநுண் சிறுத்தாம்பும்; பின்னையும் உண்டாகில் கண்டு கொள்வது' என்று எழுதுகிறார். நாலிரண்டு என்பது எட்டு அல்லது ஆறு என்று பொருளல்ல; சில என்றே பொருள்படும் என்று இவர் குறிப்பிடுவது ஒரு மரபு விளக்கமாகும். இவர் இந் நூலுக்குரிய இரண்டு தனியன்களுக்கும் சேர்த்தே வியாக்கியா னம் எழுதியுள்ளார். உபதேச ரத்தின மாலைப்பதிப்பில், பாடல்

தோறும் அதன் வடமொழிப் பெயர்ப்பும் சுலோக வடிவத்தில் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றிருப்பது இங்குக் கருதத்தக்கது.

முதற்பாடலுரையில், பேசுகின்றேன் மன்னியசீர் வெண் பாவில் வைத்து என்பதன் உரை தமிழுக்கு வெண்பா கலித்துறை என்னுமாப்போலே அனேகம் பாக்களுண்டிறே, அதில் கலித் துறையாலே ப்ரவிருத்தமாய்த்து சரமப்ரபந்த நூற்றந்தாதி. அதி லும் அப்பியசிக்க எளிதாயிருக்கிற வெண்பா என்கிற சந்தஸ்ஸிலே வைத்தாய்த்து சதியருடைய தமிழ் விரகரான தாம் அருளிச் செய்தது. கற்கவிறே தாம் உபதேசிக்கிறது. 'வெண்பா இரு காலிற் கல்லானை' என்றிறே இதன் எளிமையிருப்பது. அதுக்குச் சீர் மன்னுகையாவது, முச்சீர் நாற்சீர் என்று சொல்லப்படுகிற சீரோடே பொருந்தியிருக்கை. அன்றிக்கே புகழ் மலிந்தபா என்னுமாப்போலே இதுவும் சீர் மன்னியிருக்கிற தென்னவுமாம், எண்ணருஞ்சீர் - பொய்கை முன்னோருடைய சீரோடே பொருந்தியிருக்கிறது.

பின்னும் சிலசெய்திகள்: திருவிருத்தம் முதலான நம்மாழ்வார் பிரபந்தம் நாலுக்கும் திருமொழி முதலான பிரபந்தங்கள் ஆறும் அங்கங்களாயிறே இருப்பது. அது திராவிட வேதமானால், இது வும் திராவிட ரூபமான அங்கங்களென்னக் குறையில்லை.

வேதந் தமிழ் செய்கையாவது, எய்தற்கரிய மறைகளை ஆயிரம் இன்தமிழால் செய்தற்கு உலகில் வரும் சடகோபனை என்கிறபடியே, வேதமானால் அதிக்ருதாதிகாரமாயிருக்கு மாகையால் அகில சேதனர்க்கும் அப்பியசித்து உஜ்ஜீவிக்கை அரிதென்று ஸர்வாதிகாரமாய் ஸர்வோப ஜீவ்யமுமாயிருக்கும் படி திராவிட பாஷாரூப சந்தர்ப்பத்தாலே வேதார்த்தத்தை விசதீகரித்து அருளிச் செய்தாரென்கை (பாடல் 14), இவர்கள் கலை திராவிட பிரம்மவித்தை.

மற்றோரிடம்: ஆண்டாள் பிறக்கைக் கடியான அவருடைய (பெரியாழ்வாருடைய) பெருமை இருக்கிறபடி, திருமாலை கட்டுகையே தொழிலாக இருக்கிற இவர் திருத்துழாயடியிலே அவதரித்த இவளை எடுத்துக் கொண்டுபோய்த் தந்தேவிகள்*

---

* தேவிகள் என்பது இங்கு வைணவ சம்பிரதாயத்தில் ஒருமையே; தேவியார் என்பது போல. இங்கு ஒரு குழப்பமேற்படுகிறது. பெரியாழ்வார் பிரமசாரி, பின் துறவி; மனைவியில்லை. ஆகவே பிள்ளை லோகம் சீயர் இவ்வாறு கூறியிருப்பது வரலாற்றில் குழப்பத்துக்கேதுவானது.

கையிலே காட்டிக் கொடுக்க, வந்த்யையா கையாலே அவரும் அரும்பெறல் பெண்ணாயிருக்கிற இப்பெண்பிள்ளையை அதிப்ரீதியுடனே எடுத்துக் கொள்ள, அப்போது வனமுலைகள் சோர்ந்து பாய என்னும் படியிறே ஸ்தன்யம் பிரவகித்தது (23).

ஆதித்யோதயத்துக்கு அருணோதயம் போலே வகுள பூஷண பாஸ்கரோதயத்துக்கு முன்னே வந்து அவதரித்த மதுரகவியாழ்வார். திருமங்கையாழ்வார் அவதரித்த குறையலூர் மண்ணியாற்றின் ஜலஸம்ருத்தியையுடையது.

ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, இருப்பத்து நாலாயிரப்படி, முப்பத்தாறாயிப்படி என்ற வியாக்கியானங்கள் நான்கும் முறையே புராண ரத்னமான விஷ்ணு புராணம், ஸ்ரீ பாஷ்யம், ஸ்ரீ ராமாயணம், சுருதப்பிரகாசிகை ஆகியவற்றின் சங்கியையால் செய்யப்பட்டன என்று சொல்லுகிறார். 'நம் சடகோபனைப் பாடினையோ என்று நம்பெருமாள் விஞ்சிய வாதரத்தாற் கேட்ப என்றாய்த்து' என்று சடகோபரந்தாதித்தனியனைக் குறிப்பிடுகிறார். வரதராசர், நஞ்சீயர் பிரசாதித்த ஒன்பதினாயிரப்படியைக் காவேரியிலே விட்டு விட்டுப் பின் தம் நினைவாற்றலால் முழுமையும் எழுதி நம்பிள்ளை என்று பெயர் பெற்ற செய்தியைச் சொல்லுகிறார். இவையன்றி, இராமானுசருக்கு முன் தொடங்கி, மணவாள மாமுனிகள் வரையுள்ள ஆசாரியர் வாழ்க்கையிலும் உபதேசத்திலும் கண்ட பல செய்திகளையும் கருத்துக்களையும் தம் உரையெங்கும் சொல்கிறார். இவ்வுரைகள் யாவுமே குறித்த நூலின் உரைகள் மட்டுமல்ல; உரை என்ற வியாஜத்தால் அளவற்ற செய்திகளைத் தெரிவிக்கும் ஒரு சமய வரலாற்றுக் களஞ்சியம்.

## திருவாய்மொழி நூற்றந்தாதி வியாக்கியானம்

நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் ஒவ்வொரு திருமொழிக்கும் (பதிகத்துக்கும்) முதற்பாடலின் தொடக்கச் சொல்லையும் இறுதிப் பாடலின் இறுதிச் சொல்லையும் ஒரு வெண்பாவின் தொடக்கமாகவும் இறுதியாகவும் முறையே அமைத்து மணவாள மாமுனிகள் ஒரு நூல் செய்தார். திருவாய்மொழி முழுமையும் அந்தாதி ஆனமையால் இந்நூலும் அந்தாதியாக உள்ளது. இது திருவாய்மொழி நூற்றந்தாதி என்று பெயர் பெறும். இதன் பாடல்களில் ஒவ்வொன்றும் நம்மாழ்வார் புகழைக்கொண்டது. பாடல் தொகை 100. இந்நூலுக்குப் பிள்ளை லோகஞ்சீயர் விரிவான வியாக்கியானம் செய்தார். இப் பாடல்களில் அமைந்த சில

*வரையறையை இவரே பின்வருமாறு கூறுகிறார்: 'இப்பிரபந்தங்களுக்கு அனேக நிர்பந்தங்களுண்டாயிறே இருப்பது. அதெங்ஙனே என்னில், வெண்பா என்கிற சந்தஸ்ஆகையும், இப்படியான இப்பாட்டில் முற்பாதியிலே ஓரோர் திருவாய் மொழியின் தாத்பர்யமும், தத்சங்கதிகளடைகையும், பாட்டுக்கள் தோறும் ஆழ்வார் திருநாமங்கள் வருகையும், அதில் தாத்பர்யங்களைத் தாத்பர்யந்தமாய்ப் பேசுகையும், அந்தாதியாய் நடக்கையுமாகிற ஐந்து நிர்ப்ந்த முண்டாயிருக்குமாயிற்று' (அவதாரிகை).*

*இந்நூற்றந்தாதியின் தனியன் இரண்டுக்கும் இவர் உரை எழுதவில்லை. இவ்வந்தாதிக்கு இவர் பாடிய தனியன்கள்:*

அல்லும் பகலும் அனுபவிப்பார் தங்களுக்குச்
சொல்லும் பொருளும் தொகுத்துரைத்தான் – நல்ல
மணவாள மாமுனிவன் மாறன் மறைக்குத்
தணவா நூற் றந்தாதி தான்.

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிகள்
தன்னருளா லுட்பொருள்கள் தன்னுடனே – சொன்ன
திருவாய் மொழிநூற்றந் தாதியாம்தேனை
ஒருவா தருந்துநெஞ்சே உற்று.

## ஆர்த்திப் பிரபந்த வியாக்கியானம்

*மணவாள மாமுனிகள் செய்த மூலம், பெரும்பகுதி வெண்பா, சிறு பகுதி விருத்தம் கலித்தாழிசை கலிப்பா கொண்டது. பாடல் எதிராசரைப் புகழ்வது. ஆயுள் இறுதியில் பரமபதத்தில் ஆசை பிறந்து இந்நூல் பாடிப் பரமபதம் அடைந்தார் என்பர். பிள்ளை லோகஞ்சீயர் இந்நூலுக்குத் தாம் செய்த வியாக்கியானத் தொடக்கத்தில் இரு தனியன்களைக் குறிப்பிடுகிறார்; இவை முன்னமே உண்டாயிருந்தன என்கிறார்:*

தேன்பயிலுந் தாரா னெதிராசன் சேவடிமேல்
தான்பரம பத்தி தலையெடுத்து – மாந்தர்க்கு
உணவாக ஆர்த்தியுடன் ஒண்தமிழ்கள் செய்தான்
மணவாள மாமுனிவன் வந்து.

வம்பவிழ்தார் வண்மை மணவாள மாமுனிவன்
அம்புவியிற் கால்பொருந்தா ஆர்த்தியினால் – உம்பர்தொழும்
விண்ணுலகிற் செல்ல விரைந்தெதிரா சன்பதங்கள்
நண்ணி யுரைத்தான் நமக்கு.

பிள்ளை லோகம் இந்நூலுக்குத் தமிழில் பதவுரையும் மணிப் பிரவாளத்தில் விரிவான வியாக்கியானமும் செய்திருக்கிறார். பாடல் தோறும் விரிவான அவதாரிகை கூறிப் பொருளைத் தொடர்புபடுத்துகிறார்.

சில கருத்துகள்: அஞ்சு வயசுக்குட்பட்ட ப்ரஜையுடைய துர்மரணமெல்லாம் மாதாவினுடைய அனவதானத்தாலே வந்த தாக அவளுக்கு சாஸ்திரம் தோஷம் விதிக்கையால் கண்ணிலே வெண்ணெயிட்டு நோக்கவேணுமிறே; பிரஜையைக் கிணற்றின் கரையில் நின்றும் வாங்காதொழிந்தால் தாயே தள்ளினாள் என்னக் கடவதிறே; உடைமைக்கொரு முழுக்கு, உடையவனுக்கு உடைமை பெறுந்தனையும் முழுகவேண்டும்படியிறே இருப்பது. ஓலமிடுதல், வாக்காலே பெருமிடறு செய்து கூப்பிடுதல். வாழி- நித்ய மங்களமாய்ச் சொல்லவேணும். ஆழ்வார்கள் பதின்மர் என்கிறார். அருளுவீர்-அருளுவுதீர் என்கிறார்.

## பதிப்பு

ஸ்ரீவைஷ்ணவ கிரந்த முத்ராபக சபை 1918.

## தனியன் வியாக்கியானம்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள் இருபத்து நான்குக்கும் தனி தனியான பல தனியன்கள் (சிறப்புப் பாயிரம் போன்றவை) செய்யப் பெற்றுள்ளன: அவற்றை ஓதியே பாசுரங்களை ஓதுவது வைணவ சம்பிரதாயம். இவற்றுள் வடமொழிச் சுலோகங்கள் சில, தமிழ்ப் பாடல்கள் 34. இவற்றுள் இரண்டொரு பாடல்கள் நீங்கலாகச் சம்பிரதாயமாக வழங்கும் ஏனையவற்றுக்குப் பிள்ளை லோகஞ்சீயர் வியாக்கியானம் எழுதியிருக்கிறார். இவ் வியாக்கியானங்கள் பொதுவாய் அவ்வப் பிரபந்தங்கள் தமக்குரிய பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானம் அரும்பதம் முதலி யவற்றோடு தனிநூல் எனப் பதிப்பிக்கப்பட்ட இடங்களில், முற்சேர்க்கையாகச் சேர்த்துப் பதிப்பிக்கப்பெற்றுள்ளன. தனி நூல் வடிவத்தில் அச்சிடப் பெறவில்லை போலும். இத்தனியன் வியாக்கியானங்களில் பிள்ளை லோகம் மூலத்தின் பொருளை மட்டும் விளக்கிக்கொண்டு போகிறார்.

## உபதேசத் திருநாமம்

இப்பெயருடைய ஒரு செய்யுள் நூல் ஏட்டுவடிவில் உள்ளது. நூலில் ஆசிரியர் பெயர் குறிக்காவிட்டாலும் இந்நூல் தொடக்

கத்தில் எழுதப்பெற்றுள்ள வடமொழித் தனியன், 'தம் லோக தேசிக முனிம் சரணம் ப்ரபத்யே' என்று கூறுவதால் இந்நூல் லோகம் ஜீயர் (லோகதேசிகர்) செய்ததாயிருக்கலாம் என்று கொள்ளப்படுகிறது. இது 89 பாடல் கொண்டது; வெண்பா கட்டளைக் கலித்துறை விருத்தம் முதலான பல பாவினங்களும் உள்ளன. இப்பாடல்கள் அனைத்தையுமே சீயர் செய்யவில்லை. தமக்கு முன்னே வழங்கிய பிள்ளை லோகாகாரியர் மணவாள மாமுனிகள் பற்றிய பாடல்கள், சில உபதேச ரத்தினமாலைப் பாடல்கள் ஆகியவற்றோடு தாமும் சில புதுப்பாடல்கள் புனைந்து இந்நூலாகக் கோத்தார் என்று தெரிகிறது. பிள்ளை லோகாசாரியர், அவர் சீடரான கூர குலோத்தமதாசர், திருமலை யாழ்வார் என்னும் திருவாய் மொழிப்பிள்ளை; இவர் சீடரான மணவாள மாமுனிகள்; இவர் தந்தையான திகழக்கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தாதரண்ணரையன், மாதா மகரான குரவை மணவாளர் ஆகியோர் இங்கு போற்றப் பெறுகின்றனர். (குரவை மணவாளர் - திருக்கோட்டியூர் அழகிய மணவாளர் என்பவர்). பல இடங்களிலிருந்து பாடல்கள் தொகுக்கப்பட்டன என்று தெரிகிறது. இதன் முதல் பாடல், யதீந்திர ப்ரவண ப்ரபாவத்தின் தொடக்கத்திலுள்ள பாடல்:

குலநாத னெங்கள் மணவாள யோகி குணக்கடலைப்
பலநாளும் மண்டிப் பருகிக் களித்திந்தப் பாரினுள்ளே
உலகாரிய முனிமேகம் முன்னாள் என் உள்ளங்குளிர
நலமான நீர்மழை நாளும் பொழியுமிந் நானிலத்தே.

### திருமந்திரார்த்த அரும்பத விளக்கம்

வைணவத்தில் மூன்று மந்திரங்கள் மந்திரத்திரயம் எனப்படும். அவற்றுள் முதலாவது திருமந்திரம்; ஓம் நமோ நாராயணாய என்பது; இதுவே அஷ்டாக்ஷரம், எட்டெழுத்து; நான் கண்டு கொண்டேன் என்று திருமங்கையாழ்வார் பாடுவது. இதன் பொருளை விளக்கிப் பிள்ளை லோகாசாரியர் முமுட்சுப்படி என்று எழுதினார். இது அவர் எழுதிய அட்டாதச ரகசியங்களில் ஒன்று. முமுட்சு என்றால் வீடுபேற்றில் விருப்பமுள்ளவன் என்று பொருள். முதல் திருமந்திரார்த்தப் பகுதிக்கு, பிள்ளையின் தம்பியான அழகிய மணவாளப் பெருமான் நாயனாரே வியாக் கியானம் எழுதியிருக்கிறார். இவ்வியாக்கியானத்துக்கு, பிள்ளை லோகம் சீயர் சுருக்கமாயும், சுத்தசத்துவம் தொட்டாசாரியர்

கற்று விரிவாயும், அரும்பத விளக்கம் எழுதியிருக்கிறார்கள். பின்னர் எம்பாவையங்கார் மிகவும் விரிவான மற்றொரு வியாக்கியானம் எழுதினார். இவை யாவும் ஒரு நூலாக 1893இல் அச்சிடப் பெற்றன.

பல கதைகளை எழுதித் தேர்ந்தவரான பிள்ளை லோகஞ் சீயர் இங்கும் தம் அவதாரிகை உரையில் பல செய்திகளைச் சொல்லுகிறார். 'சர்வேசுவரன் பெரிய பிராட்டியாருக்கு உபதேசம் பண்ணினாரென்கிறது மந்திர த்வயத்துக்கும் உபலக்ஷணமாய், அவள் சேனை முதலியாருக்கு உபதேசிக்க, அவர் பிராட்டி நியோகத்தாலே நாதமுனிகளுக்குப் பிரசாதித்தார்... நாத முனிகளுக்கு ஸ்வப்னமுகனே உபதேசித்தார் என்றும் அருளிச் செய்வார்கள். 'ஒருநாள் ரகஸ்யார்த்தமும் மற்றைநாள் திருவாய்மொழி முதலான பிரபந்தமும், அதின் மற்றைநாள் அவற்றினுடைய அர்த்தமும் ஆக மூன்று நாளாக அருளிச் செய்தருளினார் என்று அருளிச் செய்வர். கண்ணிநுண் சிறுத்தாம்பைப் பன்னீராயிரம் உருப்புரச்சரணம் பண்ணப் பிரத்தியட்சமாய்த் திருத்திரை வளைத்துக் கொண்டிருந்து விசத விசததர விசததமமாகப் பிரசாதித்தார் என்று அருளிச் செய்தருளுவர். 'பிராட்டி பிரமாவுக்குப் பிரசாதிக்க, பிரமா இவ்வருகுண்டான சிஷ்யாதிகளுக்கு ரகஸ்யத்ரயோபதேசம் பண்ணினார் என்று ரிஷிகளுக்கு ரகஸ்யத்தினுடைய வரலாறு என்று அருளிச் செய்து'...'நாத முனிகள் தொடங்கி, நமக்கு சம்பிரதாயமாயிருக்கும்; பிரமா முதலாக, ரிஷிகளுக்கு சம்பிரதாயமாயிருக்கும்'- என்றெல்லாம் கூறியிருக்கும் வரலாறுகள் காணத்தக்கன.

இவருடைய அரும்பத விளக்கம் பெயருக்கேற்றாற்போல் மிகவும் சுருக்கமாகவே இருக்கும்; சுவையான பகுதிகளும் நிரம்ப உள்ளன.

## ஸ்ரீவைஷ்ணவ சமயசார நிஷ்கர்ஷம்

இது மிகவும் விரிந்த நூல். டெம்மியளவில் 600 பக்கம் உடையது. பரதத்துவ விவேகம், சதாசார்ய விவேகம், சித்தோபாய விவேகம், பாஞ்சராத்ப்ரமாண வைபவ விவேகம், பகவத் பக்த துர்ஜாத்யபகம விவேகம், வர்ணாச்மாசார விவேகம், ஸ்ரீ வைஷ்ணவ யதச்ருஹஸ்தாதி அந்யோந்ய வந்தநாதி சமர்த்தனம், ப்ரபந்த தினசர்யை, பகவத் ப்ரசாத யோக்யாயோக்யதாதியதிதி நிர்ணயம், சிஷ்டாசார்ய ப்ராதான்ய நிருபணம் என்ற பத்துப் பிரகரணங்களைக் கொண்டது. இதன் நடையைப் பார்க்கும்போது, இவ்

வாசிரியர் இதை முதலில் எழுதியிருக்கலாமோ என்று கருதத் தோன்றுகிறது. முழுமையும் வரிவரியாக, வாக்கியம் வாக்கியமாக வடமொழியாகவே எழுதியிருக்கிறார். 200 சொற்கள் கொண்ட ஒரு பக்கம் முழுமையும் எடுத்துக்கொண்டால், 28 சொற்களே தமிழ்ச் சொற்கள். ஏனைய யாவும் வடச்சொற்களே. பக்கம் 369 தமிழ்ச் சொற்கள் - மட்டும் சொல்லுகிற, ஆவது, ஆகையாலே, அனைவர்க்கும், என்று, அத்தனையிறே, அங்கு, ஆகையால், என்று சொல்லக் குறையில்லை, ஆகையால், என்கிற, இதன் படியே, கீழ்ச் சொன்ன, என்று விவேகிகள் கண்டுகொள்வது, இன்னமும், யதிகளுக்குச் சொல்லியிராமையாலும், அவற்றில், அந்த, அவர்களைப் போலன்றிக்கே, அந்த உண்டாகச் சொல்லி யிருக்கையாலே, இல்லையென்னுமதுவே - இவையே தமிழ்ச் சொற்கள். ஏனைய யாவும் வடசொற்கள், கிரந்த எழுத்து. ஒருகால் பொருளானது சமயாசாரமானபடியால், முழுமையும் இங்கு வடமொழியாகத் தந்து இடைச்சொற்களை மட்டும் தமிழாகப் பெய்து தந்தார் போலும். ஓரிடத்தில் இவர் (பக்கம் 497) ‘விப்ரயதி: என்னுமத்தாலே வர்ணத்ரயத்திலும் யதிகள் உண் டென்னுவதும் அவர்களுக்குண்டான தண்டபேதங்களும் சுப்பிரசித்தம்’ என்று எழுதியிருப்பது கருதத்தக்கது. 16ஆம் நூற்றாண்டில், பிராமணருக்கு மட்டுமே சந்நியாசமும் ஆசாரிய பதவியும் உண்டென்று அத்வைதிகள் கூறிய கூற்றை மறுத்துச் சிவாக்கிரயோகிகள், மற்ற வருணத்தாருக்கும் சந்நியாசமும் ஆசாரிய பதவியும் உண்டென்று நிலைநாட்டிச் சைவ சந்நியாச பத்ததி (வடமொழியில்) எழுதியமை முன்னர்க் குறிப்பிட்டோம்.* வைணவ பரமாக இந்த ஜீயரும் இதைச் சொல்வது காணத்தக்கது.

ஒவ்வொரு பத்தியின் முடிவிலும் இவர், இப்படி விவேகிகள் கண்டுகொள்வது (அல்லது நிச்சயித்துக் கொள்வது) என்று முடிப்பார். இது, பெருந்தேவனார் பாரத வெண்பாவின் உரை நடைப் பகுதியின் இறுதியிலும் ‘இவ்வாறு செய்தாராகக் கண்டு கொள்வது’ என்று வரும் தொடரை நினைவூட்டுகிறது.

### காலம்

மணவாள மாமுனிகள் 15ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் (கி.பி. 1443) பரமபதம் அடைந்தார். அக்காலத்தில்

---

* இந்நூற்றாண்டு வரலாறு பாகம் 2, பக்கம் 201.

பட்டர்பிரான் ஜீயர் பிரசித்தமாய் விளங்கிய சீடர். அவர் வழியில் மூன்றாம் தலைமுறையில் வந்தவரே பிள்ளை லோகஞ்சீயர். எனவே, இவர் காலம் கி.பி. 1525-50 எனக் கொள்ளுதல் பொருந்துவதாகும்.

### பதிப்பு

சப்தகாரை வியாக்கியானம், உபதேச ரத்தின மாலை வியாக்கியானம், திருநூற்றந்தாதி வியாக்கியானம் முதலானவை (மணவாள மாமுனிகள் செய்த ஞானசார பிரமேயசார வியாக்கியானங்களுடன்) "சபா பண்டிதர்களான புதுப்பேர் - இளையவில்லி வித்வான் வேங்கடாசாரியராலும் ஸ்ரீமான் புதுப்பட்டு திருவேங்கடாசாரியராலும், வித்துவான் அண்ணங் கராசாரியராலும் நன்றாகப் பரிசோதிக்கப்பட்டு 1916ஆம் ஆண்டில் ஸ்ரீ வைஷ்ணவ க்ரந்தமுத்ராபகசபையாரால் அச்சிடப்பட்டன."

## பரகால நல்லான்

இவர் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்து, ஸ்ரீவைஷ்ண வத்தின் ரகஸ்யத்ரயம் என்னும் மூன்று மந்திரங்களுக்கும் விரி வான விளக்கம் எழுதினார். இவ்விளக்கம் ரகஸ்யார்த்த ப்ரதீ பீகை என்றும், பரகால நல்லான் ரகஸ்யம் என்றும் பெயர் பெறும். இவர் பெயரும் திருவரங்கச் செல்வனார் என்றும் பர காலார்யர் என்றும் வழங்குவதுண்டு. இவர் நூலும் இவர் வர லாறும் பிரசித்தமாக வழங்கவில்லை. நூலிலிருந்து சில செய்தி களை இங்குக் குறிப்பிடலாம்.

நூல் பெரிய நூல்; டெம்மி அளவில் 308 பக்கம் கொண்டது. மூன்று பிரகரணமாயுள்ளது. முதலாவது திருமந்திரப் பிரகரணம். திருமந்திரம் - ஓம் நமோ நாராயணாய. இதன் ரகஸ்யார்த்தத்தை 72 பக்கங்களில் விளக்குகிறது. இரண்டாவது த்வ்யப் பிரகரணம். த்வ்யம் என்பது இரண்டு மந்திரங்கள்.

> ஸ்ரீமந் நாராயணாய சரணௌ சரணம் ப்ரபத்யே
> ஸ்ரீமதே நாராயணாய நம;

என்பன. இவற்றின் ரகஸ்யார்த்தத்தை 126 பக்கங்களால் விளக்கு கிறது. மூன்றாவது சரம சுலோகம் (பகவத் கீதையிலுள்ளது):

ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமிமா சுச:

*(எல்லாக் கர்ம யோகாதி உபாயங்களையும் விட்டு என்னொருவனையே சரணமாக அடைவாய்; நான் உன்னை உனது பாபங்களிலிருந்தும் விடுவிப்பேன்: நீ சோகிக்கவேண்டிய நிமித்தமில்லை என்பது இதன் பொருள்; கண்ணன் இப்பொருளைக் குருக்ஷேத்திரத்துப் போர்முனையில் அருச்சுனனுக்கு உபதேசித்தான்.)*

*இது இங்கு 110 பக்கங்களால் விளக்கப்படுகிறது. நல்லான் இம்மந்திரத்தையும் சொல் சொல்லாகப் பிரித்து விரிவாகப் பொருள் எழுதுகிறார். நடை அதிகமான வடமொழி கலந்த மணிப்பிரவாளம் என்பது மட்டுமல்ல. மிகவும் கடினமானது. அதனால்தான் இது அதிகம் ஆட்சி பெறவில்லை போலும்: தெளிவாக விளங்கிக் கொள்ளக்கூடியவாறு இதிலிருந்து சில வரிகளை எடுத்துக் காட்ட இயலவில்லை. கீழ்வரும் பகுதியைக் காண்க.*

*“மாம் என்று ஆச்ரயண்யமான வ்யக்தியைச் சொல்லுகையாலே - நாராயண பதத்தில் அனுஸந்தேயமான வாத்ஸல்யாதி குண சதுஷ்டயங்களும் அனுஸந்தேசங்கள்.*

*“வாத்ஸல்யமாவது - அன்றீன்ற கன்றின் பக்கல் தாய் பண்ணும் வ்யாமோஹம்; அதாவது - சுவடுபட்ட தரையில் புல்லையும் காற்கடைகொள்ளும் தேநுவானது தன்கடையில் நின்றும் புறப்பட்ட கன்றினுடைய தோஷத்தைத் தன்பேறாக நக்கி தன் முலைப் பாலாலே அத்தைத் தரிப்பிக்குமாபோலே ஆஶ்ரிதகமான தோஷமே போக்யமாக வங்கீகரித்து ‘பாலே போல் சீர்’ என்கிற தன் கல்யாண குணங்களாலே அவர்களை ரக்ஷிக்கை. ஸ்வாமித்வமாவது - ஆஶ்ரிதருடைய பேறிழவினுண்டான ஸுகதுக்கங்கள் அவர்களுக்கன்றிக்கே யாம்படி அவர்களையுடையனாகை ஸௌஶீல்யமாவது - ‘அவாக்ய நாதராக’ என்கிறபடியே பெரிய மேன்மையுடையனாய் ‘அவனெவ்விடத்தான்யானார்’ என்னும்படி யிருக்கிறவன் க்ஷுத்ரஸம்சாரியான சேதநனோடே அவன் சிறுமையாதல் தன் பெருமையாதல் தன் நெஞ்சிற் படாதபடி புரையறக் கலக்கை. ஸௌலப்யமாவது, கட்கரிய பிரமன் சிவனிந்திரனென்றிவர்க்குக் கட்கரிய கண்ணன்” என்கிறபடியே அதீந்த்ரியனான தான் எல்லாருடைய கண்ணுக்கு மிலக்காய்க் கொண்டு ஸுலபனாய் நிற்கை.”*

பூர்வாசாரியர்கள் குறித்த பல செய்திகளும் வரலாறும் கூறுகிறார். பட்டர் பற்றிய செய்தியொன்று: பட்டர் பாதிரிக் குடியிலே எழுந்தருளினபோது, மறவன் 'முயற்குட்டியைப் பிடித்தேன், அதன் தாய் முன்னே வந்து தண்டனிட்டவாறே விட்டுப் போந்தேன்' என்ன, முயலுக்குச் சரணாகதியே ரக்ஷுகமென்று உபதேசித்தாரில்லை. அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: என்கிற ஞானம் வேடனுக்கு இப்படியிருக்க, ப்ரபத்தி வைபவம் இருந்த படியென் என்று பட்டர் விஸ்மிதரானார் துவயத்தை விளக்குமிடங்களில், எம்பார் பட்டர் ஜீயர் சிறியாத்தான் கொற்றியம்மைப் பிராட்டி அருளாளப் பெருமாள் அம்மங்கியம்மாள் அனந்தாழ்வான் நஞ்சீயர் போன்றார் செய்திகள் பல கூறுகிறார். நூல் முழுமையும் ராமாயணம் உபநிடதம் கீதை நாலாயிரப் பிரபந்தம் முதலியவற்றின் மேற்கோள்கள் அளவின்றிக் காணப்படும்.

## பதிப்பு

*ஸ்ரீ வைஷ்ணவ கிரந்த முத்ராபக சபை 1918.*

## மணிப்பிரவாளம்

மணிப்பிரவாளம் பற்றிய பல செய்திகளை எமது தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் வெவ்வேறிடங்களில் விளங்கக் கூறியிருக்கிறோம்.* இங்கு மலையாள மொழியிலக்கணத்திலிருந்து சில குறிப்புக்களை மட்டும் தருகிறோம். இக்குறிப்புக்களோடு அச் செய்திகளையும் சேர்த்துப் படித்துக் கொள்க:

"இரண்டு வகையான சொற்கள் கலப்பதாலேயே நாட்டு மொழி - சமஸ்கிருதக் கலப்புத் தோன்ற முடியும். அவ்வாறு தோன்றும் தனித் தன்மையுடைய வாக்கியங்களை மணிப்பிரவாளம் என்று பெயரிடுவது இலக்கணை. மணி என்பது நாட்டு மொழியையும் பிரவாளம் என்பது சமஸ்கிருதத்தையும் ஒரு தலையாகக் குறிக்கின்றன.

**தமிழ்மணி ஸம்ஸ்க்ருத பவழம்**
**கோக்கின்றேன். வ்ருத்தமான செந்நூன்மேல்.**

என்று வழங்குதலைப் பார்க்க. ஆனால்,

---

* தமிழ் இலக்கிய வரலாறு 10, 11, 12, 13, 14 ஆகிய நூற்றாண்டு நூல்களிலும் கூறப்பட்டுள்ளது.

தமிழ் சம்ஸ்க்ருத மென்றொள்ள
ஸுமனஸ்ஸுகள் கொண்டொரு
இண்ட மால தொடுக்கின்றேன்
புண்டரிகாக்ஷ பூஜயா(ய்).

என்றும்,

ஸம்ஸ்க்ருத மாயின செங்கழிநீரும்
நற்றமி ழாயின பிச்சக மலரும்
ஏக கலந்து கரம்பக மாலாம்
வ்ருத்த மனோஜ்ஞாம் ஸம்க்ருத யிஷ்யே.

*என்றும் கற்பிக்கின்ற கருத்துக்கள் மணிப்பிரவாளம் என்ற பெயருக்குப் பொருந்துவதில்லை. இப்பாடல்களில் காணப்படும் 'மாலை' என்பது நாட்டு மொழி - சமஸ்கிருதக்கலப்பின் பெயரன்று. ஒப்புமை அடிப்படையிலமைந்த இலக்கணையால் மாலை எனக் கூறப்படுகின்றது. ஆனால் மணிப்பிரவாளம் என்ற பெயரோ, இலக்கணை இடுகுறி ஆகிய இரண்டின் அடிப்படையிலும் அமைந்ததாகும்."**

*இக்கருத்து மலையாள மொழி மணிப்பிரவாளத்துக்கு லீலாதிலகம் என்பது அவ்விலக்கணத்தைக் கூறும் மலையாள இலக்கண நூல். தமிழில் மணிப்பிரவாளம் உரை நடையில் வருவதே யொழியச் செய்யுளில் வந்ததில்லை, அதற்கு இலக்கணமும் இல்லை.*

❖ ❖ ❖

---

* *லீலா திலகம். மா. இளைய பெருமாள் 1971, பக்கம் 6-7. இங்கு காட்டிய வரிகள் மலையாள வரிகள். நாட்டு மொழி - மலையாளம்.*

*அத்தியாயம் 3*

# சைன இலக்கியம்

## *முன்னுரை*

*கி.மு.6-5 நூற்றாண்டுகளில் வடநாட்டில் வாழ்ந்து சைன தருமத்தை வளர்த்த வர்த்தமான மகாவீரருக்குப் பின் சில நூற்றாண்டுகள் கழித்து அவர் போதித்த சமயம் மெல்லத் தென்னாட்டிலும் பரவலாயிற்று. கிறிஸ்து அப்தத்துக்குச் சற்று முன்னும் பின்னுமாக அச்சமயம் தமிழ் நாட்டிலும் தலைகாட்டி யிருந்ததென்று இலக்கியச் சான்றுகளாலும் கல்வெட்டுச் சான்று களாலும் அறிகிறோம். கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் தொடங்கி, ஆறாம் நூற்றாண்டில் முன் ஒடுங்கியிருந்த பாண்டியர் மீண்டும் தலையெடுக்கிற வரையில், மதுரையைக் களப்பிரர் என்ற சைன மரபினர் கைப்பற்றி ஆட்சி புரிந்தனர். அக்காலம் முதலாகத் தமிழ்மொழியில் சைனரும் நூல் செய்து வந்தனர். இலக்கணம், காப்பியம், நீதிநூல் சமய தத்துவ விளக்கம் முதலான பலதுறை நூல்களும் அவர்கள் செய்து வந்தார்கள். விரிந்த அளவிலோ சுருங்கிய அளவிலோ அவர்களுடைய நூல் கள் நூற்றாண்டு தோறும் எழுந்து வந்திருக்கின்றன. தொடக்கத் தில் நாலடி பழமொழி; பின் ஏலாதி சிறுபஞ்சமூலம்; அடுத்து, சீவகசிந்தாமணி சூளாமணி நீலகேசி; யாப்பருங்கலம் காரிகை அவற்றின் உரைகள்; தொல்காப்பியவுரை; திருக்குறள் உரை; அருங்கலச் செப்பு அறநெறிச் சாரம் வச்சணந்திமாலை வெண்பாப் பாட்டியல் நன்னூல்; யசோதரகாவியம்; சீவசம்போதனை, மேரு மந்தரபுராணம், ஸ்ரீ புராணம் என்ற முறையிலும் அவர் களுடைய நூல்கள் வளர்ந்து வந்திருக்கின்றன.*

*சீவக சிந்தாமணி, சூளாமணி வரையில் வளர்ச்சி பெற்று வந்த சைன இலக்கியமானது, பின்னர்த் தமிழ் நாட்டில் தோன்றிய*

சமய எழுச்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காண்கிறோம். தமிழ்நாட்டில் முகம்மதியப் படை புகுந்த வைதிக சமயத்தை ஒடுக்கிய சில காலத்துக்கெல்லாம் விசயநகர ஆட்சியின் ஆதரவால் வைதிக சமயங்களான சைவமும் வைண வமும் பெருங்கிளர்ச்சி பெற்று மீண்டும் வளர்ந்தோங்கின. சோழர் காலத்தில் பெற்றிருந்த பெருவளர்ச்சி, சிறிது கால முகம்மதிய இடையீட்டின் பின், மீண்டும் பெருகலாயிற்று. இவ்விரு சமயங் களிலும் சமயத் தலைவர்கள் தோன்றிச் சிறப்பான சமய சாத் திரம் உரை புதிய விளக்க நூல்கள் செய்தார்கள்; சமய ஆசாரிய பீடங்கள் சம்பிரதாயங்கள், சீடர் குழாங்கள் பெருந்திரளாக எழலாயின. இந்த எழுச்சியின் விளைவாக, முன்னமே ஓங்கி வந்த சைன சமயம் வளர்ச்சி குன்றி ஒடுங்கிற்று என்பது புலப் படுகிறது. 14-15 நூற்றாண்டுகளில் அபூர்வமாய்ச் சில பெருநூல் கள் எழுந்தன என்பது உண்மை. எனினும், முன்போலச் சைனம் பல துறைத் தமிழ் வளர்ச்சியில் பங்கு கொள்ளவில்லை; சமய நூல்கள் எழுந்தனவேயன்றி, சிறப்பான பிற துறை நூல்கள் அதிகமாகத் தோன்றவில்லை.

இந்த நினைவோடு 16ஆம் நூற்றாண்டைப் பார்த்தால் அங்குச் சைன நூல்களில் நிலையும் இதுவே என்பது புலப்படும். இலக்கணத்துறையில் சைனர் நல்ல நூல்கள் பல செய்து வந்திருக் கிறார்கள். அந்த மரபு இடையறவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக, மண்டல புருடர் என்ற சைன ஆசிரியர் இந்த நூற் றாண்டில் சூடாமணி நிகண்டு என்ற சிறப்புடைய ஒரு நிகண்டு செய்திருக்கிறார். சமீப காலம் வரையில் தமிழ் கற்கப் புகுந்தார் இதை விரும்பிப் பயின்று வந்திருக்கிறார்கள். திவாகரத்தைத் தழுவி விருத்தயாப்பில் அமைக்கப்பட்ட இந்நூலுக்கு, நிகண்டு களின் வரிசையில் சிறப்பான இடம் உண்டு.

இலக்கியத்துறையில், நாககுமார காவியம் என்ற சிறு நூல் இக்காலத்தில் செய்யப்பட்டது. இது இலக்கியம் அல்லது காவி யம் என்ற பெயருக்குச் சிறிதும் தகுதியற்றது எனினும், இந்நூற் றாண்டில் தோன்றிய நூல் என்ற அளவில் குறிப்பிடத் தகுந்தது.

இவையன்றி, சைனர் தோத்திரத்திரட்டு என்ற ஒரு சிறு தொகுப்பு நூலில் காணப்படும் பதிகங்களுள் சில, இந்த நூற் றாண்டுக்குரியன வென்று கருதத்தக்கவை. அவற்றை இவ்வத்தி யாயத்துள் ஆராய்வோம். சூடாமணி நிகண்டு முன்னே இலக்கணம்

என்ற அத்தியாயத்துள் ஆராயப்பட்டது.* நாககுமார காவியத்தையும் பதிகங்களையும் மட்டும் இங்கு பார்க்கிறோம்.

## நாக குமார காவியம்

### நூல்

இப்படி ஒரு நூல் உண்டென்று தாமோதரம் பிள்ளையே தமது சூளாமணி முகவுரையில் முதன் முதல் குறிப்பிட்டார். வேறு எவரும் இதன் பெயரைச் சொன்னவரில்லை. அவர் இது ஒரு சிறு காப்பியமென்றார். ஸ்ரீ பால் அவர்கள் தந்த காகிதப் பிரதி கொண்டு வித்துவான் மு. சண்முகம் பிள்ளை அவர்கள் இந்நூலை, சென்னைப்பல்கலைக்கழக பதிப்புத்துறையின் வெளியீடாகிய தமிழாய்வு 2இல் வெளியிட்டிருக்கிறார். இந்நூல் ஐந்து சருக்கங்களும் 170 விருத்தப்பாக்களும் உடையது. சருக்கங்களுக்குத் தனிப்பெயர் காணப்படவில்லை. யசோதர காவியம், உதயன குமார காவியம் என்னும் காவியங்ளோடு இதுவும் ஒரு காவியமாக வைத்தெண்ணத்தக்கதே மூன்றுக்கும் காவியத் தன்மை சிறிது மில்லாதநிலை பொது.

தமிழில் காவியம் காப்பியம் என்ற இரு சொற்களும் ஒரே பொருளுடையன என்ற கருத்து நிலவுகிறது; இது அத்துணைப் பொருத்தமுடையதன்று. வடமொழியில் காவியம் என்பது எல்லாக் கவிதைக்கும் வழங்கும் பொதுப்பெயர். காவிய மென்றால் கவிதை. ஆனால் காப்பியம் என்றால் தமிழில் வேறு பொருள்; தண்டியலங்காரத்தில் கூறியபடி தொடர்நிலைச் செய்யுளாய் விரிவான பொருளை உள்ளடக்கியது. இப்பொருள் காவியம் என்ற வடசொல்லுக்கு உரியதன்று; ஆகவே, இந்நூல்கள் காவியம் என்று சொல்லும்போது கவிதை என்ற பொருளில் மட்டும் கொள்ளவேண்டும் என்று தெரிகிறது.

இந்நூல் நாககுமார காவியம் என்ற பெரிய பெயர் சூட்டப் பெற்றபோதிலும் கூட நூல் இறுதியில் நாக பஞ்சமி கதை, பஞ்சமி கதை என்றே பெயரிடப் பட்டிருந்ததென்று தெரிகிறது. சிரேணிக மகாராஜன் பஞ்சமி கதையைக் கூறுக என்று கௌதம முனிவரைக் கேட்க அவர் கூறுகிறார்:

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு இரண்டாம் பாகம், அத்தியாயம் 4, பக்கம் 75-90.

சிறிநற் பஞ்சமி செல்வக் கதையினைச்
செறிகழல் மன்னன் செப்புக என்றலும்
அறிவு காட்சி அமர்ந்தொழுக் கத்தவர்
குறியு ணர்ந்ததற் கூறுத லுற்றதே. 25

வடமொழி நூலின் ஒவ்வொரு சருக்க இறுதியிலும் நூற்பெயர் நாக பஞ்சமிகதை என்றே சுட்டப்பட்டிருக்கிறது.* இத்தமிழ் நூலும் அவ்வாறே பெயர் பெறுதற்குரியது; எனினும் பெயர் வைத்தார் தமிழ் மரபின்படி தொனியால் சிறப்பாகிய காவியம் என்ற பெயரை இதற்கு அமைத்தார் போலும்.

நூலானது பாயிரமாக நான்கு பாடல்களும் ஐந்து சருக்கங்களும் கொண்டது. பாடல் தொகை 170; நூலுக்குப் புறம்பாகக் காப்புச் செய்யுள் ஒன்றும் இறுதியில் சருக்கப் பாடல் தொகை கூறும் இரு பாடல்களும் உள்ளன; ‘இன்புறக் கதை கேட்டார் இயல்புடன் வாழ்வாரன்றே’ என்று இப்பாடல்கள் முடிகின்றன. இம்மூன்றும் மிகைப் பாடல்கள் காப்பு, வாணியையும் குருவையும் வணங்குகிறது. பாயிரப் பாடல்கள் நான்கும் நூற்பொருள், வழி, அவையடக்கம், பயன் என்பன கூறும், ஐந்து சருக்கங்களையும் தனித் தனியாகப் பிரித்தற்கான பொருளின் பாகுபாடு எங்கும் காணப்படவில்லை.

### கதைச் சுருக்கம்

மகத நாட்டின் தலைநகர் இராசமாகிரிய நகர். அங்கு சிரேணிகராசன் ஆட்சி புரிந்தான், விபுல மலையில் வரவீர நாதர் (வர்த்தமான மகாவீரர்) வந்தமையறிந்து மன்னன் சென்று வணங்கிப் பின் கௌதம முனிவரைப் பணிந்து நாக பஞ்சமி கதையுரைக்க வேண்டினான், அவர் உரைத்தார்.

மகத நாட்டுத் தலைநகர் கனகபுரம். மன்னன் சயந்தரன் அரசி விசால நேத்திரை. புதல்வன் சீதரன். அமைச்சன் நயந்தரன். சுராட்டிர நாட்டு மன்னன் சீவர்மன், அரசி சீமதி. இவர்புதல்வி பிரிதி தேவியின் உருவை வணிகன் வாசவன் படத்தில் காட்டக் கண்டு சயந்தரன் மோகித்து அவளை மணந்து பட்டத்தரசியாக்கினான். அவள் விசால நேத்திரையைப் கண்டு பின் ஆலயம் சென்று வணங்க, நற்புதல்வரைப் பெறுவாய் என்று பரம முனிவன் வாழ்த்தினான்.

---

* மு. சண்முகம்பிள்ளை, நூலின் முகவுரை பக்கம் vii.

பிரிதி தேவி கண்ட கனவின் பயன், நற்புதல்வன் பிறப்பான், அவன் கால் பட்டு அருகன் ஆலயக் கதவு திறக்கும், அவன் நாக வாவியில் விழுந்து ஊறின்றி இருப்பான், நீலகிரி என்ற யானையும் குதிரையும் அடக்குவான் என்று அறிந்தனர். பிரதாபந்தன் என்ற குழந்தை பிறந்தான். அவன் கால் பட்டு ஆலயக் கதவு திறந்தது. நாக வாவியுள் வீழவும் நாகம் தன் முடிமேல் அவனைத் தாங்கிற்று. நாககுமாரன் எனப்பெயர் பெற்றான். கின்னரி மனோகரி என்ற பெண்கள் இசைத்திறம் அறிந்து சொல்லி அவ் விருவரையும் மணந்தான். யானையையும் குதிரையையும் அடக்கினான். விசால நேத்திரை பொறாமை கொண்டாள். அவள் மகன் சீதரன் இவளைக் கொல்லச் சமயம் பார்த்தான்; நாககுமாரன் நீர் விளையாடியபோது காணச்சென்ற பிரிதிதேவி கள்ளக் காதலனைப் பார்க்கச் சென்றாள் என்று விசால நேத்திரை அரசனுக்குக் காட்ட, அவன் உண்மையறிந்து அவளைக் கடிந்தான். நீர் விளையாட்டைப் பின் மாளிகையினுள்ளேயே நிகழ்த்துமாறு கட்டளையிட்டான். ஆனால் நாககுமாரன் வெளியே சென்று உலாவவும் அரசன் அவன் பொருள்களை யெல்லாம் கவர்ந்தான். குமாரன் சூதாடிப் பொருளீட்டவும் அரசன் அவனோடு சூதாடிப் பொருள் இழந்தான். தனி மாளிகை அமைத்து அதில் குமாரன் இருந்தான்.

வியாளமாவியாளர் தோழராயினார்; சீதரன் படையை வியாளன் அழித்தான். சீதரனுக்கு மந்திரி நயந்தரன் அறிவுரை கூறினான். மதுரையில் திரிபுவனாரதியை வீணையில் வென்று குமாரன் மணந்தான். வணிகன் மனைவியை அசுரனுடமிருந்து மீட்டுத் தந்தான். கிரிகூடபுரத்தில் கணைவிழி என்பாளை மணந்தான். தாயத்தாரிடமிருந்து நாட்டை மீட்டு வனராசனுக் குக் கொடுத்தான்.

கிரிநகர் அரசகுமாரி குணவதியை விரும்பி முற்றுகை யிட்டுப் பகைவனை வென்று அவளை மணந்தான். சயந்த கிரி யடைந்து சினாலயம் தொழுதான். தென்சேடி அரசைக் கைப் பற்றி அரச குமாரிகள் சுயம்பிரபை முதலான எழுவரை மணக்க முயன்ற மேகவாகனனைக் கொன்று அவ்வெழுவரையும் மணந்தான். அவந்தி நாட்டு அரசகுமாரி மேனகியை மணந்தான். மதுரையில் சிறீபதியை முழவுப் போட்டியில் வென்று மணந்தான். ஐந்நூற்றுவர் பெண்களின் தந்தையைக் கொன்ற வாயுவேகனைக் கொன்று தரணி சுந்தரி முதலான அவ்வைந் நூற்றுவரையும்

மணந்தான். கலிங்க நாட்டு அரசகுமாரி மதன மஞ்சிகையை மணந்தான். கங்க நாட்டு அரசகுமாரி இலக்கணையை மணந்தான்.

முற்பிறப்பு வரலாறு அறிந்தான். அப்பிறவியில் நாகபஞ்சமி நோன்பு நோற்றுத் தேவனாகிய நாகவசுவை மணந்திருந்தான்; அவளே இலக்கணை. அந்நோன்பு கேட்டு நோற்கலானாள். மனைவியரோடு தந்தையிடம் சென்று தந்தை துறவு மேற் கொள்ளவும் முடி சூடினான். தாயும் துறந்தாள். தோழருக்கு நாடுகள் அளித்து இலக்கணையைப் பட்டத்தரசியாக்கினான். அவளுக்குத் தேவகுமாரன் பிறக்க, அவனுக்கு உரிய காலத்தில் முடியளித்துத் துறவு மேற்கொண்டான். எல்லோரும் துறந்து முத்தி பெற்றனர்.

**ஆசிரியர்**

இந்நூல் செய்த ஆசிரியர் பெயர் தெரியவில்லை.* வேறு நல்ல ஏட்டுச் சுவடிகள் கிடைத்தால் ஒருகால் ஆசிரியர் பெயர் தெரியக்கூடும் என்று பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இவர் சைன சமயத்தவர், சமய தத்துவங்களை நன்கறிந்தவர் என்பதில் ஐயமில்லை. இந்நூலைப் பலமுறை நன்கு ஊன்றி நோக்கும் போது சில கருத்துக்கள், இதன் ஆசிரியர் குறித்து மனத்தில் எழுகின்றன.

நூலைச் செய்தவர் பெரும் புலவராயிருந்திருப்பார் என்று தோன்றவில்லை. காவியத்திற்குரிய சிறப்புக்கள் ஒன்றுமே நூலி னுள் காணப்படவில்லை என்று குறிப்பிட்டோம். இதே போலப் பெயர் பெற்ற மற்றொரு நூல் உதயணகுமார காவியம்; 369 பாடலுடையது; இந்நூல் அளவால் அதில் பாதியினும் குறைவு. அந்நூலைக் குறித்த ஆராய்ச்சியில் அந்நூல் செய்தார் ஒரு கந்தியார் என்று குறிப்பிட்டோம். நாககுமார காவியமும் மற்றொரு கந்தியார் செய்திருக்கலாமென்று தோன்றுகிறது. கந்தியார் என்போர் சைன சமயத்தில் துறவு பூண்ட பெண் மணிகள். இவர்கள் இளமையிலேயே துறவு பூண்டு துறவொழுக் கத்தில் மேம்பட்டவர்களாய் கல்வி கேள்விகளிலும் சைன சமய நூலாராய்ச்சியிலும் நெடுங்காலம் கருத்தைச் செலுத்தி இத்துறை களில் புலமை பெற்றவர்கள். இந்த நூற்றாண்டின் தொடக்க காலம் வரையில் இந்து சமூகத்திலும் கூட அந்தணர் மரபில்

* மல்லிஷேணரே இதை வடமொழியிலும் தமிழிலும் பாடியிருப் பதாக ஈக்காடு இரத்தினவேலுமுதலியார் எழுதியிருக்கிறார்.

இளமையில் கணவனை இழந்த பெண்கள் கைம்மைக் கோலம் பூண்டு வடமொழி தென்மொழி வல்லவர்களாகி, இறை வழி பாட்டிலும் பக்தர் சரித்திரங்களைப் பெரிய அம்மானைப் பாட்டுப் போன்ற பாடலாய்ப் பாடுவதிலும் பொழுது போக்கி வந்திருக்கிறார்கள். கீர்த்தனை நாமாவளி கும்மி பக்தர் சரித்திரம் முதலியனவாக இவர்கள் எளிய பாமரர் மொழியில் பாடி வைத்த நூல்கள் அளவில்லாதன. இவர்களைப் போலவே சைன மரபில் வாழ்ந்த பெண்கள் கந்தியார் எனப்பட்டனர். இவர்களும் அவ்வாறு கைம்மைக் கோலமுடையோராய்த் துறவு நிலையில் வாழ்ந்தோர்; கந்தி என்பது பொதுப்பெயர்; தனிப்பட்ட ஒருவர் பெயரன்று. (சிலப்பதிகாரத்தில் வரும் கவுந்தியடிகள் என்ற பெயரும் வரலாறும் காண்க.) சீவக சிந்தாமணியில் கந்தியார் முந்நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களை இடைச் செருகல்களாகச் சேர்த்தார் என்பது வழக்கு. பரிபாடலில் கந்தியாரரொருவர் பல பாடல்களை இடைமடுத்தார் என்றும், அப்பிழைகளை யெல்லாம் நீக்கிப் பரிமேலழகர் உரை எழுதுகிறார் என்றும், பரிபாடல் உரையின் சிறப்பாயிரம் கூறும்.

**மிகைபடு பொருளை நகைபடு புன்சொலில்**
**தந்திடை மடுத்த கந்திதன் பிழைப்பும்.**

என்ற அடிகள் காண்க. எனவே கந்தி பாடல் மிகையான பொருள். அது பிழைப்புடையது என்பது ஆன்றோர் கருத்து. இத்தகைய கந்தியார் காலந்தோறும் இருந்திருக்கிறார்கள், பலநூல்களும் செய்திருக்கக் கூடும். ஒரு கந்தியார் 15 ஆம் நூற்றாண்டில் உதயணகுமார காவியம் செய்தார் என்று அங்கு சொன்னோம்.* அடுத்த காலத்தில் மற்றொரு கந்தியார் நாககுமார காவியம் செய்தாரென்று கருதுகிறோம். இதற்கும் உதயண குமார காவி யத்துக்கும் நூலமைப்பில் நிரம்ப ஒற்றுமை காணப்படும். சொல் நடையும் யாப்பமைதியும், இலக்கணமும் பொருளமைப்பும், நாககுமார காவியமானது உதயண குமார காவியம் போலப் பெரும் புலமையில்லாத ஒருவரால் படைக்கப்பட்டது என்று கருதச் செய்யும்.

நூற்பொருளைக் கூர்ந்து நோக்கும்போதும் இக்கருத்து வலியுறுகின்றது. இந்த நூலில் நூலுக்குரிய இலக்கணம் ஒன்றே னும் காணப்படவில்லை. சிரேணிக மகராசன் தேவி சாலினீ:

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 15ஆம் நூற்றாண்டு பார்க்க.

வீறுடைச் சாலினீதா மிடைதவழ் கொங்கைகொண்டை
நாறுடைத் தாரணிந்த நகைமுக முகத்தினாளே.

*இவள் மட்டுமல்ல: வேறும் எண்ணாயிரம் பேர் மன்னனுக்கினிய மாதர்:*

மற்றுமெண் ணாயிரம் பேர் மன்னனுக் கினிய மாதர்
வெற்றிவேல் விழியினாரும் வேந்தனும் இனிய போகம்
உற்றுடன் புணர்ந்து இன்பத் துவகையுள் அழுந்தியங்குச்
செற்றவர்ச் செகுத்துச் செங்கோல் செலவிய காலத்தன்றே.

*எண்ணாயிரம் பேர் இனிய மாதர் என்று சொல்வது அக்காலக் கவி இயல்பு. பேரரசனுக்கு இவ்வாறு சொல்வது மரபு என்று கருதலாம். தரசதனுக்குச் சொல்லவில்லையா? ஆனால் இவ் வாசிரியர் எங்குமே இவ்வாறு சொல்கிறார். சயந்தர மன்னன் விசால நேத்திரையை மணந்தான். பின்னர் ஓவியத்தில் பிரிதி தேவியைக் கண்டு மயங்கி அவளை மணந்து அவளையே பட்டத்தரசியாக்குகிறான். இக்கதைகள் பெரியவையல்ல: நாக குமாரன் கதையே பெரியது.*

*நாககுமாரன் கின்னரி மனோகரி என்ற இரு பெண்களின் இசைத்திறன் நயம் அறிந்து அவ்விருவரையும் மணந்து கொள் கிறான்: 'குமரன் தானும் ஆயிழை மாதர் தாமும் புலன்களின் மிகுந்த போகம் புணர்ந்தின்பக்கடலுள் ஆழ்ந்தார்' (56). காம்பீர நாட்டு அரசகுமாரி திரிபுவனா ரதியை 'வீணையில் வென்று கொண்டு கற்புடையவள் தன் காமக்கடலிடை' நீந்தினான் (90) பின் நன்னுதற் கணைவிழியை மணந்தான். பின்னர் கிரிநகர் அரசகுமாரி குணவதியை மணந்து இன்புற்றான் (116):*

வேல்விழி யமிர்தன்னாளை வேள்விழியால் அண்ணலெய்திக்
கால்சிலம் போசை செய்யக் காமனும் ரதியும் போலப்
போனமும் போக மெல்லாம் பருகியின் புற்று நாளும்
நூனெறி வகையிற்றுய்தார் நுண்ணிடை துவளவன்றே.

*சுகண்டனைக் கொன்று சுயம்பிரபை முதலான ஏழு நங்கையரையும் அபிசந்திரன் புதல்வி சந்திரப்பிரபையையும் சுகண்டன் புதல்வியர் அனுசை உருக்குமணியையும் மணந்து இன்புற்றான் (126-7). பின் மேனகியை மணந்தான். பின் தரணி சுந்தரி முதலான ஐந்நூற்றுவரை மணந்தான். பின் மதன மஞ்சிகை: தாகமிக்குடையனாய்த் தான் லயப் பருகினான். நாக நற்புணர்ச்சி போல் நன்குடனிருந்து (151) பின் இலக்கணையை மணந்து போகந் துய்த்தான் (143).*

இவற்றை நன்கு ஆராய்ந்து ஆசிரியரை குறித்து இரு கருத்துக்களைச் சொல்லுகிறோம். ஒன்று, நாககுமாரன் மணந்தது பெயர் குறிப்பிட 19 மங்கையரும், பின்னும் தரணி சுந்தரி முதலான ஐந்நூற்றுவரும். இத்தொகையைக் காணும்போது, ஆசிரியர் சீவகசிந்தாமணியினும் மிகுதியான மணம் சொல்லவேண்டுமென எண்ணினார் என்று தெரிகிறது. சீவகன் மணந்தது எண்மரை, அவன் ஒன்பது பேரிடைப் போகம் துய்த்ததைத் தேவர் விரித்துச் சொல்கிறார் (பத்தாகவும் இருத்தல் பொருந்தும்). கடைசியாகச் சீவகன் மணந்தது இலக்கணை; நாககுமாரன் கடைசியாக மணந்தவள் பெயரும் இலக்கணை.

இனி இரண்டாவது கருத்து, நூல் செய்தவர் ஒரு கந்தியார்; துறவு பூண்ட பெண். இளமையில் துறவு பூண்ட இப்பெண் துறவு நிலையில் வழுவாதிருப்பினும் உள்ளக்கிளர்ச்சிகள் வெளிப் பட ஒரு வழி தேடுகின்றன. அதுவே இலக்கிய வெளிப்பாடு. நாக குமாரன் மணந்தான் என்பது மட்டுமல்ல, போகந்துய்த்தான் என்று தவறாது சொல்கிறார். வேறு எப்பொருளும் நூலில் சொல்லவில்லை. அடக்கி வைத்த உணர்ச்சிகளின் மறைமுக மான வெளிப் பாடே இம் மணங்களும் போகந்துய்ப்பும்; இந்த நிலை, நூல் செய்தவர் துறவு நிலையில் நெறியோடு நின்ற ஒரு கந்தியார் என்பதையே நன்கு உணர்த்துகின்றன.

நாககுமாரன் பத்து ஊர்களுக்குச் சென்று இருபதுக்கு மேற்பட்ட பெண்களை மணக்கும்போது, மணக்குமுன் தவறாது அங்குள்ள சினாலயம் சென்று தொழுகிறான் என்று ஆசிரியர் பாடுகிறார். இதைப் பார்க்கும்போது, நூலாசிரியர் உண்மை யிலேயே சினாலயத்தில் தொண்டு செய்து ஒழுகி வந்த ஒரு கந்தியாராவார் என்று உறுதியாய்ச் சொல்லலாம்.

**சில செய்திகள்**

இந்த நூலில் கவிதையில் சாமானியமாய்க் காணக்கூடிய எப்பொருளுமே இல்லை. மணமும் போகந்துய்ப்புமே எங்கும் மிக மலிந்து காணப்படுகின்றன. இவற்றை முன்னே ஆசிரியர் என்ற தலைப்பில் சொன்னோம் சொல்லத்தக்கது மற்றும் ஒரே ஒரு தன்மை. அதுவே இதன்கண் காணும் துதிப்பாடல்கள்: தொடக்கத்தில் சிரேணிக மன்னன் வர்த்தமானரைத் துதிப்பதாக ஐந்து பாடல்களும், இடையில் நாக குமாரன் சினாலயம் அடைந்து துதிப்பதாக மூன்று பாடல்களும். முதலில் காணப்படும் பாடல்கள் ஐந்தும், 1912இல் அச்சிடப்பட்ட 'பலஜின தாசர்

*செய்தருளிய பத்தும் பதிகத் தோத்திரத் திரட்டு' என்ற 280 பாடல் கொண்ட தொகுப்பில் எட்டாம் பதிகமாகிய ஸ்ரீ வர்த்தமான சுவாமி தோத்திரப் பதிகம் என்ற பத்துப்பாடல் கொண்ட பதிகத் தொகுப்பில் பின் ஐந்தாகக் காணப்படுகின்றன. பத்துப்பாடல் களும் 'ஸ்ரீ வர்த்தமானன் எனும் தீர்த்தன் நீயே' என்ற மகுடத்தோடு முடிகின்றன. ஐந்தாம் பாடல் பின்வருவது:*

கருவான சிறைகளைய வல்லாய் நீயே
  கல்யாண மைந்துடைய கடவுள் நீயே
மருவான பூம்பிண்டி மன்னன் நீயே
  மறையொருநான் குரைத்ததிரு வள்ளல் நீயே
பெருவானம் இனிதாளும் பெம்மான் நீயே
  பெண்ணுருவும் ஆணுருவும் ஆனாய் நீயே
திருமாலும் நான்முகனும் ஆனாய் நீயே
  சீவர்த்த மானனெனும் தீர்த்தன் நீயே.

*நாக குமார காவியத்தில் காணப்படும் ஐந்து பாடல்களில் (16-20) ஒன்றும், பதிகத்தில் ஆறாம் பாடலுமாயுள்ளது பின்வருவது:*

பொறியொடுவல் வினைவென்ற புனிதன் நீயே
  பூநான்கு மலர்ப் பிண்டிப் போதன் நீயே
புறவிதழ்சேர் மரைமலர்மேல் விரனால் விட்டுப்
  பொன்னெயிலுண் மன்னியபுங் கவனும் நீயே
அறவிபணி பணவரங்கத் தமர்ந்தாய் நீயே
  ஐங்கணைவில் மன்மதனை அகன்றாய் நீயே
செறிபுகழ்சேர் சித்திநகர் தன்னை யாளும்
  சீவர்த்த மானனெனும் தீர்த்தன் நீயே.

*இரண்டையும் ஒப்பு நோக்கும்போது இரண்டும் ஒரே தன்மை யுடையன், ஒரே பதிகத்தின் பாடல்கள் என்று கொள்ள எத்தடையு மில்லை. நாககுமார காவியமுடையார் தம் காலத்தில் இப்பதி கத்தைக் கண்டு இதிலுள்ள பின் ஐந்து பாடல்களையும் நூலுள் எடுத்துப் பெய்துகொண்டார் என்றே சொல்லத் தோன்றுகிறது. காவியத்தில் எல்லாப் பாடல்களும் அறுசீர்விருத்தம் அல்லது நாற்சீர்விருத்தமே. இவ்வைந்து பாடல்களையன்றி வேறு எண்சீர் விருத்தப் பாடல்கள் நூலகத்து இல்லை. ஆகவே இவ்வைந்தும் வேறு நூலிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள் பாடல்களே என்பது உறுதி. நூலிடையில் காணப்படும் (118-120) துதிப் பாடல்கள் மூன்றும் ஆசிரியரே செய்தமைத்திருக்கலாம். அம் மூன்றில் இறுதிப் பாடல் பின்வருவது:*

அரியா சனத்தின்மிசை அமர்ந்த திருமூர்த்தி
பரிவாக உன்னடியைப் பணிந்து பரவுவர்கள்
திரிலோக முந்தொழவே தேவாதி தேவருமாய்
எரிபொன் னுயிர் விளங்கி இனியமுத்தி சேர்பவரே.

நான்காம் யாமத்தின் பெயர் மனோகரம் என்று இவ்வாசிரியர் கூறுகிறார் (42). நாககுமாரன் அடக்கிய பட்டத்துயானையின் பெயர் நீலகிரி. வியாளனுடைய நெற்றிக்கண், அவன் நாக குமாரனைக் கண்டவுடன் மறைகிறது. இது பிரதாப ருத்திரன் என்ற அரசனுடைய படத்தில் நெற்றிக் கண்ணை வாளால் குத்தியதும், எங்கேயோ இருந்த அவ்வரசனுடைய நெற்றிக்கண் மறைந்தது என்ற 13ஆம் நூற்றாண்டு வரலாற்றுச் செய்தியைத் தழுவியிருக்கிறது. இவ்வாசிரியரது கவித்திறனுக்கு எடுத்துக் காட்டாக ஒரு பாடல் காணலாம்:

அபிசந்திரன் றன்புர மத்தினாக மேகியே
சுபமுகூர்த்த நற்றினஞ் சுபசந்திரன் கதைகளும்
அபிசந்திரன் றன்மக ளாஞ்சுகண்டன் சுதையுடன்
செபமந்திர வேள்வியார் செல்வனெய்தியின் புற்றான்.

(புரமத்தினாகம் - அத்தினாபுரம். சுதைகள் - பெண்கள் எழுவர்.) சுதை என்ற சொல் தமிழில் பயில்வது மிகவும் அபூர்வம். சுதா-வடமொழி. பிங்கலர் சுதை என்று கூறுகிறார். சுதன் மகன் என்று வழங்குவது காண்கிறோம், இதன் பெண் பாலாகிய சுதை மிகவும் அருமை.

குமாரன் கால் பட்டுக் கோயில் கதவு திறக்கிறது; கால் படுவது அபசாரம் என்றே எல்லோரும் கருதுவார்கள், இது சிறப்பாகாது. கதையில் தந்தை மகனோடு சூதாடிப் பொருளை இழப்பது எல்லா மரபுக்கும் முரணாயுள்ளது. நூல் முழுமையும் இத்தகைய சுவையற்ற பாடல்களே.

நாக குமாரன் இளமைக்காலம் 300 ஆண்டுகள், ஆட்சிக் காலம் 800 ஆண்டுகள், தவம் புரிந்த காலம் 64 ஆண்டுகள் ஆக 1164 என்று கூறி, நூற்பயனும் உலகத்தாருக்கு உபதேசமும் கூறி நூல் முடிகிறது. உபதேசம் கூறும் நூலிறுதிப் பாடல்:

அறமின்றிப் பின்னையொன்றும் உயிர்க்கரன் இல்லை என்றும்
மறமின்றி உயிர்க்கி டர் செய் மற்றொன்றும் இல்லை என்றும்
திறமிது உணர்ந்து தேறித் தீக்கதிப் பிறவிக் கஞ்சி
மறமிதை விட்ட றத்தில் வாழுமின் உலகத் தீரே.

**காலம்**

இது பற்றி நூலின் பதிப்பாசிரியர் மு. சண்முகம் பிள்ளை சில கருத்துக்கள் சொல்லியுள்ளார். தண்டியலங்காரத்துக்கு முன்னமேயே ஐஞ்சிறு காப்பியங்கள் தோன்றிவிட்டன என்று திருமணம் செல்வ கேசவராய முதலியார் கருதுகிறார் என்பது. இக்கருத்துக்கு ஆதாரம் இல்லை, இது பொருத்தமும் இல்லை. அவர் எழுதிய காலத்தில் தமிழ் நூல்களின் கால வரையறை குறித்து எந்த முடிவும் தெரியவழியில்லை. புறத்திரட்டு என்ற இலக்கியத் தொகுப்பு நூல் யசோதர காவியம் உதயண குமார காவியம் நாககுமார காவியம் என்பவற்றை எடுத்துத் தரவில்லை என்பது ஒரு கருத்து. புறத்திரட்டின் காலம் 14ஆம் நூற்றாண்டு. பாடல்களைச் சொல்லாமையாலேயே அவை முன்வந்த நூல் களல்ல என்று அறுதியிடமுடியாது. யசோதர காவியம் 13ஆம் நூற்றாண்டு; உதயணகுமார காவியம் 15ஆம் நூற்றாண்டு. நாக குமார காவியத்துக்கும் உதயண குமார காவியத்துக்கும் ஒப்புமை நிரம்ப உண்டு. இதனுள் காணப்படும் யாப்பமைதி எதுகை சொல்லமைதி சந்தம் முதலியவற்றைப் பார்க்கும்போது, இது உதயண குமார காவியத்தின் பின், அந்நூல் செய்த கந்தியார் போன்ற மற்றொரு கந்தியாரால் செய்யப்பெற்றிருக்குமென்று யூகிக்கலாம்.

பதிப்பாசிரியர், இது பிற்கால வழக்காகிய ஐஞ்சிறு காப்பியங் களுள் ஒன்று என்று கருதுவதால் தண்டியாசிரியருக்கு முற்பட் டிருக்கலாம் என்றும், சிரேணிக மகாராசன் பெயர் வடமொழி மகாபுராணம் போன்றவற்றுள் வருவதால் 9ஆம் நூற்றாண்டில் தோன்றிய அப்புராணத்துக்கும் 997இல் செய்யப்பட்ட பழைய கன்னடச் சாமுண்டராய புராணத்திற்குப் பிற்பட்டதென்றும், ஆகவே 12ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டுத் தோன்றி இருக்கலாம் என்ற கருத்துப் படவும் எழுதுகிறார். சிரேணிக மகாராசன் பெயர் ஓர் ஆதாரமாகாது. இது தமிழில் சூத புராணிகள் சௌன சாதி முனிவர் கேட்கப் புராணம் விரித்துரைத்தார் என்பது போல, ஒரு தோற்றுவாய்க்கேற்ற கற்பனைப் பெயர். இது கொண்டு எதையும் முடிவு செய்யவியலாது. அவரே எடுத்துக் காட்டியபடி இது யசோதர காவியத்துக்குப் பின் வந்தது என்பது நன்கு புலப்படும்.

உள்விரிந்த புகைக்கொடி யுண்டென
எள்ளு கின்றன ரில்லை விளக்கினை
உள்ளு கின்ற பொருட்டிற மோர்பவர்
கொள்வ ரெம்முரை கூறுதற் பாலதே

என்பது யசோதர காவிய அவையடக்கப் பாடல். இதை அப்படியே நாககுமார காவியமுடையார் எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்:

புகைக்கொடி யுள்ளுண் டென்றே பொற்புநல் லொளி விளக்கை
இகழ்ச்சியி னீப்பா ரில்லை ஈண்டுநற் பொருளு ணர்தோர்
அகத்தினி மதியிற் கொள்வா ரரியரோ எனது சொல்லைச்
செகத்தவ ருணர்ந்து கேட்கச் செப்புதற் பால தாமே.

இவ்வொப்புமை இந்நூல் யசோதர காவியத்துக்குப் பின் செய்யப்பட்டது என்பதை நன்கு காட்டும். எனவே முன் குறிப்பிட்டபடி நாககுமார காவியம், உதயணகுமார காவியத்துக்கும் பிற்பட்டு 16ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டிருக்கலாம் என்பது ஏற்கக்கூடியதே.

## பதிப்பு

வித்துவான் மு. சண்முகம்பிள்ளை, சென்னைப் பல்கலைக் கழகம் 1973. பதிப்பாசிரியர் விரிவான முன்னுரை தந்திருக்கிறார். நூலுக்குச் சைனர் எழுதித் தந்த உரையுடன், சிறப்புப்பெயர் விளக்கம், நாககுமாரன் வரலாறு உரைக்கும் நூல்கள் பட்டியல் ஆகிய அங்கங்களோடு பதிப்பித்திருக்கிறார். 18 நூல்களில் இக்கதை சொல்லப்படுகிறதென்று அறிகிறோம். அவற்றுள் தமிழ் 1, வடமொழி 7, பிராகிருதம் 1, கன்னடம் 3, இந்தி 3, அவப்பிரம்சம் 3.

## தோத்திரங்கள்

1912, 1921 ஆகிய ஆண்டுகளில் இரு சைனத் தோத்திரத் திரட்டுக்கள் வெளியிடப்பட்டன. பிந்திய ஆண்டில் வெளியானது, ‘சைன முனிவர் அருளிச் செய்த திருப்பாமலை’ என்ற பெயரால் மே. சக்கரவர்த்தி நாயினாரால் ஏட்டுப் பிரதிகளில் பலவாறாக இருந்து சுத்தப் பிரதியாக எழுதப் பெற்று வெளியிடப் பெற்றது. இது தனி நூலன்று. 22 ஆசிரியப் பாக்களின் தொகுப்பு. இவற்றுள் பிந்திய ஒன்பதும் யாப்பருங்கல விருத்தியுள் வந்துள்ள சைன சமயம் பற்றிய மேற்கோட் பாடல்கள்: முன் பதின்மூன்றும் வீடு பெறற்பொருட்டு இன்னாரை வணங்குவன் என்று சொல்லி, பஞ்ச பரமேட்டிகள் முதலியோரை வணங்குவனவாயுள்ளன; இப்பாடல்களின் காலம் 17-18ஆம் நூற்றாண்டாகலாம். இவற்றோடு மேற்கோட் செய்யுட்களையும் சேர்த்து திருப்பாமாலை என்ற பெயர் புனைந்து ஒரு நூலாக அச்சிடப்பட்டுள்ளது. இத் தொகுப்பை இங்கு நாம் ஆராயவில்லை. மற்றது ‘பல ஜினதாசர்

களாற் செய்தருளிய பத்தும் பதிகத் தோத்திரத் திரட்டு' என்ற தலைப்போடு காஞ்சியில் 1912இல் அச்சிடப்பட்டது: இதனுள் 26 பதிகங்களும் 280 பாடல்களும் உள்ளன. யாவும் நாலடி விருத்தங்களும் கொச்சகக் கலிப்பாவுமே; ஆசிரியப் பாவோ பிற பாக்களோ பாவினங்களோ இங்கு இல்லை; யாவும் பதிக அமைப்பே உடையன. இவற்றுட் சில 16ஆம் நூற்றாண்டுக்குரியன என்று கருதத்தக்கவை; அவற்றை மட்டும் இங்கு ஆராய்கிறோம்.

### திருநறுங்கொண்டை மலைப் பதிகம்

இது இத்தொகுப்பில் முதல் பதிகம். 11 சந்தவிருத்தங்கள் உடையது. எளிய மெல்லிசைச் சந்தம். இச்சந்தமே இது ஒரு பழமையான நூல் என்று கருதும்படியுள்ளது. பாடல்கள் திரு நறுங் கொண்டை (குன்றை) மலையில் எழுந்தருளியுள்ள அருகன் வணக்கமாக உள்ளன. பின் வருவது 6ஆம் பாடல்:

குடைகளொன் றொன்றின்மிசை கலைவருண் டெங்குமிகு
குமுகுமென் பிண்டி நிழலிற்
படைகளொன் றின்றியிரு வினையெனும் பண்டைமுது
பகைபுறங் கண்டவனிடம்
இடரழுங் கும்பரிசு சுடர்விளங் குங்கனகம்
எனவருந் துந்திருவுளத்
திடதவங் கொண்டுசெறி பவர்கள்தம் சங்கம்வளர்
திருநறுங் கொண்டை மலையே.

### வர்த்தமான சுவாமி தோத்திரப் பதிகம்

இது எட்டாம் பதிகம். எண்சீர் விருத்தமாய்ப் பத்துப் பாடல்கள். பாடல் தோறும் 'சீவர்த்தமானன் எனும் தீர்த்தன் நீயே' என்ற தொடர் மகுடமாக உள்ளது. இது பற்றிய பிற செய்திகளை நாககுமார காவிய ஆராய்ச்சியில் காணலாம். இதன் பின்னைந்து பாடல்களும் அக்காவியத்துள் தோத்திரமாக எடுத்து ஆளப்பட்டுள்ளன.

### தச தர்மம்

இது சைனத்துக்குரிய பத்துத் தருமங்களைக் கடைப்பிடித் தொழுகுதலின் நற்பயனையும் அவற்றைக் கடைப்பிடித்தொழு காததால் விளையும் தீப்பயனையும் மாறி மாறிச் சொல்லும் 26 கலி விருத்தங்களையுடையது. முதல் பாட்டு 'குணதரன் சேவடி வணங்கித் தச தர்மநெறி அறைகுவன்' என்று தொடங்குகிறது. இரண்டாம் பாடல், பரத கண்டத்துக் குரு நாட்டுச் சுகிமைகோன்

மனையறத்தை விரிக்குமென்று சொல்கிறார். அடுத்த இரு பாடல்கள் இல்லறத்தாருக்குரிய அணுவிரதம் பத்தும் இன்னவை என்று சொல்கின்றன - கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, காமத்தை யொல்லாமை, ஒண் பொருளை வரைதல், புலைசு உண்ணாமை, தேன் உண்ணாமை, கள் உண்ணாமை, இருள் உண்ணாமை, நல்லாரைப் பணிதல் எனப் பத்து. எடுத்துக் காட்டாக, தேனுண்ணாவிரதப் பயனும் தேனுண்ட தீவினைப் பயனும் கூறும் பாடல்களைத் தருவோம்:

ஊனமிலா உறுப்பமைவும் உறுதூய்மை யுடைமையும்
கானிலிந் தோய் வின்மையும் கண்ணிமைப் பிலாமையும்
வானகத்து வச்சிரராய் மகிழ்ந்துவீற் றிருப்பதுவும்
தேனுண்ணா நல்விரதம் தேர்ந்ததன் பயனாகும்.

மான்றோலி னிடப்பட்ட மானிடர்தம் மகவாகிப்
பேன் தூங்கும் மயிரினராய்ப் பேய்போலச் சுழல்வதுவும்
ஈன்றவ ளேகான் றிழித்துரைக்கும் நிலைமையும்
தேனுவந்து முன்னுண்ட தீவினையின் பயனாகும்.

கடைசியாக நல்லாரைப் பணிதல் என்பதன் விளக்கமாக மோனப் பயன், நற்றவரைப் பணிதல், மாதவுரை உண்பித்தல் என்பவற்றின் பலனை மூன்று பாடல்களால் சொல்கிறார்.

## திருமயிலாப்பூர் பத்தும் பதிகம்

இது மயிலையில் எழுந்தருளியிருந்த அருகனைப் பத்துப் பாடல்களால் துதிப்பது. ஆசிரியர் பாடல் தோறும் இறுதி வரியில் ஒரு பழமொழியை அமைத்திருக்கிறார். எளிமையான நல்ல பாடல்கள். பின்வரும் பாடல் எடுத்துக்காட்டாகும்.

அடல்வலையும் வெந்திறலால் அனங்கனெனும் அவராசை
அகத்திப் பூக
மடல்வலையப் பொழில்மயிலை மரகதமா மலைதன்னை
அன்னாள் இன்னாள்,
உடல்வலையம் உறப்பணிந்தங்கு ஒண்பொருளை ஓராதே
பிறவி யென்னுங்
கடல்வலையம் கைநீந்திக் கரைகாணக் கருதினேன்
கபடனேனே.

இவை போன்ற சிறந்த பொருட்சுவையும் செய்யுள் நலமும் கொண்ட பாடல்கள் பின்னும் இருந்திருக்கக் கூடும்; ஆனால் திரட்டில் உள்ள ஏனைப் பதிகங்கள் இத்தன்மையன அல்ல.

## அத்தியாயம் 4

# தோத்திர இலக்கியம்

### முன்னுரை

இறைவன் மீது துதி பாடுவது என்பது தமிழில் அனாதி காலமாக உள்ள மரபு. மூவர் தேவாரங்களும் திருவாசகமும் திருவிசைப்பாவும் நாலாயிரப்பிரபந்தங்களும் தோத்திரப்பாக்களே யாகும். இவை மட்டுமல்ல; பரிபாடல் என்ற நூலில் திருமால் செவ்வேளைக் குறித்த பாடல்கள் யாவும் தனித் தோத்திரப் பாடல்களே; இவை தேவாரம் போல இசைப் பாடல்கள். பத்துப் பாட்டின் முதற்பாடலான திருமுருகாற்றுப் படையே ஒரு தோத்திரப் பிரபந்தம்; ஒரு நூல் தொகுதிக்குக் கடவுள்வாழ்த்து முதலில் அமைய வேண்டும் என்ற கொள்கையோடு இது பத்துப் பாட்டு முகப்பில் அமைக்கப்பட்டது என்று கருதுதலும் பொருந்தும். இனி எட்டுத் தொகை நூல்களையும் தொகுத்த காலத்தில் அவற்றின் தொடக்கப் பாடலாகக் கடவுள் வாழ்த்துப் பாடல் இருக்க வேண்டுமென்ற கருத்தோடு, பாரதம் பாடிய பெருந்தேவனார் என்பவர் ஒவ்வொரு நூலுக்கும் சிவபிரான் திருமால் முருகன் ஆகிய தெய்வங்கள் ஒவ்வொருவரைப் பற்றி ஒரு துதிப்பாடல் செய்தமைத்திருக்கிறார் என்பதை நாமறிவோம், அன்றியும், சிலப்பதிகாரத்திலுள்ள வரிப்பாடல்கள் யாவும் துதிப்பாடல்களே - திருமால், முருகன், கொற்றவை முதலான தெய்வங்களை இவை துதிப்பன.

இவற்றால், தோத்திர இலக்கியம் என்பது தமிழில் இலக்கியத் தொடக்கத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது என்பது விளங்கும். ஆனால், இவ்விலக்கிய வரலாற்றுத் தொகுப்பில் 15ஆம் நூற்றாண்டு வரையில் அதற்குத் தோத்திர இலக்கியம் என்ற தலைப்புக் கொடுக்கவில்லை. பிற தலைப்புக்களிலேயே

இது அடக்கி உரைக்கப்பட்டது. இந்த நூற்றாண்டு முதல் புதிதாகத் தோத்திர இலக்கியம் என்ற ஒரு தலைப்பு அமைத்து இவ்விலக்கியங்களைத் தனியே ஆராய்கிறோம். திருமுருகாற்றுப்படை முதல் தோன்றிய பிரபந்தங்கள் யாவுமே ஒருவகையில் தோத்திர இலக்கியம் என்றோம். பெரும்பான்மை இவை தெய்வத்தின் புகழைக்கூறுவன; சிறுபான்மை அரசர் தலைவன் போன்றார் புகழைக் கூறுவன. பிரபந்தமல்லாது தனியே புகழை மட்டும் கூறித் துதிக்கும் நூல்களை இந்த நூற்றாண்டில் தோத்திர இலக்கியம் என்று வேறுபடுத்தியிருக்கிறோம்.

இனி, இக்காலத்து வாழ்ந்த தோத்திர நூல் செய்தாருள் ஐவர் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கார். முதலாவது சங்கரருடைய சௌந்தரியலகரியைத் தமிழில் மொழிபெயர்த்த வீரை-கவிராச பண்டிதர் என்பவர். அடுத்து மதுராபுரி அம்பிகையின் மீது மாலை என்ற சிறுநூல் பாடிய வரகுணராம குலசேகர பாண்டியர். இவர் தம்பி வரதுங்கராம பாண்டியர் மிகவும் சிறப்பமைந்த திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி என்ற மூன்று நூல்கள் பாடினார். திருவண்ணாமலையில் குருவும் சீடருமாய் வாழ்ந்த குகை நமசிவாயரும் குரு நமசிவாயரும் பல சிறு தோத்திர நூல்கள் பாடினர். இவ்வைவர் நூல்களையும் இங்கு ஆராய்கிறோம். இவற்றுள் அம்பிகை மாலைமட்டும், முன்னர் வரகுணராம பாண்டியர் வரலாற்றை ஆராய்ந்த இடத்து அவர் நூல்களான இலிங்கபுராணம் வாயு சங்கிதை என்பவற்றோடு சேர்த்து ஆராயப்பட்டது.*

இவையுமன்றி, வீரைகவிராச பண்டிதரின் புதல்வரான அம்பிகாபதி என்பவர், சக்தி தோத்திரமாகப் பராபரைமாலை என்ற ஒரு சிறு நூல் பாடினர். இது, பிரபந்த இலக்கியம் என்ற அத்தியாயத்தில் அவருடைய மற்ற நூலாகிய நெல்லை வருக்கக் கோவையோடு சேர்த்து ஆராயப் பெற்றுள்ளது. பின்னும் கவச தோத்திரங்களைப் பற்றிய ஒரு குறிப்பும் இங்கு காணலாம்; விரிந்த புராணங்களைச் செய்த ஆசிரியர் மூலத்தை ஒட்டித் தமிழிலும் கவச தோத்திரங்களைச் செய்திருக்கிறார்கள். அவற்றை இந்த நூற்றாண்டில் எழுந்த காசிகண்டம், பாகவத புராணம் முதலியவற்றில் காணலாம்; அவை பற்றிய ஒரு விரிவான குறிப்பையும் இவ்வத்தியாயத்துடன் சேர்த்திருக்கிறோம்.

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு முதல் பாகம் பக்கம் 20-22 பார்க்க.

வீரை கவிராசபண்டிதர் பெரும்புலவர். இளமையில் இவர் செய்ததாக ஆனந்த மாலை என ஒரு சிறு சக்திதோத்திர நூல் வழங்கும். அன்றியும் இவர் சக்தியின் வடிவமாகிய வராகியை வழிபட்டுப் பல சித்திகள் பெற்றாரென்றும் அப்போது வராகி மாலை பாடினார் என்றும் சொல்வர். இவையன்றி, கலைஞான தீபம் என்ற ஒரு தோத்திர-சாத்திர நூலும் வழங்குகிறது. அதைச் செய்தாரும் கவிராச பண்டிதரே என்று கருத இடமுண்டு. இந் நூல்களும் கவிராச பண்டிதர் என்ற தலைப்பில் ஆராயப்பெறும்.

## வீரை - கவிராச பண்டிதர்

இவர் ஆதிசங்கரர் வடமொழியில் அம்பிகையைத் துதித்துப் பாடிய சௌந்தரிய லகரி என்ற சிறு நூலைத் தமிழில் செய்யுள் வடிவில் மொழிபெயர்த்துப் பாடியதால் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலைத்த இடம் பெற்றவர்.

### ஆசிரியர்

இவர் பாண்டி நாட்டில் இன்றைய சேது சமஸ்தானத்தைச் சேர்ந்த வீரசோழன் (வீரை) என்னும் ஊரில் பிறந்தவர். ஆதியில் இவர் குடும்பத்தார் வேம்பத்தூரில் இருந்த சோழியப் பிராமண வகுப்பினர்;* அவ்வூரை விட்டு இப்பிராமணர் பல ஊர்களில் சென்று குடியேறினார்கள்; அவ்வாறு சென்று வாழ்ந்த ஊர்களில் வீரசோழனும் ஒன்று. வேம்பத்தூர்ப் பிராமணர் பல தலைமுறை பெரும் பண்டிதர்களாக விளங்கிப் பல சிறப்பான நூல் செய்தார்கள். இவ்வாசிரியர் தம் புலமை காரணமாய்க் கவிராச பண்டிதர் எனச் சிறப்பிக்கப்பட்டார் போலும், இவரது இயற்பெயர் தெரியவில்லை. ‘கன்னலஞ்சிலை வேளெனும் கவிராச பண்டிதர்’ (மன்மதனையொத்தவர்) என்று இவர் சௌந்தரிய லகரியுள் சொல்லப்படுகிறார். கவிராச பண்டிதர் சிறப்புப் பட்டமேயன்றி, இயற்பெயரன்று. கவிராச பண்டித னென்னும் சிறப்புப் பெயரையுடையான் என்பது சௌந்தரிய லகரியுரை இவர் முதுமையில் துறவு பூண்டு வீரையிலேயே சமாதி கொண்டாரென்றும், சமாதி இன்னும் அவ்வூரில் உண்டென்றும் சொல்வர்.

---

* நம்பி திருவிளையாடல், ஐயரவர்கள் பதிப்பு, நம்பி வரலாறு, பக்கம் 17 பார்க்க வேம் பற்றூர் வேம்பத்தூர் என்றும் வழங்குதலுண்டு; வேம்பு - நிம்பை வடமொழி (சோழியர் - சோழ நாட்டினர்).

இவர் சத்தி அருள் பெற்றவர். ஒரு சமயம் மதுரை மீனாட்சி யம்மையைத் தரிசிக்கும் பொருட்டுச் சென்றிருந்தபோது அங்கிருந்த புலவனொருவன் இவரிடம் வாதுக்கு வந்தான். இவர் அவனோடு வாது செய்து வென்றமைக்கு மகிழ்ந்த அம்மை தன் திருவடியிலிட்ட பூமாலை தானே சென்று இவர் கழுத்தில் ஏறும்படி செய்தாள் என்பது ஒரு வரலாறு. இவ்வெற்றிக்காக இவர் நல்லூர் (நல்லூர்க் குறிச்சி), கடம்பை (கடம்பங்குளம்) என்ற ஊர்களைப் பரிசிலாகப் பெற்றார்.*

கவிராசர் வடமொழி தென்மொழி இரண்டிலும் புலமை மிக்கவர். இம் மொழிபெயர்ப்பு நூலே இவர் புலமைக்குச் சான்று. இப்புலமையும் இவருடைய சக்தி வழிபாடும் இவரைச் சங்கரர் நூலில் ஈடுபடச் செய்தது. இம் மொழிபெயர்ப்புக்குத் துணை புரிந்தவர் பிரமாதிராயர் என்ற அந்தணர்; தம்முடைய வடமொழிப் புலமையால் கவிராசர் என்ற பட்டத்தை அவரும் பெற்றிருந்தார்.

புலவர் புராணமுடையார் வழக்கம்போல், வழங்கும் கதை களையும் சொந்தக் கற்பனையும் கலந்து இவர் வரலாற்றை 49 பாடல்களால் பாடியிருக்கிறார். கதையே வேறு; "இப்புலவன் இளமையில் உமைமந்திரம் லட்சம் செபித்துத் தமிழ் பாடும் திற னில் சிறந்தான். உமையின் அங்க வருணனை அதிகம் சொல்லி யிருப்பது கண்டு உமை கோபித்து இவன் நா எழாதபடி செய்தாள். மீண்டும் உமையை வணங்கி இவன் நாவைப் பெற்றான். சிவபெருமான் இவனுக்குத் தம் கையால் உணவளிக்குமாறு உமைக்குக் கூறினார். ஒரு சமயம் இவன் காசியாத்திரை தொடங்கி வழியில் பசியால் களைத்துப் போகவே, உமை இவனது மகளின் வடிவு கொண்டு உணவளித்து உடன் சென்று திரும்பினாள். வீட்டினுள் வந்தபோது தன் மகள் நோயினால் படுத்திருப்பதைக் கண்டு தன்னுடன் வந்தது உமையின் திருவிளையாடலே என்று பண்டிதன் உணர்ந்தான்."

கவிராச பண்டிதருடைய புதல்வர் வீரை அம்பிகாபதி என்பாரும் சிறந்த புலவர். பராபரை மாலை, நெல்லை வருக்கக் கோவை முதலியன பாடினார் என்பது வரலாறு. 17ஆம் நூற் றாண்டில் ஞானவாசிட்டம் என்ற சிறந்த வேதாந்த நூல் பாடிய வீரை ஆளவந்தார் இவர் மரபில் பின்னே தோன்றியவர்.

---

* சேது நாடும் தமிழும், ரா.ராகவையங்கார், 1928 பக்கம் 17.

### நூல்கள்

வீரை-கவிராச பண்டிதர் செய்த நூலாக வழங்குவது சௌந்தரிய லகரியின் தமிழ் மொழிபெயர்ப்பு நூலாகும். பின்னும், ஆனந்தமாலை, வராகிமாலை என்ற இரு நூல்களும் இவர் செய்தார் என்றே சொல்லப்படும். புலவர் புராணமுடையாரும் இவற்றைக் குறிப்பிடுகிறார்.

**ஆய சவுந்தர லகரி யலாமல்**
**தூயசொல் ஆனந்த லகரியும் சொல்லச்**
**சேய வராகிதான் மாலைசெய் தப்பால்**
**மாயமில் ஆனந்த மாலை வனைந்தான்.**

நூல்களை இனி ஆராய்வோம்.

### சௌந்தரிய லகரி

ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர் அம்பிகையின் அருளையும் திருமேனியையும் புகழ்ந்து சௌந்தரிய லகரி (அழகுவெள்ளம்) என்ற துதி நூலை நூறு சுலோகங்களால் வடமொழியில் செய்தார். இதனுள் முதல் நாற்பது பாடல்கள் அம்பிகையின் புகழாகிய ஆனந்தலகரி (ஆனந்த வெள்ளம்); பின் அறுபது பாடல்களே சௌந்தரிய லகரியாகும். இதுவன்றி வேறும் ஒரு துதி நூல், இருபது பாடல் கொண்டதாய், ஆனந்த லகரி என்ற பெயரே கொண்டதாய் சங்கரரே செய்தாரென்று வழங்குகிறது; அது வேறு.

வடமொழியிலுள்ளது போல, கவிராச பண்டிதர் தமிழ் மொழிபெயர்ப்பை ஒரே நூலாகத்தான் பாடினார் என்று தெரிகிறது. ஆனால் நூல் பெரும்பான்மையும் இரு தனிப் பகுதிகளாகவே அச்சிடப்பட்டு வருகிறது. இரு பகுதிகளுக்கும் இவர் ஒரே பாயிரம்தான் செய்திருக்கிறார், முதற் பகுதியான ஆனந்த லகரியில் ஆறு பாடல் கொண்ட பாயிரப் பகுதி அமைந்துள்ளது. இது விநாயகர் வணக்கம், நூல் செய்த காரணம், அவையடக்கம், வடமொழி ஆசிரியர் புகழ், தமிழாசிரியர் புகழ், நூற்பெயர் என்பன கூறுகிறது. முதல் பாடலில் அபிராமி பாடல் வளம் என்கிறார். (அபிராமி - மிக்க சௌந்தரியம் உடையவள்.) கயிலைப் புறத்து அரன் எழுதினான். அதைப் புட்பதந்தன் வடவரையில் எழுதினான், அதைக் கௌட பாதர் கயிலை மாமுனிக் கருளினார், அந்த மேகம் சுரந்து உலகில் வாழுமுயிர் தழைப்பச் சொரிந்தது என்கிறார். இருப்பினும் பின்னால், வரகுணராம பாண்டியர்

*தமது இலிங்க புராணத்தில் கூறியுள்ள 'பிறை தவழும் எழில் தோன்ற' என்ற பாடலை எடுத்துக்காட்டி, 'விநாயகனே இப் பனுவலை (வடமொழி நூலை), மேருகிரியில் எழுதினான் என்பாரும் உளர்' என்று உரையாசிரியரான எல்லப்ப நாவலர் உடன் காலத்தில் எழுதியிருப்பதும் நோக்கத்தக்கது.*

இன்ன தன்மைய நூலி னைக்கவி
ராச ராச வரோதயன்
மன்னன் நம்பிர மாதி ராயன்
வடித்த ரும் பொருள் கூறவே
கன்ன லஞ்சிலை வேளெ னும்கவி
ராச பண்டிதன் வீரையான்
சொன்னயம்பெறு காவி யக்கவி
சொல்வ லென் று தொடங்குவான்.

*என்ற பாடல் ஆசிரியர் பெயர் கூறுகிறது. பின்னர் நூலானது மூலத்தையொட்டி 40 பாடல்களாகவே உள்ளது. எல்லாம் தேவியால் வந்த ஆக்கமே என்பது 14 பாடல்களில் சொல்லப் படுகிறது. முதற் பாடல் அனைவரும் நன்கு அறிந்த பாடல்:*

சிவமெனும் பொருளும் ஆதி சத்தியொடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்;
இவள்பி ரிந்திடின் இயங்குதற்கும் அரிது
அரிதெ னாமறை யிசைக்குமால்;
நவபெ ரும்புவனம் எவ்வ கைத்தொழில்
நடத்தி யாவரும் வழுத்துதாள்
அவனியின் கணொரு தவமிலார் பணியல்
ஆவதோ, பரவல் ஆவதோ?

*பின்னர் தேவியை யார் எப்படித் தியானிக்கத்தக்கது என்பதை ஏழு பாடல்கள் கூறுகின்றன. எடுத்துக்காட்டு: மதுரகவி பாடும் ஆற்றல் பெற வேண்டினோர் தியானிக்கும் இயல்பு:*

உனது சரற்கால மதியனைய மெய்யும்
உடல்குழைத்த பிறைச்சடையும் கரங்கள் நான்கும்
அனவரத முறும்அபய வரத ஞான
அருட் பளிங்கு வட மொடுபுத் தகமு மாக
நினைகிலர் முன் வழுத்தலர்பின் வணங்கார் எங்ஙன்
நிறைந்தபசுந் தேனும்அடு பாலுந் தூய
கனியுமென மதுரம் விளைந் தொழுகு பாடற்
கவிதைபொழி வது, கயிலைக் கடவுள் வாழ்வே!

*இதுபோல இன்பச்சுவை பெறுங் கவிதை பாட வேண்டினோர், காவியம் செய்ய வேண்டினோர் தியானிக்கும் இயல்பு, மகளிர் வசியம் வேண்டினோர், மகளிரை மோகிக்க வேண்டினோர், விடமும் சுரமும் தீர்க்கவேண்டினார் தியானிக்கும் இயல்பு என்று முறையாக அடுத்த பாடல்களில் சொல்கிறார். தேவியின் சிறப்புப் பின் 13 பாடல்கள். கடைசியில் ஆறாதாரத்தில் தரிசிக்கும் இயல்பைக் கூறும் ஆறு பாடல்கள்.*

*சௌந்தரிய லகரி என்ற இரண்டாம் பகுதி, மூலத்துக்கு நேரான 60 பாடல்களும், பயன் முதலியன கூறும் நாலுபாடல்கள் அதிகமாகவும் உள்ளன. ஆக இரு பகுதிகளிலும் மொத்தம் 110 பாடல்கள். இப்பகுதியில் அம்பிகை கேசாதி பாதமாக வருணிக்கப் பெறுகிறாள். தேவியின் சில உறுப்புக்கள் பல பாடல்களால் வருணிக்கப் பெறுகின்றன. திருவடியைப் புகழும் பத்துப் பாடல்களில் ஒன்று:*

உளமகிழ் மகிழ்நர் சென்னி
　　உறுநதி விளக்க மாயோன்
கிளர்முடிப் பதும ராகக்
　　கேழொளிச் செம்பஞ் சேய்க்கும்
முளரிநின் பதங்கள் வேத
　　முடிவுறப் பதித்த தவ்வாறு
எளிய எந்தலைமேல் வைக்க
　　இரங்குவ தென்று தாயே.

*தமது பாடலையும் கொள்ளுமாறு வேண்டுகிறார்:*

சேமநிதியே, அமுதே, தேனே, நற் குணக்கடலே,
யாமளையே, அன்பர் மனத்திலிருந்து முரைக் கடங்காத
கோமளமே, அம்மே, நின் கோகனகத் தாள் வழுத்தும்
மாமறைபோல் என்பாடல் வண்தமிழும் கொள்வாயால்.*

*நூற்பயன் கூறும் இறுதிப் பாடலும் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடுகிறது.*

---

* *இப்பாடலையொட்டிய மூன்று பாடல்கள் கவியரசர் செய்யவில்லை என்பது சில பண்டைய வடமொழி உரையாசிரியர் கருத்து. ஆனால் நாவலர், கவியரசர் செய்தார் என்பதை உடன்பட்டே உரை எழுதியிருக்கிறார்.*

வேத நுண்பொருள் ஆதி சுந்தரி
 வீறடங்கலு மாயமே
ஈதறிந்து விடாசொ லுங்கவி
 ராச பண்டிதன் வீரையான்
நாத ரஞ்சகிதாள் பெறுந்திரு
 நாம மொன்பது நூறுமே
ஒதினின் பல போக முஞ்சிவ
 லோக மும்பெறு வார்களே.

*இவ்வாசிரியருடைய செய்யுள் நடை மிக்க இனிமையுடையது. மூலத்துக்கு ஏற்ப அமைக்கும்போது பொருட் செறிவுடையதாக அமைக்கிறார். பாதிக்கு மேலுள்ள பாடல்கள் எளிய நயமான சந்தப் பாடல்கள். படிப்பவர் மனத்தைக் கவர்வன; தேவியின் அழகு வெள்ளத்திலும் ஆனந்த வெள்ளத்திலும் தோயச் செய்வன.*

*இவர் பாடிய சௌந்தரிய லகரிக்கு இதே நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சைவ-எல்லப்ப நாவலர் சிறப்பான உரை எழுதியிருக்கிறார். அவர் மூலத்தை அடியொட்டி மாறாது எழுதியிருக்கிறார் என்று சொல்லப் பெறுகிறார். உடன் காலத்திலேயே மற்றொரு பெரும் புலவர் இவர் நூலுக்கு உரை எழுதியது இவருக்கிருந்த பெரும் மதிப்பைப் புலப்படுத்தும்.*

*சௌந்தரிய லகரி நூலின் இரு பகுதிகளும் பலரால் பல முறை பதிப்பிக்கப் பெற்றுள்ளன. ஏடுகளில் பின்னும் பல பாடல்கள் காணப்படுகின்றன. பின்வரும் இலிங்க புராண விநாயகர் வணக்கப் பாடல் சௌந்தரிய லகரியைப் போற்றுவது என்று முன் குறிப்பிட்டோம்:*

பிறைதவழும் எயிற்றோன்றப் பிறங்குகதிர் வெண்கோட்டாற்
செறிகதிர்சொல் தடங்குடுமிச் செம்பொன்மால் வரைவாய்ப்ப
மறைபுகழும் சௌந்தரிய லகரியினை வகுத்தெழுதும்
விறல் கெழுமு வேழமுகன் விரைமலர்த்தா ளிணைதொழுவாம்.

*அன்றியும், கீழ்க்கண்ட இரு வெண்பாக்களும் நூல் முகப்பில் ஏடுகளில் உள்ளன.*

அடியேன்தான் செய்தபிழை யத்தனையும் செம்பொற்
கொடியே பொறுத்தடிமை கொள்வாய் – நெடிதாய்
அனவரத தாண்டவஞ்செய் அம்பலவர் பங்கில்
தனகுசிவ காமியே தான்.

ஆடகமா மன்றிலுறை அன்னமே, நின்னுடைய
பாடகமும் சிற்றடியும் பற்றினேன், – தேடரிய
அற்புதமே, அம்மை, அணங்கே, மணநாறும்
கற்பகமே நீ யென்னைக் கா.

*உரைப் பாயிரமாகிய 'மறை புனைந்தருளும் சிவன் தனது' என்ற பாடல் நூலின் இறுதிப் பாடலாக எண்ணிட்டுச் சொல்லப் பட்டுள்ளது. சௌந்தரிய லகரிக்கு முதல் பகுதியில் ஆனந்த லகரிப் பகுதிக்கு ஒவ்வொரு பாடலுக்கும் கருத்து சக்கரம் மந்திரம் நைவேத்தியம் பூ என்பன சொல்லப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, 'சிவமெனும் பொருளும்' என்ற முதற்பாடல் 'சத் தியை யன்றிச் சிவத்துக்கோர் செயலில்லை எனக் கூறுவது. இது தைரியம்' இப்படியே ஆனந்த லகரி 40 பாடல்களுக்கும் குறிப் புக்கள் உள்ளன. மற்றும் சௌந்தரியலகரி முதற்பாடலுக்கு, 'ஊர்வன பலவும் தீண்டாமை' என்ற குறிப்போடு மந்திரம் நிவேதனம் சக்கரம் உள்ளன. இது போல 60 பாடல்களுக்கும்,*

அவனுரைத்த பாடலா மவற்றினூடொ வொன்றையும்
புவனியிற்பன் மாந்தர்மந் திரத்தினிற் புகன்றதால்
எவளவோ பயன்களெய்தினார்; சிலோ ரியம்பலில்
தவறுபட்ட தாற்பயித்தி யத்தராகி னார்களே

*என்பது புலவர் புராணம். ஓர் ஏட்டில் பாயிரப் பகுதி அலங்கார லகரி என்று பெயரிட்டு, நூல் முடிவில் 'ஆனந்த லகரி சௌந்தரிய லகரி அலங்கார லகரி முற்றும்' என்றும் எழுதப்பட்டுள்ளது.*

*யாமளைதன் புகழாக, மறை நாலின் வடித்தெடுத்த இந் நூலை, நாமகள் தன் பாடல் என்று அரசனாருக்கு நவில, அவர் நகை செய்து, அவளை அழைத்துப் பருப்பதத்திற் பொறித்திருந்த பரிசு காட்டினாராம் (பாயிரம் 3), நாமகள் கலைமகளாதலின், கைலாயகிரியில் எழுதிய பாடல் இவள் இதயத்தில் தோன்றிற்று என்று உரைகாரர் கூறுவார். அற்பமானவன் எவனும் தேவியின் அருள் பெற்றால், மாதர் விரும்பும் அழகு பெறுவான் என்று சொல்ல வந்தவர், 'அழகிருந்த ஊரில் இருந்தறியானேலும்' என்கிறார். தேவியின், பாத சலத்தினால் 'மையல் நெஞ்சுறும் ஊமரும், பங்கய வாணி தம்பல ஊறல் துய்த்த சொல் வாணர் போல் கவிவாணர்' ஆவர் (89) என்கிறார். ஆலத்தி சுழற்றல் என்ற பழக்கத்தினைக் குறிப்பிடுகிறார் (102). த்ரவிட சிசு என்று மூலத்திலுள்ள தொடரை எடுத்து இவர், கவுணியன் குலமதலை என்று விளக்கமாகவே கூறுகிறார் (74):*

தருண மங்கலை உனது சிந்தை
　　தழைந்த பாலமு தூறினால்
அருண கொங்கையி லதுபெ ருங்கவி
　　அலைநெடுங் கடல் ஆகுமே,
வருண நன்குறு கவுணி யன்சிறு
　　மதலையம் புயல் பருகியே
பொருள்ந யம்பெறு கவிதை யென்றொரு
　　புனித மாரி பொழிந்ததே.

*திருஞான சம்பந்தரைச் சங்கரர் புகழ்ந்தார் என்று சொல்ல விருப்பமில்லாத அத்வைதிகளும் உண்டு. அவர்கள் சங்கரர் 'த்ரவிட சிசு' என்று தம்மையே சொல்லிக் கொண்டார் என்று சொல்வார்கள். இது விதண்டாவாதமான போலிக்கூற்று. பெரும்புலவரான சைவ எல்லப்ப நாவலரே தம் காலத்து நிலவியதும் மொழிப்பெயர்ப்பாளரான கவிராச பண்டிதருக்கு உடன்பாடானதுமான ஞானசம்பந்தர் என்ற கருத்தையே விளக்கி எழுதுகிறார். அத்வைதிகள் சிலர் சம்பந்தரைக் குறிப்பிடவில்லை என்பது, தமிழ்நாட்டில் அவர்கள் சிவ வழிபாட்டை விரும்பாத ஒரு வறட்டு வேதாந்தம் கடைப்பிடிக்க முயல்கிறார்கள் என்பதையே காட்டும். அவர்களிடையே யாரும், திருஞான சம்பந்தர் பிராமணராயிருந்துங்கூட, ஞானசம்பந்தர் என்று பெயர் வைத்துக் கொள்வது இன்றளவில் இல்லை. சம்பந்தர் காலமெல்லாம் சிவவேதியர்களாயிருந்த பிராமண குலம், சங்கரருக்குப் பின் சிவநெறியினின்றும் பிறழ்ந்து போயிற்று.*

### ஆனந்த மாலை

*இந்த நூலும் பண்டிதர் செய்ததென்றே வழங்குவது புலவர் புராணமுடையாரும் இப்படியே கூறுகிறார். இந்நூல் 'என் ஆனந்த நாயகமே' என்ற தொடரை மகுடமாக உடைய 26 பாடல்கள் உடையது. 26ஆவது பாடல் ஆசிரியர் பெயரைக் கூறும்:*

கானம் பயிலராக் கவிராச பண்டிதன்சொல்
ஆனந்த மாலை படித்து ஆனந்த வாழ்வறிவார்
வானம் புவனமனல் வாரிநில மேழுலகும்
ஞானம் பரமகுரு நாதர் இடத் தெய்துவரே.

*இதன் பிறகு 26 பாடல்களுக்கும் அடிவரவு கூறுகின்ற ஒரு தனி விருத்தம் அமைந்துள்ளமை சிறப்பு. இதிலுள்ள பாடல்கள் 'ஐயைந் தொன்றே' என்று கூறுகிறது. இந்த நூல் மிகவும் எளிய*

கருத்துக்களும் நடையும் உடையது. ஆசிரியர் கவிதை புனையக் கற்ற தொடக்க காலத்தில் இதைப் பாடியிருக்கலாம். பின்வருவது 3 ஆம் பாடல்:

> நீதித் தனிக்கடலே நீ வகுத்த பல்லுயிரைப்
> பேதித் தறுசமயப் பித்தேற்ற வேண்டிற்றோ?
> சோதிக் கடவுளர்க்கும் தொல்மறைக்கும் எட்டாத
> ஆதித் தனிப்பொருளே ஆனந்த நாயகமே.

21ஆம் பாடல் கருதத்தக்கது.

> உன் பாடல் நீ புனைந்து உன்னை மறைத் தென்னையுரைத்து
> என் பாடல் என்றுலகில் ஏற்றுவிக்க வேண்டிற்றோ?
> முன் பாடல் வேத மொழிக்கும் உரு காதமனம்
> அன்பாட லுக்குருகும் ஆனந்த நாயகமே.

'உன்னை நீயே புனைந்து பாடி, உன்னை மறைத்து, என்பாடல் என்றே உலகில் வழங்கச் செய்கிறாய்' என்று இவர் கூறுகிறார். இக்கருத்து நம்மாழ்வார் திருவாய் மொழியில் (8-9-1) 'என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை இன் தமிழ் பாடிய ஈசனை' என்று கூறுவதனோடு வைத்து நோக்கி இன்புறத்தக்கது.

### வராகி மாலை

சத்த மாதர் என வழங்கும் ஏழு சத்திகள் பிராமி நாராயணி (வைஷ்ணவி) மகேசுவரி கௌமாரி வாராகி உருத்திராணி (மாகாளி) இந்திராணி (மாகேந்திரி) ஆகியோர். இவ்வெழுவரும் சிவசத்தியின் மூர்த்தி பேதங்கள். இவர்களில் வாராகி என்பது, வராக மூர்த்தியின் அம்சமான சக்தி. இந்தச் சத்தியை வழிபட்டால் பகைவனை வெல்லும் ஆற்றல் பெறுவதோடு இவளே பகைவரை அழிப்பாள் என்ற நம்பிக்கையும் வழங்குகிறது. அச்சில் வழங்கும் வராகிமாலை என்ற நூலில் 32 பாடல்கள் உள்ளன. பின்னும் பத்துப் பாடல்களுக்கு அதிகமாக ஏட்டில் காணப்படுகின்றன. பாடல்கள் கட்டளைக் கலித்துறை. பாடல் தோறும் வசியம் தம்பனம் மோகனம் ஆகருடணம் உச்சாடனம் என்பது போன்ற பகைவரை வெல்லுதல் அல்லது அழித்தற் பொருளே சொல்லப் பட்டிருக்கும். எனினும், பாடல்கள் நல்ல நடையுடையன. அது பற்றி இந்நூலின் ஆசிரியர் கவிராச பண்டிதர் என்ற கூற்றை நம்பத் தோன்றுகிறது. ஒருகால் இவர் இளமையில் சத்தி துதியாக ஆனந்த மாலையையும், சத்தி வசியத்துக்காக வராகி மாலை

*யையும் பாடியிருத்தல் கூடும். இதிலுள்ள சிறந்த பாடல்களுக்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் மூன்றையும் காண்க:*

இருகுழை கோமளம், தாள்புட்ப ராகம், இரண்டு கண்ணும்
குருமணி நீலம், கை கோமே தகம், நகம் கூர்வயிரம்,
திருநகை முத்து, கனிவாய் பவளம், சிறந்தவல்லி
மரகத நாமம், திருமேனி யும்பச்சை மாணிக்கமே.

நாசப்படுவர், நடுங்கப்படுவர், நமன் கயிற்றால்
வீசப் படுவர், வினையும் படுவர்இம் மேதினியோர்,
ஏசப் படுவர், இழுக்கப் படுவர், என் ஏழை நெஞ்சே!
வாசப் புதுமலர்த் தோளாள் வராகியை வாழ்த்தலரே!

பாப்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் நின்மலர்ப் பாதந் தன்னிற்
பூப்பட் டதுவும் பொறிப்பட்ட தோ, நின்னை யேபுகழ்ந்து
கூப்பிட்ட துன்செவி கேட்கிலை யோ, அண்ட கோளமட்டும்
தீப்பட்ட தோ, பட்ட தோநிந்தையாளர் தெருவெங்குமே?

*இதனுள் வரும் பயங்கரமான பாடல்களுக்கு, அதாவது பகை வருக்குக் கொடுமையான தண்டனை வேண்டுகின்ற பாடல் களுக்கு எடுத்துக்காட்டு பின்வரும் பாடல்:*

நெஞ்சகந் தன்னின் நிறைந்திருக் கின்றவள், நிர்க் குணத்தி,
நஞ்சணி கண்டத்தி, நாரா யணிதனை நம்பும்எற்கு
வஞ்சனை பண்ணி மதியாத பேனரவா ணாளையுண்ணக்
கொஞ்சி நடந்து வருவாள், வராகி குலதெய்வமே.

*அச்சுப் பதிப்புக்களே ஒன்றுக்கொன்று நிரம்ப வேறுபடு கின்றன. ஏடுகளிலும் நிரம்ப வேறுபாடு காணப்படுகிறது. ஆகவே கவிராச பண்டிதர் பாடிய வராகி மாலைத் தோத்திர நூலில் பிற்காலத்தார் பகைவருக்குக் கொடுமையிழைக்க வேண்டுகின்ற பாடல்களைச் செருகி விட்டார்கள் என்ற கருத்தும் சிந்திக்கத் தக்கது.*

**காலம்**

*கவிராச பண்டிதருடைய சௌந்தரிய லகரிக்குச் சைவ எல்லப்ப நாவலர் உரை செய்தார் என்பது வரலாறு. நாவலர் காலம் 16ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி என்பது நன்கு தெரிகிறது. ஆதலால் மூல நூலின் ஆசிரியர் காலம் இதற்கு முன்பு ஆகும். இவருடைய மகனான வீரை அம்பிகாபதி வரலாற்றில் அவருடைய காலம் தென்காசி கருவை ஆகிய ஊர்களில் பாண்டியர் ஆட்சி புரிந்த பிற்காலம் என்று அறிகிறோம். அக்*

காலமாவது 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. இதுவும் தந்தையின் காலம் முற்பட்டது என்பதையே நன்கு காட்டும். எனவே இவ்விரு தொடர்புகளினாலும் கவிராச பண்டிதரின் காலம் 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்று கொள்வது பொருத்தமாகலாம்.

## கலைஞான தீபம்

தமிழிலே சில நூல்கள் தோத்திரமும் சாத்திரமுமாக உள்ளன. முதற் பெருநூல் திருமந்திரம். இது பத்தாம் திருமுறை. முதல் ஒன்பது திருமுறைகள் தோத்திரங்களாக உள்ளன. பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் பெரும்பகுதி சாத்திரமாகவே உள்ளது. இடையிடையே தோத்திரப் பாடல்களில் சில கலந்து வருகின்றன. பதினோராம் திருமுறை பிரபந்தங்களாக உள்ளது. பன்னிரண்டாம் திருமுறை, அடியவர்கள் வரலாற்றைச் சொல்லுகின்ற ஒரு சரித்திர நூலாக அமைந்திருக்கிறது. இந்த முறையில் பார்க்கும்போது, பன்னிரு திருமுறைகளின் வரிசையில் திருமந்திரம் தனக்கு முன் வந்த தோத்திரப்பாசுரங்களையும் பின் வரும் பிரபந்தம், வரலாற்று நூல் என்பவற்றையும் பிரித்துக் காட்டுவதாக இடையில் உள்ளது.

இவ்வாறு சாத்திரமும் தோத்திரமுமாக உள்ள நூல்கள் சில. 17ஆம் நூற்றாண்டில் சாந்தலிங்க சுவாமிகள் செய்த வைராக்கிய சதகம் என்ற 100 பாடல் கொண்ட நூல் இந்த முறையில் அமைந்தது. இதன் முதல் 50 பாடல்கள் கோத்திரம், பின் 50 பாடல்கள் சாத்திரம். இந்த நூலுக்கு உரை எழுதிய திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் தோத்திரப்பகுதி எளிதில் விளங்கும் என்று கருதி, அப்பகுதியை விட்டு, பிற்பகுதியாகிய சாத்திரப் பகுதிக்கு மட்டும் உரை எழுதியிருப்பது கருதத்தக்கது.

இந்த முறையில், இந்தச் சாதகத்துக்கு முந்திய நூற்றாண்டில் தோன்றிய நூல் கலைஞான தீபம். முதல் 50 பாடல்களும் தோத்திரமாகவே அமைந்துள்ளன. சாத்திரம் என்று சொல்லும் போது இதனுள்ளும் எந்தவொரு சாத்திரக் கோட்பாட்டையும் முறையாகச் சொல்லவில்லை. சாத்திரப் பொருள்களாகிய மந்திரம், இயந்திரம், சக்கரம், செபம், ஓமம், வசியம், ஆகருடணம், மோகனம், அட்சரங்கள், விடம்போக்குதல் முதலிய பொருள்களே சொல்லப்பட்டுள்ளன. இது இந்த நூலின் தனிச் சிறப்பு.

இந்த ஆசிரியரே மொழிபெயர்த்துள்ள சௌந்தரிய லகரியும், ஒரு தோத்திர சாத்திர நூல் என்று கருதப்படும். குமரகுருபர

சுவாமிகள் தாம் செய்த முதல் தோத்திரமாகிய கந்தர் கலி வெண்பா, தோத்திர நூல் என்றே வழங்கிய போதிலும்கூட தொடர்ந்து முறையான சாத்திரக் கருத்தை அதனுள் அமைத்திருப்பதும் இங்கு அறியத்தக்கது. 122 கண்ணிகள் கொண்ட இச் சிறு நூலில் முதல் 36 கண்ணிகள் சைவ சித்தாந்த சாத்திரப் பகுதி. கண்ணி 75 முதல் 104 வரை 30 கண்ணிகள் முருகன் அவதாரமும் வரலாறும் கூறும் பகுதி. நூல் முழுமையும் தோத்திர நூல். இந்த மரபில் முன் வந்த ஒரு தோத்திர சாத்திர நூலே கலைஞான தீபம்.

**ஆசிரியர்**

முதலில் வந்த பதிப்பில் ஆசிரியர் பெயர் தலைப்பில் போடவில்லை. இது அக்கால இயல்பு. நவீன ஆராய்ச்சி யுகத்துக்கு முன், நம்மவர் நூலை முதன்மையாகக் கருதினார்களேயன்றி, ஆசிரியரோ அவர் வரலாறோ பிரதானமென்று கருதியதில்லை. இருப்பினும் இக்காலம் வரலாறு தெரிய வேண்டுமென்று நாம் கருதுகிறோம். இதில் தவறில்லை இந்த நோக்கோடு பார்க்கும் போது, நூலின் 96ஆம் பாடலில் ஆசிரியர் பெயர் சொல்லப் பட்டிருப்பதைக் காண்கிறோம்.

பூரண மாகி எவைக்குமுன் னாகிப் பொருந்தரிய
காரண னான கடவுளை வேதியன் கண்டிட இத்
தாரணி தன்னிற் கவிராச சுந்தரன் தந்தனனால்,
ஆரணி, உன்னைத் தொழுமவர் காண்ப தரிதல்லவே.

'வேதியனாகிய கவிராச சுந்தரன் என்ற புலவன் பூரணமாகி எவைக்கும் முன்னாகிப் பொருந்தரிய காரணனான கடவுளை உலகமெல்லாம் கண்டிட இத்தாரணி தன்னில் தந்தனன். ஆகவே ஆரணி, இனி உன்னைத் தொழும் பத்தர்கள் அக்கடவுளைக் காண்பது அரிதல்ல' என்பது இதன் பொருளாகும். இதன் கருத்தாவது கவிராச சுந்தரன் பாடிய இந்த நூலைப் பக்தியோடு ஓதுவோருக்குப் பரம்பொருள் ஆகிய கடவுள் பிரத்தியட்சமாக வருவார் என்பதாம். இப்பாடல் சிறப்புப் பாயிரம்போல அமைந்துள்ளது. எப்படியோ தொடக்கத்தில் ஏடுகளின் இடையே கலந்துபோயிருக்கிறது என்று கருதலாம். அப்படியின்றி, இது நூற்பெயரும் பயனும் கூறும் 101 ஆம் பாடலுக்கு அடுத்து வரத் தக்கது என்றும் கொள்ளலாம்.

இனி இக்கவிராச சுந்தரன் யார் என்பது கருதத்தக்கது. இவர் வேதியர். நூலை நல்ல நடையில் செய்திருக்கிறார். இவர்

கவிராச பண்டிதர் என்று கருதத்தக்கவர். 16ஆம் நூற்றாண்டில் வீரை-கவிராச பண்டிதர் என்பவர் வாழ்ந்தார். இவர் சொந்த ஊர் வேம்பத்தூர் என்பது. வேதியர் குலம். இந்த ஊரில் தொடர் பாகச் சங்க காலம் முதல் எண்ணற்ற பெரும் புலவர்கள் தோன்றி யிருக்கிறார்கள். வேம்பத்தூர்க் குமரனார் என்ற சங்ககாலப் புலவர் இவ்வூரினர். 10ஆம் நூற்றாண்டில் திரிசிராமலைக் கல்லில் வெட்டியிருக்கும் திரிசிராமலை அந்தாரி பாடிய நிம்பை நாரணன் என்பவர் இவ்வூரினர். நம்பி திருவிளையாடல் பாடிய பெரும்பற்றப் புலியூர் நம்பியும் இவ்வூரினர். 16ஆம் நூற்றாண் டில் கவிராச பண்டிதர் இவ்வூரில் தோன்றிப் பல துதி நூல்கள் பாடினார். அவருடைய மகன் அம்பிகாபதி பராபரை மாலை நெல்லை வருக்கக் கோவை ஆகிய நூல்கள் பாடினார். இந்தப் பரம்பரையில் அடுத்து வந்த ஆளவந்தார் என்பவர் 17ஆம் நூற்றாண்டில் ஞான வாசிட்டத்தைத் தமிழால் பாடினார்.

இங்குக் கூறிய கவிராச பண்டிதர் ஆதி சங்கரருடைய சௌந்தரிய லகரியைத் தமிழில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்தார். இந்த நூலே இவருக்கு இலக்கிய வரலாற்றில் ஒரு சிறப்பான இடத்தைத் தருகிறது. இந்த மொழிபெயர்ப்பைப் பார்க்கும்போது, இவருக்கு மூலத்தினிடம் உள்ள ஈடுபாடும், சக்தியினிடம் உள்ள சிறந்த பக்தியும், தமிழ்ப் புலமையும், சந்தச் செய்யுள் செய்யும் ஆற்றலும், நன்கு புலப்படுகின்றன. இந்த மொழிபெயர்ப்பைத் தமது முதிர்ந்த வயதில் செய்தார் என்று தோன்றுகிறது. இளமையில் அம்பிகையை ஆனந்த நாயகமே என்று விளித்து ஆனந்த மாலை என்ற எளிய நடையில் அமைந்த ஒரு தோத்திர நூல் பாடினார் என்று காட்டினோம். அதன் பின் வராகிமீது தோத்திரப்பகுதியும் மந்திரப்பகுதியும் கொண்ட வராகிமாலை என்ற ஒரு சிறு நூல் பாடினார். இதனுள் தம் பனம் மோகனம் வசியம் மாரணம் முதலான அட்ட கருமங் களுக்குரிய பாடல்கள் சொல்லப்பட்டுள்ளன.

இவரே கலைஞான தீபம் பாடினார் என்று கருதத் தோன்று கிறது. நூலின் சொல்லமைப்பும் சக்தி தோத்திரமாயிருக்கும் தன்மையும் இந்த எண்ணத்தைத் தருகின்றன. இவர் எழுதியவை யாவுமே அம்பிகையின் துதி நூல்கள். இவரும் கவிராயர். ஒரு கால் இவர் இயற்பெயர் சுந்தரம் என்றிருந்து, புலமை காரண மாகவும் மக்களுடைய போற்றுதலாலும் கவிராசர் என்றும் கவிராச பண்டிதர் என்றும் இவர் பாராட்டப் பெற்றார் என்று

கருதலாம். கவிராச பண்டிதர் என்பது இயற்பெயரன்று. சுந்தரன் என்ற சொல் பாட்டில் பண்டிதன் என்றும் இருந்திருக்கலாம்.

## நூற்பெயர்

புவனாம்பிகை கலைஞான தீபம் என்பது நூற்பெயர் புவனம் என்பது உலகம்: புவனங்கள் அனைத்துக்கும் நாயகி என்ற கருத்தில் பராசக்திக்குப் புவனாம்பிகை புவனேச்வரி என்ற பெயர்கள் வழங்கும். இந்த நூலின் முதற்பாடல் புவனை கலை ஞான தீபப்பனுவல் என்றும் 101ஆம் பாடல் புவனை கலைஞான தீபச் செழும் பொருளை விரிக்கும் பனுவல் என்றும் சொல்வதால், நூற்பெயர் தெளிவு.* 22 பாடல்களில் புவனை என்று பாடுகிறார். சில பாடல்களில் உலகீன்றவள் (10, 21) உலகம்மை (84) என்றும் பாடுகிறார். உலகம்மை என்பது பாபநாசம் முதலிய ஸ்தலங்களில் அம்பிகையின் திருநாமமாகவும் உள்ளது. இங்கு இவர் ஒருதலத்தைப் பாடவில்லை என்பது தெளிவு.

முதன் மூன்று பாடல்களின் அம்பிகையின் கருணை என் உள்ளத்தில் நின்று பாடுகிறது என்று கூறுகிறார். அம்பிகையைச் சம்பிரதாயமாக உள்ள பல சொற்களால் போற்றுகிறார். பூரணி, புராதனி, ஞானப்பசுங்கொடி, திரிபுரை, உலகீன்ற தனிச்சுடர், பெண்கொடி, அம்பிகை, பொன்னிமயாசல ராஜகுமாரி, சிவ புரவாசத்தி, வாணி, கௌரி, ஐயை, பராபரை, உத்தமி, ஆரணி: பல இடங்களில் அபிராமி, அபிராமவல்லி என்றும் கூறுகிறார். (29, 34, 40, 72). அம்மையின் வியாபகத்தைக் கூறுகின்ற ஒரு பாடல் மிகவும் சிறப்புடையது. அவளுடைய திருவுருவம் புவனத்து அடங்காது, அவளுடைய அருள் சிவவியாபகத்து அளவு உள்ளது. அவள் செய்யும் தண்ணளி அன்பர் செய்கின்ற தவம் அளவானது, அவளுடைய பாதங்கள் அன்பருடைய பிறவி அத்தனையும் கடந்தன. பொருளாவது பிறவியைப் போக்குவன என்பது:

> புவனத் தடங்குங்கொல் யாவையும் ஈன்ற புவனையுரு;
> சிவமெத் துணையத் துணையாம் அவளருள்; செய்யும் அருந்
> தவமெத் துணையத் துணையவள் தண்ணளி; சாருமன்பர்
> பவமெத் துணையத் துணையுங் கடந்தன, பாதங்களே.

---

* முதற்பாட்டில், நிலைப்பாக, சிலைப் பாட்டு என்ற தொடர்களுடன் எதுகையில் பொருந்தி வரவேண்டுமென்ற நினைப்பில் நூற்பெயர் புவனை - கலைக்ஞான தீபப் பனுவல் எனவே கொள்ளப்பட்டுள்ளது.

## நூற்பொருள்

*இந்நூலின் பாடல்கள் கட்டளைக் கலித்துறை முன் 50 தோத்திரம், பின் 50 சாத்திரம் 101 ஆம் பாடல் நூற்பயன் முதற் பாட்டு விநாயகர் காப்புச் செய்யுள். நூல் முழுமையும் சிவம் சக்தி என வேறற்ற நிலையில் பாடுகிறார். சிவானந்த போதம் இத்தன்மையதென்று யாரே கூறுவர்: கருணை என் உள்ளத்தே நின்று பகர்கின்றது. ஆக்கும் பனுவல் அவள் செயல், இறைவியின் திருவுருவத்தைத் தரிசித்து இடைவிடாமல் வருணிக்கிறார். தமது தகுதியற்ற நிலையைச் சொல்லிச் சதா ஏங்குகிறார். அவளுடைய அருள் தன்மையைக் கூறும் பாடலொன்று (16)*

எனக்குத் தொழில் கொடுந் தீதான பாவம் இயற்றிடுவது;
உனக்குத் தொழில் அது தீர்த்தென்னை ஆள்வது; உறுங்குழவி
தனக்குத் தொழில் மணற் சோறளைந் தாடுதல்; சங்கரியே,
அனைக்குத் தொழில்நறு நீராட்டிப் போற்றி அருள் செய்வதே.

*ஞானசம்பந்தர் திருமுலைப் பாலுண்ட செய்தியைக் குறிப்பிடு கிறார். அவளுடைய பங்கயத்தாள் மும்மலம் செற்றவர் உள்ள மதிக்குள் விரிகின்றன. துன்பக்கடல் நீந்தி வீட்டின்பம் சேர் வதற்குத் தெப்பம் அபிராமவல்லி துணைப்பதம். அவனே சிவன், அவன் தண்ணருளே அவள். எங்கன் அவள் தனை வேறென்பர்? அம்பிகை குருவாகி ஆனந்த வாழ்வருளினாள் என்று ஓர் அழகிய பாட்டில் கூறுகிறார்.*

பேராத மும்மலம் பேர்த்துத் திருவடிப் பேறுநல்கி
வாரா தெவர்க்கும் அரிதாய உண்மையின் வாழ்வருளிக்
தீராத வல்வினை தீர்த்த குருவின் திருவுருக் கொண்டு
ஆராத இன்பச் சுகாதீதம் நல்கினள் அம்பிகையே.

*பிற்பகுதியில் அக்கினி சக்கரம், இந்திர சக்கரம், வாருண சக்கரம், விடம் ஒட்டுதல், இயந்திரராச சிகாமணி, ஆகருடணம், உலக வசியம், மோகன சக்கரம், பஞ்ச தசாக்ஷரி மந்திரப்பயன், புவனை யந்திரம், பூசை, மந்திரராசன் ஓமம், செபம், யோகம், புவனை திருவடிப் பேறு, கலாந்தம், நாதாந்தம், யோகாந்தம், போதாந்தம், வேதாந்தம் சைவசித்தாந்தம் என ஆறு அந்தங்கள், பரையின் திருவுரு உரையின் துறக்கத்திருப்பது என்ற பொருள்களைக் கூறுகிறார்.*

### சௌந்தரி யந்தாதி

இப்பெயருடைய அம்பிகை துதி நூலொன்று சென்ற நூற்றாண்டில் அச்சாகியிருக்கிறது. சந்தவிருத்தம் கலிப்பா முதலான பலவேறு யாப்புக்களில் இது கரிமுகன் காப்பும் 100 பாடல்களும் உடையது. ஆசிரியர் பாடல் தோறும் யாப்பை மாற்றிக் கொள்கிறார்; இந்தத் தன்மை மிகவும் அபூர்வம். இதை ஓரளவு அருளாளதாசர் செய்த புராண பாகவதத்தின் திருவரங்கப்படலத்தில் காணலாம். சத்திகிரிபுரை கௌரி உமை யாள் தமக்கு ஞானவாழ்வு தருமாறு வேண்டி இவ்வந்தாதி செய்வதாகச் சொல்லுகிறார். சில பாடல்களில் (44, 65, 98, 100) அம்பிகையை ஆசிரியர் சவுந்தரி என்றே பாடுகிறார்.

### ஆசிரியர்

சக்தி வழிபாடு என்ற முறையினாலும், பாடலின் சந்தப் பொலிவினாலும், பொருட்போக்கினாலும், சவுந்தரி என்ற பெயரமைப்பினாலும், தமிழில் சௌந்தரியலகரி பாடிய வீரை கவிராச பண்டிதரே இதைப் பாடியிருக்கலாம் என்று கருதத் தோன்றுகிறது. அழகுவெள்ளம் என்று பாடியவர் இங்கு, 'உனது திருவழகை உமையே தொகுத்துப் பாடரிதே' என்று (15) பாடுவதும் காணத்தக்கது.

பின்னும் இரு குறிப்புக்கள், பண்டிதரே இந்நூலைப் பாடி னார் என்று கருதுவதற்குத் துணை செய்கின்றன. ஒன்று திரு ஞான சம்பந்தர் பற்றிய குறிப்பு. இவரைத் 'திரவிடசிசு' என்றும் 'உனது பாலையுண்ட திரவிடசிசு கவிதை மாரி பொழிந்தது' என்றும் குறிப்பிட்டார் என்று முன்பு கூறினோம் (பக்கம் 14). இவ்வந்தாதியிலும் இருமுறை சம்பந்தர் பாலுண்ட வரலாற்றைக் குறிப்பிடுகிறார். ஒருமுறை பெயர் சொல்லியும், மற்றொரு முறை குறிப்பாகவும். குறிப்பாகச் சொல்லியது:

> **அருளா ரமுதப் பெருங்கடலை**
> **அடைக்கும் சிமிழோ, அடியார்கள்**
> **பொருளார் தமிழைப் புகட்டவந்த**
> **பொற்செப் பிருக்கும் புத்தமுதோ.** **50**

இங்கு திருமுலைப்பால் ஊட்டிய செய்தி குறிக்கப்படுவது தெளிவு. மற்றப் பாடல்:

பிரியாத மாணிக்க ஒளியாகி அடியார்கள்
பேசா திருந்த வாழ்வே,
திருஞான சம்பந்தர் ஒரு ஞான மாகச்
சிறந்தே சொரிந்த பாலோய். 57

*இங்கு அதே செய்தியைத் திருஞான சம்பந்தர் பெயர் சொல்லிக் குறிப்பிடுகிறார். நூலுள் வேறு எவர் வரலாறும் இல்லை. எனவே தமிழ் லகரி பாடிய ஆசிரியரே இவ் வந்தாதி பாடினார் என்பதற்கு இதுவுமொரு சான்று.*

*இனி இரண்டாவது குறிப்பு, சௌந்தரியலகரி பற்றியது. அங்கு வடமொழி மூலம் 8ஆம் பாடலிலும், 92ஆம் பாடலிலும் அம்பிகையின் பஞ்சப்பிரம்மாசனம் பற்றிய குறிப்பு உள்ளது. உரையாசிரியர்களான லக்ஷ்மீதரர் முதலியோர், அம்பிகையின் மஞ்சத்துக்குப் பிரமன் விஷ்ணு ருத்திரன் மகேசன் ஆகிய நால் வரும் கட்டில் கால்கள் எனவும், பரமசிவத்தினுடைய மடியே அம்பிகை வீற்றிருக்கும் இடம் எனவும் கூறுகிறார்கள். 'சிவா காரே மஞ்ஜே' என்பது 8ஆம் பாடல்;*

கதாஸ்தே மஞ்ஜத்வம் த்ருஹிண ருத்ரேச்வர பருத:
சிவ: ஸ்வச்சச் சாயா கடித கபட ப்ரச்சதபட:

*என்பது 92ஆம் பாடலின் முற்பாதி; 'பிரம்மா விஷ்ணு ருத்திரன் சிவன் ஆகிய அதிகார புருஷர் உன்னுடைய கட்டிலின் (வேத சொரூபமான) நான்கு கால்கள்; சதாசிவமூர்த்தி வெண்மை யான காந்தியோடு கூடிய மேல்விதானம் என்ற உருவத்தில் இருக்கிறார்.' இப்பகுதிகளுக்குத் தமிழ்ச் சௌந்தரியலகரி மொழிபெயர்ப்புப் பின் வருவதாகும் 8 - சிவன் பரமேசன் உன் மஞ்சம் (1, 4); பாடல் 92:*

மூவர் மகேசன் முடிகொளு மஞ்சத் தொழிலாயும்
மேவிய படிகத் தனதொளி வெளிசூழ் திரையாயும்
ஒவறு செங்கேழ் விம்பம தின்பத் துருவாயும்
பாவை நின்; அகலா இறையொடு நின்னைப் பணிவாமே

*(102) என்பது. இதற்கு உரை எழுதிய எல்லப்ப நாவலர் கூறுவது: 'தெய்வத் தச்சன் செய்யும் பாவை போன்றவளே, அயன் அரி அரன் என்னும் மூவரும் மகேசனும் கட்டிலுடைய நான்கு முடியினால் தாங்கப்படும் மஞ்சத்தின் வடிவாகவும், அதன்மீது மேவிய படிக நிறம் போலும் தனது ஒளி அதன் வெளி சூழ்ந்த திரையாகவும், அத்திரைமேல் ஒழிவற்ற நின்னுடைய சிவந்த*

*நிறம் பத்தி பாய்ந்த நிழல் இருவரும் அனுபவிக்கும் இன்பத்தின் வடிவாகவும் யாம் கருதி உன்னை விட்டுப் பிரியாத உன் இறைவனாகிய சதாசிவனுடன் உன்னைப் பணிவாம்' என்பதாகும்.*

*இந்தக் கற்பனை மஞ்சமும் அதன் கால்களும், பிரமா முதலிய தேவர்களாகவும் சதாசிவனாகவும் சொல்லியிருக்கும் கருத்து, மூலநூலுக்கும், அதன் உரைகாரருக்கும், கவிராச பண்டிதருக்கும் மட்டுமே தெரிந்த கருத்தாகும்.*

*இவ்வாறு சௌந்தரியலகரியுள் கூறிய நிலையைச் சௌந்தரி அந்தாதியின் ஒரு பாடல் அப்படியே கூறுகிறது:*

மாது நின் கருணை ஞான நித்திரை செய்
மஞ்சம் நாலுநிலை கால்களும்
வேதன் மாலுடன் உருத்திரன் கனம –
கேசுரன் தலை விரித்த பேர்
ஓது பின்னலுறு மஞ்ச மானதொரு
உச்சி தத் துறை சதாசிவன்
மீது கண் துயில வல்லை, உன் கிருபை
யன்றி வேறொரு விருப்பமே. 48

*இதைக் கூர்ந்து நோக்கும்போது, தமிழ்ச் சௌந்தரியலகரி பாடிய ஆசிரியரே இதையும் பாடினார் என்று உறுதியாய்க் கருத வேண்டும்.*

*எனவே, திருஞான சம்பந்தர் பற்றிய குறிப்புக்களும் அம்பிகையின் மஞ்சம் பற்றிய குறிப்பும், கவிராச பண்டிதரே இந்நூலையும் செய்தார் என்று நிச்சயமாய்த் தெரிவிக்கின்றன.*

**பிற செய்திகள்**

*சிதம்பரத்தைப் பலமுறை குறிப்பிடுகிறார்: சிதம்பரம் 97, கனகசபை 19, சிவகாமி 63, 77. மற்றவை - நமசிவாயம் 68, மங்கையர்க்கரசி என்ற தொடர் 24, போற்றி என்று துதிக்கின்ற பாடல்கள் 68, 69, 70. பாவாய் என்றே வரிதோறும் முடிகிற ஒரு பாடல்:*

மணிநிறம் அனைய மடப்பாவாய்
வளரொளி விழியின் மடப்பாவாய்
துணிவுறு மனதை யளிப்பாவாய்
துரிய அதீத நடிப்பாவாய்

தணிவிலி எனது தளிர்ப்பாவாய்
சரணம தெனது தரிப்பாவாய்
அணிமுழு நீற்றை யளிப்பாவாய்
அரகர நாமி யகப்பாவாய். 92

*தமிழும் வடமொழியும் ஆசிரியருக்குச் சொன்னபடி ஏவல் புரிகின்றன. சந்தப் பாடல்களில் திருப்புகழ் அமைப்பே கொண்டவை எட்டு. அவற்றுள் ஒன்று:*

இயலிசை உணரேன் இனியவை புகழேன்
இருபதம் நினையேன்– எனையாள்வாய்
செயலவை தெரியேன் செனனமும் அறியேன்
சிதரிட அறியேன்– சிறியேனே
மயலினை முனியேன் வறிஞர்கள் தலையேன்
மனமொரு வழியே– மறிகில்லேன்
அயவிலை யரசு அரிவையர் சிரசே
அரனிடம் இறைசேர்– அமுதாளே.

*சைவ சம்பிரதாயத்தில் இறைவன் குருவாய் எழுந்தருளி உபதேசம் செய்து, உயிர்களை ஆட்கொள்கிறான் என்று சொல்லப்படும். இந்நூலும் அதைத் தழுவி இறுதிப் பாடலில், 'குருவாய் எழுந்தருள்க' என்று வேண்டுகிறது:*

சிரத்தா மரையின் ஆயிரத் தெட்
டிதழே சிறந்த திருப்பதத்தைத்
தரத்தான் குருவாய் எழுந்தருள், என்
தாயே, அதுவுன் தரும் பரிசே. 99

## *திருக்கருவை அந்தாதிகள்*

*வரதுங்கராம பாண்டியர் திருக்கருவையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபிரான் மீது மூன்று அந்தாதிப் பிரபந்தங்கள் பாடினார் என்று அவர் வரலாற்றில் குறிப்பிட்டோம். முகம்மதியர் படையெடுத்து மதுரையை அழித்த போது அங்கிருந்த பாண்டியர் தெற்கு நோக்கி ஓடிவிட்டனர். அப்போது அவர்கள் பல கிளையினராகப் பிரிந்து கொற்கை, கரிவலம் வந்த நல்லூர், தென்காசி முதலான இடங்களில் சிறு சிறு நிலப் பகுதிகளை ஆண்டுவந்தனர். அவர்களில் மிகவும் பிரசித்தி பெற்றோர் சிலர் குறிப்பிடத்தக்கவர், தென்காசிக் கோயில்*

கட்டிய பராக்கிரம பாண்டியர், அதிவீரராம பாண்டியர் போன்றார்.* வரதுங்கராம பாண்டியர் கரிவலம் வந்த நல்லூரில் ஆட்சிபுரிந்தவர். இந்தத் தொடர்பு பற்றியே இத்தலத்துக்குப் பெருமானிடம் பக்தி பூண்டு அந்தாதிகள் பாடினார். வரதுங்க ராமர் இளமையில் கொக்கோகம் என்ற காமநூலைத் தமிழில் மொழிபெயர்த்தவர். பின்னால் இவர் ஈசான முனிவர் என்ற சிவாசாரியரிடம் தீட்சைபெற்று, சிவ பக்தி மிக்கவராய் வாழ்ந்த நாளில் இவ்வந்தாதிகள் பாடினார். தமக்கிருந்த ஒரு நோய் நீங்கும் பொருட்டு இவர் தம் நகரில் கோயில் கொண்டிருந்த பெருமான் மீது இவ்வந்தாதிகள் புனைந்து வழிபட்டு நோய் நீங்கப் பெற்றார் என்பது இவர் வரலாறு. இவருடைய மனைவியும், தமிழ்ப்புலமையும் சிவ பக்தியும் மிக்கவர். இக்காரணங்கள் இவர் அந்தாதிகள் உருக்கமாய்ப் பாடத்துணை செய்திருக்கலாம். இவ்வூர் கருவை என மருவி வழங்குவதுண்டு. இங்கு சுவாமி பெயர் பால் வண்ணநாதர், முகலிங்கர்; அம்பிகை ஒப்பனையாள்; தலவிருட்சம் களா.

பாடல்களில் அப்பர், பட்டினத்தார் முதலியோர் பாடல் தொடர்கள் பயிலக் காண்கிறோம். ஆரியநாதர், தாண்டவராயர், அமிர்த சஞ்சீவினி, காமானுராகம். சதாந்தர் முதலான தொடர்களும் காணலாம்.

### திருக்கருவைப் பதிற்றுப் பத்தாந்தாதி

மூன்றில் முதன்மையானது இந்த விருத்தச் செய்யுளாலான அந்தாதி. யாப்பு வேறுபாட்டால் பத்து வகையான செய்யுள் விகற்பகங்கள் பத்துப் பத்தாகத் தொடர்ந்து 100 பாடல்களால் ஆன அந்தாதி.

பதிற்றுப் பத்தாந்ததி என்பது ஓர் அந்தாதிப் பிரபந்த விகற்பம். திருவாசகத்திலுள்ள திருச்சதகம் இத்தகைய பிரபந்தமே. சங்க நூலான பதிற்றுப் பத்தில் இப்பெயரைக் காண்கிறோம். அது முழுமையும் அந்தாதி நூலன்று. பத்துச் சேர அரசர் மீது பாடப்பட்டது. ஆசிரியப்பா என்ற செய்யுளால் பாடப்பட்டது. செய்யுள் விகற்பம் இல்லை.

இந்நூல் காப்புப் பாடல்களும் உடையது. இது நெடுங் காலமாகச் சைவ மக்கள் விரும்பிப் பயிலும் சிறந்த தோத்திர

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு முதல் பாகம், முதல் அத்தியாயம்.

நூல். இதன் பக்திச் சுவையின் சிறப்புக் காரணமாக இதை ஆன்றோர் 'குட்டித் திருவாசகம்' என்று கூறி வந்தனரென்றால் வேறு சொல்வது மிகை. பக்திவெள்ளம் இச்சிறு நூலில் ஊற் றெடுத்துப் பொங்கி வழிவதுபோல பிற்காலத்தில் வேறெந்த நூலிலும் காண்பதரிது. ஆசிரியர் பிரமோத்தரகாண்டம் செய் தவராதலின், சைவ சாத்திர உணர்வு மிக்கவர் என்பது தெளிவு. சாத்திரக் கருத்துக்கள் நூலெங்கும் சிறந்து காணப்படும். பாடல் களைப் பயிலப்பயில நாவினிக்கும், பக்தி கசியும், தமிழ்வளம் பெருகும், சமய அறிவும் சிறக்கும்: எடுத்துக்காட்டாக மூன்று பாடல்களை இங்கு தருகிறோம்.

கண்ட கண்கள் புனல்பாயக் களிப்பா யுள்ளம் கரையழிய,
விண்ட மொழியும் நாக்குழற, விம்மி மேனி மயிர்பொடிப்ப,
பண்டை வசம்போய்ப் பரவசமாய்ப் பரமானந்தத்தெளி நறவம்
உண்டு தெவிட்டா அருள்புரிந்தான், கருவை வாழும் உறவோனே.

தோன்றியபோ துடன் தோன்றித் தோன்றாது மறைத் தென்னை
ஆன்றசெழுஞ் செம்பிலுறை களிம்பு போல் அகலாமல்
ஊன்று மலத் துகளற்றி, உன்னருளும் பெறுவேனோ?
மூன்றுலகும் தொழுதேத்தும் முகலிங்கா, முதற்பொருளே.

சிந்தனை உனக்குத் தந்தேன், திருவருள் எனக்குத் தந்தாய்,
வந்தனை உனக்குத் தந்தேன், மலரடி எனக்குத் தந்தாய்,
பைந்துணர் உனக்குத் தந்தேன், பரகதி எனக்குத் தந்தாய்:
கந்தனைப் பயந்த நாதா, கருவையி லிருக்குந் தேவே.

அந்தாதியில் ஆறாம் பத்து நயம் பொருந்திய சந்தப் பாடல்கள். இறுதிப் பத்துப் பாடல்கள் 'போற்றி' ஆக அமைக்கப்பட்டுள்ளன. தம் அவனை நினைந்து உருகிக் கனிந்த பாடல் செய்யும் ஆற்றல் அடையுமாறு அவன் அருள் பாலித்ததையும் குறிப்பிடுகிறார்.(6):

முன்னைப் பிறவித் தவப்பயனோ முழுது மறியா மூடனிவன்
என்னைக் கருத்தி லிரங்கியோ யாதோ அறியேன் இரவுபகல்
கன்னற் பாகிற் கோற்றேனிற் கனியிற் கனிந்த கவிபாட
அன்னத் தொகுதி வயற்கருவை யாண்டான் என்னை ஆண்டதுவே.

இதைக் குட்டித் திருவாசகம் என்ற கூற்று முழுமையும் பொருந்து வதே என்று இதன் ஒவ்வொரு பாட்டிலும் நன்கு உணர முடிகிறது. முதல் பத்துத்தான் மிகவும் சிறப்பும் உருக்கமும் உடையது என்று நாம் சொல்ல முற்பாட்டால், அடுத்த அடுத்த பத்துக்கள்

*இதனிலும் சுவையில் விஞ்சி நிற்கக் காண்கிறோம். இறைவனுடைய பெருந்தகுதியையும், தமது தகுதியின்மையும் தகுதியற்ற தமக்கு எளிவந்த அவனுடைய எளிமையயும் இவர் திருவாசகத் திற்போல, விரித்து உரைத்து உரைத்து உருகுகிறார். இவர் அரசர் என்பதையும் நாம் நினைவில் வைக்க வேண்டும். சமயத் தத்துவக் கருத்துக்களையும் ஆங்காங்கு செம்மையுறப் புலப்படுத்திச் செல்கின்றார்:*

எவன் உயிர்க்குயிரா யெள்ளும் எண்ணெயும் போல்
  எங்கணும் இடையறா நின்றான்,
எவன் அனைத்துலகும் ஈன்று காத்தழிக்க
  இறைமை சால் மூவுரு வெடுத்தான்.

எவன் முதலிடை யீறின்றி எஞ்ஞான்றும்
  ஈறிலா மறைமடியிருப்பான்,
அவன் எனைப் புரக்கத் திருக்களா நீழல்
  அமர்ந்தருள் புரிந்த காரணனே.

என்னை யாள்பவன் என்னுள் ளிருப்பவன்,
தன்னை யான்தொழத் தண்ணளி தந்தவன்,
பொன்னையாளும் புயன் தொழ நின்றவன்
கன்னி பாகன், கருவைக் கிறைவனே.

உணராத நின்னிலையை நீயுணர்த்த உணர்ந்தற்பின்
புணராத தாடலையிற் புணர்ந்ததெனப் புகழோங்கத்
தணவாமல் எனையுனக்குத் தந்துருகி இரண்டற் றேன்
பணராசச் சிலம்பணிந்த பழமறையெம் பெருமானே.

*இறைவன்பால் பத்தியே வேண்டும், வேறு போகங்கள் வேண் டாம். மூத்திகூட வேண்டாம் என்று பக்தர் பாடுவதைக் காண்கிறோம். இவரும் சொல்கிறார்.*

உத்தி வாளரா முடித்த பால் வண்ணனே யுனது
பத்தி வேண்டுவ தன்றியே நரகிடைப் படினும்
முத்தி வேண்டிலேன் துறக்கமும் வேண்டிலேன், முனிவர்
சித்தி வேண்டிலேன், வேண்டிலேன், திசாதிபர் சிறப்பே.

சிறக்கத் தக்கது கருவையான் திருவடி நேயம்;
மறக்கத் தக்கது மற்றுள சமயத்தின் மயக்கம்;
துறக்கத் தக்கது இவ்வுடம்பை யானென்றுறு தொடர்பு;
பிறக்கத் தக்க்து, சிவானந்த வாரியின் பெருக்கே.

இறுதிப் பத்தாகிய போற்றி என்ற பத்து, திருச்சதகத்தில் இதே போல மாணிக்கவாசகர் பாடியுள்ள போற்றிப் பத்தை ஒத்தே இருக்கிறது. திருச்சதகமும் ஒரு பதிற்றுப் பத்தந்தாதி. இரண்டையும் வைத்து ஒப்பு நோக்கும்போது வரதுங்கராமர் தமக்கு அத் திருச்சதகத்தையே மூலமாய்க் கொண்டாரேன்று சொல்லத் தோன்றுகிறது.

இனி இவருடைய மற்ற ஈரந்தாதிகளையும் ஒரு சேரவைத்துப் பார்க்கும்போது, இவ்வந்தாதி விருத்தப் பாக்களால் இயன்றுள் ளமையால் பெரிதும் இசைக்கு இடம் கொடுப்பது. இவ்விசைத் தன்மையும் கலந்து இவ்வந்ததாதியைப் பின்னும் உருக்கமும் குழைவும் உடையதாய்ச் செய்திருக்கிறது.

**திருக்கருவைக் கலித்துறை அந்தாதி**

விநாயகர் காப்பும் 100 கட்டளைக் கலித்துறைகளும் உடையது. பக்திச் சுவை பொங்கித் ததும்புவதைப் பாடல் தோறும் காணலாம். பின்வருவன சில எடுத்துக் காட்டுக்கள்.

வாழ்த்திட நாவுண்டு, பாவிக்க நீயுண்டு மண்ணிலுறத்
தாழ்த்திடச் சென்னியு முண்டுகண் டாய், தண்களவின்மலர்
ஊழ்த்திட நீழ லுறைவார் அடியண்டு உனை நிரயம்
வீழ்த்திடு வாருமுண்டோ நெஞ்சமே, என் மெலிவதுவே?

வழுத்துதல் போற்றல் வணங்கல் குழைதல் மகிழ்தல் நெஞ்சிற்
பழுத்தஅன் புற்றுப் பலகால் உருகுதல் பாவனை போய்
முழுத்த இன்பக்கடல் மூழ்கிக் களித்தல், முகலிங்கன் தாள்
அழுத்த என் சென்னி கொடுத்தபின் பெற்ற ததிசயமே.

கருத்தறு மாயை இருளுக்குத் தீபம்: கழி பிறவிப்
பெருத்தெழு நோவுக்கு அமிர்த சஞ்சீவினி, பேதித்துள்ளம்
வருத்திடு துன்பத் திரைவா ரிதிக்கு வடவை, மன்றத்
தருத்தியின் ஆடும் கருவைப் பிரான்திரு அஞ்செழுத்தே.

பாடுவ துன்திரு நாமங்கள், நாடொறும் பத்தி செய்து
சூடுவ துன்பொற் றிருவடித் தாமரை, தொண்டு செய்து
கூடுவ துன்னடி யார்திருக் கூட்டம், அக் கூட்டத்துடன்
ஆடுவ துன்னிலை காண், கரு வாபுரி நாயகனே.

இவ்வந்தாதியை இவர் இளமை கழிந்த பின் பாடினார் என்று கருத ஒரு பாடல் இடங் கொடுக்கிறது.

புகுவது மூப்பு, வனப்போ டிளமையும் போயது, இனி
மிகுவது நோயும் துயருமென் றால், அடன் மேவலரூர்
நகுவதன் முன்னெரித் தோர்கள வீசரை நாம்பணியத்
தகுவது காண்நெஞ்ச மே, இது போலுஞ் சதுரில்லையே.

*கனவில் வந்து தேசிகனாய் ஆண்டு அருள் செய்தான், தனது புகழைப் பாடும் புலமையும் அளித்துத் தொண்டு கொண்டான் என்று பாடுகிறார்:*

தேசிக னாகக் கனவில் வந் தாண்டருள் செய்தவட
காசியன், எங்கள் கருவைப் பிரான், கவைக் கோட்டுவிடை
வாசியன், ஒப்பனை பாகன்என் றேத்திஎன் வாய்திறந்து
பேசிய போதுள்ளம் ஆனந்த வாரி பெருகியதே.

அல்லும் பகலு மொழியாது தம்புக ழாதரித்துச்
சொல்லும் படிக்குக் கவிநா வளித்தெனைத் தொண்டுகொண்டார்,

வல்லுங் குழைமுலை யொப்பனை பாகர், வரிசிலையாக்
கல்லுங் குழைத்த புயத்தர், களாநிழற் கண்ணுதலே.

*வரதுங்கராமர், தம் தம்பி அதிவீரராம பாண்டியர் செய்த நைடதத்தைப் பார்த்து, 'நம் தம்பியும் மற்றோர் மண்ணுலகின் மன்னனைப் பாடுவதா?' என்று இரங்கிப் பாடியதாகக் கூறும் பாடல், 'சங்கக் குழையனை' என்ற இதிலுள்ள 56ஆம் பாடல். மூவர் தமிழ் மாலையைக் குறிப்பிடுகிறார். அப்பாடல் சாத்திய இடத்துத் தாம் பாடல் சாத்துவது, பஞ்ச காக்களின் நாண்மலர் புனைபவர் எருக்கம் பூவும் சூடுவது போல என்கிறார் (42):*

ஏத்திய மூவர் தமிழ்மாலை சாத்து மிணையடிக்கென்
நாத்தரும் புன்சொற் றொடைபுனை வாய்செம்பொ னாட்டிலைந்து
காத்தரு நாண்மலர் சூடும் புரிசடைக் காட்டெருக்கம்
பூத்தரு மாலை புனைகள வீச புராந்தகனே.

*'வேலன் கவியை அன்பால் கல்லாதவர், கூற்றன் விடுங்கயிற்றால் கழுத்திற் சுருக்கிட்டு இழுக்குமன்றோ கவி கற்கின்றது' என்று அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தில் கேட்கிறார். அதையே எடுத்து இவரும் சொல்கிறார் (89):*

அழுக்கற்ற நெஞ்சிலும் பொன்னம் பலத்தும் அமர்ந்துநின்ற
முழுக்கற்றை யஞ்சடி லக்கள வீசனை முன்னியன்பு
பழுக்கத் திருத்தொண்டு செய்யார்கள் கால படர்நரகுக்
கிழுக்க கழுத்திற் கயிறிடும் போதுமற் றென்செய்வரே.

*எல்லாம் இறைவன் செயலே என்று உணராதவர், நன்மை வந்தால் தாம் என்றும் தீமை வந்தால் விதி என்றும் கருதுகின்றனர் (83, 90):*

தளர்வுவந் தெய்தின் விதியினை நோவர், தழைக்குஞ்செல்வக்
கிளர்வுவந் தெய்திற் றமைத்தாம் புகழ்வர்; கிளைத்தபசுந்
துளவுவந் தோனும் முளரிவந் தோனும் துதித்து நிற்பக்
களவுவந் தோன் செய்த கற்பனை யீதென்று காண்கிலரே.

என்செய லாவது யாதொன்று மில்லை, மற் றியான் புரிதல்
நின் செயலாக நினைவளித் தாய், உன்னில் நீக்கமற்றேன்,
புன்செய் லீதென்றும் நன்செய லீதென்றும் புந்திசெய்யேன்,
உன் செயல் யாவுமென்றே கரு வேச, உளந்தெளிந்தே.

*ஐயாறன் அடித்தலம் தொழுவோர்க்குப் பொன்னுலகாள ஏணிப் படிநெறியிட்டுக் கொடுக்கும் என்று அப்பர் சுவாமிகள் பாடுகிறார்:*

பேணித் தொழுமவர் பொன்னுல காளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்திமை யோர் முடிமேல்
மாணிக்கம் ஒத்து மரகதம் போன்று வயிரம்மன்னி
ஆணிக் கனகமும் ஒக்கும் ஐயாறன் அடித்தலமே.

*அதையெடுத்து நம் அரசர், களவீசர் பொற்பாதங்களுக் கேற்றிச் சொல்கிறார் (16):*

விண்ணிடு வில்லும் புனன்மேற் குமிழியும் மின்னுமென்ன
மண்ணிடைத் தோன்றி யழியுமிக் காயத்தை மாய்விலதென்
றெண்ணிடு மெண்ணந் தவிர்த்தழி யாமுத்தி யேறுதற்குப்
பண்ணிடும் ஏணிகண் டீர், கள வீசர் பொற் பாதங்களே.

முத்திக் கொருவித்து, மோகா டவிக்கு முழங்குசெந்தீ,
சித்தக் கவலைப் பிணிக்கோர் மருந்து, சிவதவஞ்சேர்
புத்திக் கொடிக்குப் படருங்கொழு கொம்பு போலுங்கண்டீர் –
துத்திப் பணியணி யுங்கள வீசர் துணையடியே.

### திருக்கருவை வெண்பா அந்தாதி

*காப்பும் 100 நேரிசை வெண்பாக்களும் உடையது. முந்தியது போன்ற பக்திச் சுவையும் சொற்சுவையும் தொடை நயமும் சிறக்கப் பொருந்தியது. எடுத்துக்காட்டாகச் சில பாடல்களைக் கீழே காண்க:*

என்னெஞ்சில் வைத்தற் கினியதவம் யாதுசெய்தேன்!
பொன்னஞ் சிலையாற் புரமெரித்த — முன்னவனே,
அன்னம் பயில்கருவை யானே, அரவுதொழப்
பொன்னம் பலத்தாடும் பூ. 5

சிவகருமஞ் செய்யார், திருநீறு சாத்தார்:
தவநிலையாஞ் சைவநெறி சாரார் — அவனி தனிற்
கான்பரந்த பச்சைக்களா நிழலைக் கைதொழார்
ஏன்பிறந்தார் மானிடராய் இன்று. 18

பேறு பெற்றேன், வாழ்ந்தேன், பிறவிக் கினியஞ்சேன்,
ஆறுபெற்ற வேணியனுக் காட்பட்டேன், நூறுவட்டம்
சிந்தித்தேன், தெய்வத் திருக்களவைக் கைகூப்பி
வந்தித்தேன், தீர்ந்தேன் மயல். 27

*இங்கும் இவர் களவீசர் தம்மைக் கவிபாடச் செய்ததைக் குறிப் பிட்டுப் பாடுகிறார்:*

சேணிற் கொடி நுடங்கும் தென் கருவை யம்மானே
கோணைப் பிறையணியும் கோமானே — பேணித்
தொடுக்கும் கவிதைத் தொழும்பனுக்கு வந்த
இடுக்கண் களையாத தென்?

நன்கவிஞ னாகவியன் நாவளித்து நாடோறும்
தன்கழலே பாடும் தரமளித்தான் — நன்கவைத்த
சூலத்தான், தென்பொதியத் தொல்லோன் தொழுதமணக்
கோலத்தான், தென்கருவைக் கோ. 37

*யாக்கை நிலையாமையை இரண்டு பாடல்களில் நன்கு புலப் படுத்துகிறார்.*

உயிரிறந்த பொய்க்காட்டை உற்றார் எடுத்து
வயிரவிற கில்தீ மடுத்துப் — பெயரழியச்
சுட்டுநீ றாக்குமுனம் சொல்வீர் கருவை மன்றில்
நட்டமிடும் காலின் நலம். 72

தாரம் மனைமட்டும், தனையறிந்தோர் ஊர்மட்டும்,
சேரும் உறவு அவ்வூர்த் தெருமட்டும் — சார்வதன்றி
நங்கருவை யானென்ற நல்வினைபோல் செல்கதியின்
எங்குமுத வாரே இவர். 74

*பெருமான் திருவுருவத்தை ஒரு பாடலில் படம் பிடித்துக் காட்டுகிறார்.*

இறைப்பொழுதும் நீங்கா திருகண்ணும் நெஞ்சும்
கறைக்களமும் செஞ்சடிலக் காடும் – பிறைக்கொழுந்தும்
புண்டரிக வாண்முகமும் பூங்களவின் நீழலோன்
ஒண்தரளப் புன்மூர லும்.

*இவ்வந்ததாதியில் பவுரி என்ற சொல் பலமுறை பயில்கிறது. வெறும் கல்வியினால் பயனில்லை என்பது ஒரு பாடல்:*

சென்றது காலம், சிதைந்தது இளமை நலம்,
நின்றதுசா வென்று நினைந்துருகி – மன்றில்
நடிக்கின்ற பால்வண்ணன் நாமமெண்ணா மாந்தர்
படிக்கின்ற நூலெல்லாம் பாழ்.

*வரதுங்கராமரது கவிதையையும் (இவ்வந்தாதிகளிலும் பிரமோத்தர காண்டத்திலும்), பக்தி விசேடத்தையும் அக்காலத்தோரே நன்குணர்ந்திருந்தார்கள். இவர் அவையில் புலவர் பலர் இருந்தனர் என்று முன்னே குறிப்பிட்டோம். ஒருவர் பாடிய பாடல்:*

பூணித் திலத்துப் புயவீர மாறன் புகல்கவிக்கு
நாணிப் புலவர்செல் லாதென்செய் வார், இந்த நானிலத்தே
ஆணிக் கனகம் மணந்தரிற் பூமணம் யார் கொள்ளுவார்?
மாணிக்கந் தித்திக்கில் என்னாகும் மற்றை மதுரங்களே?

*வீரமாறன் - வீரபாண்டியன் என்று பெயர் புனைந்திருந்த வரதுங்கராமர்; பட்டமெய்துமுன் இவர் பெயர்கள் அழகிய சொக்கனார், அபிராமன், வரதுங்கராமன்; அபிரமாசுந்த ரேசுவரன்; பட்டமெய்திய பின் வீரமாறன், அபிடேக வீர பாண்டியன். மங்கலங்கள் பாடிய காசிக்கலியன் கவிராயரே இப்பாடல் பாடியிருத்தல் கூடும்.*

*இங்ஙனமாக, இம்மூன்று அந்தாதிகளும் ஓர் அரசர் பாடித் தந்தமை, சைவ உலகுக்குக் கிடைத்தற்கரிய ஒரு பக்திக் கருவூலம். ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர் தொடங்கிப் பக்திப் பாசுரங்கள் இடையறாது தமிழ் மொழியை வளம்படுத்தி வந்துள்ளன என்பதற்கு இவையும் சிறந்த சான்று.*

## குகை நமசிவாயர்

திருவண்ணாமலையில் ஒரு சித்தராக இவர் ஒரு மலைக் குகையில்* எந்த நேரமும் நிட்டையிலேயே இருந்து வந்தமையால் இப்பெயர் பெற்றார். இவர் வரலாறெதுவும் விளங்கவில்லை. ஆனால் இவர் தம்மிடம் வந்து பணிவிடை செய்திருந்த மாணாக்கரொருவருக்குக் குரு நமசிவாயம் என்று பெயரிட்டு, அவரைச் சென்று தில்லையில் திருப்பணிகள் செய்யுமாறு பணித்தனுப்பினார். அவர் வரலாறுகள் பின்னும் அதிகமாகப் பயில்கின்றன. அவர் காலம் பின்னுள்ள குறிப்புகளால் 16ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதி என்பது விளங்கும். எனவே இவர் காலமும், இந்த நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இவர் செய்தன வாகத் தெரியும் நூல்கள் இரண்டு: அருணகிரியந்தாதி, தனி வெண்பாமாலை என்பன. பொதுவாக இவ்விரு நமசிவாயர் நூல்களும் அருணாசலேசர் பிரபந்தத் திரட்டு என்ற பெயரால் திருவண்ணாமலைப் புராணமாகிய அருணாசல புராணத்தோடு சேர்த்தே பதிப்பித்திருக்கக் காணலாம். இப்பதிப்பே இவ்விருவர் வரலாறுகளுக்கும் ஆதாரம். ‘தெய்விகம் விளங்கிய’ என்ற அடையுடன் சேர்த்தே இவர் பெயர் வழங்கப்பெறும்.

இவர் கன்னட நாட்டில் ஓரிடத்தில் நிலையில்லாது எங்கும் திரிந்து கொண்டிருந்த சித்தர் என்பர்; உண்மையன்று, மல்லி கார்ச்சுனம் தரிசித்துவிட்டுத் தெற்கே சிவஸ்தல யாத்திரை செய்து வருகிறேன் என்று குருவினிடம் அனுமதி பெற்றுத் தமிழ் நாட்டில் சஞ்சரித்துத் திருவண்ணாமலை யடைந்தபோது, அங்கு அண்ணாமலையார் இவருடைய குரு வடிவாக வந்து அருள் செய்தார். அதை நினைந்து இவர் அங்கேயே ஒரு குகையில் தங்கிப் புகழுடையவராய் விளங்கியபோது பாடிய நூல் அருணகிரி யந்தாதி. ஆலமரத்தில் ஊஞ்சல் கட்டி அதிலேயே யோக நித்திரை கொண்டிருந்தார் என்றும் சொல்வதுண்டு.

திருவண்ணாமலை சைவசமயத்தில் சிறப்புமிக்கது. பஞ்ச பூத ஸ்தலங்களில் இது தேயுஸ்தலம். பரம்பொருள் ஒரு சோதி வடிவாய் வெளிப்பட்ட தலம். மாணிக்கவாசகர் திருவெம் பாவையை இங்கு பாடினார் என்பது வரலாறு. சற்றே முந்திய காலத்தில் அருணகிரிநாதர் இங்கு வாழ்ந்திருந்து திருப்புகழ்

* குகை என்பது பிராமணரல்லாத சைவத் துறவிகள் வாழ்ந்த இடம் என்று ஆன்றோர் சொல்வர்.

பாடினார். நம் காலத்தில் ரமண மகரிஷிகள் இங்கு தங்கியிருந்து சித்தி பெற்றார் என்ற வரலாறும் நாம் அறிவோம். எனவே இத்தலம் பெருஞ்சித்தியுடையோர் தொடர்புகொண்ட தலம் என்பது தெளிவு.

இந்நமசிவாயர் இருவரும் வீர சைவர் என்பவர். அடுத்து மிக்க புகழோடு விளங்கிய சிவப்பிரகாச சுவாமிகளுடைய தம்பி யாகிய கருணைப்பிரகாசர் குகை நமசிவாயர் சரித்திரத்தைக் குகை நமச்சிவாய லீலை என்ற பெயரில் விரிந்த நூலாகப் பாடினார் என்று, சிவப்பிரகாசர் சகோதரர் மூவரும் பாடிய நூல்களைத் தொகுத்துக் கூறும் ‘தெருள் சிவப்பிரகாச அடிகள் அருளிய நூல்கள்’ என்று தொடங்கும் நீண்ட ஆசிரிய விருத்தப் பாடல் கூறும். ஆனால் அந்நூல் இன்று கிடைப்பதாகத் தெரிய வில்லை. அந்நூல் ஒன்று தோன்றியிருப்பதே நமசிவாயரின் பெருமைக்கு எடுத்துக்காட்டு.

### அருணகிரி அந்தாதி

காப்பும் 100 வெண்பாக்களும் உடையது. பக்திச் சுவை மிக்கது. தாம் குகைகளிற் சென்று திரிந்ததையும் ஒரு பாடலில் குறிப்பிடுகிறார்.

**என்றும் அருணேசன் இருபதத்தை நம்பாதார்**
**குன்றில் வனத்தில் குகையதனில் – சென்று**
**திரிந்தேன், பலமருந்து தின்று சில காலம்**
**இருந்தேன், இராமல் இருந் தேன்.**

அன்னமிட வேண்டும் என்பதைப் பலமுறை வற்புறுத்திச் சொல் கிறார். சாகாவரம் பற்றி இரு பாடல்கள் பாடியிருக்கிறார்: சாகாவரம் என்று தருவாய் - அக்கமாலை கொடு நாவார ஐந் தெழுத்தை எண்ணினால், சாகாவரம் பெறலாம். இங்கெல்லாம் இவர் கருத்து, உயிர் மீண்டும் பிறப்பெடுக்காது சிவபெரு மானுடைய திருவருளிலே தோய்ந்து பேரானந்தம் பெறலாம் என்பதே; இந்தப் பூத உடல் சாகாமற் காப்பாற்றுவது என்ப தல்ல எனத் தெரிகிறது.

சிவபிரானுக்கு அவதாரமில்லை என்பதைக் குறிப்பிடுகிறார்.

**எல்லார் பிறப்பும் இறப்பும்இயற் பாவலர்தம்**
**சொல்லால் தெளிந்தோம்; நம் சோணேசர் – இல்லிற்**
**பிறந்தகதை யும்கேளேம், பேருலகில் வாழ்ந்துண்டு**
**இறந்தகதை யும்கேட்டி லேம்.** 70

*மூவர் செய்த அற்புதங்களை இரு பாடல்களில் குறிப்பிடுகிறார்; மாணிக்கவாசகரைக் குறிப்பிடவில்லை.*

வன் பெருக்கிற் கல்மிதக்கும், வாய் முதலை பிள்ளை தரும்,
என்புருக்கொள் பெண்ணா யிருக்குமே, – அன்பருக்கு
நாட்டு குரு சோணகிரி நாதனடி யார்மூவர்
பாட்டினிசை கேட்ட பரம். 16

வெய்ய பிறவிதனை வேரறுக்கும், சோணகிரி
ஐயரடி யார்பாட்டிற் கல்லாமல், – துய்யகரா
வாய்க்குமோ பிள்ளையும், தண் வாரிதியிற் கல்மிதந்து,
காய்க்குமோ ஆண்பனையும் காய். 23

*பின்வரும் பாடல் நன்கு தெரிந்தது:*

சும்மா கிடைக்குமோ சோணாசலன் பாதம்
அம்மால் விரிஞ்சன் அறிகிலார், – நம்மால்
இருந்துகதை சொன்னக்கால் என்னாகும் நெஞ்சே!
பொருந்த நினையாத போது. 64

*பின்வரும் பாடல் இவ்வந்தாதிக்குரிய சிறப்புப் பாயிரமாகும்:*

அருணகிரி அந்தாதி அழகு வெண்பா நூறும்
கருணையுடன் கற்றோரைக் கண்டால் – அருணையண்ணல்
வீறான பொன்னுலகை வேந்தனுக்கு மாற்றியங்கே
மாறாக் கொடுப்பார் மகிழ்ந்து.

## திருவருணைத் தனி வெண்பா

*இது 35 வெண்பாக்களின் தொகுப்பு. குகை நமசிவாயர் அண்ணாமலையாரைத் தரிசித்த போதெல்லாம் தினம் ஒரு வெண்பாப் பாடித் துதித்தார் என்று அவர் மாணாக்கர் குரு நமசிவாயர் சொல்லுகிறார்.* அருணிகிரியந்தாதியும் இவ்வெண் பாக்களுமே அப்படி பாடப்பெற்றவையாகலாம். தனி வெண் பாக்களில் ஒன்று:*

வீடுதரும் சோணகிரி வித்தகனார் சத்தியுடன்
நீடுதே ரேறியவர் நிற்கின்றார் – ஓடி
வடம்பிடிக்க வாருங்கள் வந்தவர்க்கு முத்தி
யிடம் கிடைக்கும் பாருங்கள் இன்று.

---

* *அண்ணாமலை வெண்பா 7.*

*இப்பாடலின் பொருளைத் தழுவிப் பிற்காலத்தில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் திருவரங்கர் தேரில் ஏறுவது பற்றி, 'ஒன்று மறியாத ஊமர்காள்' என்று தொடங்கும் பாடல் பாடினார்:*

**ஒன்றும் அறியாத ஊமர்காள், தென்னரங்கர்**
**இன்று திருத்தேரில் ஏறினார்; – நின்று**
**வடம்பிடிக்க வாருங்கோள், வைகுந்த நாட்டில்**
**இடம்பிடிக்க வேண்டுவீர், இங்கு.**

*அண்ணாமலையார் குருவடிவாக வந்து இவருக்கு உபதேசித்து ஆட்கொண்டார் என்று குறிப்பிட்டோம். இவருடைய குருவின் பெயர் ஓம் நமசிவாய குரு என்றும், அப்பெயரையே இவர் தம் மாணாக்கருக்கு இட்டார் என்றும் 11ஆம் பாடலால் கருத இடமுண்டு:*

**மானமிலி, பொய்யன், மனங்கனிவி லாத புத்தி**
**ஈனன்இவன் என்றும் இகழாதே, – ஞான**
**உருவே, அருணகிரி ஓம்நமசி வாய**
**குருவே, எனையாண்டு கொள்.**

*ஆனால் குருநமசிவாயர் தம் அண்ணாமலை வெண்பாவில், குகை நமசிவாயரையே ஓம் நமசிவாய குரு என்று பல முறை கூறுதவால், இவரே ஓம் நமசிவாய குரு என்றும், இப்பாடல் பிறழ்வாக இங்கே சேர்க்கப்பட்டதென்றும் நாம் கருதவேண்டும்.*

*'அங்கனையார் மேல் வைத்த ஆசையிலே நூற்றிலொரு பங்கு அருணை ஈசன் மேல் பற்றினால் பேரின்பம் பெறலாம்' என்று இவர் கூறுவது (7), 'தத்தையங் கனையார்' என்ற கருவூர்த் தேவர் கங்கை கொண்ட சோழேச்சுரத் திருவிசைப்பாப் பாடலின் கருத்தாகும். 'மானிடரைத் தூண்டிலிட ஒரு எக்கலாதேவி தோன்றினாள்' என்று இவர் கூறுவது, தலத்து அம்பிகையைச் சிறுதேவதையாகிய எக்கலாதேவியுடன் ஒப்பிட்டுச் சொல்வது போலும் (26). குற்றலரிசி குறைந்தது, வெற்றிலைக்குக் கேடு, ஐம்பதரைக் காசுக்கு எண்ணி விற்றது என்றெல்லாம் இவர் குறிப்பிடுவது (27) இவரது வாழ்க்கைக் குறிப்புக்கள் போலும்; விளக்கம் கிடைக்கவில்லை. இப்பாடல்கள் தனி வெண்பாமாலை என்றும் வழங்கப்பெற்றன.*

# குரு நமசிவாயர்

## வரலாறு

இவர் வரலாறு அருணாசல புராணப் பதிப்புக்களில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. பின்வருவது அதைத் தழுவியதேயாகும். இவர் குகைநமசிவாய தேசிகருடைய சீடராய் உடனுறைந்து வந்த நாளிலே பல அற்புதங்கள் நிகழ்ந்தன. ஒருநாள் பணிவிடையின் நடுவே இச்சீடர் குலுக்கென்று நகைக்க, 'ஏன் நகைத்தாய்?' என்று நமசிவாயர் கேட்டார். 'திருவாரூரில் சுவாமி வீதியுலா வந்தபோது தேவதாசிப் பெண்கள் நடனமாடி வர, ஒரு பெண் தடுக்கி விழவும் பார்த்தவர்கள் நகைக்க, அடியேனும் நகைத்தேன்' என்றார். மற்றொரு சமயம் இவர் தமது உத்தரியத்தைப் பிடித்துத் தேய்க்க 'ஏன்' என்று ஆசிரியர் கேட்கவும், 'தில்லைக் கனகசபையில் விளக்கின் த்ரியை எலி இழுத்துச் செல்ல, எரிந்து கொண்டிருந்த திரியிலிருந்து திரையில் தீப் பற்றவும், உடனிருந்தவர் அணைக்க அடியேனும் அணைத்தேன்' என்றார். இவருடைய பக்குவம் உணர்ந்த ஆசிரியர் இவரைச் சோதனை செய்ய எண்ணி வாந்தி எடுத்து அதை ஓர் ஓட்டில் பிடித்து, இதை மனிதர் கால் படாத இடத்தில் விடு என்று சொல்லிக் கொடுக்கவும் இவர் அதை வாங்கிக் கால்படாத இடம் வயிறு என்று துணிந்து உட்கொண்டு விட்டார். குரு இவரைப் பார்த்து 'கால்படாத இடத்தில் வைத்தாயா?' என்று கேட்க, 'வைக்கும் இடத்தில் வைத்தேன்' என்று இவர் கூறினார். இவருடைய பக்குவத்தை நன்கு புரிந்து கொண்ட ஆசிரியர் பின்வரும் அரைப் பாடலைப் பாடி அதைப் பூர்த்தி செய்யுமாறு சீடருக்குச் சொன்னார்.

**ஆல் பழுத்துப் பக்கியினுக் காகார மானதென**
**வேல் பழுத்து நின்ற நிலை வீணிலென –**

சீடர் பூர்த்தி செய்தார் (பக்கி-பட்சி),

**சாலவனச்**
**செய்யா, ஒருத்தருடன் சேர்ந்தும் இருப்பீரோ**
**ஐயா நமசிவா யா,**

உடனே ஆசிரியர் இவருக்கு குருநமசிவாயர் என்று பட்டம் சூட்டி போகஸ்தலமாகிய திருவண்ணாமலையை விட்டு ஞானஸ்

தலமாகிய சிதம்பரம் அடைந்து அங்கு நடராச தரிசனம் செய்து கொண்டிருந்து ஆலயத் திருப்பணி செய்து வருமாறு பணித்தார். அவ்வாறே சீடரான குரு நமசிவாயர் புறப்பட்டுச் சென்றபோது, வழியில் பசி மேலிட்டுத் திருவண்ணாமலை உண்ணாமுலை அம்மையாரை நோக்கி,

**அண்ணா மலையார் அகத்துக் கினியாளே,**
**உண்ணா முலையே, உமையாளே, – நண்ணா**
**நினைதோறும் போற்றிசெய நின்னடியார் உண்ண**
**மனைதோறுஞ் சோறு கொண்டுவா.**

என்ற பாடலைப் பாடவும், அம்மையார் தம் சந்நிதியிலிருந்த ஒரு பொன்தட்டில் நிவேதன உணவு கொண்டு வந்து தந்தார். இவர் உண்டு இருந்த காலை, கோயில் அர்ச்சகர் பொன் தட்டைக் காணாது தேடி அண்ணாமலைப் பெருமான் குறிப்பின் படி இங்கு வந்து இவருடைய பெருமையறிந்து, பெற்றுச் சென்றார்கள். மற்றொரு சமயம் இவர் பசித்தபோது, குறித்த தலத்தில் மூர்த்தி அர்த்த நாரீசுவரராய் இருக்க, இவர் அம்பிகையை மட்டும் நோக்கிப் பின்வருமாறு பாடினார்,

**தாயிருக்கப் பிள்ளை தளருமோ, தாரணியில்**
**நீயிருக்க நான்தளரல் நீதியோ? – வேயிருக்கும்**
**தோளியே, விண்ணோர் துதிக்குந் திருமுத்து**
**வாளியே, சோறு கொண்டு வா.**

அம்பிகை வந்து, அர்த்த நாரீசுவரரைக் குறித்த பாடலை இவ்வாறு பிரித்துப் பாடலாமா என்று கேட்டபோது இவர் மீண்டும் பாடினார்.

**மின்னும்படி வந்த மேககளத் தீசருடன்**
**மன்னுந் திருமுத்து வாளியே, – பொன்னின்**
**கலையாளே, தாயே, என் கன் மனத்தே நின்ற**
**மலையாளே, சோறு கொண்டு வா.**

என்று பாடவும் அம்பிகை உணவு கொடுக்க உண்டார். இவ்வாறு இவருடைய வரலாற்றில் அம்பிகையை வேண்டி உணவு பெற்ற செய்திகள் பல. திருமுதுகுன்றில் பெரிய நாயகியைக் கிழத்தி என்று பாடவும், அம்பிகை வந்து தம்மைப் பாலாம்பிகையாகப் பாடும்படி சொல்ல, அவ்வாறே இவர் பாடினார். பாடல்கள் பின்வருவன,

நன்றிபுனை யும் பெரிய நாயகியெ னுங்கிழத்தி
என்றுஞ் சிவன்பா லிடக்கிழத்தி – நின்ற
நிலக்கிழத்தி, மேனிமுழு நீலக் கிழத்தி,
மலைக்கிழத்தி, சோறு கொண்டு வா.

முத்தநதி சூழும் முதுகுன் றுறைவாளே,
பத்தர் பணியும் பதத்தாளே – அத்தர்
இடத்தாளே, மூவா முலைமேலே யூரும்
வடத்தாளே சோறு கொண்டு வா.

*சிதம்பரம் நோக்கி வந்தவர் புவனகிரி என்ற இடமடைந்து தில்லைக் கோபுரங்கள் நான்கையும் தரிசித்துப் பாடினார்.*

கோபுரங்கள் நான்கினையுங் கண்டமட்டிற் குற்றமெலாந்
தீபரந்த பஞ்சதுபோற் சென்றதே, – நூபுரங்கள்
ஆர்க்கின்ற செஞ்சரண அம்பலவா, நின்பரதம்
பார்க்கின்றார்க் கென்னோ பலன்.

*தில்லையடைந்து சிவகங்கையில் நீராடி, தீர்த்த மகிமை குறித்து மீண்டும் பாடினார்.*

கண்டமட்டிற் கண்டவினை காதம்போம், கையிலள்ளிக்
கொண்டமட்டிற் கொண்டவினை கொள்ளைபோம் – வண்தமிழ்சேர்
வாயாரவே புகழும் வண்ணச் சிவகாமித்
தாயார் திருமஞ் சனம்.

*நடராச தரிசனம் செய்தபோது, இவரது குருவாகிய குகை நமசிவாயராக நடராசர் கோலம் காட்டினார். அப்போது இவர் பாடியது:*

திருவணா மலையிற் குகைநம சிவாய
    தேசிக வடிவமா யிருந்து
கரவனா மடியேன் சென்னிமே லுனது
    கழலிணை வைத்தவா றுணரேன்
விரகநா ரியரைப் புதல்வரைப் பொருளை
    வேண்டிய வேண்டிய தனைத்தும்
பரவினார் புகழ்வார்க் களித்திடும் பொன்னம்
    பலவனே பரமராசியனே.

*இவ்வாறு இவர் பாடிய பாடல்கள் நூறு; இப்பாடல்களின் தொகுதி பரமராசிய மாலை எனப்படும். பின்னர், சிவகாமி அம்மையை வேண்டி உணவு பெற்றார், அம்மையும் ஒரு பாடல் சொல்லி உணவு அளித்தார் என்று கதை கூறும்.*

ஊன்பயிலுங் காயம் உலராமல் உன்றனது
வான்பயிலும் பொன்னடியை வாழ்த்துவேன், – தேன்பயிலும்
சொல்லியல் நல்லார் துதிக்கும் சிவகாம
வல்லியே, சோறு கொண்டு வா.

கொண்டு வந்தேன் சோறு; குகை நமசி வாயரது
தொண்ட ரடியார் சுகிக்கவே – பண்டுகந்த
பேய்ச்சி முலையுண்ட பெருமாளுடன் பிறந்த
நாய்ச்சி சிவகாமி நான்.

*பிறகு இவரால் திருப்பணி கொள்ள எண்ணித் தில்லையம்பலவர் இவரிடத்தில் சென்று நித்தியப்படி அன்னம் யாசித்துப் பெற்று மறுநாள் சிவிகையனுப்பி அழைத்து வரச் செய்தார். அச்சமயம் இவர் தம்மிடம் அம்பலவர் சங்கமராய் வந்ததையும் அவருடைய திருவுள்ளத்தையும் பாடிப் படிக்காசும் பெற்றார்.*

சங்கமராய் அம்பலவர் தாமே எழுந்தருளி
இங்கெமக்குப் பிச்சை இடுவென்ன – அங்கமுது
திட்டமுடன் நமக்கு நீதினமு மே சர்வ
கட்டளையுண் டாக்குகென்றார் காண்.

அல்லலாகிய இருவினை தனையறுத் தடியிணை தருவாரோ
மல்லனீடிய புவியின்மே லின்னமுன் வரும்பிறப் பறுப்பாரோ
நல்ல மாமுலை மாதுமை நாயகர் நாணிகை நவின் றேத்துந்
தில்லை நாயகர் அம்பலத் தாடுவார் திருவுளந் தெரியாதே.

காதலுடன் சர்வ கட்டளையாய் உன்னுடைய
பாதமலர்ப் பூசை பண்ணவே – யோது
குருவா யெனைத் தொண்டு கொண்டவனே, பிச்சை
தருவாய் சிதம்பர நாதா.

*பின்னர் இவர் சபாநாயகருக்கு எல்லா ஆபரணங்களையும் செய்வித்து அணியச் செய்து நடன தரிசனம் வேண்டுமென்று ஒரு பாடல் பாடினார்.*

அம்பலவா, ஓர்கால் ஆடினால் தாழ்வோமோ,
உம்பரெலாங் கண்டதெனக் கொப்பாமோ? – சம்புவே,
வெற்றிப் பதஞ்சலிக்கும் வெம்புலிக்கும் தித்தியென
ஒத்துப் பதஞ்சலிக்கு மோ.

*நடராசர் நடனமாடியதை எல்லாரும் கண்டார்கள். சிலம்பொலியும் கேட்டார்கள். இவர் துதித்தார்.*

மிதித்த பொற்பாதமும் எடுத்த பாதார
விந்தமும் சந்தவெம் புலித்தோல்
விளங்கிய விடையும் உந்தியும் சுழியும்
மேனிவெண் ணீற்றின தொளியும்
கதித்தநற் கனக மேருநான் கனைய
கனசதுர்ப் புயங்களுங் காள
கண்டமும் முகமும் சென்னியும் சரியே
- கண்டுகண் களிக்குநாள் உளதோ,
துதித்துக் கீதங்கள் பலர்புகழ்ந் தேத்தத்
தும்புரு நாரதர் பாடத்
துங்கமா மாயன் மத்தள மிடைமேற்
சுமந்துதொந் தோமென முழக்கத்
திதித்திதி தகுவென் றம்பிகை கௌரி
திகழ்திருத் தாளமொத் திசைப்பத்
தில்லையம் பலத்தே திருநடனம் புரியுந்
தேவனே சிதம்ப ரேசுரனே.

*சிறிது நேரம் தரிசனம் செய்தபின் இவர் பின்வரும் பாடல்களை விண்ணப்பித்துத் திருநடனத்தை நிறுத்தும்படி செய்தார்.*

தூக்கியகால் நோகாதோ, துட்டன் முயலகன்மேல்
தாக்கியகால் தானுஞ் சலியாதோ, – வாக்கா
தினவரதா தில்லைத் திருத்தாண்ட வாநீ
அனவரதங் கூத்தாடி னால்.

நகுதத்தா தாதகியென் னாடகத்திற் கேற்ற
தகுதித்தா ஞுஞ்சிலம்புந் தானா – மகுதப்பா
பாரே யினியமையும் பொன்னம் பலத்தால்
வாரே திருத்தாண்ட வம்.

*பார்த்திருந்த தில்லை மூவாயிரவர் இவருடைய பெருமையை உணர்ந்து அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு பாடல் பாடினார்கள்.*

வேடன் எச்சில் மிகவிருப்பும் வேளவன்தன் மேனிபொன்ற
வாடநித்தங் காளியொடா டம்பலவர் சந்நிதிக்குக்
கோடிலக்கங் கவிபாடுங் குரு நமசி வாயரருட்
பாடன் மெச்சி யம்பலவர் பாதகச்சை யாடியதே.

*இவருக்குத் தில்லையில் மிகுந்த திருப்பணிகள் செய்த பெருமை காரணமாகச் சிவிகை முதலான விருதுகள் எல்லாம் கொடுத்துக் கோயிலார் சிறப்பித்தார்கள். இவர் நெடுங்காலம் அங்கிருந்து*

தம் குருவின் கட்டளைப் பிரகாரம் எண்ணற்ற திருப்பணிகள் செய்து முடிவில் திருப்பெருந்துறையை யடைந்து அங்கு முத்தி யடைந்தார். இவர் வீரசைவர் என்றும் இலிங்காகாரம் ஆயினார் என்றும் சொல்லுவார்கள். முத்தியடைந்த நிலையைப் பின்வரும் பாடல் குறிப்பிடும்.

வந்தீச் வரவருடம் வைகாசி தேதிநவம்
இந்துநா ணாழிகை யேழரைமேல் – வந்தகுரு
தானாம் அருணகிரி தாணுசிவ லிங்கத்துள்
ஆனான் நமசிவா யன்.

அற்புதங்களைச் சொன்னால்தான் பெரியோருக்குப் பெருமை என்ற நம்பிக்கை மேலோங்கியிருந்த காலம்; 16ஆம் நூற்றாண்டுக் காலம். ஆகவே இவர் வாழ்க்கையில் மனித இயல்பைக் கடந்த தென்று கருதத்தக்க சில நிகழ்ச்சிகள் காணப்படும். இருப்பினும் குரு நமசிவாயர், குகை நமச்சிவாயர் மாணாக்கராய்த் திருவண்ணா மலையில் வாழ்ந்து அவர் கட்டளைப்படி சிதம்பரம் சென்று பல திருப்பணிகள் புரிந்ததும் சில தோத்திர நூல்களும் பாடியது உண்மையே.

**நூல்கள்**

இவர் பாடிய தனிப் பாடல்கள் பல; குகை நமசிவாயர் இவரைத் தில்லை செல்லக் கட்டளையிட்டபோது, இவர் பல பாடல்கள் பாடித் துதித்தார்; ஒன்று பின்வருவது,

வாக்காலே தியானத்தாலே மனமகிழ் கிருபையாலே
நோக்காலே பரிசத்தாலே நுண்ணிய பிறவி தீர்க்கும்
தாக்கான நமசிவாய, கலக்க மெய் யாடுகின்ற
நாற்காலி காலதானான் நான்முத்தி பெறலுமாமே.

நூல்களாகச் செய்தவை அண்ணாமலை வெண்பா, சிதம்பர வெண்பா, பரமராசிய மாலை, நமசிவாய மாலை, சிவக்ஷேத்திரக் கோவைக் கலிவெண்பா என்பன.

***அண்ணாமலை வெண்பா***

பாடல் தோறும் அண்ணாமலை என்று முடிகின்ற நூறு வெண்பாக்களும், காப்பு வெண்பாவொன்றும் நூற்பயன் கூறும் இரு வெண்பாக்களும் உடையது. அண்ணாமலை என்னென்ன பேறுகளையெல்லாம் தரும் என்று சொல்லிப் புகழ்வது ஓரளவு கவிதைச் சுவையும் அமைந்த பாடல்கள்.

**கண்டங் கரியமலை, கண் மூன் றுடைய மலை**
**அண்டர்களும் காண்டற் கரியமலை, –தொண்டர்க்குத்**
**தோற்றுமலை, நாளும் தொழுவார் எழுபிறப்பை**
**மாற்றுமலை – அண்ணா மலை.** 5

*அதிகமான பாடல்களில் தம் குருவைக் குறிப்பிடுகிறார்; 15 பாடல்கள். அவர் நாள்தோறும் அண்ணாமலை மீது ஒரு வெண்பாப் பாடும் நியமம் கொண்டிருந்தார் என்று பாடுகிறார்:*

**மாமா தவநமசி வாயன் தினமொருவெண்**
**பாமாலை சாத்திப் பணியுமலை, காமாதி**
**என்னுமலை, தான் கடந்தோர் இன்பத் திருவுளத்தே**
**மன்னுமலை அண்ணா மலை.** 7

*பின்னும், 'நண்பாக் குகையின் நமசிவாயன் கருத்தில் - வெண் பாப் பயிராய் விளையுமலை', 'வைத்த நிதியோம் நமசிவாய குரு நாடோறும் மெய்த் தமிழினாற் புகழ்ந்து மேவுமலை' என்றெல் லாம் பல இடங்களில் இதைக் குறிப்பிடுகிறார்.*

*ஓம் நமசிவாய குரு என்றே பத்திடங்களில் கூறுகிறார். குகை நமசிவாயர் என்று ஓர் இடம் - நண்பாக் குகையின் நமசி வாயன் கருத்தில் - வெண்பாப் பயிராய் விளையுமலை. சிவபிரான் சிம்புளாய் நரசிங்கத்தை அடக்கிய செய்தியைப் பலமுறை (2, 23, 41) குறிப்பிடுகிறார். பெரும்பான்மையான சிவபராக்கிரமங் களைப் பாடுகிறார். சோமயாசி மாறர் மகத்துக்குச் சிவபிரான் உமையோடு சென்ற புராணக் கதையையும் குறிப்பிடுகிறார் (74). கூடல் வைகையில் வாதவூரருக்காக மண் சுமந்த கதை இருமுறை; பாடல்தனை விரும்பிப் பாவலர்க்காகப் பரவை வீடு தனக்கிருகால் மேவியது பலமுறை; சங்கமிருந்து தமிழாய்ந்தது இரு முறை. தில்லை காசி ஆரூர் மதுரை நெல்லை ஆகிய தலங் களையும் சொல்கிறார். அருளையும் பராக்கிரமங்களையுமே பாடுகின்ற இவர் பாடலில் இயற்கை வருணனைக்கு இடமில்லை. ஓரிடம் மட்டும் குறிப்பிடுவோம்.*

**வானத்துப் பூந்தருவை வாங்கிக் களிறுபிடி**
**யானைக்கு நீட்டி அணியுமலை.** 97

*இறுதி பாடல் பலன் கூறுவதாக அமைந்துள்ளது:*

**அண்ணா மலைமாலை யானதமிழ் வெண்பாவால்**
**தண்ணாரும் ஐந்தெழுத்தைச் சாற்றியநூல் – மண்ணாகக்**

கற்றவர்கள் கேட்டவர்கள் காசினியிற் பேரின்பம்
உற்றுலகை ஆள்வர் உகந்து.

## சிதம்பர வெண்பா

*சிதம்பரதேவா என்று முடியும் 100 வெண்பாக்களும் காப்பு வெண்பாவொன்றும் உடையது. முந்திய நூல் போல நல்ல தோத்திர நூலாகவும் உள்ளது. சிதம்பரத்தை நோக்கிப் புறப் பட்டது முதலே இந்நூலைப் பாடத் தொடங்கிவிட்டார் என்று தெரிகிறது. தமக்கு நமசிவாய குரு செய்த உபதேசத்தைச் சில பாடல்களில் குறிப்பிடுகிறார். பெருந்துறையை இரு பாடல் களில் குறிப்பிடுகிறார். இவர் பெருந்துறையில் முத்தியடைந் தார் என்ற வரலாறும் இங்கு கருதத்தக்கது. திருப்பாதிரிப் புலி யூரை ஒரு பாடலில் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக இரண் டொன்று காட்டலாம்.*

விரித்த சடாடவியும் வெண்ணீறும் மெய்யும்
தரித்த சிலம்பும் இரு தாளும் – சிரித்த
திருவாய் முகிழ்மலரும் தீவினையேன் காண
வருவாய், சிதம்பர தேவா. 30

*'தனக்குவமையில்லான் தாளிணையைச் சேர்ந்தேன் மனக் கவலையை மாற்றினேன் வாழ்ந்தேன்' என்கிறார். 'பெறுவா னும் பேறுமுயர் பேரின்ப வீடும் - உறுவானும் உன்னையன்றி உண்டோ' என்று சமயக் கருத்தை அமைத்தும் பாடுகிறார்.*

உறையும் பதியே துரைத்தருளவேண்டும்;
நிறையும் தவத்தோர் நினைவோ, – மறையின்
தலையோ, கனகசபை தானோ, கயிலை
மலையோ, சிதம்பர தேவா

*என்ற பாடல் 'இருக்கும் திருக்கோயில் ஏழையேன் நெஞ்சோ' என்ற திருக்கருவை வெண்பா அந்தாதிப் பாடலை நினைவூட்டு கிறது. பின்வருவது ஒரு சுவையான பாடலாகும்.*

எடுத்த பிறப்பெல்லாம் எனக்கு வந்து தாய்மார்
கொடுத்தமுலைப் பாலனைத்தும் கூட்டில் – அடுத்தவிறற்
பன்னா கணைத்துயில் மால் பாலாழியும் சிறிதாம்
மன்னா சிதம்பர தேவா.

*அருணையைச் சில பாடல்களில் சொல்கிறார். சிறுத்தொண்டர், சண்டேசர் வரலாறுகளைக் குறிப்பிடுகிறார்.*

*அண்ணாமலை வெண்பாவிற் போலவே இங்கும் சிம்புள் (8) சொல்லப்படுகிறது; பிறவி நீங்குவதற்குச் சற்குருவைச் சார்வது மிகவும் அவசியமென்று (66) கூறுகிறார். இங்கு பெண்களைப் பலமுறை குறிப்பிடுகிறார்; அங்கனையார் என்கிறார் (அண்ணாமலை வெண்பாப்போல). 'பேறிழவு இன்பமோடு பிணி மூப்புச் சாக்காடென்னும் ஆறினையும்' (21) என்று இவர் பாடுகிறார். 'மோகமெனும் கடல் கடந்து முத்தியெனும் கரை காண்பான்' என்பது சிவஞான வள்ளல் பாடல்: 'மோகக் கடல் கடந்து முத்திக் கரைகாண்கைக்கு' (13) என்பது இவர் பாட்டு, உடலை மெய் என்று சொன்னது எத்தனை பொய்!*

பொய்யென்று சொல்லாமல் பொல்லாப் புலாலுடம்பை
மெய்யென்று பேரிட்டார் வீணிலே. 24

*'வெள்ளை எருத்தின் மிசையே உனைக்காண - உன்னி ஒருத்தி உருகுவாள்' என்று இவர் அபூர்வமாய்ப் பாடுவது, ஓர் அகத்துறைப் பாடல்.*

**பரம ராசிய மாலை**

*இது பாடிய சந்தர்ப்பம் முன்னே சொல்லி ஒரு பாடலும் காட்டப்பட்டது. 100 பாடல் கொண்டது. காப்பு:*

சமய மிகு மூவகையிற் சார்ந்தோர்க்கும் சிந்தை
அமைய நெறியோர் தமக்கும் – உமையவள்தன்
பூமானைச் சந்ததமும் பொன்னம் பலத்தாடும்
கோமானைக் கொண்டே குலா.

குகையினில் சோண கிரியினி லுற்றும்
  குருபர னாகி வீற்றிருந்து
வகைபெறக் கருணை யாலெனக் களித்த
  வண்மையை மறப்பனோ அடியேன்,
நகைகொடு புரமூன் றெரித்த நாயகனே,
  நல்ல சீரடியார் தமக்குப்
பகைஞரு முறவ ராக்கிடும் பொன்னம்
  பலவனே, பரமரா சியனே. 96

*நடராசப் பெருமானைப் பரமராசியன் என்று பாடுகிறார். நூலில் புராண கதைகளேயன்றி, நால்வர் வரலாறுகளிற் பலவும் சுட்டிப் பாடுகிறார் (ராசியம் - ரகசியம்).*

## நமசிவாய மாலை

மொழிக்கு முதலில் வரும் உயிர் மெய்யெழுத்துக்களைக் கொண்டு தொடங்கும் கண்ணிகளாக அமைந்த சிறுநூல், நமசிவாய என்ற திருவைந்தெழுத்தை இறுதியில் அமைத்துப் பாடப்பெற்றது. 100 கண்ணிகளும் காப்பும் உடையது. நமசிவாய என்பது இங்கு மந்திரமாக அல்லாமல் பெயராகவே வைக்கப் பட்டு விளியாகவுள்ளது. முதலில், அகரவர்க்கம், பின் 'க' முதல் 'ள' வரை அதனதன் வருக்கம் ககரம் சகரவருக்கம் என்பனவாக அமைந்துள்ளது. கெள, செள, தெள என்னும் எழுத்துக்களும், யகர வகர வருக்கங்களும் இல்லை. பின்வருவன எடுத்துக்காட் டான பாடல்கள்.

> சத்தியும் சிவமு மாகித் தாணுமாய் சகத்துக் கெல்லாம்
> முத்தியை யளிப்பா யாகி முதல்வனே நமசிவாயா.
>
> பிறை பணி சடையினானே பிஞ்ஞகா அடியார்க்கெல்லாம்
> குறைவற வாழ்வளிக்கும் கொற்றவா நமசிவாயா.

அச்சில் இல்லாத பாட்டுக்கள் ஏடுகளில் காணப்படுகின்றன.

## சிவக்ஷேத்திரக் கோவை வெண்பா

இந்நூல் குரு நமசிவாய தேசிகர் செய்ததாக அருணாசல புராணப் பதிப்பில் காணப்படும். அவர் சரித்திரத்தில் சொல்லப் படாவிட்டாலும், விருத்தாசல புராணம் 1908ஆம் ஆண்டுப் பதிப்பு முதல் 'சிதம்பரத்தில் தெய்வீகமுற்று விளங்கிய குரு நமசிவாய தேவ சுவாமிகள் அருளிச் செய்த சிவக்ஷேத்திரக் கோவைத் திருவெண்பா' என்று தலைப்பிட்டு 9 வெண்பாக்கள் அச்சிடப்பட்டுள்ளன. இவை ஒரு பெருநூலின் பகுதியா என்பது விளங்கவில்லை. இரு பாடல்களில் இவர் இத்தலம் பற்றிப் பாடிய தனி வெண்பாவில் வரும்: 'மலைக்கிழத்தி' என்ற தொடர் பயில்கிறது. அன்றியும் ஆறாம் பாடலில் பிற நூல்களில் இவர் தம் குருவைக் குறிப்பிடுகின்ற தொடராகிய 'ஓம் நமசிவாய குரு' என்ற பெயர் வருகிறது. இவ்வெண்பாக்கள் இவரே பாடியவை என்பதில் ஐயமில்லை.

இங்கு காணப்படும் 9 வெண்பாக்களும் திருமுது குன்றை மட்டும் போற்றுவன. எடுத்துக்காட்டான சில பாடல்களைக் கீழே காண்க.

நீற்றை யணிந்து நினைந்துருகி, நெஞ்சமே,
போற்று செழுந்திருவின் பூமானும் – காற்றும்
கலைக்கிழத்தி கோனும் கருதரிய கோல
மலைக்கிழத்தி கோமான் வரும்.

மன்னருணை யோ நமசி வாயகுரு ராயனது
பொன்னடியில் என்னைப் பொருத்துவாய், – துன்னுமலர்ப்
பாதா, மலைக்கிழத்தி பாகா, பரமசிவ
நாதா, பழமலை வாணா.

விருப்பாய் முதுகுன்றின் மெய்புதுமை கேளீர்,
நெருப்பா மலையொன்று நிற்கும், – பொருப்பிலொரு
பச்சைக் கொடியும் படரும்; அதனருகே
உச்சிக்கே ஆறுமோ டும்.

*இறுதிப் பாடல் சுவையுடையது. நெருப்பு மலையில் பச்சைக் கொடி படர்வதும், உச்சிக்கு ஆறு ஓடுவதும், இவர் சொல்கிற படி புதுமையே.*

**காலம்**

*வட ஆர்க்காடு ஜில்லா திருவிரிஞ்சைச் சிவாலய சந்நிதி முகப்பில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு குரு நமசிவாயருடைய அடியார் காலத்தைக் குறிப்பிடுகிறது; விஜயநகர வேந்தரான வேங்கடபதி தேவராயராட்சியில் சகாப்தம் 1514 (கி.பி. 1592) நந்தன வருஷம் புண்ணாற்றூர் பெரிய எறம்ம நாயக்கரென்பார் சிதம்பரம் குரு நமசிவாயர் அடியார் ஆனந்த நமசிவாய பண்டாரம் அவர்களுக்கு மடம் ஒன்று உதவினர்.*

*இதனால் குரு நமசிவாய மூர்த்தி இக்காலத்துக்குச் (1592) சற்று முன்னதாகச் சிதம்பரத்தில் வாழ்ந்திருக்கலாம் என்று தெரிகிறது. அதே விரிஞ்சை (விரிஞ்சிபுரம்) தெற்குக் கோபுர வாயிலில் கண்ட மற்றொரு சாசனம்: சக ஆண்டு 1510இல் (கி.பி. 1588) அதே வேங்கடபதிராயர் இருபது பரதேசிகளுக்குத் தினப் படி உணவளிக்க அங்கு நிபந்தம் அமைத்து, அத்தருமத்தைக் கண்காணித்து வரும் உரிமையை, சிதம்பரம் திருப்பணியும் கட்டளையும் மேற்பார்வை செய்து வந்த நமசிவாய உடையாரிடம் ஒப்படைத்த செய்தி கூறுகின்றது. சின்ன அம்பல நாயக பண்டாரத்தார் சிதம்பர வேலனுக்கு 20 தளிகை நைவேத்தியம் செய்து குரு நமசிவாய மூர்த்தி, அடியார்களுக்குப் பிட்சை*

* *சாசனத் தமிழ்க் கவி சரிதம், மு. ராகவையங்கார் 1937, பக்கம் 180.*

நடப்பித்து வந்தது, சகாப்த வருஷம் 1510 சர்வதாரி மார்கழி மாதம் 22 தேதி இவ்விரண்டினாலும் சக ஆண்டு 1510, 1514 (கி.பி. 1588, 1592) ஆகிய காலத்தில் ஆட்சி புரிந்த அரசர் காலத்தில் ஆட்சி நமசிவாய தேசிகர் திருப்பணிகள் செய்து வந்தமை விளங்கும். அக்காலமே இவர் காலமென்று சொல்வது பொருந்துவதாகும் - பின்வரும் சாசனப் பாடலும் காண்க.

தென்னருணை மருவுகுகை நமசி வாய
　தேவர் சிஷ்யன் குருநமசி வாயன் செய்யும்
மன்னு பணி விடையாகப் புலியூர்ச் செம்பொன்
　மன்னுடையான் பூசை கொண்டு மகிழ்ந்து காண்க
இந்நிலமெ லாந்தழைக்க அரசூர்ப் பற்றும்
　இலிங்கபுர சாதனக்கல் லெழுதி நாட்டி
நன்னெறி சேர் காலாட்கள் தோழன் சின்ன
　நல்ல நயி னான் கொடுத்து நடத்தினானே.

காலாட்கள் தோழர் என்பது பிற்காலத்தில் உடையார் பாளையம் பாளையப்பட்டுத் தலைவருக்குரிய பட்டமென்று ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளனர். குருநமசிவாய தேசிகர் பரம்பரையினருக்குச் சிதம்பரத்தில் சமீபகாலம் வரையில் பல்லக்கு மரியாதைகள் நடந்து வந்தன என்று பெரியோர் சொல்வர்.

இவற்றால் குரு நமசிவாய தேசிகர் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிறப்பாக வாழ்ந்தார் என்பது தெளிவு.

## கவசத் தோத்திரங்கள்

கவசம் என்பது, போர் செய்யும் வீரர் பகைவருடைய அம்பு, வேல், வாள் முதலிய ஆயுதங்கள் தம் உடல் மீது பட்டாலும் ஊறு நேராதபடி தம் உடலைக் காக்க இரும்புத் தகட்டாலும் வளையத்தாலும் செய்து உடலை மூடிக்கொள்ளும் ஒரு சட்டையைப் போன்றது. பெரும் போர்கள் தோன்றிய காலம் முதலே இது வழக்கில் இருந்து வந்திருக்கிறது. வாள் கேடயம் கையில் ஏந்துவது போல இது உடலில் ஏந்துவது. கவசம் என்பது வடசொல்லாயினும், பழமையாகவே தமிழிலும் வழங்குவது: 'புலி நிறக் கவசம்' என்று புறநானூறு கூறுகிறது; 'மெய்புகு கருவி' என்பது உரை. 'ஆன நீற்றுக் கவசம்' என்பது திருவாசகம்; இங்கு திருநீற்றால் ஆன கவசம்; இக்கவசம் உடலுக்கு மட்டும் அல்லாது உயிருக்கும் பாதுகாப்பாய் உள்ளது. இத்தகைய

பொருளை ரட்சை என்பது வழக்கு இதே பொருளில் கவசம் என்ற சொல் பூசா மந்திரக் கிரியைகளில் வழங்கும், ஷடங்க மந்திரங்கள் என்று சொல்லுகின்ற ஆறில், கவசம் என்பது எனவே இங்கெல்லாம் கவசத்தின் பொருள், பாதுகாத்தல் என்பதாகும்.

இவ்வாறு புறப்பொருளால் உடம்பைப் பாதுகாத்துக் கொள்வதுபோல, இறைவன் புகழைச் சொல்லி, அவன் இன்ன இன்ன உறுப்புக்களைக் காப்பானாக என்று வேண்டிக் கொள் வதும் உண்டு. இது இறைவனையே கவசமாகச் சொல்லால் அமைத்துக் கொள்வதாகும். இவ்வாறு அமைத்துப் பாடும் செய்யுள் நூல் கவசம் எனப்படும். வட மொழியில் இத்தகைய கவசங்கள் பல. அவை போலத் தமிழிலும் பல ஏற்பட்டிருக் கின்றன, உண்மையில் பார்த்தால் திருஞான சம்பந்தர் பாடிய 'வேயுறு தோளி பங்கன்' என்ற கோளறு பதிகமே ஒரு கவச நூலாகும். பிற்காலத்தில் அவரவருக்கு விருப்பமான ஒரு தெய்வத் தையும் அதன் பல பெயர்களையும் சொல்லி இன்ன பெயருள்ள தெய்வம் இன்ன உறுப்பைக் காக்குமாக, இன்ன இன்ன திசை யிலும் இன்ன நேரத்திலும் காக்குமாக என்று பக்தர் பாடு கிறார்கள். இப்படிப் பெரு நூல்களின் பகுதியாகவே பெரும் பான்மையான கவசங்கள் பாடப்பட்டுள்ளன.

பெருநூலில் இன்ன கவசத்தைப் பாடி இன்னார் நற்பலன்கள் அடைந்தார் என்று சொல்லப்பட்டமையால் பின் வந்த அடியார் கள் தாங்களும் அதே கவசப் பாடல்களைப் பாடி இறைவன் அருளுக்குப் பாத்திரமாக எண்ணுகிறார்கள். இவ்வாறு பல நூற்றாண்டுகள் பல்லாயிரம் பேர் அப்பாடல்களை உச்சரித்து வருவதால், அவை மந்திரம் போன்ற தன்மை பெற்றுவிடுகின் றன, 'பின்னும் அனேகர் குறித்த நன்மை பெறவும் தீமை அகல வும் வேண்டி, நாள்தோறும் 108 உரு அல்லது மேலும் இத்தனை உரு என்று கணக்கிட்டு மந்திரமாகச் செபித்தும் வந்திருக் கிறார்கள். அவரவர்க்குப் பலன் கிடைத்ததெல்லாம் அவரவர் பக்குவத்தையும் நம்பிக்கையையும் பொறுத்தது; இது ஆராய்ச் சிக் குரிய பொருளன்று. இவ்வாறு கவசத்தைச் செபித்தல் சைவ ரிடமும் உண்டு, வைணவரிடமும் உண்டு; தமிழிலும் உண்டு. வடமொழியிலும் உண்டு.

இத்தோத்திரங்களை வெறும் பாடல்கள் என்று எண்ணாமல் மந்திரங்களாகவே கருதிச் செபித்தால் அவரவருக்கு அந்தந்தத் தெய்வத்தின் அருளால் நினைத்த காரியம் கை கூடும் என்பது

ஆன்றோர் கருத்து. செபிக்குமுன் அவரவர் செய்யத்தக்க நித்திய கருமானுட்டானங்களை முடித்து, தெய்வ சந்நிதியில் அமர்ந்து, அல்லது வீட்டில் பரிசுத்தமான ஓரிடத்தில் வடக்கு முகமாக ஆசனத்தின் மீது அமர்ந்து, கரசுத்தி அங்க நியாசம் செய்து அத் தெய்வத்தை மனத்திலே தியானித்து, புத்தகத்தை மலரால் அருச்சித்துக் கையிலேந்தி, முறையாகப் பொருளை உணர்ந்து படித்து வருதல் செபிக்கும் முறையாகும்.

தொடக்கத்தில் இயன்ற உருச் செபிக்கலாம். நாளடைவில் பாடல்கள் மனப்பாடமானபின், இயன்ற தடவைகள் நாள் தோறும் செபிக்கலாம். நேரம் அதிகாலை, அல்லது மாலை நேரம்.

வடமொழி மரபில், பெருநூல்களான புராணங்களில் ஆங்காங்குச் சிறப்பித்துச் சொல்லப்படும் மூர்த்தி போன்ற பொருள் பற்றிக் கவசத் தோத்திரங்கள் அமைந்திருக்கும். உதாரணமாக, திருபுவனத் தலபுராணத்தில் தலத்து மூர்த்தியாகிய கம்பஹரேசுவரர் உபதேசித்ததாக, வில்வகவசம் என்ற கவசம் காணப்படுகின்றது. இது 18 சுலோகங்கள் கொண்டது. முதல் ஆறும் பீடிகை, மற்றவற்றில் தலை முதல் அடிவரையுள்ள உறுப்புகளை விருட்ச ராஜனான வில்வம் காக்க வேண்டும் என்ற வேண்டுகோள் சொல்லப்படுகிறது. தினந்தோறும் அரசனுடைய ஆயுளாரோக்கிய வளர்ச்சியின் பொருட்டும், பாவ விமோசனத்தின் பொருட்டும், அஷ்ட பூத வேதாளப் பீடை ஒழித்தற் பொருட்டும், அஷ்டைசுவரியங்களையும் பக்தி முத்திகளையும் தரவல்ல இந்த கவசத்தைப் பூசை முடிவில் சேவிக்க வேண்டும் என்று ஒரு முனிவர் கூறுகிறார்.

வில்வத்துக்கே இவ்வளவு மகிமை கூறியிருக்கும் போது, மூர்த்திகளைத் துதிக்கும் கவச நூல்களின் சிறப்புக்கு எடுத்துக் காட்டு வேண்டுவதில்லை. இதுபோன்று அமைப்புடையனவாக எழுந்த தமிழ்க்கவச நூல்களை இங்கே குறிப்பிடுகிறோம். 9 பகுதிகள் இங்கே தரப்பட்டுள்ளன. இவற்றுள் 7, 9 ஆகிய இரண்டு மட்டும் தனி நூல்கள். ஏனையவை யாவும், பெருநூல்களான புராணங்களின் பகுதிகள். இங்கு குறிப்பிட்ட 9 பகுதிகளுள், 1 - 19ஆம் நூற்றாண்டு 8 - 18ஆம் நூற்றாண்டு, 9 - 20ஆம் நூற்றாண்டு: ஏனையவை ஆறும் 16ஆம் நூற்றாண்டு. ஆதலால் எல்லாக் கவசங்களையும் குறித்த விளக்கமான இக்குறிப்பை இந்த நூற்றாண்டு வரலாற்றில் சேர்த்துத் தருவது பொருத்தமாய் இருக்கும்.

### 1. விநாயக கவசம்

*விநாயக புராணத்தில் உள்ளது. கச்சியப்பமுனிவர் பாடியது; 9 விருத்தப் பாடல்கள் உடையது. "ஆதியில் இக்கவசத்தைக் காசிபமுனிவர் முத்கல முனிவருக்கு அருளிச் செய்ய அவர் மாண்டவிய முனிவருக்கு உபதேசித்தருள, அவர் பல முனிவர் களுக்குத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தனர் என்றறிக. நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்து கொண்டு ஒன்றுபட்ட மனத்துடனே விநாயகரைத் தியானித்து இதைச் செபிக்க வேண்டும்" என்பது இதன் முகப்பிலுள்ள குறிப்பு. முதல் பாட்டு:*

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க,
  வாய்ந்த சென்னி
அளவுபடா சவுந்தர தேகம் மாதோற்கடர் தாம்
  அமர்ந்து காக்க;
விளரற நெற்றியை யென்றும் விளங்கிய காசிபர் காக்க;
  புருவந் தம்மைத்
தளர்வின் மகோதரர் காக்க; தடவிழிகள் பாலச்
  சந்திரனார் காக்க.

### 2. சிவகவசம்

*இது வரதுங்கராம பாண்டியர் பாடிய பிரமோத்தர காண்டத்தில் 12 சிவகவசம் உரைத்த அத்தியாயம் என்பதாக உள்ளது; 20 பாடல்கள் உடையது. இந்தக் கவசம் பத்திராயு என்னும் இராசகுமாரனுக்கு விடபமுனி அருளிச் செய்த தென்று நைமிசாரணிய முனிவருக்குச் சூதமகா முனிவர் அனுக் கிரகித்தது என்பது இதன் முகப்பிலுள்ள குறிப்பு.*

### 3. சத்தி கவசம்

*இது வச்சிர பஞ்சரம் (வயிரக்கூடு) என்ற மறுபெயருடையது. அதிவீரராம பாண்டியர் பாடிய காசிகண்டத்தின் 72ஆம் அத் தியாயமாக உள்ளது. 13 பாடல்கள். 'தேவர்கள் தங்களுக்கு நெடுநாள் இடரிழைத் திருந்த துர்க்கனென்னும் அசுரனை உமாதேவியார் சங்கரித்து அவ்விடரை நீக்கியது கண்டு அத் தேவியை வணங்கித் துதி செய்தது இக்கவசம் என்றறிக. துர்க் கனை அழித்த நிலையில் அம்மைக்குத் துர்க்கை என்ற பெயர் வந்தது என்பது இது பற்றிய குறிப்பு. முதற் பாட்டு;*

அங்கையிற் கரகந் தாங்கும் பிரமாணி அருளினோடுந்
துங்கமென் சென்னிகாக்க, வயிணவி துகளிலாகம்

எங்கணுங் காக்க, செய்ய ஏந்தெழில் உருத்திராணி
தங்குமெண் திசையும் அன்பு தழைத்திட இனிது காக்க.

## 4. இலக்குமி தோத்திரம்

*அதிவீரராம பாண்டியர் செய்த காசிகண்டம் ஐந்தாம் அத்தியாயத்தில் உள்ளது. அகத்திய முனிவர் இலக்குமியைத் துதித்தது இதைச் செபிப்பவருக்கு ஒரு காலும் வறுமை வராது என்பது குறிப்பு. 'இலக்குமி பஞ்சகம்' என்னும் பெயருள்ள இத்துதி முன்னும் பின்னும் ஒவ்வொரு பாடல் சேர்த்து ஏழு பாடல்களாக அச்சிடப்பட்டு வருகிறது. இதனுள் காக்க என்று முடிகின்ற அமைப்பு இல்லை:*

கொழுதி இசை அளிமுரலும் தாமரை மென்
  பொகுட்டில் உறை கொள்கை போல
மழை உறழும் திருமேனி வண்ணன்
  இதய மலர் வைகும் மானே!
முழுதுலகும் இனிது ஈன்ற அருட்கொம்பே,
  கரக மலம் முகிழ்த்து எந்நாளும்
கழிபெரும் காதலின் தொழுவோர் வினைதீர
  அருள்கொழிக்கும் கமலக் கண்ணாய்.

*இந்த நான்கு நூல்களும், குமரகுருபரர் பாடிய சகலகலாவல்லி மாலையுடன் சேர்த்துத் தனித் தோத்திரநூலாக ஆறுமுக நாவலரால் அச்சிடப்பட்டது. அது முதல் எல்லோரும் பல் வகைத் தோத்திரக் கோவைகளுள் இவற்றைச் சேர்த்து அச்சிடு வது மரபாகி விட்டது.*

## 5. சிவாட்டகம்

*அதிவீரராமர் பாடிய காசிகண்டத்துள் பத்தாம் அத்தியா யத்தில் சிவசன்மா பரவித் துதித்ததாக உள்ள எட்டுப் பாடல்கள் இப்பெயரால் வழங்கும். இதைச் செய்பவர் மகப்பேறு பெறுவர் என்பது குறிப்பு:*

அருவுருவாய் ஏகமாய்க் குணங்குறிகள் எவையுமின்றி
  அசல மாகி
நிருமலமாய் எவ்வுயிர்க்கும் உயிராகிச் சுடரொளியாய்
  நித்தமாகிக்
கருதரிய ஆனந்தக் கடலாகி மெய்ஞ்ஞானக்
  கனியாய் நின்ற
வரத நின தடிக்கமலம் மனத்திருத்திக் கொழுமலர்தூய்
  வழுத்தல் செய்வாம்.

### 6. மிருத்தியுஞ்சய தோத்திரம்

*யமனுடைய பாசத்திலிருந்து தன்னைக் காக்கும்படி மார்க்கண்டேயர் துதித்ததாக வடமொழியில் பாடல்கள் சொல்லப் பெறும். இவை யாவும் 'நமாமி சிரசா தேவம் கிந்நோ மிருத்யு: கரிஷ்யதி' என்று முடிவன (சிவபெருமானைத் தலையால் வணங்குகின்றோம்; யமன் வந்து எம்மை என்ன செய்வான்). இப்பாடல்களின் கருத்தைத் தழுவிய மொழி பெயர்ப்பாக அதி வீரராம பாண்டியர் செய்ததாக வழங்கும் மாகபுராணத்தில் மார்க்கண்டன் பிறப்புரைத்த அத்தியாயம் என்ற பகுதியில் 17 பாடல்கள் காணப்படுகின்றன. அறுபதாண்டு நிறைவு, ருத்திரா பிஷேகம், சதஅபிஷேகம் முதலான சாந்தி விழாக்களில் மிருத்தி யுஞ்சய மூர்த்தி (காலனை வென்ற மூர்த்தி) ஓமம் செய்து வழிபடும் அன்பர்களுக்கு, இத்தமிழ்த்துதி மிகவும் பயன்படும்.*

முத்தொழிற்கும் முதற்பொருளைதனை முக்குணத்தினும் மேலதாம்
தத்துவத்தின் விளக்கமாகிய தற்பரத்தினை, ஒருவனை,
வித்தகக் கண நாதர் சூழ்வர வெற்பின் வாழ்தனி வெற்பினை,
பக்தியின் தொழு வேனையோ, நமனார் முனிந்தெதிர் பகருமே?

### 7. நாராயண கவசம்

*செவ்வைச் சூடுவார் செய்த தமிழ்ப் பாகவதத்துள் ஆறாம் கந்தம் நாலாம் அத்தியாயம், நாராயண கவசம் எனப்படுவது. விசுவரூபன் இந்திரனுக்கு உரைத்ததாக இங்குள்ள 25 பாடல்கள் நாராயண கவசம் என்ற பெயரால் வழங்கும்.*

மலர்ந்த செங்கமல மலர்மகண் மருவார்
மார்வமும் வாளி கேடகம் வாள்
இலங்கெழி லாழி வளைகதை பாசம்
இருஞ்சிலை தரித்த வெண் கரமும்
நலந்தரு கலுழன் புயத்தினி துறைந்த
நளினமென் பாதமு மாக
வலந்தர முன்வந்த தெங்குமெப் பொழுதும்
மாயவன் கருணையிற் காக்க.

*இங்கு குறிப்பிட்ட நூல்களுள் 1, 3, 7, 9 என்ற எண்ணுள்ள நான்கின் பாடல்களும் காக்க என்ற சொல்லைக் கொண்டே முடிவனவாயிருக்கும்.*

### 8. கந்தர் சஷ்டி கவசம்

*தேவராய சுவாமிகள் செய்தது என்று வழங்கும் இந்த நூல், ஆசிரியப்பாவால் ஆனது. 240 வரிக்கு மேலும் உடையது.*

பிறகவசத் தோத்திரங்கள் காக்க என்று மட்டும் அமைந்திருக்க, இது மட்டும் மந்திரங்களும், அவற்றிற்குரிய அக்கரங்களும் உச்சாரணமும் அடங்கியுள்ளது. மற்றவற்றை விட இதுவே கல்வி யறிவு இல்லாதோராலுங்கூட மனப்பாடம் செய்து உருவேற் றப்படுகிறது. இக்கந்தர் சஷ்டி கவசமானது செந்தில் மேயகந்த வேளுக்குரிய தென்றும் திருச்செந்தூராகிய இப்படை வீடு இரண்டாவது என்றும் ஏனைய ஐந்துக்கும் பிற்காலத்தில் இது போலவே புனையப்பட்ட ஐந்து கவசங்கள் உரியன என்றும் சொல்லி ஆறு கவசங்கள் அச்சிடப்பட்டும் உள்ளன. எனினும் பிறவற்றுக்கு ஆட்சி இல்லை. இத்தொகுப்பினுள் காணப்படு பவற்றுள் இஃதொன்றே ஆட்சியிலுள்ளது.

கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண வகையால் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்,
பொல்லாதவரைப் பொடிப் பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்.

### 9. சண்முக கவசம்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பாம்பன் - குமரகுருதாச சுவாமி செய்தது. முதலெழுத்துக்கள் அகர வரிசை யில் அமைந்த 30 பாடல்கள் உடையது. இதை ஓதி அனேகர் முருகன் அருள் பெற்றதாக வரலாறு உண்டு.

அண்டமாய் அவனி ஆகி அறியொணாப் பொருள தாகித்
தொண்டர்கள் குருவு மாகித் துகளறு தெய்வம் ஆகி
எண்திசை போற்ற நின்ற என்னருள் ஈசன் ஆன
திண்திறல் சரவணத்தான் தினமுமென் சிரசைக் காக்க.

## சூரிய தோத்திரம்

கமலை ஞானப்பிரகாசருடைய மாணாக்கர் பலர். எல்லோரும் தமிழ்ப் புலமையுடையோராயும் சமய அறிவு வல்லவராயும் இருந்தனர். பலர் தோத்திர சாத்திர நூல் செய் திருக்கிறார்கள். ஒருவர் சூரிய தோத்திரம் செய்தார். சிவ பூசை யில், முதலாவது அனுட்டானம், பின் சூரிய பூசை, அடுத்தே சிவ பூசை. மூன்றுக்குமான விதிகளை ஞானப்பிரகாசரே அகவலாகப் பாடியிருக்கிறார். அனுட்டானத் திலும் பூசையிலும் சூரியனுக்குத் தோத்திரம் சொல்லப்படும். ஞானப்பிரகாசருடைய மாணாக்க

*ரொருவர் இதன் பொருட்டுத் தமிழில் பதினான்கு பாடல்கள் உதயதிவாகர தோத்திரமாகச் செய்தார். தொடக்க வெண்பா வொன்றில் இவர் 'கமலையண்ணலே' என்று தம் குருவை விளித்துத் துதிக்கின்றமையால், இவர் ஞானப்பிரகாசருடைய மாணாக்கரென்று தெரிகிறது.*

சாதித்து மூவுலகுந் தானாகி யே விளங்கும்
ஆதித்த னே, கமலை அண்ணலே – பேதித்த
நாளாகி நாழிகையால் நாயேன் தலையிலிருந்
தாளாகி வைத்தியே தான்.

*பின்வருவன தோத்திரப் பாடல்கள்; உதய திவாகர தோத்திரம் என்றும் சொல்லப்படும்:*

கடல்தனில் நீயெழுவாய், காரண காரணனே,
புடைபட நின்னடியார் போத உனைத் தொழுவேன்,
அடையவு மொருதேர்மேல் அசைய எழுந்தருளும்
உடையவ னாருயிரே, உதய திவாகரனே.

காலையில் மேல் வருவாய், கதிர் பலவும் முடையாய்,
வேலையின் மேல் வருவாய், வேதிய வேதியனே,
சாலவுனைத் தொழுவேன், என் சங்கை யறுத்தருளும்
ஓலமெனுந் துணையே, உதய திவாகரனே.

கிளர்கதி ராயிரமும் கெழுமி எழுந்தருளும்
வளரிள ஒளிமுகவா, வானவர் நாயகமே,
உளமுற வுட்புகுவாய், உதய திவாகரனே.*

பத்தியி னாலடியேன் பாடிய பதினாலும்
நித்தம் நினைந்துருகி நெஞ்சினில் வைப்பவர்தம்
வைப்பு மிருப்பமவர் வானுலகுந் தருமே.*

உதித்து வெளிகாட்டி ஒடுங்கி இருள் காட்டி
அதித்து மழைகாட்டும் ஐயா, – மதித்த
சுடரே, என் கண்ணலால் சுயஞ்சோதி அன்பர்
இடரே களைவாயும் நீ.

*இவ்வாசிரியரே பஞ்ச சுத்தியைச் சொல்லுகின்ற ஆன்மலிங்க மாலை பாடியவர் என்று கருதலாம். (16ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு இரண்டாம் பாகம் பார்க்க)*

---

* *இவ்விரு பாடல்களிலும் மற்றோரடி காணப்படவில்லை.*

## அத்தியாயம் 5

# சித்தர் பாடல்

### முன்னுரை

14, 15ஆம் நூற்றாண்டுகளுக்குரிய எமது தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் பண்டைச் சித்தர் பாடல்களைப் பற்றிய விரிவான ஆராய்ச்சியைக் காணலாம்.

முன் வரலாறுகளில் நாம் ஆராய்ந்த சித்தர் அனைவரும் மெய்ப்பொருள் நெறி ஒன்றையே சார்ந்து நின்றவர்கள். அவர்கள் சொல்லியது ஞானமாயினும், யோகமாயினும், பக்தியாயினும், உருவ வழிபாடாயினும், உருவங் கடந்த வழிபாடாயினும், அவர்கள் கூறிய பரமார்த்திகப் பொருள் ஒன்றே. அவர்களுக்கு அடுத்த காலத்தில், சித்தர் என்ற பெயர் அத்துறையை விட்டு விலகிப் பல துறைகளையும் தழுவியதாகத் தெரிகிறது. மொழியாலும் பொருளாலும், முன் சொல்லப்பட்டோரை யன்றி பிறர் அனைவரும் பிற்காலத்துக் குரியவரென்று கருதுகிறோம். கருதுவதற்கு முக்கிய காரணம், பாட்டுக்களின் நடையும் சொல் லமைப்பும் பொருளும். இவர்களுடைய பாடல்கள் யாவும் இலக்கிய நடையைவிட்டு முழுமையும் கொச்சை நடைக்கு மாறுகின்றன. முந்திய சித்தர்களின் நடையில் கொச்சை இருந் தால் மிகவும் குறைவு. கேளப்பா காணப்பா பாரப்பா - என்ற சொல்லமைப்புகளை எதுகைக்காக அமைப்பது இக்காலத்தில் அதிகமாகிவிட்டது; இவ்வமைப்பு முன்னமே இல்லை; முன்னமே இருந்தது சொல்வளம், வறட்சி அல்ல.

இனி இரண்டவதாக, இவர்கள் அனைவரும் வைத்தியம் மாந்திரிகம் இரசவாதம் போன்றவற்றையே பாடுகிறார்கள். இடையே சிறிது மெய்ப்பொருளும் யோகமும் இடம் பெறு கின்றன என்பது உண்மையே; எனினும் இது ஆசிரியரின் நோக்க

மாய்த் தெரியவில்லை. அடுத்து இக்காலத்தில் சாக்த நெறி அதிகம் காணப்படுகிறது. முந்தி இருப்பினும், இவ்வளவு அதிகம் இல்லை. போலிக் குருக்களின் பழிப்பு எல்லோரிடத்திலும் காணப்படுகிறது.

சிலம்பொலி கேட்டலைப் பலர் குறிப்பிடுகிறார்கள். சைவ மரபில் சேரமான் பெருமாள், பூசலார் காலத்தில் வாழ்ந்த இராசசிம்ம பாண்டியன், கண்டராதித்தர் ஆகியோர் இறைவன் நடனச் சிலம்பொலி கேட்டோர் என்று வரலாற்றில் சொல்லப் படுகின்றனர். இங்குச்சித்தர் மரபில் கொங்கணர் சிலம்பொலி கேட்டதாகப் பாடல்கள் (சட்டை முனி முன் ஞானம் 100இல் 68ஆம் பாடல் முதலியன) கூறுகின்றன - மணியிட்ட சிலம் பொலியைக் கேட்ட மூர்த்தி. இவையெல்லாம் விரிவான தனி ஆராய்ச்சிக்குரிய பொருள். எனினும் ஒன்று தெளிவு. கொங்கணர் ஒரு சிறந்த ஞானயோகக் குருவாக விளங்கினார். இடம் தில்லை போலும். இவருக்கு மாணாக்கர் பலர். அவர்களுக்கு மாணாக்கர் பலர். எல்லோரும் கூடி ஒரு பெருஞ்சித்தர் கணமாக வாழ்ந் திருந்தார்கள், தங்களுக்குள் இரசவாத முறைகளையும் காயகற்ப முறைகளையும் பயின்றிருந்தார்கள், எண்ணற்ற பாடல் பாடி னார்கள், யாவும் தங்களுக்கே விளங்குகிற குழூஉக்குறியாக பாடினார்கள் என்று கருதத் தோன்றுகிறது.

இச்சித்தர் அனைவரும் சத்தி பேதமாகிய வாலையைப் பாடுகிறார்கள். சிவனைப் பாடுகிறார்கள்: சர்ப்பாபரணம், ஆனைத்தோல், புலித்தோல், நீலகண்டம், பலியேற்றல், சுடுகாடு முதலியவற்றையும் குறிப்பிடுகிறார்கள். விஷ்ணுவை ஒரு பதத் திலுள்ள தெய்வமாகப் பாடுகிறார்களேயன்றிப் பரம்பொருளா கச் சொல்லவில்லை.

பெரும்பான்மையோர் எண்சீர் விருத்தமாகவே சீர் பிழை யாமல் பாடுகிறார்கள். எண்சீர் விருத்தம் நீண்ட அடியாயிருப் பதால் பொருளை அமைப்பதற்கு வசதியாக இருக்கிறது. சொன்ன பொருளை மனத்தில் வைப்பதற்கும் மனப்பாடம் செய்வதற்கும் எளிதாய் இருக்குமாறு பலர் அந்தாதியாகவே பாடுகிறார்கள். அன்றியும், அனேகர் நூல்கள் எண்ணிட்டு இத்தனை செய்யுள் என்று நூற்பெயரிலேயே சொல்லப்பட் டுள்ளன. நூறு ஆயிரம் என்பது மட்டுமல்ல: 6, 8, 9, 13, 16, 25, 103, 116 என்றெல்லாம் கூட நூற்பெயர்கள் அமைந்துள்ளன.

அவ்வமைப்பு, ஒரே பெயர் அல்லது பொருளில் பல நூல்கள் இருந்தபடியால் முன்வந்த நூல்களுக்குப் பிற்காலத்தார் இட்டதாகவும் இருக்கலாம்.

நூல்களைப் பார்க்கும்போது இவை யாவும் ஒரே காலத்தில் ஒரே சூழ்நிலையில் எழுந்தனவோ என்ற ஐயம் நமக்கு எழுகிறது. அகத்தியர் பெயரால் 100 நூல்கள் என்றால், பல காலத்தில் பலரால் செய்யப்பட்ட பல நூல்கள் ஒருவர் தலையில் சுமத்தப் பட்டன என்றே கருதத் தோன்றுகிறது. ஒருவரே செய்தும் இருக்கலாம்; பலர் செய்தும் இருக்கலாம். வரலாற்றுத் தொகுப் புக்கு ஒரு காலமாகக் கொள்வது பயனுடையதாயிருக்கிறது. ஒரே பெயருடைய பல ஆசிரியர்கள் ஒரே காலத்திலும் இருக் கலாம்; முன் பின்னாகவும் இருந்திருக்கலாம். ஆனால் இவர்கள் யாரும் 16ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இருந்திருக்க வியலாது. அது போலவே, வரலாற்றுக் கண்கொண்டு நோக்கும்போது, இவ்வகை நூல்கள் பொதுவாய் 17 முதலான பிந்திய நூற்றாண்டு களில் தோன்றியிருக்க முடியாததென்றே புலப்படுகிறது. ஒன் றிரண்டு தோன்றியிருக்கக்கூடும்.

இறைவனே சித்தராக வந்து விளையாடினான் என்று புராணங்கள் கூறும். மதுரையில் சோமசுந்தரக் கடவுள் எல்லாம் வல்ல சித்தராக வந்து பல திருவிளையாடல் புரிந்து காட்டினார் என்று 13ஆம் நூற்றாண்டு நம்பி திருவிளையாடலும், அதற்கு முன் தோன்றிய திருவாசகம் கல்லாடம் முதலான நூல்களும் குறிப்பிடும். பத்தர் சித்தர் பலர் ஏத்தும் பரமா என்று தேவார ஆசிரியர் பலமுறை பாடுகிறார்கள். அகங்குழைந்து அவனையே புறத்தே கண்டு சரண்புகும் பத்தர் நிலை ஒன்று, அகக் கண்ணால் கண்டு அனுபவிக்கும் சித்தர் நிலை வேறொன்று என்று அவர்கள் கருதுவது விளங்குகிறது.

அருக தேவனுக்கும் சித்தன் என்ற பெயர் உண்டு.

சித்தி பெற்றவர் சித்தர். சித்தி என்னும் அட்டமா சித்தி என்று கருதுதலும் உண்டு, இறைவனை உணர்ந்து அவனுடன் எந்நேரமும் கலந்திருத்தலாகிய சீவன் முத்தி நிலை என்று கருதுதலும் உண்டு. இந்த நிலையுடையோருக்கு அட்டமாசித்தி என்பது, இடையில் வரும் மயக்கம் என்று விலக்கத்தக்க ஒரு நிலையாயிருக்கும். ஆனால் உலகத்துக்கு இவ்வகைச் சித்தி பெரும் வியப்பைத் தருவது. ஆன்ம நிலையில் பெரும் பொருளை அடைய முயன்றோர் இடையில் கைவந்த சித்தியின் வசப்பட்டு

நின்றுவிட்ட நிலையைத்தான் இந்த நூற்றாண்டுச் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன. இவர்கள் தங்கள் அனுபவங்களை உணர்த்தி எச்சரிக்கையும் தருகிறார்கள்.

16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்து தருமபுரத்தில் சைவ சித்தாந்த ஞானாசாரிய பீடம் நிறுவிப் பல பல சாத்திர நூல்களும் செய்த குருஞான சம்பந்தர்,* தமது சொக்கநாத வெண்பாவில் எல்லாம் வல்ல சித்தர் என்று ஐந்து முறை குறிப்பிடுகிறார். இவ்வாறு இவர் குறிப்பிடுவதில் ஒரு பொருள் இருக்க வேண்டும். இவர் காலத்தில் சித்தர் என்று பெயர் பெற்றவர் பலர் மக்களால் மதிக்கப் பெற்று வாழ்ந்திருக்கவேண்டும். போகநாதர் என்ற ஒரு சுவாமி (சித்தர்) திருப்புகலூரில் வாழ்ந்தவர் என்று திரு ஒற்றியூர் ஞானப்பிரகாசர் குறிப்பிடுகிறார் இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது, இந்த நூற்றாண்டில் சித்தர் என்று பெயர் பெற்றிருந்த பல ஞானியர் வாழ்ந்தார்கள் என்ற கருத்து உறுதி பெறுகிறது. இது முந்திய இரு நூற்றாண்டு❖களிலும் சிவவாக்கியர் முதல் காளைச் சித்தர் இறுதியாகப் பல சித்தர் வாழ்ந்தனர் என்ற வரலாற்றுக்கும் தொடர்பாக நன்கு அமைந்துள்ளது.

இங்கு எல்லாச் சித்தரையும் ஆய்ந்து சொல்லிவிடவில்லை. சொல்லிய சித்தருடைய எல்லாப் பாடல்களையும் ஆய்ந்துவிடவும் இல்லை. எடுத்துக் காட்டாகச் சில சித்தரும் சில பாடல்களும் மட்டுமே குறிப்பிடப்படுகின்றன. நாம் இங்கு எழுதுவது இலக்கிய வரலாறு. இலக்கியம் என்று பெயர் பெறத் தகுதியுடையவை மட்டுமே இங்கு ஆராயப்பெறும். இலக்கியம் என்றால் செந்தமிழ் நடையை மட்டும் யாம் கருதவில்லை. பேச்சு நடையையொட்டி எழுந்தவற்றைக்கூடக் கருதுகிறோம். போலிகளைக் கருதவில்லை.

இனி, ஒரே பெயரில் உள்ள பாடல்கள் யாவும் ஒருவரே செய்தார் என்று கருதவும் கூடவில்லை. ஒரே பெயரைத் தரித்தோர், அவ்வை, கபிலர், நக்கீரர் என்று இலக்கியத்துறையில் நாம் காண்பது போல, இங்கு சித்தர் துறையிலும் சற்றே முன்பின்னாக

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு இரண்டாம் பாகம் பக்கம் 226-263 பார்க்க.

❖ எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு, 15ஆம் நூற்றாண்டு சித்தர் பகுதி பார்க்க.

வாழ்ந்து நூல் பாடியிருத்தலும் கூடும். எனினும், பெரும்பாலோர் இந்தப் பதினாறாம் நூற்றாண்டில்தான் பாடினார்கள் என்று நாம் கருதுகிறோம்.

பெரும்பாலான ஆசிரியர் தங்கள் பெயர் செய்யுள் எண் முதலியவற்றைத் தங்கள் பாடலிலேயே குறிப்பிடுகிறார்கள் என்றோம். இது ஓர் ஐயத்தையும் தோற்றுவிக்கிறது: ஒரு கால் இவ்வாறு கூறும் பாடல்கள் பிற்சேர்க்கையாயிருக்கலாமோ என்று. 9, 10, 15, 116 இப்படியெல்லாம் பாடல் எண்கள். இவ்வாறு தனி எண்களாயிருத்தலால் (முழு எண்ணாக 30, 50, 100 என்றில்லாமையால்) ஒருகால் ஆசிரியரே எண்ணிட்டு இப்படிச் சொன்னாரோ என்றும் கொள்ளலாம்.

மேலும் பெரும்பாலோர் ஒவ்வொரு நூலின் முடிவிலும் முற்றே என்ற சொல்லை அமைக்கிறார்கள்; நூல் முற்றிற்று என்பது இதன் பொருளாகும்.

### பதினெண் சித்தர்

திருமூலர், இராமதேவர், கும்பமுனியாகிய அகத்தியர், இடைக்காடர், தன்வந்திரி, வால்மீகி, கமலமுனி, போகநாதர், மச்சமுனி, கொங்கணர், பதஞ்சலி, நந்திதேவர், பாம்பாட்டிச் சித்தர், சட்டை முனி, சுந்தரானந்ததேவர், குதம்பைச் சித்தர், கோரக்கர், ரோமரிஷி என்ற பதினெண்மர் பதினெண் சித்தரென்று கூறுவர். இதற்கு எந்த ஆதாரமுமில்லை. இங்கு சொல்லப்பட்ட பெயர்கள் கால முறைப்படியும் அமையவில்லை. பதினெண்சித்தர் ஞானக்கோவை என்ற தொகுப்பு நூல், வா. சரவணமுத்துப் பிள்ளை என்பவரால் சென்ற நூற்றாண்டினிறுதியில் ‘ஞானவான்களுக்கு உபயோகமாகும் பொருட்டுத் திரட்டிப் பதிப்பிக்கப்பெற்றது.’ பதினெண் சித்தர் இன்னாரென்று அவர் சொல்லவில்லை. தம் பதிப்புக்கு முகவுரையாக ஆறு விருத்தப் பாடல்கள் எழுதியிருக்கிறார். அதனுள் அவர் கூறுவது, “அருள் சுரந்த ஞாதாக்கள் பதினெண் பேர்கள், சித்தெல்லாம் வல்ல சிவமுத்தரானோர், போதித்த வேதாந்தக் கோவை. அதைச் சேகரித்துக் கோவையெனச் செய்திட்டோம். சிவவாக்கியம், பட்டினத்தார் பாடலொடு புலம்பல், ஞானம், பத்திரகிரி அருட்புலம்பல், பாம்பாட்டீசர், இடைக்காடர், அகப்பைச் சித்தர், குதம்பை, கடுவளியாம் சித்தர், குருமுனிவர், அழுகணிசித்தர், நந்தீசர், ராமதேவர், கொங்கணவர், ரோமநாதர், திருமூலர், கருவூரார், பொதிகைச் சித்தர், இவருரைத்த

ஞானம் யாவும் மனுக்களறியப் பெரியோரைப் பணிந்து கேட்டு அச்சியற்றினேன், வேறும் உளவாகில் பெரியோர் எம்மிடந் தருக." இங்குள்ள பெயர்கள் பதினேழு. இவ்விரண்டு பட்டியலுக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. பதினேழு என்ற தொகையில் காகபுசுண்டர் என்ற பெயர் விடுபட்டிருக்கிறது. அதையும் சேர்த்தால் பதினெட்டாகும். இவர் கூறும் குருமுனிவர் என்பது திருவள்ளுவர் போலும். திருவள்ளுவர் ஞானமென்ற பெயரிற் சில பாடல்கள் இங்குள்ளன. இவை ஞானவெட்டியான் என்ற நூலிலுள்ளவை. காலம் 17-18ஆம் நூற்றாண்டு.

இனி, இச்சித்தர் கோவையானது, பழைய நூலல்ல என்பது தெளிவு. இது மூன்று பாகமாக உள்ளது. 2ஆம் பாகம் மிகவும் சிறியது. இதில் சிவயோகசாரம், நிஜானந்தபோதம் முதலான உரைநடை நூல்களும், இராமலிங்கசுவாமி பாடல்களும் காணப்படுகின்றன. ஆதலால் இது சித்தர் பாடலுக்கு ஆதார நூலாகாது. மேலும் இதிலுள்ள சிவயோகசாரம் என்பது பஞ்சாப் தேசத்து குருநானக் பரம்பரையில் வந்த குரு சரண்தாஸ் பாபாஜி என்பவர் செய்து நாராயண தேசிகர் நியமனத்தின்படி பூரணானந்தரென்பவர் மொழிபெயர்த்து யோகவாசிட்டம் முதலியவற்றிலுள்ள பொருள்களையும் அமைத்துத் தனி நூலாக ஆக்கப் பெற்றிருக்கிறது என்கிறார்.

இதன் 3ஆம் பாகத்தின் தொடக்கத்திலுள்ள நூலாகிய நிஜானந்த போதத்தில் சித்தர் வணக்கம் கூறுகிறார். அங்கு முன்னமே பெயர் வந்த சித்தர்கள் அல்லாமல் உதளிகன், புண்ணாக்கீசர், பிரமமுனி, வாசமுனி, அமலகுரு, கமல முனிவர், நவநாத சித்தர், சுந்தரக்கடவுளடியார், மலர்க்கண்ணனடியார், இராய வேலூர் அமுத சித்தர் என்போரும் காணப்படுகின்றனர். இந்த நூலைச் செய்தவர் அருணாசலகுரு. இதனால் நமக்கு விளங்குவது, இந்தச் சித்தர் ஞானக்கோவை ஒரு தொகுப்பான நூலென்று கருதி ஆராயப்பெறும் தகுதி உடையதல்ல என்பதாகும்.

### ஏனைய சித்தர்

வேறு தெரிய வருகின்ற சித்தர்களை குறித்துச் சில சொற்கள் இங்கே சொல்லத்தகும். அமுத சித்தர் பெயர் மேலே குறிப்பிட்டோம் பதஞ்சலி - ஞானம் என்ற நூல் செய்தவர். தன்வந்திரி - இவர் பெயராலுள்ளவை கலைஞானம் ஐந்நூறு, வைத்திய நிகண்டு முந்நூற்றிரண்டு, வைத்தியச் சிந்தாமணி 1200, சிமிட்டு

ரத்தினச் சுருக்கம் 360, புலிப்பாணிச் சித்தர் - சாலத் திரட்டு, பல திரட்டு வைத்தியம் 500 யோகி முனி - வைத்திய நிகண்டு. கோரக்கர் - இவரே முதலில் கஞ்சாவை ஒருமருந்தாக உபயோ கிக்கத் தொடங்கினாரென்று சொல்வர். கோரக்கர் வைப்பு என்பது இவர் நூல். மச்சமுனி - வைப்பு வாத நிகண்டு முதலியன.

இனி பதினெண் சித்தர் ஞானக்கோவை என்ற தொகுப்பு மிகவும் சமீப காலத்தில் தொகுக்கப்பட்ட ஆதாரமற்ற நூல் என்று வேறிடத்தில்* விளக்கிச் சொல்லப்பட்டது. அந்நூலுள் பெயர் காணப்படும் சித்தருள் சிவவாக்கியரும் பட்டினத்தாரும் 14ஆம் நூற்றாண்டென்றும், அகப்பை அழுகணி இடைக்காடு கடுவெளி குதம்பை பாம்பாட்டி ஆகிய சித்தர்கள் 15ஆம் நூற் றாண்டென்றும் அங்கு வரையறை செய்யப்பட்டது. இவர்களை யன்றி, அச்சித்தர் கோவையுள் பெயர் சொல்லப்பட்ட பிற சித்தர் பின் வருவோர்: காகபுசண்டர், கொங்கணர், சூரியானந்தர்; அகத்தியர், உரோமரிஷி, சட்டை முனி, சுப்பிரமணியர், திருமூலர், திருவள்ளுவர், வால்மீகர், இராமதேவர், நந்தீசுவரர், கருவூரார் என்போர். இவர்களையும் இவர்கள் நூல்களையும் தெரிந்த வேறு சில சித்தர்களையும் இவ்வத்தியாயத்துள் ஆராய்வோம்.

மற்றொன்றும் குறிப்பிடலாம். இங்கு நாம் ஆராய்கின்ற எல்லாச் சித்தர் பாடல்களும் ஒன்று போலவே உள்ளன; பெயர் மாத்திரம் வேறாக இருக்கிறதே அன்றி சொல்லாட்சியும் சொல்லும் முறையும் ஒன்றாகவே உள்ளன. வேறுபாடு காணப் படவில்லை. எந்த ஆசிரியருக்கும் உரிய தனித்தன்மை பொருந்த வில்லை. இரண்டொருவரை நீக்கிப் பார்த்தால் மற்ற யாவும் ஒருவரே செய்தனவாகுமோ என்று கூட ஐயுற வேண்டியிருக் கிறது, ஆயினும் அச்சிட்ட புத்தகத்தில் மட்டுமன்றி, ஏடுகளி லும், பெயர்கள் வெவ்வேறாய்க் காணப்படுதலால், இங்கும் வெவ்வேறாகவே ஆராய்கிறோம்.

இங்கு சொல்லப்பட்ட பெயர்களேயன்றி, பிரமமுனி, மச்சமுனி, யூகிமுனி போன்ற பெயர்களும் காணப்படுகின்றன. அவர்கள் யாவரும் வைத்தியம், இரசவாதம், காயகற்பம் முதலான துறைகளில் மட்டும் சம்பந்தப்பட்டிருப்பதால் அவர்களை இங்கு கருதவில்லை.

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு.

# அகத்தியர்

தமிழ் நூல் மரபில் எத்துறையை எடுத்துக் கொண்டாலும், அகத்தியரை முதலாவதாக வைத்துத் தொடங்குவது வழக்க மாகியிருக்கிறது. 'சித்தாந்த நெறி - வீடு பேற்றிற்கு நேர் வழி என உபமன்னியன் அகத்தியன் முதலிய உயர்ந்தோரெல்லாம் வாயுசங்கிதை சிவகீதை முதலியவற்றுள் விரித்தோதினார்' என்று சிவஞான சுவாமிகள் சித்தியார் உரையில் (8.15) கூறுகிறார். முதல் இடைச் சங்கங்களில் அகத்தியர் இருந்து முத்தமிழுக்கும் இலக்கணம் செய்தார். பின்னர் 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து சிவாலய முனிவருக்காகத் தேவாரத்திரட்டு திரட்டிக் கொடுத் திருக்கிறார். பின் முருகன் துதியாக ஆறெழுத்தந்தாதி என ஓர் அந்தாதி அவர் பெயரால் வழங்குகிறது. இவர்களை அனைவருமே தென்பொதியிலில் வாழ்ந்தவர்கள். இருந்தவர் ஒரே அகத்தியர் அல்லர். பல முனிவர் பல காலங்களிலும் வாழ்ந்திருந்தார்கள்; பிற்காலத்தில் அவர்கள் அனைவரையும் அகத்தியர் என்றே மக்கள் கூறத் தலைப்பட்டார்கள் என்று கருதவேண்டும். முதல் இரு சங்கங்களிலும் அகத்தியர் இருந்தார் என்றால், இருவரும் வெவ்வேறென்றே கொள்ளவேண்டும். இவர்கள் அனைவரும் இலக்கிய மரபில் அறியப்படுகின்ற அகத்தியர்.

புராண அகத்தியரும் சிலர் இருந்தனர். உலோபா முத்திரையை மணந்தார். தாழ்ந்த கயிலைக்கீடாகத் தென்திசையையும் கீழே கொண்டு வருவதற்காக இவர் தெற்கு நோக்கி வந்தார், விந்த மலையை அடக்கினார், வாதாபியைச் சீரணித்தார் என்பன யாவும் புராண அகத்தியரைக் குறித்த கதைகள். 'அகத்தியன் தனது கரகம் கவிழ்த்த காவிரிப்பாவை' என்று தமிழ் இலக்கியத் தில் சொல்லப் பெறுபவரும் இவரேயாகலாம். சப்த ரிஷிகளுள் ஒருவர் ஓர் அகத்தியர். இவ்வாறு புராணங்களில் சொல்லப் பெறும் அகத்தியரும் ஒருவரே அல்லாமல் பலராயும் இருத்தல் கூடும். வெவ்வேறான பல புராண அகத்தியரையும் வெவ்வேறான பல நூலாசிரியரான பல தமிழ் அகத்தியரையும் ஒருவர் போலவே தமிழ் நூல்கள் குறிப்பிடும்.

இவ்விருவகை அகத்தியரும் அல்லாமல் மற்றொரு வகை அகத்தியரையும் நாம் அறிய நேர்கிறது. யோகம், ஞானம், ரசவாதம், வைத்தியம், காயகற்பம், காலம், பூசை, தீட்சை, பஞ்சபட்சி சாஸ்திரம், ஆரூடம், வாகடம் முதலான எல்லாத் துறைகளிலும்

*அகத்தியர் பெயரால் நூல்கள் வழங்கி வருகின்றன. இவற்றைச் செய்தவர்கள் பலர், ஒருவரல்லர், காலம் ஒரே காலமல்ல, வெவ் வேறு காலம். அகத்தியர் பெயர் இருந்தால் நூலுக்குச் சிறப்பு என்று கருதி, பல காலத்தில் பலர் செய்த நூல்களுக்கு அகத்தியர் செய்த நூல் என்றே பெயரிட்டிருக்கிறார்கள். இவ்வாறுள்ள நூல்கள் இன்று இருநூறுக்கு மேல் ஏட்டு வடிவிலுள்ளன. அரசாங்கத் தொன்னூல் நிலையத்திலேயே 170 நூல்கள் உள்ளன. இவை யாவையும் இலக்கிய வரலாற்றில் ஆராய்வது பொருத்த மாயிராது. இருப்பினும் இரண்டொரு கருத்துக்களை மட்டும் இங்கு கூறலாம்.*

*ஞானம், யோகம், தீட்சை, பூசாவிதி முதலியன கூறியவர், பிற்காலத்துச் சித்தர்களைப் போல ஒரு சித்தர் என்றே கருதப் பட்டிருக்கிறார். சித்தர் வரிசையில் அகத்தியர் கும்பமுனி என்றும் பொதிகைச் சித்தர் என்றும் கூறப் பெறுகிறார். இவர் பெயரால் ஐந்தாறு 'ஞானம்' என்ற நூல்கள் சித்தர் கோவையுள் சேர்க்கப் பெற்றுள்ளன. ஆகவே இத்தகைய நூல்களையும் இங்கு சிறிது ஆய்வு செய்கிறோம்.*

*சில நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் போன்ற பாடல்கள் மிகவும் அழகாகப் புனையப் பெற்றிருக்கின்றன. சில எடுத்துக் காட்டுக்கள்:*

விநாயகர்: பூரணி மாமலை மகளருள் புதல்வன்
காரண மாமத கரியடி பணிவாம்.

அமுத மதியணி சடையினர் விடையவர்
எமது மழகளி றிணையடி பணிவாம்.

முருகன்: சூரன் குலமற வேலாற் றடிமயில்
வீரன் அறுமுகன் இணையடி பணிவாம்.

*சொல் நயங்களுக்கும் சொற் செட்டுக்கும் சில எடுத்துக் காட்டுக்கள் (அகத்தியர் பட்சணி 132):*

கல்லுருகும் செம்பு – வல்லிருளில் நம்பு
புல்லறுகு தும்பு – சொல்லுவது வம்பு.

பீக்கிலாட்டைக் கண்டு – தாய்க்கு ளாட்டை யுண்டு
பேய்க்கு ளாட்டில் நின்று – கூக்க லாட்டைப் பாரே.

மங்கை முது கண்ணில் – தங்கை கொடு பிசையத்
திங்கள் கதிர் சேரும் – எங்கள் குல மாமே.

கஞ்ச மலர்தனையே – பஞ்சமது நினையே
செஞ்சொல் விழியவள்மேல் – நெஞ்சிலிது குறியே.

## அகத்தியர் ஞானம்

*இப்பெயரில் பதினெண் சித்தர் ஞானக்கோவையில் ஞானம் ஒன்று என இரு தனிப் பாடல்களும், ஞானம் 2, ஞானம் 6, 9, 13, 16 என ஐந்து சிறு நூல்களும் உள்ளன. யாவும் யோகம் ஞானம் என்ற பொருள்கள் பற்றியவை. இந்நூல் வகைகளுக் குரிய வழக்கம் போல், இத்தனைப் பாடல் என்று எண்ணிச் சொல்லும் மரபையும் அந்தாதி மரபையும் இவற்றுள் காண் கிறோம். இப்பாடல்களை ஒருவர் இந்த நூற்றாண்டில் வாழ்ந்து பாடினார், அவரை அகத்தியர் என்று பின் வந்தோர் சொன்னார் கள் என்றும் கொள்ளலாம். பாடல்களுக்கு எடுத்துக்காட்டா கச் சில பின்னே தருகிறோம்.*

*ஞானம் 5இல் முதல் பாட்டு: கலை பதினாறு என்கிறார். இவை மேதாதி உன்மனாந்தமான சோடச கலைகளாயிருக் கலாம், இவை பிராசாத கலைகள் எனப்படும். இவ்வரலாறு இரண்டாம்பாகம் சைவ சாத்திரங்கள் என்ற அத்தியாயத்தில் இப்பொருளை விளக்கியிருக்கிறோம்.*

பூரணமே தெய்வமென்று உரைத்தா ரையா
 பூரணத்தை இன்னதென்று புகல வேண்டும்
காரணத்தைச் சொல்லுகிறேன் நினைவாய்க் கேளு
 கலையான பதினாறும் பூரணமே யாகும்
மாரணமாம் உலகத்தில் மதிம யங்கி
 மதிகெட்டுப் பூரணத்தை இகழ்ந்தா ரையா
வாரணத்தை மனம்வைத்துப் பூரணத்தைக் காத்தால்
 வாசியென்ற சிவயோக வாழ்க்கை யாக்கே.

*ஞானம் 9 என்பது வாழ்க்கைக்குரிய நல்லுபதேசம் போல உள்ளது. இதன் இறுதிப் பாடல்:*

சத்தியமே வேணுமடா மனித னானால்
 சண்டாளஞ் செய்யாதே தவறி டாதே
நித்தியகர் மம்விடாதே நேமம் விட்டு
 நிட்டையுடன் சமாதிவிட்டு நிலைபோ காதே
புத்தி கெட்டுத் திரியாதே பொய்சொல் லாதே
 புண்ணியத்தை மறவாதே பூசல் கொண்டு
கத்தியதோர் சள்ளிட்டுத் தர்க்கியாதே
 காமியென்று நடவாதே கதிரொளிதான் முற்றே.

ஞானம் 13 யோகம் பற்றிய நுட்பமன பல பொருள்களைப் பேசுகிறது. நடை சாமானிய நடையாயினும், பொருள் சிறப்புடையது:

ஏகமெனும் ஓரெழுத்தின் பயனைப் பார்த்து
  எடுத்துரைக்கும் இவ்வுலகில் எவரும் இல்லை;
ஆகமங்கள் நூல்கள்பல கற்றுக் கொண்டு
  அறிந்தமென்பார் மவுனத்தை; அவனை நீயும்
வேகாத்தலை சாகாக்கால் விரைந்து கேளு;
  அதை எடுத்து உரைப்பவனே ஆசா னாகும்;
தேகமதில் ஓரெழுத்தைக் காண்போன் ஞானி,
  திருநடனங் காணமுத்தி சித்தி யாமே.

ஓரெழுத்து என்பது பிரணவம். இதை இந்து மதத்தின் பிரிவுகளான எல்லாச் சமயங்களும் மிகவும் போற்றிக் கூறுகின்றன.

ஞானம் 16 என்பது ரசவாதம் யோகம் உலகநீதி எல்லாம் கலந்து சொல்வது ஒரு பாடல்:

பிழைப்பதற்கு நூல்பலவும் சொல்லா விட்டால்
  பூரணத்தை அறியாமல் இறப்பா ரென்றும்
உடுப்பதற்கு நூல்கட்டிப் போடா விட்டால்
  உலகத்தில் புத்தி கெட்டு அலைவார் என்றும்
தலைப்பதற்குச் சாதி என்றும் விந்து என்றும்
  தந்தைதாய் பிள்ளைஎன்றும் பாரிஎன்றும்
உழைப்பதற்குச் சொன்னதல்லால் கெதிவே றில்லை
  உத்தமனே அறிந்தோர்கள் பாடி னாரே. 4

இவ்வாறு பாடியவர்கள் சாமானிய அறிவுடைய புலவரே யானாலும் எதுகை மோனை அமைத்தும், சீர் தளை கெடாமலும், ஓசை நயம் பொருந்துமாறும் பாடியிருப்பது சிந்திக்கத்தக்கது. இவர்களுக்கு எழுத்து இலக்கணப் புலமை நிரம்ப இல்லாவிட்டாலும், கேள்வி ஞானம் குறைவறப் பொருந்தியிருந்தமையால் அதை வைத்தே இவ்வாறு பாட முடிந்திருக்கிறது.

**பதார்த்த குண சிந்தாமணி**

வழக்கிலுள்ளது; உரைநடையில் பண்டைய செய்யுள் நூல்களையும் அனுபவத்தையும் நடைமுறையையும் ஆய்ந்து எழுதப்பட்டது. அதற்கு மூலமானது, அகத்தியர் செய்த நூல் என்றும் சொல்லப்பெறும். இது செய்யுள் நூல்; வெண்பா

*விருத்தம் முதலான பாடல்களைக் கொண்டது; அச்சாகவில்லை. சில பாடல்கள் பின்வருவன:*

ஆதியு நடுவு மில்லா அம்பிகை பாகன் மேனாள்
வேதனுக் குரைப்ப வேதன் மேகநாதனுக்குச் சொன்னான்
போதிலிந் திரனும் அசுவ தேவர்க்குப் புகன்ற தன்றே
கோதிலா அசுவ தேவர் தன் வந்திரி கூறி னாரே.

நானாழித் தேனுக்கு நற்பா லுழக்கிட்டுத்
தானேபால் கண்டியிடத் தக்கதாய் – மானேகேள்,
காய்ச்சியே கொண்டாற் கனத்தவிஷ மாறி
வாய்ச்சமுத மாமே மது.

ஏழாயிர வருட மிருக்கலாம் காயசித்தி
கீழாநெல்லிச் சமூலங் கேள்மின்னே, – வீழாது
தாதுவெகு வெட்டை தணியுமே, தாரணியில்
கோதுபிர மேகம்போம் கூறு.

### *அகத்தியர் தீட்சா விதி 200*

*தச தீட்சை, பிராணாயாமம், காயசித்தி நாற்பத்து முக்கோணம், சிவபூசை முதலியன சொல்லும் 294 பாடல். பரை யோகத்தில் அனுபவிக்கும் நாதங்களைச் சித்தாந்த சாத்திரங்கள் சங்கு, மணி, சேகண்டி முதலியனவாகக் கூறும். இந்நூலின் இறுதிப்பாடல் இவற்றைக் கூறுகிறது:*

பணிமாறு காலத்தே மணியி னோசை
பாங்கான சேகண்டி நாத வோசை
பணிமாறு காலத்தே மவுன தோத்திரம்
பத்தியுறும் வாலைகையில் லேகியத்தை யீந்து
பணிமாறு காலத்தே சகல சித்தும்
பரிவாகத் தாவென்று கையில் வாங்கிப்
பணிமாறு காலத்தே பணிந்து தெண்டம்
பண்ணிடுவாய் பூசைவிதி தீட்சை முற்றே.

## *இராமதேவர்*

*இவர் பெயரால் வைத்தியம், சோதிடம், இரசவாதம், வசியம் ஆகிய துறைகளில் 27க்கு மேற்பட்ட நூல்கள் சிறியனவும் பெரியனவுமாக வழங்குகின்றன. பெயர்கள்: ஆயிரம், அட்டாங்க*

பட்சிணி, கருக்கடைச் சுருக்கம், கருமான சூத்திரம், கேசரி, சூத்திரம், சோதிடம், தண்டகம், நிகண்டு, பரஞான கேசரி வினோதம், பாஷை, பூசாவிதி என்பனபோல உள்ளன.

சிறுபான்மை இவர் நூல்களில் வஞ்சி விருத்தமும் கலி விருத்தமும் காணலாம். பின்வருவது ஒரு பாடல்:

ஏம மதினின்று – வாம மதை யுண்டு
ஊமை என நின்று – ராம னுரை செய்யே.

இராமதேவர் பூசாவிதி என்பது 10 பாட்டு, அந்தாதி, வாலை யைப் பூசிப்பதும் உருச் செபிப்பதும் கூறுவது. பின்வருவது இதன் முதற் பாடல்:

ஆதியென்ற மணிவிளக்கை யறிய வேணும்
அகண்டபரி பூரணத்தைக் காண வேணும்
சோதியென்ற துய்யவெளி மார்க்க மெல்லாம்
சுகம்பெறவே மனோன்மணியி னாத்தாள் தன்னை
நீதியன்ற பரஞ்சோதி ஆயி பாதம்
நிற்குணத்தி நின்றநிலை யாருங் காணார்
வேதியென்ற வேதாந்தத் துள்ளே நின்று
விளங்குவதும் பூசையிது வீண்போ காதே.

தம் பெயரை ராமனுடவாக்கியம் என்ற தொடராலும், நூற் பெயரை பூசாவிதிபத்து என்ற தொடராலும் பாடல்களில் குறிப்பிடுகிறார்.

## உரோம ரிஷி

உரோமரிஷி நாயனார் என்று சொல்லவும் காண்கிறோம், இவர் பெயரால் பத்து நூல்கள் உள்ளன. யாவும் ஞானம், சூத்திரம், கற்பம் என்று பெயர் பெறுகின்றன. பாடல் எண்ணிட்டு உரோம ரிஷி ஞானம் 16, 25, 50, 21, 100, 600 என்றே பெயர் இடப் பட்டுள்ளன. ஐந்நூற்றின் இறுதிப் பாடலில், ‘புசுண்டருமே எனக்குச் சொன்னார்’ என்று இவர் சொல்வதால் இவர் காக புசுண்டருடைய மாணாக்கர் என்று அறிகிறோம். ஞானம் என்பது 13 பாடல் கொண்டது. ஒன்பது பாடல் அந்தாதி. முதல் பாடலில் தம்பெயர் உரோமன் என்றே சொல்கிறார். எல்லா நூல்களும் இரசவாதம் வைத்தியம் யோகம் பற்றியவை.

## கருவூர்ச் சித்தர்

தமிழ் இலக்கிய வரலாற்றில் கருவூர்த் தேவர், கருவூர்ச் சித்தர் என்று தனித் தனிப் பெயருடைய அடியவரும் ஞானியும் வாழ்ந்திருந்தனரென்று வரையறை செய்து கொள்வது நூல் ஆய்வுணர்வுக்கு நல்லது. கருவூர்த் தேவர் பத்துத் தலங்களுக்குத் திருவிசைப்பா பாடினார். இராசராச சோழன், இராசேந்திர சோழன் ஆகிய இரு சோழச் சக்கரவர்த்திகள் காலத்திலும் வாழ்ந்து இவர்களால் போற்றப்பெற்று விளங்கினார். இவரது பத்துப் பதிகங்கள் ஒன்பதாம் திருமுறையில் தொகுக்கப் பட்டுள்ளன.

கருவூர்ச் சித்தரென்பவர் அவரினும் வேறானவர். இவர் சித்த நெறியில் நின்றவர். இவர் காலத்தால் சிவவாக்கியர் போன்ற சித்தர்களுக்குப் பிற்பட்டு, சட்டை முனி, இராமதேவர் முதலியோர் வாழ்ந்த சூழ்நிலையில் வாழ்ந்தார் என்று கருத இடமுண்டு. காலப்போக்கில் தேவருக்கும் சித்தருக்கும் வேறுபாடு அறியாமல், கால இடையீட்டையும் அறியாமல், இருவரையும் ஒன்றாகவே கருதிக் குழம்பிய நிலையேற்பட்டது. கருவூர்த் தேவர், மிகச் சிறந்த செந்தமிழ் நடையில் பல தலங்களில் கோயில் கொண்டிருந்த சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியைத் தரிசித்து அருட்பாக்கள் பாடினார். ஒப்பற்ற ஞானத்தால் விளைந்த சிவ போகமும், பக்தியும், கனிவும் , மொழிவளமும் இதய நெகிழ்ச்சியுமே அவருடைய பாடல்களின் சிறப்பு. இலக்கண வரம்புக்குட் பட்டே அவர் எங்கும் பாடுகிறார். அவருடைய வரலாறும், நூலாராய்ச்சியும், எம்முடைய நூல்களில் விரிவாய்க் காணலாம்.*

கருவூர்ச் சித்தருடைய நிலை வேறு. இவருடைய வரலாற்றைக் கருவூர்ப் புராணத்தாலும்; தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் பாடலாலும் நாம் விளக்கமாய் அறிகிறோம். புராணம் கூறும் கருவூர்ச் சித்தர் வரலாறு பின்வருவது.

**வரலாறு**

இவர் கருவூரில் அந்தணர் மரபில் சூரியனருளால் பிறந்த சிவனடி மறவாத சித்தர். காயசித்தி கைவந்தவர். மெய்ஞ்ஞானம் பெற்றவர். இவருடைய சித்த மார்க்கச் செயல்கள் பிற அந்தணருக்குப் பிடிக்காமலிருக்க, இவர் அவர்களை நல்வழிப்படுத்த

* எமது 11ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாறு.

எண்ணி அவர்கள் கண்டு அதிசயிக்கும் படியாக அகாலத்திலே மழை பெய்யச்செய்து, நதி பெருகி வரப் பண்ணி, கோயில் கதவம் தாள்திறக்கச் செய்து, பின்னும் பல அற்புதங்களும் செய்து காட்டினார், தலந்தோறும் தரிசனம் புரிந்து வருபவர். கொங்கு, குடநாடு முதலான பல நாடுகளிலும் சென்று தல வழிபாடு செய்து, காசி, காஞ்சி, காளத்தி, அருணை, மதுரை வழியாகத் திருக்குருகூர் என்ற நம்மாழ்வார் தலத்தை அடைந்தார். திரு மால் கட்டளை யின்படி பாகவதர்கள் இவரை வணங்கிப் போற்றினர். செந்தில், கன்னியாகுமரி, சுசீந்திரம், நெல்வேலி அடைந்து பெருமானை அழைத்தும் வராமையால், ஊரையே சபித்தார். பெருமான் திருவிளையாட்டால் ஓர் அடியவர் பின்னர் இவரை வழிபட, தம்மை வழிபட்டதற்கு மகிழ்ந்து இவர் சாப நீக்கம் செய்தார். நெல்லைக்கு வந்து கோவிலை வலம் வந்து சந்நிதியில் நைவேதனஞ் செய்யும் சமயம் என்று எண்ணாமல் "நெல்லையப்பா" என்று மும்முறை கூப்பிட்டும் பதில் இல்லாததால் "எருக்குஎழு" என்று சாபமிட்டு மானூருக் குப் போயினர். சிவபெருமான் சாபங்கேட்டு விடை மீதேறி மானூற் சென்றார். சித்தர் இறைவனை வணங்கி ஒவ்வொரு வருடமும் ஆவணி மூலநாளில் தமக்கு காட்சி தரவேண்டு மென்று வரம் பெற்றுக் கொண்டு நெல்லை வந்து "இங்கு ஈசன் இருக்கின்றார்" என்று சொல்லி மானூர் போயுள்ளார். அடுத்து இவர் ஒரு சிவலிங்கத்தைத் தழுவ அது குழைந்தது.

திருப்புடை மருதூரில், திருவிசைப்பாப் பாடி மற்றொரு திருமால் பதிபணிந்து, முன்றீசரை வணங்கி, காளியால் மதுக் கொணர்வித்தார். பின் அங்கு வன்னிமரத்தை மீன் மழை பொழியச் செய்து, மதுவும் மாமிசமும் அற்பக்காரியம் என்று கரும யோகியருக்குக் காட்டி, நல்லறிவு ஊட்டிக் குற்றாலம் சென்று திருவிசைப்பாப் பாடி, பொதிகை அகத்தியரைத் தரி சித்து, அங்குத் தங்கி இருந்தார்.

அக்காலத்துத் தஞ்சையில் இராசராச மன்னன், தான் பிரதிட்டை செய்த பெருவுடையார் எவ்வாறு மருந்து சாத்தியும் மருந்து இளகி, இறுகிப் பிடிக்காமல் இருந்தது கண்டு, மிகவும் மனம் வருந்தினான். 'கருவூர்த் தேவரால் தான் இது முடியும்' என்னும் அசரீரி எழுந்தது. அப்போது அங்கு தம் உருக்கரந் திருந்த போகநாதர் என்ற சித்தர், கருவூர்த் தேவருக்கு அங்கு வருமாறு பணித்து ஒரு காக்கையின் காலில் ஓலை கட்டி

அனுப்பினார். கருவூர்த் தேவரும் வந்து செய்தி அறிந்து, சிவ லிங்கத்தை நேரே நிறுத்தி மருந்து இறுகிப் பொன்போல் ஆகி பிடித்துக்கொள்ளுமாறு செய்தார். பின்னர் இவர் திருவானைக்கா வணங்கி, திருவரங்கம் சென்று தம்மை விரும்பிய ஒரு பொது மகளுக்குத் திரு அரங்கநாதன் திருமார்பில் உள்ள மாணிக்க மாலையைத் தந்து பின்னர் அவள் மாலையைத் திருடினாள் என்று குற்றம் சாட்டப்பட்டபோது, நாதனே தோன்றி 'யாமே தந்தோம்' என்று அசரீரியாகக் கூறுமாறு செய்தார். பொறாமை கொண்ட அந்தணர் தூண்டுதலால், அரசன் இவர் இருக்கையில் மதுவும் ஊனும் இருக்குமென்று சோதனை செய்வித்தபோது, அங்கு வைதிகப் பூசைக்கேற்ற உபகரணங்கள் நிரம்பியிருக்கவும், இவரைப் பழித்த அந்தணர் இல்லங்களில் மதுக் குடங்களும் ஊனும் நிறைந்திருக்கவும் கண்டு, அரசன் இவருடைய பெருமையை உணர்ந்தான். அந்தணர் ஊரை விட்டு ஓடி விட்டனர். உரிய காலத்தில் இவர் கருவூர் ஆனிலை அடைந்து அங்கு கோயில் கொண்ட பசுபதீசுவரரோடு இரண்டறக் கலந்தார்.

இங்கு சொல்லப்பெற்ற செய்திகள் யாவும் திருவிசைப்பாப் பாடிய கருவூர்த் தேவருக்குரியனவல்ல, பிற்காலத்தில் வந்த கருவூர்ச் சித்தருக்குரியன என்பது எமது கருத்து. இங்கு குறிப்பிடப்பெற்ற தலங்களில் ஒன்றேனும் கருவூர்த் தேவருடைய வாழ்க்கைக்குப் பொருந்துவது அன்று. இராசராசேச்சுரம் ஒன்று மட்டுமே அவருக்குரியது; அதுவும் சொல்லப்பட்ட முறை (எச்சிலுமிழ்ந்தார் என்பது) ஒருகால் சித்தருக்குப் பொருந்தலாம், சிறந்த அடியவரான கருவூர்த் தேவருக்குப் பொருந்தாது. பின்னால் சித்தர் போகரைக் குறிப்பிடுவதைக் காண்போம்; தேவர் யாரையும் குறிப்பிடவில்லை. கருவூர்தேவர் கருவூரில் இறைவனோடு கலக்கவில்லை; தஞ்சையில் கலந்தார் என்பது வரலாறு.

கருவூர்ச் சித்தர் தமது குருவாக, திருமூலர், சட்டை முனி, போகநாதர், பதஞ்சலி என்போரைக் குறிப்பிடுகிறார்; இவர்கள் முன் குறிப்பிட்டபடி, சுமார் 16ஆம் நூற்றாண்டில் ஒரே சூழலில் வாழ்ந்தோராவர் (கருவூரார் சூத்திரம் 116, பாட்டு 1):

சீர் பெருகும் வேதாந்தச் சூத்திரத்தைத்
  தெட்சிணா மூர்த்தி பாதம் திறமாய்ப் போற்றிக்
கார் பெருகும் ஆயியுடைப் பாதம் போற்றிக்
  கயிலாச திருமூலர் பாதம் போற்றி

பேர்பெருகும் சட்டைமுனி போக நாதர்
பேரின்பம் பெற்ற சொர்க்கப் பதஞ்சலியும் மிக்க
ஏர்பெருகு நாதர்கள் பாதம் போற்றி
இயமான னருள்பொருளா யிந்த நூலே.

*இதனால் கருவூர்ச் சித்தருடைய காலமும் வாழ்க்கைச் சூழலும் திட்டமாய் உணரலாகும்.*

**காலம்**

*பிறர் காலங்கள் தெளிவாய்த் தெரியாது போயினும், இவர் காலத்தை உணர்வதற்கு ஒரு குறிப்பு உள்ளது. வரலாற்றை விரிவாய்ப் பாடுபவர், கருவூர்ப்புராண ஆசிரியர்: 1129 பாடல் கொண்ட இப்புராணத்தில் எறிபத்தர் புகழ்ச்சோழர் ஆகிய நாயன்மார் வரலாறுகளைப் பாடியபிறகு, புராண ஆசிரியர் கருவூரார் கதை 'கருவூர்த் தேவர் கதி பெறு சருக்கம்' என்ற பெயரில் 147 பாடல்களால் சொல்லுகிறார். தேவர் என்று சொன்ன போதிலும் கூட, இவர் பாடுவது சித்தர் கதையே. இப்புராண ஆசிரியர் பெயர் தெரியாவிட்டாலும், இவர் தாம் கமலை ஞானப் பிரகாசர் (காலம் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) மாணாக்கர் என்கிறார். புராணம் பாடிய காலம் சகம் 1540 (கி.பி. 1618) என்று தெரிவிக்கிறார். எனவே, கருவூராரும் இவர் போன்ற சில சித்தர்களும் வாழ்ந்த காலம், சிவவாக்கியர் முதலான சித்தர்கள் வாழ்ந்த காலத்துக்குப் பிற்பட்ட காலமாகும். ஆதலால் கருவூரார் போன்றோர் காலம் 15ஆம் நூற்றாண்டுக்கும் 17ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம், 16ஆம் நூற்றாண்டு எனக் கொள்ளுதல் பொருத்தம் என்று தெரிகிறது.*

**நூல்கள்**

*இச்சித்தர்கள் யாவருமே, ஞான நெறியல்லாது வேறு பல நெறி பற்றிய நூல்களும் செய்திருக்கிறார்கள். இவ்வாசிரியர் பாடியன சில கிடைக்கின்றன. கருவூரார் சூத்திரம் 116 என்பது ஒன்று 166 பாடல் கொண்டது. இது ரசவாத நூல் அக்காலச் சித்தர்களின் மனத்தை ஆட்கொண்டிருந்த பல துறைகள் ரசவாதம், காயகற்பம், வைத்தியம், யோகம் முதலாயின. அக்காலத்தார் ரசவாதமும் ஒரு விஞ்ஞான முறை என்றே கருதி நூல்கள் மூலமும் சோதனை மூலமும் அதை வளர்த்திருந்தார்கள். ஆதலால் கருவூர்ச்சித்தரும் அத்துறையில் நூல் செய்ததில் வியப்பில்லை. நூல் பின்வரும் பாட்டோடு முடிகிறது.*

வாங்கி ஏழுவெள்ளி செம்பு மூன்று
மாற்றியதை உருக்கிடவே மாற்றே மூாகும்
பங்கியைச் செம்பு தொழிலுக் கெல்லாம்
பண்பகப் பேதையாம் பாரு பாரு
ஏங்கியே திரியாதே இல்லறத் தோடே
இருந்துகொண்டே காயசித்தி இதமாய்ச் செய்து
நான்கென்ற சாதிக்குள் சஞ்சரித்து
நந்தியைப் போல் வாழ்பவர்க்கு முத்தி முற்றே.

## கருவூரார் பூசாவிதி

*இது இவருடைய சிறப்பான நூல்; அந்தாதியாக 30 விருத்தங்களும் காப்பு ஒன்றும் உடையது. இந்நூலில் வரும் சொகுசு, துரைப்பெண் என்ற இரு சொற்கள் சிறப்பாய்க் கருதத்தக்கன. சொகுசு, துரை என்ற இரு சொற்களும் 14ஆம் நூற்றாண்டில் முதல் முதல் வருகின்றன (பத்திரகிரியார் பாடல், இரட்டையர் பாடல்). இச்சொல்லைக் கருவூரார் பயன்படுத்துவதும் கால அமைதிக்குப் பொருந்துவது.*

*இந்த நூலில் ஆசிரியர் வாலையை வழிபடுகிறார். வாலை யாவது ஒரு சக்தி பேதம். பருவமடையாத இளம் பெண்ணாகச் சக்தியை வழிபடுவது சாக்தத்தில் ஓர் அம்சமாகும். ஆசிரியர் இதையே குறிப்பிடுகிறார். "வானோன் வைத்துப் பூசை பண்ண இந்த மார்க்கம் வந்தவர்க்குச் சத்தி சிறுபிள்ளைவாலை" என்றும், "பூணாத பணிபூண்டு சிறு பெண்ணாகப் போதமெனும் பொருள் பறிக்க வருவாள்" என்றும், 'தேனென்ற மொழிச்சி இவள் சித்தர்க்கெல்லாம் சிறுபிள்ளை பத்து வயதுள்ள தேவி' என்றும் பாடுகிறார். ஞானத்தால் ஞான வடிவான இறைவியைப் பூசை செய்யக் கற்றவர்களுக்கு நாரேது, பூவேது, வாசமேது, நல்ல புஷ்பந்தானேது, பூசையேது என்கிறார்.*

*பல நூலைப் படித்து படுகுழியில் வீழ்வார் என்கிறார். யோக மார்க்கத்தில் செல்லும்போது அங்கு காண்கின்ற ஒளியையும் ஒலியையும், மந்திரங்களையும் குறிப்பிட்டுச் சொல்கிறார். பெண்ணாசையை விட்டுத் துறவு பூண்டு செய்வோர் பூசையெல்லாம், மனம் அடங்காதபோது, பயனற்றது என்கிறார். பதினெட்டுச் சித்தர் என்று இவர் பாடலில் வருகிறது. வீடு வாசல் என்ற தொடரை எடுத்து ஒரு பாடலில் 8 வரிகளிலும் வீடு என்ற முடிவும், அடுத்த பாடலில் வாசல் என்ற முடிவும் வருமாறு பாடியிருக்கிறார்.*

புகலுவார் வேதமெல்லாம் வந்த தென்று
பொய்பேசி சாத்திரங்கள் மிகவுங் கற்று
அகலுவார் பெண்ணாசை விட்டோ மென்று
அறிவுகெட்டு ஊர்தோறுஞ் சுற்றிச் சுற்றி
சகலமுமே வந்தவர்போல் வேடம் பூண்டு
சடைமுடியுங் காஷாயந் தன்னைச் சாத்தி
இகலுமன மடங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெல்லாம் பெண்ணாசை பூசை தானே.

தேனென்ற மொழிச்சி, பத்து வயதுள்ள தேவி, மயங்காதே மவுனத்தில் நில்லுநில்லு; வாய் சமர்த்துப் பேசாதே மவுனத்தூணு. பத்தியில்லார்க் குரைத்து மனம் பாழ் போக்காது தேவி பூசை சீர்பெற்றார் பதினெட்டுச் சித்தர், மூன்றெழுத்தை யறியார் கொட்டுமொரு தேனுருவாய் நிற்கும் பாரு, ஆசுகவி மதுரமது மொழியும் வீடு அவனவளும் கூடி விளையாடும் வீடு; முக்கிய மாய் மவுனத்தை அதிகம் வற்புறுத்திப் பேசுகிறார்.

ஆத்தாளைப் பூசித்தான் அவனே சித்தன் என்கிறார். நூல் முழுவதும் குழூஉக் குறியாகவே உள்ளது. இருப்பினும் ஓரளவு யோக மார்க்கம் அறிந்தவர்க்கு இது நல்ல நூல் என்பதில் ஐய மில்லை. தாம் கருதிய செய்திகளை ஆசிரியர் சுவைபடவே சொல் லுகிறார்.

கருவூரார் வைத்தியம் இவர் செய்த மற்றொரு நூல். வேறு பல நூல்களும் இருத்தல் கூடும்.

## காக புசுண்டர்

புஜண்டர் தீர்க்காயுசு வகித்த ஒரு பெரியர். இவர் காக வடி வினராகலின் காக புஜண்டரென்று சொல்லப்படுவர். ஒரு யுகாந் தத்தில், சிவ சந்நிதியிலிருந்த யானை யாடு ஒட்டகம் கரடி முத லியவற்றின் முகங்களையுடைய பல்வகைப்பட்ட எண்ணிறந்த சிவகணங்கட்கிடையே சத்தி கணங்களிற் சிலர் நடித்தனர். அங்கிருந்த அணிமாதி அடை சுவரியங்களையுமுடைய சயை, விசையை, சயந்தி, அபராசிதை, சித்தை, இரத்தை, அலம்பதை, உற்பலை யெனப்படும் அட சத்திகளும் சிவாக்கினை பெற்று உற்சவங் கொண்டாடி மதுபானிகளாய் நடித்தமையின், அச்சத்தி களுடைய வாகனங்களும் மதுமயக்குற்று களித்திருந்தன. அப் பொழுது, பிரம சத்தியின் வாசனங்களாய பெண்ணன்னங்கள்

சண்டனென்னும் வாயசத்தைக் கூடி மகிழ்வு மிக்குக் கருப்ப மாயின. விழாவொழிந்து ஆடல் பாடல்கள் நிறுத்தப்பட்ட பிறகு சத்திகள் முதலினோர் தத்தம்பதி சேர்கையில், பெண்ணன்னங்கள் தாம் கருவுற்றமையையுணர்ந்த பிரமசத்தி நீங்களினி என்னைத் தாங்கும் வலிமையில்லீராகலின் நும் விருப்பின்படியே செல் லுதிரென விடுத்து நிர்விகர்ப்ப சமாதியிருந்தனள். அன்னங்கள் கருப்ப முதிர்ச்சியால் கால நியதியில் முட்டையிட்டன. அவற் றினின்று புஜண்டர் முதலிய இருபத்தொருவர் பிறந்தனர். புஜண்டர் முதலிய இருபத்தொருவரும் தாய்மார்களுடன் பிரா மியைக் கருதிப் பெருந்தவஞ்செய்ய, பிராமி சமாதி நீங்கியருள ஞானம் பெற்ற அவ்விருபத்தொருவரும் தங்கள் பிதாவாகிய சண்டனை வினவ அச்சண்டன் அலம்புதையருள் பெற்று இக் கற்பக விருஷத்திலேயிருக்கவென, அப்படியே அங்கு அனேக யுகங்கள் வசித்த பின்னர், புஜண்டர் நீங்கிய மற்ற இளைஞர் இருபதின்மரும் தேகமழிவதென அதனையொழித்து முத்தி யெய்தினர். புஜண்டர் அதனைக் காத்துக் கற்பக நிழலில் வசித் திருக்கையில் வசிஷ்டர் தன் எட்டாம் பிறப்பில் அங்குற்று அவ ருடன் சம்பாஷித்தனரென ஞானவாசிஷ்டத்தால் உணரப்படும்.

இவர் காக வடிவிலேயே இருந்து நூல்களைச் செய்தார் என்று ஐதிகக் கதைகள் கூறும். இவருடைய நூல்கள் காக புசுண்டர் ஞானம் 89, உபநிடதம் 31, காவியம் 33, குறள் 16 என்று பெயர் பெறும். ஞானம் 19ஆம் பாட்டில் தம்மைக் 'காணாத காட்சியெலாம் கண்ணிற்கண்டு காகமடா புசுண்டரென்று பேரும் பெற்றேன்' என்கிறார். கொங்கணரைக் குறிப்பிடுகிறார். இவருடைய மாணாக்கர் வாசிமுனி (வாசி நாதர்) என்பவர் போலும். அடயோகமென்பர்கள் ஆகாதப்பா, காமப்பேய் கொண்டவனோ டிணங்கிடாதே, விளையாடிக் கருநெல்லி பறித்து உண்ணு; சிவபெருமான் தம்மைக்காக ரூபமாய்க் கயிலையில் இருக்கச் சொன்னார்; சாதி குலம் எங்கட்கில்லை - என்பன இவர் கூற்றுக்களுட் சில. போலிக் குருக்களை எங்குமே கண்டிக்கிறார்:

குறியென்ற உலகத்திற் குருக்கள் தானும்
கொடியமறை வேதமெல்லாங் கூர்ந்து பார்த்து
அறியாமற் பிரமத்தைப் பாராமற்றான்
அகந்தையாய்ப் பெரியோரை அழும்பு பேசி

விரிவான வேடமிட்டுக் காவி பூண்டு
வெறும் பிலுக்காய் அலைந்திடுவார் நாயைப்போல
பரியாச மாகவுந்தான் தண்டு மேந்திப்
பார்தனிலே குறடிட்டு நடப்பான் பாரே. 34

*மெய்ஞ்ஞானியின் நிலையை மற்றொரு பாட்டில் கூறுகிறார்.*

வானென்ற அண்டமதிற் சென்று புக்கு
வடவரையி லுச்சிநடு தீபங் கண்டு
தேனென்ற சுத்தசிவ கங்கை தன்னில்
தீர்த்தங் ளாடித்திரு நாம மிட்டுக்
கோனென்ற மனதன்பாய் மலராய்ச் சாத்திக்
கொடியமறை வேதமுந்தா னடக்கக்கண்டு
தேனென்ற சித்தமே புத்தி யாகத்
தெளிந்தவரே மெய்ஞ்ஞானி யாகும் பாரே.

*உபநிடதம் என்ற நூலில், ஹம்சோகம் அசபா மந்திரம் என்பன குறிப்பிடுகிறார். வீணல்லோதியான தாரணைகளெல்லாம், மெய் பிரகாசிக்கும் வரை வேணுந்தானே என்கிறார். இறுதிப் பாடலில் உபநிடதப் பொருளைத் தாம் சொல்வதாக இவர் கூறுவதால், இந்நூலுக்கே உபநிடதம் என்று பெயர் வைத்தார்கள் போலும். காவியம் என்ற நூலில் குரு நமசிவாயம், தசதீட்சை, வாலை கன்னி, மவுனப்பெண், சிவராஜயோகம் என்றெல்லாம் பாடுகிறார்.*

*இந்த நூல் 16 குறட்பாக் கொண்டது. இங்கும் சிவராஜயோகம், வாசிமுனி மைந்தன் என்று குறிப்பிடுகிறார். குறள் யாப்பு பற்றி ஒரு செய்தி இங்கு நினைவுபடுத்தலாம். திருவள்ளுவர் திருக்குறள் பாடிய பிறகு, குறள் யாப்பைப் பயன்படுத்த யாருக்குமே அச்சமாயிருந்ததுபோலும். வரலாறெங்கும் பார்த்தால், வேறு துறைகளுக்குக் குறள் யாப்பை யாரும் பயன்படுத்தியதில்லை. எல்லோரும் தத்துவப் பொருளைச் சொல்வதற்கே குறளைப் பயன்படுத்துகிறார்கள். 11ஆம் நூற்றாண்டின் சைன நூலான அருங்கலச் செப்பு, 14ஆம் நூற்றாண்டில் அவ்வையார் பாடிய ஞானக்குறள். உமாபதி சிவம் பாடிய திருவருட் பயன், பின்வந்த மெய்ஞ்ஞானப் பயன் முதலியன. 16ஆம் நூற்றாண்டில் மறைஞான சம்பந்தர் பாடிய பல சித்தாந்த நூல்கள் என்று நாம் பார்க்கிறோம். இந்த மரபில் இதே நூற்றாண்டில் காகபுசுண்டர் குறளும் எழுந்திருக்கிறது. இதே நூற்றாண்டின் முற்பாதியில்*

வாழ்ந்த மறைஞான சம்பந்தர் செய்த குறள் நூல்களை இவர் பார்த்தும் இருக்கலாம். பின்வருவன எடுத்துக் காட்டுக்கள்:

உலகமே மாயமென வுன்மனதிற் கண்டு
நலமாக நாதனடி நம்பு. 5

குரு நமசிவாயம் என்று இவர் சில முறை கூறுகிறார். இது, சிவபெருமானாகிய பரமகுரு என்றே பொருள்படலாம். இருப்பினும் பதினாறாம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் நமசிவாய தேசிகர் என்ற பெயருடைய ஞானியொருவர் குகையில் வாழ்ந்திருந்தார். அவர் ஓம் நமசிவாயகுரு என்று அவருடைய சீடரால் குறிப்பிடப்படுகிறார் என்ற செய்தியையும் இணைத்துப் பார்க்கும்போது, சித்த மார்க்கத்தினரான இக்காக புசுண்டர் ஒருகால் அந்த நமசிவாய குருவையும் அறிந்து பழகியும் இருந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. காலம் 16ஆம் நூற்றாண்டு என்பதும் இதனால் வலியுறுகிறது.

## கொங்கணர்

ஒரு தவசி, சித்தர். தம்மீது எச்சமிட்ட கொக்கை இவர் சினந்து நோக்கவும், கொக்கு எரிந்து வீழ்ந்தது கண்ட இவருக்கு கருவம் உண்டாயிற்று. திருவள்ளுவர் இல்லம் சென்று பிச்சை கேட்டபோது, வாசுகியம்மையார் பதிக்குப் பணிவிடை செய்தமையால் தாமதமாகவே, இவர் சினந்து நோக்கினார். 'கொக்கென்று நினைந்தனையோ கொங்கணவா?' என்ற அவ்வம்மையாரின் சொல்லால் கருவம் அடங்கி, அவரிடம் நல்லுபதேசம் பெற்று, ஒரு வேடன் வாழ்க்கை மூலம் பெற்றோரை வழிபடுவதே சாலச்சிறந்தது என்ற உணர்வும் பெற்றார். இவர் பெயரால் பல நூல்கள் வழங்குகின்றன - 25க்கு மேற்பட்டவை. இவை இரசவாதம், யோகம், சாக்தம், மந்திரம், வைத்தியம் முதலிய துறைகள் பற்றியன. இவர் பாடிய வாலைக்கும்மி மிக்க பிரசித்தி பெற்றது. இது பிற்காலத்தில் பெரிதும் வழங்கி வருகிற கும்மி மெட்டில் 110 கண்ணிகளைக் கொண்டது.* பாடல் தோறும் வாலைப்பெண்ணே என்று விளித்துப் பாடுகிறார். அஞ்செழுத்தைப் பல முறை குறிப்பிடுகிறார். அவ்வையின் நீதிகளை நான்கு

* கொங்கணர் பாடியவை குறையாகவே இருந்திருக்கும்; பிற்காலத்தில் வலவேந்திர துரையைப் புகழ்ந்து குருசாமி என்பவர் பல பாடல்களை இதனுள் சொருகியிருக்கிறாரென்று தெரிகிறது.

முறை குறிப்பிடுகிறார். பல பாடல்கள் யோக மார்க்கத்துக் குரிய குழூஉக் குறிகளைக் கொண்டியன்றவை. எனினும் இவர் சொல்லும் உலகியல் நீதிகளும் கருதத்தக்கன.

பின்வரும் பாடல்கள் காண்க:

ஊத்தைச் சடலமென் றெண்ணாதே – இது
உப்பிட்ட பாண்டமென் றெண்ணாதே
பார்த்த பேருக்கு ஊத்தையில்லை – இதைப்
பார்த்துக் கோஉன்ற னுடலுக்குள்ளே.

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதென்று
கண்டுகொண்டு முன்னவ்வை சொன்னாளது
உண்டோ வில்லையோ வாலைப் பெண்ணே.

வாலைக்கு மேலான தெய்வமில்லை – மானங்
காப்பது சேலைக்கு மேலுமில்லை
பாலுக்கு மேலான பாக்கியம் இல்லை – வாலைக்
கும்மிக்கு மேலான பாடலில்லை. 74

ஏழை பனாதிகளில்லை யென்றால் – அவர்க்
கிருந்தாலென்னங் கொடுக்க வேண்டும்
நாளையென்று சொல்ல லாகாதே – யென்று
நான்மறை வேதம் முழங்குதடி. 85

பச்சைப் பனாதியை யடிக்காதே – அந்தப்
பாவந் தொலைய முடியாதே.
தஞ்சமென் றோரைக் கெடுக்காதே – யார்க்கும்
வஞ்சனை செய்ய நினையாதே. 86

சிவனடி யாரை வேதியரைச் – சில
புலவர் ஞானப் பெரியோரை
மவுன மாகவும் வையாதே – அவர்
மனது நோகவும் செய்யாதே. 88

ஆடுங்கள் பெண்டுக ளெல்லாரும் – அந்த
அன்பான கொங்கணர் சொன்ன தமிழ்
பாடுங்கள் சித்தர்க ளெல்லோரும் – வாலைப்
பாதத்தைப் போற்றிக் கொண்டாடுங்கடி. 89

எல்லாச் சித்தரையும் போல இவர் சிலம்பொலி கேட்டலைக் குறிப்பிடுகிறார். இதனோடு வலம்புரிச் சங்கு ஊதுதலையும்

குறிப்பிடுகிறார்: இவை சித்தாந்த நெறியில் பரைபோகம் என்ற நிலையில் அனுபவிக்கும் ஓசைகளாம்.

இச்சித்தருக்கும் திருவள்ளுவர் கதைக்கும் தொடர்பில்லை. கொங்கணர் குணவாகடம் இடைக்காண்டம் என்ற நூல்களும் சொல்லப்படுகின்றன.

## சட்டைமுனி

சட்டையிட்டே இருந்தமையால் இவருக்கு இப்பெயர் போலும். சட்டைமுனி என்றும் சொல்வதுண்டு. 12க்கு மேற் பட்ட நூல்கள் இவர் பெயரால் கிடைக்கின்றன. யாவும் ஞானம் ஞான நூல் சாத்திரம் நிகண்டு என்ற பெயருடையவை. யாவும் வைத்தியம் யோகம் இரசவாதம் பற்றியவை. நிகண்டு என்று பெயரிருப்பினும் பொருள் வைத்தியமே. சட்டைமுனி ஞானம் 4 என்பது நாற்பத்து முக்கோணத்தில் வாலையைப் பெண்ணாசை தன்னைவிட்டு வந்தால் பேரின்ப முத்தி வழி பேசுவேன் என்கிறார். முழுமையும் மூச்சை அடக்கிப் புருவ மத்தியில் சதாசிவனைத் தியானம் பண்ணும் நெறியைச் சொல்கிறார். பஞ்சபட்சி சாத் திரமும் இவர் பெயரால் உள்ளது.

அவரவர்கள் பிழைப்பதற்காகவே நாலு வேதம் ஆறு சாஸ்திரம் பதினெண் புராணம், நாலுசாதி அமைத்தார்கள். ஆனால் தானென்று உலகத்தில் இல்லாவிட்டால் தன் பெருமை யாலழிந்து வீழ்வார். உடலெடுத்தால் எல்லாம் வேணும், பாஷை வேணும். சிவகாமியும் சிவனும் கூடி முனிவருக்கு மறைநூல் சொன்னார். இரு சுவாசம் காண்பவனே சிவ சித்தன்; சித்தம் தெளிந்திருப்பவனே சித்தன்; செகமெலாம் சிவமென்று அறிந் தோன் சித்தன்; மூடருக்கு இந்நூலைக் காட்டாதே என்பன இவர் கூற்றுக்கள்.

பூசித்தலைக் கூறுகிறார், மேரு, மேரு பூசை சொல்கிறார் வாலையைப் புவனை என்ற பெயரில் குறிப்பிடுகிறார். முன்ஞானம் 100, பின் ஞானம் 100 என்பன வேறு இரு அந்தாதி நூல்கள். முன் ஞானத்தில் பெண்ணாசையை விரிவாகக் கண்டிக்கிறார். கொங்கணரை மிகவும் போற்றுகிறார், இவர் சிலம்பொலி கேட்டவர் என்று வியக்கிறார். பின் ஞானம் என்ற நூலிலும் கொங்கணர் புகழையே விரித்துப் பாடுகிறார்: 'கொங்கணரே சித்தர், மற்றோரையான் காணேன்' என்கிறார்: மூல குருவின்

பிள்ளை காலாங்கி (பிள்ளை என்பது ஞான புத்திரன் என்ற பொருளில்). அவர் பிள்ளை போகர், அவர் பிள்ளை கொங்கணர் என்கிறார்; நான் பேரன் என்கிறார். தாம் 'நிகண்டாக வாதம் சொன்னேன்' என்றும் கூறுகிறார்.

அகார உகாரமகாரம், விந்து நாதம், சத்தி சிவம், சரியை கிரியை யோக ஞானம் என்ற பொருள்கள் விரிவாய்க் கூறுகிறார். யானை ஊற்றின், மீன் சுவையின், அசுணம் இசையில் அளி நாற்றத்தில், பதங்கம் உருவத்தில் - மயங்கி உயிர்விட நேரும் என்பன மரபு (சாந்திபுராணம், திவாகரம்). இவர் சொல்வது; பரிசம் (ஊறு) கொசுகு, உருவம் வண்டு, ஒலி மான், சுவை மீன், மணம் எறும்பு. கேசரி யோகத்தைப் பலமுறை குறிப்பிடுகிறார். சிவபெருமான் பாம்பணிந்ததைப் பெருக்கிச் சொல்கிறார் (36). சுந்தரானந்தர் என்கிறார் (57).

இவர் திருமந்திரத்தில் 113 பாடல்களுக்கு உரை எழுதியிருக்கிறார். அவ்வுரையை ஆய்ந்த இடத்து இவர் வரலாற்றில் ஏனைய செய்திகள் உரைக்கப்பட்டன. அங்கு இவருக்குச் சொல்லிய பெயர் கயிலாயக் கம்பளிச் சட்டை முனி; கயிலாயச் சித்தர் கயிலாயச்சட்டை என்ற பெயரை இங்கும் சொல்லுகிறார் (63) புசுண்டரையும் குறிப்பிடுகிறார். தாம் முன்ஞானம் 100 பின்ஞானம் 100 பாடியதோடு, இருபத்தைந்து நூறு பாடியிருப்பதாகச் சொல்கிறார்.

தட்சிணாமூர்த்தியின் சீடர் தம்மோடு ஒன்பது பேர் என்கிறார். சனகாதி நால்வர், திருமூலர், சண்டிகேசர், வியாக்கிரமர், பதஞ்சலி. இக்கூற்று உலகத்துக்கு அதீதமானநிலை. சனகாதி வேதாந்தம் கோடி சொன்னார்; சண்டிகேசர் மவுனம்; பதஞ்சலி அனேகங்கோடி; திருமூலர் அனேகம்; வியாக்கிரமர்; யான் இருநூறு ஞானம் சொன்னேன்.

சட்டை முனி கற்பவிதி, கற்பம் நூறு, சட்டைமுனி ஆயிரம், சட்டை முனி நிகண்டு, ஆயிரத்திருநூறு, சட்டை முனிவாத காரியம் ஆயிரம், சடாட்சரக்கோவை என்பன இவர் பெயரால் உள்ள சில நூற் பெயர்கள். 1000, 1200 பாடல் என்று அனாயாசமாக இவ்வகை ஆசிரியர் பாடுவது இவர்களுக்கிருந்த பாடல் திறனைக் காட்டுவதோடு, பாட்டுக்கிருந்த பெரு மதிப்பையும் காட்டுகிறது. சட்டைமுனி ஆயிரத்தில் ஒரு பாடல்:

நிற்குணமாய் நிர்மலமாய் நிரஞ்சனமு மாகி
நேரான பூரணமாய் மனமெட் டாத
சற்குணமாய்ச் சமரசமாய்த் தானுந் தாண்டி
சச்சிதா னந்தவெளிக் கப்பால் நின்ற
தற்குணமாய் எனையாண்ட தன்மயத்தைப் போற்றிச்
சமரசமாய் வேதாந்த வாதஞ் சொல்வேன்
நற்குணமாம் சனகாதி ரிஷிகள் பாதம்
நலம்பெறவே நாவில் வைத்துப் பாடு வேனே.

## சுந்தரானந்தர்

*இவர் சட்டை முனியின் மாணாக்கர். மந்திரம், வைத்தியம், இரசவாதம் பற்றிய இவர் நூல்கள் ஒன்பது உள்ளன. சுந்தரானந்தர் சூத்திரம் 110இல் முதல் பாடல்:*

ஆதியந்த மிகநிறைந்த சட்டை நாதர்க்
கன்பான சோதியென்ற பிள்ளை யாகிச்
சோதியந்தத் துள்ளிருக்குஞ் சுடரைப் போற்றி
சுந்தரமென் றேபேரு மிட்டார் எங்கள்
நாதாந்தத் திருமூலர் பிண்ணாக் கீசர்
நாதரகத்தீசர் பாதம் போற்றி யேதான்
மேதினியி லன்புடனே வாதம் பார்த்தேன்
வேதாந்த சிற்பரைதான் காப்ப தாமே.

*சட்டை முனி பின்ஞானம் 57ஆம் பாடலில் இவரைக் குறிப்பிடுகிறார்.*

## சூரியானந்தர்

*இவர் இருநூல்கள் செய்ததாகத் தெரிகிறது: முறையே பதின்மூன்று, இருபத்தைந்து என்று பெயர் பெறும். இரண்டும் இரசவாத நூல்கள். பதின்மூன்று என்ற நூலில் உப்புக்களுக்குச் செய்கிற செயல் முறைகளைத் தீட்சை என்கிறார். கொங்கணர் தீட்சை மார்க்கம், தச தீட்சை, அஞ்சு தீட்சை என்பன சில குழூஉக் குறிகள். சவுக்காரம் ஓர் உப்பாகச் சொல்லுகிறார். 12ஆம் பாடலில் தம் பெயரைக் குறிப்பிடுகிறார். இந்நூலின் இறுதிப் பாடல் பின்வருவது:*

சொல்வதென்ன ரேசகத்தை வெளி விடாதே
துடியான பூரகத்தைப் பின்னி டாதே
வெல்வதென்ன கும்பகத்தை யடிவி டாதே
மேலேற்று மாத்திரையை மறந்தி டாதே
சொல்வதென்ன கற்பகத்தை மறந்தி டாதே
செந்தூரஞ் சேர்க்கையிலே சிதறி டாதே
சொல்வ தென்ன அமுர்தயிலே பறக்கு மிந்தக்
குளிகைக்குச் சாரணைசெய் குணமும் மாற்றே.

## சுப்பிரமணியர் ஞானம்

முருகனாகிய சுப்பிரமணியர் அகத்திய முனிக்கு உபதேசித்த ஞானம் என்று இது பொருள்படும். அச்சில் இதில் 35 பாடல்கள் உள்ளன. கயிலாயத்தில் சக்தி சிவம் இருந்து, கிரியை வலம் வந்தோனுக்கு இந்த மாங்கனி என்று சொல்லவே, குமரன் மயிலேறி வலஞ் சென்றார். கணபதி மேருகிரி நீர்தான் என்று வலம் வந்து வணங்கி மாங்கனி பெற்றார். பின்னர் வந்த முருகனை இருவரும் மலைக்கரசாய் இருந்து வாழ் என்று வாழ்த்தினர். அதன் மேல் குமரன் மயிலேறிச் சுற்றி வரும்போது தபோதனர் கண்டு பணிந்தார்கள். தங்கள் தவத்துக்கு இடையூறு செய்யும் அசுரரை ஓட்ட வேண்டும் என்று வேண்டக் குமரன் அப்படியே அசுரர்களை நிர்த்தூளி செய்தான். அந்த நேரம் அகத்தியர் வந்து பணிந்து உபதேசம் கேட்கக் குமரன் அவருக்குச் செய்த உபதேசமே இந்த நூல். பஞ்சாக்கர மந்திரத்தின் பல நிலைகளை 2 பாடல்கள் கூறுகின்றன. 4 பாடல்கள் பீஜ மந்திரம் செபித்தலைக் கூறுகின்றன. சத்தி தியானம் முக்கியமாய்ச் சொல்லப்படுகிறது. சதுரகிரி, பொதிகை முதலான மலைப்பெயர்கள் இங்கு குழூஉக் குறியாக வருகின்றன. அட்டாங்கயோகத்து ஏகி, சிவாய குரு பதத்தில் தெளிவாய் நில் என்று ஆசிரியர் நூலை முடிக்கிறார்.

## திருமூல சித்தர்

திருமூலர் வரலாறு தமிழ் இலக்கிய உலகம் நன்கறிந்தது. சுந்தரர் அவரை நாயன்மாருள் ஒருவராகப் பாடுகிறார். ஆகவே அவர் சுந்தரர் காலமாகிய கி.பி.700க்கு முற்பட்டவர். காலம் கி.பி. 4-5 நூற்றாண்டுகளாக இருக்கலாம். அவர் பாடிய திரு மந்திரம் சைவத் திருமுறைகளில் பத்தாவதாக, இராசராச சோழ மன்னன் வேண்டியவாறு நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்

பட்டது. தமிழ் இலக்கிய மரபில் சித்தர்களுள் அவரே முதலாமவர் என்று சொல்லுவதும் உண்டு. அவர் வரலாற்றைப் பாடிய சேக்கிழார் அவரை யோகி என்றும் அணிமாதி அருஞ்சித்தி பெற்றுடையார் என்றும் கூறுவது காணத்தக்கது.

திருமூலர் தமது திருமந்திரம் முழுமையும் (3000 பாடல்) கலிவிருத்தம் என்ற ஒரே யாப்பில் பாடினார். இதுபற்றி, பிற்காலத்தில் கலிவிருத்தத்தால் யோகம் ஞானம் முதலான பொருள்கள் பற்றி யார் பாடினாலும், திருமூலர் பாடல் என்றே பெயரிட்டு விட்டார்கள் என்று சொல்லத் தோன்றுகிறது. இவ்வாறு 12க்கு மேற்பட்ட நூல்கள் கிடைக்கின்றன. இவை வைத்தியம் யோகம் ஞானம் முதலான பொருள்கள் பற்றியவை. இவற்றில் சில இந்த நூற்றாண்டில் செய்யப்பெற்றன என்று கருதி இவை பற்றிச் சில சொற்கள் இங்கு கூறுகிறோம். இவை செய்த ஆசிரியர் யாராயிருப்பினும், திருமூலர் என்று பெயர் வைத்து விட்டார்கள் என்று தெரிகிறது.

திருமூலர் ஞானம் என்பது சித்தர் கோவையுள் சேர்க்கப் பட்ட நூல். அந்தாதி, 11 பாடல் இறுதிப் பாடலில் தம் பெயரைக் குறிப்பிடுகிறார். அது மட்டுமல்ல: ஒவ்வொரு பாடலிலும் மூலம் என்ற சொல் வருகிறது; அது பற்றித்தான் இந்நூல் திருமூல நாயனார் செய்ததாகச் சொல்லப் பெற்றிருக்கலாம். நூல் பிரண வத்தையும் ஓங்காரத்தையும் சொல்கிறது. பின்வரும் பாடல் எடுத்துக்காட்டு:

**மேவியதோர் சற்குருவின் பாதந் தன்னை**
**மெய்ஞ்ஞான மென்றதனை மேவிக் கொண்டு**
**ஆவியுடல் காயமெல்லாம் அறிந்து பார்த்து**
**அத்தனார் வடிவமென்றே அறிந்து கொண்டு**
**பாவனையுள் ஆனதெல்லாம் விட்டு நீங்கிப்**
**பகலிரவு அற்றிடத்தே கருத்தை வைத்துச்**
**சீவனையும் சிவன்தனையும் ஒன்றாய்த் தானே**
**திருமூலர் பாதமென்றே திடமாய்க் காணே.**

திருமூலர் வைத்திய நூலொன்று, 13 பாடல் உடையது; அச்சிடப்பட்டுள்ளது. கலிவிருத்தம் என்று கூறியதற்கு இது தக்க எடுத்துக்காட்டு. ஒரு பாடல்:

**வளப்பங்கேள் பூமிதான் வாசிக்கு நாசியில்**
**தளப்பமாம் வன்னி தானுறும் கண்ணிலே**

அளப்பமாம் அப்பு அடங்கிடும் நாவிலே
பளப்பதவ் வாயு பரிசிக்கும் எங்குமே.

திருமூலர் தண்டகம் நூற்றிரண்டு என்ற வைத்திய நூலில் 'நந்தி குருவான மூலம் நான் கண்ட தண்டகம் நலமாம் முற்றே' என்று முடிக்கிறார்.

திருமூலர் திருமந்திரம் ஆயிரம் என்பதும் மற்றொரு வைத்திய நூல்; பாடல் 1004. அதன் பாடல் ஒன்று.

கமன மொன்றல்ல கன்னிக்குத் தம்பனம்
கமன மொன்றல்ல கனல்தான் வசியமாம்
கமன மொன்றல்ல கழியாது காயங் கேள்
கமன மொன்றல்ல கல்லும் பொன்னாகுமே. 15

திருமூலர் பெயரை அமைத்த நூல்கள் பின்னும் அனேகம் உள்ளன. யாவற்றையும் இங்கு சொல்லவில்லை. ஒரு கருத்தை மட்டும் சொல்லலாம். பிற சித்தர்கள் தங்கள் பாடல்களில் ஏனைய சித்தர் ஒருவர் பெயரையோ பலர் பெயரையோ குறிப் பிடுகிறார்கள். இவர் யார் பெயரையும் குறிப்பிடவில்லை.

## திருவள்ளுவர்

திருவள்ளுவர் ஞானம் என்ற பெயரால் 16 பாடல்கள் சித்தர் கோவையுள் காணப்படுகின்றன. இங்கு எண்சீர் விருத்தம், கலி விருத்தம், கட்டளைக் கலித்துறை, வெண்பா ஆகியவை காணப் படுகின்றன. இவை அப்படியே ஞானவெட்டியான் என்ற நூலில் வேறிடங்களில் காணப்படுகின்றன. அந்நூலின் காலம் 17-18ஆம் நூற்றாண்டு. இப்பாடல்கள் சித்தர் பாடல்களல்ல.

## நந்திதேவர்

இவர் பெயர் நந்நீசுவரர் எனவும் வழங்கும். இவர் செய்த நூல்கள் யாவும் இரசவாதமே. அபூர்வமாய் ஒன்று வைத்தியம், ஒன்று பூசாவிதி, நூற்பெயர்கள் - தண்டகம், வாத சூத்திரம், கரகைப்பா 500, கைத்தாள சூத்திரம், நடுவணை, பாயிரம் என்று வருவன. பூசாவிதி என்பது 12 பாடலுடையது; எல்லாப் பாடல் களும் கேளப்பா பாரப்பா என்றே தொடங்குவன. விக்கினேசர், சண்முகம், சிவம், தேவி, விஷ்ணு பூசை சொல்லி, பின் ரேசகம்

பூரகம் கும்பகப் பூசைகளும் சொல்லுகிறார். தேவி பூசைக்குரிய பாடலொன்று மட்டும் கேளப்பா என்று தொடங்கவில்லை. அப்பாடல் பின்வருவது (4):

தானான சிவத்தினிட பூசை சொன்னேன்
வன்மையுள்ள சக்தியுட பூசை கேளு
வானான யிம்மென்றுங் கும்ப கத்தில்
வட்டவள மாகவொரு மனதாய் நின்று
ஆனான கதம்பகத் தூரிபுஷ்பம் வைத்து
அப்பனே பால்பழுங்கள் வஸ்து வைத்து
மானான தேவியைத்தான் தோத்த ரித்து
மைந்தனே சாஷ்டங்கஞ் சரணம் பண்ணே.

பாடல்கள் யாவும் அந்தாதி.

## போகநாதர்

போகர் என்ற பெயர் சித்தர் வரிசையில் மிகவும் சிறப்புடைய ஒரு பெயர் - பலரும் போகர் பெயரைக் குறிப்பிடுகிறார்கள். தமிழில் இவர் பெயரால் வழங்கும் நூல்கள் யாவும் வைத்தியம் பற்றிய நூல்களே - போகம் திருமந்திரம், போகர் யோகமார்க்கம், போகர் எழுநூறு, போகர் நிகண்டு முதலியன - சித்தர்களிலே அனைவரினும் இவர் மேலானவர் என்றும் நெடுங்காலம் வாழ்ந்தார் என்றும் கதைகள் உள்ளன. அவ்வளவையும் அறிவியல் வளர்ச்சி பெற்ற இந்த நூற்றாண்டில் நம்புவது கடினம். ஒரு போகர் பழனிமலை மீது சமாதி கொண்டாரென்றும், அந்தச் சமாதியின் மீது எழுந்ததே தண்டாயுதபாணி சுவாமியின் கோயில் என்றும், போகருடைய பெருமையே அந்தச் சந்நிதியின் பெருமைக்குக் காரணம் என்றும் பலர் நம்புகிறார்கள். மற்றொரு போகர் இராசராச சோழன் காலத்தில் வாழ்ந்தார் என்றும். அம்மன்னன் தஞ்சைப் பிரகதீசுவரரைப் பிரதிட்டை செய்தபோது பாணத்தை நிறுத்த வேண்டிய மருந்து இளகிப் பிடிக்காமலேயிருந்ததென்றும், அதை இறுகச் செய்ய வல்லவர் கருவூர்ச் சித்தரே என்று அங்கேயிருந்த போகர் உணர்ந்து ஒரு காக்கையின் காலில் முறி எழுதி அவருக்கு அனுப்பி வரவழைத்து அவரைக் கொண்டு மருந்து இறுகச் செய்தாரென்றும் மற்றொரு கதை கூறும். திருமந்திரம் பாடிய திருமூல சித்தருடைய மாணாக்கர் காலாங்க நாதர் என்றும் அவருடைய மாணாக்கர் போகர்

என்றும் ஒரு வரலாறு கூறும். இவரே பெரிய வைத்தியர். போகர் 700, போகர் 7000, போகர் சூத்திரம், போகர் புசாவிதி, போகர் நிகண்டு, கற்பவிதி முதலான இருபதுக்கு மேற்பட்ட நூல்கள் செய்தார் என்றும் வழக்குக்கள் உள்ளன. எனினும், மிகவும் பிற்காலப் பாடல்களை (19ஆம் நூற்றாண்டு கூட)ச் சேர்த்துக் கொண்ட பதினெண் சித்தர் ஞானக்கோவை போகரைச் சேர்த்துக் கொள்ளவில்லை என்பது வியப்பாகவே இருக்கிறது.

ஆனால் ஒரு செய்தி தெளிவாகக் கிடைக்கிறது. 16ஆம் நூற்றாண்டில் சிவஞானசித்தியார் பரபக்கத்துக்கு உரை செய்த திருவொற்றியூர்த் தத்துவப் பிரகாசர் இவர் பெயரைத் திருப் புகலூர் சுவாமி என்றும் திருப்புகலூர்ப் போகநாத சுவாமி என் றும் இருமுறை குறிப்பிடுகிறார். இதனால் போகநாதர் என்ற பெயர் தரித்த ஒரு பெரியவர் திருப்புகலூரில் 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தார் என்பது திட்டமாகத் தெரிகிறது. திருப்புகலூர் சைவ மரபில் சிறப்புடைய தலம்; 'புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என்று அப்பர் சுவாமிகள் பாடிப் பெருமானோடு இரண்டறக் கலந்துவிட்ட தலம். ஆகவே பிற இடங்களில் முன் வாழ்ந்த போகநாதர் தம் இறுதிக் காலத்தில் இங்கு வந்து தங்கி முத்தி பெற்றிருக்கலாம். இவ்வளவே இவரைக் குறித்து கிடைக்கும் வரலாற்றுச் செய்தி. வரலாற்று நிறைவின் பொருட்டே இச்செய்திகளை இங்கு குறிப்பிட்டிருக்கிறோம்.

## வால்மீகர்

ஞானம் பதினாறு என்ற நூல் பாடியவர். 11ஆம் பாடலில் தம் பெயரைக் கூறுகிறார். இந்நூற் பாடல்கள் 16 என்று இரு முறை கூறுகிறார். வாலையைத் துதிக்கிறார்; சிவகாமி என்றே பாடுகிறார். ஞான யோகத்தைக் கூறுகிறார். போலிக் குருக்களைக் கூறுகிறார். இராமாயணம் செய்தவர் பெயரை இவருக்கு அமைத்தார்கள் போலும்.

பூரகம் சரியை, கும்பகம் கிரியை, ரேசகம் யோகம், பிசகாமல் நின்றது ஞானம். பெருநூல் பார்த்தோர் கண்டதையெல்லாம் சரியை என்பார்; கல்லைச் செம்பைப் பூசிப்பார் கிரியை; யோகம் - காய் கனியைத் தின்று ஊமை போல் திரிகுவார்; ஞானம்-காக்கை பித்தன் மிருகம்போல் கத்துவார்கள்-என்பன இவர் கூற்றுக்கள்.

## அத்தியாயம் - 6

# பிரபந்த இலக்கியம்

## முன்னுரை

நன்கு யாக்கப்பட்டது பிரபந்தம். பழமையாகவே தமிழில் பிரபந்த வகைகள் விரிவாகத் தோன்றியிருந்தன. இப்பதினாறாம் நூற்றாண்டில் அவை பின்னும் சிறப்பாக அமைகின்றன. அது பற்றியே போலும் பிரபந்த இலக்கணங்களும் இந்த நூற்றாண்டில் சிறப்பாக எழுகின்றன. பாட்டியல் இலக்கண நூல்கள் 8-9 நூற்றாண்டுகள் தொடங்கி எழுந்திருக்கின்றன. பன்னிரு பாட்டியல் வெண்பாப் பாட்டியல் நவநீதப் பாட்டியல் முதலியன முன் வந்த நூல்கள். இக்காலத்து, பிரபந்த மரபியல் சிதம்பரப் பாட்டியல் ஆகிய இரு பாட்டியல் - பிரபந்த இலக்கண நூல்கள் தோன்றின.* இனி இந்நூற்றாண்டில் தோன்றிய பிரபந்தங்களைப் தொகுப்பாகப் பார்த்தால், முக்கியமான பிரபந்த வகைகளில் பல நூல்கள் தோன்றியிருப்பது தெரிகிறது. சிலவற்றைக் கீழே குறிப்பிடுகிறோம். சிலவற்றின் ஆராய்ச்சி இந்த அத்தியாயத்துள் உள்ளது. வேறு பிரபந்தங்கள் தோன்றவில்லை என்பது பொருளல்ல. நமக்குத் தெரியவந்து கிடைப்பவை இவையே. கிடைக்காதனவும் பல உள்ளன; பின்னும் எத்தனையோ இருந்திருக்கலாம், நமக்குத் தெரியவில்லை.

**அந்தாதி**

திருவருணையந்தாதி.

**உலா**

திருவேங்கட உலா (முன் நூற்றாண்டின் இறுதிக்குரியது, இங்கு ஆராயப் பெறுகிறது). சொக்கநாதர் உலா, திருப்பாலைப்

* இவற்றை இந்நூற்றாண்டு வரலாறு இரண்டாம் பாகம் அத்தியாயம் 4, பக்கம் 99-113 காணலாம்.

பந்தல் உலா*, திருக்காளத்தி நாதர் உலா, திருவாட்போக்கி (இரத்தினகிரி) உலா, சேயூர் முருகன் உலா.*

**கலம்பகம்**

திருவருணைக் கலம்பகம், திருப்பதிக் கலம்பகம்.*

**கோவை**

திரு ஆரூர்க் கோவை, பழனிக் கோவை, திருப்பதிக் கோவை, உத்தண்டன் கோவை.

**தூது**

தெய்வச்சிலையார் விறலிவிடு தூது.

**மும்மணிக்கோவை**

வலிவல மும்மணிக் கோவை, நம்பெருமாள் மும்மணிக் கோவை.*

இங்கு குறிப்பிட்டவற்றுள் உடுக்குறியிட்டவை இன்று கிடைக்கவில்லை. திருப்பதிக்கோவை இந்நூலில் ஆராயப் பெற்றுள்ளது. உத்தண்டன் கோவை அச்சாகவில்லை. இவை போக, இரு பிரபந்தங்கள் இக்காலத்துக்குரிய புதிய பிரபந்த விகற்பம் என்று கருதத்தக்கன. ஒன்று விறலி விடுதூது; முன்னமே தோன்றியதில்லை. (18ஆம் நூற்றாண்டில் கூளப்ப நாயக்கன் விறலி விடுதூது பிரசித்தி பெற்றபோதிலும் கூட, இக்காலத்தே தான் முதல் விறலிவிடுதூது எழுகிறது.) இது போலவே கோவை கள் பல இருப்பினும் முதல் வருக்கக்கோவை இக்காலத்தே தான் தோன்றுகிறது; பின்வந்தவை பல.

**திருவேங்கட உலா**

தமிழில் தோன்றிய பழமையான உலாப் பிரபந்தங்களில் இதுவும் ஒன்று. உலாவைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி இங்கு அவசியமில்லை.* பிற்காலத்தில் 96 என்று தொகைப்படுத்திச் சொல்லப்படுகின்ற பிரபந்த வகைகளில் உலா மிகவும் முக்கிய மான ஒன்று. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை தொடங்கியே பிரபந்தங்கள் எழுந்துவிட்டன. பின்னர் ஆழ்வார் நாயன்மார்

---

* உலாப் பிரபந்தம் பற்றிய எல்லாச் செய்திகளையும் ஐயரவர்கள் தமது உலாப் பிரபந்தப் பதிப்புக்கள் பலவற்றிலும் விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

பாடல்கள் மூலமாகவும் சோழர் காலத்தில் வளர்ந்த இலக்கியங்கள் மூலமாகவும் பிரபந்தங்கள் பெருகியிருக்கின்றன.

## உலாப் பிரபந்தம்

உலா என்பது இறைவன் நீராடி அலங்கரித்துக் குழாங்கள் புடை சூழ நையாத மனத்தினரையும் நைவிக்கும் பொருட்டு வீதியிலே உலாவரும்போது, சம்பிரதாயமான பேதை பெதும்பை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண் என்ற ஏழு பருவ மகளிரும் கண்டு காமுறுகிறார்கள் என்று பாடும் அமைப்புடையது. இது அடி வரையறையின்றி நிமிர்ந்து செல்லுகின்ற கலிவெண்பா யாப்பினால் பாடப்பெறும். இறைவனே ஆன்மாக்களுக்கெல்லாம் நாயகனாதலின் அவனை கண்டு பெண்டிர் காமுற்றனர் என்று சொல்லும்போது, பெண்டிர் மட்டுமல்லாது எல்லா உயிர்களுமே அவன்மீது காதல் கொண்டன என்று சொல்லும் பொருத்தமும் அமைகிறது. தலத்தின் சிறப்புக்கள், இறைவன் பெருமை, அவன் திருமஞ்சனம் கொள்ளும் சிறப்பு, அவன் அணிகலன் அணிந்து அலங்கரித்துக் கொள்ளுதல், அவன் அமர்ந்து வருகின்ற வாகனச் சிறப்பு, உடன்வரும் குழாங்கள் முதலியன தொடக்கப் பகுதியில் விரிவாகச் சொல்லப்பெறும். வீதிகளின் வழியே பெருமான் உலா வருங்கால் எழு பருவ மகளிரும் கண்டு காதலித்துக் கலக்க முற்றார்கள் என்று கவிராயர் பருவத்துக்குப் பொருந்த கற்பனைத் திறனோடு சொல்வது இப் பிரபந்தமாகும். அவ்வப் பருவங்களுக்குரிய செயலாகிய சிற்றிலிழைத்தல், கழங்காடுதல், அம்மனையாடுதல், பாவை விளையாட்டு, ஊசல் நீராடுதல், பந்தாடுதல், யாழ் வாசித்தல் முதலிய விளையாட்டுக்களும் பிறவும் சொல்லப்பெறும். சொல்லுங்கால் மடக்கு முதலிய சொல்லணிகள் அதிகம் அமைக்கப்பெறும். சமயம் நோக்கி மாதப் பெயர்கள் நாட் பெயர்கள் வாரப் பெயர்கள் முதலியன சிலேடை வகையால் சுவையாகக் கூறவும் பெறும். இடையே தல புராணச் செய்திகள் பலவும் பெய்யப்பெறும். இவ்வாறெல்லாம் நிகழ, பாட்டுடைத் தலைவன் போந்தான் உலா என்று நூலை முடிப்பது மரபு.

ஏழு பருவத்துக்கும் உரிய ஆண்டுகளை இலக்கண நூல்கள் கூறும். இவை முறையே 5-8, 9-10, 11-14, 15-18, 24, 29, 36 என்பது பன்னிரு பாட்டியல்; 7, 11, 13, 19, 25, 31, 40 என்பது பிங்கல நிகண்டு. பிற பாட்டியல்களும் வெவ்வேறாகக் கூறும். பின் வருவது ஒரு தனிப்பாடல்;

பேதை தனக்குப் பிராயமும் ஏழு; பெதும்பைக்கு ஒன்பது;
ஓதிய மங்கைக்குப் பன்னிரண் டாகும்; ஒளிர் மடந்தை
மாதருக் கீரேழ்; அரிவை பதினெண்; மகிழ் தெரிவைச்
சாதிமூவே ழெனும்; பேரிளம் நாலெட்டுத் தையலர்க்கே.

காதல் தோற்றியும் தோன்றாதும் உள்ளது பெதும்பைப் பருவநிலையாதலால், அதைப் பாடுவது கடினம் என்ற கருத்தோடு, 'பேசும் உலாவிற் பெதும்பை புலி' என்று பழம்பாடல் கூறும்.

## முன் வந்த உலாக்கள்

முதலில் பாடப்பெற்ற உலாப்பிரபந்தம் சேரமான் பாடிய திருக்கயிலாய ஞான உலா என்னும் ஆதி உலாவாகும். இது ஒரு தலத்தைச் சார்த்திப் பாடியது அல்ல. இது சைவத் திருமுறைகளில் பதினோராம் திருமுறையில் ஒரு பிரபந்தமாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. இது சிவபெருமான் மீது பாடப்பெற்றது; 197 கண்ணிகளையுடையுது. பிற்காலத்தில் கூறப்பெறும் இலக்கணங் கள் எல்லாம் இதனுள் அமையக் காணலாம். காலம் சுந்தரர் காலம், கி.பி. 700ஐ ஒட்டி. அடுத்த உலாப் பிரபந்தம் அதே 11ஆம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி பாடியுள்ள ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை; 143 கண்ணிகள் உடையது; திருஞான சம்பந்தப் பெருமானைப் புகழ்வது. இங்கு ஆசிரியர் ஒவ்வொரு பருவமகளின் நிலையையும் தனியே பாடவில்லை; பேரிளம்பெண் ஈறாகப் பேதை முதலாகப் பூங்குழலார் மைய லாய்க் கைதொழ முன்போந்தான் வீதி உலா என்று தொகுத்துச் சொல்லிவிடுகிறார்.

இங்கு ஒரு நிலை கருதத்தக்கது. இறைவனை உலாப் பாடுவது எல்லா வகையாலும் பொருத்தம். இறைவன் மீது எல்லா மகளிரும் காதல் கொள்ளலாம்; கொண்டார்கள் என்று சொல்வது தமிழ் மக்கள் வாழ்க்கை மரபுக்கும் இலக்கிய மரபுக்கும் முரணல்ல. இரண்டாவது அடியார்கள், ஆசாரியர்கள்: இவர்களும் இறை வனை ஒத்தவர்கள், இவர்கள் மீது மகளிர் காமுற்றார்கள் என்று சொல்லும்போது, சொல் எப்படி இருப்பினும், பொருள் அருட் காதல் அல்லது ஞானக்காதல். ஆதலால், இதுவும் மரபுக்கு முரணல்ல. இறைவனே ஆசாரியனாக எழுந்தருளுகிறான். அடியவர் வழிபாடு இறை வழிபாட்டினும் மேலானது என்ற கருத்துக்கள் நம் நாட்டில் எல்லாச் சமயத்துக்கும் பொது. ஆளுடைய பிள்ளையார் திருவுலா இவ்விரண்டாவது வகைக் குரியதாகும்.

இனி மூன்றாவது வகை ஒரு தலைவனைப் புகழ்ந்து பாடுவது. வரலாற்றில், ஒட்டக்கூத்தர், விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராசராச சோழன் ஆகிய மூன்று சோழர் மீதும் பாடிய உலாக்கள் அடுத்து வந்தவை. இவை அரசனைப் பாடுபவை. இங்கு மரபுக்கு முரண் விளைந்திருக்கக் காண்கிறோம். எல்லா மகளிரும் தெய்வத்தின் மீது காதல் கொள்ளலாம், ஓர் அரசன் மீது காதல் கொள்ளுவது முறையன்று. ஒட்டக் கூத்தர் இவ்வாறு பாடிய பிறகு, காதல் கொள்ளும் பெண்கள் குலமகளிர் அல்லர் பொதுமகளிர் என்ற சொல்லும் ஒரு சமாதானம் பிற்காலத்தில் எழுந்திருக்கிறது. இம்மூன்று வகைகளிலும் நூல்கள் எழுந் துள்ளன. தில்லையுலா, திரு ஏகாம்பர நாதர் உலா, திருவானைக்கா உலா என்பவை தெய்வத்தின் மீது பாடப் பெற்றவை. தத்துவராயர் பாடிய உலாக்கள் ஆசாரியர்மீது; சங்கர சோழன் ஆகிய தலைவன் மீது பாடப்பெற்றது சங்கர சோழன் உலா. ஆடவரைக் கண்டு பெண் காமுற்றாள் என்று சொல்வதே தமிழ் மரபு. ஆகவே தெய் வங்களில் சிவபிரான் முருகன் திருமால் ஆகிய தெய்வங்கள் மீதுதான் உலாப் பாடலாம். பெண் தெய்வத்தின் மீது பாடுதல் இயலாது.

### திருமால் உலாக்கள்

அறுபதுக்கு மேற்பட்ட உலாப் பிரபந்தங்கள் தெரிய வந்துள்ளன. அவற்றுள் முருகனைப் பற்றியுள்ளன. போரூர் முருகன் உலா, தணிகை உலா, குன்றக் குடியுலா, இலஞ்சி முருகன் உலா போன்றன மிகச் சிலவே. யாவுமே சிவபிரானைப் புகழ்ந்த உலாப் பிரபந்தங்களாகும். திருமால் பிரபந்தங்களாக அறியப் படுபவை மூன்றே; திருக்குறுங்குடி அழகிய நம்பியுலா சிறு புலியூர்உலா - இரண்டின் ஆசிரியர் பெயரும் தெரியவில்லை; காலம் 17ஆம் நூற்றாண்டு. மற்றது திருவேங்கடஉலா, காலத்தால் அவ்விரண்டுக்கும் முற்பட்டது.

## புராணத் திருமலைநாதர் - மதுரை சொக்கநாதர் உலா

இவருடைய வரலாறு இந்நூற்றாண்டு இலக்கிய வரலாறு முதற்பாகம் 4ஆம் அத்தியாயத்தில் விரிவாகச் சொல்லப்பட்டது இது புராணத் திருமலைநாதர் செய்த உலாப் பிரபந்தம். இது மதுரையில் எழுந்தருளியுள்ள சொக்கநாதக் கடவுள் பற்றிச் செய்யப்பட்ட பிரபந்தமாகும்; மதுரையுலா என்றும் பெயர் பெறும். தனிப் பாடல்களாக மூன்று வெண்பாக்களும் 516 கண்ணிகள் கொண்ட கலிவெண்பாவும் உடையது. பெருமானுடைய பல

நாமங்களில் சொக்கன் என்ற நாமத்தில் இவருக்கு ஈடுபாடு அதிகம். நூலெங்கும் சொக்கன் என்றே அதிகம் கூறுகிறார். உலாப் பெயரும் அவ்விதமே அமைந்துள்ளது. சிதம்பரப் பாட்டியலின் சிறப்புப் பாயிரம் இந்நூலையும் இதன் ஆசிரியரையும் குறிப் பிடுவதை முன் காட்டினோம். திருமலை நாதர் வரலாறு கூறிய இடத்து உலாவின் சிறப்புப் பாயிர வெண்பாக்கள் இரண்டைக் காட்டினோம்* வேதநூல் என்ற இரண்டாம் பாடல். இது வீரமாறன் என்ற பாண்டியன் காலத்தில் செய்யப்பட்டது என்று தெரிவிக்கிறது. காலம் என்ற பகுதியில் காட்டிய இந்நூலின் கண்ணிகளில் வரும் குறிப்பும் இதற்குச் சான்று பகர்கிறது (33-35). ஆசிரியர் காலத்தில் பரஞ்சோதி திருவிளையாடல் எழவில்லை, நம்பி திருவிளையாடலே இருந்தது. அதையொட்டியே இவர் தம் நூற் செய்திகளை அமைத்திருக்கிறார். அமைத்த போதிலும் சிலவரிசை முறைகள் மாறாக உள்ளன. இவர் 64 திருவிளை யாடல்களையும் தம் பிரபந்தத்தில் முறைப்படுத்திச் சொல்லி வருவது போற்றத்தக்கது.

முன்னோர் பாடிய உலாவில் இவர் ஒரு மாறுதல் செய் திருக்கிறார். எல்லோரும் திருவிழாவில் ஒரு நாள் பெருமான் தேரில் உலா வர அன்றே ஏழு பருவப் பெண்களும் முறையே கண்டு காமுற்றனர் என்று பாடுவர். இவரோ, ஏழு நாள் ஏழு ஊர்திகளில் பெருமான் உலா வந்தார், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பருவ மகள் கண்டு காதலித்தாள் என்று பாடுகிறார். முதல் நாள் தேர், இரண்டாம் நாள் வெள்ளை யானை, மூன்றாம் நாள் வேதமாகிய குதிரை, நான்காம் நாள் இடபவாகனம், ஐந் தாம் நாள் தருமரிஷபம், ஆறாம்நாள் கற்பக விருட்சம், ஏழாம் நாள் சித்திரவிமானம். கூறப்பட்ட பிற பொருள்கள் தசாங்கம், சிற்றில், பாவை, கழங்கு, ஊசல், கிளி விடுதூது, யாழ் புன லாட்டு, பொழில் விளையாட்டு என்பன.

ஆசிரியருடைய சிவபத்தியும் சமயாசாரியரிடத்தும் நாயன்மாரிடத்தும் உள்ள ஈடுபாடும் பிற தலங்களில் உள்ள பத்தியும் தமிழன்பும் பண்டைய நிகழ்ச்சிகளைப் போற்றும் திறனும் நூலெங்கும் புலப்படும். 'எந்தை மகிழ்ந்து - ஆடும் திருப் பெரும் பேரம்பலம் பொன் மேய்ந்தருளைச் சூடும் திரு நீற்றுச் சோழன்' என்று திருமுறை கண்ட செய்தியை நினைந்து குறிப்பிடு

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு முதல் பாகம் அத்தியாயம் 4 பார்க்க.

கிறார். சம்பந்தர் மாணிக்கவாசகர் வரலாறுகளைத் தல புராணத்திற்கும் பொருந்த விரிவாகக் குறிப்பிடுகிறார். சைவசமயப் பொருள்களை நன்கு தெரிந்து சொல்லுகிறார். சரப மூர்த்தியைக் குறிப்பிடுவது ஒரு சிறப்பான செய்தி. இவரே சரப புராணம் பாடியவர். எங்கும் சொல்லழகு பொருந்தவே பாட வல்லவர்.

– நறை கமழும்
வான்பாயும் சோலை வயற்செந்நெல் கன்னலுக்குத்
தேன்பாயும் பாண்டித் திருநாடன் – தான் பாடல்
தங்கு மறையோசை சங்கத் தமிழோசை
பொங்கு மதுரா புரிவேந்தன்

என்ற கண்ணிகள் இவர் பாடலுக்கு எடுத்துக் காட்டாகச் சொல்லத்தக்கவை. சைவ சௌராதி சண்டாந்த அர்ச்சனைகள் என்று கூறுவது இவரது சிவபூசையறிவைப் புலப்படுத்தும். ஆய்ந்து சொல்லுமிடத்து இவ்வுலா மிகச்சிறந்த உலாப் பிரபந்தங்களுள் ஒன்று என்பது நன்கு புலப்படும்.

### நூற்பொருள்

திருவாலவாய்ச் சொக்கநாதப் பெருமான் பூசை ஏற்று, ஆபரணம் அணிந்து, திருத்தேரில் ஏறி, சைவ சமயாசாரியர் முதலியோர் சூழ்ந்து வர, வீதியில் உலா வருகின்றார். மாதர் அவருடைய திருமேனியழகில் ஈடுபட்டு மயங்குகிறார்கள். தொடக்கத்தில் தசாங்கம் சொல்லப்பட்டுள்ளது.

பேதை, தாய்மார் செல்லத் தானும் உடன் சென்று தரிசிக்கிறாள். பெருமான் கையில் ஏந்திய மான் முதலியவற்றைக் கண்டு தன்னோடு விளையாட வந்தார் என்று எண்ணுகிறாள். அவருடைய திருத்தேர் மீது தன்னையும் ஏற்றவேண்டுமென்று கேட்கிறாள். ஏழு கடலழைத்தது முதல் எட்டுத் திருவிளையாடல்களை இப் பகுதியில் கூறுகிறார்.

இரண்டாம் நாள் அவர் வெள்ளை யானைமீது வர, பெதும்பை ஏழு கடல் தீர்த்தத்தில் நீராடி வந்து தரிசிக்கிறாள். விருப்பமுண்டாகிறது. அணிகள் முதலியன சுழல்கின்றன. இப்பருவத்தில் ஆசிரியர், மாணிக்கம் விற்றது முதலான எட்டுத் திருவிளையாடல்களைக் கூறுகிறார்.

மூன்றாம் நாள் வெள்ளைக் குதிரை மீது பெருமான் பவனி வருகிறார். மங்கை கண்டு மால் கொண்டு சிந்தை இளைத்தாள்.

இங்கு, பழியஞ்சியது முதல் எட்டுத் திருவிளையாடல்களைக் கூறுகிறார். குயில் கிளி முதலியன இங்கு சொல்லப்படுகின்றன.

அடுத்து மடந்தைப் பருவம், நாலாம் நாள், பெருமான் இடப வாகனத்தில் வருகிறார் என்று இவர் தூதுவிட்ட கிளிவந்து இவளுக்கு உரைக்கிறது. இவள் சென்று பலவாறு போற்ற, ஐயன் திருப்பார்வை ஈந்தருளினான். இவளும் சிந்தை களிகூர்ந்து மீண்டாள். இங்கு அட்டமாசித்தி உபதேசித்தது முதல் எட்டுத் திருவிளையாடல்கள் கூறுகிறார்.

ஐந்தாம் நாள் பெருமான் தரும தேவதையாகிய மழவிடை மீது வரக்கண்டு, அரிவை தொழுகிறாள். இங்கு விறகு விற்றது முதல் எட்டுத் திருவிளையாடல்கள் கூறுகிறார்.

ஆறாம் நாள் கற்பகத்தரு விமானத்தில் பெருமான் வரவும், தெரிவை கண்டு வணங்கி அவனருள் பெற்றாள். திருவாலவாயனது முதல் எட்டுத் திருவிளையாடல்கள் இங்கு கூறுகிறார்.

ஏழாம் நாள் பெருமான் இந்திர விமானத்தின்மீது வருகிறார். பேரிளம் பெண் கண்டு தொழுகிறாள். இங்கு வலை வீசியது முதல் எட்டுத் திருவிளையாடல்களைக் கூறுகிறார்.

தோத்திரச் சிறப்பைச் சொல்லுமிடத்து,

கொற்றமறைத்
தண்டமிழும் வாசகமும் சங்கத் தமிழமுதம்
மண்டும் திருவிசையும் மந்திரமும் – தொண்டர்

அருள் விரித்த சேக்கிழார் ஆன்ற தமிழ்ப் பாடல்
திருவிருத்தச் செய்யுட் சிறப்பும் – இருமருங்கும்
பொங்க

என்கிறார். சொற்களை மடக்கிச் சொல்லும் இவருடைய ஆற்றலை,

வைகை எதிர்
ஏடேற்றித் தென்னவனை ஈடேற்றி வெஞ்சமணக்
காடேற்ற மேறக் கழுவேற்றி – நீடேற்றம்
தானேற்ற புத்தன் தலையி லிடியேற்றம்
கானேற்ற பாடற் கவுணியனும்–

என்ற அடிகளில் காணலாம்.

உலாவின் முற்பகுதி முன்னிலை என்றும், மகளிரைக் கூறும் பகுதி பின்னிலை என்றும் பெயர் பெறும். முன்னிலைப் பகுதியில்

*இந்திரன் பழி தீர்த்தது முதல் மூன்று திருவிளையாடல்களையும் தடாதகைப் பிராட்டியார் திருவவதாரம் முதல் ஐந்தையும் கூறுகிறார்.*

*பின்வரும் மூன்று பாடல்களும் உலாப் பதிப்பில் சிறப்புப் பாயிரமாக அச்சிடப்பட்டுள்ளன. முதல் பாடல் ஆசிரியரையும் நூற்பெயரையும் கூறுவது:*

சீரார் புராணத் திருமலைநா தன்கருணைப்
பாராளன் மெய்ஞ்ஞானப் பால்விளங்க – ஆராய்ந்து
வேதக் குலாவால் விரித்தால வாய்ச்சொக்க
நாதர்க் குலாப்பாடி னான்.

*இரண்டாம் பாடல் முழைசை வீரமாறன் காலத்தில் இவ் வுலாச் செய்யப்பட்டதென்று கூறுகிறது:*

வேதநூற் றென்முழைசை வீரமா றன்கடல்சூழ்
பூதலங்க ளன்பாய்ப் புரக்குநாள் – ஆதிநெறித்
தெய்வ மதுரைத் திருவால வாயுறைந்த
ஐயருலாக் கொண்டருளி னார்.

*மூன்றாம் பாடல் பொதுவான வாழ்த்து:*

வாழி மறைவாழி மன்னன் புகழ்வாழி
வாழி மதுரை நகர் வாழி – வாழியே
தண்ணளிகூர் வைகைத் தமிழ்நாடு வாழியே
கண்ணுதலோன் சைவா கமம்.

## பதிப்பு

*ஐயரவர்கள் குறிப்புரையுடன் 1931: மிகச் சிறந்த பதிப்பு: பின்னும் பலமுறை.*

## *சைவ எல்லப்ப நாவலர் பிரபந்தம்*

*சைவ - எல்லப்ப நாவலர் வரலாறும் புராணங்களும், இந் நூற்றாண்டு வரலாறு முதல் பாகம் மூன்றாம் அத்தியாயத்துள் விரிவாய் ஆராயப் பெற்றன. இவர் செய்த புராணங்கள் ஆறு. அருணாசலம் ஆகிய திருவண்ணாமலை, திருவெண்காடு, திரிசிராமலையாகிய செவ்வந்தி, தீர்த்தகிரி, திருவிரிஞ்சை, திருச் செங்காட்டங்குடி என்பன. இவர் பரம்பரையினர் குல தெய்வம் எல்லம்மன் (எல்லையம்மன்). அதனால் இவர் பெயரும் (இவர்*

ஆண் மகவாயிருந்தது பற்றி) எல்லப்பன் என்று இடப்பட்டது என்று பெரியோர் சொல்வர்.

சைவ எல்லப்பர் செய்த புராணங்கள்* சிறப்புடையன என்பது போலவே, அவர் செய்த பிரபந்தங்களும் சிறப்பாய்க் கருதப்பெறும். அவர் செய்த பிரபந்தங்கள் எட்டு என்பர். அவையாவன திருவருணையந்தாதி திருவருணைக் கலம்பகம் திருவாரூர்க் கோவை திருவருணைக் கோவை செவ்வந்திக் கோவை திருவிரிஞ்சைக் கோவை திருவிரிஞ்சைக் கலம்பகம் திருப்பாலைப் பந்தல் உலா என்பன. இவற்றுள் முதல் மூன்று அச்சாகியுள்ளன. பின் ஐந்தும் இன்று இருப்பதாகத் தெரியவில்லை.

### திருவருணை அந்தாதி

அருணைக்குப் பல அந்தாதிப் பிரபந்தங்கள் உள்ளன. அவற்றுள் இது காலத்தால் முந்தியது. அடுத்து வந்தது, குகை நமசிவாயர் செய்த அருணகிரி வெண்பாவந்தாதி. இவ் அருணையந்தாதி திரிபந்தாதியாகும், கட்டளைக் கலித்துறை. இத்திரிபு முயன்று பிரித்துப் பொருள் செய்யுமாறு இன்றி, எளிதில் பொருள் விளங்கும் தன்மையிலுள்ளது. காப்புச் செய்யுள் இரண்டும், 100 பாடல்களும் உடையது. தலச் சிறப்புப் பொருந்த அந்தாதி என்ற சொல்லின் பொருளை வைத்து இவர் நயமாக முதற் பாடல் பாடியிருக்கிறார்.

**செந்தா திமம்செறி சோணா சலத்தரைச் செந்தமிழி**
**னந்தா தியமனைச் செற்றோர்க்குக் கோசல நாடுவிட்டுத்**
**தந்தாதியால் வணம்புக் காரும் வேதச் சதுமுகரும்**
**அந்தாதி கண்டிலர், யானோ அந்தாதி யறைகுவனே?**

துதிப் பாடலுக்கு எடுத்துக்காட்டு:

**தொழவாரும் மானிடர்காள், நரகேழையும் தூர்க்கும்வண்ணம்**
**முழவாரும் கோயில் வலம்செய வாரும், முதன்மடக்கே**
**உழவாரு மங்கவர் மங்கை நல்லாரும் ஒதுக்கிழுத்தை**
**எழவாரும் செந்நெல் வயலரு ணேசரை யேற்றரையே.** 19

* நாவலர் செய்த ஆறு புராணங்களும் எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற்றாண்டு முதல் பாகம் 3ஆம் அத்தியாயத்தில் விரிவாய் ஆராயப் பெற்றுள்ளன.

சித்த மிழுக்குறத் தீமையுறார், பெருஞ் செல்வமறார்,
முத்தமி ழுக்கு முதன்மையு மாகுவர், முண்டகப்பூங்
கொத்த மிழுக்கு வரக்கனி யூரல் குளிர்நதிபாய்
நத்தமி ழுக்கு மயலரு ணேசரை நத்தினாரே. 32

அருணா சலம்பதி, யாயுறை வாசுர வாபரணா,
அருணா சலநிதியே முதல் ஈறுங் கலையுமில்லாத்
தருணா சலஞ்சல மும்மயி ராவதத் தந்தமும்போல்
மருணா சலங்கொடு தாரருக் காதருள் மாதருக்கே. 40

## திரு அருணைக் கலம்பகம்

*திருவண்ணாமலைக்குரிய கலம்பகம். காப்புச் செய்யுளி ரண்டும் 100 பாடல்களும் உள்ளன. இதில் நால்வர் துதியாக உள்ள பாடல் சைவர் உலகம் நன்கறிந்தது; ஆசிரியருக்குச் சைவ என்ற பட்டம் வருவதற்கும் அடிப்படையானது.*

சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேல்தெய்வம் இல்லெனும்நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவாரமும்திரு வாசகமும்
உய்வைத்தரச்செய்த நால்வர் பொற்றாள்எம் உயிர்த்துணையே.

*தமிழிலுள்ள சிறப்பான கலம்பகங்களுள் ஒன்றாகச் சொல்லப்படுவது. நூலில் அகத்துறைப் பாடல்களும் மடக்கு என்ற சொல்லணியும் மிகுதி. அகத்துறையில் இரங்கல் என்ற துறையே மிகுதி. வச்சணந்தி மாலை கூறும் கலம்பக உறுப்புக்கள் பதினெட்டும் இதனுள் அமைந்துள்ளன. அவற்றுக்கு மேலும் இலக்கணத்துள் கூறப்படாது உள்ள பிச்சி கொற்றி இடைச்சி வலைச்சி குறம் மடல் என்ற உறுப்புக்களும் இங்கு காணப் படும். அருணைப் பெருமானைப் பல பாடல்களில் மலைமேல் மருந்து என்று குறிப்பிடுகிறார். களி என்ற உறுப்பிற்குரிய பாட லில் மயக்கந் தருவதாகிய கஞ்சா இலையைத் தாளித்துத் தின் பதைக் குறிப்பிடுகிறார்.*

*முதல் பாடலாகிய கொச்சகக் கலிப்பாவின் இறுதியில் வரும் சுரிதகத்தில் மலை மேல் மருந்தென்றும், காசியில் இறந்தும் கமலையிற் பிறந்தும் தில்லையில் கண்டும் பெறத்தக்க பேறுகள் அனைத்தையும், கருதின மாத்திரத்தில் இங்கேயே பெறலாம் என்றும் பாடுகிறார்:*

வேற்று மருந்தால் விடாதவெம் பிறவியை
மாற்று மருந்தா, மலைமேல் மருந்தா,

அழகிய நாயகி அருளுடை நாயகி
புழுகணி நாயகி பொருந்திய புனிதா,
காசியில் இறந்தும், கமலையிற் பிறந்தும்,
தேசமர் தில்லையுள் திருநடங் கண்டும்,
அரிதினிற் பெறும்பே றனைத்தையும் ஒருகால்
கருதினர்க் களிக்கும் கருணையை விரும்பி,
அடைக்கலம் புகுந்தனன் அடியேன்,
இடர்க்கடல் புகுதாது எடுத்தருள் எனவே.

பல பாடல்கள் சந்தத்தில் உள்ளன. முத்தமிழ் முறையொடு என்ற பாடல், திருப்புகழைப் போலவே அமைக்கப் பெற்றுள்ளது. புய வகுப்புப் பாடலில் சரப மூர்த்தி செய்தியை 'இரணியன் உரங்கிழித் தளவறு பதங்கொழித் தெழுநர மடங்கலைத் தட மார் பிடந்தன' என்ற சொற்களால் குறிப்பிடுகிறார். இருவரா லும் காண முடியாத அருணேசன் பூசனையால் உருகுவான் என்பதை நயமாகச் சொல்லுகிறார்.

ஆராலும் அளவிடுதற் கரியஉனை ஒருகரத்து
நீராலும் மலராலும் நெஞ்சுருகப் பணலாமே.

## பதிப்பு

சே.ரா. சுப்பிரமணியக் கவிராயர் குறிப்புரையோடு மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பு. கதிரைவேற் பிள்ளை எழுதிய உரை வெளி வரவில்லை. நகராமலை ராமலிங்கம் பிள்ளை விளக்கவுரை காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளையால் 1934இல் வெளியிடப் பட்டது. மூலப் பதிப்புக்கள் பல. பி.நா. சிதம்பர முதலியார் அருணாசல புராணக்கொத்தில் தவறாது இதைக் காணலாம்.

## திருவாரூர்க் கோவை

இது மிகவும் அதிகமான பாடல்களைக் கொண்ட கோவை களில் ஒன்று. காப்பு வெண்பா, அவையடக்கப் பாடல் 2, நூல் 510 பாடல், சிறப்புப் பாயிரப் பாடல் 2 - உடையது; சிறப்புப் பாயிரப் பாடல்கள் பின்வருவன:

மற்றிடங் கொண்ட புயபூ தரனெல்லன் மாநிலத்தில்
கற்றிடங் கொண்ட புலவோர்கள் யாருங் களிக்கவுமை
உற்றிடங்கொண்ட தென்ஆரூர்த் தியாகருக் கும்பர் தொழும்
புற்றிடங் கொண்ட வருக்கருட் கோவை புகன்றனனே.

'திருவாரூர்த் திருக்கோவை புகன்றார் எல்லப்ப நயினார் என்றியம்பியது.'

திணையாதி யாறிரண் டும்வழு வாமல் தெளிந்துசிவத்
திணையான தொன்றிநம் மாரூர்த் தியாகர் இணையடியே
துணையாக முத்தமிழ்க் கோவை செய்தான் வடசொற்கடற்குப்
புணையான வன்திரு உண்ணா முலைஎல்ல பூபதியே.

எல்லப்ப நாவலர் தம் திறமைகளனைத்தையும் காட்டிச் செய்தவற்றுள் ஒன்று இந்தப் பிரபந்தம். பக்திச் சுவையும் அகப் பொருட் சுவையும் மிக்கது. தல வரலாறுகள் எண்ணற்றன அமைய இதைப் பாடியிருக்கிறார். ஆசிரியர் அண்ணாமலைக்குப் புராணமும் அந்தாதியும் பாடியவர். அந்த நினைவினால் ஆரூர்த் தியாகராசரைக் கூறும்போதும் 'அண்ணாமலையுறை ஆரூர்த் தியாகர்' என்று கூறுவார்.

நூலில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை அதிகம் பெய் திருக்கிறார். முருகனிடத்து இவருக்கு அதிகமான பத்தியுண் டென்பதை 361, 386 பாடல்கள் புலப்படுத்துகின்றன.

நீண்ட கோவையாதலால், துறைகள் பல புதிதாய் அமைத் திருத்தல் இயல்பு. நற்றாய் தமருக்கு அறத்தொடு நிற்றல் என்பது நச்சினார்க்கினியர் குறிப்பிடுவது; இதற்கு இலக்கியம் காணல் அரிது. இவர் இலக்கியம் அமைத்திருக்கிறார்.

திருக்கோவையாருக்குக் கொளு அமைந்திருப்பது போல இக்கோவைக்கும் கொளு அமைந்துள்ளது. 18 பாடல்கள் கிடைக்கின்றன. திருக்கோவையை முழுமையும் அடியொற்றிச் செய்யப்பட்ட பழனிக்கோவைக்கும் கொளுவுண்டு.

## பதிப்பு

இதன் மூலத்தை மட்டும் ஆ.பெ. சென்ன கேசவலு நாயுடு முதல் முதல் அச்சிட்டார். ஆண்டு குறிப்பிடவில்லை. ஆண்டு 1900மாக இருக்கலாம்: சைவ எல்லப்ப நாவலர் என்றே குறித்தார். பின்னர் நூலை விரிவான ஆராய்ச்சி முன்னுரை குறிப்புரை அகராதி முதலிய அங்கங்களோடு ஐயரவர்கள் மிகவும் அழகுற 1937இல் அச்சிட்டார். அங்கு, தேசிகர் ஆராய்ச்சியையொட்டி எல்லப்ப நயினார் இயற்றியது என்றே குறிப்பிட்டுள்ளார்.

## திருப்பாலைப் பந்தல் உலா

எல்லப்ப நாவலர் தொண்டை நாட்டில் மூன்று தலங் களுக்குப் புராணமும் அண்ணாமலைக்குப் பிரபந்தங்களும் பாடினார் என்று குறிப்பிட்டோம். சோழ நாட்டிலிருந்து

தொண்டை நாடு நோக்கிப்போனபோது, இன்றைய தென்னார்க் காடு ஜில்லாவின் வழியாகப் போயிருப்பார். அங்கு திருக் கோவலூர்த் தாலுக்காவில் உள்ள திருப்பாலைப் பந்தல் என்ற ஊர் அடைந்தார். அங்கிருந்த மக்கள் விரும்பியவாறு அவ்வூர்க் கோயிலில் எழுந்தருளியுள்ள சிவபிரான் மீது ஓர் உலாப் பாடினார் போலும். இச்செய்தி அக்கோயிற் கருவறைச் சுவரின் தென்புறத்தில் வரையப் பெற்றுள்ள ஒரு கல்வெட்டால் தெரிய வருகிறது. உலாவை அரங்கேற்றியபோது இவருக்குக் கோயில் அதிகாரிகள் நிலமும் மனையும் அளித்ததோடு, சுவாமி நிவே தனத்தில் ஒரு பகுதியைத் தினமும் வழங்கி வரவும் ஏற்பாடு செய்திருந்தார்கள் என்றும், இவ்வாசிரியர் உண்ணாமுலை நயினார் புதல்வரான காலிங்கராய எல்லப்ப நயினார் என்றும் கூறுகிறது. இந்நூல் இன்று இருப்பதாகத் தெரியவில்லை. இது பற்றிய பிற செய்திகளும் தெரியவில்லை.*

## வலிவல மும்மணிக்கோவை

பிற்காலத்தில் தோன்றிய இலக்கியச் சுவை பொருந்திய பிரபந்தங்களில் தலை சிறந்த ஒரு தனி நூல். வழக்கம் போல், பிரபந்த மரபுக்குப் பொருந்த ஆசிரியம் வெண்பா கட்டளைக் கலித்துறை என்ற முறையில் மண்டலித்து அந்தாதியாக வரும் 30 பாடல்களும் காப்பு வெண்பாவொன்றும் உடையது; ஆசிரி யம் 140 அடிப் பெருமையுடையது. திருவலிவலம் என்ற சோழ நாட்டுப் பாடல் பெற்ற தலத்தில் எழுந்தருளியுள்ள மனத்துணை நாதருடைய புகழைப் போற்றுவது; தேவாரம் ஓதுகின்ற ஓதுவார் தொடங்கும் முதல் பாடலாகிய ‘பிடியதன் உரு உமை கொள’ என்ற சம்பந்தர் பாடல் இத்தலத்துக்குரியது.

### நூல்

முதல் பாடலில் சிவபெருமான் உமையை மணம் செய்த காட்சியை இருபத்தொன்பது வரிகளால் மிக அழகு படக் கூறுகிறார். நூல் முழுமையும் சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், திருமுறைகள், கம்பராமாயாணம் முதலியவற்றின் கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. ‘நீ மனத்துணை நாதன் ஆதலின், நான் ஒன்று உணர்த்துகிறேன்’ என்று தொடங்குகிறார். திருநீறு

---

* தி.வை. சதாசிவ பண்டாரத்தார், செந்தமிழ் தொகுதி 43, பக்கம் 18; 1946 ஜனவரி.

கண்டிகை அஞ்செழுத்து ஆகிய மூன்றையும் போற்றி, 'இவற்றை உடையவரே தேவர் என்று தொழும் அன்பு தந்தருள வேண்டும்' என்கிறார். புத்தன், செருப்பால் புளிஞன், ஊடல் செய்ய ஏவிய ஒருவன் ஆகியோர் பிழையைப் பொறுத்தமை போல,

– நாயேன்
இழைத்த தீ வினை யாவையும் பொறுத்து
நின்னடி யாருடை நெடுங்கணக்கின்
என்னையுங் கடைமுறை எடுத்தெழு துவதே.

என வேண்டுகிறார். இது 'நின் தமர் பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து என்னையும் எழுத வேண்டுவன்' என்று கோயில் நான்மணி மாலையில் பட்டினத்தார் பாடியதையும், 'எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே' என்று அப்பர் சுவாமிகள் பாடியதையும் தழுவியது. தமிழ் என்ற சொல்லை இனிமை என்ற பொருளில் எழுதுகிறார். கருத்துக்களை இவர் அடுக்கிக் கொண்டு போவதற்கு ஒவ்வொரு பாட்டையும் எடுத்துக் காட்டாய்ச் சொல்ல முடியும். சில காட்டுகிறோம். தம்மைப் பழித்துக் கூறுமிடத்து, தீச் செயல்களை அடுக்கிச் சொல்கிறார்.

அன்பிற் றீர்தல், அருளொடு படாமை,
தெருளாக் காட்சி, செய்தநன் றயர்த்தல்,
பெரும்பொறை தவிர்தல் பிறன்பொருள் விழைதல்,
பட்டிமை பயிறல், பாலிற் கோடல்,
மான மதாணி பூணாது மறுத்தல்,
அழுக்கற் றினைதல், அவாக்கடல் படிதல்,
அறங்கூ றாமை, புறங்கூறு விரித்தல்,
பொய்யுரை படித்தல், மெய்யுரை விடுத்தல்,
கல்வியிற் றிறம்பல், கடுஞ்சொல் வடித்தல்
இன்மொழி மறுத்தல், இறைவனூல் இகழ்தல்,
பயனில கூறல், பணிமொழி நயவாமை,
தவவினை துறத்தல், தானந் தீர்தல்,
படைமடம் படுதல், கொடைமடம் படாமை,
அறிமட மின்மை, நெறிகடந் தடர்தல்,
தெய்வதம் இகழ்தல், தீத்தொழில் இயற்றல்,
ஐம்பெரும் பாதகத் தளறுபாய்ந் தழுந்தல்,
இந்தியப் பெரும்படைக் கிரிந்துபுறங் கொடுத்தல்,
பாற்படு பகுதியிற் பகுத்துண் ணாமை,
பிறர்மனை விழைந்து பிழைத்தன புரிதல்,

சிற்றினஞ் சேர்தல், செய்தவர்க் கடிதல்,
கைதவ வேடம், செய்வன செய்யாமை –
ஆதி யாய தீதடர் செய்கை
சொன்ன வன்றிச் சொல்லாது கிடந்த
இன்ன பிறவும் என்செயல் மன்னோ.

*இத்தனையும் சொல்லிச் சொல்லாதவற்றையும் சேர்த்துக் கொள்க என்பது இவருடைய உள்ளத்தை நன்கு காட்டுகிறது. சிவ சின்னங்கள் -*

முண்டத் திலங்கும் வெண்டிரு நீறும்
எண் தரு சிறப்பிற் கண்டிகை மாலையும்
ஓதும் அஞ்செழுத்தின் உண்மை நெஞ்சழுத்ததும்
ஓடியா நேயமும் 1

*என்று அழகு பெறக் குறிப்பிடுகிறார். வினை அனுபவித்தாலன்றிக் கழியாது, வினை தீர்ந்தாலன்றி வீடு கிட்டாது என்பதைச் சுவை பெறச் சுருக்கமாய்க் கூறுகிறார்:*

எண்ணினை பெய்த ஈட்டிய இவ்வினை
உண்ணின் அல்லாது ஒடிவதும் அன்றே;
ஒடியா தாக அடைவதும் இன்றே,
அந்தமிழ் இன்பத்து அழிவில் வீடே. 16

அன்றெனின் அன்றாய் ஆமெனின் அதுவாய்
ஒன்றெனின் ஒன்றாய்ப் பலவெனிற் பலவாய்
நின்றது னிலைமை. 25

*என்ற பாடல் கம்பரது யுத்த காண்டக் கடவுள் வணக்கப் பாடலை எடுத்துரைத்தது. நூலில் தனி அகத்துறைப் பாடல்களும் பல காணப்படும்.*

**காலம்**

*ஆசிரியர் பெயரோ வரலாறோ காலமோ விளங்கவில்லை என்பது உண்மை. நூலின் சொல்லமைதி பொருளமைதிகளைப் பார்க்கும்போது, இது ஒரு பழைய நூலாகத் தோன்றுகிற தென்றும் குறிப்பிட்டோம். கருத்துக்களை அடுக்கிக்கொண்டு போகும் முறையினாலும், வருணனைச் சிறப்பினாலும், சைவ சித்தாந்தப் பொருளைத் தெளிவுபடுத்தும் தன்மையினாலும் கவிதைச் சுவையினாலும் இந்நூற்பாடல் பட்டினத்தார் பாடல் கள் என்றே சொல்லத் தகுந்தவை. பதினோராம் திருமுறையில்*

*உள்ள திருவிடை மருதூர் மும்மணிக்கோவையும் இந்த மும்மணிக் கோவையையும் ஒத்து நோக்கும்போது இரண்டும் ஒருவரே செய்தன என்றுதான் பார்த்த அளவிலே சொல்லத் தோன்றும். நூலின் சுவையினால் நாம் இவ்வாறு சொல்லியபோதும் கூட, இது பிற்பட்ட காலம் என்று முடிவு செய்வதற்கு இதனுள் ஒரு குறிப்புக் கிடைக்கிறது. "யமபடர் முடிவு நேரத்தில் சுற்றி இழுப்பர்" என்று சொல்லும் பாடலைக் காண்க:*

மற்றா ருதவிசெய் வார்நெஞ்ச மே, நம் வலிவத்தை
உற்றார் மனத்துணை நாதரல் லால், உகந் துள்ளுகண்டாய்
சுற்றார் யமபடர் சூலமும் பாசமுஞ் சுற்றிச்சுற்றி
இற்றார் எனக்கழுத் திற்சுருக் கிட்டுநின் றீர்க்குமன்றே.

*இப்பாடல் அருணகிரிநாதர் பாடிய கந்தரலங்காரம் இரண் டாம் பாடலைத் தழுவியது என்பது வெளிப்படை.*

அழித்துப் பிறக்கவொட் டாஅயில் வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீர்எரி மூண்டதென்ன
விழித்துப் புகைஎழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே.

*இவ்வொற்றுமையால் இவர் காலம் அருணகிரி நாதருக்குப் பிற்பட்டது, அதாவது, பதினாறாம் நூற்றாண்டு என்று கருது கிறோம்.*

## *தெய்வச்சிலையார் விறலிவிடு தூது*

*தமிழ்ப் பிரபந்த வகைகளில் மக்கள் மனத்தைக் கவர்ந்த சிறந்த பிரபந்தங்களில் தூதும் ஒன்று. பாட்டுடைத் தலைவனாகிய ஒரு தலைவன் மீது காதல் கொண்ட ஒரு தலைவி ஒரு பொருளை நோக்கி அவனிடம் தூது சென்று அவன் தன் காதலுக்கு அருள் புரிந்ததற்கு அடையாளமாக அவனுடைய அடையாள மாலை யைப் பெற்று வருமாறு அனுப்புவதாகக் கூறும் பாட்டாகும். அன்னம், மயில், கிளி, மேகம், குயில், பாங்கி, பூவை, நெஞ்சு, தென்றல், வண்டு ஆகிய பத்துப் பொருள்கள் தூதாகச் செல்லு வதற்கு உரியன என்று இலக்கணங்கள் கூறும். தூது இலக்கணம் இந்த நூற்றாண்டில் தோன்றிய சிதம்பரப் பாட்டியலிலும் பிற்காலத்தில் இலக்கண விளக்கத்திலும் சொல்லப்பட்டதே அன்றி முற்பட்ட இலக்கணங்களாகிய பன்னிரு பாட்டியல், வச்சணந்திமாலை முதலியவற்றில் சொல்லப்படவில்லை. தூதுப்*

பிரபந்தம் நெடுகிச் செல்லும் கலிவெண்பாவினால் செய்யப் படுதல் மரபு: மேற்குறிப்பிட்ட பொருள்களேயன்றி, தமிழ், மான், பணம், நெல், துகில், விறலி முதலியவற்றையும் தூதனுப்பிய பிரபந்தங்கள் தமிழில் உள்ளன. வடமொழியில் காளிதாசன் பாடிய மேக சந்தேசம் என்ற நூலே முதல் முதல் எழுந்த தூது காவியம் என்று சொல்லுவர்.

தூது ஆகிய செய்தி இராமாயணம், பாரதம் ஆகிய பெருங் காவியங்களில் விரிவாகச் சொல்லப்பட்டது. திருக்குறளில் தூது என்னும் தூதர் இலக்கணம் கூறும் ஒரு தனி அதிகாரமே உள்ளது.

காதல் துறையில் நாயகி தூது விடுதலைத் தேவார திருவாச கங்களிலும், நாலாயிர திவ்விய பிரபந்தங்களிலும் காணலாம், சீவக சிந்தாமணியில் குணமாலை ஒரு கிளியைச் சீவகனுக்குத் தூது விட்டதாகவும், நைடதத்தில் இதற்கு மாறாக நளன் அன்னத்தைத் தமயந்திபால் தூது விட்டதாகவும் வரலாறுகள் கூறுகின்றன.

தலைவி விடும் தூது என்பது காம மயக்கத்தால் எழும் செய்தி. கிளியும் மேகமும் போன்ற அஃறிணைப் பொருள்கள் தூது போய்ச் சொல்லும் என்பது கருத்தன்று. தலைவி விரக தாபத்தால் புலம்புகின்ற காமமிக்க கழிபடர் கிளவிகளுள் இதுவும் ஒன்று. இது கற்பனையான இலக்கியம். கவிஞர் தமது கவித்திறத்தைக் காட்டுவதற்கு இடமாக அமைந்த ஒரு நெடும் பாட்டே தூது என்ற சிற்றிலக்கியம்.

முற்குறிப்பிட்ட தூதுப் பொருள்களில் பூவை குயில் தூது கள் பழமையாக இல்லை. மயில் விடுதூது சமீப காலத்தில் பாடப்பட்டது. பிற பொருள்களை விட்ட தூதுகள் தமிழில் பல உள்ளன.

இந்த தூது வரிசையில் முதன் முதலாக ஏற்பட்ட தூது காவியம் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் சைவ சித்தாந்த சந்தான ஆசாரியராகிய உமாபதி சிவாசாரியர் தமது குருவாகிய கடந்தை மறைஞான சம்பந்தரிடம் தம்முடைய நெஞ்சைத் தூதாக அனுப்பி அவருடைய மாலையை வாங்கி வரும்படி பாடிய நெஞ்சுவிடு தூது ஆகும். இதனுள் ஆசிரியர் தம்முடைய குருவுக்குத் தசாங்கம் கூறியிருக்கிறார். அதனோடு, இன்ன சந்தர்ப்பத்தில் பார்க்காதே இன்ன சந்தர்ப்பத்தில் பார் என்றும் சொல்லியிருக்கிறார். இந்தநூல் ஞான சாத்திரமாக

உள்ளது. இவ்வாறு ஒரு சமயாசாரியரே இலக்கியத்துறையிலும் வழி காட்டியாக இருப்பது பெரிதும் சிறப்பானது. அதைப் பின்பற்றி எழுந்த நூல் தெய்வச்சிலையார் விறலிவிடுதூது.

இந்த நூல் இரண்டு வகையில் சிறந்தது. ஒன்று உமாபதிக் குப் பின் (தத்துவராயர் பாடிய நெஞ்சுவிடு தூதும் நீங்கலாக) முதலாவதாக எழுந்த தூதுகாவியம் இதுவே. இரண்டாவது விறலியைத் தூது அனுப்புவதாக இலக்கணங்கள் சொல்ல வில்லை. இவ்வாசிரியரே முதன் முதலாக இதைப் படைத்துச் செய்கிறார். விறலிவிடுதூது என்றால் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிலக்கோட்டை நாகம கூளப்ப நாயகன் மீது சிறந்த கவிஞரான சுப்பிரதீபக் கவிராயர் செய்த விறலிவிடு தூது தான், கற்றவருக்கு நினைவு வரும். அதற்கு முந்தி ஒரு தூது உண்டு என்பதை எளிதில் நம்ப முடியாது. இப்படி ஒரு தூது இருப்பது யாருக்கும் தெரியாது.

தெய்வச்சிலையார் விறலிவிடு தூது என்பது திருநெல் வேலி தெய்வச்சிலை முதலியார்மீது பாடப் பெற்றது. திருநெல் வேலி அருகே உள்ள கிருஷ்ணாபுரம் என்ற ஊர் அக்காலத் தில் மதுரையில் ஆட்சிபுரிந்த குமார கிருஷ்ணப்ப நாயக்கனால் அமைக்கப்பட்ட ஊர். முற்காலத்தில் இது பெரிய ஊராயிருந்தது. இங்குள்ள பிரசித்தி பெற்ற வெங்கடேசப் பெருமாள் கோயி லுக்குத் திருப்பணி செய்தவர் தெய்வச்சிலைப் பெருமாள் முதலியார். இவர் மீது குமாரசாமி அவதானி என்பவர் பாடியது இவ்விறலி விடுதூது. இவருடைய திருப்பணிகளைப் பின் வருமாறு குறிப்பிடுகிறது.

வெற்பனைய மங்கையில்வாழ் வேங்கடமா யர்க்குவெகு
கற்பணிகள் பொற்பணிகள் கட்டளைகள் – பற்பலவுஞ்
செய்துபுதுத் தேர்வகுத்துத் தெப்பக் குளங்கண்டு
மைதவழ்பூஞ் சோலைசுற்றும் வைப்பித்து – மெய் தந்த
வைகுண்ட லோகமிந்த மங்கைநக ரென்ன வளஞ்
செய்கின்ற சீர்த்திச் செயவிசையன் – 38–40

இந்நூல் காப்பு வெண்பாவொன்றும் 625 கண்ணிகளும் உடையது. இந்த நூலுக்கு ஆட்சி இல்லை. இப்படியொரு நூல் இருந்ததே யாருக்கும் தெரியாது. எனினும், பொருளமைப்பில் இதற்குப் பின் வந்த கூளப்ப நாயக்கன் விறலிவிடுதூதுக்கும் இந்நூலுக்கும் எந்த வேறுபாடும் தெரியவில்லை. இதுவெல்லாம்

விளங்காத புதிராக இருக்கிறது. விறலிவிடுதூது இப்படித்தான் பாடவேண்டும் என்று எந்த இலக்கணமும் இல்லை. இருப்பினும், நூல்கள் இப்படியெல்லாம் ஒரே அமைப்போடிருக்கின்றன. ஒருகால் இப்படிப்பட்ட ஒருகதைப் போக்கு அக்காலத்தில் பாமர மக்கள் நாவில் வழங்கிற்றுப் போலும்; அப்போக்கை வைத்தே அவரவர் பிரபந்தம் புனைந்தார்கள் என்று நினைக்க வேண்டும்.

## நூற்பொருள்

காப்பு வெண்பா மங்கைத் தெய்வச்சிலை என்று கூறும். மங்கை என்பது வல்லமங்கலம்; இதைச் சார்ந்ததே கிருஷ்ணா புரம். பாட்டுடைத் தலைவன் சிறப்பு:

> அந்தணர்க்கும் சைவர்க்கும் ஆதுலர்க்கும் தன்னைநம்பி
> வந்தவர்க்கும் செந்தமிழ்ப் பா வாணர்க்கும் – சிந்தை
> சடையாது நல்கும் தயவினால் என்றும்
> அடையாத வாசல் அபயன்.

இது அடையாத வாசலுடையான் சடையன் என்ற பாட்டை நினைவூட்டுகிறது. இவன் புலவர் அனைவரினும், இந் நூலாசிரி யரிடத்து மிக்க அன்புடையவன்; 'மதுர சாரமிகுந்த தமிழ் நாவலர்க்குள் என்மேல் வாரம் மிகுந்த மனதுங்கன்'. வேளாளர் செய்த சிறப்பு மிக்க செயல்களெல்லாம் இவன் மாமன் ஆகிய அரிய நாயகர் மீது ஏற்றிச் சொல்லப்பட்டுள்ளன: சூலி முதுகில் சோறு அளித்தது, நெல்முளை வாரி அமுதிட்டது, பாம்பின் வாய்க் கை நீட்டிச் சீவரத்னம் வாங்கியது, நாவலனுக்கு அடிமை என்றது, துகிலைக் கீறிச் சிலந்தியைக் காட்டியது, நீலி பழியை மாற்றியது, மூர்த்தியார் கையால் சாந்து அரைத்தது. அரிய நாயகன் கச்சி விசுவேந்திரன் கிருஷ்ணப்பன் காலத்தே மதி மந்திரி. அவனுக்குத் தெய்வச்சிலை மருகன்; வேங்கடவர் அனுக் கிரகத்தில் கிருஷ்ணபுரம் நிருமித்த கூவம் மயிலேறி வம்சம். பாலையெல்லாம் சோலை வைத்தான். திருப்பணிக் கட்டளைகள் செய்தவன். புல்லாணி முதலான இடங்களில் கைங்கரியம் பண்ணினவன்.

அடுத்துத் தசாங்கம்; சடகோபாசாரியர் பதத்தின் ஆணை யாள்; திருவேங்கடநாதன் புதல்வன். இவனுடைய உறவின ரெல்லாம் சொல்கிறார். தெய்வச்சிலைப் பெருமாள் என்று 6 கண்ணிகள். உத்தியோகச் சிறப்பு. இவன் காலத்தில் திருச்செந்தூர் நடலிங்க பட்டன் என்பவன் திருப்பேரையூர்க் கோனேரிப்

பட்டன் மகளை மணந்தான். இவன் ஒரு நாள் மாமனார் வீட்டில் வந்திருந்தபோது, இராமாயணப் பிரசங்கத்தால் வாக்குவாதம் உண்டாகி, 'நூலெல்லாம் படித்தும் அறிவில்லாத தூர்த்தா போ' என்று மாமனார் திட்டியது பொறாது, இவன் மனைவியிடமும் சொல்லாமல் ஓடி விட்டான். அவள் இவனைத் தேடிச் திருச்செந் தூருக்கு வந்தாள். அங்கு வருந்தியிருக்கும் சமயம், வந்தவர்கள் தன் கணவன் சங்கரனார் கோயிலில் ஒருத்தி கையிலகப்பட்டுப் பொருளை வீணில் சிந்துவதும் கேட்டாள். பின்னொரு நாள் விறலி வந்தாள். சங்கரனார் கோயிலும் அங்குள்ள தாசிகள் தொழிலும் பாடு என்னவும், அவள் அப்படியே யாழெடுத்துப் பாடி உன்கணவன் வருவான் என்று சொல்லித் தேற்றினாள். பரிசில் பெற்று விறலி போகும்போது எதிரே நடலிங்கன் வந்தான். அவள் அவனைப் பழித்து, நங்கை இருக்கும் சிறைக்கோலம் பாரும் என்று சொல்லவும், அவன் தன் வரலாறு முழுமையும் சொல்கிறான்.

"மாமனாரிடம் கோபித்துக்கொண்டு ஆயிரம் பொன் பையிலே கொண்டு நான் சீவைகுண்டம் அடைந்து பின் கிருஷ்ணா புரம் போய்த் தெய்வச்சிலை செய்த தெப்பக்குளச் சிறப்பைப் பார்த்துச் சம்பாச்சாதம் வாங்கி நன்றாய்ச் சாப்பிட்டு நெல்லை காந்திமதி சேவித்து, புடைமருதூர், பிரமதேசம், பாவநாசம் சேவித்து, புன்னை வனச் சீராசையான சங்கர நயினார் கோயில் சென்று அங்கு அதிரூபத்னம் என்ற தாசியைக் கண்டு மயங்கி, கைப்பொருளை எல்லாம் அவளிடத்தே ஒழித்துவரும்போது, மானூர்க் கோதண்டனென்பவன் கண்டு தான் மோகவல்லி என்பவளிடம் எல்லாம் இழந்து வெறுமையான கதையைச் சொல்லிப் புத்தி புகட்டினான். நான் கேட்கவில்லை. எல்லாப் பொருளும் இழந்து அவளால் வெருட்டப்பட்டேன். சந்தனக் காப்பாயி என்பவள் தேறுதல் சொன்னாள். பிறகு நடந்ததற் கிரங்கி, ஊர் நோக்கினேன். நெல்லையடைந்து கிருஷ்ணாபுரம் வந்து புரட்டாசித் திருநாள் சேவித்து தெய்வச்சிலைப் பெருமாள் கொலுவைக் கண்டேன். அவன் தம்பிமார் மூவரும் உடன் இருந் தனர். விட்ணுகீர்த்தனத்தைச் சங்கீதப் பாட்டிலே பிரசங்கம் பண்ணினோம். அவன் பரிசில் நல்க, வாழ்த்திப் பெற்றுக் கொண்டு வந்தோம். கோதண்டன் மானூர் சென்றான். நான் இங்கு வந்தேன். நீ தூது செல்" என்று அனுப்ப அவள் இருவரையும் கூட்டி வைக்க, தெய்வச் சிலையை வாழ்த்தி மகிழ்ந்திருக்கிறார்கள்.

## ஆசிரியர்

– செந்தமிழைச்
சூட்டும் குமாரசு வாமி அவதர்னி
பாட்டும் படிப்பும் பகுத்தறிந்து. 597–8

என்ற வரிகளால் ஆசிரியர் பெயர் அறிகிறோம். இவர் பெயர் குமாரசுவாமி; அவதானி என்பது, இவ்வாறு பாடுவோர் எல்லோரும் வைத்துக்கொள்ளும் பெயர் போலும். கூளப்ப நாயக்கன் பாட்டிலும் இப்பெயர் வருகிறது. இவ்வாசிரியர் நூலை மிகவும் எளியநடையில் நன்றாகவே பாடியிருக்கிறார். காமச் சுவை கூறும் பகுதியை நீக்கிப் பார்த்தால், நூல் நன்கு செய்யப்பட்டதென்றே சொல்லலாம்.

## காலம்

இந்நூலின் பாட்டுடைத் தலைவர் தெய்வச் சிலைப் பெருமாள் முதலியார்; ஊர் கிருஷ்ணாபுரம். இங்கு திருவேங்கட நாதர் கோயில் உள்ளது. இதன் சிற்பக்கலை மிக்க பிரசித்தி பெற்றது. இக்கோயிலை நிருமித்தவர் கூவம் மயிலேறும் பெருமாள் முதலியார்; இவர் வழிவந்த தெய்வச்சிலை முதலி யார் இங்கு ரங்க மண்டபம் என்ற மண்டபம் கட்டினார். இவர் திருநெல்வேலியை ஆண்டு வந்த தளவாய் அரியநாயக முதலி யாருடைய சகோதரி புதல்வர். கிருஷ்ணப்ப நாயகர் வேண்டு கோளுக்கிணங்கி 1567இல் விசய நகர அரசரான வீர சதாசிவ தேவ மகாராயர் கிருஷ்ணாபுரத்தை வேங்கடேசப் பெருமாளுக்குச் சர்வ மானியமாகக் கொடுத்தார். கோயில், மதில், கோபுரம், தேர் எல்லாம் செய்தவர் மயிலேறும் பெருமாள் முதலியார் என்று விறலிவிடுதூது கூறும்:

ஆதிவட வேங்கடவ ராட்கொண்ட னுக்கிரிக்க
நீதிகொள்கிட் ணாபுரத்தை நிர்மித்து – வீதிகண்டு
வானமுதல் தூவிவரை வாழ்வேங் கடமாயர்க்
கானதொரு கோயி லமைத்தருளி – மேனிமிர்ந்த
சுற்று மதிலுந் தொகுத்தநிலைக் கோபுரமும்
மற்றுமுள்ள தெல்லாம் வகுத்ததற்பின் – கொற்றத்
திருவளரத் தேருஞ் சிறப்புடனுண் டாக்கிப்
பெருமையாய்க் கீர்த்திமுன்பு பெற்ற – முருகுயிர்க்கும்
மன்றலந்தார்க் கூவம் மயிலேறி வம்ச மென்னுங்
குன்று தனிலிட்ட குல தீபம். 28–33

அவரையே இவ்வரிகள் கூவம் மயிலேறி என்று கூறுகின்றன. அரியநாயக முதலியார் ஆயுட்காலம் 1520-1609. அவர் சகோதரி புதல்வரான தெய்வச்சிலையார் காலமும் 16ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி என்றே கருதப்படுகிறது. எனவே ஆசிரியர் காலமும் இதுவே.

### பதிப்பு

வையாபுரிப் பிள்ளை, துரைசாமி முதலியார் இருவரும் சேர்ந்து 1936இல் வெளியிட்ட பதிப்பு. இதில் வரலாறு விளக்கமாய்ச் சொல்லப்பட்டதோடு, கிருஷ்ணாபுரம் தாமிரசாசனம் நாகர எழுத்தில் வடமொழிச் சுலோகங்கள் 112 அழகுற அச்சிடப்பட்டுள்ளன, அவற்றின் கருத்தும் சொல்லப்பட்டுள்ளது.

## சேறை - கவிராச பிள்ளை

தமிழ்நாட்டில் பெரும் புலமை பெற்ற புலவர் சிலர் தங்கள் புலமை வெளிப்பாட்டுக்கு என்ன காரணத்தினாலோ அதிகச் சந்தர்ப்பம் வாய்க்கப் பெறாமல் சில சிறு நூல்களோடு அமைய வேண்டியிருந்தது. அத்தகையோருள் இவர் மிகவும் சிறப்புடையவர்.

### வரலாறு

இவர் வரலாற்றைப் பலர் பலவிதமாக எழுதியிருப்பினும் அனைத்தின் சாரமும் ஒன்றே. அத்தனைக்கும் மூலமாய் இருந்தது ஐயரவர்களுடைய குறிப்பு. இவருடைய இயற்பெயர் இன்னதென்று தெரியவில்லை. இதே நூற்றாண்டில் வீரை கவிராச பண்டிதர் ஒருவர் இருந்து சௌந்தரிய லகரியைத் தமிழில் பாடினார். அவரினும் இவரை வேறு பிரித்துக் காட்ட அவரை வீரை - கவிராச பண்டிதன் என்றும், இவரை சேறை-கவிராச பிள்ளை என்றும் வழங்குவது இலக்கிய வரலாற்று மரபு. இவர் கணக்கர் என்னும் கருணீகர் மரபினர். ஆதலால் பிள்ளை எனப்பட்டார். இவர் பாண்டி நாடு சென்றபோது தமது பிரதாபத்தை ‘இந்தத் தேசப் புலவர் மனத்துக்கு இடியென வந்தேன் காண்’* என்று கூறியிருத்தலால் இவர் பாண்டி நாட்டினர் அல்லர் என்பது ஐயரவர்கள் குறிப்பு. இவர் ஊர் சேறை. சோழ நாட்டில் இது திருச்சேறை என்ற பிரசித்தமான திருமால்பதி.❖

* பக்கம் 242

❖ இவர் தொண்டை நாடு என்று சோமசுந்தர தேசிகர் எழுதியிருப்பது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

சேறை - சேற்றூர் எனின் சேத்தூர் இங்கு பல உள்ளன. எந்த ஊர் என்பது விளங்கவில்லை. இவர் சைவ சமயத்தினர், முருகக் கடவுளை உபாசித்து மந்திர சித்தி பெற்றவர். பெரும்புலமை யுடையவர். சிவ புராணங்களிலும், சைவ சித்தாந்த சாத்திரங் களிலும் பயிற்சி மிக்கவர். சொல் நயமும் பொருள் நயமும் அமைய இனிமையான செய்யுள் பாடுதலில் வல்லவர். பொரு ளமைப்பு மிகவும் விசித்திரமானது. பாடல்கள் செம்பாக மானவை. இவர் நூலை எந்த இடத்தில் எடுத்துப் படித்தாலும் இத்தன்மைகளை அங்கு நன்கு விளங்கக் காணலாம்.

விரைந்து செய்யுள் செய்யும் ஆற்றலுடையவர். இத்தகைய புலவர் பலரினும் இவர் மேம்பட்டவர். அதுபற்றியே இவரை ஆசு கவிராசர் என்பர். வாதுக்கு வந்தவர்களை வன்மையாக அடக்குபவர் ஆதலால் ஆசு கவிராச சிங்கம் என்றும் பெயருண்டு. அருணகிரிநாதர் காலம் முதற்கொண்டு தமிழில் வண்ணக் கவிகள் பெருகின. இவர் காலத்தில் இவருக்கு ஈடாக வண்ணம் பாடுபவர் இல்லை என்று பெயர் பெற்று வண்ணக் களஞ்சியம் என்று இவர் வழங்கப் பெற்றார். இவர் பாடிய வண்ணங்களில் திருவண்ணாமலையார் வண்ணம் ஒன்று இப்போது கிடைத் துள்ளது. அதைப் படித்தால் இவரது தகுதி நன்கு விளங்கும்.

கடிகை என்ற ஊரிலிருந்த வள்ளல்* இவருக்கு இளமையில் ஆதரவு தந்திருக்கிறார். அது பற்றி இவர் தம்மைக் கடிகையார் கோலாகலன் என்று குறிப்பிட்டிருப்பதைத் தமிழ் நாவலர் சரிதை எடுத்துக் காட்டுகிறது:

---

* கடிகையார் என்ற வள்ளல் தொண்டை நாட்டிலுள்ள கடிகை என்ற ஊருக்கு அதிபர் என்பது தேசிகர் குறிப்பு. ஆனால் இவர் 'தொண்டை நாட்டுச் சேத்தூரில் பிறந்து கடிகை என்னும் ஊரில் தமது பாட்டனாரான கடிகை மலைப் பிள்ளை யென்பவரால் இளமையில் ஆதரிக்கப் பெற்றவரெனவும், இயற்பெயர் இராசாப் பிள்ளை யெனவும், கருணிகர் மரபினரிடையே ஒரு வரலாறு நிலவுகிறது. கடிகை மலையென்பது இப்போது சோளிங்கபுர மென வழங்கும், பலர் கடிகாசலமென்ற பெயர் கொண்டிருப்பது வடார்க்காட்டு வட பகுதியில் மிகுதியும் காணப்படும்' என்பது தொண்டை நாட்டினரும் இதே மரபினரும் தமிழ் நாவலர் சரிதை பதிப்பித்தவருமான ஔவை துரைசாமிப் பிள்ளையின் குறிப்பு.

செந்தமி ழோர்தங்கள் சீபாத தூளி, பொர
வந்த புலவோர்தம் மார்பாணி, – கந்தன்
அடிகையா ரப்பரவும் ஆசுகவி ராசன்
கடிகையார் கோலா கலன்.

இஃது ஆசு கவிராச சிங்கம் கடிகையாரைப் பாடியது.

இந்தப் பாடலில் தம்முடைய தன்மைகள் அனைத்தையும் புலப்படுத்தியிருக்கிறார். தமிழ்ப் புலவர்கள்பால் மிக்க பணிவுடையவர். வாதுக்கு வந்தோரை அடக்கும் வலிமையுடையவர். முருகன் திருவடியை வணங்குபவர். ஆசு கவிராசன் என்ற பெயருடையவர். கடிகையாரால் போற்றப் பெற்றவர்.

இவர் திருக்காளத்தியில் வாழ்ந்தவரும் செங்குந்தக் குலத்தினரும் ஆகிய வேங்கடராய முதலியார் என்னும் வள்ளலால் போற்றப் பெற்று அத்தலத்திலே சிறிது காலம் வாழ்ந்திருந்தார். அவர் விருப்பத்திற்கிணங்கவே திருக்காளத்தி நாதர் உலாப் பாடினார் என்பது தெரிகிறது. அக்காலத்தில் இவர் திருவண்ணாமலை நாதர் மீது ஒரு வண்ணம் பாடி அதை அரங்கேற்றுவதற்காக முதலியார் தந்த பல்லக்கில் ஏறித் திருவண்ணாமலை வீதியில் வந்தபோது உண்ணாமலை எல்லப்பர் இவரைக் கண்டு ஒதுங்கினார் என்று பரமேசுரப் புலவர் ஒரு பாடல் பாடியிருக்கிறார். இதே காலத்தில் இவர் சேயூர் முருகன் மீது ஓர் உலா பாடினார். பின்னர் அங்கிருந்து தெற்கு நோக்கிச் சென்று பல தலங்களை வழிபட்டுக் கொண்டு சென்றபோது கடம்பர் கோயில் அருகேயுள்ள திருவாட்போக்கியில் வாழ்ந்த சைவ மக்கள் இவருடைய உலாப் பாடும் வன்மையை நன்குணர்ந்து தங்கள் தலத்திற்கும் ஓர் உலாப் பாடுமாறு வேண்ட, இவர் அவ்வாறே திருவாட்போக்கி என்னும் இரத்தினகிரி உலாப் பாடினார் என்று தெரிகிறது.

பின்னர் தென்பாண்டி நாடு நோக்கிச் சென்று அங்கு அப்போது சீவலவேள் என்று பெயர் பெற்றிருந்த அதிவீரராம பாண்டியன் சிறந்த அரசராயும் பெரும்புலவராயும் இருந்தமையறிந்து இவர் அரசரைப் பார்க்கச் சென்றார். வாயில் காவலர் உள்ளே விடவில்லை. அதன் மேல் இவர் பின்வரும் பாடலைச் சீட்டுக் கவியாக எழுதி அரசனுக்கு அனுப்பினார். அரசன் இவரை வரவழைத்து நிலைமையை அறிந்துகொண்டு தக்க பரிசுகள் வழங்கினான்:

தென்பா ராளும் அறிவிற் குறுமுனி
தெக்கிண கயிலையில் வாழ்
செங்குந் தக்குல வேங்கட ராயன்
திருவாசற் புலவன்
என்பேர் வண்ணக் கட்சிய தன்றி
எதிர்த்தவர் மார்பாணி
இந்தத் தேசப் புலவர் மனத்துக்
கிடியென வந்தேன் காண்
உன்பால் யான்வர வாசற் காரர்க்கு
உத்தாரம் பண்ணி
உள்ளுக் கென்னை யழைப்பித் தாசில்
உரைக்குங் கவிதைகள் கேட்டு
என்பால் வரிசைகள் பரிசில்கள் நல்கி
இரட்சித் திடவேணும்
இராமா சீவல மாறா பாண்டிய
இராச வரோதயனே.

*'இது பாண்டியராசா ஆரென்று கேட்டபோது கவிராச பிள்ளை பாடியது.' இங்கு புலவர் தாம் வேங்கடராயன் திருவாசற் புலவன் என்று கூறுவதும் தம் பெயர் வண்ணக் கட்சி என்று கூறுவதும் காணத்தக்கன (வண்ணக்கட்சி-வண்ணக்காடு). எதிர்த்தவர் மார்பாணி என்று சொல்வதில் இவருக்குப் பெரு விருப்பம். இராமன் - அதிவீரராமன்.*

*அங்கு சில நாள் தங்கியிருந்து அரசர் விருப்பப்படி காளத்திநாதர் மீது திருக்காளத்தி நாதர் இட்டகாமியமாலை என்ற கலித்துறை நூலொன்றும் பாடினார் என்று சொல்வர். இவர் வரலாற்றில் வேறு செய்திகள் தெரியவில்லை. இவர் மந்திர சக்தி உடையவராதலால் இவர் பெயரைச் சொன்னாலே விடங்கள் நீங்கும். ஒருவரை நல்ல பாம்பு தீண்டி அவர் மயக்க முற்றபோது கவிராசருடைய மாணாக்கர் ஒருவர் பின்வரும் வெண்பாவைச் சொல்லி விஷவேகத்தை இறக்கினார் என்பது ஐயரவர்கள் குறிப்பு:*

ஆறுமுக னாணை அவனடியார் தம்மாணை
ஏறு மயிலாணை என்னாணை – வீறுபுகழ்
தேறு கவிராச ராசன் திருவாணை –
ஏறிய வாறே இறங்கு.

## காலம்

அதிவீரராம பாண்டியர் காலம் என்று சொன்னமையால் அவருடைய காலமே இவருடைய காலமாகும். அதிவீரராம பாண்டியன் வரலாறு புராண இலக்கியம் என்ற இந்நூற்றாண்டு வரலாறு முதற்பாகத்தில் சொல்லியிருக்கிறோம். அவர் முடி சூடிய ஆண்டு கி.பி. 1564. எனவே சேறைக் கவிராச பிள்ளையின் காலமும் 16ஆம் நூற்றாண்டின் பிற்பாதியாகும்.

## நூல்கள்

இக்கவிஞருடைய நூல்கள் முன்னமே வரலாற்றில் குறிப் பிடப்பட்டுள்ளன. அவை திருக்காளத்தி நாதர் உலா, திரு அண்ணாமலையார் வண்ணம், சேயூர் முருகன் உலா, திருவாட் போக்கி நாதர் உலா, திருக்காளத்தி நாதர் இட்ட காமியமாலை என்பன. வேறு இவர் பெயரால் தனிப்பாடல்கள் இல்லை.

## திருக்காளத்தி நாதர் உலா

இது காப்பு வெண்பா வொன்றும் 578 கண்ணிகளும் கொண்டது. பெயர் காளத்தியாள்வாருலா என்று ஏடுகளில் காணப்படும். நூல் இறுதியில் பின்வரும் வெண்பா ஏடுகளில் காணப்பெறுகிறது.

பாவையர்கள் மாலேறப் பஞ்சசரன் போரேறத்
தேவர் கரங்கள் சிரமேற – யாவுங்
கருதுபொருள் தென்கயிலைக் கல்லா லடியில்
ஒரு தலைவன் வந்தான் உலா.

மிகச் சிறந்த உலாப் பிரபந்தங்களில் இதுவுமொன்று. சொல்லணி களும் பொருளணிகளும் மிகவும் அதிகம். எங்கு எடுத்தாலும் மடக்கும் சிலேடையுமாக இருக்கும். பொருள் செய்வதில் கடின மின்றி எளிதாகவே இருக்கும். தமிழ் மொழியின் நயத்தையும் வளத்தையும் இதில் மிகுதியாகக் காணமுடியும். நான்கு பதிகளின் சிறப்பைச் சிவபிரான் உமாதேவிக்கு உரைக்கிறார்:

ஆயிரத்தெட் டுண்டு பதிஆய்ந் தவற்றெடுத்த
நாயகமாம் பதிகள் நான்கவற்றுள் – நீ எம்மைக்
கூடிவிளை யாடுவது கோலவட காசியிலே
ஆடல் புரிவதுபொன் னம்பலத்தே – நீடுமுது
குன்றிற் குலாவல் குடும்பத்துடன் இருக்கை
தென்றிக் கயிலையிலே சேயிழையாய்.

(தென்கயிலை - காளத்தி) திருவேங்கட மலைமேல் இரண்டு யோசனை தூரத்தில் நின்று தன்னை மால் தொழுகிறார் என்று சொல்லுகிறார்; இப்படியே திருக்காளத்திப் புராணமும் சொல்லும். பஞ்சபூதத் தலங்களையும் குறிப்பிடுகிறார்.

**ஆரூரி லே புவியாய் ஆனைக்கா விற் புனலாய்ச்**
**சீரூர் அருணையிலே செந்தீயாய்ப் – பேரூரும்**
**ஏகாம் பரத்தில் இயங்கொலியாய்த் தன்னூரில்**
**ஆகாயமாய் நிற்கும் ஆடலான்.**

(ஒலி - காற்று, வாயுத்தலம் காளத்தி என்பது ஒரு மரபு.) தொடக்கத்தில் இப்பகுதி ஆற்றூர் வளநாடு, இங்கு விக்கிரம சோழன் குலோத்துங்கன் இராஜேந்திர சோழன் ஆகிய சோழர் மூவர் திருப்பணி செய்தமையால் இது மும்முடிச் சோழபுரம் ஆயிற்று. வரகுண பாண்டியன் வழிபட்டான் என்ற செய்தியைச் சொல்லுகிறார். கண்ணப்பர் வரலாற்றையும் நக்கீரர் கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி பாடியதையும் உரைக்கிறார். இப்படியே சொல்லணியாகப் பல செய்திகளை முறைப்படுத்திச் சொல்லுகிறார். கால அளவைப் பெயர்களான அணு, துடி, கலை, காட்டை, கணம், மாத்திரை, எல்லை, கடிகை, நண்பகல், காலை, உச்சி, இரவு, அந்தி, திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய பஞ்சாங்கம், ஓரை, மாதம், உவா, வருடம், உகம், கற்பம், சங்காரம் என்ற பெயர்களைத் தொனியால் அமைத்துச் சொல்லுகிறார். மேடம் முதலான பன்னிரண்டு ராசிகளையும் இவ்வாறு அமைத்துச் சொல்லுகிறார். பின்னர் பெருமானுடைய வருணனையைச் சொல்லும்போது பன்னிரண்டு தலப்பெயர்களைச் சிலேடையாகவும் மடக்காகவும் அமைக்கிறார். இடையே பருத்தியினால் செய்த பொருள்களான பச்சை, வடம், கலை, மேற்கட்டி, சிறுபாகை, அணைபாகு, சட்டை, கச்சு, பவந்தம், துப்பட்டி, துண்டம், கோவணம், போர்வை, வேட்டி என்ற பெயர்களை அமைக்கிறார். பேதைப் பருவ வருணனையில் நீரின் தொடர்புடைய கடல் கழிநீர், ஏரி நீர்க்குளம், கால்வாய், துரவு கிணறு, நீர் வற்றாத் தடாகம், மடு கேணி வாடவி ஆறு அகழ் ஊற்று ஓடை என்ற பெயர்கள் தொனிக்குமாறு அமைத்துள்ளார். அடுத்து இவை போல, கரும்பின் தொடர்புடைய பெயர்களான வயல் ஆலையாடல் அல்லாலை கோது காது என்பன. பின்னர் இப்படியே மடந்தையின் வடிவை வருணிக்கும் இடத்தில் 19 தலப் பெயர்களைச் சொல்லணியாக அமைக்கிறார். பெருமான்

உலாவுக்கு எழுந்தருளும்போது வருகின்ற குழாங்களின் தொகுதியை விரிவாகச் சொல்லுகின்றார்.

பேதைப் பருவம் மிகவும் விரிவாக உள்ளது. பெதும்பைப் பருவத்தில் அவள் கழங்காடுவது சொல்லுகிறார். ஏழு எண் களுக்கும் பொருத்தமான ஏழு பொருள்கள் சொல்லப்படுகின் றன. எல்லோரும் மிகவும் விரிக்கின்ற மங்கைப் பருவத்தை இவர் சுருக்கமாகவே சொல்லுகிறார்,

மங்கைப் பருவத்தில் இரு செய்திகள் சிறப்பாய்க் குறிப் பிடத்தக்கன. ஒன்று மங்கை அம்மானையாடுதல், அம்மானை என்ற சொல் பல பொருள்களில் வருமாறு ஏழுமுறை அமைத் திருப்பது சுவையுடையது:

– வேள்வியிலே

தன்னைமறந் தாட்டுத் தலைபடைத்த அம்மானை
அன்னைதனை ஈன்றமலை அம்மானை – முன்னை நாள்
கொங்கையொரு மூன்றுடைய கொம்பையரு ளம்மானை
அங்கையிலே வீற்றிருக்கும் அம்மானைக் – கங்கெயனும்
அம்மானைப் பெற்ற சடை அம்மானைப் பாடியவள்
அம்மானை யாடும் அளவிலே. 346–9

மற்றது, பெருமானைக் கண்டு காமுற்ற மங்கை தாதியாரை நோக்கி இவர் தமியேனை ஆள்வாரோ என்று கேட்கவும், அவர்கள், இந்தச் சம்பந்தம் ஆகாது என்று அறிவுறுத்தும் பகுதி பின்னும் சுவையுடையது:

– கோதையே

வண்டிலங்கு மேனியிலே வாழும் மடவரலைக்
கண்டிலையோ, நெஞ்சம் கரந்தாயோ, – பண்டு நீ
கற்றகலை யெல்லாம் கழன்ற கலையுடனே
அற்றவோ? நின்னை அவர் கொண்டால் – உற்றணைக்க
மாமியார் உண்டோ, மலையிற் பெருநீலி
யாமவளும் சக்களத்தி யாகாளோ? – காமிக்கை
தோற்சேலைக் கோ, பிச்சைச் சோற்றுக்கோ, ஒட்டுக்கோ,
மேற்சாம் பற்பூச்சுக்கோ, சுடலை வீட்டிற்கோ – நாற்சந்தி
அம்பலத்துக் கோ, எலும்பி னாபரணம் பூணுகைக்கோ,
வெம்பணிமா லைக்கோ, பேய் வேலைக்கோ? – சம்பந்தம்
நல்லிடத்திற் சோதித்தாய், நம்போலியர் இருக்கும்
இல்லறத்துக் கித்தனையும் ஏற்குமோ?

என்று சொல்லி ஆரூரில் செங்கமல மங்கைக்கும், மதுரையில் வலைச்சேரி மங்கைக்கும், கம்பையிலே கொங்கை தழுவக் குழையன் புள்ள மங்கைக்கும், காளத்தியில் சகலகலை மங்கைக்கும், மதுரையில் பாண்டி வள மங்கைக்கும் அருளிய அன்பைக் காட்டி 'நீயும் அவர்களைப் போல் மாதவத்தைச் செய்' என்று தேற்றுகிறார்கள்.

அடுத்த மடந்தைப் பருவத்தில் அவள் கனவில் பெருமான் வரக்கண்டு அவரோடு பேசுகிறாள். இது வாக்குவாதம் போலச் சிலேடையில் அமைந்துள்ளது; சுவைமிக்க இதைத் தோழியரிடம் சொல்லிக் கொண்டிருக்கும்நேரம் பெருமான் வீதியிலே வருகிறார். அடுத்த பருவத்தில் அரிவை வருணனை மிகவும் சிறப்புடையது. தெரிவைப் பருவத்தில் அவள் கயிலையார்க்குத் தூது போய்ச் சொல் என்று வசந்தன், கோகிலம், மதனன் முதலியோரைக் கேட்க, அவர்கள் அஞ்சி மறுக்கிறார்கள். அந்த நேரம் பெருமான் உலா வரக் காண்கிறாள். பேரிளம் பெண் பருவத்தில் தசாங்கம் கூறுகிறார். தசாங்கத்தில் திருநீலகண்டராணையான் என்று சொல்லுகிறார். பெரியபுராணச் சரித்திரத்தைக் கருதி விரையாக்கலி என்பது சிவபெருமான் ஆணை என்று பல நூல்களில் சொல்லப்பட்டிருக்கும். இங்கு மூங்கை கவி கொண்டான் (மூகஸ்துதி) என்று குறிப்பிடுகிறார்.

கச்சபாலயத்தைப் பலமுறை குறிப்பிடுகிறார்; இது பாடல் பெற்ற தலமன்று. இதனிடத்து இவருக்கு ஈடுபாடு அதிகம் போலும். கொக்கினிறகே தாரன் என்ற இடத்து கொக்கிறகு ஒரு மலர் என்றே குறிப்பிடுவது காணத்தக்கது. கொக்காகிய புள்ளின் சிறகு என்பார் கூற்றுப் பொருந்தாது என்று விளங்குகிறது.

திருக்காளத்தி நாதர் உலா மிகச் சிறந்த சொல்லமைப் புடையது. ஆசிரியருக்குச் சொல்லும் பொருளும் புராணச் செய்திகளும் தலச் செய்திகளும் நான் நான் என்று முந்தி வந்து ஏவல் புரிகின்றன. சொல்லும் பொருளும் அணியும் சேர்ந்து துள்ளிக் குதித்து ஆடி எக்காளமிட்டுக் குழைந்து தவழ்ந்து வருவதைக் கண்ணி தோறும் காணலாம். தமிழ் மொழியின் ஆற்றலை, பிற்காலச் சிறுநூல்களில் பலவற்றுள்ளும் இந்நூல் மிகவும் நன்றாக எடுத்துக் காட்டுகிறது. நூலை ஒருமுறை பயின்றாலும் மீண்டும் மீண்டும் தன்னிடத்து ஈர்க்கும் தன்மையுடையது. நூலாசிரியரைக் கவிராசர் என்று பிற்காலத்தோர் சிறப்பித்ததில் வியப்பில்லை. தமிழ் கற்போர் தொடக்கத்தில் இந்நூல் கற்பாரானால் மிக்க பயனடைவர்.

## திரு வாட்போக்கி நாதர் உலா

இரத்தினகிரி யுலா என்றும் வழங்கும். திருவாட்போக்கி என்ற பாடல் பெற்ற தலம். இரத்தின கிரி, மரகதாசலம், மாணிக்க மலை என்ற பெயர்களும் உடையது, இம்மலை சிவபெருமான் எழுந்தருளியுள்ள மலைகளில் மிகவும் உயர்ந்ததென்றும், காகம் அணுகாத மலை என்றும் வழங்குவது. நல்ல படிகள் அமைந்த மலையாயினும், ஏறுவது எளிதன்று. மலையுச்சியில் அழகான பெரியகோயில் உள்ளது. கவிராசபிள்ளை இவ்வூரிலிருந்த வேலாயுதன் என்ற, வள்ளல் விரும்பியவாறு இவ்வுலாவைப் பாடினார் என்பர்.

இவ்வுலாத் தொடக்கத்தில் ஒரு காப்பு வெண்பாவும், 408 கண்ணிகளும் இறுதியில் ஒரு வாழ்த்து வெண்பாவும் உடையது. சிவாயநகர் என்று இத்தலம் உலாவில் சொல்லப்படும். சிவ மந்திர வடிவாய் மலை அமைந்த படியால் சிவாயம் எனப் பட்டதென்று புராணம் கூறும். இங்கு ஆரியமன்னன் என்பவன் வரலாறு சிறப்புடையது. இவனுடைய மணிமுடி மறைந்து போகவும், இங்கு போய்ப் பெற்றுக் கொள்ளுமாறு அவனுக்குப் பெருமான் கனவில் உணர்த்த, அவன் அவ்வாறே இங்கு வந்தான். இங்கு பெருமான் ஓர் வேதியனாகத் தோன்றி ஒரு கொப்பறை யைக் காட்டி 'இதைக் காவிரி நீரால் நிரப்பினால், மணிமுடி கிடைக்கும்' என்றான்; மலையடிவாரத்திலிருந்து காவிரி ஐந்து மைல் தூரத்திலுள்ளது. இந்நிகழ்ச்சியை உலா விரிவாய்க் குறிப் பிடுகிறது.* அவ்வாறே மன்னன் சென்று ஆயிரங் குடம் கொண்டு வந்தான். ஆனால் ஆயிரத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருந்த வேதியர், இது தொள்ளாயிரந்தான், மிச்சம் நூறும் பொசிவாசிக் காகத் தள்ளுபடி❖ என்றார்.

அதற்கும் பணிந்து அரசன் மீண்டும் நூறு குடம் கொண்டு வந்தான். இதில் பத்து பொசிவாசி என்றார். அவன் மீண்டும் பத்து கொண்டு வந்தான். அதில் ஒன்று பொசிவாசி என்றார். அவன் ஒன்று கொண்டு வரவும், அதில் உழக்குப் பொசிவாசி அதையும் கொண்டு வா என்றார். இவ்வளவும் பொறுத்த அரச னுக்கு இப்போது கோபம் வந்துவிட்டது. வாளை உருவி அவ் வேதியரை வெட்டினான். அவ்வெட்டைப் பெற்ற வேதியர்

---

* உலா கண்ணிகள் 22-27.

❖ பொசிவாசி - மண்குடத்தில் நீர் கசிவதற்காகக் கழிக்கப்படும் வட்டம். பொசிதல் - கசிதல்; வாசி - வட்டம்; வாசி தீரவே காசு நல்குவீர் என்ற சம்பந்தர் பாடல் காண்க.

மறைந்து, வாட்போக்கி நாதராக இடபாரூடராய் அரசனுக்குக் காட்சி தந்தார். வேதியர் மண்டை பிளந்தது, இறைவனுக்கும் முடியில் தழும்பாயிருந்தது, இதனால் அவருக்கு முடித்தழும்பர்* என்ற பெயரும் தலத்துக்கு வாட்போக்கி என்ற பெயரும் வந்தன. முடித்தழும்பன், பொசிவாசி என்ற தொடர்கள் உலாவினுள் பலமுறை பயில்கின்றன.

பொதுவாக இவ்வுலா, காளத்தி நாதருலா அளவு சிறப்புடையதாக இல்லை. அதை அடியொற்றியே இதையும் செய்கிறார். அமைப்பிலோ பொருளிலோ மாறுதல் காணப்படவில்லை.

திருநீலகண்டச் சோழன் இங்கு திருப்பணிகள் செய்தான் என்று பாடுகிறார். தலச் சிறப்புப் பகுதியில் தசாங்கம் சொல்கிறார். காகமணுகாக் கனகிரி; அஞ்செழுத்தாணை. தமிழ் மாதப் பெயர்கள் தொனியால் அமையுமாறு பாடுகிறார். வாத்தியங்கள் பலவற்றை இரண்டு கண்ணிகளால் கூறுகிறார். உடன் வந்தோருள் பின்கண்டவர் சொல்லப்பட்டுள்ளனர்:

– எந்தை
பரவைமனைக் கேகப் பரவுதமிழ் வேந்தன்❖
மரபு தனிலுதித்து வந்தே – குருவடிவு
கொண்டு சிவாயநகர்க் கோயி லிடத்துறையும்
பண்டிதராம் வாட்போக்கிப் பண்டிதரும் – எண்டிசைமேற்
செல்லும் புகழ்சேர் தியாகவிநோ தக்குருவும்
சொல்லும் பழைய சுருதியுணர் – வல்லமையான்
மண்டலஞ் சேர் மாணிக்க வாசகநற் றேசிகரும்
முண்டக நேர் தட்சிணா மூர்த்தியெனும் – பண்டிதரும்
பேரான கீர்த்திப் பெரியோர்பக் கம்பையனும்
சீரான செங்கோல் செலுத்திவரப் – பாரோரும்
வண்டாரு மாதவரும் வேலாயுத முகிலும்.

வாட்போக்கிப் பண்டிதர், தியாக விநோதக் குரு, மாணிக்க வாசகதேசிகர், தட்சிணா மூர்த்திப் பண்டிதர், பக்கம்பையன், வேலாயுதம் இவர்களைக் குறித்து எந்த வரலாறும் தெரியவில்லை. இவர்கள் கவிராசபிள்ளை காலத்து அங்கு வாழ்ந்தவர்கள், இவர்கள் வேண்டுகோளுக்கிணங்கியே இவர் இவ்வுலாப் பாடினார் போலும்.

---

* முடித்தழும்பை இன்றும் காணலாம்.

❖ தமிழ் வேந்தன் மரபு (சுந்தரர்).

இங்கு பெதும்பைப் பருவ வருணனை சிறப்பு. முன் உலா வைப் போலவே இங்கும் இவள் ஒன்றுமுதல் ஏழு வரையில் சொல்லிக் கழங்காடுகிறாள். பெருமான் உலா வரக்கண்டு சொல்வன அங்கு போலவே உள்ளன. மங்கை அம்மானையாடு கிறாள்; ஏழு அம்மானை சொல்லப்பட்டது. பல மங்கையரைப் பற்றிய குறிப்பு அங்குள்ளது போலவே இங்கும் உள்ளது. கேதாரி மங்கைக்கு மயல் அகற்றினார், பூவாலே தினம் பரவி வாழ்த்திய கன்றாப்பூர் மங்கைக்குச் செவி தாழ்த்திருந்தார்; உத்தரகோச மங்கைக் கயலே பட்ட மங்கை தமக்கும் அருள் செய்தார் என்று தோழியர் கூறுகின்றனர். மடந்தைப் பருவ வருணனை சிறப்பு. தெரிவை யாழ் வாசிக்கிறாள். அப்போது பெருமான் உலா வருகிறார். முடித்தழும்பர் என்று சொல்லுமிடத்து எட்டுத் தழும்பரைக் கூறுகிறார். 'பண்ணு தமிழ்ச் சங்கத்தோன் வேண்டச் சரீரத்தையேயுதவித் - துங்கத்தியாகி* எனத் தோன்றும் உமக்கு' என்கிறார். இதைக் காளத்தி நாதருலாவிலும், 'அந்தாதி கீரனருளத் திருமேனி இந்தா தியாக மெனத்தந்தோன்' எனக் கூறுகிறார்; நக்கீரரிடத்து இவ்வாசிரியருக்கு மிக்க ஈடுபாடு என்பதைச் சேயூர் முருகன் உலாவிலும் காணலாம். சீகாளத்திப் புராணம் நக்கீரச் சருக்கத்தில், கயிலை காண்பதற்குப் பதிலாகத் தென் கயிலை யாகிய திருக்காளத்தி கண்டு கயிலை பாதி காளத்தி பாதியந்தாதி பாடியதற்கு மகிழ்ந்து, பெருமான் அவருக்கிருந்த நோய் நீக்கி நல்ல மேனி தந்தமையை இப்பகுதி குறிப்பிடுகிறது. பேரிளம் பெண் பருவத்தில் கூடலிழைத்தல் சொல்லப்படுகிறது. அவளைச் 'சிற்றின்பமெலாம் பேரின்பமாக்கும் பெருமிதத்தாள்' என்கிறார்.

நூல்களில் அருஞ்சொற்கள் பல உள்ளன. அதிரூபம், ஏகீ பவித்தல், சல்லாப லீலாகானம், சாம்பசிவன், தானா பதிக்கம், புக்கினாள், பம்மகத்தி.

### சேயூர் முருகன் உலா

கவிராச பிள்ளை பாடிய இரண்டாவது உலா. இவ்வுலா அச்சாகவில்லை; சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் அச்சிட்ட கல்குளம் - குப்புசாமி முதலியாரிடம் இதன் பிரதியை வாங்கிப் பார்த்ததாக ஐயரவர்கள் காளத்தி நாதருலா முகவுரையில் எழுதியிருக்கிறார். அவ்வுலாவின் சிறப்புப் பாயிர வெண்பா பின்வருவது:

---

* இப்பகுதி வரலாறு விளங்கவில்லை என்பது சோமசுந்தர தேசிகர் குறிப்பு.

கொற்றவ ரெண் செய்யூர்க் குமரர் கமலத்தைக்
கற்றவ ரெல்லாம் களிக்கவே – வெற்றிக்
கருணேசன் சேறைக் கவிராச ராசன்
ஒருநாளிற் சொன்ன உலா.

*இங்கு இவரைக் கருணேசன் (கருணீக மரபினர்) என்று குறித்தமை காண்க. இதிற் சில கண்ணிகளை ஐயரவர்கள் காட்டியிருக் கிறார்கள்.*

செவிரா சியங்கடந்த சேறைக் – கவிராசன்
சொன்ன உலாப் படித்துச் சோதிபெறத் தாலாட்டிக்
கன்ன லறிந்தந்திக் காப்பேற்றி – அன்ன நடை
காட்டியிடை காட்டியுடை காட்டிவழி காட்டிமொழி
காட்டியியல் காட்டிமயல் காட்டியே – நாட்டவரைப்
பூவரடி யாராக்கிப் புன்முறுவ லாலுருக்கும்
தேவ ரடியார் திறஞ்சூழ.

*இங்கு இவர் தம் பெயரையும் தாம் செய்த உலாவையும் இவ் வுலாவிலேயே சொல்லியிருப்பது காணத்தக்கது. இப்பகுதியில் காட்டி என்ற சொல்லை ஏழுமுறை மடக்கியிருக்கிறார். இது இவருடைய இயல்பு. சேயூர் சேயாகிய முருகனுக்குரிய ஊர். இப் போது வட ஆர்க்காடு ஜில்லாவில் செய்யூர் என வழங்கும் ஊர்.*

*திருவான்மியூர் ஐயரவர்கள் நூல் நிலையத்தில் இவ்வுலாவின் காகிதப் பிரதி உள்ளது. அதை ஆராய்ந்து பின்வரும் குறிப்புக்கள் எழுதப் பெறுகின்றன. இவ்வுலாவானது, செய்யூருலா, சேயூர்க் கந்தருலா எனவும் வழங்கும். தொடக்கத்தில் காப்பு வெண்பா ஒன்றும், நூல் இறுதியில் இரு வெண்பாக்களும் உடையது; ஒன்று 'கொற்றவர் எண் செய்யூர்' என்ற பாடல், மற்றது பின்வருவது:*

மாதர் மடலேற மானிடர்கள் ஈடேறப்
பூத வகைஐந்தும் போந்தேற – நீதித்
திருமுருகாற் றுப்படையான் செய்யூரான் செவ்வேள்
ஒருமுருகன் போந்தான் உலா.

*நூல் 513 கண்ணிகளையுடையது. காளத்தி நாதர் உலாவில் சொல்லிய இயல்புகள் அனைத்தையும் இங்கு காணலாம். அசுரரை வென்று, சேயாகிய முருகன் வந்து தங்கிய காரணத்தால் ஊர் சேயூர் (செய்யூர்) ஆயிற்று. எனினும் நூல் முழுமையிலும் செய்யூர் என்றே சொல்கிறார்.*

## செய்திகள்

முன்னிலைப் பகுதியில் தொண்டைமான் வரலாறு கூறுகிறார்; இது மணிமேகலையில் காணப்படும் வரலாற்றோடு ஒத்திருக்கிறது. சேட (நாகலோக) ராசன் மகள் பீலிவளை. அவ்வுலகு (கீழ் உலகு)விட்டு மேலே காவிரிப்பூம்பட்டினம் வந்து விளையாடி மலர் கொய்து பின் தன்னுலகிற் சேர்வாளை வளவன் கண்டு பின்சென்று, 'நீர் வார்த்துத் தருக' என்று சேடனைக் கேட்க, அவன் தருகிறான். பின்னர் அவள் தொண்டைமானை ஈன்றாள். தொண்டை மாலை புனைந்தமையால் தொண்டைமான். அவன் நாகலோகத்தில் தன் மாமனிடத்தே வளர்ந்தான். ஒருநாள் அவன் தாமரை ஞாளத்தைப் பிடித்தேறி மேலுலகு வந்து ஒரு மரத்தில் தன் பரியைக் கட்டிவிட்டு விளையாடக் கண்டு அவன் தந்தை, இன்னான் என்று அறிந்து தங்கள் கிளைக்கரசு ஆக்கினான். இச்செய்தி மணிமேகலையன்றி வேறெந்த நூலிலும் காணப்படவில்லை. இவ்வாசிரியர் தம் காலத்தில் மணிமேகலையைப் பயின்றிருக்க வேண்டும், அல்லது இவர் சூழ்நிலையில் இப்பீலிவளை வரலாறு பிரசித்தமாக வழங்கியிருக்கவேண்டும் என்று நாம் கருதலாம். இவ்வாறு கிளைக்கரசு ஆக்கப்பட்ட குமரனே இளந்திரையன், இவனே பல்லவர் குலத்துக்கு மூலம் என்ற வரலாறும் தமிழில் சொல்லப்படுவதுண்டு.

பின் ஆசிரியர் செய்யூர் பிறையூர் நாடு, பொன்னூர் செம்பூர்க் கோட்டம் என்கிறார். பலநாட்டுப் பெயர்களைக் குறிப்பிடுகிறார். மலையாளன், கங்கன், செங்கலிங்கன், வங்கன், லாடன், கொங்கன், துளுவன், ஒட்டியன், சிங்களவன், கன்னாடகத்தான், கூர்ச்சரத்தான், வடுகன் என வழக்கம்போல் பல வண்ணங்களில் மடக்கு அமைக்கிறார். முருகன் தலங்களாகச் செந்தில், தணிகை, பரங்குன்று, ஆவினன்குடி, அலைவாய், செய்யூர் என்பன குறிப்பிடுகிறார். தம் உலாவோசையும் பெருமான் கேட்கிறான் என்பதை,

– முற்றத்தில்
ஓடிவருந் தென்ற லுடனே உலாவோசை
நீடி வரஉகந்து நின்றருளி

என்ற வரிகளால் சுட்டுகிறார். உடன் வருவோரும் அவர்கள் ஊர்திகளும் விரிவாய்ச் சொல்லப்படுகின்றன. சைவ முத்தமிழை ஓதினோன் (சம்பந்தர்), வாகீசர், பரவை கேள்வன், மாணிக்கச் சொற்பாவலன், அருணகிரிநாதன் ஆகியோரும் உடன் வரு

கிறார்கள். ஓதுவார் மூவர் தமிழும் முழங்கு திருவாசகமும் கோவை திருப்புகழும் ஓதுகிறார்கள்.

முருகன் வருகையைக் கூறும்போது பல சாதிப் பெயர்கள் அவனுக்குரியனவாகச் சிலேடையால் சொல்லுகிறார்: செட்டி, குறவன், தட்டான், மலைமான், கன்னான், பார்ப்பான், நத்தமன், வலையன், பிள்ளை, முத்தரையன், அகம்படியன், உடையன், வண்ணான் - எத்தலத்துச் சாதிக்கு மேலான்.

பேதை ஒன்று முதல் ஏழுவரை என்று சொல்லிக் கழங்காடு கிறாள். பெதும்பைப் பருவத்தில் பன்னிரு இராசிப் பெயர் களையும் சிலேடையில் சொல்கிறார். மடந்தைப் பருவத்தில், பெருமானுடன் இவள் உரையாடலைச் சிலேடையில் சொல் கிறார். காலாயுதக் கொடியோன் (காலாயுதம் - கோழி) என்கி றார். இத்தொடரைப் பிற்காலத்தில் சுப்பிரதீபக் கவிராயர்,

காலா யுதக்கொடியோன் கையா யுதவிழியாள்
மாலாயுத மீன்ற மாமணியாய்த் தானுதிர்த்தாள்

என்று அமைத்திருக்கக் காணலாம். அரிவையைக் கேசாதி பாதமாக வருணிக்கிறார். இவருக்குத் திருமுருகாற்றுப்படை யில் ஈடுபாடு மிகுதி என்பதை முன் காட்டிய வெண்பாவினா லும், இங்கு,

தொடையிற் செறிகீரன் சொன்ன முருகாற்றின்
நடையிற் சிறந்த நடையாள்.

என்ற அடிகளாலும் அறியலாம். தெரிவைப் பருவத்தில் சங்கப் பலகை, நக்கீரர், திருப்புகழ் என்ற பொருள்களை மறுபடியும் கூறுகிறார். முருகனுக்குத் தசாங்கம் சொல்கிறார். தணிகைப் பொருப்பு, பாலாறு, தொண்டை நாடு, செய்யூர், கடப்பந்தார், பச்சை நிறத் தோகைப்பரி, அயிராவதம், யானை, கோழிக் கொடி, திசையெல்லாம் முந்தி முழங்கும் முரசு;

– சந்திரனும்
பானுநா ராயணனும் பங்கயனும் சங்கரனும்
ஆனதலை மேற்சுமக்கும் ஆணையான்.

அமனை முருக்கப் பிறந்தநீ என்கிறார். இறுதியில் 'சைவருளம் உருகப் போந்தான் உலா' என்று இவ்வாசிரியர் அமைத்திருப் பது வேறெங்கும் எந்த உலாவிலும் காணப்படாத அருமைப் பாடுடையது.

## நூற் சிறப்பு

சேயூர் முருகன் உலாவின் பெருமையை அடுத்த நூற்றாண்டில் இவ்வூருக்குப் பிள்ளைத் தமிழ் பாடிய அந்தகக்கவி வீரராகவர் தம் பிள்ளைத் தமிழ் அம்புலிப் பருவத்தில் ஆசிரியர் பெயரையும் சொல்லி அருமையாய்ப் போற்றியுரைப்பது காணத்தக்கது:

தவிராத வெவ்வினை தவிர்க்குமுரு காறுந்
தரித்தா றெழுத் தோதலாம்
சந்நிதிக் கருணகிரி நாதன் திருப்புகழ்ச்
சந்தம் புகழ்ந்துய்யலாம்
புவிராசன் வளவன் கழுக்குன்றன் வளமைபுரி
புண்ணியந் தரிசிக்கலாம்
பொருசூர னைப்பொருங் கதைமுதல் கந்தப்
புராணக் கடற்காணலாம்
கவிராசன் இப்பிரான் மிசைசெய்த திருவுலாக்
கவிவெள்ளை கற்றுருகலாம்
கவிவீர ராகவன் சொற்ற பிள்ளைக்கவி
கலம்பகக் கவிவினவலாம்
அவிராட கக்கோயில் புக்குவிளை யாடலாம்
அம்புலீ யாடவாவே
அயிலவன் செய்கையின் மயிலவன் கந்தனுடன்
அம்புலீ யாடவாவே.

## திருக்காளத்தி நாதர் இட்டகாமிய மாலை

1925இல் காளத்திநாதர் உலாவை இரண்டாம் பதிப்பாக அச்சிட்டபோது, ஐயரவர்கள் சேறைக் கவிராசபிள்ளை நூல்களில் இதுவும் ஒன்றென்று குறிப்பிட்டு, இதன் 77ஆம் பாடலில் தம்பெயரை இவர் அமைத்துப் பாடியதையும் காட்டி நூலின் 3ஆம் பாடல் தருமம் தவம் சற்றறியாத வேடுவன் என்பதையும் காட்டியிருந்தார்கள்; இப்பாடலின் கீழ்க்குறிப்பாக இந்நூல் முற்றும் திருத்தமாகக் கிடைக்கவில்லை என்றும் எழுதியிருந்தார்கள். ஆனால் அவர்களே 1938இல் இவ்விட்டகாமிய மாலையை அச்சிட்டபோது, அங்கு காப்பு வெண்பாவும் 49 பாடல்களுமே காணப்படுகின்றன, இந்நூலாசிரியர் பெயர் இன்னதென்று விளங்கவில்லை, இந்நூல் எத்தனை செய்யுளுடையதென்றும் விளங்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். இந்த நிலைமைக்குக் காரணம் நமக்கு விளங்கவில்லை. இவ்வாசிரியர் நோயுற்றுவருந்தி அந்நோய் நீங்குமாறு காளத்திநாதர்

*மீது இப் பாடல்களைப் பாடித் துதித்து நோய் நீங்கப்பெற்றார் என்று தெரிகிறது. பின்வரும் பாடல்கள் காண்க:*

பெண்ணப்பன் வேள்வி தனிலே யுகந்து பெருகப்பிடித்து
உண்ணப் புகுந்த சுரரையெல் லாந்துரந் தோடச்செய்தாய்,
விண்ணப்ப மொன்றுண்டு கேளடியேன்மெய்ப் பிணிகளைவாய்
கண்ணப்ப னெச்சி லுகந்தவனே, திருக் காளத்தியே.

துறைவாரி நஞ்சுண்ட கோளத்தை முட்டத் தொடங்கியநாள்
நிறைவான வர்களுந் தாமிற வாமன்னுன் னின்றதுபோற்
பிறைவார் சடைமுடிப் பிஞ்ஞக னே, என்பிணி தொலைப்பாய்
இறைவா, உனைநம்பி னேன், திருக் காளத்தி யீச்சுரனே.

*இந்நூலிலுள்ள சிறப்புடைய பாடல் 3ஆம் பாடல்:*

தருமந் தவஞ்சற் றறியாத வேடுவன் தன்செருப்பு
மருமுந்து வேணிக் கணிமா மலர், அவன் வாயுதகம்
திருமஞ் சனப்புனல், பல்லா லவன்மென்று தின்றதசை
அருமந்த போனக மன்றோ, நம் காளத்தி யப்பருக்கே.

*ஐயரவர்கள் முன்னே 77ஆம் பாடற் பகுதியைக் குறிப்பிட்ட இடத்துச் சொல்வது: இப்பாடல் செவிராசியம் என்று தொடங்கு வதென்றும், இச்செய்யுளில், 'புவிராசபாண்டியன் சித்தத்துக் கேற்பப் புகன்ற சித்ர, கவிராசராசகயிலா புரேசங் காளத்தியே' என்று துதித்திருத்தலையும் பிறசெய்யுட்களில் இங்ஙனங் கூறி யிருத்தலையும் நோக்குகையில் தம்முடைய வாக்கில் தம்முடைய பெயரையும், தம்முடைய செய்யுணயத்தையும் எந்த வகையாக வாவது எடுத்துக்காட்டும் ஒருவகை வழக்கம் இவருக்கிருந்த தென்று தெரிகிறது - என்றும் அவர்கள் எழுதியுள்ளார்கள். செவிராசியம் என்ற தொடர் மேலே காட்டிய சேயூர் முருகனுலா வரிகளின் தொடக்கத்தில் காணப்படுகிறது. இக்காரணங்க ளால் இரண்டையும் பாடியவர் ஒரே ஆசிரியர் என்று நன்கு புலப்படுகிறது.*

*ஆனால் இந்நூலின் நடை எச்சிறப்பும் இல்லாத எளிய நடை. ஒருகால் வரலாறு கூறுகிறபடி இல்லாமல் இவர் மிக்க இளமையிலேயே இதைப் பாடியிருத்தலும் கூடும். எப்படியா யினும் ஐயரவர்கள் கூற்று அர்த்தமாகவில்லை. 100 பாடல் உள்ளதென்று சொல்லி 77ஆம் பாடலையும் காட்டிய அவர்களே இப்போது 49ஆம் பாடலுக்குமேல் இல்லை என்று சொல் கிறார்கள்.*

## அண்ணாமலையார் வண்ணம்

வண்ணம் என்பது சந்தப் பாட்டு. தொல்காப்பிய வண்ண இலக்கணம் கூறும். அவிநயத்திலும் வண்ணம் விரிவாகச் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் அந்த வண்ணம் வேறு. பிற்காலச் சந்தப் பாட்டுக்களின் வண்ணம் வேறு. சந்தப் பாட்டுக்கள் சிலப்பதிகாரம் முதலான எல்லா நூல்களிலுமே காணப்படு கின்றன. விருத்தப்பாவில் அமைந்து வருகிற தாளத்திற்கேற்ற ஓசையைப் பிற்காலத்தில் சந்தம் அல்லது வண்ணம் என வழங்க லாயினர். தேவாரங்களிலும் பலவான சந்தப் பாடல்களைக் காண்கிறோம். இன்னும் பிற்காலத்தில் வண்ணம் என்பது தனித்த ஒரே அமைப்புடைய சீர்களைக் கொண்ட பாடலுக்குப் பெய ராகிவிட்டது. அருணகிரிநாதர் பாடியதில் திருப்புகழ் திருவகுப்பு வேல் விருத்தம் மயில் விருத்தம் முழுமையுமே வண்ணமாகும்: ஆனால் அவற்றை அப்பெயர் சூட்டிச் சொல்வதில்லை.

வண்ணம் என்ற பெயரால் முதன்முதல் எழுந்த தனியான பாட்டு, 14ஆம் நூற்றாண்டில் இரண்டாம் பட்டினத்தார் பாடிய உடற்கூற்று வண்ணம் என்பதாகும். இது யாக்கை நிலையாமை யையும் மனித வாழ்வின் சிறுமையையும் எடுத்துக்காட்டிப் பழிக்கும் முறையில் அமைந்தது: பிற்கால வண்ணப் பாட்டின் இலக்கணம் முழுமையும் அமையப் பெற்றது. அருணகிரிநாதர் மற்றோர் உடற் கூற்று வண்ணம் பாடினாரென்றும் சொல்வர்.

பாடுவோர் புலமைக்கேற்றபடி, வண்ணம் விரிந்து கொண்டு போகும். இதன் யாப்பமைதி நீண்ட ஆசிரிய விருத்தமாகும். தனித்த ஒரே சந்தம் அடிதோறும் மடங்கி வரும். இச்சந்தத்தைச் சந்தக்குழிப்பு என்று சொல்வர். ஒவ்வோர் அடியும் சாதாரணமாய் மூன்று முறை மடங்கி வருகின்ற ஒரே குழிப்பையும், முடிவில் ஒரு தனிச்சொல் அல்லது தொடரையும் பெற்றிருக்கும். இது எளிய தன்மை. இதைத்தான் திருப்புகழில் காண்கிறோம். தனி வண்ணப் பாட்டில் இவ்வியல்பு மிக்க விரிவடைந்திருக்கிறது. நாலடி ஆசிரிய விருத்தம் எட்டடியாகவும் பதினாறு அடியாக வும் விரிவதுண்டு. ஒவ்வோர் அடியும் அதன் விரிவுகளும் ஒரு கலை எனப்படும்.

பாளையப்பட்டார் ஆதரவில் சாதாரணப் புலவர்கள் வாழவேண்டி வந்த ஆதரவற்ற காலத்தில் புலவர்கள் பாடலில் அகப்பொருள் 'சுவை என்ற பெயரால் காமச்சுவையைப் பெருக்கிப் பாடி வைத்தார்கள். பாடல்கள் யாவுமே காதல்

கொண்ட பெண்ணுக்கு அருள் செய்வாயாக என்பதையே பொருளாக உடையன. பாடலின் முதல் பாதி பாட்டுடைத் தலைவனைப் புகழ்ந்து வேண்டுவதாகவும், பிற்பாதி பெண்ணின் அவல நிலையை விரித்துரைப்பதாகவும் அமைந்திருக்கும். முற் பகுதி ஆண்கலையென்றும் பிற்பகுதி பெண்கலையென்றும் சொல்லப்படும். முன்னே குறிப்பிட்ட தனித்தொடர் தொங்கல் எனப்படும்.

அப்படியே அருணகிரிநாதர் பாடிய திருவகுப்புப் பாடல்கள் யாவுமே வண்ணங்களாகும். இப்பாடலில் காணாத வண்ண விசித்திரங்கள் வேறெங்கும் காண்பதரிது. இவையே பின்னர் பல்வகையான பெருக்கத்துக்கும் இடமளித்தன என்பது உண்மை.

**தனத்தான தனனதன**
**தனத்தான தனனதன**
**தனத்தான தனனதன – தந்ததனனா**

என்று இந்தப் பகுதி மூன்று முறை வரும்; அதன்பின்,

**தனனதன தானதான தனனா**

என்று வருகிறது. இத்தனி வரியே தொங்கல் எனப்படுவது. இவ்வண்ணம், நாலடி இரட்டை ஆசிரிய விருத்தமாகவுள்ளது. இதன் துறை (இதற்குரிய கூற்று) ‘அவயவம் எழுதரிது என்று ஏந்தலை விலக்கல்’ என்பது. இதன் முதலடியிற் பாதியில் 27 சிவதலங்களின் பெயர்களை அடைமொழி இல்லாது, சந்தத் துக்கும் மோனைக்கும் பொருத்தமாக வகையுளியே எழாதபடி அமைத்திருக்கும் திறன் வியக்கத்தக்கது. பாடல் முதலடியின் முதற்பாதி சிவபெருமான் செயல்கள், பிற்பாதி தலங்கள்; இரண்டாம் அடியின் முற்பாதி சிவபிரான் வருணனை; பிற்பாதி அவர் பின்னே செல்லும் மயிலனையார்; மூன்றாம் அடியின் முற்பாதி தனம் குழல் விழி குழை எழுதினாலும் அவற்றின் குணம் வருமோ என்பது; பிற்பாதி தாள் நுதல் மிடறு விரல்; நான்காம் அடியின் முற்பாதி நுசுப்பு தோள் இதழ் உகிர்; பிற்பாதி முறுவல் உடல் அல்குல் - இவை எழுதினும் இவற்றின் பண்பு படத்தில் வராமையால் கிழி எழுதின் ஏது லாபம் உடையீர் என்று பாடல் கேட்கிறது. எடுத்துக்காட்டாக ஓர் அடியின் பாதியை மட்டும் இங்கு காட்டுகிறோம்.

**மலர்த்தாளை வனசமலர் தனைப்போல எழுதிடினும்**
**மலர்ப்பாய லனமென நடந்து வருமோ?**

உறுப்பான திலகநுதல் விதுப்போல எழுதிடினும்
உவப்பான குறுவியர் வரும்பி வருமோ?
மணிக்கோல மிடறுகமு கினைப் போல எழுதிடினும்
மரப்பாவை உருகுமிசை யின்பம் வருமோ –
விரலெழுதின் வீணை பேச வருமோ?

*இவ்வண்ணாமலையார் வண்ணம் பாடிய சிறப்பால், கவிராச பிள்ளைக்கு அவ்வூரில் பெருஞ்சிறப்பு செய்தார்கள் என்பதை வேறிடங்களில் சொல்லியிருக்கிறோம் (அவ்வரலாறு தமிழ் நாவலர் சரிதை கூறுவது).*

*இந்த வண்ண மரபில் தொடக்கத்தில் தோன்றிய முதல் நூல் என்றே சொல்லத்தக்கது சேறைக் கவிராச பிள்ளை பாடிய அண்ணாமலையார் வண்ணம். பிற்காலத்தில் (19ஆம் நூற்றாண்டு) இவ்வகைப் பாக்கள் தொகுத்து அச்சிடப்பெற்றபோது இது தவறாமல் முதற்பாடலாய்க் கொள்ளவும் பெற்றது. 16ஆம் நூற்றாண்டில் இந்த வண்ணமும் அடுத்த நூற்றாண்டில் கந்த சாமிப் புலவர் செய்த புட்பவன நாதர்வண்ணமும் சிறப்புடையவை. அண்ணாமலையார் வண்ணம் அளவாற் சிறியது.*

## *வீரை - அம்பிகாபதி*

**வரலாறு**

*கவிராச பண்டிதருடைய புதல்வரான இவர் மிகச் சிறந்த புலவராக வீரையிலேயே வாழ்ந்தார் என்பது வரலாறு. இவர் இளமையில் ஒரு சமயம் பாண்டியன் அவைக்களத்திற்குச் சென்றபோது அங்கிருந்த மன்னன் இவருடைய புலமையைச் சோதிக்க நினைத்து, தென்காசி, மதுரை, திருநெல்வேலி, திருக் கருவை என்ற நான்கு தலங்களின் பெயரும், இந்நாலூர் சுவாமி பெயரும், அம்பிகை பெயரும் ஒருங்கே அமையும்படி ஒரு பாடல் பாடுக என்று சொன்னான். அப்போது இவர் பாடிய பாடல்:*

இலகே ழகிலத்தர் சொக்கர் முத்தீசர் இபந்தொழுவோர்
கலைதேர் தென்காசி மதுரை நெல்வேலி கருவைவந்த
பலகேள்வ ருள்ளிரெம் பங்குநிற் பீர், வந்து பாதந்தொழ
உலகே, கயற்கண்ணி யே, வடிவே, எங்கள் ஒப்பனையே.

*(அகிலத்தர் சொக்கர் முத்தீசர் இபம் தொழுவோர் என்பன சுவாமி பெயர்கள். இபம் - யானை, தென்காசி மதுரை நெல்வேலி*

கருவை (கரிவலம் வந்த நல்லூர்) தலப்பெயர்கள். உலகம்மை, கயற்கண்ணியம்மை, வடிவம்மை, ஒப்பனையம்மை என்பன அம்பிகை பெயர்கள்.) இவ்வாறு இவர் பாடிய தனிப்பாடல்கள் பலவாகும். அவை கிடைக்கவில்லை. இவர் பாடியனவாக இப் போது தெரிந்த நூல்கள் இரண்டு. ஒன்று நெல்லை வருக்கக் கோவை, மற்றொன்று பராபரை மாலை. வீரை அம்பிகாபதி தந்தையினும் பலமடங்கு புலமையும் தேவி பக்தியும் உடையவர் என்று சொல்வர். இலகேழ் அகிலத்தர் என்ற பாடலைப் பாடிய போது அரசரிடம் பல்லக்கு முதலிய விருதுகள் பெற்றார். பரா பரை மாலை பாடிய பிறகு சில நாள் இருந்து மிக்க இளமை யிலேயே உயிர் துறந்தார். இவர் உடலைத் தகனம் செய்தபோது இவர் தந்தை கவிராச பண்டிதர் மிகவும் வருந்திப் பின்வரும் பாடல் பாடினார் என்பர்:

பாவிலும் துய்ய பராபரை மாலையைப் பாடியிட்ட
நாவிலும் தீப்பற்று மோ, தெய்வ மே, நன் னறுங்கமலப்
பூவிலும் துய்ய பிரான்அம்பி காபதி பொற்பமருந்
தேவிலும் துய்ய திருமேனி நீறெழும் போதினிலே.

இவ்வம்பிகாபதிக்குத் தம்பி ஞானவாசிட்டம் பாடிய வீரை ஆளவந்தார் என்னும் மாதவபட்டர். அவர் 17ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் இருந்து நூல் செய்தார்.

## நெல்லை வருக்கக் கோவை

வருக்கக் கோவை யென்பது தமிழ் நெடுங்கணக்கில் மொழிக்கு முதலில் வரத்தக்க எழுத்துக்களாகிய அகரம் முதல் வகரம் வரையிலுள்ள எழுத்துக்களை முதலெழுத்தாகக் கொண்ட கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் கோவைப் பிரபந்தத் திற்குரிய துறைகள் அனைத்திலும் சில துறைகளை மட்டும் தேர்ந்தெடுத்துப் பாடி அமைப்பதாகும். கோவையுள் சற்றேறக் குறைய 100 பாடல் இருத்தல் கூடும். தமிழில் இவ்வகைப் பிரபந் தங்கள் சில உள்ளன. இக்கோவையானது திருநெல்வேலிப் பெருமானாகிய நெல்லை நாதரை பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. இதனுள் சிறப்புப் பாயிரமுட்பட 100 பாடல்கள் உள்ளன. சில சமயம் ஆசிரியர் ஒரெழுத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்கள் செய்தலுமுண்டு. அவ்வாறு இந்த நூலில் ‘தொ’ என்ற எழுத்துக்கு இரண்டு பாடல்கள் உள்ளன. நூலின் இறுதிப் பாடல் ஆசிரியர் பெயரையும் நூலின் பாடல் தொகை யையும் குறிப்பிடுகிறது.

கண்ணூறு பத்மத் தரியயன் போற்றுங் கழைமுத்தர்க்குப்
பண்ணூறுஞ் சொல்வருக் கக்கோவை தன்னைப் பரிவுடனே
வெண்ணூ லணியம் பிகாபதி வீரையில் வேதியன்சொல்
தொண்ணூறு மெட்டும் படிப்பார்க்கெந் நாளுஞ்சுகமுண்டுமே.

(உண்டுமே என்பது தென்பாண்டி நாட்டு வழக்கு). இங்கு கழை முத்தர்க்குக் கோவை பாடியவர் வீரையில் வேதியன் அம்பிகாபதி என்றும் இதன் பாடல் தொண்ணூற்றெட்டு என்றும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. இந்நூலில் திரட்டப்பட்டுள்ள துறைகள் கோவையின் பொருள் தொடர்பை நோக்கித் திரட்டப் பெறவில்லை. பாடல்கள் யாவும் முன் பின்னாகவும் உள்ளன. நூலின் இறுதியில் ஆசிரியர் ஒரு வாழ்த்து அமைத்திருப்பது கோவைத் தொடருக்குப் புதியது.

இதன் பாடல்களுக்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம். துறை பாலனைப் பழித்தல்:

நூலா மருங்கி னுமைபாகர் நெல்லையி னோற்றுப் பெற்ற
பாலா, பகலும் வந்தாரில்லையே, கையிற் பற்றியவேல்
கோலா னெடும்புனத் திட்டமுள் வேலியைக் கோலிமெல்லக்
காலால் வழிதட விக்கங்குல் வாய்வரக் கற்றவரே.

நெல்லை வருக்கக் கோவை பாடியவர் நெல்லைப் பெருமாள் ஐயர் என்று ஐயரவர்கள் எழுதியிருக்கிறார். அதற்கு ஆதாரம் வேம்பத்தூரார் செய்தவை இன்னவை என்று குறிப்பிடுகின்ற ஒரு நீண்ட ஆசிரிய விருத்தப்பா ஆகும்.* இதனுள் 'ப்ரதாப மிகு திருநெல்வேலிப் பெருமாளையன் சொனான் நெல்லையின் கோவை' என்ற தொடரைக் காண்க.

ஐயர் அவர்கள் இது பற்றிய வரலாறு விரிவாகவே எழுதி யிருக்கிறார். 'தேரோடும் வீதியெலாம்' என்ற ஒரு காப்பு வெண் பாவும் அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் அவ்வெண்பா, அச்சிட்ட வருக்கக் கோவையில் இல்லை. மேலும் ஆசிரியர் பெயர் உரைக்கும் நூலின் இறுதிப் பாடல் அம்பிகாபதி வீரை யின் வேதியன் என்றும், பாடல் தொண்ணூறும் எட்டும் என்றும் தெளிவாகச் சொல்லுகிறது. ஆகவே இந்த நூலைப் பெருமாள் ஐயர் பாடினார் என்பது பொருந்தாது. முற்கூறிய பாடல் நெல்லையின் கோவை என்று கூறுவதால் அது வேறு நூல் என்று

* இப்பாடலைச் செவ்வைச் சூடுவார் பாகவத புராண வரலாற்றில் காணலாம். இவ்வரலாறு முதற்பாகம், அத்தியாயம் 5.

கருத வேண்டும். அம்பிகாபதி பாடியது வருக்கக்கோவை; பெருமாளையர் பாடியது கோவை என்று சொல்லலாம்.

### பதிப்பு

இச்சிறு நூல் மு.ரா. அருணாசலக் கவிராயரால் வேணுவன புராணம், காந்திமதியம்மைப் பிள்ளைத்தமிழ் ஆகியவற்றோடு சேர்த்து சிறு குறிப்புரையோடு 1914இல் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

### பராபரை மாலை

அம்பிகாபதி செய்த தோத்திர நூல். இந்த நூல் செய்த காலத்திலேயே மிக்க புகழ் வாய்ந்திருந்தது என்று பண்டிதர் பாடிய மேற்காட்டிய பாடலால் அறியலாம். இந்நூல் காப்புச் செய்யுள் ஒன்றும், அம்பிகை தோத்திரமாக பரமாய பராபரையே என்ற மகுடம் கொண்ட 53 கட்டளைக் கலித்துறைப் பாடல்களும் கொண்டது. பாடல்களின் முதல் எழுத்து அகர வரிசையில் அமைந்தது. மொழிக்கு முதலில் வரும் எல்லா எழுத்துக்களும் இங்கு வரவில்லை. சில எழுத்துக்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களும் உள்ளன. இந்நூலுக்கு எடுத்துக் காட்டாகப் பின்வரும் இரு பாடல்களையும் குறிப்பிடலாம்.

அள்ளற் கமலங் கருஞ்சேறு நாறுமென் றன்பர்தங்கள்
உள்ளக் கமலத் துறைகின்ற நீயும்ப ருள்ளமுறுங்
கள்ளத் திருக்கைக் கரைக்கவென்றோ, கம்பை யாற்றங்கரைப்
பள்ளத் திருந்தவம் மே, பர மாய பராபரையே.

சுரக்கும் பசுவென் றும் சிந்தாமணியென்றுஞ் சொல்லிச் செல்வம்
கரக்கும் பெருஞ்செல்வர் பால்நடந் தேகவி கண்டுநிதம்
இரக்கும் தொழிலிற் றடுமாறி நெஞ்சம் இரவுபகல்
பரக்கும் பரப்பொழிப் பாய், பர மாய பராபரையே.

### பதிப்பு

மதுரை மீனலோசனி அச்சுக்கூடம் 1924, சிலேடைப் புலி பிச்சுவையர் குமாரர் பி. நடேசையர்.

## தையூர் உத்தண்டன் கோவை

சென்னை அரசாங்கத் தொன்னூல் நிலையத்திலுள்ள இக் கோவை ஏட்டால் சில செய்திகள் தெரிய வருகின்றன; நூல் இன்னும் அச்சாகவில்லை. தொண்டை மண்டலத்தில் குமிழி நாட்டைச் சேர்ந்த ஆமூர்க் கோட்டத்திலுள்ள பாலாற்றின்

*கரையில் தைகைக் குன்றை யடுத்துள்ள இராசகேசரி நல்லூர் என்ற மறுபெயருடைய தையூரில் களப்பாளர் என்ற காராளர் கோத்திரத்தில் பிறந்த குன்றன் புதல்வன் உத்தண்டன் மீது பாடப் பெற்றது; சிறந்த நடையுடையது (ஏட்டில் 40 பாடல்கள் இல்லை என்று பட்டியலில் குறிப்பிட்டுள்ளனர்). 400 பாடல். உத்தண்டன் மந்திரி எனவும் தளத்துக்கதிபதி எனவும் கூறப்பட்டுள்ளமை யால், அக்காலத்திருந்த நாயக்க மன்னரிடம் போர்த் தலைமை பூண்டவராயிருந்தார் போலும்; கோரக்க கேசரி என்ற சிறப்புப் பெயரும் சொல்லப்படுகிறது. திருக்கழுக்குன்றத்துச் சிவபெரு மானை வழிபடும் நியமமுடையவர். நூல் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இவ்வள்ளல், 'தமிழ்த் தொண்டு பட்டேழ் மனைக்கே தகையுண்ட உத்தண்டன்' என்று சொல்லப் பெறுவ தால் புலவருக்கு மிக்க ஆதரவு தந்தவர் போலும்.*

*குடிதாங்கி என்ற பெயர் வாய்ந்த வள்ளல்கள் பலர் இருந் திருக்கின்றனர். குடிதாங்கியைப் புகழ்ந்த தனிப்பாடல்கள் சில உள்ளன. ஆசிரியர் இவ்வள்ளலைக் குறிப்பிடும்போது, 'குடிதாங்கி யொத்தருள் தையூருத்தண்டன்' என்று கூறுவது கருதத்தக்கது.*

*இந்நூலில் வேறிடத்தில் குறிப்பிட்ட தினகர வெண்பாவில்,* 'உத்தமர்கள் சூழ் மாவை உத்தண்டன் உள்ளமுமுன் சித்தமும் போல் கோவைத் தினகரா' (84) என்று தினகரனைப் புகழ்வதால், உத்தண்டன் தினகரன் காலத்தவர் எனக் கருதலாம். தினகரன் காலம் 16ஆம் நூற்றாண்டு. எனவே, உத்தண்டன் காலமும் இக் கோவையின் காலமும் அதுவேயாகும். உத்தண்டனுக்குரிய ஊர்களில் மாவையும் ஒன்றாகும். இந்நூலில் வரும் செய்யுட் களில் சில பின்வருவன:*

**பொன்கோவை ஏத்தி உமைகோவை வந்துதித்துப்பூத்தகல்வி**
**மின்கோவை வாழ்த்திநல் வல்லமைக் கோவைவியந்துரைத்த**
**நன்கோவை சேர் செங்கைத்தையூருத்தண்டன் நதிகுலத்தோன்**
**தன்கோவை சாற்றலுற் றேன் பலகாலும் தழைப்பதற்கே.**

**தேனிடு கூடும் சுரும்பு மொத் தூதுவர் சேரவன்னம்**
**தானிடு கூடங் களப்பாளன் உத்தண்டன் தைகையைச்சூழ்**
**மீனிடமோரத் ன மீனிடமோ தெய்வ மீனிடமோ**
**மானிட மோபெரு மானிட மோசிறு மானிடமோ.**

---

* *16ஆம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வரலாறு பாகம் 2, பக்கம் 54-57.*

## பழனிக் கோவை

தமிழ்ப் பிரபந்தங்களின் வரிசையில், கோவை என்பது மிகவும் பழமையானதொன்று. பாண்டிக்கோவை என்ற நூல் ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர் காலத்திருந்த நெல்வேலி வென்ற சீர் நெடுமாறனைப் புகழ்வது. திருச்சிற்றம்பலக் கோவையும் ஒன்பதாம் நூற்றாண்டில் எழுந்தது. இவற்றின் வரிசையில் பிற்காலத்தில் நூற்றாண்டு தோறும் சிறப்பான கோவைப் பிரபந்தங்கள் எழுந்து வந்திருக்கின்றன. இவற்றுள் சிறப்புடைய ஒன்று பழனிக்கோவை என்பது.

### நூல்

இந்த நூல் திட்டமாக 400 பாடல்களே கொண்டது. முழுமையும் திருச்சிற்றம்பலக் கோவையை அடியொற்றிச் செய்யப்பட்டுள்ளது. நூற்பெயரை அடுத்து 'இறையனார் பொருள் விளக்கம்' என்ற உபதலைப்பு காணப்படுகிறது. இறையனார் களவியலுரைக்குப்பின், கோவை நூலெழுதினோர் சிலர், தங்கள் கோவைக்கு ஒரு கிளவிக் கொத்தை அமைத்து அதற்கு இவ்வாறு தலைப்பு எழுதியுள்ளனர். இதைத் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் செய்த திருப்பதிக்கோவையிலும் காணலாம். இக் கொத்து இயற்கைப்புணர்ச்சி தொடங்கி பரத்தையிற் பிரிவு ஈறாக 24 பகுதிகளாக உள்ளது, மொத்தம் 312 அடிகள்.

பாடல் ஒவ்வொன்றுக்கும், துறை அல்லது கிளவித் தலைப்பும் கொளுவும் மெய்ப்பாடு பயன் என்ற குறிப்புக்களும் தவறாது அமைக்கப்பட்டுள்ளன.

கோவைப் பாடல்களும், கிளவிக்கொத்தும் கொளுவும் மெய்ப்பாடு பயன் கூற்று முதலிய குறிப்புக்களும் நூலாசிரியரே செய்தாரென்று கொள்ளவேண்டும்.

முதன்முதலாக, திருக்கோவையாருக்கே கொளு காணப் படுகிறது. பின்வந்த கோவைகளில் கொளு அமைந்தவை மிகச் சிலவே: திருவாரூர்க்கோவை (இதே நூற்றாண்டு) போன்றன. சிவப்பிரகாசம் என்ற சாத்திர நூலுக்குப் பாடல் தோறும் கொளு அமைக்கப்பட்டிருக்கக் காண்கிறோம்.

இனி இக் கொளுக்கள் ஓர் அடி அல்லது ஈரடியாகவே உள்ளன. ஓரடியில் நயமான எதுகை அமைந்துள்ளது.

கரைவு கூறி வரைவு கடாயது.
ஊரன் புயத்தின் வாரம் பகர்ந்தது.
பருவமி தென்று வரைவு கடாயது.

என்ற கொளுக்களைக் காண்க. இரண்டடியாக வரும்போது வழியெதுகையாகவும், அடிகளில் தொடர் எதுகையாகவும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

கொண்டற் பருவம் கண்டதற் கிரங்கி
வில்லுமிழ் வேலோன் சொல்ல லுற்றது.

பற்பல துயரொடு படரா நின்றவன்
முற்படு புயற்கு முன்னி மொழிந்தது.

என்ற அடிகள் இவ்விரு வகைக்கும் எடுத்துக்காட்டுக்கள்; இவை நூல் செய்வதில் ஆசிரியருடைய ஆழ்ந்த கவனத்தை உணர்த்துகின்றன.

நூலின் தொடக்கத்தில் மூன்று பாடல்களும் இறுதியில் ஒரு பாடலும் காணப்படுகின்றன. தொடக்கப் பாடல்கள் கணேசன் வாணி சுப்பிரமணியரைக் காப்பாகக் கூறுவன. இறுதிப் பாடல் பின்வருவது;

மாணிக்க வாசகர் வாய்மலர்ந் தன்றுமன் றாடினர்மேற்
பேணிக் கொளச் சொன்ன கோவையி லேபற்றிப் பின்படர்ந்து
பேணிக்கங் காநதி யீன்றோர் பழனிச்செவ் வேள்கடம்பிற்
பாணிக்கொள் வேலிற் படர்ந்திந்தக் கோவை பழுத்ததுவே.

இது, பழனிக்கோவை திருக்கோவையை அடியொற்றி வருவது என்று உணர்த்துகிறது. இப்பாடலின் பின், 'இறையனார் பொரு ளுரையிலே வழங்கும் பழனிக்கோவை எழுதி வளர்ந்தது' என்ற குறிப்பு உள்ளது.

## நூற்செய்திகள்

இவ்வாசிரியர் பழமொழிகளைக் கூறுவதில் பெருவிருப் புடையவர். பெரும்பாலும் தவறாமல் பாடல் தோறும் ஒரு பழமொழியைக் குறிப்பிடுகிறார். 'பாற்சூடு தீண்டப் பயந்தோர் பின் ஆற்றிப் பருகுவபோல்' என்பது மிகவும் அரிய பழமொழி. கொம்பில் தேன்வைத்து உண்ணாது பல் பூ நாக்கும் ஈத்திரள் என்பது உலகியலை நன்கு விளக்குவது. இவர், முந்தைய தமிழா சிரியர்களில் தொல்காப்பியர், காக்கைபாடினியர், நக்கீரர்,

நாலடி, சம்பந்தர், சுந்தரர், திருவாதவூரர், பொய்யாமொழியார் ஆகியோரைக் குறிப்பிடுகிறார். அருணகிரியாரென்றும், அருணைப் பெரும் புலவனென்றும் சொல்லுகிறார். திருமுருகாற்றுப் படைக்குத் தோற்றுவாயாகச் சொல்லப்படும் கதையை 'எம்மைக்கீரன் பிரித்துவிட்ட திரிதாள் அரசிலை போல் விதி நீக்கும்' என்கிறார். பண் தமிழ் நன்முருகாற்றுப்படை என்பார். இவர் குறிப்பிடுகின்ற பண்டைய செய்திகள் அளவில்லாதன. அருணகிரிக்கு ஆதரவு தந்த பிரபுட தேவமாராயனைக் குறிப்பிடுகின்றார். சங்கரமாமுனி என்றொருவரைக் கூறுகின்றார். இங்குடல் அங்குயிர் என்ற தொடர் நந்திக் கலம்பகத்தைக் கருதியதாகும். 'பைந்தமிழ் நூல் அறிந்து மறந்தவன் தேர்ந்தது போல' என்பது ஒரு சுவையான பழமொழி.

இந்நூற்பாடலுக்கு எடுத்துக்காட்டாக பின்வரும் பாடலைக் கூறலாம் (181).

> நெடுமா தவனுங் குறுமா தவனும் நிலமுவரி
> தடுமாறக் கால்கைக் கடக்கிவிட் டாங்கிவ டன்மையில் நீ
> தொடுமா தரததவர் தொட்டாற் பெருகும்விட் டாற்சுருங்கும்
> கடுமான் மகள்கொண்கர் வையாபுரிமன்ன கண்டுகொள்ளே.

## ஆசிரியரும் காலமும்

ஆசிரியர் பெயர் தெரியவில்லை. எனினும் சிறந்த புலமையுடையவர். முருகன்பால் ஈடுபாடு மிக்கவர், தமிழில் சிறந்த மரபுணர்ந்தவர் என்பதும், இலக்கணப் புலமை மிக்கவர் என்பதும் தெரிகிறது. காலம் திட்டமாகத் தெரியாது போயினும், இரட்டையரையும் அருணகிரிநாதரையும் குறிப்பிடுவதால், அவர்களுக்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு. கருப்பமிர்தன்ன சொற்சீர் நாதவந்துகலாதி என்னும் திருப்புகழ் (383), ஓர் பாட்டு இரட்டையர் பாடலுமாம் 337 என்பன காண்க. இவர்கள் காலம் 1400ஐ ஒட்டி, எனவே கோவையாசிரியர் காலம் ஒரு நூற்றாண்டுக்குப் பின், அதாவது 15ம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதி என்று கொள்வது பொருந்தும்.

## பதிப்பு

இக்கோவை தனி நூலாக அச்சாகவில்லை. ஒரே பிரதியைக் கொண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையில் 1938 ஜூலை முதல் எட்டு இதழ்களில் தி.கி. இராமானுசையங்காரால் வெளியிடப்பெற்றது.

## அத்தியாயம் 7

# பிறவகை இலக்கியம்

## முன்னுரை

நூலின் அளவு கருதி இந்த நூற்றாண்டின் இலக்கிய வரலாறு மூன்று பகுதிகளாகப் பிரித்து அச்சிட்டுக் கட்டிடம் செய்யப் படுகிறது. முதல் பாகம் புராண இலக்கியம் மட்டும் ஐந்து அத்தியாயம்: சைவ புராணம் நான்கு அத்தியாயம், வைணவ புராணம் ஓர் அத்தியாயம். இரண்டாம் பாகம் இலக்கிய இலக்கண உரைகள், சைவ இலக்கியம் மட்டும்; சில மாதங்களுக்கு முன் வெளிவந்தது. இந்த மூன்றாம் பாகத்தில் இதுவரையில் சைவ இலக்கிய உரைகள், வைணவ சைன இலக்கியங்கள், தோத்திரம், சித்தர்பாடல், பிரபந்தம் என்பன ஆராயப்பட்டன. இந்த அத்தியாயத்தில் இதுவரை ஆராயப்பெறாத சில நூல்களும், பல வழிகளாலும் தெரிய நேர்ந்த வேறு சில புலவர் வரலாறும் ஆராயப்பெறும்.

இவ்வாறு ஆராயுமிடத்து, நூல்களையும் புலவர்களையும் ஆறு தலைப்புகளில் அடக்கிக் கூறலாமென்று தோன்றுகிறது. அவையாவன:

1. சாசனங்களால் தெரியவரும் புலவர்.
2. கிருஷ்ணதேவராயர் அவைப் புலவராயும் ஆதரவு பெற்றும் இருந்தோர்.
3. பாண்டியர் அவையில் இருந்த புலவர்.
4. சைவ நூல் உரைகளால் தெரியவரும் நூல்களும் புலவர்களும்.
5. ஏனைய புலவர்.
6. நூல்களாகக் கிடைப்பவை.

இவர்களை இனி முறையே ஆராய்ந்து சில சொற்கள் கூறலாம்.

**1. சாசனங்களால் தெரியவரும் புலவர்**

தமிழ் நாட்டில் பல்லவர் பாண்டியர் சோழர் காலக் கல்வெட்டுக்களால் பெயர் தெரியப்பெறும் புலவர் பலர். அவர்கள் வரலாறுகளையெல்லாம் மு. இராகவையங்கார் தமது சாசன தமிழ்க்கவி சரிதம் என்ற நூலில் கால முறைப்படி ஆராய்ந்து விளக்கியிருக்கிறார். அங்கு சொல்லப்பட்டோர் சங்க காலம் முதல் 18ஆம் நூற்றாண்டு முடிய வாழ்ந்தோராவர். அவர்களுள் 16ஆம் நூற்றாண்டுக்குரியோராய் ஆராய்ந்து சொல்லத்தக்கோர் சிலர். இவர்களைக் குறித்து அறிய வந்த செய்திகளைக் கீழே தருவோம்.

## உத்தண்ட வேலாயுத கவி

இவர் திருவதிகை வீரட்டானமுடைய தம்பிரானார்மீது கலம்பகம் பாடி அதன் பொருட்டு கி.பி. 1536இல் திருவதிகைக் கோட்டைக்குள் மனையும் நிலங்களும் பெற்றார். இச்செய்தி கோயில் சாசனத்தால் தெரிய வருகிறது. இவர் திருவதிகையில் வாழ்ந்த அந்தணர், கௌண்டின்ய கோத்திரத்தவர். இவர் தொண்டை நாட்டுக் காலியூர் கோட்டத்துத் தனியூரான உத்திர மேரூரைச் சார்ந்த மகிபால குலகாலச் சேரி என்ற ஊரினர். வீரவல்லி தேவராசபட்டர், காசிநர்தர், குப்பையன் என்ற பெயர்களும் இவருக்கு வழங்கின. இவர் பாடிய திருவதிகைக் கலம்பகம் கிடைக்கவில்லை.

## மருதவன கவிராசன் இராமநாதன்

திருநெல்வேலி ஜில்லா திருப்புடை மருதூர்ச் சாசனமொன்று இத்தமிழ்க் கவிஞரைக் குறிப்பிடுகிறது. ஊர்ப் பெயராலும், புலமையாலும், பக்தியாலும் இவர் மருதவன கவிராசன் என்ற சிறப்புப் பெற்றிருந்தார். இவரது இயற்பெயர் இராமநாதன் இவ்வூரில் இவருக்கு நில மனைகளும், கோயில் விழாக்களில் கவிபாடும் உரிமையும், நித்தியப் பிரசாதங்களும் அளிக்கப் பெற்றிருந்தன என்று கொல்லம் 731இல் (கி.பி. 1556) பிறந்த சாசனம் கூறும். மற்றொரு சாசனம் (1559) சடையமாங்குளமென்ற ஊரில் இக்கவிராசருக்கு நிலமளிக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது. அளித்தவர் மார்த்தாண்ட பனைக்காரன் என்ற வேணாட்டு அரசர். இப்புலவரை மற்றொரு சாசனமும் இரவிவர்மன் வேணாடு மருதூர்க்கவியாகிய இராமநாதன் என்று குறிப்பிடுகின்றது. இவருடைய பிற வரலாறுகளோ செய்த நூல்களோ தெரியவில்லை.

## பாண்டி கவிராசர்

கல்வெட்டு மூலமாய் மட்டும் நாம் அறிய வருகின்ற புலவர்களில் இவரும் ஒருவர். விசயநகர வேந்தரான அச்சுததேவராயர் காலத்தே தென்னாட்டில் இவர் பிரதிநிதியாக இருந்து தமிழ் நாட்டுப் பகுதிகளை நிர்வகித்து வந்தவர். வெங்கள நாயக்கர் என்பவர் அக்காலத்தில் பாண்டி கவிராசர் என்பவர் நாயக்கருடைய அதிகாரியான தீத்தாரியப்பப்பிள்ளை என்பவராலும் இராசிமங்கலம் ஊரவராலும் தாம் வீரமாலை பாடியதற்கு மானியமாக நிலம் விடப்பெற்றார் என்ற செய்தியைப் புதுக்கோட்டைப் பகுதியில் ராங்கியம் என்ற ஊரில் உள்ள கோயில் கல்வெட்டொன்று குறிப்பிடுகிறது: 'ரௌத்ரி ௵ தைமாதம் 30 ௳ ஸ்ரீமது வெங்கள நாயக்கரய்யன் காரியத்துக்குக் கர்த்தரான தீத்தாரியப்பரும் இராசிமங்கலம் ஊரவரும், புலவர் பாண்டி கவிராசர் வீரமாலை பாடுகையில் இவர்க்கு இறையிலியாக விட்ட நிலம்... சந்திராதித்த வரைக்கும் பற்றி அனுபவிக்கக்கடவராகவும்.'* இந்தத் தீத்தாரியப்பப்பிள்ளை காஞ்சிபுரத்தில் விளங்கியவர். தொண்டை மண்டலத்து நரசிங்கபுரத்தில் தம் அரசர் அச்சுதராயர் புண்ணியமாக சகம் 1455இல் லட்சுமி நரசிம்மன் கோயில் கட்டுவித்தவர். இவர் கருணீக மரபினர்.

கவிராசர் பாடிய வீரமாலை என்பது வீரவெண்பா மாலை என்ற பிரபந்த வகையாக இருக்கலாம். இது விசய நகரத்து அரசரான அச்சுதராயருடைய வெற்றியையோ அல்லது தமையனும் வீரப்பிரதாபர் என்று பெயர் பெற்றவருமான கிருஷ்ண தேவராயருடைய வெற்றியையோ சிறப்பிப்பதாகக் கூடும். இப் புலவரைப் பற்றி வேறு வரலாறுகள் தெரியவில்லை. வீரமாலை பாடியதற்காக இவர் இறையிலி நிலம் பெற்றது போற்றத் தகுந்த ஒரு நிகழ்ச்சி. முன்கூறிய ராங்கியம் சாசனத்தின் காலம் சகம் 1452. இக்காலத்தில் வெங்கள நாயக்கர் திருப்புத்தூர் கோயிலுக்கு நிலம் அளித்திருக்கிறார். கவிராசர் காலமும் இதுவே என்பது தெளிவு. அதாவது கி.பி. 1530. திருநெல்வேலிப் பகுதி பாண்டிய அரசர் ஒருவர்மீது புலவர் பாடிய வீரவெண்பா மாலையைப் பற்றிப் பின்னர் குறிப்பிட்டிருக்கிறோம்.

---

* சாசன தமிழ்க் கவி சரிதம் பக்கம் 152-154.

## 2. கிருஷ்ண தேவராயர் ஆதரவு பெற்றோர்

14ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் முகம்மதியப் படை மதுரையில் புகுந்து பாண்டியர் ஆட்சியை அழித்து நகரையும் கோயிலையும் அழித்துவிட்டது. சிறிது காலத்துக்குப் பின், விசயநகர அரசின் சார்பில் குமார கம்பண்ண உடையார் மதுரை மீது படையெடுத்துச் சென்று முகம்மதியரை வெருட்டி விட்டு இங்கு மீண்டும் இந்து ஆட்சியை நிலை நாட்டினார். விசயநகரத்தில் 1509இல் பட்டமேற்று 22ஆண்டுக்காலம் ஆட்சி புரிந்த தெலுங்கு மன்னரான கிருஷ்ண தேவராயர் தமிழுக்கு நிரம்ப ஆதரவு அளித்தார். சிறந்த புலவரான அரிதாசர் என்பவர் அவருடைய ஆதரவு பெற்றவர்; இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்களையுடைய இருசமய விளக்கம் என்ற வைணவ பரமான நூல் செய்தவர்.* அவரையன்றி, கச்சி ஞானப்பிரகாசர், தத்துவப் பிரகாசர், திருத்தோணியப்பர், குமாரசரசுவதி, கூத்தனூரப்பன், வாலகோகிலம், வடமலையார் போன்ற புலவர்களும் கிருஷ்ண தேவராயாரால் அபிமானிக்கப் பெற்று இக்காலத்தில் வாழ்ந் திருந்தார்கள். இவர்களைக் குறித்து அறியவரும் செய்திகளை இனிக் கூறுவோம். இச்செய்திகளுக்கு ஆதாரம் தமிழ் நாவலர் சரிதையேயாகும்.

### குமார சரசுவதி

மிகவும் புகழ் வாய்ந்த கிருஷ்ண தேவராயர் (1509-30) விசய நகரத்தை ஆட்சி செய்த காலத்தே தமிழ் நாட்டில் பெரும் பகுதியும் ஆந்திரம் மட்டுமன்றி கன்னடமும் அவருக்கு உட்பட் டிருந்தது. அவர் அறிவும் செல்வமும் ஆற்றலும் நிரம்பியவர். அவருடைய அவைக்களத்தில் தமிழ்ப் புலவர் பலர் இருந்தனர். அவ்வாறு இருந்தவர்களுள் குமார சரசுவதி என்பவரும் ஒருவர்.

இன்றைய ஒரிஸ்ஸா மாகாணமானது அக்காலத்தில் ஒட்டர தேசம் என்ற பெயருடையது. அதன் தலைநகரம் கடகநகரம். அந்நாட்டை ஆண்ட கஜபதி அரசனாகிய பிரதாபருத்திரன் (1497-1540) ராயரைப் பகைத்தமையால் அவர் அந்நாட்டின் மீது படையெடுத்து அவனை வென்று மீண்டும் நாட்டை அவனுக்கு அளித்து, அவன் மகள் துர்க்காவை மணந்து கொண்டார்

* இவர் வரலாற்றை எமது தமிழ் இலக்கிய வரலாறு 16ஆம் நூற் றாண்டு முதல் பாகம் ஐந்தாம் அத்தியாயத்தில் காணலாம்.

என்பது சரித்திரம் சொல்லுகின்ற நிகழ்ச்சி. அக்காலத்தே ராயர் அவையில் குமார சரசுவதி இருந்தார். பிரதாபருத்திரனுடைய தோல்வியையும் துர்க்காவின் திருமணத்தையும் ஒருங்கே சிலேடைப் பொருள் அமைய இவர் ஒரு பாடலால் சிறப்பித்துப் பாடினார்:

**கலிங்கம் இழந்துநுதிக் கைச்சங்கந் தோற்று**
**மெலிந்துகட கந்நழுவ விட்டாள் – மலிந்தமலர்ப்**
**பொன்னிட்ட மானகிட்ண பூபாலா உன்தனக்குப்**
**பின்னிட்ட ஒட்டியன் போல் பெண்.**

*கலிங்க நாடு ஆடை, நுதிக்கைச் சங்கம், துதிக்கை பொருந்திய யானைப்படை, கை நுனியிலுள்ள வளை கடகம் கடகநகர் தோல்வளையம், ஒட்டியன் ஓர் பெண்: ஒட்டரநாட்டு அரசனான பிரதாப ருத்திரன் இவற்றை இழந்தது போல் அவன் பெண்ணும் இவற்றை இழந்தாள். இவன் கஜபதி யாதலின் யானைப் படையென்பது நன்கு பொருந்தும். வேறு இவரைக் குறித்துச் செய்திகள் தெரியவில்லை.*

*குமார சுரசுவதியின் இப்பாடலைத் தரும் நூல் தமிழ் நாவலர் சரிதை. இது மற்றொரு பாடலையும் தருகிறது. இப் புலவர் விசய நகரத்தில் இருந்தமையால் தமிழோடு பிற மொழி களையும் கற்றிருந்தார். பொதுவாகத் தமிழருக்குப் பிறமொழி வல்லவரென்றால் ஓர் ஏளன உணர்ச்சியுண்டு. அக்காலத்தில் இவரிடம் அவ்வாறு ஏளன உணர்ச்சியைக் காட்டினவருள் ராயருடைய தளபதிகளில் ஒருவனான அபிராமன் ஒருவன்; விழுப்புரத்தில் இருந்தவன். இவன் புலவரைப் பார்த்து, "இவர் நாலு பாஷையினும் பாடுபவரோ?" என்று ஏளனமாய்க் கேட்டான். நாலு பாஷை என்பது பல பாஷை என்ற பொருளில். கேட்டபோது, இப்புலவர் உண்மையாகவே நாலு பாஷைச் சொற்களைச் சொல்லி, தீக்குணங்களைக் கொண்டிருந்த அபிராமனைப் பழித்து ஒரு பாடல் பாடினார்:*

**கூத்தாடி, லஞ்சக் கொடுக்கா, அரே பேட்டிச்**
**சோத்தாட்டி, ஐவேசித் தொண்டனே, – ஆத்தான**
**அந்த விழுப்புரமும் அம்பிநக ருங்கெடுக்க**
**வந்த குலாமா, அபிராமா.**

*(கூத்தாடி-தமிழ்; லஞ்சக் கொடுக்கா - வேசி மகன் (தெலுங்கு); அரேபேட்டிச் சோத் - அடே மகளைப் பெண்டாண்டவனே*

(இந்துஸ்தானி); தாட்டி - இறுமாப்புடையவனே (கன்னடம்); ஆத்தானம் - வடமொழி; ஐவேசி என்பதன் பின் உள்ள தொடர் கள் தமிழ்; குலாமா - தாழ்ந்த குலத்தவன்; அம்பி - ஹம்பி நகரம். தமிழ் நாவலர் சரிதைப் பாட்டு 226).

## தத்துவப் பிரகாசர்

தத்துவப் பிரகாசர் என்ற பெயருடையோர் தமிழ் இலக்கிய உலகில் பலர் இருந்திருக்கிறார்கள். இதை நன்கு உணராமல் முந்தைய ஆசிரியர் பெரிதும் குழப்பத்துக்கு இடமாகியிருக் கிறார்கள். 16ஆம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர் வரலாறு எழுதிய தேசிகர் ஒரே தத்துவப் பிரகாசர் என்று எண்ணி அனைவரையும் குறித்த செய்திகளை ஒரு தொகுப்பாகத் தமது நூலில் எழுதி யிருந்தார். பின்னால் இப்பொருளை நன்கு ஆராய்ந்து, தத்துவப் பிரகாசர் காலம் என்ற தலைப்பில் மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் செந்தமிழ் தொகுதி 39, 1942 பக்கம் 361-366இலும், பின் எமது தத்துவப் பிரகாசம் என்ற நூல் பதிப்பின் முன்னுரையில் 21-24 பக்கங்களிலும் விரிவாக ஆய்ந்து எழுதியிருக்கிறோம். அவற்றின் சாரத்தைக் கீழே தருகிறோம்.

### தத்துவப் பிரகாசர் நால்வர்

முதல் தத்துவப் பிரகாசர் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் மாணாக்கராய் 1350-75இல் வாழ்ந்து 338 பாடல் கொண்ட சாத்திரமாகிய தத்துவப் பிரகாசம் என்ற பெருநூல் செய்தவர்* இவர் காலத்தால் ஏனையோர் அனைவரினும் முற்பட்டவர். இரண்டாம் தத்துவப் பிரகாசர், சிற்றம்பல நாடிகளின் மற்றொரு மாணாக்கரான சம்பந்த முனிவரின் மாணாக்கரான சிவபுரம் ஞானப்பிரகாசரின் சீடர்;❖ இவர் நூல் எதுவும் செய்யவில்லை. காலம் 1425-75. இவருடைய பரம்பரையில் பின் அடுத்த மூன்றாம் தலைமுறையில் வந்தவரே தருமபுர ஆதீனம் நிறுவிய குருஞான சம்பந்தர். மூன்றாம் தத்துவப் பிரகாசர் விசய நகரத்தரசரான கிருஷ்ண தேவராயர் (1509-1520) போற்றிய புலமை மிக்க சிவ ஞானி; திருவாரூர்த் தத்துவப் பிரகாசர். இவரையே இத்தலைப்பில் இனி விரிவாக ஆராயப்போகிறோம். நான்காம் தத்துவப் பிரகாசர்,

---

* எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு பார்க்க.

❖ மேற்படி வரலாறு 16 நூற்றாண்டு பாகம் 2, பக்கம் 230, 265 பார்க்க.

*கமலை ஞானப்பிரகாசரின் மாணாக்கராய் சித்தியார் பர பக்கத்துக்கு உரை எழுதிய திருவொற்றியூர் தத்துவப் பிரகாசர்,* காலம் 1575-1600.*

*இந்நால்வரையும் குறித்த அட்டவணையை இந்நூல் இறுதியில் காணலாம்.*

## *திருவாரூர்த் தத்துவப்பிரகாசர்*

*இவர் பாடல்கள் பலவற்றைத் தமிழ் நாவலர் சரிதை திரட்டித் தருகிறது. அவற்றின் துணைகொண்டு இவர் வரலாற்றைப் பின்வருமாறு அமைக்க முடியும். இவர் திருவாரூரில் வாழ்ந்தவர், கிருஷ்ணதேவராயர் ஆகிய விசயநகர மன்னரால் பெரிதும் போற்றப்பெற்ற தமிழ்ப் புலவருள் இவரும் ஒருவர். இவர் பாடிய சில தனிப் பாடல்கள் கிடைக்கின்றனவேயன்றி இவர் செய்ததாக நூல் எதுவும் கிடைக்கவில்லை. தம்மைப் பற்றி இவர் பாடியுள்ள ஒரு நீண்ட ஆசிரிய விருத்தம் பல செய்திகளை உணர்த்துகிறது:*

நினைவுகவி சொல்வோ மெனச்சொலிப் பிறர் கவிதை
        நினைவினைத் திருடிவையோம்;
    நீடுலகில் மனிதரைப் பாடிலோம் நாமென்று
        நீள்வசைகள் பாட அறியோம்;
பிணையிளைய நாவல ருடன்பங்கு பேசிப்பிர
        பந்தங்கள் பாடிக்கொடோம்;
    பேசுவது தேவார மேயலால் வாய்க்கெளிய
        பேய்க்கிரந் தங்கள் பேசோம்;
இனிமைதரு பூருவத் துக்குருக் களைமறந்து
        எட்டிடத் துத்தீட்சைபோய்
    இட்டசிறு பேர்மாற்றி மாதமொரு பேரிட்டு
        அழைக்கநாம் இறு மாந்திரோம்;
தனியிருந் தெம்மைப் புறங்கூறு வார்பாடு
        தணியக் கவிபாடுவோம்;
    சமணூல்க ளைப்பொரு ளெனக்கொளோம், திருஞான
        சம்பந்த ரடியர் நாமே.

*இப்பாடலால் பல செய்திகள் தெரிய வருகின்றன. இவர் காலத்தில் பிறர் கருத்துக்களைத் திருடித் தம் பாட்டில் வைத்துத்*

---

* *இவ்வரலாறு பக்கம் 69-70 பார்க்க.*

தாம் புதுக்கவி செய்ததாகப் பிறரை நம்பச் செய்து சில புலவர் வாழ்ந்தனர்: இது இந்த இருபதாம் நூற்றாண்டுச் செய்தியை நானூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே பொருந்திச் சொல்லுகிற ஓர் அரிய செய்தி. அடுத்து ஒரு புலவர், நாம் மனிதரைப் (புகழ) பாடமாட்டோம் என்று வசை பாடியிருந்தாரென்று அறிகிறோம். மூன்றாவதாக, பாடல் செய்யும் ஆற்றல் இல்லாத புலவர் ஒரு வள்ளலிடம் பரிசு பெறும் பொருட்டு, அவருக்காக ஒரு புலவர் பாடல் பாடிக்கொடுத்து அதன் பொருட்டு அவர் பெற்ற பரிசில் தாமும் பங்கு கொண்டார் என்ற செய்தி. நான்காவது, இவர் திருமுறைகளை ஓதி வந்தாரேயன்றி, பிற்காலப் புலவர் பாடல்களை ஓதினாரில்லை. ஐந்தாவதாக, சமய உபதேசம் பெற்ற ஓர் ஆசாரியர் தமக்கு உபதேசம் செய்த குருவை விட்டுப் பின்னும் மற்றொரு குருவை நாடி அவரிடம் உபதேசம் பெற்றுத் தம் பெயரையும் மாற்றி வைத்துக்கொண்டார் என்ற செய்தி; இது 15ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் வாழ்ந்த கண்ணுடைய வள்ளல், சம்பந்த முனிவர் மாணாக்கராய் உபதேசம் பெற்று வாழ்ந்து பின் அந்த மரபினின்றும் விலகித் தாமே புதிய வள்ளல் மரபு என்ற மரபைப் படைத்த செய்தியையும் அவரிடம் முன்னமே மாணாக்கராய் இருந்த திருநெறி விளக்க ஆசிரியர் பின் அவர் வள்ளல் பரம்பரையை நிறுவியபோது அவரைவிட்டு விலகிச் சிவாலய முனிவரிடம் மாணாக்கராய் வாழ்ந்ததையும் நினைவில் கொண்டு* இவ்விருவர் மரபிலும் பின்னால் வந்த ஒருவரிடம் மன வேற்றுமை கொண்டு இவ்வாறு பாடினார் என்று கருதத் தோன்றுகிறது. இத்தத்துவப் பிரகாசர் 1450-1525 ஆகிய கால எல்லையில் வாழ்ந்திருத்தல் பொருந்துவதாகும்.

இவர் காலத்தில் சிலர் சமண இலக்கியங்களைப் பயின்றார்கள் போலும்; அவர்களைப் பழித்து அடுத்த கருத்தைக் கூறித் தாம் சமணரை அடக்கிய திருஞான சம்பந்தர் அடியவர் என்பதையும் குறிப்பிடுகிறார். இச்செய்திகளால் இவருடைய உறுதியான வைராக்கிய வாழ்வு புலப்படும்.

இவர் திருவாரூரில் வாழ்ந்தார் என்பதற்கும் கிருஷ்ண தேவராயர் காலத்தவர் என்பதற்கும் தீமையைக் கண்டபோது

---

* இவ்வரலாறுகளை எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு - சிவாலய முனிவர், திருநெறி விளக்க ஆசிரியர் என்ற தலைப்புக்களிலும், 15ஆம் நூற்றாண்டு - கண்ணுடைய வள்ளல் என்ற தலைப்பிலும் விளங்கக் காணலாம்.

கண்டிக்கும் இயல்புடையவர் என்பதற்கும் சான்றாகப் பல தனிப்பாடல்கள் உள்ளன. சில காட்டுவோம்.

இவர் திருவாரூரிற் கோயிற் காரியங்களை மேற்பார்வை செய்து வந்தவர். ஒரு சமயம் திருவிழா கொடியேற்றம் முதல் முறையாக நடந்து வந்தது: அதில் தவறுகள் பல இருந்தன என்று இவர் கருதினார் போலும். இறுதி நாளில் கொடியிறக்கம் செய்ய வேண்டிய சமயம் கிருஷ்ண தேவராயர்மீது ஆணையிட்டு கொடியிறக்காமல் தடுத்தார்:

**மருவுபுகழ்க் கிட்ண மகாராய ராணை**
**அரிய வடமலையா ராணை;* – திருவாரூர்ப்**
**பாகற் கொடியறுப்பார் பாதத் திருவாணை –**
**த்யாகக் கொடியிறக்கா தே.**

பாகற்கொடி என்பது திருவாரூர் தேர்த் திருவிழாவில் நடைபெறும் ஒரு சடங்கு. திருவாரூர் தியாகராசப் பெருமான் அன்று அருகிலிலுள்ள வேலங்குடிக்குச் சென்று அங்கு ஒரு பாகற் கொடியை அறுத்துவிட்டுத் திரும்புவார் என்பது சம்பிரதாயம். இதுபற்றி அவருக்குப் பாகற் கொடியறுப்பாரென்ற பெயரும் உண்டு. இச்செய்தி அடுத்த நூற்றாண்டில் அந்தகக்கவி வீர ராகவ முதலியார் பாடிய திருவாரூர் உலாவிலும் சொல்லப் பட்டுள்ளது. அரசன் மீதிட்ட ஆணைக்குப் பயந்து கோயிலார் கொடியிறக்கவில்லை. கோயில் அர்ச்சகர் கோயிற் பூசா காரியங் களைச் சரிவரச் செய்யவில்லை; தத்துவப்பிரகாசர் அவரைப் பலமுறை எச்சரித்தும் பயன் விளையவில்லை போலும். அதன் மேல் அவர்பின் வரும் பாட்டை எழுதிக் கிருஷ்ண தேவராயருக்கு அனுப்பினார்:

**ஊழித் துலுக்கல்ல, ஒட்டியான் தானுமல்ல,**
**வீழித் துலுக்குவந்து மேலிட்டு – வாழி**
**சிறந்ததிரு ஆரூர்த் தியாகருடையப் பூசை**
**இறந்ததே ¯க்ருட்டிணரா யா.**

(ஊழித்தலுக்கு - பிரளய கால அழிவு போல வந்து கோயில்களை அழித்த துலுக்கர்- ஒட்டியான் - ஒட்டிர (ஒரிஸா) நாட்டுப்படை.

---

* இவ்வடமலையார் கிருஷ்ண தேவராயரின் மந்திரிகளில் ஒருவர், இரு சமய விளக்கம் பாடிய அரிதாசரின் தமையன். இவர் பற்றிய செய்திகளை இந்நூற்றாண்டு இலக்கிய வரலாறு முதல் பாகம் 5ஆம் அத்தியாயத்தில் காணலாம்.

*வீழித்தலுக்கு - வீழிப் பிராமணர்; இவர்கள் திருவாரூர்க் கோயில் காரியம் செய்தவர், முறை தவறிக் கேடு செய்தமையால், வீழித் துலுக்கு என்றார்) இப்பாட்டைக் கவிஞர் ராயருக்கு அனுப்பினார். ராயர் பார்த்துவிட்டுக் கோயில் அர்ச்சகராகிய பட்டரை அப்பணியிலிருந்து மாற்றிவிட்டார். பட்டருடைய தகாத செயல்கள் அவருக்கு ராயருடைய தண்டனையைக் கொடுத்துக் கோயிலில் அவருக்கிருந்த நிவேதனப் பிரசாதம் முதலியவை இல்லாமல் செய்துவிட்டன. இதையும் சுட்டிக் காட்டி தத்துவப் பிரகாசர் மற்றொரு பாடல் பாடினார்:*

உண்ட வயிற்றில் உமிக்காந்த லிட்டதே
தொண்டரே வீழித் துலுக்கரே – பண்டெல்லாம்
அப்ப மவலெள் ளதிரசமுந் தோசைகளும்
கப்புவதும் போச்சே கவிழ்ந்து.

*இதுபோலவே மற்றொரு சமயம் கோயிலில் பூசகராயிருந்த நாகராச நம்பி என்பவர் அறுபத்துமூவர் சிலைகளில் இரண்டைத் திருடிக் கன்னானிடங் கொடுத்து உருக்கி விற்கச் செய்தார். இதை அறிந்த தத்துவப் பிரகாசர் ஒரு பாடல் பாடி, அப்பாடலை ஒரு கிளிக்குப் பயிற்றுவித்து, அடுத்து இராயர் திருவாரூருக்கு வந்தசமயம் கிளியைக் கொண்டு அவர் காதில் விழும்படி பாடச் செய்தார். கேட்ட அவர் இதை விசாரித்து உண்மையறிந்து நாக ராச நம்பியைத் தண்டித்தாரென்பது மற்றொரு வரலாறு.*

முன்னாள் அறுபத்து மூவரிருந் தார், அவரில்
இந்நாள் இரண்டுபேர் ஏகினார், – கன்னான்
நருக்கின்றான், விற்றுவிட்ட நாகரச நம்பி
இருக்கின்றான், கிட்டிணராயா.

*ஒரு சமயம் தத்துவப் பிரகாசர் இராயரைக் காணச் சென்றார். அங்கு அதிகாரியாயிருந்த சாளுவ நாயக்கனென்பவன் இவர் தங்குவதற்கு இருக்கை முதலிய வசதி செய்துகொடுக்க நேர்ந்தது: அவன் இவருடைய தகுதியை நன்கு உணராமல் மிகவும் கீழான ஓரிடத்தைக் காட்டினான். அப்போது இவர் மிகவும் கோபித்து நிலைமையை விவரித்துப் பின்வரும் பாடல் பாடினார்:*

மூட்டை, கலம்புழுதி, முக்காலும் சுத்தப்பாழ்,
வீட்டை விடுதியாய் விட்டாயே, – போட்ட
தடுக்கெல்லாம் பீறல், தலையணையேல் வைக்கோல்,
படுக்கலா மோ, சொல்லப் பா.

இச்சாளுவ நாயக்கன் இராயருடைய பிரதிநிதியாகத் தென்னாட்டில் விழுப்புரம் முதலிய பகுதிகளை நிர்வகித்து வந்தவனென்று சாசனங்களால் தெரிய வருகிறது. மற்றொரு முறை ஒட்டக் கூத்தனென்ற புலவன் வருவது கேட்டு அவன் தகுதியில்லாதவனாகிய காரணத்தால், அவனைப் பழித்துப் பின்வரும் பாடல் பாடினார்.

பறியாரோ நின்வாயிற் பல்லதனை, பாரோர்
முறியாரோ நின்முதுகின் முள்ளை, – சிறியவொரு
மட்டப்பேர் போதாதோ, வாக்கிதுவே யானக்கால்
ஒட்டக்கூத் தன்றா னுனக்கு.

மற்றொரு சமயம் இவருடைய தகுதியைத் தெரியாத ஒருவர் இவருக்கு இலக்கணம் வருமோ என்று கேட்டாராம். அப்போது இவர் நன்னூல் இலக்கணச் சுவடியெல்லாம் அறிஞர்களுக்குப் பயன்படுவது, அல்லாதவர்க்கு என்ன பயன் என்று பின்வரும் வெண்பா பாடினார்:

கவடிகளா கத்திரியுங் கள்ளர்காள் நன்னூற்
சுவடியிருந் தாவதென்ன சொல்வீர் – குவலயத்துக்
காட்டுக் கெறித்தநிலாக் கண்ணிரண்டு மில்லாதான்
வீட்டுக் கெறித்த விளக்கு.

உலோபரைப் பழித்து பின்வரும் பாடலைப் பாடினாரென்று வரலாறு கூறுகிறது:

குரங்குமாய் நண்டுகட்டித் தேளுங் கொட்டிக்
குடியாத மதுக்குடித்தே பேயு மேறி
இரங்கிவருங் காஞ்சொறியின் பொடியும் தூவி
இஞ்சிதின்று கொள்ளிபிடித் தெழுந்தாற் போலத்
தருங்கருணை யில்லாத புல்லர் வாழ்வில்
தண்டிகையின் மீதேறிச் சம்பத் தேறிக்
கருங்கைமதக் களிறேறிக் கழுவி லேறிக்
காடேறி நாடேறித் திரிவார் கண்டீர்.

இக்கருத்தோடு பின்வரும் காளமேகப் புலவர் பாடல் ஒப்பு நோக்கத்தக்கது:

குரங்கனலில் வீழ்ந்துவெறி கொண்டுதேள் கொட்டக்
கரஞ்செறியப் பாம்பலவன் கவ்வ – விரைந்துபோய்

பற்றவே கள்ளுண்டு பச்சைமிள கைக்கடித்தால்
எத்தனைபார் சேட்டைக் கிடம்.

*இவர் தீயோர் இயல்பைக் குறித்துப் பாடியபாடல் பின்வருவது:*

பாம்புகடித் தாலதுவும் மீட்க வல்லோம்
பசாசறைந்தால் நீறிட்டுப் பார்க்க வல்லோம்
வேம்புகசப் பறக்கறியும் ஆக்க வல்லோம்
விறல்வேழத் ததிகமதந் தணிக்க வல்லோம்
சாம்பொழுது திடமாகப் பேச வல்லோம்
தரணியின் மேற்கல்லாத தொன்று மில்லை
தீம்பரைநல் லவராக்கிக் குண முண்டாக்கத்
திறமதறி யாமனின்று திகைக்கின் றோமே.

*இவ்வாறு தத்துவப் பிரகாசர் பிறரோடு பூசலிட்டுக் கொண்டும் பிறரைப் பழித்துக் கொண்டும் மட்டும் இருந்தா ரென்று இல்லை. சிலரை நன்கு போற்றியுமிருக்கிறார். பின்வரும் பாடல் காண்க:*

மன்கவி தாவும் பொழிற் கூத்த னூரப்பன் வாய்தலைமன்
தன்கவி தெள்ளிய பால், வால கோகிலந் தானுரைத்த
நன்கவி பாலுக் கிடுசர்க் கரைக்கவி, நாங்கள் சொல்லும்
புன்கவி உப்பொடுகாயமென் றேசொல்லிப் போற்றுவரே.

*இப்பாடலால் இவர் கூத்தனூரப்பன், வாலகோகிலம் என்ற இரு கவிஞரை உயர்த்தியும், தம்மைத் தாழ்த்தியும் சொல்லிக் கொள்கின்ற இவரது பணிவுள்ளம் நன்கு புலப்படுகின்றது.*

*ஒருகால் இத்தத்துவப் பிரகாசர் சீகாழித் தத்துவப் பிரகாசர் மரபில் பிற்காலத்தில் தோன்றி அதே பெயரைக் கொண்டிருந் தவராயுமிருக்கலாம்.*

*இனி, மூன்று பாடல்கள் தத்துவப் பிரகாசர் பாடியதாக இவரோடு தொடர்புபடுத்திச் சொல்லப்படுகின்றன. இப்பாடல் கள் இவருக்குத் தொடர்புள்ளவையல்ல என்று கருதலாம். ஒன்று, குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் இங்கில்லை என்ற பாடல்:*

குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனா ரில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டிநா வறுப்பதற்கோ வில்லி யில்லை
இரண்டொன்றாய் மயிரைமுடிந் திறங்கப் போட்டு

வெட்டுதற்குக் கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டுக் கவிப்பாட்டு விரைந்துபாடித்
தெட்டுதற்குத் தமிழறியாத் துரைக ளுண்டு
தெசமெங்கும் புலவரெனத் திரியலாமே.

*இப்பாடலில் பிள்ளைப் பாண்டியன் என்பது அதிவீரராம பாண்டியரே என்று கொள்ளப் பெறுகின்றது. இப்பாண்டியன் காலம் 16ஆம் நூற்றாண்டின் பிற்பாதி. இங்ஙனமானால் இக் காலத்தில் இத்தத்துவப் பிரகாசர் வாழ்ந்திருக்க மாட்டார். மற்றப்படி இப்பாடல் அதிவீரராமனுக்குக் காலத்தால் முற் பட்ட ஒரு பாண்டியனைக் குறிப்பிடுமென்றால் இது தத்துவப் பிரகாசருக்குப் பொருந்தும்.*

*இரண்டாவது பாடல் சீநக்கனைப் பற்றியது. சீநக்கன் பொய்யாமொழிப் புலவருக்கு ஆதரவு கொடுத்தவன்:*

வெற்றிப்பாடுங் குணப்பாடும் வீரப்பாடு மொருகவியில்
தெற்றிப்பாட வதுகண்டு சீநக்கரசர் துகிலீந்தார்
பற்றிப்பார்க்க வதனூடே பலதேவேசர் வீற்றிருந்தார்
சுற்றிப்பார்க்கப் பயப்பட்டுத் தூரவைத்துத் தொழுதோமே.

*அப்புலவர் காலம் 13ஆம் நூற்றாண்டு; எனவே இதையும் தத்துவப் பிரகாசர் பாடியிருக்க முடியாது. இப்பாடல் சீநக்கன் கொடுத்த துகிலைப் பழிப்பதாக உள்ளமையால் பழிப்புப் பாடல்களையே அதிகம் பாடின தத்துவப் பிரகாசர் இதையும் பாடினாரென்று கால உணர்வு இல்லாமல் முந்தையோர் கருதியிருக்கிறார்கள்.*

*மூன்றாவது பாடல் புலவர்களுடைய தகுதியை ஒன்று ஆயி ரமாகப் பெருக்கிச் சொல்வது. சிவஞானியினுடைய திறத்தை உயர்வாகச் சொல்லுகின்றமையால் இதை இவர் பாடினா ரென்று சொல்வதுண்டு:*

ஆயிரவர் புலவோரி லொருவன் ப்ரபந்தகவி;
அவரா யிரர்க்கு ளொருவன்
அந்தாதி தூதுலாப் பரணிகோ வைக்கமகன்;
அவரா யிரர்க்கு ளொருவன்
போயிடம் பெறுநா டகபுரா ணிகன்; அவன்
போலா யிரர்க்கு ளொருவன்
பொருட்பெறுங் காப்பியம் புகல்வாக்கி; மற்றவன்
போலா யிரர்க்கு ளொருவன்

பாயிரந்த தருபஞ்ச லட்சண விதானி; அப்
    படியா யிரர்க்கு ளொருவன்
பரசமய தர்க்கநூல் பகர்வாதி; மற்றுமப்
    படியாயிரார்க்கு ளொருவன்
தேயமெண் திசைபரவு தேசிகோத் தமன்; அத்
    திறத்தா யிரர்க்கு ளொருவன்
சிவனைத் துதித்துண் டுடுத்துக் கொடுத் திடுந்
    தெய்வச் சிவக்கி யானியே.

*இப்பாடல் 19ஆம் நூற்றாண்டுப் புலவரொருவர் செய்த இலக்கண தீபம் என்று சிறு நூலில் 10ஆம் பாடலாக உள்ளது. ஒருகால் இதன் ஆசிரியர் இப்பாடலைப் பழம்பாடலென்று கருதித் தம் நூலில் சேர்த்துமிருக்கலாம். இதைத் தத்துவப் பிரகாசருடைய மாணாக்கர் திருத்தோணியப்பர் பாடினாரென்றும் சொல்வதுண்டு.*

## *கச்சி ஞானப்பிரகாசர்*

*சீகாழிச் சிற்றம்பல நாடிகள் 14ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் (1325-50) மெய்கண்டார் பரம்பரையில் வந்த சமயத் தலைவராகச் சீகாழியில் விளங்கினார். அவர் மாணாக்கர் பலருள் ஒருவர் காஞ்சி ஞானப்பிரகாசர். இவர் சிற்றம்பல நாடிகள் முத்தி பெற்ற காலத்திலேயே தாமும் முத்தி பெற்றார். இவருடைய மாணாக்கரான மற்றொரு ஞானப்பிரகாசர் வழியே காஞ்சி ஞானப்பிரகாசர் மடம் தொடங்கி வளர்ந்தது. இந்த ஆதீனத்தில் 16ஆம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் விளங்கிய காஞ்சி ஞானப்பிரகாசர் புராணத் திருமலைநாதருக்குக் குருவாய் இருந்தவர். இவருடைய மாணாக்கரும் அடுத்த ஆசாரியருமான கச்சிஞானப்பிரகாசர் கிருஷ்ணதேவராயரால் பெரிதும் மதிக்கப் பெற்றவர். இவ்வாதீனம் இன்றளவும் நிலைத்திருக்கிறது. இவர்கள் தங்களைக் காஞ்சிபுரம் ஞானப்பிரகாச சுவாமிகள் ஆதீனம் மெய்கண்ட சிவாசாரியர் சந்தானபீடம் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். இவர்கள் சிற்றம்பல நாடிகளையே மூல குருவாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய நித்திய பூசையில் சிற்றம்பல நாடிகள் கோயிலும் இருக்கிறது.*

*புராணத் திருமலை நாதருடைய குருவாகிய ஞானப்பிரகாசர் பற்றி வரலாறொன்றும் தெரிந்திலது. அடுத்து வந்த ஞானப்பிரகாசர், திருமலைநாதர் மகனாகிய பரஞ்சோதிக்குக் குருவா*

*யிருந்ததோடு, சிறந்த நூலாசிரியராகவும் இருந்தாரென்று அறிகிறோம். இவர் இரு நூல்கள் செய்தாரென்று தொண்டை மண்டல சதகம் கூறும் (5):*

வானப்ர காசப் புகழ்க் கிருஷ்ண ராயர்க்கு மஞ்சரிப்பா
கானப்ர காசப் புகழாய்ந்து கச்சிக் கலம்பகம் செய்
ஞானப்ர காச குருராயன் வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்ர கா்ச முடையோர் வளர்தொண்டை மண்டலமே.

*ராயர் கேட்டு மகிழ்ந்து இந்நூல்கள் பாடியதற்குப் பரிசிலாகப் பதினெண் வகை வாத்தியம், சொர்ணச் சிவிகை, கவிசை, சிங்க முகச்சுருட்டி, யானை, பகல் தீவட்டி, உடைவாள் முதலான விருதுகளைக் கொடுத்திருந்தார். பின்வரும் பழம் பாடலில் இச்செய்தி அழகுறச் சொல்லப்பட்டுள்ளது:*

நீடாழி யுலகத்திற் கரிகால சோழனாள்
  முதல்நிகழ் தொண்டை மண்டலத்து
நிகரிலாக் கச்சிதனின் ஞானப்ர காசநன்
  நிதி மூர்த்தி யார்த மக்கு
வாடாப் புகழ்க் கிருட்டிண ராயராம் வேள்தந்த
  மாதங்கக் கொடியாடையும்
மாவுடங் காவெண் டயமேல்வெண் கலப்பேரி
  மதிபானு பிறையுடன் வாச்சியம்
சோடாய திருச்சின்னம் கவுரிகா ளம்பூரி
  சொல்லுமெக் காளை தாளம்
தோற்கருவி தவுண்டைபல் லரிதவளச் சங்கு
  சொர்ணச் சிவிகை கவிதை
ஆடா மணிச்சிங்க முகவா சுருட்டியும்
  அணியுபய வெண்சா மரமும்
அருகில் வரு குஞ்சரம் பகல் தீவட்டி யுருகு
  வாளான பதினெண்வாச் சியமும்
ஈடான முப்பத் திரண்டுவிரு தாண்மையும்
  இரத்தின மிழைத்த குல்லாய்
எழுதோ மரங்கபாய் கைலாவு கட்டியம்
  இன்ன மனேக பலவுஞ்
சேடனா யிரத்துபய நாவினாற் சொலவரிய
  தெய்விக வினோத விருதும்
சீராய் நடத்தினன் ஏகம்ப ரறியஆ –
  தித்தன் மதியுள்ள காலமே.

இப்பாடலையும் அடுத்து வரும் 'மத்தகசம் ஏறுவார்' என்ற பாடலையும், சோமசுந்தர தேசிகர் தம் நூலில் தந்திருக்கிறார். இந்த ஞானப்பிரகாச தேசிகர் புகழைக் கூறுகின்ற பஞ்சகம் ஒன்று இருந்தது. வாய்மொழியாகவே அவருடைய திருமுன்பு பாடப்பட்டு வந்தது. மடத்துக்குப் பெருமைகள் குறைந்த பின்பு, அப்பாடலும் வழக்கில் இல்லை போலும். பின்வருவது அதிலுள்ள ஒரு பாடல்.

மத்தகச மேறுவார் பட்டாபி டேகராய்
  மகுடந் தரிப்பர் பணியா
மாற்றலரை வென்றிடுவர் பஞ்சலட் சணராய்
  வரகவிப் புலவராவர்
தத்வநிலை யறிவர்மணி ருத்ராக்க மாலிகா
  சம்பன்ன ராவர்சமய
சண்டிகளை வென்றுசிவ சமயத்தி னிருபர்
  சரிதாதி நீதிபெறுவர்
உத்தம குணம்பெறுவர் விதரண குணம்பெறுவர்
  உண்மையுப தேசவராவர்
ஒப்பரிய தனிமுதல்வர் ஏகம்ப வாணர்தமது
  உள்ளங் களித்திருப்பர்
சித்தசனை வென்றமுனி தவராச முனிராச
  செல்வச் சுவேதவனனாம்
தென்கச்சி ஞானப்ர காசதே சிகமூர்த்தி
  திருவடி பணிந்தோர்களே.

சுவேதவனனாம் தென்கச்சி ஞானப்பிரகாசன் என்பது, இவர் மெய்கண்டார் பரம்பரை என்பதைக் காட்டுவது. இவற்றால் இவர் காஞ்சி ஞானப்பிரகாசர் ஆதீனத் தலைவர் என்பது விளங்கும். இவர் பாடிய நூல்களாக அறிய வருவன இரண்டு: கச்சிக் கலம்பகம், மஞ்சரிப்பா என்று சதகப் பாடலால் அறிகிறோம். இரு நூல்களும் இன்று கிடைக்கவில்லை.

காஞ்சி ஞானப்பிராகாசர் 1551இல் காஞ்சியில் மடம் நிறுவினார் என்று கா. சுப்பிரமணியப் பிள்ளை எழுதியிருக்கிறார்; ஆதாரமெதுவும் காட்டவில்லை. எமது ஆராய்ச்சியின்படி அம்மடம் தோன்றிய காலம் இதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன், 1350ஆக இருத்தல் பொருந்தும். (எமது தமிழ் இலக்கிய வரலாறு 14ஆம் நூற்றாண்டு பார்க்க.)

### கச்சிக் கலம்பகம்

காஞ்சி ஏகம்பவாணர் மீது பாடப்பெற்றது: வேறு செய்தி தெரியவில்லை. 19ஆம் நூற்றாண்டிறுதியில் மற்றொரு கச்சிக் கலம்பகம் பூண்டி அரங்கநாத முதலியார் பாடினார்.

### மஞ்சரிப்பா

கிருஷ்ண தேவராயர் புகழாகப் பாடிய பிரபந்தம். அகத் திணையும் புறத்திணையும் விரவத் தொடுக்கப்பட்ட தொகை நிலைச் செய்யுள்; மஞ்சரி - பூங்கொத்து. வேறு செய்தி தெரிய வில்லை.

### காலம்

கிருஷ்ண தேவராயர் மீது (1509-30) இவர் பிரபந்தம் பாடி யுள்ளமையால், 16ஆம் நூற்றாண்டின் இரண்டாவது காற்கூறே (1525-50) இவர் காலமென்று கொள்ள வேண்டும்.

### பிற புலவர்கள்

கூத்தனூரப்பன், வாலகோகிலம், ஒட்டக்கூத்தன் என்ற புலவர்கள் இக்காலத்தில் வாழ்ந்தார்கள் என்று தமிழ் நாவலர் சரிதையால் அறிகிறோம். முந்திய இருவர் பாடல்களை ராயர் சபையில் வாழ்ந்த தத்துவப் பிரகாசர் போற்றியுரைத்ததையும், ஒட்டக்கூத்தனை இகழ்ந்து உரைத்ததையும் தத்துவப் பிரகாசர் வரலாற்றில் குறிப்பிட்டோம். இங்கு கூறிய வாலகோகிலம் ஒரு பெண்பாற் புலவர் போலும். திருத்தோணியப்பர் என்ற ஒரு புலவர் இருந்தார் என்று வரலாறுகள் சொல்லும். அவர் தத்து வப் பிரகாசரின் மாணாக்கர்; அவர் மற்றவர்களைப் பழித்தார்; மாணாக்கரல்ல, தத்துவப் பிரகாசரையே பழித்தார் - என்று கதைகள் பலவிதமாய்க் கூறும்.

## 3. பாண்டியர் அவையில் இருந்த புலவர்

வரதுங்கராம பாண்டியர் - அதிவீரராம பாண்டியர் அவையில் இருந்த புலவர் பலர். அவர்களுள் சிதம்பரநாதகவி என்பவர் சங்கர விலாசம் என்ற புராணம் செய்தார். ஐயம் பெருமாள் கவிராசர் என்ற புலவர் புரூரவ சரிதை என்ற காப்பியம் செய்தார். இவர்கள் வரலாற்றை முறையே இந்நூற்றாண்டு வரலாறு முதல் பாகம் முதல் அத்தியாயத்திலும் இரண்டாம் பாகம் முதல் அத்தியாயத்திலும் ஆராய்ந்திருக்கிறோம். சேறை -

*கவிராச பிள்ளையும் அதிவீரராம பாண்டியர் அவையில் இருந் திருக்கக்கூடும். வேறு புலவர்களைக் குறித்த செய்திகளைக் கீழே தருகிறோம்.*

## *வீர வெண்பா மாலை*

*தென்காசிப் பகுதியில் ஆட்சி புரிந்த அரசர்களுள் கி.பி. 1552-64இல் ஆட்சி புரிந்த நெல்வேலி மாறன் ஒருவன். இவனுக்குக் குலசேகர பாண்டியன் நெல்வேலிப் பெருமாள் போன்ற பெயர் களும் வழங்கின. தென்காசிக் கோயில் சாசனங்கள் இவனைப் பற்றிப் பல செய்திகள் குறிப்பிடும். இவன் முடிசூடிய காலம் கி.பி. 1552.*

ஏறிய சகாத்தமாயிரத்துநானூற் றெழுபஃ
  தியனாலி லாண்டுபரி தாபிதனின் மாதந்
தேறியசித் திரையிலிரு பத்தொன்ப தாகுந்
  தேதியிரண் டாம் பக்கந் திங்களுரோ கணிநாள்
வீறுயர்ந்த மிதுனத்து நெல்வேலி மாறன்
  வீரவேள் குலசேகரச் செழிய னென்றும்
ஆறுபுனை யகிலேசர் காசியிலே விளங்க
  அணிமவுலி தரித்தனன்பா ரரசர் பணிந் தனரே,

*இவன் தென்காசித் திருப்பணி முடிவு பெறாது இருப்பது கண்டு அதை முடித்து வைத்தான் என்று ஒரு பாடல் கூறுகிறது.*

விண்ணாடர் போற்றுந்தென்காசிப் பொற்கோபுர மீதிலெங்கள்
அண்ணாள்வி செய்த பணியிப் படிக்குறை யாய்க்கிடக்க
ஒண்ணாதெனக்கண் டுயர்ந்ததட் டோடெங்குமூன்றுவித்தான்
மண்ணாளு மாலழ கன்குல சேகர மன்னவனே.

*இவன் மீது புலவர் வீர வெண்பா மாலை பாடினர் என்பது மற்றொரு பாடல்:*

ஏடியன் மாலை யணிந்தாலும் வாடு மெனப்புலவோர்
பாடிய வீரவெண் பாமாலை யைப்பொன்னின் பாண்டியன்போர்
தேடியவேற் செழியன்குல சேகரத் தென்னனைப் போற
சூடிய வேந்தருண் டோவொரு வேந்தரைச் சொல்லுகிலே.

*இப்புலவர் பெயரோ நூலோ தெரியவில்லை. இக் குலசேகர பாண்டியனுக்கு அடுத்துத் தென்காசியில் பட்டத்துக்கு வந்த அரசர் அதிவீரராம பாண்டியர்.*

## காசிக்கலியன் கவிராயர்

இவர் வரதுங்கராமன் அவையிலிருந்த புலவருள் ஒருவரென்பது முன்னே அவ்வரசர் வரலாற்றில் சொல்லப்பட்டது. இவர் அவ்வரசர் மகுடம் புனைந்தபோது ஐந்து வெண்பாக்கள் பாடினார். இப்பாடல்கள் தென்காசி விசுவநாதர்கோயில் கோபுர வாயில் நிலையில் பொறிக்கப்பட்டுள்ளன. இவர் இயற்பெயர் கலியன் என்பது. தென்காசி இவரது ஊரானமையால் இவர் பெயரோடு காசி என்ற அடை சேர்த்து வழங்கப்பெறுகிறது. பாடல்கள்* பின்வருவன:

சீர்கொண்ட செங்கமலை வாழத் திரையாடைப்
பார்கொண்ட வீரபாண் டியனென் – நேர்கொண்ட
கானுலா மாலைக் கனகமகுடம் புனைந்தான்
மானவே லான் அபிரா மன்.

இது நாண்மங்கலம் என்னும் புறத்துறை, அதாவது 'அறந்தரு செங்கோல் அருள் வெய்யோன் - பிறந்தநாள் சிறப்புரைத்தன்று'. அரசன் தன் பிறந்த நாளில் சிறை விடுதல், போர் ஒழித்தல், இறை தவிர்தல், தானம் செய்தல், வேண்டிய கொடுத்தல் என்பன. இங்கு மகுடம் புனைந்த சிறப்புடைய தினத்தைப் பிறந்தநாள் எனக்கொண்டு பாடுகிறார். வீரபாண்டியன் அபிராமன் என்பன வரதுங்கராமன் பெயர்கள்.

சேணுலவு வெண்திங்கட் செல்வனெனத் தண்ணென்று
நீணிலமோ ரேழும் நிழற்றுமே – பேணிவந்து
பூவேந்தர் ஏத்தும் புகழ்வீர பாண்டியன் நம்
கோவேந்தன் கொற்றக் குடை.

இது குடை மங்கலம். 'நாற்றிசையும் புகழ் பெருக - வீற்றிருந்தான் குடை புகழ்ந்தன்று'. குடை நிழலைச் செய்தலின் அதனை ஏதுவாகக் கொண்டு குடி புறங்காத்துக் கோலோச்சுதலைக் கூறுவது.

பற்றலர் மண்கொள்ளும் பணிந்தார்க் கரசளிக்கும்
கொற்ற முயர்க்குமறங் கூருமே – விற்றடந் தோள்
வில்லவனை வென்றுகொண்ட வீரமா றன்செழியன்
வல்லம்எறிந் தான்ஏந்து வாள்.

---

* இவை பஞ்சரத்தினமாலை என்பர் மு. இராகவையங்கார் - சாசனத் தமிழ்க்கவி சரிதம் 1937, பக்கம்.174.

*இது வாள்மங்கலம். 'கயக்கருங் கடற்றானை வயக்களிற்றான் வாள் புகழ்ந்தன்று.' பகைவரைக் குறித்த வாள் வெற்றியால் பசிப்பிணி தீர்ந்த பேய்ச்சுற்றமும் பிறரும் வாளினை வாழ்த்துதல். வில்லவன் - சேரன்; திருவாங்கூர் அரசன்; வல்லம் - இங்கு ஒரு போர் நிகழ்ந்தது போலும். இப்போரைப் புதுக்கோட்டைச் சாசனம் கூறும்.*

**கற்றுணர்ந்தோன் காசிக் கலியன் கவிராயன்**
**மற்றடந்தோள் வீர மாறனுக்குச் – சொற்புனைந்தான்**
**நாண்மங் கலமும் நவிற்றுகுடை மங்கலமும்**
**வாண்மங் கலமும் வகுத்து.**

*இப்பாடல் ஆசிரியர் பெயரையும் அவர் செய்த பாடல்களையும் கூறுகிறது. இவையன்றி மற்றொரு பாடலில் கவிராயர் வரதுங்க ராமர் மகுடம் சூடிய ஆண்டைக் குறிப்பிடுகிறார்:*

**நண்புற் றெதிர்ந்தகலி நாலா யிரத்தறுநூற்று**
**எண்பத் தொன்பானில் இருங்கடல்சூழ் – மண்பெற்று**
**மின்னுமகு டம் புனைந்தான் வேல்வீர மாறனென**
**மன்னவர் கோன் அபிரா மன்.**

*கலி 4689 எனவே, கி.பி. 1588 ஆகும். இப்பாடல்களால் கவிராய ருடைய புலமையும் அரசபக்தியும் புலப்படும். இவரைக் குறித்த வேறு எச்செய்திகளும் தெரிந்தில.*

### 4. சைவ நூல் உரைகளால் அறியவரும் நூல்கள்

*பண்டையுரையாசிரியர் இலக்கண இலக்கணங்களுக்குப் பேருரை எழுதுங்கால், இறந்துபோன பல பழைய நூல்களி லிருந்து மேற்கோள் பாடல்களைத் தருகிறார்கள். அந்நூல்கள் கிடைக்கவில்லை. இப்பாடல்கள் மட்டுமே கிடைக்கின்றன. அவைபோல, சைவ சாத்திர உரையாசிரியர்களும் பல நூல் மேற்கோள் தருகிறார்கள். இவற்றுட் சில இன்று கிடைக்காத நூல்கள். இவ்வாறு அறியப்படும் நூல்கள் சிலவற்றைக் குறித் துச் சில சொற்கள் சொல்லுவோம். மறைஞான தேசிகர் சித்தி யுரையில் காட்டப்பட்ட நூல்கள் இரண்டு.*

*குருஞான சம்பந்தருடைய ஞானாவரண விளக்கத்துக்குத் தாம் செய்த மாபாடியம் என்னும் பேருரையில் வெள்ளியம்பல வாணத் தம்பிரான் கடல்போற் பரந்த வடநூற் பரப்பையும் காட்டுகிறார். அவர் காட்டும் தமிழ் நூல்களிற் பல இன்று*

பெயர்கூட அறியப்படாதவை. அவற்றுள் 16ஆம் நூற்றாண்டுக்கு உரியன என்று கருதத்தக்கவை பின்வரும் நூல்கள்: ஜனன கருவிமாலை, யோகசாரம், புவனகோசம், நிராமயதேவர் நூல் என்பன. இவற்றைக் குறித்துச் சில சொற்கள் கூறுவோம்.

## பார்த்திபம்

இது சைன சித்தாந்தம் கூறும் நூல் போலும், சிவஞான சித்தியார் உரையில் (296) மறைஞான தேசிகர் அட்ட குணங் களைக் குறிப்பிட வந்து பின்வரும் பாடலை எடுத்துத் தந்து 'என்றார் பார்த்திபமுடையார்' என்று எழுதுகிறார்.

**தோற்றும் அனந்த ஞானத்தோ டனந்த தரிசனமும்**
**தோற்றும் அனந்த வீரத்தோ டனந்த சுகத்துடனே**
**ஆற்றிய நாமமின்மை கோத்திர மின்மை ஆயுவின்மை**
**ஏற்றிய தோர்அழி யாகியல் லன்பரிங் கேந்திழையே.**

ஆசிரியர் காலத்தில் இது நன்கு அறியப்பட்ட ஒரு நூலாக இருந்தது போலும். இதன் காலம் கி.பி. 1500ஐ அடுத்த கால மாயிருக்கலாம். இதுபற்றி வேறு செய்திகள் தெரியவில்லை. நூல் இல்லை. திருவாவடுதுறை ஆதீனத்தில் பார்த்திவபத்ததி என்ற ஒரு நூல் ஆட்சியில் உள்ளது; அது பிற்காலச் சைவ உரைநடை நூல்.

## தர்க்கபரிபாடை

சித்தியார் உரையில் மறைஞான தேசிகர் காட்டும் நூல்களில் இதுவும் ஒன்று. அளவை 11ஆம் பாடல் உரையில் தமிழில் 13ஆம் நூற்றாண்டில் ஒரு காலிங்கராயர் இருந்து திருக்குறள் உரை செய்தார். தர்க்க பரிபாஷை வடமொழி நூல். பிற்காலத்தில் இதற்குத் தமிழ் மொழிபெயர்ப்புக்களும் எழுந்துள்ளன.

**மேற்கோள் ஏது உபநயம்**
**நிகமனம் எனமுறை நிகழப் பெறுமே.**

என்றார் தர்க்க பரிபாடையில் காலிங்கராயர் என்று எழுது கிறார். இதனால் இந்நூலாசிரியர் காலிங்கராயர் என்பது தெரி கிறது. நூல் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழில் அளவை கூறும் நூல்கள் குறைவு. இப்படியொரு நூல் அன்று இருந்தது ஒரு சிறப்புடைய செய்தி. இதன் காலமும் 1500ஐ அடுத்த கால மாகலாம்.

## ஜனனகருவி மாலை

பல நாள் இருக்கவேண்டும் என நினைத்து நம்முந்தையோர் சொல்ல எண்ணிய பொருள்களையெல்லாம் பாட்டாகவே சொல்லி வைத்தார்கள். சோதிடம், வைத்தியம், மந்திரம், சிற்ப சாஸ்திரம் முதலிய எல்லாக் கலைகளைச் சொல்லுவதற்கும் பாடலே பயன்பட்டு வந்தது. பாடலை நினைவில் வைத்துக் கொள்வது எளிது. கற்பதும் எளிது. சுருங்கிய சொற்களாலும் சொல்ல முடியும். ஆதலால்தான் பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் இலக்கணம், இலக்கியம், சமய சாஸ்திரம் மட்டுமல் லாமல் எல்லா நூல்களும் பாட்டிலேயே செய்யப்பெற்றன. நாம் கருதும் நூற்றாண்டில் அவ்வாறு செய்யப் பெற்றிருந்த நூல் களில் ஜனன கருவி மாலை என்பதும் ஒன்று. இந்த நூல் உடம் பெடுத்த மைந்தனுக்குப் பிறப்புத் தொடங்கி மரணமளவும் நிக ழும் பூத வியாபாரத்தால் வரும் அவத்தைகளைக் கூறுகின்றது. நூல் இன்று இல்லை. ஆனால் இதிலிருந்து இரண்டு பாடல் களை வெள்ளியம்பலவாணத் தம்பிரான் தமது ஞானாவரண விளக்கவுரையில் மேற்கோளாகக் காட்டி "மற்றுக் கூறியன எல்லாம் சனன கருவி மாலையுள் விரித்துக் கூறியன கண்டு கொள்க. ஈண்டு எழுதிற் பெருகும் எனக் காட்டிற்றிலம்" என்று எழுதுகிறார். பாடல்கள் பின்வருவன:

அன்னைநுகர்ந் ததன்சாரம் பொழுது மூன்றின்
  ஆம் கருவின் இரதம் அதன் மலம் நீர் கிட்டம்
பின்னிரதத் துற்றமலம் மயிரும் தோலும்
  பேசுதிரத் திறைச்சியிதன் மலங்களாந் தசையில்
துன்னியிடும் மேதைமலப் பித்தமே தையினிற்
  சூழ் என்பு மலம் நகமாம் என் பின் மச்சை
மன்னுமலம் பீளைசுக் கிலத்தை மச்சை
  மலநெய்ப்புச் சுக்கிலந்தான் வலிபலம் வாதமுமே.

நிலமுதலைந் தும்முடலிற் பப்பத் தாக
  நிகழ் நூறு வயசளவும் அவத்தைகள்பத் தாக்கும்
குலவிளமை வளர்ச்சி யெழில் மேதை வலியைந்தும்
  கூட்டவளர்த் திடுமுன்ன ரைம்பான்யாண் டளவில்
நலிய வரும் பின்னைம்பான் யாண் டளவிற்றாது
  நண்ணிய கண் செவி மணம் மூன்றும்போம்படியாற்

கலையுணர்ந்தோர் இஃதறிந்து ஞான யோகங்
கற்கவருங் காலத்தே கற்றடைவர் கதியே.

இதையொத்த பொருள்கள் சிவதருமோத்திரத்திலும் சொல்லப் பட்டுள்ளன. எடை எத்தனை பலம் என்பது முதல் எல்லாச் செய்திகளையுமே அங்கு விளங்கக் காணலாம். இதையே குரு ஞான சம்பந்தர் ஞானாவரண விளக்கத்தில் பல பாடல்களில் சொல்லியிருந்தார் போலும்.

சனன கருவி மாலை காலத்தால் வெள்ளியம்பல வாணருக்கு (கி.பி. 1700) சிறிதுகாலம் முற்பட்டது என்று தெரிவதால், இங்கு 16ஆம் நூற்றாண்டு என்று கருதிச் சொல்லியிருக்கிறோம். இதன் ஆசிரியர் பெயரும் பிற செய்திகளும் தெரியவில்லை.

## யோக சாரம்

இதுவும் கருவுற்பத்தி போன்ற பொருளைக் கூறும் ஒரு வெண்பா நூல் என்று தெரிகிறது. ஞானாவரணம் 357ஆம் பாடலுரையில் வெள்ளி பின்வரும் பாடலைத் தருகிறார்:

காதலனும் காதலியும் காதலால் தாம்புணரின்
ஏதமின்றி மாதா வயிற்கருவைத் – தீ தின்றிக்
கூட்டும் பிராணன் குலையா துதானனென்கால்
நாட்டி வளர்க்குமென நாடு.

வேறு செய்திகள் தெரியவில்லை.

## புவன கோசம்

457ஆம் பாடல் உரையில் வெள்ளி பின்வரும் பாடலை எடுத்துத் தருகிறார்.

பாயபுகழ் நாதரது வியாத்தியினந் தத்துப்
பகருமுப புவனத்தா தார சக்தி
யாயவிறல் உருத்திரர்நா லெட்டுக் கோடி
யவாசூழு மனந்தருட னமரு மும்பர்
மேயகடா கங்கோடி யதன்மே லாகி
விரிகமல முகமொருநான் கிரட்டி தோள்கள்
ஏயவா னரசோரி யாச னத்தே
யிருப்பரொளி யனந்தரருள் ஏவல் பூண்டே.

*புவனகோசம் என்பது புவனங்கள் அவற்றில் வாழும் தேவர்கள் முதலிய பொருள்களைக் கூறும் நூல். இதன் ஏடொன்று தஞ்சைச் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் உள்ளது. அதன் பாடல் தொகை 128 விருத்தங்கள். அதனுள் மேற்காட்டியது இரண்டாம் பாடல். முதல் பாடல் காழி விநாயகர் வணக்கப் பாடல்:*

அருள்மேவு முலகுக்கா தார சத்தி
    ஆதியா உன்மனையே அந்த மாகத்
தெருள்மேவு புவனவகை அனைத்தும் மண்ணோர்
    சிந்தையுற அந்தமிழாற் செய்ய வேண்டி
இருள்மேவு கண்டர் மதித் துண்டர் காழி
    ஈசரடி யார்தமது நேசர் தந்த
பொருள்மேவு ஞானமதப் புழைக்கை நால்வாய்ப்
    போதகத்தை யாதரித்துப்போற்றல் செய்வாம்.

*இதனால் நூலாசிரியர் காழிக் குரியவராயிருக்கலாமென்று தோன்றுகிறது. ஞானப்பிரகாசன் திருவடி வாழ்க என்று நூலிறுதியில் எழுதப்பட்டுள்ளமையால், இது கமலை ஞானப்பிரகாசர் மரபுக் குரிய நூலாயிருக்கும் என்றும் சொல்லலாம். நூலிறுதிப் பாடல் பின்வருவது:*

துன்னுமுன் மனைமேல் அதன்மிசைக் காலந்
    தொழில் சிரந் தத்துவத்து
வன்னமெய் நாமம் முதனடு விறுதி
    வயதிவை யின்றி நீ டொளியாய்
முன்னரு மருவாய் மலமுமா யெல்லா
    முதன்மையோ டறிவனுக் கிரகம்
அன்னவை யுளவாம் சிவமஃதடையு
    மவர்பர முத்தரென் றறியே.

*இது நல்ல நடையுடைய நூல். இதுவன்றி, விவேக சூடாமணி புவனகோசம் என்ற ஒரு வேதாந்த உரைநடை நூலும் உள்ளது. அது 19ஆம் நூற்றாண்டு.*

## *நிராமய தேவர் நூல்*

*இது ஒரு வேதாந்த நூல். இதிலிருந்து வெள்ளி 50 பாடல்களைப் பெயர் சொல்லி எடுத்துத் தருகிறார். 'வேதாந்தத்து அடங்கக் கூறிய குரவர் வழி தத்துவராயர் முதலியோர், விரித்துக் கூறிய குரவர் வழி நிராமயதேவர் முதலியோர் என்பது இவர்*

*கூற்று. இந்நூற் பாடல்கள் பலவகை விருத்தங்களாகவும் சந்த விருத்தங்களாகவும் உள்ளன. நூல் தனி நூலாய் இன்று கிடைப்பதாகத் தெரியவில்லை. இதன் பாடல்களுக்கு எடுத்துக்காட்டு:*

உரையுணர் விறந்திட் டுமன் கண்டதோர் கனவே ஒப்பத்
தெரிதரு முணர்விற் கேற்பச் செப்புமா றொன்று மின்றி
உரையுணர் விறந்த நட்டத் துற்றிடு மனந்தா னந்தந்
திரிதரு பழுதில் பேரா னந்தமே சேர்ந்த தன்றே.

ஆதலால் ஞான மான அனுபவம் நேயத் தான
தீதிலாப் பாழும் ஞாதிரு ஞேயமாம் சிவமும் சென்றற்
றோதொணா மூன்றி னோடும் உரையுணர் விறந்த நட்டத்
தாதியா கும்மனு பூதி யதுமுத்தி யாகு மன்றே.

சீவன் முத்தி பரமுத்தி சிவமா முத்தி சொரூபத்தில்
தோவுமுத்தி மேலான சொரூப நான்கோ றுடுமுத்தி
நீதிமுத் திரையின் முத்தி நீடா னந்த முத்தியுடன்
ஓதுமுத்தி ஒருபதுமே வேதாந் தத்தால் உறுமுத்தி.

## 5. வேறு புலவர்கள்

*மேற்குறிப்பிட்டோரையன்றி, இத்தொடர்புகள் இல்லாமல் பின்னும் பல புலவர் இருந்திருக்கக்கூடும். ஒருவரைப் பற்றிய செய்தி மட்டும் பின்னே கூறுகிறோம்.*

### *பரமேசுவரப் புலவன்*

*இப்புலவன் திருவண்ணாமலையில் வாழ்ந்தவன். கவிராச சிங்கம் என்ற புகழ் பெற்றிருந்த சேறைக் கவிராசபிள்ளை திருவண்ணாமலை யீசர்மீது வண்ணம் பாடினார். அப்போது அந்நகரிலுள்ளார் அவருக்குப் பெருஞ்சிறப்புச் செய்து பல்லக்கில் வைத்து மகளிர் சூழ ஊர்வலம் நடத்தி வைத்தார்கள். பரமேசுவரன் அவரைப் போற்றியவனாய் அந்நகரில் வாழ்ந்திருந்தான் போலும். கவிராசருக்கு நடந்த சிறப்புக்களைக் கண்டு ஒரு பாடல்* பாடினான்:*

கண்ணார் மதிக்கும் கவிராச சிங்கம் கடந்துதிரு
அண்ணாமலையப்பர் மேல்வண்ணம் பாடிமுத்தாலத்திகொண்டு
எண்ணா யிரமட வார்சூழப் பல்லக்கில் ஏறிவந்தான்
உண்ணா முலைஎல்லன் மூலைகள் தோறும் ஒதுங்கினனே.

---

* *தமிழ் நாவலர் சரிதை பாடல் 243.*

இவருக்குக் கவிராசரைப் பாடியது கூடப் பெரிதல்ல; எல்லனைப் பழித்ததே முக்கிய கருத்துப்போலும். மக்கள் இயல்பு பலவகை. கவிராசர் ஆடம்பரத்தையும் பாராட்டையும் விரும்பியவர். இவ் எல்லனே சைவ எல்லப்ப நாவலர் என்பதை அவர் வரலாற்றில் குறிப்பிட்டோம்; அவர் சைவத்துக்கு ஆக்கமான பல நூல்கள் பாடி அடக்கமாய் வாழ்ந்திருந்தார். அண்ணாமலைக்கு அவர் புராணமும் பாடியிருந்தார். ஒருகால் அவர் இந்தப் பரமேசு வரனிடத்து நட்போடு ஒழுகவில்லைபோலும். அதனால்தான் அப்புலவன், புராணம் பாடிப் பெறாத பெருமையை ஒரே பாடல் பாடிக் கவிராசர் அடைந்தார் என்று பாடியுள்ளான். இதற்கு நாவலர் சொன்ன மறுமொழியை அவர் வரலாற்றில் குறிப் பிட்டோம்., பரமேசுவரன் கல்வி கேள்வியும் தலைமையும் பெற்றிருந்தவன். வேறு அவனைப் பற்றிய செய்திகள் தெரிய வில்லை. கவிராசபிள்ளை, எல்லப்பர் இருவரும் பெரும் புல வர்கள்; இவர்கள் செய்த நூல்கள் பல உள்ளன; பழித்துப் பாடிய புலவன் நூல் ஒன்றும் இல்லை.

### 6. தனி நூல்

## *வரதுங்கராமர் செய்த கொக்கோகம்*

தமிழில் பண்டைக் காலத்தில் நூல் எழாத வாழ்க்கையின் பகுதி எதுவுமே இல்லை; நூல் என்பது பாட்டால் அமைந்த இலக்கியமாகும். எமது பத்தாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் இலக்கிய இலக்கணங்கள் பிரபந்தங்கள் தவிர வேறெத்தனைத் துறைகளில் நூல்கள் செய்யப்பட்டிருந்தன என்பதை ஓர் அட்டவணைப் படுத்திக் காட்டியிருக்கிறோம். சோதிடம், களவு, கனவு, ஓவியம், ஆருடம், கணிதம், வைத்தியம், நஞ்சு நூல், மனை வகுத்தல், யானை வளர்த்தல், குதிரை வைத்தியம் முதலான துறைகள் பற்றி அங்கு சொல்லப்பட்டது. இயல் இசை நாடகம் எனத் தமிழ் முத்தமிழாதலால், இசை நூல்களும், நாடக நூல் களும் பின்னும் அதிகமாயிருந்தன. இயல் பகுதியில் தமிழுக்குச் சிறப்பாயுள்ளது அகம் புறம் என்ற பாகுபாடு. இரண்டு பொரு ளிலும் அமைந்தனவே சங்க நூல்கள் யாவும்.

அகப்பொருட் பகுதியில், உள்ளத்து நிகழ்ச்சிகளைக் கூறு வதே இலக்கியம். திருக்குறள் இன்பத்துப்பாலும் எட்டுத் தொகையுள் ஐந்து தொகைகளும் இன்பப் பகுதியாகிய உள்ளத்து வினையும் அனுபவங்களையும் விரித்துக் கூறுவதால், இப்

பகுதி எத்தனை உயர்வாய்க் கருதப்பட்டது என்பதை நன்கு உணரலாம். இப்பகுதியை விரிப்பதற்கென்றே கோவை என்ற ஒரு பிரபந்த வகை பிற்காலத்தில் எழுந்தது; அகத்துறை நிகழ்ச்சிகளை வரலாற்று முறையில் சொல்லவென்றே எழுந்தது; இது நூற்றுக்கணக்கான நூல்களைக் கொண்டிருக்கிறது. நடராசப் பெருமான் இக்கோவையொன்று பெற ஆசை கொண்டாரென்றும், மாணிக்கவாசகரே பாடிக்கொடுத்தாரென்றும் சைவ உலகம் சொல்லிக் கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

இந்த நெறியில் தோன்றிய நூல் கொக்கோகம்; இது காம நூல். வரதுங்க ராமருடைய வரலாறு கூறியவிடத்து இவர் பல மனைவிகளை மணந்தார் என்று சொன்னோம். இவ்வளவு அதிகமாகச் சிற்றின்ப வாழ்வில் இவர் மூழ்கியிருந்தமையால், இந்த நூலொன்று செய்யும் உணர்வு இவருக்கு வந்தது போலும். இந்த நூல் காமுகர் விரும்பும் நூலாயிருந்தமையாலும், காம லீலைகளைப் பச்சையாகச் சொன்ன காரணத்தாலும் முன் அச்சான நூலை அரசாங்கத்தார் தடை செய்துவிட்டார்கள். அச்சான நூலையும் அரசு தொன்னூல் நிலையத்திலுள்ள அபூர்த்தியான ஒரு காகிதப் பிரதியையும் ஆய்ந்து இக்குறிப்புக்கள் எழுதப் பெறுகின்றன.

### வடமொழி மூலம்

வடமொழியிலும் காம நூல் பலர் செய்தனர் என்ற மரபு உண்டு. கொக்கோகர்* என்பவர் ரதி ரகசியம் என்ற ஒரு நூல் செய்தார்; காலம் 1200க்கு முன்; இதனுள் சந்தங்கள் பலவகை. இவர் நந்திகேசுவரர் கோணிகா புத்திரர் வாத்ஸ்யாயனர் முதலியோரைப் பயன்படுத்தியதாகச் சொல்லியுள்ளார். ஜயதேவர் ரதிமஞ்சரி என்ற ஒரு சிறு நூல் செய்தார். (இவர் வேறு; கீத கோவிந்தம் பாடிய ஜயதேவர் வேறு). ஒரு நாகார்ச்சுனர் பெயரால் ரதிசாஸ்திரம் என்ற நூலும் வழங்கும். இவற்றுள் வரதுங்கராமர் கொக்கோக முனிவர் செய்த நூலை மொழிபெயர்த்துச் செய்தார்; அதுபற்றியே தம் தமிழ் நூலுக்குக் கொக்கோகம் என்று பெயர் வைத்தார்.

---

* கொக்கோகர் என்று வடமொழிப் பெயர் இருக்க முடியாது. ஏனெனில் வடமொழியில் கொ - இல்லை. ஆகவே தமிழிலே கொக்கோகம் என்று பெயரிட்ட போது வடமொழி என்று சொன்னது வெறும் கண்மூடிப் பழக்கமேயன்றி உண்மையல்ல.

*ஆசிரியர்*

*இந்நூலுக்குப் பழமையாக எழுந்திருந்த இரு சிறப்புப் பாயிரங்கள் பின்வருவன.*

நலங்கூர் மகளிர் இளமைஎனும்நளிர் வாரிதியிற்கொக்கோகன்
வலங்கூர் மதன கலையென்னும் மலைமந் தரத்தை நடுநிறுவி
இலங்கக் கடையப் பேரின்பம் என்னும் அமுதம் பிறந்ததனைத்
துலங்கு மிளைஞர் எனும்தேவர் துய்த்துக் காமப் பசிதணிப்பார்.

விதிமுன் னாலோர் வடமொழியால்
  விரித்தும் வகுத்தும் முறை முறையே
துதிகொண் டிடச்சொல் காமநூ
  லதனைத் தொகுத்தான் கொக்கோகன்;
புதிய அமிர்த மெனவதனைத்
  தமிழாற் புகன்றான், புகழவரு
மதிவெண் குடையோன் வரதுங்க
  ராம னென்னும் மன்னவனே.

*வரதுங்கராமரைப் பற்றி உயர்வான எண்ணம் நாட்டில் வழங்குகிறது. அவர் பிரமோத்தர காண்டம் என்ற மிகச் சிறந்த புராணம் தமிழில் பாடினார். மற்றப்படி அவரது இளவலான அதிவீரராம பாண்டியர் கருவை யந்தாதிகள் பாடிய சிறப்பும் கொக்கோகம் பாடிய தாழ்வும் உடையவர் என்பது பொதுவான கருத்து. இக்கருத்துப் பிழையானது. அந்தாதிகள் பாடியவர் வரதுங்கராமரே என்பது முன்னமே காட்டியிருக்கிறோம். கொக்கோகம் பாடியவரும் அவரே என்று இங்கு காட்டிய இரண்டாம் பாடலால் நன்கு புலப்படும்.*

*இவர், வாற்சாயன முனிவர் பகர்ந்த நூலைக் கொக்கோகர் கூற, அத்தொன்மைப் பொருளைத் தமிழால் தாம் கூறியதாக வும் புதிதாய் ஒன்றும் உரைக்கவில்லை என்பதாகவும் பாடுவது காணத்தக்கது:*

பண்டு வாற்சா யனமுனிவர்
  பகர்ந்த நூலைக் கொக்கோகர்
கண்டா ரியத்தாற் குறித்துரைத்த
  கலைஞா னத்தைத் தமிழ் வல்லோர்
கொண்டா தரிக்க இயற்ற மிழாற்
  கூறி யிட்டோம் தொன்மையதாய்
உண்டாம் பொருளே உரைத் ததல்லால்
  புதிதா யொன்றும் உரைத்திலமால்.

நூல்

இதற்குச் சம்பராரி புராணம் என்ற பெயரும் உண்டென்று தெரிகிறது. இதற்குப் பழையதோர் உரையுமுண்டு. நூலாசிரியர் தொடக்கத்தில் காமனையே காப்பாகவும் வழிபடு கடவுளாகவும் கொண்டு போற்றுகிறார்:

கன்னலன்றி வேம்புநுகர் காமத்து ரோகிகள்போல்
பின்னையொரு தெய்வத்தைப் பேசோமே – எந்நாளும்
சாற்றுவதும் காமகலை, சாதிப்ப துங்கரணம்,
போற்றுவதும் காமனடிப் போது.

இவரது கருத்தமைப்புக்குச் சிவஞானசித்தியார் பரபக்கத்தில் வரும் உலகாயதன் கூற்றுக்கள் உதவியிருக்கக் கூடும். காப்பை யடுத்துக் கடவுள் வாழ்த்து என ஐந்து பாடல்கள். யாவும் காமனையே துதிப்பன.

தேரிளந் தென்றலாக, செழுங்கடை மதியமாக,
தூரியங் கடல்களாக, சொற்குயில் காளமாக,
நாரியர் சேனையாக, நறை வண்டு விடுதூதாக,
பாரினில் விசயம் செய்யும் படைமதன் சரணம் போற்றி.

என்பது ஐந்தாம் பாடல். அடுத்த பாடல் ஆடவர்க்குக் காம இன்பம் என்றும் நண்ணுக என்று வாழ்த்துகிறது. பின்னர் காம இன்பம் பெறாதார் நடைப்பிணம் என்கிறது:

உலகமெல்லாம் பொதுநீக்கி ஒருகோ லோச்சிப் புரந்திடினும்
இலகுமெளலி நவமணிப் பூண் இமைக்கும் பொற்றூ சணிந்தாலும்,
அலகில்லாத பெருஞ்செல்வம் அளகேசனைப்போல் துய்த்தாலும்
கலக விழியார் முயக்கற்றார் காலால் நடந்து கழிபிணமே.

நூல் வரலாறு கூறும்போது, அறமும் பொருளும் பிறர் செய்ய நந்தியே இன்பநூல் செய்தார், ஆயிரம் அத்தியாயம். அதை அவரிடம் கற்ற சுவேதகேது பாஞ்சாலருக்குச் சுருக்கி யுரைத்தார். பின் அது ஏழு இருடியராலும் எழுவகையாய்த் தொகுக்கப்பட்டது. ஏழையும் திரட்டியுரைத்தான் வாற்சாயன பகவான். இவை யாருக்கும் நன்கு விளங்காமையால், விளங்கும் படி உலகத்தில் உரைக்க என்று வயினதத்தன் உரைத்திடலும், கொக்கோகனென்னும் வடநூற் கவிராசன் அனங்காகமத்தை வகுத்துரைத்தான் என்கிறார். நூற்பயனாவது, மின்னல்போல் அழியும் வாழ்க்கையில் மதன நூலின்படி மடவாரைக் கூடிக் காலங்கழித்தல். பெண்களைக் கூடிச் சுகித்தலில் எட்டுப் பகுதிகள்;

பதுமினி முதலான சாதி, குணம், தத்துவப் பயிற்சி, அங்கசேட்டை சுபாவம், இன்பத்தரங்கள், தர்மக் கொள்கை, இங்கிதம் என்பன. இவையறிந்து பெண்களைக் கூடுதலே·இந்நூற் பயன்.

பரந்த சாதிக் குணம் தெய்வப்
    பயிற்சி சேட்டை சுபாவமின்பத்
தரங்கள் கொள்கை இங்கிதமே
    முதலாந் தகுதி அறியாதார்
சுருங்கு மருங்கு லார் கலவி
    துய்த்துக் காமச் சுகமறிதல் –
குரங்கு நறுமா துளம்கனியை
    உண்டு சாரம் குறிப்பதுவே.

பத்திசெய் சமய பேதப் பகுதிக்குப் பொதுவாய் நிற்கும்
புத்தெனும் நரகை நீக்கிப் பொதுவது வீட்டை நல்கும்
உத்தம அனந்த ஞான உருவெடுத் திலகா நிற்கும்
சத்தியம் இகத்தில் பேறு தருவதிவ் வாழ்க்கை என்பார்.

நூல் ஆறு அத்தியாயங்கள். இவற்றில் பெண்களின் சாதி (பத்மினி சித்தினி சங்கினி அத்தினி என நான்கு). இந்நால்வகைப் பெண்களின் பாகுபாட்டை எல்லா நூல்களும் சொல்லும். தோத்திர நூலாசிரியர் சௌந்தரியந்தாதி 7ஆம் பாடல். கூடலுக் கேற்ற காலம், கூடல் வகை, பருவ லட்சணம், பல நாட்டுப் பெண்டிர் வகை, கரண லட்சணம் என்ற பொருள்களைச் சொல்கிறார்.

அத்தியாயந்தோறும் முதற்பாடலில் மன்மதனுக்கு வணக் கம் சொல்கிறார். எல்லாப் பாடல்களுமே சொல் நயமுடை யன. இரண்டு மட்டும் கீழே தருகிறோம்: பத்மினி வருணனை:

செண்பக மலரெனச் சிவந்த மேனியாள்
பண்படு சொல்லினாள் பகரிற் பொய் சொலாள்
விண்படர் நறுமணம் வீசு மெய்யினாள்
கண்படாக் கானமான் அனைய காட்சியாள்.

### மன்மதன் துதி

மூவகைக் கடவுள் தேவர் முத்தொழிலதற்கு முன்ன
ராவது படைப்பே என்பர் அப்படைப் புதிக்கப்பண்ணும்
தேவனைத் தொழில் மூன்றிற்கும் மூலமாய்ச் சித்தத் துள்ளே
பாவரு மயமாத் தோன்றும் கடவுளைப் பணிதல் செய்வாம்.

நூலில் அறு சீர் விருத்தம், எண் சீர் விருத்தம், கலி விருத்தம், சந்த விருத்தம் முதலான பல வகை யாப்புக்களையும் காணலாம். வரதுங்கராமர் சிறந்த கவிஞர் என்ற இயல்புக்கேற்ப, இந்நூற் பாடல்கள் செம்மையான ஓசையும் தொடை நயமும் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காட்டுவோம்:

**மாலை எய்த மணங்கமழ் மல்லிகை**
**மாலை சூடி மனம்புள கெய்திட**
**மாலை மெல்ல எழும்பி மலர்த்துழாய்**
**மாலை யொத்து மணவறை வைகியே.**

## பதிப்பு

'பாண்டிய நாட்டுக் கதிபதியாகிய வரதுங்கராம பாண்டிய ராஜன் அருளிச் செய்த கொக்கோகம்' என்ற தலைப்போடு இந்நூல் அச்சிடப்பட்டது. நூல் மூலமும் பழைய விளக்கவுரையும் சிறிய அளவில் 210 பக்கம். இது 6 அத்தியாயமும் 331 விருத்தப் பாடல்களுமுடையது. இதில் 4 பக்கம் இப்பதிப்புக்குரிய சிறப்புப் பாயிரம். 22 பக்கம் 'கொக்கோக சொரூப சூசகம்'. சிறப்புப் பாயிரம் கொடுத்தோர் சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்ப் புலவராகிய நயநப்ப முதலியார், புதுவை அச்சுத உபாத்தியாயர், மானாம்பதி சாமிப்பிள்ளை புத்திரராகிய ஐயாப்பிள்ளை, இராய நல்லூர் இராமச்சந்திர கவிராயர் புத்திரராகிய பெருமாள் கவிராயர், தானப்பிள்ளை புதல்வராகிய அப்பாவுப்பிள்ளை ஆகியோர். சென்னைத் தமிழ்ச் சங்கத்தில் இரண்டாம் புலமை யினை நடாத்திய சிவக்கொழுந்து தேசிகர் முதலான வித்துவான் களைக் கொண்டு ஆராய்ச்சி செய்வித்து, அமுத நிலைச் சக்கரமும் வரைவித்து, கொற்றமங்கலப்பதி இராமசாமி அச்சிற் பதிப்பித் தார்* என்று இவற்றால் அறிகிறோம்.

நூலின் பின், 'பரதாரத்துக்கும் உரிய கொக்கோக நுட்பம் என்னும் நூதன வாக்கிய நூல்' - அத்தியாயம் ஏழு முதல் பன்னி ரண்டு வரை, செய்யுளும் உரைநடையும் பக்கம் 211 முதல் 256 வரை. பின் 'சங்கராசாரியார் அவர்கள் இயற்றிய கொக்கோக மதனநூல் உரை பாடம்' 118 பக்கம்; இதில் பாயிரம் 9 பக்கம் மற்றவை அத்தியாயம் 13 முதல் 24 வரை. இதன் பின் கரணங்களின் அட்டவணை, அமுத நிலைச் சக்கரம், 2 பக்கம். பின் ரதி மன்மதன்,

* யாம் பார்த்த நூலில் முகப்பேடு இல்லாமையால் ஆண்டு தெரிய வில்லை. சுமார் 1900ஐ ஒட்டி இருக்கலாம்.

சக்கரங்கள் ஆக 9 படங்கள். பின்னர் 1 கிராமியம் என்று தொடங்கி 64 அனு என்பது முடிய 64 கரணங்கள். லீலைகளைப் படமாகக் காட்டியபடியால் இப்புத்தகம் தடை செய்யப்பட்டது.

## 7. தனிப் பாடல்கள்

இலக்கிய வரலாற்றில் காலமெங்கும் தனிப் பாடல்கள் எண்ணற்றனவாய்த் தோன்றியிருக்கின்றன. எட்டுத் தொகையில் நானூறு பாடல் கொண்ட நான்கு நூல்களும் தனிப் பாடல் களே. அவை பின் ஒரு காலத்தில் தொகுக்கப் பெற்று தனிப் பெயர் சூட்டப் பெற்றுத் தொகை நூல் என வழங்கப் பெறலாயின. இரட்டையர் காளமேகம் பாடல்களிற் பெரும்பான்மை தனிப் பாடல்களே.

இவை யாவும் தனிப்பாடல் என்ற ஒரு தனியான ஆராய்ச்சிக் குரிய பொருளாய் அமையும். இவற்றின் அருமையையும் சிறப்பை யும் உணர்ந்த பிற்கால அறிஞர், தமிழ் நாவலர் சரிதை, தனிப் பாடல் திரட்டு, தனிச் செய்யுட் சிந்தாமணி, பெருந்தொகை எனப் பல பெயரிட்டு, பல அடிப்படையில் தொகுத்துத் தந்துள்ளனர்.

நாம் கருதுகின்ற 16ஆம் நூற்றாண்டில் தோன்றிய சில தனிப்பாடல்களைத் தத்துவப் பிரகாசர், கச்சி ஞானப்பிரகாசர் முதலான தலைப்புக்களில் பார்த்தோம். இவையும் எட்டுத் தொகையில் முன் குறிப்பிட்ட குறுந்தொகை நற்றிணை நெடுந் தொகை புறநானூறு என்பனவும் ஆசிரியர் பெயர் பெரும் பகுதி அறிந்து தொகுக்கப் பெற்றனவாகும். இனி ஆசிரியர் பெயர் தெரியாமலே சுவைமிக்க தனிப்பாடல்கள் பல இந்த நூற்றாண்டுக் குரியனவாகக் கிடைக்கின்றன. இயற்றிய ஆசிரியர் பெயர் தெரிய வில்லையே ஒழிய, பாடப் பெற்றவன் இங்கு ஒருவனே - வாணன். பாடற் சுவையினாலும் வரலாற்றுணர்வுக்கு இவை துணை புரியலாம் என்ற நினைவாலும் இவையனைத்தையும் குறித்து இங்கு சில சொற்கள் கூறுவோம்.

### ஏகம்பவாணன்

வாணன் என்ற பெயரில் பல தனிப் பாடல்களுக்குப் பாட்டுடைத் தலைவராக இரு வாணர் இலக்கிய வரலாற்றில் காணப்படுகின்றனர். ஒருவன் மாவலிவாணன்; காலம் 13ஆம் நூற்றாண்டு; மற்றவன் ஏகம்பவாணன் காலம் 16ஆம் நூற்றாண்டு, அதிவீரராம பாண்டியன் காலம். பின்னுமொரு வாணன் சந்திர

வாணன் என்ற பெயரில் 17ஆம் நூற்றாண்டில் அந்தகக்கவி வீரராகவ முதலியாருக்கு ஆதரவளித்து அவரால் கோவை பாடப் பெற்றவன். இம் மூன்று தலைவர்களில் இங்கு ஏகம்ப வாணனைக் குறித்து மட்டும் சில செய்திகளைத் தொகுத்துக் கூறுவோம்.

ஏகம்பவாணன் தென்னார்க்காடு ஜில்லாவில் திருக்கோவ லூரையடுத்த ஆற்றூர் (ஆறை) என்ற ஊரின் தலைவனாக வாழ்ந் தான். சிறப்புடைய வள்ளலாகவும் இருந்தான். இதுபற்றிப் புலவர் கள் இவனை இந்திரனென்றும் சந்திரனென்றும் புகழ்ந்ததில் வியப்பில்லை. இவன் காலத்தில் சேரநாடு இல்லை; கோவை தனி நாடாகித் தனி மொழியும் உடையதாகிவிட்டது. சோழர் குலமே இல்லாமல் போய்விட்டது. முகம்மதியர் படையெடுப்பால் நெடு நாள் முன்னமேயே பாண்டியர் மதுரையைவிட்டுத் தெற்கு நோக்கி ஓடிவிட்டார்கள்; தென்காசியிலும் சங்கரன் கோயிலிலும் பாண்டியர் இருந்து சிறு நிலப் பகுதியை ஆட்சி புரிந்து வந்தார்கள். திருக்கோவிலூருக்கும் தென்காசிக்கும் தூரம் மிக அதிகம். ஆகவே இவ்வாணன் தமிழ் மூவேந்தருக்கும் மேலான சக்கர வர்த்தி என்று ஒரு புலவர் பாடினால் அதைத் தடுத்துக் கேட் பதற்கு ஆளில்லை. இந்தச் சூழ்நிலையை மனத்தில் கொண்டு பின்வரும் பாடல்களைப் பார்க்கவேண்டும். சீவலமாறன் ஆகிய அதிவீரராம பாண்டியன் காலத்தில் இவன் வாழ்ந்தான் என்பது மட்டும் உறுதி.

இவனுக்கு ஏகம்பவாணன், ஆறை வாணன், மாகதர் கோன்வாணன் என்ற பெயர்களும் சொல்லப்படும் (மாகதர் கோன் - மகதை நாடுடையவன்.)

வாணர் பரம்பரையினர் 5ஆம் நூற்றாண்டு முதல் பல்வேறு அரசியல் நிலைகளில் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அவர்களைக் குறிப்பிடும் கல்வெட்டுக்களும் நிரம்பக் காணப் படுகின்றன. 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மாவலி வாணாதி ராயரைப் பற்றி முன்னே சொல்லப்பட்டது. காளமேகம் காலத் திலும் இவர்கள் சொல்லப்பட்டது. காளமேகம் காலத்திலும் இவர்கள் இருந்தனர் திருமாலிருஞ் சோலைமலைக் கல்வெட் டுக்கள் உள்ளன. விசயநகர மன்னருடைய பிரதிநிதிகளாகப் புதுக்கோட்டையில் சாளுவத் திருமலையின் கீழும் பலர் இருந் திருக்கிறார்கள்; குடுமியா மலையில் நிரம்பக் கல்வெட்டுக்கள்; மதுரை சீரங்கம் திருவானைக்கா காஞ்சி போன்ற இடங்களில்

இவர்களைக் குறிப்பிடும் கல்வெட்டுக்கள் பல; சேலம் பகுதி ஆறகளூரிலும் இவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

**பாடல்கள்**

14 பாடல்கள் கிடைக்கின்றன. இவற்றுள் சில பாடல்கள் இவனுக்கு மூவேந்தரும் அடி பணிந்தனர் என்ற கருத்தில் பாடப் பெற்றவை. இக்கருத்துப் பொருந்தாது என்று காட்டினோம். அப்பாடல்கள் பின்வருவன. முதன் ஐந்து பாடல்களும் தமிழ் நாவலர் சரிதையிற் குறிப்புக்களோடு காணப்படுவன:

**அலங்கல் அணிமார்பன் ஆறையர்கோன் வாணன்**
**விலங்கு கொடுவருக என்றான்:–இலங்கிழையீர்,**
**சேரற்கோ, சோழற்கோ, தென்பாண்டி நாடாளும்**
**வீரற்கோ, யார்க்கோ விலங்கு.**

இது வாணன் தாதிமேற் கோபமாய் விலங்கு கொண்டுவா என்ற போது வாணன் சேடியர் பாடியது என்பது குறிப்பு. ஒன்று கருதலாம்; தென்பாண்டி நாடாளும் வீரற்கோ என்று நிகழ் காலத்தில் சொன்னமையால் தென்காசிப் பாண்டியனான அதிவீரராம பாண்டியனைக் குறித்ததென்று கொள்ளலாம். (மற்ற அரசர் இருவர் அக் காலத்தில் இல்லை.) இதுவும் வாணன் புகழ்ச்சியாக அவன் சேடியர் பாடியது. ஆதலால் பாண்டியனுக்கு விலங்கு என்பது நிகழக்கூடியது அன்று. பாண்டியனது வேப்ப மாலையைப் பெற்று வரும்படி இவன் நான்கு தாதியரை அனுப்பினான் என்றும், மூவர் பாடியும் அவன் கொடுக்கவில்லை, பின் நான்காமவள் நான்காம் பாடலைப் பாடியபின் சீவலமாறன் மாலை கொடுத்தான் என்றும் குறிப்புக் கூறுகிறது.

**தென்னவா, மீனவா, சீவலமா, றா, மதுரை**
**மன்னவா, பாண்டி வரராமா, – முன்னம்**
**கரும்புக்குத் தாரளித்த தூயதமிழ் நாடா –**
**கரும்புக்கு வேம்பிலே கண்.**

**மாப்பைந்தார்க் கல்ல, முத்துவண்ணத்தார்க் கல்லா, வஞ்சி**
**வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே – பூப்பைந்தார்**
**சேர்ந்திருக்கும் நெல்வேலிச் சீவலமா றா, தமிழை**
**ஆய்ந்துரைக்கும் வீரமா றா.**

**வேம்பாகிலும் இனிய சொல்லிக்கு நீமிலைந்த**
**வேம்பாகிலும் உதவ வேண்டாவோ – தேம்பாயும்**

வேலையிலே வேலைவைத்த மீனவா: நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாள், மான்.

இம்மூன்றும் அகத்துறையில் அமைந்த பாடல்கள்; அடுத்த நான்காம் பாடல் பழிப்பு:

இலகு புகழ் ஆறை ஏகம்ப வாணன்
அலகை வரும் வருமென்றஞ்சி – உலகறிய
வானவர்கோன் சென்னியின்மேல் வண்ண வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு.

இது சம்பந்தமாக ஒரு கதையும் சொல்லப்படுவதுண்டு. ஏகம்ப வாணன் ஒரு பெருஞ் செல்வன். அதனோடு அவனிடம் ஒரு பூதம் ஏவல் செய்து வந்தது. வேந்தர் மூவரையும் கொண்டு வருமாறு அவன் பணிக்க, அப்பூதம் சேர சோழரைக் கொண்டு வந்தது. பாண்டியன் வேப்பந்தாருடையவன் ஆதலால், வேம்புக்கு அஞ்சும் இயல்புடைய பூதம் அவனிடம் நெருங்கவில்லை. அதன் மேல் வாணன் தாதியரை அனுப்பினான். காதல் பாட்டினால் மனம் கசியாத பாண்டியன், வாணனுடைய பூதத்து அஞ்சியே வேம்பை விடாமல் அணிந்திருக்கிறான் என்று பழிக்கவே, அவன் வேப்பந்தாரைக் கொடுத்துவிட்டான். பின் பூதம் அவனையும் பற்றிக் கொணர்ந்தது என்பது கதை.

இதைத் தொடர்ந்து, மூவேந்தர் தோல்வியும் வாணன் வெற்றியுமாகப் பாடியுள்ள பாடல்கள் பல:

வெற்றிபுனை தாதகிக்கும் வேம்புக்கும் பெண்ணைக்கும்
சுற்றும் பெருநிழலாய்த் தோன்றுமே – கற்றோர்
திறந்தாங்குந் தாங்கும் செகமுழுதும் தாங்கும்
அறந்தாங்கும் தொண்டை யரசு.

பின்வரும் பாடலும் மூவேந்தரைத் தாழ்த்தியும் வாணனை உயர்த்தியும் கூறுவது. ஒரு சமயம் மூவேந்தரும் வாணனைக் காணச் சென்றபோது, அவன் வயலுக்கு உழச் சென்றிருந்தான். அறிந்த வேந்தர் உழவு இழிவு என்றும், அவனை உழவன் என்று கூறியும் பழித்தார்கள். கேட்ட வாணன் மனைவி, பின்வரும் பாடல் பாடி அவர்களுடைய அரசச் செருக்கை அடக்கினாளாம்:

சேனை தழையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
ஆனை மிதித்த அருஞ்சேற்றின் – மானபரன்
மாவேந்தன் வன்கண்ணன் வாணன் புரிந்துநடும்
மூவேந்தர் தங்கள் முடி.

*கேட்ட வேந்தர் வெட்கமடைந்தனர் என்பது வெளிப்படை: இப்பாடலுக்குத் தமிழ் நாவலர் சரிதை வேறு சந்தர்ப்பம் கற்பிக்கிறது: 'இது வாணனுடைய பாணன் மதுரையிற் போனபோது பாண்டியன் தியாகம் கொடுக்க, பாணன் வலக்கையால் அல்லாமல் இடக்கையால் ஏற்கப் பாண்டியன் வாணனை உழவன் என்று இகழ்ந்தபோது பாணன் பாடியது.' வாணனிடத்து வேந்தர் பலரும் வந்து அடிபணிய, அவர்களுடைய பொருள்களை எல்லாம் அவன் வாரி வழங்கிவிட, பெற்றுச்சென்ற புலவரும் பாணரும் வைத்திருக்கும் பொருள்களைக் கண்ட வேந்தர் இது தங்கள் பொருள் என்று சொல்வராம்.*

**என்கவிகை என்சிவிகை என்துவசம் என்கவசம்**
**என்கரியீது என்பரியீது என்பரால் – மன்கவன**
**மாவேந்தன் வாணன் வரிசைப் பரிசு பெற்ற**
**பாவேந்தரை வேந்தர் பார்த்து.**

*இப்படியே புலவராற்றுப்படையாக உள்ள ஒரு பாடல் மிக்க சிறப்புடையது:*

'தேருளைப் புரவி வாரணத் தொகுதி
　திறைகள் கொண்டுவரு மன்ன, நின்
தேய மேதுனது நாமமேது, புகல்.' –
　செங்கையாழ் தடவு பாண, கேள்!
வாரும், ஒத்தகுடி நீரும் நானும், மக
　தேசன் ஆறை நகர் காவலன்
வாண பூபதி மகிழ்ந் தளித்தவெகு
　வரிசை பெற்றுவரு புலவன்யான்;
நீரும் இப்பரிசு பெற்று மீளவர
　லாகும், ஏகும் அவன் முன்றில்வாய்
நித்தி லச்சிகர மாட மாளிகை
　நெருங்கு கோபுர மருங்கெலாம்
ஆரும் நிற்கும் ஒரு வேம்பு நிற்கும், உயர்
　பனையும் நிற்கும், அதனருகிலே
அரசு நிற்கும், அரசைச் சுமந்தசில
　அத்தி நிற்கும் அடையாளமே.

*ஆர், வேம்பு, பனை - சோழ பாண்டிய சேரர். இப்பாடல்கள் யாவும் வெறும் புனைந்துரை என்பது தொடக்கத்தில் கூறிய அரசியல் நிலைமையால் தெளிவாகும். பின்வரும் பாடல்கள் பொதுவாக வாணன் புகழை மட்டும் கூறும்:*

வாணன் புகழ்க் கெல்லை வாழ்த்துவோர் நாவெல்லை
வாணன் புகழ்க் கெல்லை மண்ணெல்லை – வாணன்
படைக்கெல்லை திக்கெல்லை பைந்தமிழ் தேர்வாணன்
கொடைக்கெல்லை யேற்பவர்தங் கோள்.

வாணன் புகழெழுதா மார்புண்டோ, மாகதர்கோன்
வாணன் புகழுரையா வாயுண்டோ, – வாணன்
கொடிதாங்கி நில்லாத கொம்புண்டோ, உண்டோ
அடிதாங்கி நில்லா அரசு.

பேரரசர் தேவிமார் பெற்ற மதலையர்தம்
மார்பகலங் கண்டு மகிழ்வரே – போர்புரிய
வல்லன் அகளங்கன் வாணன் திருநாமம்
எல்லாம் எழுதலாம் என்று.

உலைக்குரிய பண்டம் உவந்திரக்கச் சென்றாற்
கொலைக்குரிய வேழங் கொடுத்தான் – கலைக்குரிய
வாணர்கோ னாறை மகதே சனுக்கிந்தப்
பாணனோ டென்ன பகை.

சேற்றுக் கமலவயல் தென்னாறை வாணனையான்
சோற்றுக் கரிசிதரச் சொன்னக்கால் – வேற்றுக்
களிக்குமா வைத்தந்தான் கற்றவர்க்குச் செம்பொன்
அளிக்குமா றெவ்வா றவன்.

*பின்வரும் பாடல்கள் பாண்டியனைத் தாழ்த்தி வாணனைப் போற்றிச் சொல்வன:*

பாண்டியனைப் பேர்மாற்றிப் பாணற் கரசளித்த
ஆண்டகையென் றுன்னை யறியேனோ – மூண்டெழுந்த
கார்மாற்றுஞ் செங்கைக் கடகரிவா ணாவுனது
பேர்மாற் றுவதரிதோ பேசு.

வாட்டானைத் தென்னவர்கோன் மாகதற்குத் தோற்ற செய்தி
கேட்டானத் தீக்குரலுங் கேட்டதற்பின் – நாட்டம்
பொருந்தா யிரவிழியான் பொன்முடியைச் சாய்த்தங்
கிருந்தானிங் கென்னாகு மென்று.

*பின்வரும் பாடல் அகத்துறையில் அமைந்தது:*

பாணன் மதுரைப் பதியாள வைத்தபிரான்
வாணர் புகழ வருமாறை – வாணன்
கரும்போ தகமேநின் கால்பணிவேன் மீண்டு
வரும்போ தகமே வரின்.

அத்தியாயம் 8

# அம்மானை இலக்கியம்

## முன்னுரை

தொடக்க காலம் முதல் 15ஆம் நூற்றாண்டு இறுதியாக உள்ள கால அளவில் இப்பெயரில் ஓர் அத்தியாயத் தலைப்பு அமைக்கவில்லை. முன்னமே கூறியபடி, இந்த நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் இலக்கிய வளர்ச்சியின் போக்கையொட்டிப் பல புதிய தலைப்புக்களைப் படைத்துக் கொண்டிருக்கிறோம் - சைவ சாத்திர உரைகள், தோத்திர இலக்கியம் என்பன போல. இவற்றுள் அம்மானை இலக்கியமும் ஒன்று. அடுத்த நூற்றாண்டு தொடங்கி இந்த இலக்கியம் மிகவும் விரிவாக வளர்ந்துகொண்டு போகிறது. அவ்வளர்ச்சிக்குத் தோற்றுவாய் இந்நூற்றாண்டிலேயே காணப்படுவதால், இங்கு இவ்விலக்கியப் பிரிவுக்கு ஒரு தனிப் பெயர் கொடுத்து இதை இங்கு ஆராய்கிறோம்.

ஆங்கிலத்தில் 'பாலட்' என்று சொல்லும் கருத்தை இங்கு தமிழில் அம்மானைப் பாடல் என்று பெயர் வைத்திருக்கிறோம். இதற்குக் காரணங்கள் பல. ஒன்று பாடல்களில் அம்மானை என்ற சொல் பயன்படுத்தப்படுவது. மற்றொன்று இது செந்தமிழ் இலக்கியமாக இராமல் சொற்ப எழுத்தறிவுடையவர்களுக் காகச் சொற்ப எழுத்தறிவுடையவர்களே பாடி வைத்த நூல்கள் என்பது. பாமர இலக்கியம் என்றும் இவற்றைச் சொல்லும் மரபு ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவது இந்நூல்கள் பெரும்பாலும் தொடர்ந்து செல்லும் நீண்ட பாடல்கள். நான்காவது நெடுங் கதைப் போக்குடையன. மற்றப்படி, பாமர மக்கள் எளிதில் புரிந்துகொண்டு அனுபவிக்கத்தக்க பாடல்கள். இவையன்றிப் பின்னும் பல இயல்புகள் இவ்வகைப் பாடல்களுக்குப் பொதுத் தன்மையாக உள்ளன. அவை யாவும் எமது 17ஆம் நூற்றாண்டு

வரலாற்றில் விரிவாகச் சொல்லப்பெறும். அவற்றை இங்கு விரிக்கவோ விளக்கவோ இல்லை.

ஆயினும் ஒன்று. இவ்வகைப் புது இலக்கியப் பிரிவுக்கு வித்து இப்பதினாறாம் நூற்றாண்டில் இடப்பட்டது என்று கருதுகிறோம். மூவரம்மானை என்ற ஒரு நூல் இக்காலத்தில் செய்யப்பட்டது என்ற முடிவோடு அதை விளக்கமாக இனிக் கூறுவோம்.

## மூவர் அம்மானை

### முன்னுரை

நெடுங்காலமாய்ப் புலவரும் பாமரமக்களும் விரும்பிப் பயின்று வாய்மொழியாகவே சொல்லிக் கொண்டு வரும் பாடல் களையுடைய நூல். 100 பாடல்களுக்கு அதிகமாக உடையது. பாடல்கள் இடைமடக்காய் நான்கடியின் மிக்கு வந்த கலித் தாழிசை. இரண்டாமடி மூன்றாமடியாக மடக்கியும் நான்கா மடியில் சொல்லிய பொருளை ஐந்தாம் அடியில் சிலேடையாக விளக்கியும் பாடல் அமையும். மூன்று பெண்கள் கழங்கோ சோகியோ வைத்துக்கொண்டு ஆடுவதால் மூவர் அம்மானை எனப் பெயர் பெற்றது. முதல் பெண் இரண்டு அடிகளால் ஒரு செய்தியை உரைக்கிறாள். அவள் சொன்ன ஈரடிகளில் இரண் டாமடியை மடக்கி, இரண்டாம் பெண் ஒரு வினா எழுப்பு கிறாள். இவ்வினாவுக்குச் சிலேடையாக மூன்றாவது பெண் விடை கூறுகிறாள். இதை ஒரு பாடலை எடுத்துக்காட்டி விளக்கலாம். பழைய பதிப்புக்கள் பலவற்றிலும் முதல் பாடலாக வரும் பாடல்:

**ஈசன் பசுவாகி ஏமன் இளங் கன்றாகி**
**வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார் அம்மானை.**

இவ்வடிகள் திருவாரூரில் ஆட்சி புரிந்த மனுநீதிச் சோழன் வர லாற்றைக் குறிப்பிடுகின்றன. ஆரூர் வீதியில் வந்தவர் ஈசன், கன்று யம தருமராசன். இனிப் பின்னிரு அடிகள்:

**வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார் ஆமாகில்**
**காசளவு பால்தான் கறக்குமோ அம்மானை?**

இந்தப் பசுவும் கன்றும் வரினும், பசு பால் கறக்குமா? காசளவு (சொற்பம்) பால்தான் கறக்குமா என்பது இரண்டாம் பெண்ணின் கேள்வி:

**கன்றை உதைகாலி கறக்குமோ அம்மானை.**

ஈசன் யமனைத் திருக்கடவூரில் காலால் உதைத்து மாய்த்தார். ஆகவே கன்றை உதைக்கிற பசு (காலி) கறக்காது என்பது மூன்றாவது பெண் தரும் விடை. இந்த முறையிலேயே நூலின் பாடல்கள் யாவும் அமைந்திருக்கும்.

இந்நூல் குஜிலிப் பதிப்பாகப் பலமுறை காலணாவிலையில் வெளிவந்திருக்கிறது. அப்பதிப்புக்களில் பிழைகள் மலிந்திருக்கும். பாடல்கள் 100க்கு மேலும் உள்ளன. ஏடுகளில் பின்னும் சில பாடல்கள் உள்ளன. தொன்னூல் நிலையத்தார் ஒரு பதிப்பு வெளியிட்டனர். இதற்கும் முன் அச்சுப் பதிப்புக்களுக்கும் வேறு பாடு அதிகம். இதைத் தழுவிக் காசிமடத்துப் பதிப்பொன்று 1953 இல் வெளிவந்தது. அங்கு 'இந்நூல் ஒருவரால் பாடப்பெற்றதாக அறிதற்கில்லை. பல கலம்பகங்களில் உள்ள பல அம்மானைப் பாடல்களை எடுத்துத் தொகுக்கப் பெற்றிருக்கலாம் என ஊகிக்க இடமிருக்கிறது எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. இக் கருத்தை ஆராய்ந்து முடிவு செய்த பின், மேல் நூல் பற்றிய செய்திகளை ஆராயலாம்.

### முன் உள்ள அம்மானைக் குறிப்புக்கள்

முதலாவதாகச் சிலப்பதிகாரத்தில் இந்த அமைப்புக் காணப் படுகிறது. அங்கு வாழ்த்துக் காதையில் நான்கு அம்மானைப் பாடல்கள் உள்ளன. ஆனால், மேலே காட்டியபடி கேள்வியும் விடையும் சிலேடையும் இல்லை; ஆடுகிற பெண்கள் மூவரே. நான்கு பாடல்களும் சோழனுடைய புகார் நகரத்தைப் பாடு கின்றன. மூன்று முன் விளக்கியபடி ஐந்தடியாயிருக்க. நான்காம் பாடல் ஆறடியாய், நான்காமடி ஐந்தாம் அடியாய் மடக்கி வருகிறது. இப்பாடல்களுக்கு இங்கு அம்மனை வரி என்று பெயர் (வரி - இசைப்பாட்டு).

**அம்மனை தங்கையிற் கொண்டங் கணியிழையார்**
**தம்மனையிற் பாடுந் தகையேலோ ரம்மானை.**

**தம்மனையிற் பாடுந் தகையெல்லாந் தார்வேந்தன்**
**கொம்மை வரிமுலைமேற் கூடலே அம்மானை.**

**கொம்மை வரிமுலைமேற் கூடிற் குலவேந்தன்**
**அம்மென் புகார் நகரம் பாடேலோ ரம்மானை.**

இது நாலாம் பாட்டு.

*இவ்வம்மானைப் பாடலுக்கு ஒரு பெருஞ்சிறப்பு மாணிக்க வாசகரால் கிடைத்தது. திருவாசகத்தின் எட்டாம் பதிகமாகத் திருவம்மானை என்ற பெயரில் அவர் இருபது பாடல் பாடினார். பாடல் ஒவ்வொன்றும் இறுதியில் அம்மானாய் என்ற சொல் லைப் பெற்றுச் சிவபெருமானைத் துதிப்பதாக மட்டும் உள் ளது. விளையாட்டு உண்டு, மூவர் விளையாட்டாய் அங்கு தெரியவில்லை.*

*அடுத்து, பத்தாம் நூற்றாண்டில் பன்னிருபாட்டியல் என்ற இலக்கணம் தொகுத்தவர், அம்மானை என்பது கலம்பகத்தின் இன்றியமையாத உறுப்புக்களுள் ஒன்றாகச் சூத்திரம் செய்தார். பின்வந்த பாட்டியல் இலக்கண நூல்கள் இதைத் தழுவியே கூறின. ஆனால் ஒன்பதாம் நூற்றாண்டில் எழுந்த நந்திக்கலம்ப கத்தில் அம்மானை உறுப்புக் காணப்படவில்லை. 11ஆம் நூற் றாண்டுத் தொடக்கத்தில் எழுந்த ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்திலும் இவ்வுறுப்பு இல்லை. (ஆனால் இக் கலம்பகம் 49 பாடல்களே பெற்றிருப்பதால் அபூர்த்தி என்ற கருதத்தக்கது.) அடுத்து 14ஆம் நூற்றாண்டில் இரட்டைப் புலவர் பாடிய தில்லைக் கலம்பகம் திரு ஆமாத்தூர்க் கலம்பகம் என்ற இரண்டிலும் முன்காட்டியபடி மூவர் பாடுவதாகிய கலம்பக உறுப்பு சிலேடை பொருந்த அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் அடுத்த நூற்றாண்டில் எழுந்த திருக்கலம்பகம் என்ற சைனக் கலம்பகத்தில், இந்த அமைப்பு இல்லாமல் அம்மானைப் பாட்டு வேறுவிதமாய் இருக்கிறது. பாடல் பின்வருவது (26):*

**ஓத நெடும்புவி யொன்றெற நின்ற முதற் பொருளம்மானை**
**ஒற்றை நெடுந்தரு மச்சுடர் நேமி உயர்த்தவன் அம்மானை**
**ஏத முனிந்தியல் வேத மொழிந்த பரம்பரன் அம்மானை**
**இந்திரர் தந்தொழில் வந்திவ னன்பரைஏத்துதல் அம்மானை**
**காத மகன்றொரு காதரை சென்று நிமிர்ந்தலர் தோடுதொறும்**
**கானமுரன்றறு கால்பருகுங்கமழ் கண்ணிறை தண்ணளினப்**
**போதகமல்லது போதக மேறுவ தொன்றிலவன் அம்மானை**
**போதிலிவன்சரண் அல்லதெவன்சிலபோற்றுவது அம்மானை.**

*இது சந்தப்பாடல்: கலம்பக இலக்கணத்தில் சொல்லப்பட்ட அமைப்புடையதன்று. பாதி அடிதோறும் அம்மானை என்ற சொல்லை அமைத்துப் பாடுவது. பெண்கள் கேள்வியும் விடையும் என்ற அமைப்பு இங்கு இல்லை. இவ்வாறு இந்நூலாசிரியர்*

*அமைத்திருப்பதற்கு மூலம் யாப்பருங்கலவிருத்தியில் காணப் படும் ஓர் அம்மானைப் பாடல் என்று கருதலாம்:*

சேயரி நாட்டமும் செவ்வாயும் அல்குலுமோ – அம்மானாய்
ஆய்மலருந் தொண்டையும் ஆழியந்திண்டேரும் – அம்மானாய்
மாயிருந் தானை மயிடன் தலையின்மேல் – அம்மானாய்
பாயின சீறடிப் பாவை பகவதிக்கே – அம்மானாய்.

*இது நான்கடி வெளிவிருத்தம். பகவதியைத் துதிப்பது ஆயி னும் யாப்பருங்கலவிருத்தியுரையிற் காட்டியமையால், திருக் கலம்பக ஆசிரியர் தாமும் இதுபோல் வேறுவகை விருத்தத் தால் அம்மானையைத் தனிச் சொல்லாக நிறுத்திப் பாடல் பாடினார் என்று கருதலாம்.*

### அம்மானை இலக்கணம்

*அம்மானையமைப்பு எல்லாப் புலவர்களையும் இதில் ஈடுபடச் செய்திருக்கிறது. மாறனலங்கார ஆசிரியரே இவ்வகை அம்மானைப் பாடல் அமையும் முறைக்கு இலக்கணம் சொல் கிறார் (சூ: 267).*

அம்மானை கைக்கொண்டு ஆடுநர் தம்மையும்
அம்மானை யாய்மதித்து ஆங்கொர் கர்த்தாவினை
நிந்தாத் துதிதுதி பெறநிகழ்த் துதலும்
அந்தா தித்திடை யடிமடக் காகவும்
ஈற்றடி யிரட்டுற இசைத்ததைத் தாபித்து
ஆற்றலின் அமைக்கும் அம்மனைமடக் கொன்றுள.

*இவர் காலத்துக்கு முன் பல கலம்பகங்களில் இவ்வாறு அம்மனை மடக்குப் பாடப் பெற்றிருத்தலை அறிந்து இவர் அதை இலக்கணத்துள் அமைக்கிறார். தாமும் தம் வழக்கம்போல் இவ்விலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக இரு பாடல்கள் செய்திருக்கிறார். ஒன்று பின்வருமாறு (753):*

தெண்டிரைப்பார் போற்றும் திருவெள் ளறைமாயன்
கண்டளவில் நீடுகஞ்சக் கண்ணாளன் அம்மானை
கண்டளவில் நீடுகஞ்சக் கண்ணாள னேலமுதுட்
கொண்ட பரிகலமும் கொட்டினானோ அம்மானை
கொட்டினது முண்டு குழிதாலம் அம்மானை.

*உரையாசிரியர் இந்தச் சிலேடையை விளக்கி உரை எழுதுகிறார். 'கஞ்சக் கண்ணாளன் என்பது தாமரை போலும் கண்களை*

யுடையா னென்றும் வெண்கலங் கொட்டும் கன்னுவனென்றும் சிலேடை நிந்தாத்துதி யாயிற்று. கொட்டினது என்பது உண்டுமிழ் தலும் தட்டுதலும்; குழிதாலம் என்பது உண்டு குழிக்கப்பட்ட பூமியும் குழிதாலமான உண்கலனுமாம்' என்பது காண்க.

பிள்ளைத்தமிழில் அம்மானைப் பருவம் என்ற ஒரு பருவம் பிற்காலத்தில் பெண்பாற் பருவத்தில் அமைக்கப் பெற் றிருக்கிறது. பன்னிருபாட்டியல் பெண்பாலுக்கு அம்மானைப் பருவம் கூறவில்லை. பின்னால், குமரகுருபரரே முதன் முதலாக மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் அம்மானைப் பருவம் பாடியிருக்கிறார்.

## தொகுப்பு நூல்

இந்த நெறியில் மூவர் அம்மானையை நாம் கருதும்போது, இரு கருத்துக்களைக் கருத வேண்டியிருக்கிறது. ஒன்று அது ஒரு தொகுப்பு நூல் என்பது; இரண்டு அது ஓராசிரியரால் செய்யப் பெற்ற ஒரு தனி நூல் என்பது, முதலாவதாகத் தொகுப்புநூல் என்ற கருத்தை ஆராய்வோம். காசிமடத்துப் பதிப்பில் 100 பாடல்கள் உள்ளன. இவற்றுள் 50 பாடல்கள் தலங்களைச் சார்த்திப் பாடப்பெற்றவை, மற்ற 50 தலச் சார்பில்லாமல் பொதுவான சமயக்கருத்தை உள்ளடக்கியவை. தலச் சார்பான பாடல்களில், சில தலங்களுக்குப் பல பாடல்கள் உள்ளன: அரங்கம் 4, அருணை காளத்தி 3, தில்லை 9, புள்ளிருக்கு வேளூர் 3, மதுரை 7. இங்கு சிவத்தலங்களும் திருமால் தலங் களும் வேற்றுமையில்லாமல் பாடப்பட்டிருப்பதைக் காணலாம். இப்பாடல்களுள், அரங்கம் (33), அருணை (86), காசி (77) தில்லை (91) புள்ளிருக்குவேளூர் (63), மதுரை (96) வெங்கை (81) ஆகிய தனிப்பாடல்கள் மட்டும் அவ்வத் தலத்துக்குரிய கலம்பகத்துள் காணப்படுகின்றன. (காலம் தில்லை 14ஆம் நூற்றாண்டு, அருணை 16, ஏனையவை 117). இதனால் இப்பாடல்கள் கலம்பகங் களிலிருந்து எடுக்கப்பட்டமை தெளிவு. இவைபோலவே பிற பாடல்களும் தலங்களுக்குரிய கலம்பகங்களிலிருந்து எடுக்கப் பட்டிருக்கலாம்; அக்கலம்பகங்கள் இன்று இல்லாது போயின என்று சொல்லப்பெறுகிறது. இதற்குத் தடையாகப் பல கருத்துக்கள் சொல்லத்தகும்.

ஒன்று மேற்குறிப்பிட்ட ஏழு தலங்கள் நீங்கலாய்ப் பிற தலங்கள் 20. இவ்விருபதுக்கும் கலம்பகங்கள் எழுந்திருந்தன என்று எங்குமே வழக்கில்லை. (கச்சி ஒன்றுக்கு மட்டும் கச்சிக்

கலம்பகம் 16ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்றிருந்தது, இன்று இல்லை என்ற வழக்குண்டு.) ஆகவே இக்கலம்பகங்களிலிருந்து பாடல்கள் திரட்டப்பட்டன என்பது பொருந்தாத செய்தி. இரண்டாவது, ஒரே தலத்தின் மீது பல பாடல்கள் உள்ளன. கலம்பகம் இருந்திருந்தால் ஒரு பாடல் தான் இருக்கும். (திருவாமாத்தூர்க் கலம்பகத்தில் ஆசிரியரான இரட்டைப் புலவரே இரு பாடல் பாடியிருக்கிறார். இது அபூர்வம்.) ஆகவே, பல பாடல்களும் தனியாகவே புனைந்து பாடிச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமேயன்றி, கலம்பகத்திலிருந்து திரட்டியிருத்தல் இயலாது.

## தனி நூல்

இனி தனிநூல் என்ற கருத்து. மூவர் அம்மானை ஒரு தனி நூலாகச் செய்யப்பெற்றது என்று கருதுவதே பொருத்தம். ஒரு புலவர், சிலேடைச் சுவையில் மிகவும் தோய்ந்தவர், தாமும் அவ்வாறு பாடவேண்டும் என்ற எண்ணம் கொண்டு இந்நூல் பாடினார், சைவ வைணவ பேதமில்லாமல் பாடினார், பல தலங்களையும் குறிப்பிட்டுப் பாடினார், பாடல்களில் பாதிக்கு மேல் தலக் குறிப்பில்லாமல், தத்துவக் கருத்து அமையும்படி பாடினார் என்று கொள்வதே சிறப்பு.

## காலம்

பல காரணங்களால் இந்நூல் 16ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் செய்யப்பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு. இதனுள் 17ஆம் நூற்றாண்டுக் கலம்பகங்களின் அம்மானை பாடல்கள் சில காணப்படுகின்றன என்று முன்னமே குறிப்பிட்டோம். இது சற்றே தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டிய பொருள். அரங்கம், புள்ளிருக்குவேளூர், காசி, மதுரை, வெங்கை ஆகிய கலம்பகப் பாடல்கள் 17ஆம் நூற்றாண்டுக்குரியவை. இப்பாடல்கள் மூவரம்மானையுள் காணப்படும்போது இந்நூல் இவற்றுக்கும் பிற்பட்ட 18ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்க வேண்டுமேயன்றி, முற்பட்ட 16ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்க முடியாது என்று தான் நாம் சாதாரணமாய்க் கருதுவோம். ஆனால் ஒன்று. பழைய குஜிலிக்கடைப் பதிப்புகளில் கலம்பகப் பாடல்கள் இல்லை; காசி, மதுரை, தில்லை, புள்ளிருக்குவேளூர், வெங்கை முதலான பாடல்கள் இல்லை. ஆகவே இவை பிற்காலத்தில் சேர்க்கப்பட்டன என்று தெரிகிறது. தலங்களைக் குறிப்பிட்டு ஆசிரியர் இத்தகைய சிலேடைப் பாடல்களைப்

பாடியிருப்பதைக் கண்ட பிற்காலத்தவர் தாங்கள் அறிந்த கலம்பக நூல்களிலுள்ள அம்மானைப் பாடல்களையும் நூலோடு சேர்த்துக் கொண்டார்கள். தவிர, ஒரே தலத்துக்குப் பல பாடல்கள் காணப்படுவதும் அவை கலம்பகப் பாடல்கள் அல்ல, தனியாகப் புனைந்து பாடப்பட்ட பாடல்களே என்பதைத் தெளிவாக உணர்த்தும். ஆகவே கலம்பகப் பாடல்களைக் கொண்டு கால நிர்ணயம் செய்ய முடியாது என்பது தெளிவு.

இனி, அல்லியரசாணிமாலை போன்ற சில நூல்கள் இங்கு கருதத்தக்கன. இவை அம்மானைப் பாடல்கள் என்று வழங்கும். இவை வெண்டளையான் வந்த நாற்சீர்களைக் கொண்டிருப்பது ஒன்று. மற்றது, இந்நூல்களில் இடையிடையே இவ் அடிகள் அம்மானை என்று முடிகின்றன; இவ்வாறு முடிவதற்கு எந்தப் பொருத்தமும் இல்லை. மூவரம்மானை போன்ற அம்மானைப் பாடல் நினைவில், இம்முடிவு அமைந்திருக்கிறது என்று மட்டுமே சொல்லலாம். கதைப்போக்குக்கும் இவ்வமைப்புக்கும் சம்பந்தம் இல்லை. அம்மானை என்று முடிந்தால் பாமர மக்களுக்கு உவப்பாயிருக்கும் என்ற எண்ணத்தில் இவை இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைக்கப்பட்ட பாடல் நூல்களில் இராமப் பையன் அம்மானையும் ஒன்று. தளவாய் இராமப்பையன் திருமலை நாயக்கர் படையைச் சேதுபதிமீது நடத்திச் சென்று வெற்றி பெற்றதை இந்நூல் பாடுவது. இதன் காலம் 1640ஐ ஒட்டியிருக்கலாம். இவ்வம்மானையில் அல்லியரசாணிமாலை போன்ற நூலைத் தழுவி நடைப்போக்கு அமைக்கப்பட்டது. இம்மாலைக்கு முன்மாதிரியாயிருந்தது மூவரம்மானை என்பது ஒப்புக் கொள்ளக்கூடியதே. மாலையின் காலம் 1600க்குச் சற்று முன்பின்னாகலாம். மூவரம்மானையின் காலம் 1575-1600 ஆதல் பொருந்தும். முன்காட்டியபடி இதற்கு முன்னிருந்த கலம்பகங் களாகிய தில்லைக் கலம்பகம், திருவாமாத்தூர்க் கலம்பகம், அருணைக் கலம்பகம் என்பவற்றுள் கண்ட அம்மானை யுறுப்புக்கள் இதற்கு முன்மாதிரியாயிருத்தல் கூடும்.

### ஆசிரியர்

இந்நூலாசிரியர் பெயர் தெரியவில்லை என்பதே சொல்லத் தக்கது. ஆயினும் 1897இல் தில்லைக் கலம்பகம் அச்சிட்ட முருகேச முதலியார், அக்கலம்பகம் செய்த இரட்டைப் புலவரே

மூவரம்மானை பாடியவர் என்று விளக்கமாக எழுதியிருக்கிறார். இரட்டையர் செங்குந்த மரபினர் என்பது வரலாறு. இம் முதலி யாரும் அம்மரபினரே. அபிமானம் பற்றி எழுதினார் என்று கருத இடமுண்டாயினும், சில கருத்துக்கள் மேலும் ஆராயத் தக்கன. இரட்டைப் புலவர் இருவர், ஒருவர் முதல் பாதி பாட, மற்றவர் பிற்பாதி பாடுவது இயல்பு. இவ்வியல்பு அவர்கள் பாடியுள்ள தனி வெண்பாக்களுள் நன்கு புலப்படும். அவர் களுடைய தனி வரலாற்றுக் குறிப்புக்களும் இதை நன்குணர்த் தும். எனினும், இரு கலம்பகங்கள் உலா போன்றவற்றை இவர் கள் எம்முறையில் பாடினார்கள் என்பதற்கு விளக்கமில்லை.

இனி, இவ்வம்மானைப் பாடல்களை இவ்விருவருமே பாடினர் என்றால், முன்னிரு வரிகளை ஒருவர், அடுத்த இரு வரிகளை இரண்டாமவர், மீண்டும் ஐந்தாம் வரியை முதலாம வர் என்ற முறையில் பாடினார்கள் என்று கொள்ளத்தகும்.

இதுபற்றி இங்கு இரு குறிப்புக்கள் சொல்லத்தக்கன. காசி மடத்துப் பதிப்பிலில்லாத பின்னும் பல பாடல்கள் உள்ளன என்று முன்னமே குறிப்பிட்டோம். முருகேச முதலியார் ஐந்து பாடல்களைத் தருகிறார். அவற்றுள் இரு பாடல்கள் அப் பதிப்பில் இல்லை - சித்தம்பூர் வாழும் சிவன், இப்பூமி தன்னில் இயல்பாம் திருத்தணி என்பன. முதல் பாடல் மூத்த பிள்ளை யாரையும் இரண்டாம் பாடல் இளைய பிள்ளையாரையும் போற்றுவன. இவர்களுக்கும் பாடல் இருக்கட்டும் என்று பிற் காலத்தில் இவை புனையப்பட்டன போலும். பின்னும் புதியன சில - மட்டுவார் கூந்தல், வில்வந் திரச்சடிலம், அடர்ந்து வாழுங் குடந்தை ஆராவமுதர், பாட்டு வரிச்சுரும்பர், ஒற்றியூர்த் தியாகேசர் என்பன குறிப்பிடத்தக்கவை.

இனி இரண்டாவது கருத்து. இரட்டையரே மூவரம்மானை பாடினர் என்ற கருத்துப் பலராலும் சொல்லப்பட்டிருக்கிறது. இது மேலும் ஆராயத் தகுந்தது. இது கொள்ளப்படுவதாயின் இந்நூலின் காலம் அவர் காலமாகிய 14ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகும்; இது முடிவான பொருளல்ல, பின்னும் ஆராயத்தக்க பொருள். 'பாணந்தான் மண் தின்ற பாணம்' என்ற வரியைப் பாடிய காளமேகப் புலவர் இறந்தபோது இரட்டையர் வருந்திப் பாடினார்களென்று ஒரு வரலாறு உண்டு. இவ்வரியைப் பொருளாகக் கொண்ட ஒரு பாடலும் மூவரம்மானையில் காணப்படுகின்றது;

நாணென்றால் நஞ்சிருக்கும் நற்சாபங் கற்சாபம்,
பாணந்தான் மண்தின்ற பாணங்கான் அம்மானை,
பாணந்தான் மண்தின்ற பாணமே யாமாயின்
சேணார் புரமெரித்த சேவகமே தம்மானை,
சேவகத்தைச் சொல்லச் சிரிப்பலவோ அம்மானை.

நூல்

*இதுவரை சொல்லிய செய்திகளால் மூவரம்மானை பற்றிய செய்திகள் பல விளங்கியிருக்கும். பின்னும் சிலவே சொல்லத்தக்கன. விநாயகரைக் குறித்த பாடல்கள் இரண்டு (1,29) முருகனைக் குறித்தவை மூன்று - 117 சிவமலை 34 விராலி மாலை, தனி 42. திருவரங்கம் அல்லாமல் திருமாலைக் குறித்த பாடல் திருமுட்டம் (2) நூலின் இடைப் பகுதி முழுமையும் தலக் குறிப்பில்லாத பாடல்கள், மெய்க்குரு, சாதி, குலம், கல்லை வணங்குதல், பற்றறுதல், வாசி, அருள் உயிருக்குயிராயுள்ள இறைவன், வெண்ணீறு முதலான பொருள்களைப் பேசுகின்றன. தலக் குறிப்புடைய பாடல்கள் யாவும் சிலேடையாயிருக்க, இப் பாடல்களில் இரட்டுற மொழிதல் குறைவு. இறுதியடியில் கூறும் கருத்து, முன் அடிகளில் சொன்ன கருத்தைத் தழுவியே வருகிறது. இத்தன்மைக்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடல்கள் காணத்தக்கன.*

நாட்டிலுள்ள கல்லையெல்லாம் நன்றாக வேதிரட்டிக்
காட்டியுரு ஆக்குவித்தும் குருவறியார் அம்மானை
காட்டியுரு ஆக்குவித்தும் குருவறியார் ஆமாகில்
ஏட்டிலுள்ள பாட்டையெல்லாம் எடுத்துரைத்தார் அம்மானை
எடுத்துரைத்தால் பயன் அவற்றால் எய்துவரோ அம்மானை.

வாசிக்குள்ளாகி மயங்குகின்ற பேதையர்கள்
வாசிதனைக் கட்ட வகையறியார் அம்மானை.
வாசிதனைக் கட்ட வகையறிவார் ஆமாகில்
தேசிகனைக் கண்டு தெரிசியார் அம்மானை
தெரிசிப்பார் சித்தர் சிவபத்தர் அம்மானை.

உள்ளத்தி னுள்ளே ஒளித்திருக்கும் உத்தமனை
கள்ளத் திருக்கறுத்துக் காண்பாரோ அம்மானை
கள்ளத் திருக்கறுத்துக் காண்பாரே ஆமாகில்
தள்ளப்படா தென்றவினை தள்ளுவரோ அம்மானை
தள்ளுவரே தாமிருக்கும் தலமறிவார் அம்மானை.

இடையிலுள்ள பாடல் சித்தரைக் குறிப்பிடுகிறது. ஒரு தொகுப்பாக இந்நூல் பற்றி முடிந்த கருத்துக்கள் சில சொல்லலாம். மூவரம்மானைப் பாடல்கள் மிகவும் பழைமையான பாடல் தொகுப்பு. அல்லியரசாணிமாலை, இராமப்பையன் அம்மானை என்பவற்றின் கால அமைதி கொண்டு இந்நூல் 16ஆம் நூற்றாண்டுக்குரியதென்று சொல்ல முடியும். இதனுள்ளமைந்த தலக் குறிப்பில்லாத பாடல்களின் பொருளமைதியைக் கொண்டு இதைச் செய்தார் ஒரு சித்தராயிருக்கலாம் என்று நாம் கருதக் கூடும். தலக்குறிப்புள்ள பாடல்களில் பழமையானது தில்லைக் கலம்பகப் பாடல். அடுத்தது 16ஆம் நூற்றாண்டுக்குரிய திருவருணைக் கலம்பகப் பாடல். இவைபோக மற்றத் தலப்பாடல்களிற் சில பிற்காலத்தில் இடைச்செருகலாகச் சில கலம்பகங்களிலிருந்து எடுத்து நுழைக்கப்பட்டவை. (தலப் பாடல்கள் எல்லாமே கலம்பகத்திலிருந்து எடுக்கப்பட்டவையல்ல. அத்தனைக் கலம்பகங்கள் இருந்ததாக வரலாறு இல்லை.) இந்த அம்மானைப் பாடலே அல்லியரசாணிமாலை போன்ற நீண்ட கதைப்பாடலுக்கு வழி காட்டியிருக்கிறது. இந்த நூலைச் செய்தார் இரட்டையராயிருக்கலாம் என்ற கருத்து மேலும் ஆராயத் தகுந்தது.

அம்மானைப் பாடல் எல்லாப் புலவர் மனத்தையும் கவர்ந்திருக்கிறது என்பதற்குப் பின்னும் சில உதாரணங்கள் காட்டலாம். குருஞான சம்பந்தருடைய முத்தி நிச்சயத்துக்குப் பேருரை எழுதிய வெள்ளியம்பலவாணத் தம்பிரான் தொல்காப்பியத் தேவர் செய்த திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்துள்ள அம்மானைப் பாடலை எடுத்துக் காட்டுகிறார்.

> இன்ன திதுவென் றிறைவன் திறமதனைச்
> சொன்ன மறையும் துணிந்திலகாண் அம்மானை
> சொன்ன மறையும் துணியாப் பரம் பொருளைக்
> கன்னி வனத்திடையே காணலாம் அம்மானை
> கண்டாற் பிறிதொன்றும் காணார்காண் அம்மானை.

பிற்காலத்தில் காஞ்சியருகிலுள்ள திருக்குரங்கணில் முட்டம் என்னும் தலத்துக்குப் புராணம் பாடிய பெயர் தெரியாத ஆசிரியர் தம் புராண முடிவில் இதே அமைப்பில் மூன்று அம்மானைப் பாடல்கள் பாடியிருக்கிறார்:

செப்பரிய குரங்கணில் முட் டத்திறைவன் செட்டிதனக்கு
ஒப்பரிய அந்தணனாய் உதவினன்காண் அம்மானே
ஒப்பிலந் தணனாகி உதவிலனே யாமாகில்
தப்பலவோ சத்தியநா மந்தரிப்ப தம்மானே
தாயிறையாள் அருகிருக்கத் தனக்கரிதோ அம்மானே.

பொய்யா மலையனுக்குப் பூதலத்தில் ஒருநாமம்
கொய்யா மலையென்று கூறுதென் னம்மானே
கொட்டாப் புளியாலே கொய்யா மலையனென்று
திட்டாந் திரமுண்டு திருமேனிக் கம்மானே
திருமேனி சுயம்பாலே தெளிந்தனர்கான் அம்மானே.

கன்னியிறை யாளம்மை கடுங்காலத் தெவ்வுயிர்க்கும்
அன்னமளித் திட்டதுவும் ஆறறிவார் அம்மானே
அறியாரே யாமாகில் அன்னபூரணி யென்று
குறியாக ஒருநாமம் கொள்ளுவளே அம்மானே
குவலயத்தில் வந்தின்னும் கூட்டுணல்சான் றம்மானே.

*இப்பாடல்களில், ஒரே பாடலில் எதுகை மாறியிருப்பதும், அம்மானே என்று முடிவதும் நோக்கத்தக்கன.*

❖❖❖

## அத்தியாயம் 9

# உரைநடை

தொடக்க காலத் தமிழ் உரைநடை நூல்கள் யாவும்; பண்டை நூல்களுக்கு எழுந்த உரைகளாகவே அமைந்திருந்தன. இந்த நிலையை முந்திய நூற்றாண்டு வரலாறுகளில் விளங்கக் கண்டோம். இப்புத்தகத்தின் முதல் அத்தியாயம் முதல் நான்கு பக்கங்களில் இதுபற்றிச் சிறிது சொல்லப்பட்டுள்ளது. இது காறும் வந்த நூல்களில் உரைநடை இலக்கியம் ஏறக்குறைய இல்லை என்றே சொல்லவேண்டும். முன்வந்த உரை - உரைநடை களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. இலக்கண உரைகள்-எட்டாம் நூற்றாண்டு, இறையனார் களவியல் உரை வாய்மொழியாக வந்து பத்தாம் நூற்றாண்டில் எழுதி வைக்கப்பட்டது. 11ஆம் நூற்றாண்டில் யாப்பருங்கல விருத்தியுரையோடு இலக்கண உரைவளம் பெருகுகிறது.

2. இலக்கிய உரைகள் - 10ஆம் நூற்றாண்டில் மணக்குடவர் திருக்குறள் உரையோடு இவை பெருகுகின்றன.

3. செய்யுளும் உரைநடையும் கலந்த இலக்கியம் - 9ஆம் நூற் றாண்டில் எழுந்த பெருந்தேவனார் பாரத வெண்பாவினால் தான் இவ்வகை இலக்கியம் எழுகிறது.

4. மணிப்பிரவாள உரைநடை- தமிழும் வட சொற்களும் கலந்து எழுந்த ஒரு புது நடை. 12ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதல் முதலாக இந்தத் தமிழ் நடையைத் தோற்றுவிக்கிறார். 16ஆம் நூற்றாண்டு வரையில் இது வளர்ந்து வருகிறது. 17ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இது மங்கி விடுகிறது. இந் நடையைக் கைக்கொண்டோர் பெரும்பகுதி வைணவ வியாக்கியானக்காரர். சிறு பகுதி சைனர்.

5. சைவ சாத்திர உரைகள் - 14 ஆம் நூற்றாண்டில் இருபா இருபது என்ற சைவ சாத்திரத்துக்குச் சீகாழித் தத்துவ

நாதர் எழுதிய உரை தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரை உரைகள் வளர்ந்து வந்திருக்கின்றன. இவையாவும் சிறந்த தமிழ்நடைக்கு எடுத்துக்காட்டு. சிவஞான சுவாமிகள் போன்றோர், கடுந்தமிழ் நடையாகவும் எழுதியுள்ளனர். சிவாக்கிரயோகிகள் ஒருவரே 16ஆம் நூற்றாண்டில் மணிப்பிரவாள உரை எழுதினார். திருவண்ணாமலை ஞானப்பிரகாசரும் வடமொழி அதிகம் பெய்து எழுதியவர். ஏனையோர் நல்ல தமிழ் நடையே எழுதியுள்ளனர்.

இருப்பினும், உரைநடையிலேயே தமிழ் நூல் வரத்தொடங்கவில்லை. எழுத்தென்றால், எல்லாம் செய்யுளே; பொருள் எதுவாயினும் நடை, செய்யுள் ஒன்றே. பாடலுக்கு உரை சொல்லுமிடமொன்றில்தான் உரைநடையாகிய வசனம் எழுதப்படுகிறது.

இந் நூலாராய்ச்சியில் ஆங்காங்கு உரைநடைப் பகுதிகளை மேற்கோளாக எடுத்துக் காட்டியிருக்கிறோம். உரைநடை வளர்ச்சியை ஆராய இவை துணை செய்யும்.

ஆசிரியர் பெயர் தெரியாத திருவுந்தியார் திருக்களிற்றுப் படியார் பொழிப்புரை 1575 - 1600: பேச்சு நடையை யொட்டி எளிய கதைப் போக்காயமைந்த நடை.

சைவ எல்லப்ப நாவலர்-சௌந்தரிய லகரி உரை; சாத்திரப் பொருள்; பொருள் கடினமாயினும், வடமொழிக் கலப்பிருப்பினும், எளிய நடை 1550 - 75.

மறைஞான தேசிகர்-எளிய நடை 1525 - 50.

சிவாக்கிரயோகி-மணிப்பிரவாளம் 1550 - 75.

திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் 1550 - 1575.

நிரம்ப அழகிய தேசிகர் எளிய நடை 1550 - 75.

வைணவத்தில், பிள்ளை லோகஞ்சீயர்-முழு மணிப்பிரவாளம் 1525 - 50.

நல்ல தமிழுக்கு எடுத்துக்காட்டு-பக்கம் 93 - 95.

பரகால நல்லான் 1550 - 75.

குலோத்துங்க சோழனுலா உரையாசிரியர் (பெயர் தெரியவில்லை) 1575 - 1600: இந்நூற்றாண்டு வரலாறு இரண்டாம் பாகம். சிதம்பரப் பாட்டியல் உரையாசிரியர் 1575 - 1600: மேற்படி நூல். தண்டியலங்கார உரையாசிரியர் 1575 - 1600: மேற்படி நூல். காரி இரத்தினக்கவிராயர் 1550 - 75.

# ஆதார நூல்கள்


**அத்தியாயம்**

1. சித்தாந்த சாத்திர உரைப் பதிப்பு சைவ சித்தாந்த மகா சமாஜம் முதல் பதிப்பு, 1934; இரண்டாம் பதிப்பு 1940. சித்தியார் அறுவருரைப் பதிப்பு கொ. சண்முக சுந்தர முதலியார் 1897 முதல் திருவாவடுதுறை யாதீனப் பதிப்புக்கள். சிவஷெறிப் பிரகாசம் அனவரத விநாயகம் பிள்ளை பதிப்பு 1936. சிவப்பிரகாசம் - அருணந்தி தேவர் உரை, ஏட்டுப் பிரதி.

2. மாறனகப் பொருளும் திருப்பதிக் கோவையும் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு 1932. உபதேசத் திருநாமம் ஓலை ஏடு லீலா திலகம் - மா. இளைய பெருமாள் 1971.

3. பல ஜினதாசர் செய்தருளிய பத்துப் பதிகத் தோத்திரத் திரட்டு 1912.

4. ஆனந்த மாலை ஓலைப் பிரதி, கலைஞான தீபம் - பல பதிப்புக்கள். கருவை அந்தாதிகள் ஆறுமுக நாவலர் பதிப்புக்கள். அருணாசலேசர் தோத்திரப் பிரபந்தத் திரட்டு. பி. வே. நமசிவாய முதலியார். பல பதிப்புக்கள். சூரிய தோத்திரம் - ஓலைப் பிரதி

5. பதினெண் சித்தர் ஞானக்கோவை, வா. சரவண முத்துப் பிள்ளை பதிப்பு-1937. மே வீ. வேணுகோபாலப் பிள்ளை பதிப்பு 1947. பல ஏட்டுச் சுவடிகள்.

6. அருணாசலேசர் பிரபந்தத் திரட்டு, வலிவல மும்மணிக் கோவை - ஐயரவர்கள் பதிப்பு காளத்தி நாதர் உலா - ஐயரவர்கள் பதிப்பு. 1925. சேயூர் முருகனுலா - காகிதப் பிரதி தையூர் உத்தண்டன் கோவை - ஓலைப் பிரதி.

### ஐயரவர்கள் பதிப்புக்கள் கட்டுரைகள்

*மு. இராகவ ஐயங்கார் - பெருந்தொகை, சாசனத் தமிழ்க் கவி சரிதம். சோமசுந்தர தேசிகர் - பதினாறாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலவர் வரலாறு. தமிழ் நாவலர் சரிதை. ரா. ராகவை யங்கார் - சேது நாடும் தமிழும். செந்தமிழ் தொகுதிகள் 20 - 24, 35, தொண்டை மண்டல சதகம்.*

### பயன்பட்ட ஓலை ஏட்டுப் பிரதிகள்

*சிவநெறிப் பரிகாசம், உபதேசத் திருநாமம், ஆனந்த மாலை சூரிய தோத்திரம், தையூர் உத்தண்டன் கோவை, புவனகோசம்.*

### காகிதப் பிரதிகள்

*சிவப்பிரகாசம் அருணந்தி தேவர் உரை, சேயூர் முருகன் உலா, கொக்கோகம்.*

❖ ❖ ❖

## ஆசிரியர் கால ஒப்புமை அட்டவணை

| காலம் | இலக்கியம் உரை | இலக்கணம் உரை | சைவம் | வைணவம் | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| 1475-1525 | | | | திருவேங்கடநாதர் உலா | |
| 1500-25 | வீரன்<br>ஆசு கவிராசன்<br>அரிச்சந்திர புராணம் | மண்டல புருடர்<br>சூடாமணி நிகண்டு<br>பிரபந்த மரபியல் | புராணத் திருமலை நாதர் ஞானமிர்த உரையாசிரியர்<br>கண்கட்டி மறைஞான சம்பந்தர் | செவ்வைச் சூடுவார் பாகவதம்<br>அரிதாசர் - இரு சமய விளக்கம் | கச்சி ஞானப்பிரகாசர்<br>செட்டித் தெரு ஞானப் பிரகாசர். வலிவல மும்மணிக் கோவை<br>பார்த்திபம்<br>தர்க்கபரிபாடை |
| 1525-50 | நாக குமார காவியம் | பரஞ்சோதி<br>சிதம்பரப் பாட்டியல்<br>மாறனலங்காரம்<br>மாறனகப் பொருள்<br>பாப்பாவினம் | வீரை-கவிராச பண்டிதர்<br>சௌந்தரிய லகரி<br>காழி மறைஞான தேசிகர்<br>வரதுங்கராம பாண்டியர்<br>கோயிற்புராண உரையாசிரியர் | அருளாளதாசர் பாகவதம்<br>பிள்ளைலோகம் சீயர்<br>வியாக்கியானங்கள்<br>திருக்குருகைப் பெருமாள்<br>குருகாமான்மியம் | திருவாரூர்த் தத்துவப் பிரகாசர்<br>பாண்டிகவிராசர்<br>குமாரசரசுவதி<br>வாலகோகிலம்<br>கூத்தனூரப்பன்<br>புகலூர் போகநாதர்<br>சட்டைமுனி<br>கொக்கோகம்<br>உத்தண்ட வேலாயுதகவி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1550-75 | அதிவீரராம பாண்டியர் - நைடதம்<br>நிரம்ப அழகிய தேசிகர்<br>சேது புராணம்<br>உலகநீதி<br>சேறை கவிராச பிள்ளை | தண்டியலங்கார உரை<br>சிதம்பரப் பாட்டியல் உரை | திருஒற்றிஞானப் பிரகாசர்<br>வரகுணராம பாண்டியர்<br>குகைநமசிவாயர்<br>எல்லப்ப நாவலர்<br>திருவண்ணாமலை ஞானப்பிரகாசர் | பரகாலநல்லான் | குமாரசுவாமி அவதானி<br>வீரை- அம்பிகாபதி<br>சித்தர்கள்<br>பரமேசுவரப்புலவன்<br>சைனதோத்திரம்<br>மருதவனகவி<br>வீரவெண்பாமாலை |
| 1575-1600 | அனதாரி சுந்தர பாண்டியம்<br>தினகரவெண்பா<br>ஐயம்பெருமாள் கவிராசர்-புரூரவ சரிதை<br>நீதிவெண்பா<br>தையூர் உத்தண்டன் கோவை | ரேவண சித்தர்<br>அகராதி நிகண்டு | ஒற்றியூர் தத்துவப் பிரகாசர், அளகைச் சம்பந்த முனிவர்<br>சிதம்பரநாதகவி<br>குருநமசிவாயர்<br>நந்தி சிவாக்கிரயோகி<br>ஆனந்தக்கூத்தர்<br>ஞானக்கூத்தர்<br>திருச்செந்தூரகவல்<br>உந்தி களிறு<br>பொழிப்புரை<br>குருஞானசம்பந்தர் | கூடற்புராணம் | காசிக் கலியன் கவிராயர்<br>பழனிக்கோவை<br>மூவரம்மானை<br>சூரிய தோத்திரம்<br>சனன கருவிமாலை<br>யோகசாரம்<br>புவனகோசம் |

## ஆசிரியர் பெயர் கால அட்டவணை

16ஆம் நூற்றாண்டு தமிழ்இலக்கிய வரலாறு மூன்று பாகங்களிலும் உள்ள எல்லா ஆசிரியர் பெயர்களும் இங்கு ஒரு சேரத்தொகுத்து அகர வரிசையில் தரப்பட்டுள்ளன, கடைசிப் பத்தியில் பக்க எண்களைக் காணலாம். சில ஆசிரியர் செய்த நூலாராய்ச்சி ஒரே பாகத்திலிராமல் மற்றப் பாகங்களிலும் இருக்கும். பக்க எண்கள் இவ்விரண்டாக உள்ளன-முதல் எண் வரலாற்றின் பாகம், இரண்டாம் எண் அதில் பக்கம். உதாரணம்: அதிவீரராம பாண்டியர் 1:35; 2:36,50; என்று காணும்போது, 16ஆம் நூற்றாண்டு வரலாறு முதல் பாகம் பக்கம் 35, இரண்டாம் பாகம் பக்கம் 36, 50 என்று கொள்ள வேண்டும்.

| ஆசிரியர் பெயர் | நூல்கள் | உடன்காலத்தவர் | காலம் | பக்கம் |
|---|---|---|---|---|
| அகத்தியர் - சித்தர் | ஞானம் முதலியன | | 1550-1600 | 3:193 |
| அதிவீரராம பாண்டியர் | புராணங்கள், நைடதம் | கவிராச பிள்ளை சிதம்பரநாத கவி | 1550-1600 | 1: 35; 2: 36, 50 |
| அம்பிகாபதி, வீரை | நெல்லை வருக்கக் கோவை | கவிராச பண்டிதரின் புதல்வர் | 1550-1575 | 3: 257 |
| அரிதாசர் | இரு சமய விளக்கம் | கிருஷ்ணதேவராயர் | 1500-1525 | 1:291 |
| அருளாளதாசர் | பாகவதம் | | 1525-1550 | 1:249 |
| அளகைச் சம்பந்த முனிவர் | திருவாரூர்ப்புராணம் | நிரம்ப அழகிய தேசிகர் | 1575-1600 | 1: 110 |
| அனதாரியப்பர் | சுந்தர பாண்டியம் | திருவிருந்தான் | 1575-1600 | 1:212 |
| ஆனந்தக் கூத்தர் | திருக்காளத்திப் புராணம் | கமலை ஞானப்பிரகாசர் | 1575-1600 | 1: 121 |
| உலகநாதமுனிவர் | உலகநீதி | கமலை ஞானப்பிரகாசர் | 1525-1550 | 2: 61 |

| | | | | |
|---|---|---|---|---|
| எல்லப்ப நாவலர், சைவ. | அருணாசலபுராணம் | கவிராச பிள்ளை | 1535-1575 | 1:132; 3:225 |
| ஐயம் பெருமாள் | புரூரவ சரிதை | அதிவீரராமர் | 1575-1600 | 2:18 |
| கருவூர்ச் சித்தர் | கருவூரார் பூசாவிதி | | 1550-1575 | 3:199 |
| கவிராசபண்டிதர், வீரை | சௌந்தரிய லகரி | எல்லப்ப நாவலர் | 1530-1560 | 3:136 |
| கவிராச பிள்ளை, சேறை | திருக்காளத்தி நாதர்உலா | அதிவீரராமர் | 1550-1600 | 3:239 |
| காரி ரத்தினக் கவிராயர் | மாறனலங்கார உரை | திருக்குருகைப் பெருமாள் | 1550-1575 | 2:150 |
| காக புசுண்டர் | குறள் | | 1550-1575 | 3:204 |
| காசிக் கலியன் கவிராயர் | குடைமங்கலம் முதலியன | அதிவீரராம பாண்டியர் | 1575-1600 | 3:283 |
| குமார சரசுவதி | — | கிருஷ்ணதேவராயர் | 1525-1550 | 3:268 |
| குமாரசுவாமி அவதானி | தெய்வச்சிலையார் விறலி விடுதூது | தெய்வச்சிலைப் பெருமாள் | 1550-1575 | 3:233 |
| குகை நமசிவாயர் | அருணகிரி அந்தாதி | குருநமசிவாயரின் குரு | 1550-1575 | 3:163 |
| குருஞான சம்பந்தர் | சிவபோகசாரம் | கமலை ஞானப்பிரகாசரின் சீடர் | 1550-1575 | 2:226 |
| குருநமசிவாயர் | அண்ணாமலை வெண்பா | குகை நமசிவாயரின் சீடர் | 1575-1600 | 3:167 |
| கூடற்புராண ஆசிரியர் | கூடற் புராணம் | | 1590-1600 | 1:284 |
| கொங்கண சித்தர் | வாலைக்கும்மி | | 1550-1575 | 3:207 |
| சட்டைமுனி கயிலாய சித்தர் | திருமந்திர உரை, சித்தர் பாடல் | | | 3:209 |
| சிதம்பரநாத கவி | சங்கர விலாசம் | அதிவீரராமர் | 1575-1600 | 1:57 |
| சிவாக்கிர யோகிகள் | சிவநெறிப் பிரகாசம் | சேவப்ப நாயக்கன் | 1550-1575 | 2:187; 3:34 |
| செவ்வைச் சூடுவார் | பாகவதம் | — | 1550-1575 | 1:232 |

| ஆசிரியர் பெயர் | நூல்கள் | உடன்காலத்தவர் | காலம் | பக்கம் |
|---|---|---|---|---|
| ஞானக் கூத்தர் | திருவையாற்றுப்புராணம் | நிரம்ப அழகிய தேசிகர் | 1575-1600 | 1:126 |
| ஞானப்பிரகாசர் | | | | |
| — அண்ணாமலை | சித்தி சுபக்க - உரை | — | 1550-1600 | 3:51 |
| — கச்சி | தனிப்பாடல் | திருமலைநாதர் பரஞ்சோதி | 1550-1600 | 3:278 |
| — கமலை | மழபாடிப் புராணம் | குருஞான சம்பந்தரின் குரு | 1530-1575 | 1:77; 2:205 |
| — செட்டித்தெரு | — | கமலை ஞானப்பிரகாசரின் குரு | 1500-1525 | 2:265 |
| — திரு ஒற்றியூர் | சித்தி-பரபக்க உரை | ஒற்றி-தத்துவப் பிரகாசரின் குரு | 1550-1575 | 1:118; 3:63 |
| ஞானாமிர்த உரையாசிரியர் | உரை | — | 1575-1600 | 3:9 |
| தத்துவப் பிரகாசர் | | | | |
| — திருஆரூர் | தனிப்பாடல் | கிருஷ்ணதேவராயர் | 1520-1550 | 3:271 |
| — திருஒற்றியூர் | சித்தி-பரபக்க உரை | ஒற்றி-ஞானப்பிரகாசரின் சீடர் | 1550-1600 | 3:69 |
| திருக்குருகைப் பெருமாள் | மாறனலங்காரம் | | 1530-1560 | 2:117; 3:77 |
| திருத்தோணியப்பர் | — | ஆரூர்த் தத்துவப் பிரகாசர் | 1525-1550 | 3:268 |
| திருமூல சித்தர் | ஞானம் | | 1525-1550 | 3:212 |
| திருமலை நாதர் | சிதம்பர புராணம் | கச்சி ஞானப்பிரகாசர் | 1500-1525 | 1:172; 3:221 |
| திருவுந்தியார் களிற்றுப்படி பொழிப்புரையாசிரியர் | பொழிப்புரை | — | 1575-1600 | 3:6 |
| தினகரவெண்பா ஆசிரியர் | (நாகராசன்) தினகரவெண்பா | — | 1575-1600 | 2:54 |

| | | | | |
|---|---|---|---|---|
| தையூர் உத்தண்டன் கோவை ஆசிரியர் | கோவை | தினகரன் | 1575-1600 | 3: 260 |
| நந்தி சிவாக்கிரயோகி | சிவநெறிப் பிரகாச உரை | சிவாக்கிரயோகி | 1575-1600 | 3: 47 |
| நாககுமார காவிய ஆசிரியர் | நாககுமாரகாவியம் | | 1500-1575 | 3: 121 |
| நிரம்ப அழகிய தேசிகர் | சேது புராணம் | கமலை ஞானப்பிரகாசரின் சீடர் | 1500-1575 | 1: 88; 3: 57 |
| நீதிவெண்பா ஆசிரியர் | நீதிவெண்பா | — | 1575-1600 | 2: 57 |
| பரகால நல்லான் | ரகஸ் யத்ரயம் | — | 1575-1600 | 3: 115 |
| பரஞ்சோதி | சிதம்பரப் பாட்டியல் | கச்சி ஞானப்பிரகாசர் 2 | 1520-1545 | 2: 109 |
| பிள்ளை லோகஞ் சீயர் | இராமானுசார்ய திவ்ய சரிதை | — | 1525-1550 | 3: 83 |
| பழனிக் கோவை ஆசிரியர் | பழனிக் கோவை | — | 1500-1525 | 3: 262 |
| மண்டல புருடர் | சூடாமணி நிகண்டு | கிருஷ்ணதேவராயர் | 1500-1550 | 2: 75 |
| மறைஞான சம்பந்தர் | சிவதருமோத்தரம், சைவசமய நெறி | — | 1550-1560 | 2: 158 |
| மறைஞானதேசிகர் | சித்தி-சுபக்க உரை | மறைஞான சம்பந்தரின் சீடர் | 1550-1575 | 2: 184; 3: 21 |
| மூவர் அம்மானையாசிரியர் | மூவர் அம்மானை | — | 1550-1575 | 3: 303 |
| ரேவண சித்தர் | அகராதி நிகண்டு | — | 1575-1600 | 1:225; 2: 269 |
| வரகுணராம பாண்டியர் | இலிங்க புராணம் வாயு சங்கிதை | அதிவீரராமர் முதலியோர் | 1550-1575 | 1: 11 |
| வரதுங்கராம பாண்டியர் | பிரமோத்தர காண்டம் | அதிவீரராம முதலியோர் | 1550-1590 | 1: 22; 3:154, 290 |
| வலிவல மும்மணிக்கோவை ஆசிரியர் | வலிவல மும்மணிக்கோவை | — | 1050-1525 | 3: 230 |
| வீரன் ஆசு கவிராயன் | அரிச்சந்திர சரித்திரம் | அதிவீரராமர் | 1500-1525 | 2: 5 |

| அம்பிகாபதி | | | |
|---|---|---|---|
| எண் | பெயர் | காலம் | குறிப்புக்கள் |
| 1. | அம்பிகாபதி | 1150 | கம்பர் மகன் அம்பிகாபதி - பொய்க் கதை. ஆனால் அம்பிகாபதி என்ற ஒரு புலவர் இக்காலத்தில் வாழ்ந்து அம்பிகாபதி கோவை என்ற நூல் பாடினார். கதைகள் ஆதாரமற்றவை. |
| 2. | அம்பிகாபதி -தண்டியின் தந்தை | 1100-1125 | தண்டியலங்காரம் செய்த தண்டியாசிரியரின் தந்தை. இவரைப் பற்றிய செய்தி தெரியவில்லை. இவரே 1இல் கூறிய அம்பிகாபதியா என்பது விளங்கவில்லை. |
| 3. | வீரை-அம்பிகாபதி | 1550-1575 | வீரை - கவிராச பண்டிதரின் புதல்வர். நெல்லை வருக்கக் கோவை பராபரை மாலை பாடியவர். |

## தத்துவப் பிரகாசர்

| எண் | பெயர் | காலம் | செய்த நூல் பாடல் | ஆசிரியர் மாணாக்கர் | பிற குறிப்புகள் | |
|---|---|---|---|---|---|---|
| 1. | சீகாழி - தத்துவப் பிரகாசர் | 1350-1375 | தத்துவப்பிரகாசம் | ஆ: சிற்றம்பல நாடி<br>மா: பரம முனிவர் | சம்பந்த முனிவர் முதலியோர் உடன் மாணாக்கர் | எமது தத்துவப் பிரகாசம் 1965 பதிப்பு முன்னுரை பக்கம் 21-24 |
| 2. | சிவபுரம்- தத்துவப் பிரகாசர் | 1425-1475 | இல்லை | ஆ: சிவபுரம். ஞானப்பிரகாசர்<br>மா: செட்டித்தெரு ஞானப்பிரகாசர் | தருமபுரத்துப் பூர்வாசிரியருள் இவரும் ஒருவர். | எமது தத்துவப் பிரகாசம் 1965 பதிப்பு முன்னுரை பக்கம் 21-24 |
| 3. | திருவாரூர்- தத்துவப் பிரகாசர் | 1450-1525 | தனிப்பாடல்கள் பெருந்தொகை 262-3; 1637-46 | கிருஷ்ணதேவ ராயரால் போற்றப் பெற்றவர் | திருவாரூரினர் | எமது தத்துவப் பிரகாசர் 1965 பதிப்பு முன்னுரை பக்கம் 21-24 இந்நூல் ப. 274. |
| 4 | திருவொற்றியூர் தத்துவப் பிரகாசர் | 1550-1600 | சித்தியார் பரபக்கவுரை | ஆ: திருவொற்றியூர் ஞானப்பிரகாசர்<br>மா: — | புகலூர் போகநாத சுவாமியைக் குறிப்பிடுகிறார். | எமது தத்துவப் பிரகாசம் 1965 பதிப்பு முன்னுரை பக்கம்21-24 இந்நூல் ப. 85. |
| | (தத்துவராயர் -வேதாந்தி; இவர் தத்துவப்பிரகாசர் அல்லர்). | 1450-1475 | அடங்கல் முறை பெருந்திரட்டு குறுந்திரட்டு | ஆ: சொரூபானந்தர்<br>மா: — | சிறந்த வேதாந்த நூலாசிரியர் | 15 நூற்றாண்டு |

# மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு


| | |
|---|---|
| அங்கையிற் | 181 |
| அடல் வலை | 133 |
| அடியேன் | 141 |
| அடுத்த நட்பா | 10 |
| அண்டமாய் | 184 |
| அண்ணாமலை மா | 173 |
| அண்ணாமலையார் | 168 |
| அணுவினும் | 28 |
| அத்திரி சூழ் | 87 |
| அந்தணர்க்கு | 236 |
| அபிசந்திர | 129 |
| அம்பலவா | 170 |
| அம்மனைதங் | 304 |
| அம்மானைகை | 306 |
| அமுதமதி | 194 |
| அரியாசன | 129 |
| அருணகிரி அந் | 165 |
| அருணாசல | 227 |
| அருவுருவாய் | 182 |
| அருள்மேவு | 288 |
| அருளா | 151 |
| அருமறையா | 37 |
| அல்லலாகிய | 170 |
| அல்லும்பகலும் அனு | 110 |
| அல்லும் பகலுமொ | 159 |
| அலங்கல் அணி | 298 |
| அவனுரைத்த | 142 |
| அழித்துப்பிற | 233 |
| அழுக்கற்ற | 159 |
| அள்ளற்கம | 260 |
| அளவைகாண் | 42 |
| அறமின்றி | 129 |
| அறியும் பொரு | 60 |
| அன்பால் நுவ | 59 |
| அன்பிற்றீர் | 231 |
| அன்றெனின் | 232 |
| அன்னை நுகர் | 286 |
| ஆகும் ஆசு | 29 |
| ஆடகமாட | 142 |
| ஆடுங்கள் | 208 |
| ஆதலால் | 289 |
| ஆதியந்தம் | 211 |
| ஆதியுநடு | 197 |
| ஆதியென்ற | 198 |
| ஆதிவடவே | 238 |
| ஆயசவுந் | 132 |
| ஆயிரத்தெட் | 243 |
| ஆயிரவர் புல | 277 |
| ஆராலும் | 228 |
| ஆரூரிலே புவி | 244 |
| ஆல் பழுத்து | 167 |
| ஆறுமுகனா | 242 |
| ஆனைமுகன் | 23 |
| இடிக்குங் | 82 |
| இயலிசை | 154 |
| இரவியெழுந் | 44 |

இராகமறி 41
இரு குழை 145
இலகு புகழ் 299
இலகேழகி 257
இறைப்பொழுது 162
இன்றோ எதி 99
இன்னதன் 139
இன்னதிது 312
ஈசன்பசு 303
ஈயும் ஆரி 29
உடலொலி 32
உண்டவயி 274
உணராத 157
உத்திவாள 157
உதித்து வெளி 185
உயிரிறந்த 161
உரையுணர் 289
உலகமெல் 293
உலகமே 207
உலைக்குரிய 301
உள் விரிந்த 130
உள்ளத்தினுள் 311
உள்ளும்புற 60
உளமகிழ் 140
உறையும் பதி 174
உன்பாடல் நீ 144
உனதுசரற் 139
ஊத்தைச்சட 208
ஊழித்துலு 273
ஊன்பயிலும் 170
ஊனமிலா 133
எடுத்த பிற 174
எண்ணினை 232
எந்தை 248
எவன் உயிர் 157
எல்லார் பிறப்பு 164
என்னையா 157
என் கவிகை 300
என் செயலா 160
என்றும் அரு 164
என்னெஞ்சில் 161
எனக்குத் 150
ஏகமெனும் 196
ஏடியன்மாலை 282
ஏத்திய மூவர் 159
ஏமமதினி 198
ஏரார்சிவ 49
ஏழாயிர 197
ஏழைபனாதி 208
ஏறிய சகாத்த 282
ஒரு மலமு 44
ஒன்றும் அறி 166
ஓதநெடும் 305
கஞ்சமலர் 195
கடல்தனில் 185
கண்டகண் 156
கண்டங்கரி 173
கண்ட மட்டில் 169
கண்ணார் மதி 289
கண்ணூறு 259
கந்தர் கை 184
கமனமொன் 214
கருத்தறுமா 158
கருவான 128
கவிற்றுயிர் 29
கல்லுருகும் 194
கலிங்கம் 269
கவடிகளாக 275
கற்றணர்ந் 284
கன்னலன்றி 293
கன்னியிறை 313
காட்டுபைசா 29

காதலனும் 287
காதலுடன் 170
காலாயுத 252
காலையில் 185
கானம் பயிலா 143
கிளர்கதிர் 185
குகையினில் 175
குட்டுதற்கோ 276
குடைகளென் 132
குத்திரப்பர 87
குயில்போல 82
குரங்கனலில் 275
குரங்குமாய் 275
குலநாத 112
குறியென்ற 205
கூத்தாடி 269
கேசவனார் 87
கொண்டற்பரு 263
கொண்டு வந்தே 170
கொழுதியிசை 182
கொற்றமறை 224
கொற்றவ 250
கொன்றவன் 67
கோதையே 245
கோபுரங்கள் 169
சங்கமரா 170
சங்கரன் 28
சத்தியமே 195
சத்தியும் 176
சத்தும் அசத் 58
சந்ததியில்லா 86
சந்திரனும் 252
சமயமிகு 175
சாதித்து 185
சித்தமிழுக் 227
சித்திதன் 25
சிந்தனை 156
சிரத்தா 154
சிவ கருமம் 161
சிவமுறநம 52
சிவமெனும் 139
சிவனடியாரை 208
சிறக்கத்தக் 157
சிறிநற்பஞ்ச 122
சீர்கொண்ட 283
சீர்பெருகும் 201
சீரார்புரா 225
சீவன் முத்தி 289
சும்மா கிடைக்கு 165
சுரக்கும் பசு 260
சூரன் குல 194
செண்பகமல 294
செந்தமிழ்ச் 27
செந்தமிழின் 30
செந்தமிழைச் 238
செந்தமிழோர் 241
செந்தாதி 226
செந்நெறி 23
செப்பரிய 313
செய்யசிவ 59
செவிராசி 250
சென்றது காலங் 162
சேணிற்கொடி 161
சேணுலவு 283
சேமநிதி 140
சேற்றுக்கமல 301
சேனை தழை 299
சேயரி நாட்ட 306
சைவத்தின் 227
சொல்லில் நா 52
சொல்வதென் 212
தந்தை சிவ 48

| | |
|---|---|
| தமிழ்சம்ஸ் | 118 |
| தமிழ்மணி | 117 |
| தருணமங்க | 14,143 |
| தருமந்தவ | 254 |
| தவிராத | 253 |
| தளர்வுவந் | 160 |
| தன்னாற்பிர | 30 |
| தாயிருக்க | 168 |
| தாரம்மனைமட் | 161 |
| தானான | 215 |
| திக்குநோக் | 86 |
| திணையாதி | 229 |
| திருத்துறை | 23 |
| திருமகளும் | 37 |
| திருவண்ணாமலை | 169 |
| துறைவாரி | 254 |
| துன்னும் இரா | 29 |
| துன்னுமுன் | 288 |
| தூக்கிய கால் | 171 |
| தெண்டிரைப் | 306 |
| தென்பாராளும் | 242 |
| தென்னருணை | 178 |
| தென்னவா | 298 |
| தேசிகனாக | 159 |
| தேரிளந்தென் | 293 |
| தேரும்சிவ | 60 |
| தேருளைப்புர | 300 |
| தேன்பயிலு | 110 |
| தேனிடுகூடு | 261 |
| தொகுத்தல் | 13 |
| தொடையிற் | 252 |
| தொண்டர்கள் | 62 |
| தொழவாரும் | 226 |
| தோற்றுமனந்த | 226 |
| தோன்றிய | 156 |
| நகரமே | 26 |
| நகுதத்தா | 171 |
| நண்புற்றெ | 284 |
| நத்துவயல் | 70 |
| நல்லோர்க்கு | 11 |
| நலங்கூர் | 292 |
| நறைகமழும் | 223 |
| நன்கவிஞ | 161 |
| நன்றிபுனையும் | 169 |
| நன் று நன் று | 47 |
| நாசப்படு | 145 |
| நாட்டிலுள்ள | 311 |
| நாணென்றால் | 311 |
| நாம்பெற்ற | 90 |
| நாயேன் | 231 |
| நாவலன்பின் | 81 |
| நானாழி | 197 |
| நிலமுதலைந் | 286 |
| நிலையடைய | 23 |
| நிழல் கொடு | 88 |
| நிற்குணமா | 211 |
| நினைவுகவி | 271 |
| நீடாழி | 279 |
| நீதித்தனி | 144 |
| நீர்மேவும் | 49 |
| நீற்றையணி | 177 |
| நூலாமரு | 259 |
| நெஞ்சகந் | 145 |
| நெடுமாத | 264 |
| நேசத்தடி | 62 |
| பச்சைப்பகுதி | 208 |
| பண்டுமுளை | 208 |
| பண்டுவாற் | 292 |
| பணிமாறு | 197 |
| பத்திசெய் | 294 |
| பத்தியினால் | 185 |
| பத்துப்பரும் | 72 |

பதிபசு பா 73
பந்தவினை 50
பரந்த சாதி 294
பவநெறியை 47
பற்பமென 89
பற்பலதுய 263
பற்றலர் 283
பறியாரோ 275
பனிப்பிறை 81
பணிமாறு 197
பனியால் இடி 30
பாடுவதுன் 158
பாண்டியனை 301
பாணன் மது 301
பாப்பட்ட 145
பாம்புகடி 276
பாயபுகழ் 287
பாவிலும் 258
பாவையர் 243
பிரமம் 29
பிரியாத 152
பிழைப்பதற்கு 196
பிறைதவழும் 14, 141
பிறைபுனைந் 13
பிறையணி 176
பீக்கிலாட் 194
புகலுவார் 204
புகுவது 159
புகைக்கொடி 131
புண்ணியன் 44
புலியுரியா 39
புவனத்தட 149
பூணித்திலத்து 162
பூரணமாகி 147
பூரணமே 195
பூரணிமா 194
பெண்ணப்பன் 254
பெருவாழ்வு 44
பேணித்தொழு 160
பேதைதன 220
பேரரசர் 301
பேராதமும் 150
பேறு பெற்றேன் 161
பொய்யாமலை 313
பொய்யென்று 175
பொற்பமரா 68
பொறியொடு 128
பொன்கோவை 261
பொன்னிறக் 64
போதவூர் 63
மங்கைமுது 194
மத்தகச 280
மணிநிறம் 153
மருவுபிரா 29
மருவுபுகழ் 273
மலர்த்தாளை 256
மலர்ந்த 183
மலைமுழை 81
மற்றாருதவி 233
மற்றிடங் 228
மற்றுமெண் 126
மறைவழி 15
மன்கவிதா 276
மன்னருணை 177
மன்னுபுகழ் 110
மன்னுயிர் 107
மாசில் உப 24
மாணிக்க 263
மாதர் மட 250
மாதுநின் 153
மாப்பைந்தார் 298
மாமாதவ 173

| | | | |
|---|---|---|---|
| மாலை எய்த | 295 | வாணன் புகழ்க் | 301 |
| மான்றோலின் | 133 | வாணன் புகழெ | 301 |
| மானமிலி | 166 | வாரிபுடை | 15 |
| மிகைபடு | 125 | வாலைக்கு | 208 |
| மிதித்த | 171 | வாழ்த்திட | 158 |
| மின்னும்படி | 168 | வாழிதிருப் | 89 |
| முண்டத்தில | 232 | வாழிநலந் | 106 |
| முத்த நதி | 169 | வாழிமறை | 225 |
| முத்தராம் | 70 | வானத்து | 173 |
| முத்திக்கொரு | 160 | வானப்ரகாச | 279 |
| முத்தூரும் | 89 | வானென்ற | 206 |
| முத்தொழிற் | 183 | விண்ணாடர் | 282 |
| முற்றத்தில் | 251 | விண்ணிடுவில் | 160 |
| முறைமை | 29 | விதிமுன்னா | 292 |
| முன்னாள் | 274 | விரித்த சடா | 174 |
| முன்னைப்பிற | 156 | விருப்பாய் | 177 |
| மூட்டைகலம் | 274 | விழியுங்களப | 82 |
| மூவகைக்கட | 294 | வீடுதரும் | 165 |
| மெல்லியபஞ் | 89 | வீறுடைச் | 126 |
| மேவியதோர் | 213 | வெய்யபிறவி | 165 |
| மேற்கோள் | 285 | வெற்பனைய | 235 |
| மைகண்ட | 60 | வெற்றிப்பாடு | 277 |
| யகாரம் | 26 | வெற்றிபுனை | 299 |
| யதிராசன் | 87 | வேதநுண் | 141 |
| வந்தீச்வர | 172 | வேதநூற் | 225 |
| வம்பவிழ்தார் | 110 | வேதாந்தங் | 89 |
| வழங்குதெய் | 29 | வேம்பாகிலும் | 298 |
| வழுத்துதல் | 158 | வேல்விழி | 126 |
| வளப்பங்கே | 213 | வேள்வியிலே | 245 |
| வளர்சிகை | 181 | வேற்றுமரு | 227 |
| வன் பெருக்கில் | 165 | வைகைஎதிர் | 224 |
| வாக்காலே | 172 | வையங்குரு | 90 |
| வாங்கிஎழு | 203 | ஏகைவசக்தி | 42 |
| வாசிக்குள் | 311 | ஸர்வதர்மான் | 116 |
| வாட்டானை | 301 | ஸ்ரீமந்நாரா | 115 |


❖❖❖

## சொல்லாட்சியும் பொருளும்


| | | | |
|---|---|---|---|
| அசூயாளுக்கள் | 102 | கடிகை | 240 |
| அட்டமாசித்தி | 28 | கந்தி | 124 |
| அணுவிரதம் | 133 | கருவை | 145,154 |
| அத்திரி | 11 | கல்லியமாமிசம் | 66 |
| அபிராமி | 138 | கலிங்கம் | 269 |
| அமுது | 101 | கவசம் | 178 |
| அர்த்தபஞ்சகம் | 104 | கள்வன் | 79 |
| அரவணை | 101 | களிற்றுப்படி | 7 |
| அருளுவுதீர் | 111 | காலாட்கள் தோழர் | 178 |
| அரையன் | 99 | காலாயம் | 252 |
| அன்றாடும் | 101 | கிடுதல் | 102 |
| ஆரியவுமன் | 12 | கிரந்தி | 19 |
| ஆன்மா | 63 | குடைமங்கலம் | 283 |
| இபம் | 257 | குரவை | 111 |
| இயமம் | 104 | குலாமன் | 269-270 |
| ஈரத்தமிழ் | 103 | குளபதம் | 18 |
| உண்டுமே | 259 | கொக்கிறகு - மலர் | 246 |
| உந்தீபற | 7 | ஞாயிறுபாடு | 101 |
| உபலாளித்தல் | 102 | சங்கரன் | 63 |
| எம்பார் | 92 | சட்ட | 8 |
| எருக்க | 11 | சட்டை முனி | 71 |
| எல்லப்பன் | 226 | சத்தமாதர் | 144 |
| ஐம்பெரும்பாதகம் | 10 | சந்தக்குழிப்பு | 255 |
| ஐயங்கார் | 102 | சந்தி | 18 |
| ஐயானனன் | 79 | சமாதி | 105 |
| ஒட்டியன் | 269 | சயிக்க விடுதல் | 101 |
| ஓரெழுத்து | 196 | சாதம் | 101 |
| ஓலமிடுதல் | 111 | சாலிவாடீசுரபும் | 51 |
| கட்டு | 79 | சித்தர் | 186,188 |
| கடகம் | 269 | சிறாங்கித்தல் | 96 |

சீவலவேள் 241
சுதை 129
சேயூர் 250
சேறை 235
சௌந்தரியலகரி 138
ஞாயிறுபாடு 101
த்வயம் 115
த்வரை 102
தமப்பனார் 101
தனிசு 8
தாரணம் 105
தியானம் 105
திரவிடசிசு 142-143
திரிபுர சுந்தரி 19
திரிவேணி சங்கமம் 14
தினவு கெடுதல் 102
தீட்சை 211
துர்க்கை 181
தேவிகள் 102,108
தோசை 101
நமசிவாயகுரு 107
நன்னூல் 85
நாட்டுமொழி 118
நாண்மங்கலம் 283
நாயன்தே 101
நித்தியகன்மம் 60
நியமம் 104
நீலி 13
ப்ரவணம் 101
பக்கி 167
பஞ்சசயனம் 10
படிமா 101
பத்தராவி 79
பதிற்றுப்பத்தந்தாதி 135
பரமத திமிரபானு 67
பரமராசியம் 175
பிரத்தியாகாரம் 104
பிராசாத கலை 195
பிராணாயமம் 104
புவனை 149
பொசிவாசி 247
மஞ்சரி 281
மடம் 4
மணிப்பிரவாளம் 117
மதினியார் 96
மனச்சமுக்கு 11
மனோகரம் 129
மிடறுசெய்தல் 102
மிருத்தியுஞ்சய மூர்த்தி 183
முடித்தழும்பர் 248
மூலவொலி 32
ரட்சை 179
ராசியம் 175
லேகரி 102
லோகம் சீயர் 76
வச்சிரபஞ்சரம் 181
வண்ணக்கட்சி 242
வண்ணம் 255
வருக்கக் கோவை 258
வன்மம் 18
வாட்போக்கி 248
வாத்சல்யம் 116
வாராகி 144
வாலை 203
வாழி 111
வாண்மங்கலம் 284
வீரமாறன் 162
வீறை 136
வேம்பத்தூர் 148
வேளையம் 101
வைத்தியநாதன் 42
ஸ்வாமித்துவம் 116
ஸௌசீல்யம் 116
ஸௌலப்யம் 116

## பொருள் அகராதி


அஃறிணைப் பொருள் தூது சொல்லுதல் 233
அகம் பிரம்மாஸ்மிக் கொள்கை 16
அசைநிலை விளக்கம் 8
அட்டகருமங்கள் 148
அட்டகுணம் 285
அட்டாங்க யோகம் 104
அடயோகம் ஆகாது 205
அதிவருணாச்சிரமி 39
அம்பிகை திருநாமங்கள் 149
அம்மானை இலக்கணம் 96
அர்த்த பஞ்சகம் 104
அளவையறிவின் அவசியம் 41
அறுபத்துமூவர் சிலை திருட்டு 274
அறுவகைச் சமயத்தின் மூர்த்திகள் 41
அன்றிலும் பேடும் 66
ஆணையிட்டுத் தடுத்தல் 273
ஆதாரங்கள் ஆறு 18,19
ஆலத்திசுழற்றல் 142
ஆறங்கம் 43
இராமன் அனுமனை உடன் உண்ணச் சொல்லுதல் 79
இருப்புக் கடலை 10
இலக்கண உரை மரபு 1
இலக்கிய உரை மரபு 1
இலக்கியமல்லாத நூல் 290
உபசாரம் பலவகை 30
உயிர் மூவகை 35
உரைநடை வரலாறு 314
உரையாடல் 252
உலகாயதர் இருவகை 71
உலகியல்பு கடந்த நிலை 71
உலாவில் முன்னிலை பின்னிலை 224
உலாவின் பொருள் அமைப்பு 219
உலாவின் பொருள் அமைப்பு மரபில் முரண் 221
உலோபர் பழிப்பு 275
உழவுப் பொருட் பெயர்கள் 73
எக்கலாதேவி 166
எட்டிடத்துத் தீட்சை போதல் 271
எண் குணங்கள் 26
எண்வகை மணம் 28
எல்லாம் வல்ல சித்தர் 189
ஏகார விளக்கம் 35
ஐந்தெழுத்தும் ஐந்து முகமும் 25,26
ஐந்தொழில் 63
ஐம்பெரும் பாதகம் 10
ஒன்றுக்கொன்று ஆயிர மடங்கு பெரியது 277-278

கந்தி-விளக்கம் 124
கருநெல்லி 205
கரும்பு-தொடர்புடைய பொருட் பெயர்கள் 244
கலியன் 93
கவிதையைத் திருடல் 271-272
களிறு மண்டியிடல் 9
காமநூல் வரலாறு 293
கால அளவைப் பெயர்கள் 244
காவியம்-காப்பியம் 121
காவிரிச்சோலை 94
கிழத்தி எனல் 168
கிளவிக்கொத்து 262
கிளி பாடல் பாடியது 274
கீதையால் மயங்கியது 71
கீழ்க்கணக்கு எழுதுதல் 231
குடைமங்கலம் 283
குருவின் அவசியம் 72
குழந்தையின் துர்மரணத்துக்குப் பொறுப்பு தாய் 111
குற்றம் எட்டு 31
குஜிலிப் பதிப்பு 304,308
கேசரியோகம் 210
கூடலிழைத்தல் 249
கேசாதிபாத வருணனை 140
கொச்சை நடை 186
கொடி இறக்கம் 273
கோவையின் கொளு 229,262
சத்தி தோத்திரங்கள் 148
சந்நியாசத்துக்கு உரியோர் 35
சந்நியாசி மூவர்ணத்திலும் உண்டு 114
சமஸ்கிருதத்தில் மனத்தைச் செலுத்த வேண்டாம் 100
சமணூல் 271-272
சமய நூல் தோன்றின காரணம் 7
சரம சுலோகம் 115
சரியை கிரியை வேண்டும் 8
சவுக்காரம் 211
சாக்த நெறி 16,187
சாகா வரம் 164
சாத்திரமும் தோத்திரமும் 146
சாதிப் பெயர்கள் 252
சித்தர் என்ற பெயர் 188
சித்தருக்குச் சாதி குலம் இல்லை 205
சிலம்பொலி கேட்டல் 187
சிலேடை 219,244
சிலை திருடிவிற்றல் 274
சிவ சின்னங்கள் 232
சிவபெருமான் தடத்த லட்சணம் 35
சிவம் முதற் காரணமும் நிமித்த காரணமும் 45
சிவராஜயோகம் 206
சிவனுக்கு அவதாரமில்லை 164
சிவானுபவம் - சுவானுபவம் 22
சீவல்லபன் குருகூர் விமானம் அமைத்தது 79
சுவைகள் 15
செபிக்கும் முறை 179,180
சைவ ஆசாரியர் வேளாளர் 4
சைவ எழுச்சி 3
சைவ சாத்திர உரைகள் 2
சைவ தூஷணம் 92
சைவ இலக்கிய மரபு 120
சைனர் நூல்கள் 119
சொக்கன் என்ற பெயர் 222

சொல்லாட்சிகள் 11,101,192
சோடசோபசாரம் 24
ஞானி நிலை 206
தந்தை மகனிடம்
சூதாடிப் பொருளிழத்தல்
- தன்னியல்பு - முக்தி 6
தானம் செய்தல் 11
திரிவேணி சங்கமம் 14
திருமலையில்
இராத்தங்கலாகாது 92
திருமுறைகளில் தோத்திர
சாத்திர அமைப்பு 146
திருமொழியாதியவை
ஆறங்கம் 108
திருவாரூர்த் தேர் விழா 274
தீச்செயல்கள் 231
தீட்சையின்றி ஞானமில்லை 8
தீயோர் இயல்பு 276
துக்கம் மூன்று 29
தூது - இலக்கியத்தில் 234
தெலுங்கு லிபியில் தமிழ் அச்சு 97
தேர்வடம் பிடித்தல் 166
தேவி தியானம் 139
தேர் பத்து விதம் 27
தேன் உண்ணாமை 133
தொகை விளக்கம் 72
தொங்கல் 256
தொண்டைமான் வரலாறு 251
நடம் நான்கு 28
நாகபஞ்சமி நோன்பு 124
நாட்டுப் பெயர்கள் 251
நாண் மங்கலம் 283
நாலு பாஷை 269
நாவலருடன் பங்கு பேசல் 271
நிவேதனப் பொருள் 101
நீரின் தொடர்புடைய
பொருள்கள் 244
நெடுங் கணக்கு 231
நேதிபண்ணல் 68
பஞ்ச சுத்தி 43, 44
பஞ்ச பூதத் தலங்கள் 244
பஞ்ச முகங்கள் 42
படுக்கை படுத்துப் பார்த்தல் 91
பருத்திப் பொருள்கள் 244
பழமொழிகள் 79, 264
பன்னிரு மாதம் 98
பாகவதர் வறுமை நிலை 91
பாகற் கொடியறுத்தல் 273
பாடலின் தொகையைக்
குறிப்பிடும் மரபு 190
பாம்பின் வாயில் கையிட்டவர் 91
பாலட் (ஆங்கிலம்) 302
பாஷா பேதங்கள் 28
பிரணவம் 196
பிராணிகள் உயிரிழக்கக்
காரணம் 210
பிறமொழியைப் பழித்தல் 269
பூதம் வேம்புக்கு அஞ்சுதல் 299
புலவராற்றுப் படை 300
பெண் - நான்கு சாதி 294
புராண இலக்கியம் 5
பெண்களுடன் கூடிவாழ்தல் 66
பூசை கிருகத்தர்
சந்நியாசி விஷயம் 36
பெண்ணின் வருணனை 256
பெண்பால் பிள்ளைத் தமிழ்
குமரகுருபரரே 307
மடத்தின் தோற்றம் 4

மண் தின்ற பாணம் 310
மணிப் பிரவாளம் 1-2, 34, 117
மருத்துவர் வியாதி
போக்கும் முறை 31
மலையாள மொழி 117-118
மன்மதன் புகழ் 294
மனித எடை 287
மாதமொரு பேரிட்டழைத்தல் 271
முகம்மதியர் படையெடுப்பு 5
முத்தி வகைகள் 55
முருகன் தசாங்கம் 252
முளைதவிடு உமி
என்பதில் வேறுபாடு 36
மூவேழ் சுற்றம் 30
மெய்புகு கருவி 178
யோகத்தின் விரிவு 16
யோகப் பயிற்சி உயர்வு 7
லோகம் சீயர் - பொருள் 83
வடமொழிக் காமநூல் 291
வண்ணம் தோன்றிய
சூழ்நிலை 255
வருணனைப் பகுதிகள்
ஆண்டாள் 94
பிள்ளைலோகாசாரியர் 105
வாலையைத் துதித்தல் 187
வாள் மங்கலம் 284
விசய நகர ஆதிக்கம் 5
விநாயகர் சௌந்தரிய லகரியை
மேருவில் எழுதினார் என்பது
139
வியாக்கியானம் மரபு 100
விருதுகள் 279
விஷ்ணுவின் மீது பாடல்கள் 187
வீட்டு நெறியும் தமிழும் 30
வைணவ ஆசாரியர் பிராமணர் 4
வைணவ உரை மரபு 4
வைணவ நூல் உண்மை 74
வைணவ நூல் தோன்றிய
சூழ்நிலை 76
வைணவ மந்திரங்கள் 112, 115, 116
வைத்தியநாதன்- பொருள் 42
வைத்தியம் மாந்திரிகம்
முதலியன 186, 193
ஷடங்க மந்திரங்கள் 179
ஷடங்கத்துக்குரிய சத்திகள் 44


❖ ❖ ❖

## சிறப்புப் பெயர் அகராதி


அகத்தியர் 66,188,190,193
- தீட்சாவிதி 197
அகப்பைச் சித்தர் 190
அகோரசிவம் 54
அச்சுத உபாத்தியாயர் 295
அச்சுதராயர் 267
அஞ்ஞவதைப் பரணி 26
அஞ்ஞான விவேகம் 51
அட்டாதச ரகசியம் 104
அடிகளாசிரியர் 49
அண்ணங்கராசாரியர் 115
அண்ணாமலை வெண்பா 166
அத்தினாபுரம் 129
அத்துழாய் 92
அதிரூப ரத்னம்- தாசி 237
அதிவீரராம பாண்டியர் 155,181
அந்தகக் கவிவீரராகவ
முதலியார் 273
அப்பர் 155
அப்பாவுபிள்ளை 295
அப்பிள்ளை 102
அபிராம வல்லி 150
அபிராமன் 269
அம்பர் கிழான் 12
அம்பலநாதத் தம்பிரான்,
காவை 33
அம்பிகாபதி 135
அம்பிகாபதி கோவை 78
அம்பிகைமாலை 135
அம்மங்கியம்மாள் 115
அம்மனைவரி 304
அமர சிம்மம் 37
அமலகுரு சித்தர் 191
அமுதசித்தர் 191
அர்த்தபஞ்சகவியாக்கியானம் 84
அரங்கநாத முதலியார்,
பூண்டி 281
அரசாங்கத் தடைபெற்ற நூல் 291
அரசாங்கத் தொன்னூல்
நிலையம் 194
அரதத்தாசாரியர் 46
அரிதாசர் 76,268
அரிய நாயக முதலியார் 236
அருங்கலச் செப்பு 119
அருணகிரி அந்தாதி 163
அருணகிரி நாதர் 55,133,159,240
அருணகிரி வெண்பா
அந்தாதி 226
அருணந்தி 23,38
அருணந்திதேவர் 314
அருணாசலக் கவிராயர் முரா. 260
அருணாசல குரு 191
அருணாசல புராணக்கொத்து 228
அருணாசல புராணம் 163,167
அருணாசலேசர் பிரபந்தம் 163
அருணைக்கலம்பகம் 227
அருள் நமசிவாயர் 33
அருளாளதாசர் 76
அருளாளப் பெருமாள் 75
அல்லியரசாணி மாலை 309

அலங்காரலகரி 142
அவ்வை 189
அவயவம் எழுதரிதென்று
ஏந்தலை விலக்கல் 256
அழகிய மணவாளப் பெருமாள்
நாயனார் 98
அழுகணிச் சித்தர் 190
அளவை விளக்கம் 25
அறநெறிச்சாரம் 119
அறுபத்துமூவர் சிலை 274
அனங்காகமம் 293
அனந்தாழ்வான் 117
அனவரத விநாயகம்பிள்ளை 9
அஷ்டப்பிரகரணம் 54
ஆசாரக்கோவை 67
ஆசுகவிராசர் 240
ஆண்டாள் வருணனை 94
ஆண்டான் 100
ஆதித்திய புராணம் 37
ஆர்த்திப் பிரபந்த
வியாக்கியானம் 84
ஆராயிரப்படி 86
ஆரிய மன்னன் கதை 247
ஆரூர்க்கோவை 218
ஆளவந்த வள்ளல் 21
ஆள்வந்தார் 74
ஆளவந்தார், வீரை 137
ஆளுடைய தேவநாயனார் 6,30
பிள்ளையார் திருஉலாமாலை 220
பிள்ளையார் திருக்கலம்பகம் 305
ஆற்றூர் வளநாடு 244
ஆறகளூர் 298
ஆறெழுத்தந்தாதி 193
ஆறை 297
ஆன்மலிங்கமாலை 185
ஆனந்த நமசிவாய பண்டாரம் 177
ஆனந்தமாலை 136
ஆனந்தலகரி 138
இடைக்காடர் 190
இடைக்காண்டம் 209
இதிகாச பாகவதம் 76
இரட்டைப் புலவர் 264
இரத்னகிரி உலா 218,241
இராகவையங்கார் மு. 266
இராசகேசரிநல்லூர் 261
இராசராசசோழன் உலா 199
- உலா 217
இராசி மங்கலம் 267
இராசராசேச்சுரம் 201
இராசேந்திரசோழன் 199
இராமச் சந்திர கவிராயர் 295
இராமசாமி, கொத்தமங்கலம் 295
இராமதேவர் 190,197
இராமநாதாசாரியர் 24
இராமப் பையன், தளவாய் 309
இராமப்பையன் அம்மானை 309
இராமலிங்க சுவாமி
- பாடல் 191
- முக்காடு 71
இராமலிங்கம்பிள்ளை,
நகராமலை 228
இராமாவதாரப் பாடல் 67
இராமாயணம், இராமானுச
நூற்றந்தாதி 74
- வியாக்கியானம் 84
இராமானுசர் 85
இராமானுசார்யதிவ்ய சரிதை
84,85
இராமானுசையங்கார் - திகி. 264
இராயவேலூர் அமுதசித்தர் 191
இருசமய விளக்கம் 76,268
இருபா இருபது 3, 314
இலக்கண தீபம் 278
இலக்குமி தோத்திரம் 182
- பஞ்சகம் 182
இலஞ்சி முருகன் உலா 221

இலிங்கபுராணம் 135
இளந்திரையன் 251
இளைய பெருமாள் 316
இறையனார் களவியல் 1, 26
- பொருள் விளக்கம் 262
ஈசான முனிவர் 155
ஈசுவாகீதை 37
ஈடு 36 ஆயிரப்படி 75
ஈரப்பாடு 100,103
ஈழம் அடிப்படுத்த
தாடையாழ்வார் 66
உடல்கூற்று வண்ணம் 255
உடையவர் வைபவத்தைச்
சொன்னவர் 96
உடையார் 26
உண்ணாமுலை எல்லப்பன் 229
உண்மை விளக்கம் 26
உத்தண்ட வேலாயுத கவி 266
உத்தண்டன் 261
- கோவை 218
உத்தரகோச மங்கை 249
உதயண குமாரகாவியம் 121,124
உதய திவாகர.தோத்திரம் 185
உதளிகன் - சித்தர் 191
உபதேசத் திருநாமம் 84
உபதேச ரத்தினமாலை
வியாக்கியானம் 84
உமாபதி 3,33,49,64,206
உபநிடதம் 205,206
உருத்திரயாமளம் 15
உரோம ரிஷி 190
உலகம்மை 149
உலோபா முத்திரை 193
ஊழித்துலுக்கு 273
எட்டுத்தொகை 134
எம்பார் 92
எல்லப்பநாவலர் 141
- புராணங்கள் 225
எல்லம்மன் 225
எறம்ம நாயக்கர் 177
ஏகம்பவாணன் 296
ஏகாம்பர நாதர் உலா 221
ஏலாதி 119
ஏறுதிருவுடை தாசர் 105
ஐஞ்சிறுகாப்பியம் 130
ஐயம்பெருமாள் கவிராயர் 281
ஐயரவர்கள் 225
ஐயாசாமி தேசிகர் 52
ஒட்டக்கூத்தர் 221
ஒட்டரதேசம் 268
ஔவை - துரைசாமிப் பிள்ளை 12
ஓம் நமசிவாய குரு 166
கங்கை 14
கங்கைகொண்ட சோழன் 166
கங்கை மெய்கண்டார் 33
கச்சிக்கலம்பகம் 280,281
கச்சியப்ப முனிவர் 181
கச்சி விசுவேந்திரன் 236
கடக நகரம் 268
கடம்பர்கோயில் 241
கடம்பை 137
கடவுள் மாமுனிவர் 56
கடிகாசலம் 240
கடிகையார் கோலாகலன் 240
கடிகை வள்ளல் 240
கடுவெளிச்சித்தர் 192
கண்ணப்பர் 91
கண்ணி நுண் சிறுத்தாம்பு
வியாக்கியானம் 107
கண்ணுசாமிப்பிள்ளை 228
கண்ணுடைய வள்ளல் 272
களிற்றுப்படி உரை 2
கணிகண்ணன் 79
கதிரைவேற் பிள்ளை
அருணைக் கலம்பகம் உரை 28
கந்தசாமிப்புலவர் 257

கந்தபுராணம் 67
கந்தர்கலிவெண்பா 147
கந்தர் ஆறுபடை வீடுகள் 184
கந்தர் சஷ்டி கவசம் 183
கந்தரலங்காரம் 159
கந்தரனுபூதி 26
கந்தாடை
திருவேங்கடாசாரியர் 96
கந்தியார் 124
கபிலர் 189
கம்பராமாயணம் 53
- யுத்தகாண்டம் 232
கம்பளிச்சட்டை முனி 71
கமல முனி 190
கயிலாய சித்தர் 210
கயிலைபாதி காளத்திபாதி
அந்தாதி 61
கருடவாகன பண்டிதர் 85,86
கருணைப்பிரகாசர் 164
கருவூர்ச்சித்தர் 190,199
கருவூர்த் தேவர் 166
கருவூர்ப்புராணம் 202
கருவூரார் 190
- சூத்திரம் 202
- பூசாவிதி 203
- வைத்தியம் 204
கல்லாடம் 15,188
கலிங்கநாடு 269
கலியன் 93
கலைஞானதீபம் 136,146
கலைஞானம் 191
கவச தோத்திரம் 135
கவச தோத்திரங்கள் 178
கவிராச சிங்கம் 241
கவிராச சுந்தரன் 147
கவிராச பண்டிதர் வீரை 136
கவிராச பிள்ளை, சேறை 239
கவுணியன் குலமதலை 142
கவுந்தி அடிகள் 125
களப்பிரர் 119
கன்றாப்பூர் 249
கஜபதி 269
காக்கை பாடினி 263
காகபுசுண்டர் 191,204
காகமணுகாத மலை 247
காசிக்கலியன் கவிராயர் 262
காசிகண்டம் 135
காந்தசங்கிதை 15
காந்திமதியமை
பிள்ளைத்தமிழ் 260
காபிலம் 37
காமராசகூட தந்திரம் 15
காமிகாகமம் 37
காரிரத்தினக்கவிராயர் 82
காருடப் பிரயோகம் 15
காலாங்கி 210
காலாட்கள்தோழர் 178
காலிங்கராயன் 285
காலிங்கராயன் எல்லப்பன் 230
காலியூர்க்கோட்டம் 266
காலோத்தராகமம் 37
காவேரிக் கரைப்பசு 69
காழி மறைஞான தேசிகர் 22
காளத்தியாள்வார் 243
காளமேகம் 296
காளாமுகம் 41
காளிதாசர் நூல்கள் 37
கிடாம்பிப் பெருமாள் 89
கிரணாகமம் 37
கிரியாதீபிகை 34
கிருமிகொண்டசோழன் 92
கிருஷ்ணதேவராயர் 99
கிருஷ்ணாபுரம் 137,138,235,236
கிருஷ்ணாபுரம்
தாமிர சாசனம் 239
கீரன் அந்தாதி 249

குகை நமசிவாயர் 163,165,172,226
- லீலை 164
குட்டித்திருவாசகம் 156
குடிதாங்கி 261
குண்டலகேசி 67
குணவாகடம் 209
குதம்பைச் சித்தர் 190
குப்புசாமி முதலியார்,
கல்குளம் 249
கும்பமுனி 194
குமரகுருபரர் 182
குமார கம்பண உடையார் 268
குமாரகிருஷ்ணப்ப நாயக்கர் 235
குமாரசாமி அவதானி 235
குமாரசரசுவதி 268
குமிழிநாடு 260
குரவை மணவாளர் 112
குரசரண்தாஸ் பாபாஜி 191
குருசரணர் 50
குருசாமி 207
குருஞானசம்பந்தர் 189
குருநமசிவாயர் 135
குருபரம்பராப் பிரபாவம் 75
ஆறாயிரப்படி 74,97
குருமுனிவர் - சித்தர் 190
குலசேகர பாண்டியன் 282
குலோத்துங்கசோழன் 221
- உலா 221
- உலா உரை 315
குறுந்தொகை 296
குன்றகுடி முருகன் உலா 221
குன்றன் 261
குஜிலிப் பதிப்பு 304,308
கூத்தனூர் 268,281
கூத்தனூரப்பன் 268
கூர்மபுராணம் 4
- வடமொழி 37
கூரகுலோத்தமதாசர் 99
கூரத்தாழ்வார் 95
கூவம் மயிலேறி 236
கூளப்ப நாயக்கன் 238
விறலி விடுதூது 218
கொக்கோகம் 155,290
கொக்கோக முனிவர் 290
கொக்கோகர் 291
கொங்கணர் 71,207,190
கொலைமறுத்தல் 66
கொற்றியம்மை 117
கோடல் அம்பர்கிழான் 12
கோணிகாபுத்திரர் 291
கோதண்டன் மானூர் 237
கோபிநாத ராயர் 2
கோயில்நான்மணிமாலை 231
கோயிற் புராணம் 55
கோரக்கர் 190
- வைப்பு 192
கோவிந்தப்பர் 83
கோவிந்தப்பெருமாள் 89
கோவிந்தபட்டர் 93
கோளறு பதிகம் 179
கோனேரிபட்டன்
- திருப்பேரை 236
கௌடபாதர் 138
சக்கரவர்த்தி நயினார் 131
சகலகலாவல்லி மாலை 182
சங்கரமாமுனி 264
சங்கர விலாசம் 281
சங்கராசாரி கொக்கோக
மதனநூல் 295
சங்கற்ப நிராகரணம் 64
- உரை 67
சங்கரனார் கோவில் 237
சட்டைமுனி 190,209
- கயிலாய சித்தர் 71
சடகோபர் அந்தாதி 75
சடகோப ராமானுசாசாரி 102

சடகோபாசாரி 236
சடாட்சரக்கோவை 210
சடையமாங்குளம் 266
சண்டிகேச சித்தர் 210
சண்முகக் கவசம் 184
சண்முகசுந்தர
முதலியார் கொ. 63
சண்பையர் தலைவன்
அருணந்தி 65
சண்முகம் பிள்ளை 121,131
சத்திகவசம் 281
சத்தியஞான பண்டாரம் 33
சம்பந்த முனிவர் 33
சம்பந்தர் தோவரம் பாடியது 14
சம்பராரி புராணம் 293
சமண இலக்கியம் 272
சமரிட தந்திரம் 15
சர்வஞானோத்தரம் 37,46
- வடமொழி 46
சர்வதரிசன சங்கிரகம் 24
சர்வமதோபன்யாசம் 24
சர்வாகரமப்பிராமாண்யம் 54
சர்வான்மசம்பு 24
சரசுவதி நதி 14
சரபபுராணம் 223
சரபமூர்த்தி 228
சரவண முத்துப்பிள்ளை 190
சனந்த சங்கிதை 15
சனற்குமார தந்திரம் 15
சாக்தநூல் 15
சாசன தமிழ்க்கவி சரிதம் 266,217
சாந்தலிங்க சுவாமி 146
சாந்திபுராணம் 210
சாமுண்டராய புராணம் 130
சாலிவாடீசுவரநகர் 51
சாளுவத் திருமலை 297
சாளுவ நாயக்கன் 274
சித்தாந்த சமுச்சயம் 24
சித்தாந்த சிகாமணி 51
சித்தாந்த தீபிகை 24
சித்தாந்த தீபிகை
- சிவாக்கிரயோகி 41
சித்தாந்தத்தொகை 67
சித்தாந்த போதம் 37
சித்தியார் அறுவருரை 61
சித்தர் 192
சிதம்பரசுவாமி 146
- உரைகள் 20
சிதம்பரம் 153
சிதம்பரநாத கவி 281
சிதம்பரப்பாட்டியல் 217
- உரை 265
சிதம்பர வெண்பா 172,174
சிந்தாமணி 119
சிமிட்டுரத்னச் சுருக்கம் 191,192
சிருங்கேரி மடம் 24
சிலப்பதிகாரம் 125
சிலேடைப்புலி பிச்சுவையர் 260
சிவக்கொழுந்து சிவாசாரியர் 49
சிவக்கொழுந்து தேசிகர் 48
சிவகவசம் 181
சிவகீதை 37
சிவசம வாத உரை 53
சிவசமாதி மான்மியம் 51
சிவஞான சித்தியார் 3,51
- உரை 2,7,22,39,285
சிவஞான சித்தியார்
- சுபக்க உரை 22
- பரபக்க உரை 24
சிவஞானசுவாமி 46
சிவஞானபோதம் 3,22,38,36,58,61
- மாபாடியம் 11
- லகுடீகை 34
-விருத்தி 51
சிவஞான வள்ளல் 175

சிவதருமோத்தரம் 56
-உரை 22
சிவதருமோத்தராகமம் 37
சிவநெறிப்பிரகாசம் 37
சிவப்பிரகாசம் 3,26
சிவப்பிரகாசம் உரை 58
- மதுரைச் சிவப்பிரகாசர் 46
சிவபுண்ணியத் தெளிவு 22
சிவமார்க்கப்பிரகாச தேசிகர் 49
சிவயோக சாரம் 51
சிவயோக ரத்னம் 51
சிவவாக்கியர் 26,190
சிவக்ஷேத்திரக்கோவை 172
- வெண்பா 176
சிவாக்கிரபத்ததி 34
சிவாக்கிரயோகி
- உரைகள் 53,55
சிவாட்டகம் 182
சிவாயநகர் 247
சிவாலய முனி 193,272
சிவானந்தமாலை 33
சிற்றம்பல நாடிகள் 33,270
சிறியாத்தான் 177
சிறுபஞ்சமூலம் 119
சிறுபுலியூர் உலா 221
சீகாளத்தி புராணம் 249
சீட்டுக்கவி 241
சீநக்கன் 277
சீவசம்போதனை 119
சீவலமாறன் 297
சீவலவேள் 241
சுகதநூல் 70
சுத்த சத்துவம்
தொட்டாசாரியர் 112
சுந்தரக் கடவுளடியார் 191
சுந்தரர் 220
சுந்தரானந்தர் 190,211
சுப்பிரதீபக் கவிராயர் 252
சுப்பிரமணியக் கவிராயர் 228
சுப்பிரமணியப்பிள்ளை, கா. 280
சுப்பிரமணிய முனிவர்,
தொட்டிக்கலை 199
சுப்பிரமணியர் ஞானம் 212
சுருதி சூக்திமாலை 46
சுவச்சநதம் 37
சுவடிகள் 124
சுவாயம்புவம் 37
சுவானந்த நாச்சியார் 48
சுவேதகேது 293
சூடாமணி நிகண்டு 120
சூத சங்கிதை வடமொழி 37
சூத புராணிகர் 130
சூரியதோத்திரம் 184
சூரியனார் கோயில் ஆதீனம் 34
சூரியானந்தர் 192,211
சூளாமணி 119
செந்தமிழ் 69
செந்தமிழ்ப் பத்திரிகை 270
செல்வகேசவராய முதலியார் 130
செவ்வந்திக்கோவை 226
செவ்வைச்சூடுவார் 76
சென்னகேசவலு நாயுடு 229
சேதுபுராணம் 57
சேந்தனார் 8
சேந்தை 64
சேயூர்க் கந்தர் உலா 250
சேயூர் முருகன் உலா 221, 243,249
சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் 249
சேரமான் - உலா 220
சேறை கவிராசபிள்ளை 239
சைவ - எல்லப்ப நாவலர் 225
சைவசந்நியாசபத்ததி 34,114
சைவ சமயநெறி 26
சைவசித்தாந்த சமாஜம் 70
சைவ பரிபாஷை 34
சொக்கநாதர் உலா 217

சொக்கநாத வெண்பா 189
சோணைநதி 14
சோமசம்பு 54
சோமசுந்தர தேசிகர் 247,280
சௌந்தரியந்தாதி 151
சௌந்தரிய லகரி 135
சௌந்தரிய லகரியுரை 136
ஞானக்கோவை 191
ஞானக்குறள் 206
ஞானக்கூத்தர் 57
ஞானசித்தி 54
ஞானப்பிரகாசர்
- கச்சி 278
- கமலை 202
- களந்தை 25
- காஞ்சி 278
- குளம் 52
- சிவபுரம் 270
- திரு அண்ணாமலை 51
- திருவொற்றியூர் 63
- மதுரை 3
ஞானபூசைத் திருவிருத்தம் 33
ஞானவாசிட்டம் 137
ஞானவெட்டி 191
ஞானாமிர்தம் 9
ஞானாவரண விளக்கம் 52
தசகாரியம் 67
தசதர்மம் 132
தசாங்கம் 234
தஞ்சாவூர்த்தட்டான் 72
தஞ்சைச்சரசுவதி மஹால் நூல் நிலையம் 288
தட்சிணாமூர்த்தி சித்தர் 210
தட்சிணாமூர்த்திபண்டிதர் 248
தண்டியலங்காரம் 76
-உரை 15
தணிகை உலா 221
தத்துவக்கட்டளை 56
தத்துவநாதர், சீகாழி 3
தத்துவப்பிர்காசம் 270
தத்துவப்பிரகாசர் 41
- சீகாழி 276
- திருவாரூர் 271
- திருவொற்றியூர் 216
- பதவிருத்தி 27
- பிரகாசிகை 37
தத்துவராயர் 221
- உலா 221
- நெஞ்சுவிடுதூது 235
தத்துவவிளக்கம் 61
தமிழ்நாவலர் சரிதை 240
தமிழாகமம் 10
தமிழாகரமுனிவர் 32
தர்க்க பரிபாடை 27
தருமபுர ஆதீனம் 270
தன்வந்திரி 190
தனிச்செய்யுள் சிந்தாமணி 296
தனிப்பாடல் திரட்டு 296
தனிவெண்பாமாலை 282
தாண்டவபூஷணன் 41
தாமோதரம்பிள்ளை 12
தாழை நகர் எல்லான் 13
திகழக் கிடந்தான் திருநாவீடைய பிரான் 99
திரவிடசிசு 14,151
தியாகவினோதக்குரு 248
திரிசிராமலை அந்தாதி 148
திரு அண்ணாமலை 163,165
-அண்ணாமலையார் வண்ணம் 240,255
-அண்ணாமலை வெண்பா 172
-அதிகைக்கலம்பகம் 266
-அம்மானை 305
-அரங்கத் தமுதனார் 95
-அருட்பயன் 62

அருட்பயன் உரை 57,62
-அருணை அந்தாதி 217,226
-அருணைக் கலம்பகம் 227
-அருணைக் கோவை 226
-அருணைத் தனிவெண்பா 165
-ஆமாத்தூர்க் கலம்பகம் 305
-ஆரூர்க்கோவை 78,218,228
-ஆரூர்ப்புராணம் 57
-இடைமருதூர்
மும்மணிக்கோவை 26
திருஉந்தியார் 7
-உந்தியார் உரை 7
-எம்பாவை 163
-ஐயாற்றுச்செப்பேச புராணம் 57
-ஐயாற்றுப்புராணம் 57
-ஒற்றியூர்ப்புராணம் 64
-சச்சிநம்பி 92
-கடவூர் உய்யவந்தார் 6
-கயிலாய உலா 220
-கருவை அந்தாதிகள் 135
கருவை கலித்துறை அந்தாதி 158
-கருவைப் பதிற்றுப்
பத்தந்தாதி 155
-கருவை வெண்பா அந்தாதி 160
-கலம்பகம் 305
-களிற்றுப்படியார் 61
-களிற்றுப்படியார் உரை 3
-காளத்தி 241
இட்டகாமிய மாலை 242
-காளத்திநாதர் உலா 218,243
-காளத்திப்புராணம் 244
-குரங்கணில் முட்டப் புராணம்
312
-குருகைப்பிரான் பிள்ளான் 1
-குருகைப்பெருமாள் கவிராயர் 76
-குருகை மான்மியம் 76
-குறள் 67
-குறள் உரை 119
-குறுங்குடி நம்பி உலா 221
திருகோட்டிநம்பி 92
-சதகம் 155
-சிற்றம்பலக்கோவை 262
-செந்தூர் 236
-சேறை 239
ஞானசம்பந்தர் 143,153
-தொண்டர் புராணம் 4
-தோணியப்பர் 268
-நறுங்கொண்டைமலை 132
-நீலகண்டச் சோழன் 248
நீலகண்டர் ஆணையான் 246
-நீற்றுச் சோழன் 222
-நெல்வேலிப்பெருமாள் 155
-நெறிவிளக்கம் 272
-பதிக்கலம்பகம் 77
-பதிக்கோவை 218
-பரங்கிரிப் புராணம் 57
-பாமாலை 131
-பாலைப்பந்தல் உலா 213,217,229
-பாவை வியாக்கியானம் 107
-புகலூர்ப்போகநாதர் 66
-புகழ் 163,164
புடைமருதூர் 266
-புடைமருதூர்த் திருவிசைப்பா
200
-புவனத்தல புராணம் 180
-மங்கை 109
திருமந்திர உரை 73
-மந்திரம் 55,146
-மந்திரார்த்தி அருமபத
விளக்கம் 84
-மயிலாப்பூர்ப் பதிகம் 133
திருமலைநம்பி 96
-மலைநம்பி திருப்பதிகம் 83
-மலைநாதர் 221

-மலைநாயக்கர் 309
-மலையாழ்வார் 99
-மாலிருஞ்சோலை
மலைக்கல்வெட்டு 267
-திருமாலையாண்டான் 96
-முருகாற்றுப்படை 134
-முருகாறு தோன்றிய
வரலாறு 264
முளைப்பால் உண்ட செய்தி 150
-மூலசித்தர் 212
-மூலர் 190
-மூலர் தாண்டகம் 214
-வகுப்பு 256
-வங்கிபுரத்து நம்பி 100
திருவரங்கப் பெருமாள்
அரையர் 96
-வள்ளுவ தேவர் 30
-வள்ளுவ 192
- வள்ளுவர் ஞானம் 191
- வாசகம் 4, 14, 55, 218, 247
- வாட்போக்கி நாதர் உலா 63
- வாதவூரர் 56
- வாதவூரர் புராணம் 84
-வாய்மொழி நூற்றந்தாதி
வியாக்கியானம் 84
-வாய்மொழி வியாக்கியானம் 75
-வாய்மொழி வியாக்கியனாம்
ஆறாயிரப்படி 74
-வாய்மொழிப்பிள்ளை 105
-வான்மியூர் நூல் நிலையம் 250
திருவிசைப்பா 68
-வியலூர் உய்யவந்தார் 6
-விரிஞ்சைக்கோவை 226
-விரிஞ்சைச்சாசனம் 177
-வேங்கட உலா 218
-வேங்கட மலை 244
-வேங்கடாசாரி 115
தில்லை 167
-உலா 221
-கலம்பகம் 305
-கோபுரங்கள் 169
-நடனம் 170
-மூவாயிரவர் 171
திவாகரம் 210
தினகரவெண்பா 261
தீத்தாரியப்பபிள்ளை 267
துகளறுபோதம் 33
துடரிமலை 79
தும்பையூர் 89
துர்க்கா 269
துரைசாமி முதலியார் 239
துழாவூர் 57
தூதுகாவியம் 234
தூதுப்பிரபந்தம் 233
-பொருள்கள் 233
தூர்வாசரிஷி 30
தெய்வச்சிலைப்பெருமாள்
முதலியார் 235
தெய்வச்சிலையார் 218
-விறலிவிடுதூது 233
தெலுங்கு 97
தென்கலை நித்தியானு
சந்தானம் 106
தென்காசிச்சாசனம் 282
தேவராய சுவாமி 183
தேவாரம் 55
தேவிகாலோத்தரம் 46
தைகைக்குன்று 261
தையூர் உத்தண்டன் கோவை 260
தொண்டை மண்டல சதகம் 297
தொல்காப்பியம் 55, 67
தொன்னூல் நிலையம் 260
தோழப்பர் 98
நக்கீரர் 189
-அந்தாதி 67

நஞ்சீயர் 98
நடராஜ் ஐயர், இணுவில் 56
நடலிங்க பட்டன் 236
நடுவில் திருவீதிப்பிள்ளை 98
நந்திக்கலம்பகம் 264
நந்திகேசுவரர் 291
நந்திசிவாக்கிரயோகி 47
நந்திதேவர் 190, 214
நந்திநாகரம் 31
நம்பிதிருவிளையாடல் 148
நம்பியாண்டார்நம்பி 212
நம்பிள்ளை 100
நம்பெருமாள்
  மும்மணிக்கோவை 79
நம்மாழ்வார் 74
நம்மாழ்வார் பிரபந்தங்கள் 108
நமசிவாய உடையார் 177
நமசிவாயத் தம்பிரான் - உரை 9
நமசிவாய தேசிகர் 207
நமசிவாய மாலை 172, 176
நரசிங்கபுரம் 267
நல்லூர் 137
நவந்தப் பாட்டியல் 217
நற்றிணை 296
நன்னூல் 55
  -துறைகள் அஞ்சு 85
நாககுமார காவியம் 121
நாகபஞ்சமி நேன்பு 124
நாகராநம்பி 274
நாகலிங்க முனிவர் 69
நாகார்ச்சுனர் 291
நாதமுனிகள் 74
நாராயண கவசம் 183
நாராயணதேசிகர் 191
நாலடி 119
நாலாயிரத் தனியன்
  வியாக்கியானம் 84
நாலு பாஷைப்பாடல் 269
நிகண்டு 11
நிச்சுவாசகாரிகை 37
நிரம்ப அழகிய தேசிகர் 57
நிராமய தேவர் 288
  -நூல் 284
நிஜானந்த போதம் 191
நீலகண்ட சிவாசாரியர் 49
நீலகேசி 119
நீற்றுக்கவசம் 178
நூற்றெட்டுத்
  திருப்பதி அந்தாதி 83
நெஞ்சுவிடு தூது 234
நெடுங்கணக்கு 231
நெடுந்தொகை 296
நெல்லை வருக்கக்
  கோவை 258
நெல்வேலி வென்ற
  நெடுமாறன் 262
நைடதம் 4
பஞ்ச காக்கள் 159
பஞ்பட்சி சாத்திரம் 209
பஞ்சபூதத் தலங்கள் 244
பஞ்சமி கதை 121
பஞ்சாக்கர தரிசனம் 26
பட்ட மங்கை 249
பட்டர் 117
பட்டினத்தார் 71
படிக்காசு பெறுதல் 170
பத்திரகரி 26
பத்திரகரி அருட்புலம்பல் 190
பத்துப்பாட்டு 134
பத்தும் பதிகத் தோத்திரம் 132
பத்மநாப விலாக
  அச்சுக்கூடம் 20
பதஞ்சலி 54
பதஞ்சலி ஞனாம் 191
பதார்த்த குண சிந்தாமணி 196

பதிபசுபாசத் தொகை உரை 22
பதிபசுபாசப் பனுவல் 22
-உரை 32
பதிற்றுப் பத்து 155
பதினெண் சித்தர் 190
-ஞானக் கோவை 205
பதினோராந்திருமுறை 146
பயங்கரமான பாடல் 145
பரகால நல்லான் 115
பரஞ்சோதி 278
பரஞ்சோதி திருவிளையாடல் 222
பரமத திமிர பானு 21
பரம புருஷோத்தமன் 71
பரம ராசியமாலை 169, 175
பரமானந்த முனி 12
பரமேசுரப் புலவன் 289
பரமோபதேசம் 22
பரவஸ்து பட்டர்பிரான் சீயர் 83
பரவை கேள்வன் 251
பராக்கியை 37
பராக்கிரம பாண்டியன் 155
பராங்குச நம்பி 103
பராபரைமாலை 137
பரிபாடல் 125
பரிமேலழகர் 125
பருத்திக் கொல்லையம்மாள் 90
பழமொழி நானூறு 119
பழனிக்கோவை 218, 262
பழுதைகட்டி 33
பன்னிருபாட்டியல் 217
பாகவத புராணம் 135
பாகவதம் 76
பாண்டிக்கோவை 262
பாண்டிகவி ராசர் 267
பாண்டிப் பெருமாள் 58
பாதிரிக்குடி 117
பாம்பன் சுவாமி 184
பாம்பாட்டிச் சித்தர் 190
பார்த்திப பத்ததி 285
பார்த்திபம் 285
பாரதம் 134
பாரத வெண்பா 37
பாலட் 302
பாளையப்பட்டனார் 255
பிடகம் (வடமொழி) 67
பிண்ணாக்கீசர் 191
பிரதாபருத்திரன் 269
பிரபந்த மரபியல் 217
பிரபன்ன காயத்திரி 162
பிரபுடதேவ மாராயன் 264
பிரமமுனி 192
பிரமாண்ட புராணம் 54
பிரமாண தீபிகை 51
பிரமாதிராயன் 137
பிரமேயசாரம் 74
பிரமோத்தர காண்டம் 156
பிராசாத அகவல் 33
பிராசாத தீபிகை 51
பிராயச் சித்த சமுச்சயம் 32
பிள்ளை உறங்காவில்லிதாசர் 105
பிள்ளைப் பெருமாள்
ஐயங்கார் 166
பிள்ளைலோகஞ்சீயர் 1, 83
பிள்ளைலோகாசாரியர் 84
பிறையூர் நாடு 251
பின்பழகிய பெருமாள் சீயர் 86
பீலிவளை 251
புட்பதந்த இருடி 14
புட்பதந்தன் 138
புட்பவன நாதர் வண்ணம் 257
புதுக்கோட்டைச் சாசனம் 284
புராண அகத்தியர் 193
புராணத்திருமலை நாதர் 221
புராண பாகவதம் 76

புரூரவ சரிதை 281
புலவர் புராணம் 137
புலவராற்றுப்படை 300
புலிப்பாணிச் சித்தர்
சாலத்திரட்டு 192
புவனகோசம் 285, 287
புவனாம்பிகை
கலைஞான தீபம் 149
புறத்திரட்டு 130
பூஜாஸ்தவம் 37
பெரிய நம்பி 90
பெரிய புராணம் 8
பெரியவாச்சான் பிள்ளை 98
பெரியாழ்வார் திருமொழி 99
பெருந்தேவனார் 134
-பாரதவெண்பா 114
பெருந்தொகை 296
பெருமாள் கவிராயர் 295
பெருமாளையர், நெல்லை 259
பேரருளாளர் உலா வருதல் 92
பொதிகை அகத்தியர் 200
சித்தர் 186
பொதியில் 193
பொய்யாமொழிப் புலவர் 264
பொன்வண்ணத்தந்தாதி 26
பொன்னம்பல முதலியார் 52
பொன்னூர் செம்பூர்க்
கோட்டம் 251
போகநாதர் 189, 190, 215
போகர் 215
போரூர் முருகன் உலா 221
பௌத்த நூல் 67
பௌஷ்கராகமம் 37
-விருத்தி 51
மகதை நாடு 297
மகாபுராணம் 130
மகிபால குலகாலச்சேரி 266
மங்கை என்ற ஊர் 236
மச்சமுனி 190
மச்ச முனி வைப்பு 192
மஞ்சரிப்பா 280, 281
மண்டல புருடர் 119
மணக்குடவர் குறள் உரை 1
மணவாள மாமுனிகள் 75
மணிமுடி பெற்ற வரலாறு 247
மணிமேகலை 67
மதுரகவி 74
மதுரை யுலா 221
மயில்விடுதூது 234
மயில் விருத்தம் 255
மருதவன கவிராசன்
இராமநாதன் 266
மலர்க்கண்ணனடியார் 191
மறைஞான சம்பந்தர் கடந்தை 234
மறைஞான சம்பந்தர் சிதம்பரம் 21
மறைஞான தேசிகர் 21
மன்மத கலாப்பிரயோகம் 15
மன்மதன் வணக்கம் 293
மனத்துணை நாதர் 230
மனுநீதிச் சோழன் 303
மாகதர்கோன் வாணன் 297
மாகபுராணம் 183
மாணிக்கச்சொற் பாவலன் 251
மாணிக்க வாசகதேசிகர் 248
மாணிக்கவாசகர் 158
மார்த்தாண்ட பனைக்காரன் 266
மாவலிவாணன் 296
மாவலி வாணாதிராயர் 297
மாவை உத்தண்டன் 261
மாறன் அகப்பொருள் 76
மாறன் அலங்காரம் 76
மாறன் கிளவி மணிமாலை 77, 81
மாறன் திருப்பதிக் கோவை 77
மாறன் பாப்பாவினம் 76

மானாவூர் திருப்பதிகம் 67
மிருகேந்திராகமம் 38
மிருத்தியுஞ்சயதோத்திரம் 183
மீனலோசனி அச்சுக்கூடம் 260
மீனாட்சி சுந்தரம்பிள்ளை, த.ச. 46
முத்திநிச்சயம் 312
முப்பால் ஒதி 79
மும்முடிச் சோழன் 224
முழுட்சுப்படி 112
முருகன் தலங்கள் 251
முருகேச முதலியார் 309
மூவரம்மானை 303
மெய்கண்ட சிவாசாரிய
சந்தான பீடம் 278
மெய்கண்டார் 2, 9
மெய்ஞ்ஞானப்பயன் 206
மேருமந்தர புராணம் 119
மோட்ச காரிகை 54
யசோதர காவியம் 119
யதீந்திரப்பிரவணப்
பிரபாவம் 84, 97
யமுனை 14
யமுனைத்துறைவர் 74
யாப்பருங்கலக் காரிகை 119
யாப்பருங்கலம் 119
-விருத்தி 1
யாழ்ப்பாணம் 51
யூகிமுனி 192
யோகசாரம் 285
யோகவாசிட்டம் 191
யோகி முனி வைத்தியம் 192
ரகஸ்யத்ரயம் 115
ரங்க மண்டபம் 238
ரத்தினத்திரயம் 54
ரதிசாஸ்திரம் 291
ரதிமஞ்சரி 291
ரமண மகரிஷி 46
ராகவையங்கார் 266
ராமகண்ட குரு 54
ரிப்பன்பிரஸ் 20
ரௌரவாகமம் 24
லீலா திலகம் 116
லோகதேசிகர் 112
வகுளபூஷண பாஸ்கரோதயம் 109
வச்சணந்தி மாலை 119
வச்சிர பஞ்சரம் 181
வசிட்ட சங்கிதை 15
வடக்குத் திருவீதிப் பிள்ளை 97
வடமலை அண்ணகளையன் 99
வடமலையார் 268
வண்ணக்கட்சி 242
வண்ணக் களஞ்சியம் 240
வர்த்தமான சுவாமி
தோத்திரம் 132
வரகுணராம பாண்டியர் 135
வரதுங்கராம பாண்டியர் 135
வராகிமாலை 144
வருக்க அமைப்பு 176
வல்லமங்கலம் 236
வலவேந்திர துரை 207
வலிவல மும்மணிக் கோவை 218
வள்ளல் பரம்பரை 272
வாகீச முனிவர் 9
வாச முனி 191
வாசிமுனி 205
வாசுகி 207
வாட்போக்கிப்
பண்டிதர்வாணர் 248
வாணன் மனைவி 299
வாத்ஸ்யாயனர் 291
வாதாபி கதை 193
வாமகேசர தந்திரம் 37
வாமதேவரிஷி 49
வாயுசங்கிதை 135

வால்மீகி 190
வாலகோகிலம் 276, 281
வாலைக்கும்மி 207
வாற்சாயன முனிவர் 298
வானமாமலை தாசர் 105
விக்கிரம சோழன் 244
விசயநகர் 267
-ஆதிக்கம் 5
விசுவ சாரோத்தராகமம் 37
விசுவேசுர சிவாசாரியர் 49
விஞ்ஞான சாரம் 74
வித்தியாரணியர் 24
விநாயக கவசம் 181
-புராணம் 181
விம்பிசார கதை 70
வியாக்கிரமர் 210
விருத்தாசலபுராணம் 176
வில்வகவசம் 180
விவேக புவனகோசம் 288
விளஞ்சோலைப்பிள்ளை 75
விறலிவிடு தூது 218, 235
விஷ்ணு புராணம்
புராண ரத்னம் 109
வீரசதாசிவ தேவராயர் 238
வீரசோழன் 51
வீரதந்திரம் 37
வீரபாண்டியன் 162
வீரமாலை 267
வீரமாறன் 162
வீரவல்ல தேவராச பட்டர் 266
வீரவெண்பா மாலை 267, 282
வீராணத் தேரி 95
வீரை 136
வெங்கள நாயக்கர் 267
வெண்ணெய் நல்லூர் 38
வெண்பாப் பாட்டியல் 119
வெள்ளியம்பலவாணத்
தம்பிரான் 52, 286
வெள்ளைவாரணர் உரை 63
வெற்றிவேற்கை 4
வேங்கடபதிராயர் 177
வேங்கடராயமுதலியார் 241
வேங்கடாசாரியர் 115
வேணுவன புராணம் 260
வேதவன முனி 32
வேதாந்த தேசிகர் 75
வேம்பத்தூர் 136
வேம்பத்தூரார் பாடல் 259
வேல்விருத்தம் 255
வேலங்குடி 273
வேலப்பண்டாரம் உரை 62
வேலாயுதன் என்ற வள்ளல் 247
வைணவ சொல்லாட்சிகள் 101
வைத்திய சிந்தாமணி 191
-நிகண்டு 192
வையாபுரிப்பிள்ளை 239
வைராக்கிய சதகம் 146
ஸ்கந்த சந்தானம் 34
ஜயதேவர் 291
ஜனனகருவிமாலை 286
ஜைன தந்திரம் 37
ஸ்ரீபாதரேணு 99
ஸ்ரீபால் 121
ஸ்ரீபாஷ்யம் 96
ஸ்ரீபுராணம் 119
ஸ்ரீவசன பூஷணம் 98
ஸ்ரீவர்த்த மானர்
தோத்திரப் பதிகம் 128
ஸ்ரீவைஷ்ணவ சமயாசார
நிஷ்கர்ஷம் 84
ஸ்ரீவைஷ்[illegible]
[illegible] 1[illegible]


❖ ❖



இந்தப் பாகத்திலும் திறனாய்வு
வழக்கம் போல் சிறப்பிடம் பெறுகிறது.
முதல் சிறப்புப் பகுதி
சைவ சாத்திர உரைப்பகுதி.
இது தமிழாயினும், பொருள் சாத்திரமாதலால்,
விரித்துத் தனியே ஆராயவேண்டிய
தகுதி பெற்றுள்ளது.
பிள்ளை லோகம்சீயரின் மணிப்பிரவாளம்
இங்கு விரிவான இடம் பெற்றுள்ளது.
சித்தர் பாடல்களும் மூவர் அம்மானையும்
முக்கியமான பிற பகுதிகள்;
இவற்றை இதுகாறும் இலக்கிய வரலாற்றில்
யாரும் கருதியதில்லையாயினும்,
உண்மையான வரலாற்று அறிவுக்கு
இவற்றின் நிலை
வரையறுக்கப்பட வேண்டியதொன்று.
சித்தர்கள் 14–16 நூற்றாண்டுகளிலேயே
பெரும்பான்மையும் தோன்றி நூல் செய்தார்கள்
என்பது எமது கருத்து.
பிற்காலத்தில் வைத்தியம், இரசவாதம்,
சோதிடம் போன்ற துறைகள்
அளவின்றிப் பெருகியுள்ளன.

The PARKAR